தமிழ்ப் புதுக்கவிதைகளில் தத்துவச் சிந்தனைகள்

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

வி.கலாவதி,

பதிவு எண்: 574/2012-13

நெறியாளர்

முனைவர் ச.இராமமூர்த்தி,

தமிழாய்வுத்துறை, ம.து. அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசியத் தர மறுமதிப்பீட்டில் "A" தகுதி பெற்றது)

காரைக்குடி-630 003.

இந்தியா.

டிசம்பர் 2015

முனைவர் ச. இராமமூர்த்தி, எம்.ஏ., எம்.பில்., பி.ஜி.டி.சி.ஏ., சி.ஜி.டி., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி,
சிவகங்கை.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

"**தமிழ்ப் புதுக்கவிதைகளில் தத்துவச் சிந்தனைகள்**" என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காகத் திருமதி வி.கலாவதி செய்துள்ள இவ்ஆய்வு அவரால் தன்னிச்சையாகச் செய்யப்பட்டது என்றும், இவ்ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

இடம் : சிவகங்கை

நாள் : 07.12.2015

(முனைவர் ச.இராமமூர்த்தி)
மேற்பார்வையாளர்

முனைவர் ச. இராமமூர்த்தி
எம்.ஏ., எம்.பில்., சி.ஜி.டி., பி.ஜி.டி.சி.ஏ., பிஎச்.டி
உதவிப் பேராசிரியர்
முனைவர் பட்ட ஆய்வு நெறியாளர்
தமிழாய்வுத்துறை
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி
சிவகங்கை - 630 561

முதல்வர்
மன்னர் துரைசிங்கம்
அரசு கலைக் கல்லூரி
சிவகங்கை.

வி.கலாவதி, எம்.ஏ., எம்.பில்., **நாள்:** 7/12/2015
பதிவு எண்: **574/2012-13**
தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
தமிழாய்வுத்துறை,
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி,
சிவகங்கை.

ஆய்வாளர் உறுதிமொழி

"தமிழ்ப் புதுக்கவிதைகளில் தத்துவச் சிந்தனைகள்" எனும் தலைப்பில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காகச் செய்யப்பட்டுள்ள இவ்ஆய்வு என் சொந்த முயற்சியால் உருவானதே என்றும், இதற்குமுன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்ஆய்வேடு அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

(வி.கலாவதி)
ஆய்வாளர்.

உறுதிக் கையொப்பம்

7/12/15

(முனைவர் ச. இராமமூர்த்தி)
மேற்பார்வையாளர்

முனைவர் ச. இராமமூர்த்தி
எம்.ஏ., எம்.பில்., சி.ஜி.டி., பி.ஜி.டி.சி.ஏ., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்
முனைவர் பட்ட ஆய்வு நெறியாளர்
தமிழாய்வுத்துறை
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி
சிவகங்கை - 630561

நன்றியுரை

"**தமிழ்ப் புதுக்கவிதைகளில் தத்துவச் சிந்தனைகள்**" என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை நிகழ்த்த அனுமதி வழங்கிய **அழகப்பா பல்கலைக்கழகத்திற்கும், பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும்** என் நன்றி.

மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரித் தமிழாய்வுத்துறையில் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வு செய்வதற்கு வாய்ப்பளித்த அன்றைய கல்லூரியின் பொறுப்பு முதல்வர் பேரா. ***சீ.ஜெகன்னாதன்*** அவர்களுக்கும், இன்றைய கல்லூரி முதல்வர் முனைவர் **சோ.நிர்மலாதேவி** அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பகுதி-1 தமிழ் மட்டுமே என்றிருந்த தமிழ்த்துறையைத் தமிழாய்வுத் துறையாக மாற்ற பெருமுயற்சி எடுத்து வெற்றிகண்டு, அவ்வெற்றியின் பயனாக என்னை முதல் ஆய்வு மாணவியாக இத்துறையில் சேர்ப்பதற்குப் பரிந்துரைத்த துறைத்தலைவர் முனைவர் ***வீ.கிளாட்சன்*** அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியது.

ஆய்வுக் கல்வியைக் கற்பித்து, ஆய்வில் ஈடுபட ஆர்வத்தைத் தூண்டியும், ஆய்வு தொடர்பான கருத்துக்களைக் கூறியும், ஆய்வுக்கட்டுரைகளைப் பலமுறை திருத்தியும் பல்வேறு நிலைகளில் ஊக்கமளித்து உதவிய என் ஆய்வு நெறியாளர் முனைவர் ***ச.இராமமூர்த்தி*** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

ஆய்வு செய்யும் காலத்தில் கலந்துரையாடலின்போது ஆய்வு தொடர்பாக பல அரிய செய்திகளை வழங்கிய யாதவர் கல்லூரித் தமிழ் உயராய்வு மையத்தின் முன்னாள் தலைவர் 'தமிழ்மணி' முனைவர் ***இ.கி.இராமசாமி*** அவர்களுக்கும் இன்னாள் துறைத்தலைவர் முனைவர் **வீ.மோகன்** அவர்களுக்கும் நன்றிசொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆய்வு செய்யும் காலத்தில் உதவிய எம்துறைப் பேராசிரியர்கள் முனைவர் ***கா.சந்தானலெட்சுமி***, முனைவர் **இரா.குமார்,** முனைவர் ***சு.விஸ்வநாதன்,***

முனைவர் **மு.சிதம்பரம்,** திரு.**து.ஸ்டாலின்,** திருமதி **ச.மலர்க்கொடி,** முனைவர் **கரு.இராமச்சந்திரன்,** திரு.**இரா.தங்கமுனியாண்டி,** திருமதி **இராமமனோன்மணி,** திரு.**வே.சதிஷ்,** முனைவர் **ஆ.பாண்டி,** திரு.**ம.முத்துராமன்,** திருமதி **அ.உமாராணி,** செல்வி **இரா.புவனேஸ்வரி,** திரு.**சு.கிருஷ்ணமூர்த்தி** ஆகியோருக்கும் என் நன்றி.

இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரியில் பணியாற்ற சிறந்ததொரு வாய்ப்பினை எனக்கு நல்கிய எம் கல்லூரி இன்னாள் தலைவர் திரு.**எஸ்.ஆர்.தனுஷ்கோடிராஜா** அவர்களுக்கும் அன்னாள் தலைவர் திரு.**ஏ.எஸ்.சுப்பாராஜா** அவர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

என் வாழ்விற்கு வழிகாட்டியாய் விளங்கி இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரியில் பணியாற்ற உறுதுணையாக இருந்துவரும் எம் கல்லூரி ஆட்சிமன்றக் குழு செயலர் திரு.**எ.எஸ்.எஸ்.ஷ்யாம்** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுப்பணி செய்ய என்னை ஊக்கப்படுத்திய எம் கல்லூரி முதல்வர் முனைவர் **வே.வெங்கட்ராமன்** அவர்களுக்கும் எம்துறைத் தலைவர் முனைவர் **க.அழகர்** அவர்களுக்கும், எம்துறை பேராசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'பெற்றாற்பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு'

என்னும் குறளுக்குப் பொருத்தமுடைய நற்பண்பினைக் கொண்டு எந்நாளும் என் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு எந்த நேரமும் முகம் கோணாமல் என் ஆய்வுப்பணிக்கு முழுமையான ஒத்துழைப்பை நல்கி பல்வேறு இடர்கள் வந்தபோதும் என் மனம் துவண்டுவிடாமல் வழிநடத்திய என் அன்பிற்குரிய கணவர் திரு.**ஆர்.சேகர்** அவர்களுக்கும் நன்றிகள் பல. ஆய்வுப்பணியில் ஈடுபட்ட காலத்தில் என் மழலைச் செல்வன் **ஆர்.எஸ்.தனுஷ்கிருஷ்ணா** தன் ஒத்துழைப்பைக் கொடுத்துள்ளார். அந்த அன்புக்குழந்தைக்கும் நன்றி உரியது.

என் வளர்ச்சிக்கும் என்மீதும் என்குடும்பத்தின் மீதும் அக்கறை கொண்டு தன்முனைப்போடு உதவிகள் செய்துவரும் என் மாமா திரு.**சந்தானம்** அவர்களுக்கும் அத்தை திருமதி.**லதா சந்தானம்** அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு என்னைப் படிக்க வைத்த என் தாய் திருமதி ***கனகவள்ளி*** தந்தை திரு.***விஜயராமன்*** அவர்களுக்கும் நன்றி. மேலும், திருமணமான பின்பு எனக்கும் என் குடும்பத்திற்கும் பலவித உதவிகளைச் செய்த எனது சித்தி திருமதி.***சுசீலா பாலசுப்ரமணியன்*** அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன். எனது பாவா ***சுப்புராஜ்-மஞ்சுளாதேவி*** அவர்களுக்கும் எனது மாமா திரு.***ராஜகோபால்-ஜெயஸ்ரீ,*** திரு.***ராஜேந்திரன்-ஜமுனா*** அவர்களுக்கும் என் ஆய்வுப்பணியின்போது என் குழந்தைச் செல்வத்தைப் பராமரித்து என்னை ஊக்கப்படுத்திய என் ***குடும்பத்தார்கள்*** ஒவ்வொருவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேட்டைத் தெளிவாகவும் முறையாகவும் தகுந்த நேரத்திலும் கணினியில் தட்டச்சு செய்துகொடுத்து உதவிய மதுரை, ***சுபத்ரா கம்ப்யூட்டர்*** அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியதாகும்.

வி.கலாவதி.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

ஆ.இ.	-	ஆண்டு இல்லை
உரை ஆ.	-	உரையாசிரியர்
கு.அ.	-	குடிஅரசு
குறள்.	-	திருக்குறள்
சிலம்பு.	-	சிலப்பதிகாரம்
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
பதி.ஆ.	-	பதிப்பாசிரியர்
ம.ப.	-	மறுபதிப்பு
மு.ப.	-	முதற்பதிப்பு
த.க.தொ.	-	தமிழன்பன் கவிதைகள் தொகுதி
ஒ.பு.	-	ஒவ்வொரு புல்லையும்
ந.பி.க.	-	ந. பிச்சமூர்த்தி கவிதைகள்
பா.எண்.	-	பாடல் எண்
புறம்.	-	புறநானூறு
வளை.	-	வளையாபதி
கு.	-	குண்டலகேசி
மொ.ஆ.	-	மொழிபெயர்ப்பாசிரியர்
மேலது.	-	மேற்காட்டிய நூல்
மு.நூ.	-	முற்காட்டிய நூல்
p.	-	Page
Pp.	-	Pages

பொருளடக்கம்

ஆய்வு அறிமுகம்



ஆய்வு அறிமுகம்

உலக வரலாற்றை நாம் புரட்டிப் பார்க்கும்பொழுது அனைத்து விடுதலைப் போராட்டங்களிலும் சமூக, அரசியல் மாற்றப் புரட்சிகளிலும் கவிஞர்களின் படைப்புகள் மாற்றத்திற்கான விதைகளை, கவிதைப் பூக்களாய்த் தூவி மென்மையான முறையிலும் வன்மையான முறையிலும் புரட்சிகளைத் தூண்டும் சக்தியினைப் பெற்ற கருவியாகக் கவிதை திகழ்ந்து வருகின்றது என்பதனை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

'ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று'

என்று சுதந்திரம் நாம் பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே கனவு, நம்பிக்கை, விருப்பம் ஆகியற்றை மகாகவி பாரதியார் தம் கவிதைகள் மூலம் விதைத்துச் சென்றுள்ளார்.

பாரதியின் வசன கவிதைகளிலிருந்து தொடங்கும் தமிழ்ப் புதுக்கவிதையின் வரலாறு இன்று பன்முகப் பரிமாணங்களோடு செழித்து நிற்கின்றது. தமிழ்க் கவிதைமொழி வியக்கும்வண்ணம் கடந்த இருபதாண்டுகளில் ஏற்றம் பெற்றிருக்கின்றது. கருத்துப்புதுமை, வெளியீட்டுமுறைப் புதுமை இரண்டும் சேர்ந்துதான் இன்றைய கவிதையைப் பெற்றுத் தருகின்றன. இப்புதுக் கவிதைகளில் கிண்டல், நையாண்டி, சோகம், அவநம்பிக்கைகள், அச்ச வெளிப்பாடுகள், காதல் உணர்ச்சிகள் காணப்பட்டாலும் சமூக மாற்றத்திற்கான சீர்திருத்தக் கருத்துக்களும், நம்பிக்கை வெளிச்சமாய் அவலங்களைத் தோலுரித்துக் காட்டும் துணிவும் மனித வாழ்வியலுக்குத் தேவையான கோட்பாட்டுச் சிந்தனைகளும் நிறைந்து காணப்படுகின்றன. இத்தகைய நோக்குடைய புதுக்கவிதைகள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வுத்தலைப்பு

"***தமிழ்ப் புதுக்கவிதைகளில் தத்துவச் சிந்தனைகள்***" என்பது இவ்ஆய்வின் தலைப்பாக அமைகின்றது.

ஆய்வு நோக்கம்

இலக்கியத்திற்குக் குறிப்பிட்ட நோக்கமுண்டு எனப் பழந்தமிழர் கருதினர். இலக்குடையது இலக்கியம் என்பதுதான், அவர்தம் புரிதலாகும். வெறும் பொழுதுபோக்கைக் கருதியோ, இன்பமூட்டும் நுகர்வு வெறிக்குத் தூண்டப்பட்டோ படைப்பிலக்கியம் செய்வதைப் பழந்தமிழர் பின்பற்றவில்லை. ஐந்திணை இயற்கையைக் கவிதைக்குப் பின்னணியாக அமைப்பதல்லாமல், இயற்கையை இயற்கை இலயிப்புக்காகவே பாடும் பழக்கம் சங்கக் கவிஞர்களிடம் இருந்ததில்லை. நாற்பொருள் பயக்கும் நடையொழுங்குடன், விளங்கிய அறிவின் முனைவன் கண்டதுதான் முதல்நூல் எனத் தமிழர் நம்பினர். எனவே, மக்களுக்குப் பயன்படக் கூடியதாகவும், அவர்தம் வாழ்வை ஒழுங்குபடுத்தக் கூடியதாகவும் புதுக்கவிதையைப் புனைந்தனர். இத்தகைய புதுக்கவிதைகளில் காணப்படும் தத்துவச் சிந்தனைகளை வகைதொகைப்படுத்தி, தக்க சான்றுகளுடன் விளக்கிக் காட்டுவது இவ்ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

கவிஞர்கள் ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், ஈரோடு தமிழன்பன் ஆகிய மூவரின் கவிதைகளில் காணப்படும் தத்துவம் தொடர்பான செய்திகளை வகைதொகைப்படுத்தி விளக்கிக் காட்டுவதே இவ்ஆய்வின் எல்லையாகும்.

ஆய்வுத்தரவுகள்

இவ்ஆய்விற்குப் பயன்பட்ட தரவுகளை முதன்மைத்தரவுகள் என்றும், துணைமைத் தரவுகள் என்றும் இருவகையாகப் பகுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

முதன்மைத்தரவுகள் (Primary Sources)

இவ்ஆய்விற்குக் கவிஞர் ந.பிச்சமூர்த்தியின் "***ந.பிச்சமூர்த்தி கவிதைகள்***" (மதி நிலையம், சென்னை, முதல்பதிப்பு, 2001), கவிஞர் இன்குலாப்பின் "***ஒவ்வொரு புல்லையும்***" (பொன்னி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1999), கவிஞர் ஈரோடு தமிழன்பனின் "***தமிழன்பன் கவிதைகள்***"-தொகுதி 1, 2, 3, 4, 5, பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2007) ஆகியவை முதன்மைத்தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

துணைமைத்தரவுகள் (Secondary Sources)

புதுக்கவிதை குறித்து இதுவரை வெளிவந்துள்ள நூல்கள், திறனாய்வு நூல்கள், திறனாய்வுக் கட்டுரைகள், தத்துவம் குறித்த நூல்கள், காந்தியம், மார்க்சியம், பெரியாரியம் குறித்த கட்டுரை நூல்கள், ஆய்வேடுகள், கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், இதழ்கள் ஆகியன இவ்ஆய்விற்குத் துணைமைத் தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வு அணுகுமுறைகள்

இவ்ஆய்வானது பகுப்பாய்வு முறை (Analytical Approach), விளக்கமுறை (Descriptive Approach), சமுதாயவியல் (Sociological Approach), வரலாற்றியல் (Historical Approach), ஒப்பியல் (Comparative Approach) ஆகிய அணுகுமுறைகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இயல் பகுப்பு

இவ்ஆய்வேடு ஆய்வு அறிமுகம், ஆய்வு நிறைவுரை நீங்கலாகப் பின்வரும் ஐந்து இயல்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. அவை:

1. ***தத்துவம் வரையறை***
2. ***தமிழ்ப் புதுக்கவிதைகளில் தத்துவச் சிந்தனைகள்***
3. ***தமிழ்ப் புதுக்கவிதைகளில் மார்க்சியச் சிந்தனைகள்***
4. ***தமிழ்ப் புதுக்கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள்***
5. ***தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெரியாரியச் சிந்தனைகள்***

என்பனவாகும்.

"***ஆய்வு அறிமுகம்***" என்னும் இப்பகுதியில் ஆய்வுத்தலைப்பு, ஆய்வு நோக்கம், ஆய்வுத்தரவுகள், ஆய்வு அணுகுமுறைகள், இயல் பகுப்பு, இயல் விளக்கங்கள் ஆகியன விளக்கப் பெற்றுள்ளன.

இயல் விளக்கங்கள்

"***தத்துவம் வரையறை***" என்கின்ற முதல் இயலில் தத்துவம் குறித்த விளக்கங்கள், தத்துவம் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள் முதலியன எடுத்தியம்பப்பட்டு, பின்னர் தத்துவத்தை மேலைநாட்டுத் தத்துவம், இந்தியத் தத்துவம், தமிழகத் தத்துவம் எனப் பாகுபாடு செய்யப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

"***தமிழ்ப் புதுக்கவிதைகளில் தத்துவச் சிந்தனைகள்***" என்கின்ற இரண்டாம் இயலில், உலகியலில் காணப்படும் தத்துவங்கள், ஆன்மிகம், அரசியல், விஞ்ஞானம் பற்றிய தத்துவங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து தத்துவம் குறித்த வாதங்களின் 27 வகைமைகள் பற்றியும் விளக்கப்பெற்று, ந. பிச்சமூர்த்தி, இன்குலாப், ஈரோடு தமிழன்பன் ஆகியோரது கவிதைகளில் காணப்படும் மார்க்சியம், காந்தியம், பெரியாரியம் தவிர பிற தத்துவங்கள் சான்றுகளுடன் ஆராயப்பட்டுள்ளன.

"***தமிழ்ப் புதுக்கவிதைகளில் மார்க்சியச் சிந்தனைகள்***" என்னும் மூன்றாம் இயலில், மார்க்சிய விளக்கம், தொல்பழங்காலப் பொதுவுடைமைச் சமுதாயம்,

அடிமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவச் சமுதாயம், முதலாளித்துவச் சமுதாயம் மக்களின் பொருளாதார, அரசியல் போராட்டம் ஆகியன பற்றி விளக்கப்பட்டு, கவிஞர்கள் ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், ஈரோடு தமிழன்பன் ஆகிய மூவரின் கவிதைகளில் காணப்படும் மார்க்சியம் தொடர்பான சிந்தனைகளை வகைதொகைப்படுத்தி, தக்கச் சான்றுகளுடன் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன.

"***தமிழ்ப் புதுக்கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள்***" என்கின்ற நான்காம் இயலில், காந்தியம் குறித்த பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள் முதற்கண் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பின்னர் மேற்கூறிய மூன்று கவிஞர்களின் கவிதைகளில் காணப்படும் காந்தியத் தத்துவங்களான சுகாதாரம், ஆன்மிகம், கல்வி, அரசியல், சத்தியம், அகிம்சை, பெண்ணியம், பொருளியல் ஆகியன தக்கச் சான்றுகளுடன் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

"***தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெரியாரியச் சிந்தனைகள்***" என்னும் பெயரிய ஐந்தாம் இயலில், பெரியாரியம் குறித்த விளக்கங்கள் முதற்கண் எடுத்துரைக்கப் பெற்ற பின்னர், பெரியாரியத்தின் முக்கிய கோட்பாடுகளாகியச் சாதி-மத எதிர்ப்பு, அரசியல், பெண்களின் நிலை, கல்வி, கடவுட் கோட்பாடு ஆகியன மேற்கூறிய மூன்று கவிஞர்களின் கவிதைகளில் காணப்படும் திறன் ஆராயப்பெற்றுள்ளன.

ஆய்வு நிறைவுரை

இயல்தோறும் கண்டறியப்பட்ட மெய்ம்மைகள் '**ஆய்வு நிறைவுரை**' என்னும் பகுதியில் நிரல்படத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

துணைநூற்பட்டியல்

இவ்ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், இதழ்கள் ஆகியன அகரவரிசையில் '**துணைநூற்பட்டியல்**' என்னும் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

பின்னிணைப்புகள்

படைப்பாளர்களின் வாழ்க்கைத்தகவல்கள், படைப்பாளர்களுடன் ஆய்வாளர் நிகழ்த்திய நேர்காணல்கள், படைப்பாளர்களுடன் ஆய்வாளர் எடுத்துக்கொண்ட நிழற்படங்கள் ஆகியன இவ்ஆய்வேட்டின் இறுதியில் '***பின்னிணைப்புகள்***' என்னும் பகுதியில் தரப்பட்டுள்ளன.

இயல்-1

தத்துவம் – வரையறை

இயல் – 1

தத்துவம் – வரையறை

'தத்துவம்' என்ற கோட்பாடு எப்பொழுது உருவானது என்று காலத்தை யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது. உலகம் தோன்றிய நிகழ்வுகூட தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே உலகம் முழுவதும் வழங்கிவரும் தத்துவம் என்ற சொல் பல்வேறுபட்ட துறைகளிலும் இயங்கி, வருவதைக் காணலாம்.

தனிநபரின் கொள்கைகளும் கோட்பாடுகளும் தத்துவத்தை நிர்ணயிக்கும் காரணிகளாக மாறிவிட்டன. உலகம் தோன்றிய விதம், விஞ்ஞானம், ஆன்மிகம், கோள்களின் இயக்கங்கள், வாழ்வதற்கான வழிமுறைகளைக் கூறும் கருத்துக்கள், வாழ்க்கைக் கொள்கைகள், கல்விக்கோட்பாடுகள், அரசியல், தந்திரம் என்று எண்ணற்ற வகைமைகள் தத்துவத்தில் பொதிந்துள்ளன.

> *"உணர்வுக்கும் இருத்தலுக்கும் ஆன்மாவுக்கும் இயற்கைக்கும் இடையே நிலவும் உறவு பற்றிய பிரச்சினை தத்துவத்தின் அடிப்படை பிரச்சினையாக விளங்குகிறது"*[1].

இன்றைய காலத்தில் தத்துவத்தை ஒரு பிரச்சினைக்குரிய நிகழ்வாக, கருத்தாகச் சிந்திக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் உலகம் இயங்கி வருகின்றது. தத்துவத்தை நாம் கொள்கை, கோட்பாடு என்று பிரிப்பதற்குக் காரணம் கொள்கை என்பது கலை சார்ந்த தத்துவமாகவும், கோட்பாடு என்பது அறிவியல் முறையில் விடை சொல்லக் கூடியதாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. தத்துவம் என்பதை உணரத்தக்கத் தன்மை கொண்டதாக உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. உதாரணமாக, கொள்கை என்பது தனிநபர் பின்பற்றும் மதம் மற்றும் பற்று

---

1. தத்துவம் தொடக்கப் பயிற்சி நூல், ப.12.

தொடர்புடையது. கோட்பாடு அல்லது விதி என்பது அறிவியல் அறிஞன் தன் ஆய்வுக்கூடத்தில் செய்த ஆய்வில் கிடைக்கும் விடையாகும். 'உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு' என்ற தத்துவத்தை ஒரு சிலரே ஏற்பர். எல்லோருக்கும் இது போன்ற தத்துவம் பொருந்தாது. நடைமுறை செயல்களுக்கும், வாழ்க்கை இயக்கத்திற்கும் பொருந்தக்கூடிய தத்துவங்களை உலகோர் பின்பற்றுவர். இழப்புகள் ஏற்படாமல் இருக்க தத்துவங்களைப் பின்பற்றினால் போதும் என்பதை யாரேனும் கூறினால், அதற்கான வழிமுறைகளை முன்யோசனை இன்றி மக்கள் பின்பற்றத் தொடங்குவர். தத்துவங்கள் அனைத்தும் ஊடுருவி வந்தவை. காரணம் யாதெனில் எண்ணற்ற கிடங்குகளாய் ஆசைகள் மக்களின் மனதில் நிலைத்திருப்பதேயாகும்.

தத்துவம் என்பது ஆக்கபூர்வமானது; அறிவுப்பூர்வமானது என்ற இரண்டு கருத்துக்களுள் அடங்கியுள்ளது. அறிவியல் கண்டுபிடிப்புகள் யாவும் ஆக்கம், அழிவு ஆகிய இரண்டையும் கொண்ட விஞ்ஞானத் தத்துவமாகும்.

ஆன்மிகம் என்பது ஆக்கத்திற்கான தத்துவம். ஆனால், அதனால் செய்யப்படும் சடங்குகள், மூடநம்பிக்கைகள் யாவும் ஆன்மிகத்திற்குள் இடம்பெற்றவை; வலிய மக்களால் புகுத்தப்பட்டவை. இவை தத்துவம் என்று ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எந்தக் கருத்துக்கள் உண்மைகளை எடுத்துரைக்கின்றனவோ அவையே மெய்ஞ்ஞானம் எனப்படுகின்றது.

> *"எவற்றை எல்லாம் நடைமுறையில் மெய்ப்பித்துச் சாதிக்க விரும்புகிறோமோ அவற்றைப் பற்றி நாம் பெற்றிருக்கும் ஞானம் தான் தத்துவம் எனப்படுகிறது"*[2]

---

2. ஜார்ஜ் பொலிட்ஸர், மார்க்ஸீய மெய்ஞ்ஞானம், ப.11.

தத்துவம் என்பது நடைமுறைச் செயல்களில் சாதிக்கும் தன்மை கொண்டதாகத் திகழவேண்டும். வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்னும் அளவிற்கு வீணான பேச்சுகளால் சிதைந்து விடக்கூடாது. மனதால் சிந்தனை இருந்தாலும் அதை நிறைவு செய்வதற்கு உரிய உரம் இடுதல் வேண்டும். அப்பொழுதுதான் தத்துவம் வெற்றி பெற முடியும்.

தத்துவம் – தோற்றம்

தத்துவம் தோன்றிய காலம் எது என்று கூறமுடியாது. எனினும் அதன் வளர்ச்சி பற்றி மேலைநாட்டு அறிஞர்களும் இந்திய ஞானிகளும் பலவித கருத்துக்களைக் கூறியுள்ளனர். கிரேக்க யவனர், யூதர், அரேபியர், ஆரியர், குஷானர், மௌரியர் மற்றும் தக்காணம், தமிழகம் சார்ந்த சிந்தனைகள் வணிகத்துடன் கடல் கடந்து சென்றுள்ளன. கிரேக்க யவனச் சிந்தனைகள், வைதீகச் சிந்தனைகள், உபநிடதச் சிந்தனைகள், சமண பௌத்தச் சிந்தனைகள் மற்றும் பூதவாத ஊடாட்டம் கொண்டு தத்துவங்களை உருப்படுத்திக் கொண்டன. மனிதர்கள், பொருள்கள், சிந்தனைகள் பிரிக்கமுடியாதவை.

> *“கிரேக்க-ரோம் பேரரசின் ஹெல்லன்னிய காலமும், தமிழகத்தில் கடல் வாணிகம் பெருகிய காலமும் ஒன்றே. பொருள்கள், உலகம், பிரபஞ்சம், இயற்கை, ஆன்மா, கடவுள் பற்றிய அவர்களது நூல்கள் அப்போதிருந்தே உள்ளன. ஹெல்லனிய காலத்தில் எபிகூரியனியம், சந்தேகவாதம், ஸ்தோயிக் தத்துவம் பயிலப்பட்டன. எபிகூரியனியம் பொருள் முதல் வாதம் சார்ந்தது. சந்தேகவாதம் நாத்திக மரபைக் கொண்டிருந்தது”*[3]

என்று தத்துவத்தின் தோற்றம் மேலை நாட்டில் இருந்தமைக்கான சான்றுகளை இ.முப்பால்மணி சுட்டிக்காட்டுகின்றார். ஆனால் இந்தியாவில்தான் தத்துவம்

---

3. கி.முப்பால் மணி, தமிழகத்தில் தத்துவச் சிந்தனை மரபுகள், ப.7.

முதன்முதலாகப் பின்பற்றப்பட்டது என்பதை ஜார்ஜ் பொலிட்ஸர் எடுத்துரைக்கின்றார்.

உணர்வுக்கும், இருத்தலுக்கும், ஆன்மாவுக்கும், இயற்கைக்கும் இடையே நிலவும் உறவு பற்றிய பிரச்சினை, தத்துவத்தின் அடிப்படைப் பிரச்சினையாக விளங்குகிறது. எனவே, இயற்கையையும், சமூகத்தையும், மனிதனையும் பற்றிய கண்ணோட்டத்திற்குத் தீர்வு காண்பதையே தத்துவம் ஆராய்கிறது.

தத்துவம் என்ற சொல்லுக்கு 'உண்மை' என்பது பொருள். எனவே தத்துவஞானம் என்பது உண்மையை அறிதல் என்று சொல்லப்படுகின்றது. நாம் காணும் பொருட்கள் யாவிலும் தத்துவம் உள்ளனவேயன்றி இல்லை என்று சொல்லுதற்கு இடமில்லை.

மேலைநாடுகளில் தத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

தத்துவம் என்பது உலகம் தோன்றிய காலம் முதல் பரிணமித்து வருகின்ற ஒரு கூறு. அறுதியிட்டுக் கூறமுடியாத தத்துவத்தின் தோற்றத்தைப் பல்வேறுபட்ட தன்மைகளைக் கொண்ட புலன்களால் அறியமுடிகின்றது. தத்துவம் யாரால் தோற்றுவிக்கப்பட்டது? அதற்குரிய செயலூக்கங்கள் எங்கு தொடங்கின? என்பதற்கான சான்றாதாரங்களை அனுமானிக்க மட்டுமே முடியும். ஆராய்தற்கு உரியதாகப் பலவித கருத்துக்கள் விளங்குகின்றன. இதன் அடிப்படையைத் தெளிவுபடுத்த இயலாது. எனவே மேலைநாட்டினர் தத்துவத்தை மதிப்பீடு செய்து விடை காண முற்பட்டனர் என்றாலும் அதற்கான கேள்விகளும் விடைகளும் இந்தியத் தத்துவஞானத்தின் மூலமே அவர்களுக்குக் கிடைத்தது எனலாம்.

அறிவியல், தொழில், ஆன்மிகம் இவற்றை மையமிட்டே தத்துவம் முதலில் தோன்றியது.

> *"மேல்நாட்டிலே தத்துவ ஆராய்ச்சி, குறிப்பிட்ட ஒரு காலத்தில் குறிப்பிட்ட ஒருவரால் தொடங்கப்பட்டது. இந்திய தத்துவ ஞானம் அத்தகையதன்று"*[4]

என்கிறார் இலக்ஷ்மணன். மேலைநாட்டினர் அகவுலக வாழ்க்கை குறித்த ஆராய்ச்சியில் அதிகம் ஈடுபடவில்லை. புறவுலகைப் பற்றியே அதிகஅளவில் அவர்களின் ஆராய்ச்சி காணப்பட்டது. வானம், நிலம், நீர், காற்று, தீ என்று பஞ்சபூதங்களின் தன்மைகளை ஆராய்தலும், அவற்றை மனித உடலோடு ஒப்பிட்டு ஆராயும் அகவுலக ஆராய்ச்சி மேனாட்டாரிடம் காணப்படவில்லை. மேனாட்டாரின் தத்துவங்கள் பொதுவாக அரசியல் சார்புடையன. கிரேக்கநாட்டில் (கி.மு 469 - கி.மு 399) தோன்றிய சாக்ரடீஸ், கிரேக்கத்தின் மற்றுமொரு தத்துவஞானி அரிஸ்டாடில் (கி.மு 384), அமெரிக்காவில் தோன்றிய (1803)ல் ரால்ஃப் வால்டோ, எமர்ஸன் மற்றும் இங்கர்சால் (1833) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஒவ்வொருவரும் புறவுலக வாழ்க்கை குறித்து அறிந்திராத மக்களின் போதகர்களாக விளங்கினர். எதையும் முழுமையாகச் சிந்திக்கத் தெரியாத மக்களின் மத்தியில் இவர்கள் கற்பித்த கொள்கைகள் அனைத்தும் அந்நாட்டு மக்களுக்கு வேதங்களாகவும், தத்துவங்களாகவும் தெரிந்தன. முதன்முதலில் தத்துவத்தை எப்படி அணுகவேண்டும் என்பதை,

> *"இடைக்கால இறை இயல் பாண்டியத்தின் தலைசிறந்த பிரதிநிதியாக விளங்கியவர் 'தாமஸ் அக்வைனஸ்* (Thomas Aquinas) *(1225-1274).* *முதல் இயக்குசக்தி, முதல் காரணம் எல்லா இன்றியமையாமைக்கும் ஊற்றுக்கண், எல்லாவகை இருத்தலுக்கும் குறிக்கோள்களை நிச்சயிக்கும் அறிவுசான்ற சிருஷ்டிகர்த்தா என்ற முறையில் கடவுள் நிலவுவதற்குச்*

---

4. கி.லக்ஷ்மணன், இந்திய தத்துவ ஞானம், ப.1.

சான்றுகள் தேடுவதே தமது தத்துவத்தின் நோக்கம் என்று அவர் அறிவித்தார்”[5]

இவ்வாறாகத் தத்துவம் பற்றிய கொள்கை வரையறை கொண்டதாக விளங்கியது.

தத்துவம் என்பது பற்றி ஹக்ஸ்லி,

“மக்கள் தங்கள் வாழ்க்கையை தத்துவத்திற்கேற்றவாறும், உலகத்தின் எண்ணத்திற்கேற்றவாறும் வாழ்கின்றனர். உலகில் தத்துவமின்றி யாரும் வாழ இயலாது இது உண்மை”[6]

என வரையறுக்கிறார்.

தத்துவம் (philosophy) என்ற சொல், இரண்டு கிரேக்கச் சொற்களான ‘philos’ மற்றும், ‘sophia’ இவைகளிலிருந்து உருவானதாகும். ‘philos’ என்றால் பற்று அல்லது அன்பு என்று பொருள். ‘sophia’ என்றால் மெய்யறிவு அல்லது ஞானம் எனப்படும். எனவே, தத்துவம் என்பது மெய்யறிவுடன் கூடிய பற்று எனப்படும். இது மெய்யறிவு அல்லது ஞானம் எனவும் கூறப்படும்.

தத்துவம் என்பது வாழ்க்கையின் மதிப்புகள் பற்றிய சிந்தனைகள் ஆகும். மேலும் ஆழ்ந்த அறிவு, சிந்தனை மற்றும் எண்ணங்கள் மூலம் கடவுள் மற்றும் இயற்கையோடு தன்னை மனிதன் இணைத்துக் கொள்ள உதவி செய்வது எனக் கொள்ளலாம்.

தத்துவம் குறித்த அறிஞர்களின் கருத்துக்கள்

தத்துவம் குறித்து பல்வேறு அறிஞர்கள் பலவிதமான கருத்துக்களைக் கூறுகின்றனர். அவற்றுள்,

---

5. தத்துவம் தொடக்கப் பயிற்சி நூல், ப.35.
6. கல்வியியல் பாடநூல், மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி, ப.7.

"உண்மையை உள்ளபடி உணர உதவும் தர்க்க அடிப்படையே தத்துவம். தத்துவம் என்பது வாழ்க்கையில் உண்மை அர்த்தத்தை தேடும் முயற்சியாகும்"[7]

என்பார் இராதாகிருஷ்ணன். தத்துவம் என்பது அறிவியல் மற்றும் அறிவுசார் திறனாய்வுச் சான்று கொண்டதாகும். தத்துவம் மற்ற படிப்புகளைப் போன்று அறிவு ஒன்றை மட்டுமே முதன்மையான குறிக்கோளாகக் கொண்டதாகும்.

தத்துவம் வாழ்க்கையில் நிலையான ஞானத்தைத் தேடுகின்றது. அத்தகைய தத்துவ வாழ்க்கையிலிருந்து இலக்குகள் பிறக்கின்றன.

ஒவ்வொருவரும் ஒரு தத்துவஞானிகள். ஏனெனில் உண்மையைக் கண்டுபிடிக்க ஒவ்வொருவரும் ஏதோ ஒருவழியில் தங்களுடைய கொள்கைகளுக்கேற்றவாறு வாழ்கின்றனர். தத்துவம் மட்டுமே பல தடைகளையும், இடையூறுகளையும் தாண்டி அறிவை விருத்தியடைச் செய்ய உதவுகிறது. இவ்வாறு பல்வேறுபட்ட வரையறைகளைத் தாண்டி உலகம் முழுவதும் ஒளிரும் தத்துவம் ஏதோ ஒரு தேடலை உள்வாங்கிக் கொண்டு உண்மை அறிவதை மையப் பொருளாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

மேலை நாட்டுத் தத்துவம்

கருத்தியல் கொள்கைகளைப் பல்வேறு விதமாக அணுகி அவற்றைப் பரப்பிய ஞானிகள் மேலைநாட்டில் இருந்துள்ளனர். கருத்தியல் கொள்கை என்பது ஆன்மாவை முதன்மையாகவும், மையமாகவும் கொண்டு ஆன்மாவே உண்மை எனவும், அவற்றின் செயல்கள் உண்மை எனவும் விளக்குவதாகும். மேலைநாட்டுத் தத்துவ அறிஞர்களான பிளேட்டோ, சாக்ரடீஸ், டெகார்டஸ்,

---

7. தத்துவம் தொடக்கப் பயிற்சி நூல், ப.5.

லீப்னிட்ஸ், காண்ட், ஹெகல், பெர்க்லி, புரோபல் போன்றோர் மேலை நாட்டில் கருத்தியல் கொள்கைகளை நிலைநிறுத்தியோர் ஆவர்.

> *"ஜெர்மனியத் தத்துவத்தில் கருத்து முதல் வாதத்துக்கும் பொருள் முதல் வாதத்திற்கும் இடையேயும் மாறாத நிலைவாதத்துக்கும் இயக்க இயல்வாதத்துக்கும் இடையேயும் கடுமையான போராட்டம் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் விரிவாக நடந்தது"*[8]

இவ்வாறாகத் தத்துவத்தின் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டவர்கள் ஜெர்மனியில் இருந்தனர். இதுபோல,

> *"சாங்கியம், யோகம், லோகாயதம் என்பவை தத்துவ ஞானத்தில் உள்ளன"*[9]

என்பார் சாணக்கியர். மேலும்,

> *"தத்துவஞானமானது, அனைத்து வித்யைகளுக்கும் தீபமாகவும், அனைத்து செயல்களுக்கும் உபாயமாகவும், அனைத்து தர்மங்களுக்கும் புகலிடமாகவும் இருப்பது என்று சான்றோர்கள் கூறுவார்கள்"*[10]

என்கிறார் சாணக்கியர். கிரேக்க யவன, எகிப்தியச் சிந்தனைகள், வைதீகச் சிந்தனைகள், உபநிடதச் சிந்தனைகள், சமண-பௌத்த மற்றும் உலகாயத சிந்தனைகள் தமக்குள் ஊடாட்டம் கொண்டு கருத்தியல்களையும், தத்துவங்களையும் உருப்படுத்திக் கொண்டன. மனிதர்கள், பொருட்கள் பிரிக்க முடியாதவை; கைப்பிணைந்து உடன் செல்பவை. உலக தத்துவங்கள் அனைத்தும் சமூகம் சார்ந்தவை. மக்களுடன் ஊடாடும் அறிவியல் சாதனங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்குபவை.

---

8. தத்துவம் தொடக்கப் பயிற்சி நூல், ப.41.
9. மொழிபெயர்ப்பு:அர்த்த சாஸ்திரம் என்னும் சாணக்கியரின் நீதிநூல், ப.9.
10. மேலது, ப.9.

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் நடைமுறைகளுக்கானச் சாத்திரங்களை மேலைத் தத்துவம் கூறவில்லை. மாறாக, மனிதனிடம் உள்ள அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கானத் தீர்வை மூடநம்பிக்கையின் மீது செலுத்தாமல் விடை கூறுவனவாய்த் திகழ்கின்றன. அந்த வகையில் மேலைநாட்டுத் தத்துவத்தின் போற்றுதற்குரிய தத்துவமாக மார்க்சியம் விளங்குகின்றது.

தத்துவம் தன்னலமற்றது; நிலையானது. உலகம் நிலையில்லாதது. அதாவது ஒவ்வொரு நாளும் வளருகின்ற உண்மைகள் இன்று உணரமுடியாதன. ஆனால் நாளை உணரத்தக்கன. இக்கூற்று தவறானது, வாழ்க்கை நிலையில்லாதது என்று பேசுகின்ற நாம் தத்துவம் மட்டும் நிலையானது என்று கூறுவது பொருந்தாத கூற்றாகும். மாறுபடும் இயற்கை, மாறுபடும் வாழ்க்கை விதிமுறைகளுக்கேற்பத் தத்துவமும் மாறுபட்டுத்தானே ஆகவேண்டும். எனவே காலந்தோறும் வளர்ச்சியும் வேறுபாடும் இல்லையென்றால் எந்த ஒரு பொருளும், எந்த ஒரு தத்துவமும் தன் மதிப்பை இழந்து விடுகின்றது. அப்படி தன் மதிப்பை இழக்காமல் விளங்கும் மேலைநாட்டுத் தத்துவத்தில் மார்க்சியத் தத்துவமும் அடங்கும்.

> *"மார்க்சின் தத்துவஞானம் ஒரு முழுநிறைவான தத்துவஞானப் பொருள் முதல்வாதமாகும். அது மனிதகுலத்திற்கு குறிப்பாக, தொழிலாளிவர்க்கத்திற்கு அறிவாற்றலின் சக்திமிக்க ஆயுதங்களை வழங்கியுள்ளது."*[11]

மார்க்சியம் என்பது சமுதாய நீதியையும், சமத்துவத்தையும் கொண்ட ஒரு சமூக அமைப்பு என்று கடந்த தலைமுறை மக்களால் எதிர்நோக்கப்பட்ட சோஷலிசம் இன்று உண்மையானதோர் ஆற்றல் பெற்ற தத்துவமாகிவிட்டது. இது

---

11. V.I. Lenin, Collected works, Moscow progress publishers, vol.19, p.25.

உலக வளர்ச்சியின் முழுமையான போக்கிலும் மேன்மேலும் தீர்மானமான தாக்கத்தைக் கொண்டு திகழ்கிறது.

உலகில் இயங்கும் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தத்துவங்கள் உருவாகின்றன. அதுபோல விஞ்ஞானத் தத்துவங்களும் நம்மைச் சுற்றியுள்ள ஒரு பகுதியையோ அல்லது உலகில் உள்ள குறிப்பிட்ட தொடர்புகளையோ அல்லது உறவுமுறைகளையோ ஆராய்கிறது. இவ்வாறாக உயிரியல் விஞ்ஞானங்கள் வாழ்க்கையை அதன் நியதிகளைத் தாவர மற்றும் விலங்கு குலத்தின் சிறப்புத் தன்மைகளை ஆராய்ந்து அறிகின்றன. பொருளாதார விஞ்ஞானங்கள் உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகளின் வளர்ச்சித் தன்மைகள், உற்பத்தி மற்றும் வினியோகத்தின் வடிவங்கள் ஆகியவற்றை ஆராய்கின்றன. இதுபோன்ற விஞ்ஞானத் தத்துவங்களே மேலைநாடுகளில் தோன்றின. சிந்தனையும் உணர்வும் மனித மூளையின் உருவாக்கங்கள் என்று ஏங்கல்ஸ் கூறினார். இதனைப் பயன்படுத்தி பல்வேறுபட்ட தத்துவங்கள் தோன்றினாலும் அதை மறுக்கக்கூடிய தத்துவவாதிகள் மறுப்பு நூல்கள் எழுதிக் கொண்டேதான் இருக்கின்றனர்.

> *“இத்துறையில் நிகழும் நேர்மறையான வளர்ச்சிகளும், முதலாளித்துவ பார்வை குறித்த ஒரு விமர்சன அலசலும், உலகப் பொது ஜனப் பிரக்ஞையில் இருக்கிற மார்க்ஸீய-லெனினியப் பார்வைகளை ஒரு திரட்சியாகத் தொகுப்பதுடன், நமது புவிப்பந்தில் கம்யூனிசத்தின் வெற்றிக்கான நெடிய பயணத்தில் மனித சமூக இயக்கத்தினைக் கெட்டிப்படுத்துகிறது”*[12]

என்று மார்க்சியம் குறித்த கருத்துக்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

---

12. Translated by H. Campbell creiston, Philosophy and logical problems of civilization, p.154. (The positive developments and studies in this field, and a critical survey of capitalist conception are consolidating the Marxist-Leninist outlook in world public consciousness, and concretising human kind’s movement along the highroad to the triumph of communism on our planet)

"சமாதானத்திற்காகவும் மக்களினங்களின் பாதுகாப்புக்காகவும் நடக்கும் போராட்டத்தில் மனிதகுலம் எதிர்நோக்கியுள்ள அடிப்படையான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சோஷலிசம் தான் முக்கிய சக்தி"[13]

என்று சோஷலிசம் குறித்து கூறப்படுகின்றது. ஓர் இயக்கம் அல்லது இயக்கத்தத்துவம் எல்லாக் காலத்திலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் உருவாகி விடாது. சமுதாயத்தின் புறவடிவ அமைப்பை ஒட்டி அகநிலையின் பரிணாம வளர்ச்சியின் இறுக்க நிலையை ஒட்டி ஏற்படுவது. ஒவ்வொரு தேவையையும் காலமே நிர்ணயிக்கின்றது. தேவையின் அவசியத்தைக் காலம் நமக்கு உணர்த்துகின்றது. தேவையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்கிற ஒரு கூட்டம் அந்தத் தேவையை அடைவதற்கான வழி இன்னது என்பதையும் பிறரிடையே அறிவுறுத்துகின்றன. நாளுக்கு நாள் தங்கள் இயக்கத்தைப் பெரிதுபடுத்த, இயக்கத்தின் கொள்கைகள் இவையென்று பறைசாற்றிக் கொள்ள கொள்கை விளக்கச் சொற்பொழிவுகள் தேவையாக இருந்தன. இவ்வியக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் இவை என்பதை நிலைநிறுத்திட இயக்கக் குழுவினர் பல வழிகளைக் கையாண்டனர்.

இவ்வாறாக மேலைநாடுகளில் தோன்றிய இயக்கங்கள் 'உலகாயதம்' என்று போற்றப்படுவனவாய், துறைதோறும் தத்துவங்களை உருவாக்கி கொள்கைகளைப் பறைசாற்றுவனவாய்த் திகழ்கின்றன.

மனித உணர்ச்சிகள் என்றைக்கும் மாறியதில்லை என்ற நம்பிக்கை மனிதர்களிடம் காணப்படுகின்றது. மனித விருப்பங்களும் ஒரே மாதிரியானவை. அவை மாறியதே இல்லை என்ற நம்பிக்கையும் உள்ளது. இயக்கம் என்பது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம்பெயர்வது. அதுபோல, இயக்கங்களின்

---

13. வி. கிராபிவின், இயக்கவியல் பொருள் முதல் வாதம், ப.24.

கொள்கைகளும் ஒருவகைக் கோட்பாடு அல்லது கொள்கையில் இருந்து மற்றோர் இடத்திற்கு அல்லது கொள்கைகளை மாற்றிக்கொள்வதை உணர்த்துகிறது.

சுரண்டும் கூட்டத்தை எதிர்க்காமல் இருப்பதற்காகவும், அவர்களின் மதத்திற்கு அங்கீகாரம் வழங்குவதற்காகவும் அன்பளிப்புமுறை மேலைநாடுகளில் இருந்துள்ளது. பாபிலோனின் மதஇயல் உலக மத இயல்களில் பழமையானது.

> *"இதன் பிரதி கி.பி 1902ல் ஸூஸாவில் (சூரான்) ஆய்வுகளின் போது கிடைத்துள்ளது. இக்கல்வெட்டின் நாற்புறமும் 3600 வரிகள் செதுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு தற்பொழுது லூபர் (பாரிஸ்) மியூசியத்தில் வைக்கப்பட்டிருக்கிறது."*[14]

இதில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பொறுமை உண்டு என்பதை இந்த மன்னன் உணர்த்தியிருக்கின்றான். பாபிலோனில் சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் இருவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, இவர்களிடம் காணப்பட்ட ஏற்றத்தாழ்வை சரிசெய்வது மிக எளிமையான பணியாக இருந்தது. இம்மன்னன், ஒருவன் ஓர் உயர்வர்க்கத்தினரின் கண்ணைப் பொசுக்கினால், அவனுடைய கண்ணையும் பொசுக்கி விட வேண்டும் என்னும் விதிமுறையை ஏற்படுத்தினான். அதிலும் ஒருவன் ஓர் ஏழையின் கண்ணைப் பறித்தால், அவன் ஒரு வெள்ளி நாணயத்தை அபராதமாகச் செலுத்த வேண்டும். இதுபோன்ற பொருந்தாத நீதிகள் பாபிலோனில் காணப்பட்டன.

சீனநாடு நிலப்பிரபுத்துவத்திற்குப் பெரும் ஆதரவளித்தது. இதனாலேயே சீனம், கொரியா, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளிலும் உள்ள ஆளுங்கூட்டம் இன்றுவரை கன்ஃபூசியஷியலின் உபதேசங்களுக்கு உயர்ந்த இடமளித்துள்ளது. கன்ஃபூசியஷின் சமகாலத்தவரான அவரைவிட மூத்த சிந்தனையாளருமான

---

14. ராகுல் சாங்கிருத்யாயன், மனித சமுதாயம், ப.141.

மோ–தீ சமுதாயத்தில் நிலவிய பரஸ்பர மோதலைத் தெளிவாகப் பார்த்தார். அதற்கான விடையையும் கூறினார். நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலிருந்து விலகி இயற்கைச் சூழலில் வாழவேண்டுமென்றார். இவர் மனித சமுதாயத்தின் துன்பங்களையும் அவற்றுக்கான அந்தரங்கக் காரணங்களையும் அறிந்துகொள்ள விழைந்தார். போர், பேராசை, துர்நடத்தை ஆகியவற்றை எதிர்த்துக் குரலெழுப்பினார். சமுதாய அமைப்புகள் தேவைகளுக்காகவே உள்ளன என்பது மோ–தீயின் கருத்து. இவ்வாறாக சீனத்தில் தத்துவக்கொள்கைகள் பரவத்தொடங்கின.

கிரேக்க நாட்டில் நிலப்பிரபுத்துவ உலகத்தில் எழுத்துக்கள், மொழி, இலக்கியம், கலைகள் ஆகிய எல்லாவற்றிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் இவற்றைக் கொண்டு சாதாரண மக்களின் எதார்த்த நிலையை உணரஇயலாது. எல்லா வல்லமையும் கொண்ட ஆளும்வர்க்கம் செய்யும் கொடுமைகளைச் சித்திரிப்பதை அவர்கள் விரும்பவில்லை. எனினும் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகொண்ட அறிஞர்கள் பலர் ஆளும்வர்க்கத்தின் புரட்சியைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் சீர்திருத்துவதற்கான நூல்களை இயற்றினர். இவர்கள் இனக்குழு அமைப்பின் சுதந்திரத் தன்மையை மிகவும் விரும்பினர். தங்களுடைய பகுதிகளில் இனக்குழு குடியரசுகளை அமைத்தனர். கிரேக்கக் குடியரசு நகரங்கள் விவசாயத்தாலும் வியாபாரத்தாலும் செல்வச் செழிப்புடன் இருந்தன.

கிரேக்கத்தில் ஸோலோன் என்ற மன்னனின் (கி.மு 559) காலத்தில் உள்முரண்பாடுகள் மிகுதியாக இருந்தன. இதனால் சுதந்திர வேட்கையுடைய 'ஹெல்லர்களால் கலகம்' ஏற்படும் அபாயமிருந்தது. இவர் காலத்தில் வாங்கிய கடனைச் செலுத்த இயலாதவனைக் கடன் தந்தவன் தனது அடிமையாக்கிக் கொண்டிருந்தான். இவ்வழக்கத்தை இவர் ஒழித்தார். தனிச் சொத்துரிமை வளர

வளர ஏழைகளும் பெருக ஆரம்பித்தனர். எனவே விவசாயிகளின் நிலங்கள் கந்து வட்டிக்காரர்களின் கைகளுக்கு மாறிக் கொண்டிருந்தன. எனவே, ஒருவர் ஒரு குறிப்பிட்ட நிலத்திற்கு அதிகமாக நிலம் வைத்துக் கொள்ளக் கூடாதென்ற சட்டத்தை வகுத்தார். அதனால் பயன் எதுவும் பெரிதாக ஏற்படவில்லை. சமூக மாற்றத்திற்கு அவை உறுதுணையாகவும் இல்லை.

சாக்ரடீஸ் (கி.மு 469-399) காலத்தில் தத்துவத்துறையில் மட்டுமல்லாமல் சமுதாய அமைப்பு குறித்தும் சாக்ரடீஸின் கருத்துக்கள் தீவிரமானவையாக இருந்ததால், ஆளும்வர்க்கம் அவற்றைச் சகித்துக் கொண்டிருக்கவில்லை. சாக்ரடீஸ் இளைஞர்களைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாரென்றும், கடவுள்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்து வருகிறாரென்றும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

பிளாட்டோவின் கற்பனைக் குடியரசு

பிளாட்டோவின் (கி.மு 427-347) மேல் அவருடைய ஆசான் சாக்ரடீஸின் தத்துவக் கருத்துகளின் செல்வாக்கு மட்டுமல்ல ஆளும்வர்க்கம் சாக்ரடீஸிக்கு இழைத்த கொடுமைகளின் செல்வாக்கும் விழுந்தது. சாக்ரடீஸ் தனி நூலாக தம்முடைய கருத்துக்களை எழுதவில்லை. அவருடைய கருத்துக்கள் பிளாட்டோவின் நூல்களிலிருந்துதான் நமக்குத் தெரியவருகின்றன.

பிளாட்டோவின் சித்தாந்தத்தில் இரண்டு உலகங்கள் உள்ளன. ஒன்று வினாடிக்கு வினாடி மாறிக்கொண்டே இருக்கும் பௌதீக உலகம். இரண்டு பௌதீக உலகத்தைக் கடந்து எப்பொழுதும் மாறுதல் இல்லாமல் ஒரே மாதிரியாக இருக்கும் உலகம். இப்படிப்பட்ட உலகம் வெறும் கற்பனை உலகமாகவே இருக்கமுடியும். அதனால்தான் பிளாட்டோ அதை 'ஆன்மிக உலகம்' என்று குறிப்பிட்டார்.

பிளாட்டோவின் கல்வித் தத்துவம்

பிளாட்டோ பாதுகாவலர்களாகக் கூடியவர்களுக்கு ஒரு சிறப்பான கல்வித் திட்டத்தை வகுத்தார். முதலில் சாதாரணக் கல்வி புகட்ட வேண்டும். இருபது வயதில் சாதாரணக் கல்வித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். அதன்பிறகு சிறப்புக்கல்வியைக் கற்கவேண்டும். சிறப்புக் கல்வியில் கணிதமும், சோதிடமும் கற்க வேண்டும். பத்து வருடங்களுக்குப் பிறகு அதாவது முப்பது வயதில் அவர்கள் மற்றொரு தேர்வில் தேற வேண்டும். அதில் தேறிய பிறகு ஐந்தாண்டுகள் தத்துவ இயல் படிக்க வேண்டும் என்பது அவரது கல்வி முறையாக இருந்தது. பிளாட்டோவின் தத்துவ இயலில் எதார்த்த உலகைக் காட்டிலும் கற்பனை (ஆன்மிக) உலகுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

பிளாட்டோவின் ஏழைப் பணக்காரர் தத்துவம்

பிளாட்டோ மிக ஏழ்மையும், அதிக பணக்காரத் தன்மையும் தீயன என்றார். ஏழ்மை மனிதனுக்குத் தாழ்வு மனப்பான்மையையும், தீயசெயல்களையும் கற்றுத் தருகின்றது. செல்வத்தை அடிப்படையாக்கி அரசை அமைக்கும்போது அரசியலதிகாரம் செல்வந்தர்களின் கைக்குச் சென்று விடுகிறது. ஏழைகளுக்கு அது கிடைப்பதில்லை என்கின்றார்.

உலகத்தத்துவம் கூறும் உண்மைப் பொருள்

உலகாயதம் என்பது உண்மைப் பொருளைச் சுட்டி நடத்தப்படும் தத்துவக் கூறாகும். அறிவு என்பது எப்பொழுதும் முழுமை நிறைந்ததாக இருக்காது அது அரைகுறையாகத்தான் இருக்கும். அரைகுறையை முழுமையானதாக ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மை அறிவை மனிதனால் அடைய முடியுமென்று விஞ்ஞான லோகாயதவாதம் கருதுகிறது. நம்முன் இருக்கும் பௌதீகப் பொருளை

அடிப்படையாகக் கொண்டதே உண்மை அறிவாகும். இவ்வாறாக ஆக்கப்பூர்வமான அறிவு என்பது சூழ்நிலையை உணர்வதாகும். உலகம் தோன்றிய காலம் முதல் மனிதனால் நல்லதொரு வளர்ச்சி நிலையை எட்ட அவன் தன் அறிவைப் பயன்படுத்தி வெற்றி பெற்று வருகின்றான். அதுபோல, அவன் அறிவைப் போதிய அளவில் பயன்படுத்தாமல் விடுவதனால் தோல்வியும் அடைகின்றான். எனவே, அறிவை நாம் பூரணத்துவம் நிறைந்த பொருளாகக் கூறமுடியாது. அது நெகிழ்ச்சிப் பொருள் போல, மாறும் தன்மை கொண்டதாக உள்ளது.

> *"சிந்திக்கும் திறன் படைத்த, பூரணத்துவம் பெறாத எத்தனையோ சாதாரண மனிதர்களால் கருத்துக்கள் முழுமை பெறுகின்றன. எல்லையில்லாத உண்மை நிறைந்ததென்று கூறப்படும் அறிவு, எத்தனையோ தவறுகள் இழைக்கப்பட்டுப் பெறப்படுகிறது."*[15]

இவ்வாறாக மனித அறிவின் உண்மை நிலையை அறிய பல்வேறு தன்மைகள் குறித்த ஆராய்ச்சிகள் உருவாகியுள்ளன.

பொருட்களைச் சார்ந்திருக்கும் அறிவு எப்பொழுதுமே முழுமை நிறைந்ததாக இருக்காது. அது அரைகுறையாகத்தான் இருக்கும். அந்த அரைகுறை அறிவினால் பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை.

இந்தியத் தத்துவம்

இந்தியத் தத்துவம் என்பது வேதங்களை அடிப்படையாகக் கொண்டது. ரிக், யசூர், சாம, அதர்வண வேதங்களின் சாரத்தை எடுத்துரைக்கின்றது. வேதங்களை உருவாக்கியவர் யார்? என்ற கருத்தின் அடிப்படையில் அதன்

---

15. வி.பி.கிராபின், விஞ்ஞானலோகாயதவாதம், ப.24.

உட்பொருள்களை ஆராய்கின்றது. வேதம் ஆன்மிகத்தின் ஆழமான வேர்களை எடுத்தியம்புகின்றது.

இந்தியத் தத்துவத்தின் தொடக்கம் குறித்து நோக்குகையில் ஐரோப்பாவில் கி.மு.6ஆம் நூற்றாண்டில் தொடங்கிய தத்துவம் அதே நூற்றாண்டில் இந்தியாவிலும் தொடங்கியது என்கின்றார் ராகுல் சாங்கிருத்யாயன்.

> *"கி.மு. பத்தாம் நூற்றாண்டில் படைக்கப்பட்ட வேதங்களின் பழைய மந்திரங்களில் தத்துவ இயலின் சாயல் தென்பட்டாலும் ஐரோப்பாவைப் போலவே கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து தான் இந்தியாவிலும் தத்துவ இயல் ஆரம்பமாகியது."*[16]

தொடக்ககாலத்தில் மனிதன் தன் அறியாமைக்கும் அச்சத்திற்கும் காரணமான விடையைத் தேடத் தொடங்கினான். அதற்கான விடையாகக் கடவுள் நம்பிக்கையும் மதமும் விளங்கின. ஆனால் இது முழுமையானதல்ல என்ற எண்ணமும் அவனுக்குள் தோன்றியது. தனக்கென ஒரு கொள்கை, கடவுள் வழிபாடு, வேதங்கள் போன்றவற்றைத் தோற்றுவித்தான். இதன் விளைவாக இந்தியாவில் கடவுள், மதம் தொடர்பான தத்துவங்கள் தோன்ற ஆரம்பித்தன.

> *"இன்று நன்கு படித்த இந்தியர்களும் கூட வேதங்களையும் உபநிஷத்துக்களையும் இயற்றிய ரிஷிகளையும் முனிவர்களையும் எல்லையற்ற காலத்துக்கு முன்னமேயே சிந்தித்து, தத்துவங்களை எடுத்துக் கூறிய மேதைகளாகக் கருதுகின்றனர்"*[17]

என்கிறார் ராகுல் சாங்கிருத்யாயன்.

மேல்நாட்டின் தத்துவ ஆராய்ச்சி, குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒருவரால் தொடங்கப்பட்டது. இந்தியத் தத்துவ ஞானம் அத்தகையதன்று அது இன்ன காலத்தில் இன்னாரால் தொடங்கப்பட்டதென்று சொல்ல முடியாத அளவிற்குப்

---

16. ராகுல் சாங்கிருத்யாயன், இந்து தத்துவ இயல், ப.1.
17. மேலது, ப.3.

பழமை வாய்ந்தது. இந்தியத் தத்துவம் மனிதன் சரியானவற்றைச் சிந்தித்து, ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வதற்கு வழிகாட்டுகின்றது. கொள்கையளவில் பேசப்படாமல் வாழ்க்கையோடு ஒன்றாகக் கலந்து நிற்பதாக இந்தியத் தத்துவம் விளங்குகின்றது. இந்தியத் தத்துவம் வேதத்தை மையமிட்டு ஆக்கப்பூர்வமான செயல்களைச் செய்ய உதவுகின்றது. வேதத்தை ஒப்புக்கொள்பவர்களை வைதீகர் என்றும், ஒப்புக் கொள்ளாதவர்களை அவைதீகர் என்றும் கூறுவர்.

வேதங்கள்

ஆரியர்களின் பழமையான இலக்கியமான 'வேதங்கள்' 'மந்திரங்கள்' என்றும், 'பிராமணங்கள்' என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. மந்திரங்களின் தொகுப்பு ஸம்தாக்கள் எனப்படும்.

> *"வேதம் 'வித்' என்னும் வடமொழிச் சொல்லடியிலிருந்து தோன்றியது. 'வித்' என்ற வடமொழிச் சொல்லுக்கு அறிதல் என்பது கருத்து. எனவே, வேதங்கள் என்ற சொல்லுக்கு அறிவு நூல்கள் என்பது பொருளாகின்றது"*[18]

என்கிறார் கி.லக்ஷ்மணன். வேதங்களின் ஒட்டுமொத்த சாரங்களையும் மனனம் செய்வது எளிதல்ல. ஆனால் இவற்றை அக்கால அந்தணர்கள் மனனம் செய்தே இயற்றியுள்ளனர்.

வேதங்களில் மிகப் பழமையானது ரிக் வேதமாகும். ரிக் வேத மந்திரங்களை இயற்றிய ரிஷிகளில் விஷ்வாமித்திரர், வசிஷ்டர், பரத்வாஜர், கோதமர், அத்ரி ஆகியோர் பழமையானவர்கள். ரிஷிகளின் தலைமுறைகளை ஆராயும்போது கி.மு.1520லிருந்து கி.மு.1420க்குள்ளாகவே ரிக் வேதத்தின் பெரும்பகுதி இயற்றப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கணிக்கின்றனர்.

---

18. கி.லக்ஷ்மணன், மு.நூ., ப.7.

வேதங்களில் சொல்லப்பட்டுள்ள மந்திரங்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றைத் தெய்வங்களாக்கி அவற்றிற்குச் செலுத்தும் வழிபாடுகளாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன. மின்னல், முழக்கம், முகில், மழை, கடல் இவற்றைத் தெய்வங்கள் இயக்குகின்றன எனக் கருதிய மனிதன் தனக்கு எவ்வித கேடும் செய்யவேண்டாம் என வேண்டிக்கொண்டான்.

அக்கினி வளர்த்துத் தன்னால் இயன்ற பொருட்களை அந்த ஆகுதியில் இட்டால், பிற தெய்வங்களுக்கும் அந்தப் பொருள் சென்று சேரும் என்று மனிதன் நம்பினான். இதனால்தான் தெய்வங்களுக்குச் சேரவேண்டிய பொருட்களை அக்கினியில் போடுவதை மனிதன் வழக்கப்படுத்திக் கொண்டான்.

தெய்வங்கள் மனிதனைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு இருப்பதாகவும், ஒழுக்கத்தில் தவறினால் தெய்வக்குற்றத்திற்கு ஆளாக நேரிடும் என்றும் நம்பினான். இவ்வாறாக இயற்கை நியதி, தெய்வ நியதி, அவற்றோடு மனித ஒழுக்கம் இவற்றைத் தொடர்புபடுத்தி வேதங்கள் உருவாக்கப்பட்டன.

வேதங்கள் ரிக், யசூர், சாமம், அதர்வணம் என நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. ரிக் என்பது 'தோத்திரம்' என்று பொருள்படும். யசுர் என்பது 'யாகம்' என்று பொருள்படும். மேலும் யாகங்கள் பற்றிய சுலோகங்களைக் கொண்டது. சாமம் என்பதற்குப் பண் அல்லது இசை என்பது கருத்தாகும். பண்ணோடு அமைந்த சுலோகங்களைக் கொண்டது சாமவேதமாகும். அதர்வணம் என்பது 'மாந்திரிகம்' என்று பொருள்படும். மாந்திரிகத்தோடு சம்பந்தப்பட்ட சுலோகங்களின் தொகுப்பே அதர்வண வேதமாகும்.

> *"வேதம் என்ற சொல்லுக்கு அறிவு என்பது பொருள். ஒரு சநாதனியைப் பொறுத்தமட்டில் அது ஈடு இணையற்ற புனிதமான அல்லது வெளிப்படுத்தப்பட்ட ஞானம் ஆகும். உண்மையில் இந்தச் சொல் தொகுக்கப்பட்ட பல்வேறு*

பாடல்களைச் சுட்டுகிறது. இவை குறைந்தபட்சம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே தோன்றி இருக்க வேண்டும். அதனால் இவை நடையிலும் சரி உள்ளடக்கத்திலும் சரி ஒரு பிடித்தானவையாக இருக்கும் என்று எதிர்பார்க்க இயலாது"[19]

என்கிறார் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா. இவ்வாறாக வேதங்கள் எழுத்தறிவுக்கு முந்திய காலத்தில் மக்களின் வாய்மொழிப்பாடல்களாக விளங்கி இருக்கின்றன. கேள்வி ஞானத்தில் மக்கள் வேதங்களை அறிந்து கொண்டனர்.

"வேதம் என்பது பரிபூரண ஞானத்தின் களஞ்சியம் ஆகும். இந்த வேதங்களைப் பயில்வது தாழ்ந்த சாதி மக்களுக்கும் மகளிருக்கும் சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது"[20]

என்கிறது மனுஷ்மிருதி. எனினும் தற்காலத்தில் உள்ள இனக்குழு மக்களிடையே வழக்கில் உள்ள பாடல்களைப் போலவே ரிக் வேதப்பாடல்களில் ஆநிரை, உணவு, மழை, பாதுகாப்பு, வெற்றி, ஆரோக்கியம், சந்ததிவிருத்தி ஆகிய நடைமுறை விருப்புகளின் வெளிப்பாடுகள் காணப்படுகின்றன. இந்தியாவில் வழங்கப்படும் மதங்களைப் பொறுத்தவரைத் தத்துவங்களைக் கொண்ட ஆன்மிகப் பாதைகளை வகுத்துத் தந்துள்ளன. மதம், கடவுள் பெயரால் வாழ்க்கைக்குரிய ஒழுக்கங்களைப் பின்பற்றி நடக்கத்தக்க வழிகாட்டிகளாக விளங்குகின்றன. ஆற்றல்சார் கோட்பாட்டு விதிகளை மனிதன் பின்பற்றி அதன் மூலம் நல்லதொரு சமுதாயம் உருவாக ஒத்துழைக்கக் கூடிய தத்துவங்களை வேதங்கள் கூறுகின்றன. இந்தியத்தத்துவம் என்பது பழமையானது. புதுவகையான கோட்பாடுகளை இத்தத்துவம் எப்பொழுதும் ஏற்றுக் கொள்வதில்லை. இவை கடவுள் கொள்கைகளின் அடிப்படையிலும், அவற்றிற்குரிய சின்னங்களின் அடிப்படையிலும் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கடவுளுக்கும் உரிய

---

19. தேவி பிரசாத் சட்டோபாத்யா, இந்திய தத்துவம் ஓர் அறிமுகம், ப.9.
20. Sankhyayana Grhya Sutra Vasista Dharma Sastra, V.XVIII, p.12.

சின்னங்கள் தனிவகையான தத்துவங்களை உள்ளடக்கியவையாக உள்ளன. இந்தியத் தத்துவங்கள் சடங்குகளுக்கு அதிக முக்கியத்துவம் தருவனவாய் உள்ளன.

> *"தருக்கத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றையே இந்தியத் தத்துவம் தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. இந்தியத் தத்துவத்தின் விசேஷத்தன்மை என்னவென்றால் மேலைநாடுகளைப்போல அது (உலகு பற்றிய) விழிப்புணர்ச்சியினாலோ அல்லது ஆவலினாலோ உருவானதல்ல. வாழ்க்கையில் காணப்படும் ஒழுக்க ரீதியான தீமைகளைக் களைவதை அடிப்படையாகக் கொண்ட நடைமுறையால் தோன்றியது எனலாம். இந்தத் தீமைகளை எவ்வாறு களையலாம் என்பதே நமது பண்டைய முன்னோர்களின் கவலையாக இருந்தது. மோட்சம் அல்லது விடுதலை என்ற நிலையில் அவற்றைக் களைதல் இயலும், என்பதே எல்லாத் தத்துவப் பிரிவுகளிலும் காணப்படும் ஒன்றாக இருக்கிறது"*[21]

மோட்சம்தான் எல்லாவற்றிற்கும் தீர்வு என்பதை உலகாயதர்கள் எள்ளி நகையாடுகின்றனர். இந்தியத் தத்துவம் ஆன்மிகத்தை அடித்தளமாகக் கொண்டது. தீயவிளைவுகளிலிருந்தும், வரலாற்றின் விபத்துகளிலிருந்தும் தற்காத்துக் கொள்வதற்கு இந்தியாவிற்கு வலிமை மிக்க ஆயுதமாக ஆன்மிகத் தத்துவங்கள் விளங்குகின்றன.

> *"குரு, வட, தென் பாஞ்சால ராஜ்ஜியங்களில் அதாவது இன்றைய மேற்கு உத்திரப்பிரதேசத்தில் ரிக் வேதம் படைக்கப்பட்டது"*[22]

என்கிறார் ராகுல் சாங்கிருத்யாயன்.

---

21. Hiriyananna. M, Out lines of India Philosophy, London 1956, 18.
22. **ராகுல் சாங்கிருத்யாயன், இந்து தத்துவ இயல், ப.6.**

"விஞ்ஞானம் எப்படி பிரபஞ்ச இயக்கங்களிலிருந்து அதாவது எல்லாதுறை விஞ்ஞானங்களின் நடைமுறை அனுபவங்களிலிருந்தும் தோன்றியதோ அதே போல இந்தத் தத்துவமும் பிரபஞ்ச இயக்கங்களிலிருந்தும் மனித வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும் தோன்றியது. இதற்கு எல்லா விஞ்ஞானங்களும் துணைபுரிந்தன"[23]

என்கிறார் அஸ்வகோஷ். இவ்வாறாக வேதங்கள் படைக்கப்பட்ட இடம் தத்துவங்கள் உருவான காரணம் இவையாவும் இந்தியத் தத்துவத்தின் சிறப்பான கூறுகளாக விளங்குவதை உணரமுடிகின்றது. உலகில் நடைபெறுகின்ற செயல்கள் தத்துவங்களை உள்ளடக்கியுள்ளன. வேதங்களில் சொல்லப்பட்டுள்ள அடிப்படை காரணிகளைப் பின்பற்றி நடைபெறுகின்றன. ஆனால் மனிதர்கள் இவற்றை உணர்வதில்லை. தத்துவம் என்பது நடைமுறையிலிருந்து தோன்றியது. எனவே தான் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான வேதங்கள் தோன்றியுள்ளன. வேதங்கள் நூல் வடிவில் வருவதற்கு முன்னரே, வாய்மொழி வாயிலாக உச்சாடனமும், மனனமும் செய்யப்பட்டன. இந்தியாவில் வழங்கப்படும் வேதங்களை இந்துமதத்தின் முக்கியக் காரணியாகக் கொண்டு இந்துத்துவம் தோன்றியது. இந்தியத்தத்துவம் என்று சொல்லும்போது பலவிதக் கூறுகளைப் பற்றி ஆராய்தல் அவசியமானதாகும்.

"அட்சர சுத்தத்தால்தான் வேத மந்திரங்களுக்கு சக்தியே ஏற்படுகிறது என்பதால் அவற்றைக் காதால் கேட்டே பயிலவேண்டும். சுருதி என்று வேதங்களுக்குப் பெயர் வந்தது இதனால்தான் எழுதாக்கிளவி என வேதங்களை நாம் அழைப்பது அவை எழுதப்படாமல் கேட்டு உணரத் தகுந்தவை என்பதால்தான்."[24]

---

23. அஸ்வகோஷ், கடவுள் என்பது என்ன?, ப.84.
24. ந.கிருஷ்ணமூர்த்தி, பாரதப் பண்பாடு, ப.66.

வேதம் பொருளற்ற அதே சமயத்தில் பல்வேறு உணர்வுகளைத் தூண்டக்கூடிய ஒலிகளை உடையது. வார்த்தைகளான அதற்கு உயர்ந்த பொருள்களும் உண்டு. உலக வாழ்க்கை, ஆன்மிக வாழ்க்கை இரண்டுக்கும் பயன்தருகிற உபதேசங்கள் வேதத்தில் உண்டு. ஒவ்வோர் உயிர்களும் பிறந்ததிலிருந்து இறக்கின்ற வரை எவ்வாறு வாழ்ந்தால் உயிர்கள் நன்மை அடையும் என்பதற்கு வேதத்தில் தத்துவ உபதேசங்கள் இருக்கின்றன. தனிமனிதனின் வாழ்க்கை, உய்வு, சமூக வாழ்க்கையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும். பொதுமக்களின் கடமை இவையெல்லாம் வேதத்தில் கூறப்பட்டுள்ளன. இவையாவும் வேதங்களின் சாரமாகும்.

உபநிடதம்

இந்து சமயங்களுக்கு மட்டுமின்றி இந்தியத் தத்துவஞானம் முழுவதற்குமே உபநிடதம் மூலமாகக் கொள்ளலாம். இந்தியத் தத்துவஞானிகளை இருபிரிவாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர் வேதங்களிலும் உபநிடதங்களிலும் கூறப்படுவனவற்றை ஏற்றுக் கொள்வோர். மற்றொருப் பிரிவினர் அவற்றை ஏற்க மறுத்து அதனை அடிப்படையாகக் கொண்டு புது மதங்களை உருவாக்கினோர்.

இந்து மதத்தின் தத்துவங்கள் அனைத்தும் உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளன. அவை வேதத்தின் இறுதி உண்மைகளைக் கூறுவதால் ‘வேதாந்தம்’ என்றும் அழைக்கப்படுகின்றன. உபநிடதங்கள் பல உள்ளன. எனினும் 18 உபநிடதங்களை முக்கியமானதாக ஆதி சங்கரர் கூறுகின்றார். 1. ஈச உபநிஷத்து 2. கேன 3. கட 4. ஐதரேய 5. தைத்திரீய 6. பிரச்ன 7. முண்டக 8. மாண்டுக்ய 9. சாந்தோக்ய 10. பிருஹதாரண்ய 11. ச்வேதாச்வதர 12. கௌஷீதகி பிராம்மண 13. மைத்ராயணி 14. நாராயண 15. ஜாபால 16. ஆருணிக 17. கைவல்ய 18. பிரம்ம பிந்து. இவற்றுள் முதல் பத்தும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. 14 முதல் 18 வரை உள்ளவை பற்றிய சாத்திர விளக்கங்கள் இடம்பெறவில்லை.

உபநிடதங்கள் பரம்பொருள் படைப்பு. தனிஉயிரில் உறையும் பரம்பொருள் (ஜீவாத்மா). தனிஉயிர் பரம்பொருளை உணராமல் இருப்பதற்குக் காரணம் என்ன? உணரும் வழி என்ன? உணர்ந்த பின் ஏற்படும் இறுதி மோக்ஷ நிலையின் விளக்கம், மனித முயற்சியின் முக்கியத்துவம் ஆகிய கூறுகளைப் பற்றிக் கூறுகின்றன. உபநிடதங்கள் வேதத்திலிருந்து வேறானவை அல்ல. அவையும் வேதங்களின் ஒரு பகுதி. வேதங்களை மந்திரப்பகுதி, பிராமணப்பகுதி, உபநிடதப்பகுதி என்ற மூன்றாகக் கூறுவர்.

“வேதங்களின் சாரமே உபநிடதங்கள். ஆகவே வேதங்களைக் குறிப்பிடாமல்உபநிடதங்களைக்குறிப்பிடுவதில் குற்றமெதுவுமில்லை.”[25]

உபநிடதங்களை வேதாந்தம் என்றும் கூறுவர். வேதங்களின் முடிவை அதாவது வேதங்களின் உட்கிடக்கையைக் கூறுகின்றன என்பதே உபநிடதங்களுக்கு வேதாந்தம் என்ற பெயர் ஏற்படக் காரணமானது. வேதங்களும் உபநிடதங்களும் ஒன்றையொன்று தழுவிக் கொண்டு வேதங்களின் ஆதாரமாக உபநிடதங்களும், உபநிடதங்களின் ஆதாரமாக வேதங்களும் உள்ளன.

“உபநிடதம் என்ற வடமொழிச் சொல்லிற்கு சிரத்தையோடு மிகச் சமீபத்தில் இருத்தல் என்பதே நேர் கருத்து. குருவுக்கு மிகச் சமீபத்தில் சிரத்தையோடு உட்கார்ந்த சீடனுக்குக் குரு உபதேசித்த உபதேச மொழிகளே உடநிடதங்களாகும்.”[26]

இவ்வாறாகக் குரு, சீடனுக்குக் கூறிய இரகசிய கருத்துக்களைப் பின்பற்றி ஒழுக்கமுடையவர்களாக மாறி இல்லற வாழ்க்கையிலிருந்து நீங்கி இருப்பவர்களே உண்மையான சீடர்கள் என்று உபநிடதம் கூறுகின்றது.

---

25. கி.லக்ஷ்மணன், மு.நூ., ப.35.
26. மேலது, ப.37.

1. ஈசா உபநிடதம்

இது யஜீர் வேத ஸம்தாவின் கடைசி அத்தியாயமாகும். 18 செய்யுட்களைக் கொண்ட ஒரு சிறு தொகுப்பாகும். இதன் முதல் செய்யுள் ஈசாவாஸ்ய என்று தொடங்குவதால் இதன் பெயரே ஈசாவாஸ்ய உபநிடதம் என்றாகிவிட்டது.

2. கேன உபநிடதம்

ஈசா உபநிடதத்தைப்போல 'கேன உபநிடதமும்' கேன என்னும் சொல்லால் தொடங்குவதால் அதற்கு இப்பெயர் ஏற்பட்டது. கேன உபநிடதத்தின் முதல் இரண்டு பாகங்கள் செய்யுளிலும் கடைசி இரண்டு பாகங்கள் உரைநடையிலும் உள்ளன. செய்யுள் பாகத்தில் ஆன்மா உடலிலிருந்து வேறானதென்றும் அது புலன்களைத் தூண்டக்கூடியதென்றும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

3. கடோபநிடதம்

நசிகேதா-யமன் இருவரின் சந்திப்பு கட என்னும் பிரிவைச் சேர்ந்ததால் இதற்கு கடோபநிஷத் என்னும் பெயர் ஏற்பட்டது. கிழட்டுப் பசுக்களைத் தானம் செய்த நசிகேதா என்னும் மன்னனின் கதை கடோபநிடதத்தில் உள்ளது. பிரம்மம் பற்றி கூறுகின்றது. பிரம்மத்தின் புரிபடாத சக்தியை விளக்க, முதன்முதலில் புரியாத மொழியைக் கடோபநிடதம் அதிகமாகப் பயன்படுத்தி இருக்கிறது.

4. ஐதேரய உபநிடதம்

ஐதரேய உபநிடதம் ரிக் வேதத்தின் ஐதரேய-ஆரண்யகத்தின் ஒரு பகுதியாகும். ஐதரேய பிராமணம், ஆரண்யகம் இரண்டின் ஆசிரியர் மஹிதாஸ் ஐதரேயர். இவ்வுபநிடதத்தில் மூன்று பாகங்கள் இருக்கின்றன. முதல் பாகத்தில் பிரம்மா படைத்தது பற்றி கூறப்பட்டுள்ளது. உலகம் எப்படி படைக்கப்பட்டது என்பதையும் ஐதரேய உபநிடதம் கூறுகின்றது.

5. தைத்திரீய உபநிடதம்

தைத்திரீய உபநிடதம் கிருஷ்ண யஜீர் வேதத்தின் தைத்திரீய ஆரண்யகத்தின் ஒரு பகுதியாகும். இதில் மூன்று அத்தியாயங்கள் உள்ளன. அவற்றில் பிரம்மம், சிருஷ்டி, ஆனந்தத்தின் எல்லை சீடனுக்கு ஆசாரியரின் உபதேசம் ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன. பிரம்மத்தைப் பொய் என்று கருதுபவர்களே பொய்யானவர்களாகின்றனர். பிரம்மம் உண்மையென்று கருதுபவனை மகான் என்று கூறுவார்கள். பிரம்மத்திலிருந்து உலகமும் மற்றவையும் தோன்றியுள்ளன என்பதைத் தைத்திரீய உபநிடதம் எடுத்துரைக்கின்றது.

6.பிரஸ்ன உபநிடதம்

ரிஷிகள் கேட்ட கேள்விகளுக்குப் பிப்பலாதர் அளித்த பதில்களின் தொகுப்பே பிரஸ்ன உபநிடதமாகும். உலகத்தை இரண்டிரண்டு சக்திகளாகப் பிரித்து அதை ஜோடிமயமாகக் கருதுகிறார். உயிராகிய விஞ்ஞானத்தைத் தலைசிறந்ததாகக் கருதி ஜீவனுக்கு (பௌதீகச் சக்திக்கு) இரண்டாம் இடத்தை அளித்தார். பிரஸ்ன உபநிடதம் ஜோடித்தத்துவம், கனவுநிலை, முக்திநிலை இவற்றைப் பற்றி பேசுகின்றது.

7. முண்டக உபநிடதம்

'முண்டக' என்றால் 'தலை மழித்தவன்' அல்லது 'மொட்டைத் தலையுடையவன்' என்று பொருள். இவர்கள் இல்லற வாழ்க்கையைத் துறந்த துறவி அல்லது பிட்சு. முண்டக உபநிடதம் அந்தணர்கள் செய்து வந்த யாகங்களும் சடங்குகளும் பயன்தராதது எனக் கூறுகின்றது. அதுபோல பிரம்மம் பற்றிக் கூறும்போது,

> *"அந்த மாபெரும் தெய்வீகமான, சிந்திக்க இயலாத மிகவும் சூட்சுமமான பிரம்மம் பிரகாசிக்கிறது. தொலைவிலிருந்து*

பார்ப்பவர்களுக்கு அது மிகவும் தொலைவிலிருக்கும் உண்மையாகப் பார்ப்பவர்களுக்கு அது தமது இதயத்துக்கு உள்ளேயே மிக அருகில் இருக்கும்"[27]

என்று பிரம்மம் பற்றி ராகுல் சாங்கிருத்யாயன் கூறுகின்றார். அதுபோல முக்தி பெறுவதற்கான வழிவகையை ஆன்மா எடுத்துக்கூறுகின்றது. முண்டக உபநிடதம் குருவின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்கிறது. இதற்கு முன்புகூட மற்ற வித்தைகள் கற்பிப்பவர்களைப் போலவே, பிரம்ம ஞானத்தைக் கற்பிக்க ஓர் ஆச்சாரியர் இருந்திருக்கின்றார். முண்டக உபநிடதம் தியானத்திற்கு முக்கியத்துவம் தருகின்றது.

"*ஓ அன்பிற்குரியவனே! உபநிடதம் என்னும் மாபெரும் ஆயுதமான வில்லை எடுத்துத் தொழுகை என்னும் கூர்மையான அம்பினால், ஒரு நிலைப்படுத்தப்பட்ட மனத்தால் இழுத்து, அந்த அழிவற்ற பிரம்மத்தை நோக்கி செலுத்து! பிரணவம் (ஓம் என்னும் மந்திரம்) வில்லாகும். ஆன்மா அம்பாகும். பிரம்மமே குறிக்கோளாகும். அதை அஜாக்கிரதையில்லாமல் கவனமாகத் தாக்கவேண்டும்*"[28]

என்று முண்டக உபநிடதம் கூறும் தியானம் பற்றி ராகுல் சாங்கிருத்யாயன் கூறுகின்றார்.

8. மாண்டூக்ய உபநிடதம்

உயிர்களின் நான்கு நிலைகளான விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம், முக்தி ஆகியவை இதில் ஆராயப்பட்டுள்ளன. ஓம் என்னும் மந்திரம் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாமுமாக இருக்கின்றது. முக்காலத்தைக் கடந்திருப்பது ஓங்காரம் என்பதை மாண்டூக்ய உபநிடதம் விளக்குகின்றது.

---

27. ராகுல் சாங்கிருத்யாயன், இந்து தத்துவ இயல், ப.61.
28. ராகுல் சாங்கிருத்யாயன், இந்து தத்துவ இயல், ப.63.

மேலும் ஓங்காரம் பிரம்மத்துடன் இணைந்துள்ளது என்கிறது. மற்ற உபநிடதத்தின் மொழியிலிருந்து மாண்டூக்ய உபநிடதத்தின் மொழி வேறுபட்டிருக்கிறது.

9. சாந்தோக்ய உபநிடதம்

சாந்தோக்ய உபநிடதம் பழையது. இடைக்காலத்தைச் சேர்ந்தது. அதன் முதல் இரண்டு அத்தியாயங்கள் உபநிடதங்கள் என்று கூறுவதைவிட பிராமணங்கள் என்று கூறலாம். இந்த அத்தியாயங்களில் ஸாம வேத கானமும் 'ஓம்' சொல்லின் மகத்துவமும் விவரிக்கப்பட்டுள்ளன.

சாந்தோக்ய உபநிடதம் சடங்குகளைப் பூரணமாக மறுக்கவில்லை. அதற்குப் பதிலாக ஞானத்தால் அவற்றை வலுப்படுத்த விரும்பின. ஞானமும் அஞ்ஞானமும் வேறுவேறானவை. ஆனால் எந்தச் செயலை மனிதன் ஞானத்துடன் பக்தியையும் உபநிடதத்தையும் இணைத்துச் செய்கிறானோ, அது முன்பைவிட வலுவுடன் விளங்கும் என்று சாந்தோக்ய உபநிடதம் கூறுகின்றது.

10. பிரகதாரண்யக உபநிடதம்

பிரகதாரண்யக உபநிடதம் சுக்ல யஜுர் வேதத்தின் சதபத பிராமணத்தின் கடைசிப்பாகமும் ஓர் ஆரண்யமுமாகும். உபநிடதங்களின் மிகப்பெரும் சிந்தனையாளரான யாக்ஞவல்கியரின் கருத்துக்கள் இதில்தான் உள்ளன. எனவே உபநிடத இலக்கியத்தில் பிரகதாரண்யக உபநிடதங்களுக்கு முக்கிய இடமுண்டு.

மத நம்பிக்கையுடைய பழைய காலத்தவர் உலகத்திலுள்ள நல்லவர்களின் குணங்களான கருணை, மன்னித்தல் போன்றவை உடையவராகக் கடவுளை எண்ணினர். ஆனால் பிரகதாரண்யக உபநிடத காலத்தில் மக்கள் குருட்டுத்தனமான பக்தியை விட்டு, அறிவின் ஆளுகைக்குள் வந்துவிட்டனர். பிரகதாரண்யக உபநிடதத்தில்,

"அது (பிரம்மம்) மிகப் பெரியதுமல்ல. மிகச் சூட்சுமமான மிக நீண்டதோ, மிகச் சிறியதோ அல்ல. அது சிவப்போ, நிழலோ அல்ல அது இருளுமல்ல. அது துணையோ, சுவையோ, மணமோ அல்ல. அது கண்ணும் செவியும், மொழியும், மனமும், உயிரும், முகமும் உடையதல்ல. அது உள்ளிலிருப்பதோ, வெளியிலிருப்பதோ அல்ல. அது எவரையும் சாப்பிடுவதில்லை. எவருமே அதைச் சாப்பிட்டுவிடுவதில்லை"[29]

என்று 'பிரம்மம்' பற்றி பிரகதாரண்யக உபநிடதக் கருத்தை ராகுல் சாங்கிருத்யாயன் கூறுகின்றார். நெருப்பிலிருந்து சிறுசிறு தீப்பொறிகள் வெளிவருதைப்போல் இந்த ஆன்மாவிலிருந்து எல்லா உயிர்களும் எல்லா உலகங்களும் எல்லாத் தேவர்களும் எல்லா ஜீவன்களும் தோன்றுகின்றன என்கின்றது.

11. வேதாஸ்வர உபநிடதம்

வேதாஸ்வர உபநிடத மொழியையும், கருத்துக்களையும் கவனித்தால் அது தோன்றிய காலத்தில் நாட்டில் சைவ சமயக் கொள்கைகள் நிலவி இருந்தமையை அறிந்து கொள்ளலாம். சிவனின் மகிமை, சாங்கிய தத்துவ இயலில் இயற்கை ஜீவன், கடவுள் ஆகிய முப்பெரும் சித்தாந்தம், யோகம் முதலியவை ஸ்வேதாஸ்வர உபநிடதத்தின் முக்கிய கருத்துக்களாகும்.

இவ்வுபநிடதத்தில் முப்பெரும் சித்தாந்தத்தில் கடவுள் அல்லது பிரம்மத்துக்குப் பதிலாக இந்துக்களின் தேவர்களில் ஒருவரான ருத்திரனுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மாயை இயற்கை இதை இயக்கும் மாயக்காரன் மகேஸ்வரனாவான். எல்லா உயிர்களிலும் மறைந்துள்ள சிவனை

---

29. ராகுல் சாங்கிருத்யாயன், இந்து தத்துவ இயல், ப.41.

அறிந்து கொண்டு ஜீவன் எல்லா மாயவலைகளிலிருந்தும் விடுதலை பெறுகிறது என்பதை வேதாஸ்வர உபநிடதம் விளக்குகின்றது.

12. கவ்ஷீதகி உபநிடதம்

கவ்ஷீதகி பிராமணத்தின் ஒரு பகுதியாகும். உயிரும் ஜீவனும் கவ்ஷீதகி உபநிடதத்தின் முக்கிய தத்துவமாகும். உயிரைத் தொழுவதுதான் ஞானிகள் செய்யக்கூடிய பெரிய வேள்வியாகும்.

மனிதன் பேசிக்கொண்டிருக்கும் வரை மூச்சு வாங்குவதில்லை; விடுவதுமில்லை. அப்பொழுது அவன் உயிரைப் பேச்சுக்குப் பலி கொடுத்து விடுகிறான். அவன் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் வரை அவனால் பேச இயலாது. உயிரைப் பேச்சிற்காக மனிதன் பலியிடுகின்றான். எனவே உயிரைக் காக்கும் பொருட்டு பேச்சினைக் குறைத்து விடுதல் பற்றி கவ்ஷீதகி உபநிடதம் எடுத்துரைக்கின்றது.

மேலும், பிரக்ஞாத்மா என்று ஜீவனைக் குறிப்பிடுகின்றது. அந்த பிரக்ஞாத்மா உடல் முழுவதும் நிறைந்திருப்பதாகக் கூறுகின்றது.

13. மைத்ரீ உபநிடதம்

கி.மு.200-100ல் தோன்றியது மைத்ரீ உபநிடதம். புத்தர் காலத்திய நிராசை, துறவு பற்றிய கருத்துக்கள் இதில் உள்ளன. முதல் நான்கு அத்தியாயங்கள் தத்துவம் சார்ந்தவை. கடைசி மூன்று அத்தியாயங்களில் வேதங்களின் ஆறு அங்கங்களான கல்வி, வேள்விமுறை இலக்கணம், வேதச்சொற்களின் விளக்கவுரை, யாப்பிலக்கணம், ஜோதிடம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன.

இவ்வாறாக, இந்து மதம் இந்தியாவில் ஏற்படக் காரணிகளாக வேதங்கள், உபநிடதங்கள் இருந்துள்ளமையை அறியமுடிகின்றது. இவை தவிர இந்தியாவில்

கிறித்தவம், இசுலாம், பௌத்தம் போன்ற மதங்கள் பரவி அதனதன் தத்துவங்களைப் பறைசாற்றியுள்ளன.

மனித சமுதாயம் தோன்றிய பொழுதே அச்சத்தினால் கடவுளரும் ஆன்மிகமும் மக்களிடம் கோலோச்சின. அந்த வகையில் இந்தியாவில் மக்கள் பலவகைப்பட்ட மனநிலையைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர் என்பதை இந்தியாவில் காணப்படும் பலசமயக் கொள்கைகளைக் கொண்டு அறியமுடிகின்றது.

கிறித்தவ தத்துவம்

ஆங்கிலேய ஆட்சியின் விளைவினால் கிறித்தவ மதம் மிக எளிதாக இந்தியாவில் நுழைந்தது. மனிதர்கள் மீது நம்பிக்கை கொள்ளக்கூடாது. இறைவனாகிய இயேசு மீது தீவிர நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்கிறது விவிலியம்.

"நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்,
எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்"[30]

என்று கிறித்தவ மதம் கூறுகின்றது. இந்தியத் தத்துவம் என்று கிறித்தவத்தைக் கூறமுடியாது. உலகம் முழுவதும் அதிக அளவில் கிறித்தவ தத்துவம் பரவியுள்ளது. எனவே இதனை இந்தியத் தத்துவம் என்பதற்குள் அடக்கி விடவும் முடியாது.

இஸ்லாமியத் தத்துவம்

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் மிகவும் சக்தி வாய்ந்த குப்தப் பேரரசு அழிந்தது. குப்தர்களுக்குப் பின்னர் மௌரியர், அவர்களுக்குப் பின்னர் ஹர்ஷவர்த்தனர் வட இந்தியாவில் வலுவான பேரரசை நிர்வகித்தனர்.

---

30. விவிலியம் ஏசாயா, 2:22.

இக்காலகட்டத்தில் இஸ்லாம் மதத்தை நிறுவிய முகமது நபிகள் இஸ்லாம் மதப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். இஸ்லாம் மதத்தின் புனித நூலான திருகுரானில், இஸ்லாமியச் சித்தாந்தங்கள் கூறப்பட்டுள்ளன. கடவுள் ஒருவரே! அவர் உருவமுடையவர் போலிருக்கின்றார். தயை, உண்மை பேசுதல், திருடாமல் இருத்தல் போன்ற எல்லா மதங்களிலும் சொல்லப்பட்ட நற்செயல்களுடன் நமாஸ் எனப்படும் தொழுகை, ரோஜா எனப்படும் உண்ணா நோன்பிருத்தல், ஜகாத் எனப்படும் தானம் செய்தல், ஹஜ் எனப்படும் காபா புனிதப்பயணம் இவையாவும் முக்கியமானதாகும்.

இந்தியத் தத்துவத்தில் இவை இடம்பெற வேண்டியதில்லை. மேலை நாட்டுத் தத்துவத்தில் இடம்பெற வேண்டியவை எனினும் கிறித்தவமும், இசுலாமும் இந்தியாவில் அதிக அளவில் பின்பற்றக்கூடிய மதமாக இருப்பதால் இந்தியத் தத்துவத்தில் இவை இடம்பெற்றுள்ளன.

பௌத்தத் தத்துவம்

புத்தர் ஆன்மத் தத்துவத்தை எதிர்ப்பவர். அதோடு லோகாயதவாதத்திற்கு எதிரானவர். மௌரியர்களின் ஆட்சிக் காலத்தின் இறுதி வரை மகத ராஜ்ஜியமே பௌத்த மதத்தின் கேந்திரமாக விளங்கியது. புத்தர் நான்கு சிறந்த உண்மைகளைக் கூறினார். அவை, 1.துக்கம் 2.துக்கத்தின் காரணம் 3.துக்கத்தடுப்பு 4. துக்கத்தடுப்புக்கு வழி ஆகியவைகளாகும்.

துக்கம்

துக்கத்தின் உண்மையை விவரிக்கும் புத்தர்,

“பிறப்பும் துக்கம்தான். முதுமையும் துக்கம்தான். மரணமும், சோகமும், அழுகையும், மனச்சஞ்சலமும் அனைத்துமே துக்கங்கள் தாம்! விரும்பாததை அடைவதும், விருப்பமானதைத் துறப்பதும் கூடத் துக்கமளிப்பவைதான்! விரும்பியதை அடையாவிட்டாலும்

துக்கமே! சுருக்கமாக ஐந்து விஷயங்கள் துக்கத்தின் பிறப்பிடமாகும்"[31]

என்கிறார் ராகுல் சங்கிருத்யாயன். புத்தர் துக்கத்திற்குக் காரணமாக உருவம், நீர், நிலம், காற்று, நெருப்பு ஆகிய ஐந்தினைக் கூறுகின்றார்.

வேதனை – சுக, துக்கங்களின் அனுபவங்கள்

பெயர் – வேதனைக்குப் பின்னர் ஏற்படும் இவன் தேவதேவன் தான் என்று நாம் அடையாளம் கண்டுகொள்வதுதான் பெயர்.

பண்பாடு – உருவ வேதனை முத்திரை, பெயர்களின் பண்பாட்டு முத்திரை மனதில் பதிந்து மீண்டும் அதே தேவதேவன் தான் என்ற எண்ணம்.

விஞ்ஞானம் – உணர்ச்சி அல்லது மனம் விஞ்ஞானம் இவையாவும் துக்கத்தின் பிறப்பிடங்களாகும்.

துக்கத்திற்கான காரணங்கள்

* உலகத்தின் மீது கொண்டுள்ள ஆழமான பற்று
* புலன்களின் விருப்பம்
* உற்றார் உறவினருடன் கொள்ளும் பகை
* காமத்திற்காகப் போர் செய்யும் அரசர்கள்
* சகோதரனுடன் நண்பர்களுடன் ஆசை காரணமாக செய்யும் போர்.

இவையாவும் ஆயுதங்கள் மூலம் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டு மரணத்தை நாடச் செய்கின்றன.

துக்கத்தின் அழிவு

துக்கத்தடுப்பு புத்தர் தத்துவத்தின் முக்கியப் பகுதியாகும்.

---

31. ராகுல் சாங்கிருத்யாயன், பௌத்த தத்துவ இயல், ப.28.

“கோரிக்கையின் அழிவில் விருப்பங்கள் தடுக்கப்படுகின்றன. விருப்பமான விஷயங்கள் தடுக்கப்படுவதால் உலகம் தடுக்கப்படுகிறது. உலகம் தடுக்கப்படுவதால் மறுபிறவி தடுக்கப்படுகிறது. பிறப்பின் தடுப்பால் முதுமை, மரணம், சோகம், அழுகை, வேதனை, மனசஞ்சலம் முதலியவை அழிந்து விடுகின்றன”[32]

என்று பௌத்தத் தத்துவக் கூற்றை ராகுல் சாங்கிருத்யாயன் கூறுகின்றார்.

துக்கத்தின் அழிவுக்கு வழி

அ) ஞானம் – சரியான பார்வை, சரியான சங்கற்பம்
ஆ) நன்னடத்தை – சரியான சொல், சரியான செயல், சரியான வாழ்க்கை முறை
இ) மோனநிலை – சரியான முயற்சி, சரியான நினைவு, சரியான மோனநிலை

என்று துக்க அழிவிற்கான வழிமுறைகளைப் பகுத்துள்ளார். தனிமனித வாழ்க்கையின் குறிக்கோள்களைப் பௌத்தத் தத்துவம் எடுத்துக்கூறுகின்றது. இந்தியாவில் பௌத்தமதக் கருத்துக்களின் சாரம் அதிக அளவில் இடம்பெற்றுள்ளது.

மேலைநாட்டுத் தத்துவமரபு சமுதாயம் சார்ந்ததாகவும், இந்தியத் தமிழகத் தத்துவ மரபுகள் யாவும் மதம் தொடர்புடையனவாகவும் காணப்படுகின்றன. தமிழகத் தத்துவ மரபு என்பது சமயம் அதன் வரலாற்றுப் பின்னணிகளுடன் பெரிதும் ஒப்புமைவுடையனவாகக் கருதப்படுகின்றன. வரலாற்றின் நிழல்களாகச் சமயங்கள் காட்சியளிக்கின்றன.

தமிழகத்தில் தத்துவம்

மேலை நாட்டில் தோன்றிய தத்துவங்கள் பொதுவுடைமை, விஞ்ஞானம், தொழில்புரட்சி போன்றவைகளை அடிப்படைக் காரணிகளாகக் கொண்டு

---

32. ராகுல் சாங்கிருத்யாயன், பௌத்த தத்துவ இயல், ப.30.

தோன்றின. இந்தியாவில் தத்துவங்கள் வேதங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றைப் பின்பற்றி எழுந்துள்ளன. தமிழகத்தில் தத்துவம் என்பது சைவ, வைணவ சமயங்களின் காரணமாகத் தோன்றின.

களப்பிரர் காலத்தில் பௌத்த, சமண சமயங்களின் கொள்கைகளை மன்னர்களும், மக்களும் பின்பற்றத் தொடங்கினர். பௌத்த, சமண சமயக் கருத்துக்களைப் பின்பற்றுதல் எளிதான செயல் அல்ல. அதே கருத்துக்களைத் தமிழகத்தில் தோன்றிய சித்தர்களும் கடைபிடித்து வந்துள்ளனர். சித்தர்கள் பின்பற்றிய கொள்கைகள் மக்களிடம் சென்று சேரவில்லை. பௌத்த சமய கொள்கைகளை எளிதாகப் பௌத்த சமயத்துறவிகள் பரப்பினர்.

தமிழகத்தில் சைவம், வைணவம் என்று அழைக்கப்படுகின்ற வைதீக சமயங்களும், சமணம், பௌத்தம் என்று அழைக்கப்படுகின்ற அவைதீக சமயங்களும், மேல்திசை நாடுகளில் இருந்துவந்த கிறித்தவம், இசுலாம் போன்ற சமயங்களும் நிலைகொள்ள முயலும்போது அதற்கேற்ற சூழ்நிலைகள் தமிழகத்தில் இருந்துள்ளன. அரசியல் சூழ்நிலைகளும் சமய மாற்றங்களுக்குக் காரணமாகிவிட்டன.

தமிழகத்தில் தோன்றிய தத்துவங்களை,

1. சித்தர் இலக்கியங்களில் தத்துவங்கள்
2. தமிழ் இலக்கியங்களில் தத்துவங்கள்

எனப் பகுக்கலாம்.

1.சித்தர் இலக்கியங்களில் தத்துவங்கள்

உலக மக்களை வாழ்விக்க எழுந்த சிந்தனையே தத்துவமாகும். பால்படு நெய்போல் மனிதனிடத்தில் மறைந்திருக்கும் இறைத்தன்மையை வெளிக்கொணர்வது தத்துவத்தின் பணியாகும். தத்துவம் என்பது உண்மையை

அறிதல் ஆகும். உண்மை என்பது எல்லைகளுக்கு அப்பாற்பட்டது. அதைக் காண்பதில் வேறுபாடுகள் உண்டு. உணர்வு நிலை ஒன்றுபட்டு இருப்பதே உண்மை அறிதலுக்கு உதவும் காரணியாகும்.

தத்துவம் என்பது நம்மைச் சுற்றி நிலவும் யதார்த்தம். மனிதனால் முழுமையாக அறியப்படுதல் பற்றிய கருத்துக்களின் தொகுப்பாக விளங்குகின்றது. இவ்வாறாகத் தத்துவம் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல பரிமாணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது. அதில் தமிழகத்தில் தோன்றிய சித்தர்களின் இறைநிலைத் தன்மையை முழுமையாக சித்தர் இலக்கியப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

> "*சித்து என்னும் சொல்லைக் குறிக்க மிஸ்டிஸம்* (mysticism) *எனவும், சித்தர்களைக் குறிக்க மிஸ்டிக்* (mystics) *எனவும் ஆங்கிலத்தில் வழங்கப் பெறுகின்றது. ரிச்சர்ட்இன்ஸ்* (Richard ince), *முஸ்டஸ்* (mustes) *என்னும் கிரேக்கச் சொல்லினின்று 'மிஸ்டிஸம்' என்னும் சொல் வந்தது. இக்கிரேக்கச் சொல்லுக்கு வாழ்க்கைப் பற்றிய நுண்ணிய அறிவு என்பது பொருள் எனக் கருதுகின்றார்*"[33]

என்று சித்தர் என்ற சொல்வழக்கிற்கான விளக்கத்தினை இரா.கலாவதி குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு போன்ற மொழிகள் தென் திராவிட மொழிகள். இவற்றுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் இலக்கிய வளமுடையவை. இதில் தென் திராவிட மொழிகளின் தாய்மொழியாகத் தமிழ் கருதப்படுகின்றது.

---

33. இரா.கலாவதி, சித்தர் பாடல்களில் நடப்பியல், ப.2.

இத்தகைய தமிழ்மொழியில் ஆழமான இலக்கியங்கள் காணப்படுகின்றன. அதில் சித்தர் இலக்கியங்களும் அடங்கும். சித்தை வென்றவனும், தனனை அறிந்தவனும் சித்தனாவான். சிவனைச் சித்தனாக்கி சமயச்சார்பற்ற நிலையில் பாடிய யோகியர் சித்தர்கள் எனப்பட்டனர். 'அட்டமா' சித்திகளும் கைவரப் பெற்றவர்கள் சித்தராவர்.

"பணிந்து எண்திசையும் பரமனை நாடித்
துணிந்து எண் திசையும் தொழுது எம்பிரானை
அணிந்து எண் திசையினும் அட்டமா சித்தி
தணிந்து எண் திசை சென்று தாபித்த வாறே."[34]

எட்டுத்திசையிலும் தெய்வப் பரம்பொருளைத் தேடி மேலான தெய்வம் இவனே எனத் துணிந்து, சிவப் பரம்பொருளைப் பணிந்து வணங்கி எட்டுவகைச் சித்திகளும் எய்தல் இயலுவதாகும் என்கின்றது திருமந்திரம்.

எண் வகை சித்திகள் (அ) சாதனைகள்

* சுருங்குதல்
* விரிதல்
* பெருத்துகனமாதல்
* இலேசாதல்
* வேண்டியதைப் பெறுதல்
* விரும்பியதை மேற்கொள்ளுதல்
* வசியமாக்குதல்
* வேற்றுருக்கொள்ளுதல்

இவற்றை மேற்கொள்ளுபவர்களைச் சித்தர்கள் என்பர். தமிழ் இலக்கியங்களில் சித்தர் பாடல்கள் நடப்பியல் சார்ந்த தத்துவக் கருத்துக்களை ஆதாரமாகக்

---

34. திருமந்திரம்.640.

கொண்டுள்ளன. சித்தர் பாடல்கள், சமயங்களினால் ஏற்பட்ட மூடப்பழக்க வழக்கங்களையும், வெறும் சடங்குகளையும் அகத்தூய்மை, செம்மை, அன்பு இவைகளற்ற புறவழிபாட்டைக் கடிந்து மக்களின் சமயவாழ்க்கையைச் செம்மையுடையதாக்கின. சித்தர்கள் சாதி, சமய வேறுபாட்டை அறியாதவர்கள்.

> *"சித்தர்கள் சமயங்களைத்தான் வெறுத்தார்களே தவிர சமயம் கூறும் கடவுள் உண்மையை மறுக்கவில்லை. சித்தர்களின் பாடல்களில் ஆச்சாரங்கள் தாக்கப்பட்டிருக்கின்றனவே தவிர கடவுள் தாக்கப்படவில்லை. எனவே சித்தர்களை நாத்திகர்கள் என்று சொல்வது பொருந்தாது. உருவ வழிபாட்டை எதிர்த்தனர்"*[35]

என்பதை இதன் மூலம் அறியமுடிகின்றது.

வாழ்வியல் உண்மை

நன்முறையில் மக்களுக்கு வழிகாட்டிய சித்தர்கள் பொய்களுக்கு நடுவே மறைந்திருக்கும் உண்மையை வெளிப்படுத்தியவர்கள். கானல்நீரை உண்மை என நம்பி ஏமாந்த மனதில் தெளிவை ஏற்படுத்தியவர்கள். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை நங்கூரம் இல்லாத கப்பல் போன்றது. ஆகையால் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நியதியை வகுத்தவர்கள். பாகற்காய் கசக்கும் என்றாலும் உடல் நலத்திற்கு அதை உட்கொள்ள வேண்டும். அதுபோல உண்மை கசக்கும் என்றாலும் அதை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் வர கசப்பான உண்மைகளை சித்தர்கள் கூறியுள்ளனர். வயிற்றுப் பிழைப்பிற்காகப் பூசாரி வேடம் பூணும் போலி குருமார்களைக் கருவூரார் கடுமையாகச் சாடுவதைக் காணலாம்.

> *"புகலுவார் வேதமெல்லாம் வந்ததென்று*
> *பொய்பேசிச் சாத்திரங்கள் மிகவுங்கற்றே*

---

35. சா.முகமதுபாரூக் பீர் முகம்மது அப்பா, (பதி.ஆ.), இலக்கிய ஆய்வுக்கோவை, ப.175.

அகலுவார் பெண்ணாசை விட்டோமென்றே
அறிவுகெட்டே ஊர்தோறுஞ் சுற்றிச் சுற்றிச்
சகலமுமே வந்தவர் போல் வேடம் பூண்டு
சடைமுடியுங் காசாயந் தன்னைச் சாற்றி
இகலுமன மடங்காமல் நினைவு வேறாய்
எண்ணமெலாம் பெண்ணாசை பூசை தானே"[36]

என்று கருவூரார் போலிகளாகத் திகழும் குருமார்களைப் பற்றிப் பாடுகின்றார்.

பிறந்து தாய், தந்தை, மனைவி, மக்கள், சுற்றத்தார் எனும் குடும்பச் சக்கரத்தில் உழன்று, அவர்களுக்காக ஒரு மனிதன் பாடுபடுகின்றான். அவன் நோய்வாய்ப்படும் பொழுது அவர்களின் நடத்தை எவ்வாறிருக்கும் என்று விளக்குகின்றார். அன்பொழுகப் பேசியவர்கள் அந்நியராய்ப் போய்விடும் நிலையை உணர்த்துகின்றார். நெருங்கிய உறவினர்களின் நிலையே இவ்வாறு என்றால் பொருளாசை கொண்ட விலைமாதர் நடத்தையை விவரிக்க வேண்டியதில்லை. கையில் காசில்லாதவன் கடவுளானாலும் முகத்தில் அறைவதுபோல் கதவைச் சாத்தி விடுவர். இது குறித்து பட்டினத்தார் கூறுவதை அறியலாம்.

"நாவார வேண்டும் இதஞ் சொல்லுவார்: உனைநான்
பிரிந்தாற் சாவேன்! என்றே யிருந்
தொக் கவுண் பார்கள் கைதான் வறண்டாற்
போய்விடும் என்று நடுத்தலைக் கே குட்டும் பூவையிருக்க
ஈவார் தலைவிதியோ? இறைவாகச்சி ஏகம்பனே!

என்றும்,

தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடுநாள்
நீயாரியானார்? எனப்பகர் வாரந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடி கொள்வரே; கொண்ட நோயுமொரு
பாயாரும் நீயுமல் லாற்பின்னை நேதுநட் பாமுடலே"[37]

---

36. **கருவூரார், கருவூரார் பாடல்கள் பூசார் விதி, பா.எண்.16.**
37. **பட்டினத்தார்-பட்டினத்தார் பாடல்கள், திருவேகம்பமாலை, பா.எண்.24.**

சமுதாயத்திற்காக வாழாத ஆன்மிகவாதிகளை மக்கள் புறக்கணித்து விடுவார்கள். ஆன்ம நிலையில் தனிச்சிறப்பு பெற்ற சித்தர்கள் சமுதாயக் கேடுகளைக் கண்டு மனம் வருந்தினர். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கவும் போரும் பூசலும் அற்ற அமைதியான வாழ்க்கை வாழ நெறிப்படுத்தினர். இன்று நாம் கூறும் தேசிய ஒருமைப்பாடு, உலக ஒற்றுமை என்பதற்கு வழிகாட்டியாக விளங்கியவர்கள் சித்தர்கள்.

"நீரிலே முளைத்தெழுந்த தாமரையிலோரிலை
நீரினோடு கூடி நின்றும் நீரிலாதவாறு போல்
பாரிலே முளைத்தெழுந்த பண்டி தப்பராபரம்
பாரிவோடு கூடி நின்ற பண்பு கண்டிருப்பாரே"[38]

என்ற சிவவாக்கியர் பாடற்கருத்து உலக வாழ்க்கைமீது பற்று ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றது. கடலுக்கு மேலே கப்பல் மிதக்கலாம். அதே கடல் நீர் கப்பலுக்குள் புகுந்தால் கப்பல் கடலுக்குள் மூழ்கி விடும். அதுபோல, உலக வாழ்க்கைமீது பற்று கொள்ளாமல் வாழவேண்டும். இல்லையேல் உலகப்பற்று நம்மை மூழ்கச் செய்துவிடும். ஞானிகள் சமூக அக்கறை கொண்டவர்களாக இருக்கலாம். சமூக ஆசைகள் கொண்டவர்களாக மாறி விடக்கூடாது என்பதை சித்தர் இலக்கியங்கள் கூறுகின்றன.

2. தமிழ் இலக்கியங்களில் தத்துவங்கள்

தமிழ் தொன்மையான மொழி. இலக்கிய, இலக்கண வளம் கொண்டது. காலத்திற்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்ளும் சொல்வளம் நிரம்பிய மொழி. உலகம் முழுவதும் பேசப்படும் மொழி. இத்தகைய தமிழ்மொழியில் தத்துவங்கள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. தத்துவத்திற்கான விளக்கத்தை இரா.கலாவதி,

---

38. சிவவாக்கியர், சிவவாக்கியர் பாடல், பா.எண்.314.

"தத்துவங்கள், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலே பிறந்து காலப்போக்கில் வளர்ச்சியும் ஆழமும் பெறுகின்றன. தனிமனிதனுடைய முயற்சிக்கும், சமுதாய மாற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் இடையறாது வழிகாட்டக் கூடிய தத்துவங்கள் காலங்கடந்து நிற்கின்றன. ஏனையவை அருகிய வழக்காயின. பௌத்தம், சமணம் போன்ற சமயங்களை இதற்குச் சான்றாகக் கூறலாம். எந்தத் தத்துவம் மக்கள் வாழ்க்கையோடு இணைகிறதோ அதுவே சிறப்புப் பெறும். ஆங்கிலத்தில் தத்துவம் எண்ணம் சொல்லுக்கு "philosophy" *என்று கூறுவர். இச்சொல் கிரேக்கச் சொல்லான பிளசோபியா* "philosophia" *என்பதிலிருந்து வந்தது. இச்சொல் அறிவார்வம்* "love of wisdom" *என்றும் பொருள்படும்"*[39]

என்று கூறுகின்றார்.

- சங்க இலக்கியங்களில் தத்துவங்கள்
- சங்கம் மருவியகால இலக்கியங்களில் தத்துவங்கள்
- ஐம்பெருங்காப்பியங்களில் தத்துவங்கள்
- பக்தி இலக்கியங்களில் தத்துவங்கள்

என்று தமிழ் இலக்கியத்தில் காணப்படும் தத்துவக்கூறுகளைப் பகுக்கலாம்.

1. சங்க இலக்கியங்களில் தத்துவங்கள்

சங்க இலக்கியங்கள் நிலப்பாகுபாடு, திணைக் கோட்பாட்டு அடிப்படையில் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய கடவுளர்களைப் பற்றிய கருத்துக்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. தெய்வப் பகுப்பு ஏற்பட்டதே சங்க இலக்கிய பக்தித் தத்துவத்தை உணர்த்துகின்றது. நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு இவையனைத்தும் சங்ககால மக்களின் அகப்புற வாழ்க்கை

---

39. இரா.கலாவதி, மு.நூ., ப.1.

முறைகளை எடுத்துரைக்கின்றன. எனினும் மனித வாழ்க்கை முறைமைகளில் தத்துவங்கள் இடம்பெற்றுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுவுடைமைத் தத்துவத்தைச் சங்ககாலத்திலேயே கூறியிருக்கின்றார். அதுபோல நாம் பொருள் வேண்டி பல இடங்களுக்குச் சென்று நிறைய பொருளைத் திரட்டி எந்த பயனும் இல்லை. காரணம்,

"உண்பது நாழி; உடுப்பவை இரண்டே"[40]

எனவே இருக்கும் செல்வத்தைப் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்தல் சாலச் சிறந்தது. அதுபோல, வாழ்வதற்காகப் பொய்கூறாமல் உண்மை மட்டுமே பேசிய சான்றோர் பெருமக்கள் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர்.

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்பு ந பலவே"[41]

என்று செல்வம் தனக்கென என்று எண்ணிக்கொண்டு ஈட்டுதல் கூடாது. பிறருக்கும் பயன்தரக் கூடியதாக எண்ணி செல்வத்தை ஈட்ட வேண்டும்.

அதுபோல சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டில் முருகக்கடவுள்மீது நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை தத்துவநூல் எனலாம்.

சிறுபாணாற்றுப்படையில் கடையெழு வள்ளல்களின் கொடைத்திறம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. பிற உயிர்கள்மீது அருளுடையவர்களாக மக்கள் வாழ்வது அவசியம் என்ற வாழ்வியல் தத்துவத்தைக் கடையெழு வள்ளல்கள் பற்றிய கருத்துக்கள் உணர்த்துகின்றன.

---

40. புறம்.189.
41. மேலது.

இவ்வுலகம் நிலையற்றது என்ற கருத்தை மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கின்றது.

"படுகண் முரசம் காலை இயம்ப
வெடிபடக் கடந்து வேண்டு புலத்து இறுத்த
பணைகெழு பெருந்திறல் பலவேல் மன்னா
கரைப்பொரு திரங்கும் கனையிரு முந்நீர்த்
திரைவிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே"[42]

என்பதன் மூலம் எண்ணிலடங்கா மன்னர்கள் இவ்வுலகை ஆண்டுவிட்டனர். நீயும் அவ்வாறே என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாண்டிய நெடுஞ்செழியனுக்கு நிலையாமையை அறிவுறுத்துகின்றார். இவ்வாறாக சங்க இலக்கியங்களில் தத்துவங்களை அதிகமாகக் காணமுடிகின்றன.

2. சங்கம் மருவிய கால இலக்கியங்களில் தத்துவங்கள்

தமிழில் தோன்றியுள்ள நீதிநூல்களுக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழக்கூடியது திருக்குறளாகும். மதுரைத் தமிழ் நாகனார்,

"எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் – சொல்லாற்
பரந்தபா வால்என் பயன் வள்ளுவனார்
கரந்தபா வையந் துணை"[43]

என்று திருக்குறளின் பெருமையினை எடுத்துரைக்கின்றார். திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவைநாற்பது, இன்னாநாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, இன்னிலை போன்றவை சங்க மருவிய காலத்திய நீதி நூல்கள் ஆகும். இவை

---

42. **மதுரைக்காஞ்சி, வரிகள்.232-237.**
43. **தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.191.**

தவிர ஔவையார் பாடிய ஆத்திச்சூடி, நன்னெறி, கொன்றைவேந்தன் போன்றவையும் தத்துவங்கள் உள்ளடக்கிய நீதி நூல்களாகும்.

வாய்மை அதிகாரத்தில் திருக்குறள் உண்மை பேசுதல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. உண்மை அறிதல் தத்துவமாகக் கூறப்பட்டுள்ளது போல உண்மை பேசுதலும் அல்லது பின்பற்றுதலும் தத்துவமாகக் கொள்ளப்படும்.

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்"[44]

என்று திருக்குறள் கூறுகின்றது. மனித வாழ்க்கை தத்துவத்தோடு இரண்டறக் கலந்து பிணைக்கப்பட்டுள்ளது என்பதைத் திருக்குறள் உணர்த்துகிறது. எனவே தான் எண்ணிலடங்கா கருத்துக்களின் பெட்டகமாகத் திருக்குறள் திகழ்கின்றது. செல்வம் நிலையாமை பற்றிப் பேசாத நீதிநூல்களே இல்லை என்று கூறலாம். நாலடியார்,

"துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்"[45]

என்று வண்டிச்சக்கரம்போல செல்வம் ஓர் இடத்தில் நில்லாமல் செல்வோம் என்று சென்று கொண்டே இருக்கும் என்ற தத்துவத்தைக் கூறுகின்றது.

மெய்ப்பொருள் கண்டு வாழ்பவர்களைப் பற்றி திரிகடுகம்,

"வைத்தனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்-ஊறிய

---

44. குறள்.298.
45. நாலடி.40.

கைப்பதனைக் கட்டி என்று உண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்"[46]

என்கிறது. பிறர் வைது பேசும் பேச்சினை இன்சொல்லாகக் கொள்பவன், நெய் உணவினைப் போன்று கூழைப்போல மதிப்பவனும், மெய்ப்பொருள் கண்டு வாழ்பவர்கள் என்ற தத்துவத்தைத் திரிகடுகம் விளக்குகின்றது.

வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஆசார ஒழுக்கங்களை,

"நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு
ஒப்புரவாற்ற அறிதல், அறிவுடைமை
நல்லினத்தாரோடு நட்டல் இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து"[47]

என்று ஆசாரக்கோவை கூறுகின்றது.

3. ஐம்பெருங்காப்பியங்களில் தத்துவங்கள்

தமிழ்க் காப்பியங்களின் தோற்றம் மதம் தொடர்பான செயல்களை அடிப்படைக் கூறுகளாகக் கொண்டிருந்தாலும், அவை சமூக அக்கறை கொண்டே இயற்றப்பட்டுள்ளன. அந்தவகையில் ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையான சிலப்பதிகாரம் ஒரு சமுதாய நெருக்கடிக் காலத்தில் தோன்றியது. வணிகவர்க்கத்தின் எழுச்சி, அரசு அதிகாரம், சமூகநீதி, பலசமய ஒற்றுமை, பல சமூகப்பிரிவினரின் சுயேச்சையான வாழ்வு இவற்றைச் சிலம்பு மையப்படுத்துகின்றது. முக்கியமாக அரசியல், சமயம் என்ற இரண்டு தளங்களில் அன்றைய சமூகத்தைச் சித்தரிக்கின்றது.

---

46. திரிகடுகம் பா.எ.48.
47. ஆசாரக்கோவை பா.எ.1.

கண்ணகி கோவலன் சமணசமயத்தைச் சேர்ந்தவர்கள் கவுந்தியடிகளும் சமணசமயத்தைச் சேர்ந்தவர். அவர்களிடம் மாடலமறையோன்,

"அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும்
வருமறை எழுத்தின் மந்திரம் இரண்டும்
ஒருமுறையாக உளங்கொண்டு"[48]

என்று கூறுகின்றான். வடமொழி வேதம் கூறும் எழுத்தையும் மந்திரத்தையும் கூறுக என்கிறான். அம்மறையவன் மலைமிசை நின்றோனாகிய திருமாலின் பொற்றாமரை போன்ற பாதங்களைப் பொறுத்துக என்றும் அறிவுறுத்துகிறான். போதனை கோவலனுக்காக மட்டுமல்ல சிலம்பை வாசிப்போர் அனைவரும் மாடலவனைத் தொழுக என்பதாகவும் பொருள் கொள்ளலாம். இதுபோல மறைமுகமாக சமயத்தின் தாக்கமும் இறைநெறியும் சிலம்பில் இடம்பெற்றுள்ளன.

மாடல மறையோனுக்குக் கவுந்தியடிகள் சமணசமயத்தில் இடம்பெறும் கருத்துக்களை மறுமொழி மூலம் புரியவைக்கின்றார்.

சிலம்பின் தொடக்கத்தில் கூறப்படும் மூன்று அறக்கருத்துக்களும் காப்பியத்தின் தத்துவமாக எடுத்துக்கொள்ளலாம்.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்றம் ஆவதும்"
"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்"
"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்"

இவை அரசு, சமூகம், குடும்பம் இவை மூன்றையும் பற்றியத் தத்துவங்களாகவும் தனிமனிதன் பின்பற்றத்தக்க கூறாகவும் கொள்ளலாம்.

---

48. சிலம்பு; காடுகாண்காதை 128-130.

மணிமேகலை பரத்தையொழிப்பு, மதுவொழிப்பு, சிறையொழிப்பு, சாதியொழிப்பு என்பனவற்றை வலியுறுத்தும் சமுதாயச் சீர்த்திருத்தங்களின் களஞ்சியம் எனலாம்.

புத்தமதக் கருத்துக்களை அழகிய தமிழ்மொழியில் எடுத்தியம்பும் காப்பியமாகவும், அனுபவ உண்மைகளை எடுத்துக்கூறும் ஒப்பற்றக் காப்பியமாக மணிமேகலை திகழ்கின்றது.

சாதி, மதம் என்பவை பௌத்த, சமணக்கருத்துக்களில் சுட்டப்படவில்லை. கணிகையர் குலத்தில் பிறந்த மணிமேகலை பௌத்த துறவியாக மாறுவதாகக் காப்பியம் கூறும் செய்தி போற்றுதற்குரிய ஒன்றாகும். புரட்சிக்கருத்தாக இந்த காப்பியத்தைப் போற்றுதல் தகும்.

"கற்பு தானிலள் நற்றவ உணர்விலல்
வருணக் காப்பிலள் பொருள்விலையாட்டி என்று
இகழ்ந்தன னாகி நயந்தோன் என்னாது
புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத் தியற்கை"[49]

என்று இடம்பெறும் வரிகளில் மணிமேகலை தன்மனம், தன்னையும் அறியாமல் உதயகுமாரனிடம் வயப்பட்டு விட்டதை எண்ணி வருந்துகின்றாள். உலகியல் வாழ்க்கை எப்பொழுதும் குற்றம் செய்யத் தூண்டும் என்பதை மறுக்கமுடியாது. அதுபோல காமம் கொண்டு மணிமேகலையைப் பின்தொடர்ந்த உதயகுமாரனுக்குச் சுதமதி அறிவுரை கூறுகின்றாள். அதில் இவ்வுடம்பின் இழிவைச் சுட்டிக்காட்டுவதைக் காணலாம்.

"யான் ஒன்று கிளப்பல்
வினைவிளங்கு தடக்கை விரலோய்! கேட்டி!

---

49. மணிமேகலை, மணிமேகலா தெய்வம் தோன்றிய காதை, வரிகள், 86-90.

வினையின் வந்தது வினைக்கு விளை வாயது
புனைவன நீங்கில் புலால் புறத்திடுவது
மூப்பு விளி வுடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளம் தன்பாலு டையது
மக்கள் யாக்கை"[50]

என்று உடம்பின் இழிவை மணிமேகலை எடுத்துரைக்கின்றது. இதன்மூலம் யாக்கை நிலையாமை என்னும் தத்துவத்தையும் மணிமேகலை எடுத்தியம்புவதை அறியமுடிகின்றது.

உதயகுமாரனை இழந்து அவன் தாய் அழுகின்றாள். மணிமேகலையால் தான் தன் மைந்தன் கொல்லப்பட்டான் என்று எண்ணிய அவள் மணிமேகலையைப் பலவாறாகத் துன்பம் செய்து சிறையில் அடைக்கின்றாள். அவ்வேளை மணிமேகலை உதயகுமாரனின் தாயிடம் பேசிய மொழிகள் இவ்வுலக வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை எடுத்துரைக்கின்றது. இறந்த உன் மகனின் உடலுக்காக அழுகின்றாயா? அல்லது உயிருக்காக அழுகின்றாயா? உடலுக்காக என்றால் அதைக்கொண்டு இடுகாட்டில் இட்டவரிடம் கேள்! உயிருக்காக என்றால் இவ்வுலகம் முழுவதும் உயிர்களே இயங்குகின்றன. அவர்களை உன் மகனாக நினை என்று அறிவுரை கூறுகின்றாள். இவ்வாறாக பௌத்த சமயத்தின் தத்துவக்கூறு மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. பற்று, ஆசை ஆகியவற்றை துன்பத்தை ஏற்படுத்தும் காரணிகளாக புத்தமதம் கூறுகின்றது.

---

50. மணிமேகலை, பளிக்கறை புக்கக்காதை, வரிகள் 113-120.

சீவகசிந்தாமணி நிலையாமையை அறிவுறுத்தும் சமணசமயக் காப்பியமாகும். சீவகனின் தந்தை ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன் தன் மனைவி விசயைமீது காதல் கொண்டு, அரசாட்சியை அமைச்சன் கட்டியங்காரனிடம் ஒப்படைக்கின்றான். தன் மனைவி மீது தீராத காதல் கொண்டதே மன்னனின் அழிவிற்குக் காரணமாக அமைவதாகக் காப்பியம் சுட்டுகின்றது. இவ்வாறாகக் காப்பியத்தின் தொடக்கமே சமயக்கருத்தை வலியுறுத்துவதாகக் காணப்படுகின்றது. காப்பியத்தலைவன் சீவகன் எட்டுப்பெண்களைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறப்பட்டாலும், சமணசமயத்தின் மையக் கருத்தாக விளங்கும் முக்தி, மகளைத் திருமணம் செய்து கொள்வதாகக் காப்பிய ஆசிரியர் திருத்தக்கத்தேவர் முடித்துள்ளார். சமணசமயத்தின் சாரமும், ஒரு நல்ல கதையைக் காப்பியமாக்கி தமிழிற்கு வழங்கிய பெருமையும் ஒருசேர நிகழ்ந்துள்ளன எனலாம்.

வளையாபதி சமண சமயக் காப்பியமாக இருக்கலாம் என்பர். மக்கட்பேறு பற்றி கூறும் பாடலில் அதனோடு ஒத்த பல உண்மைகளை எடுத்துக்கூறுகின்றது.

"பொறையிலா அறிவு போகப் புணர்விலா இளமைமேவத்
துறையிலா வனசவாவி துகிலிலாக் கோலத்தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னீர்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வமன்றே"[51]

என்ற பாடலில் எவ்வளவு செல்வம் இருந்தாலும் மக்கட்செல்வம் இல்லையெனில் அவற்றால் பயன் எதுவும் இல்லை என்கின்றது வளையாபதி.

குண்டலகேசி பௌத்தக் காப்பியம். இதில் மனித வாழ்க்கை நாளுக்கு நாள் இல்லாமல் அழிந்து கொண்டேயிருக்கின்றது என்பதை நாதகுத்தனார் கூறுகின்றார். குண்டலகேசி பௌத்த சமயத்தின் பெருமையையும் அதன்

---

51. வளையாபதி, பா.எ.12.

மறுப்பாக எழுந்த நீலகேசி சமணசமயத்தின் பெருமையையும் வாத அடிப்படையில் நிலைநாட்ட முயலுகின்றன. காப்பியங்கள் இரண்டும் சமயவாதத்திற்காகத் தோன்றியவை என்பதை நிறுவும் முகமாய் விளங்குகின்றன. குண்டலகேசி,

"பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்
மீளும் இவ்வியல்பும் இன்னே மேல்வரும் மூப்புமாகி
நாளும் நாள் சாகின்றாமல் நமக்கு நாம் அழாததென்னே?"[52]

என்கின்றது. இவ்வாறாக. ஒவ்வொரு நாளும் இறப்பதை எண்ணி அழாமல், இறப்பு வரும்போது மட்டும் அழுவது ஏன்? என்கின்றது. துன்பம் வரும்போது அதைத் தாங்கிக் கொள்ளக்கூடிய மனத்திடம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்ற பௌத்தத் தத்துவத்தை எடுத்துக்கூறுகின்றது.

4. பக்தி இலக்கியங்களில் தத்துவங்கள்

பக்தி இலக்கியங்கள் சைவ, வைணவ, இசுலாம், கிறித்தவ சமயத்தின் இலக்கியங்களாக எடுத்துக் கொள்ளலாம். தமிழைப் 'பக்தியின்மொழி' என்று கூறுவர். பக்தி இலக்கியங்கள் வழி அவரவர் சமயக்கருத்துக்கள் மக்களைச் சென்று சேர நாயன்மார்களும் ஆழ்வார்களும் வழிவகை செய்து கொண்டனர். இதில் முதலாவதாகச் சைவசமய இலக்கியங்களில் காணப்படும் தத்துவங்கள் அகிலமும், அண்டமும் தொடர்புடையதாகும்.

சைவ இலக்கியத்தில் தத்துவங்கள்

கி.பி ஆறாம் நூற்றாண்டில் நாயன்மார்களில் காரைக்கால் அம்மையாரும், திருமூலரும் பாடல்கள் பாடிப் பக்தி இயக்கத்தைத் தொடங்கி வைத்தனர் எனலாம்.

---

52. குண்டலகேசி, பா.எ.9.

> *"இல்வாழ்க்கையில் இன்பமாக வாழ்ந்தாலும் எந்தத் தொழிலைச் செய்தாலும் உள்ளத்தை இறைவனுக்கு உரியதாக வைத்து வாழ்க்கை நடத்தினால் போதும்"*[53]

என்கின்றார் மு.வ. அதுபோல சைவசமயத்தின் மையமும் உள்ளத்தை இறைவனுக்கு அர்ப்பணிப்பது என்ற கோட்பாட்டை வலியுறுத்துகின்றது. பன்னிரு திருமுறைகள் இறைத்தத்துவத்தின் புகலிடமாக உள்ளன. சமயக்குரவர் நால்வரும் சிவனை முழுமுதற் கடவுளாக வணங்கி, பக்தியினால் தமக்கு ஏற்பட்ட உணர்வுகளோடு இரண்டறக் கலந்துவிட்டனர். அந்த நிலையைத் தம் எண்ணங்களைப் பாடல்களாக வகுத்துத் தந்துள்ளனர். அவை சைவத் திருமுறைகள், சைவ சித்தாந்த இலக்கியங்கள் எனப்படுகின்றன.

> *"சைவத்துறையில் பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானவர் உணர்த்திய அநுபூதி நுட்பங்களும், தத்துவராயன், சிவஞானமுனிவர் கூறிய மெய்ஞ்ஞானங்களும் பயிற்சியில் இருந்தன. வீரசைவமும், லகுலீச பாசுபதமும் சில குறிப்பிட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. 13ஆம் நூற்றாண்டு மெய்கண்டார் அறிவித்த சித்தாந்த சைவமும், 16ஆம் நூற்றாண்டுத் தத்துவராயர் உரைத்த பரமாத்துவித சைவமும் சைவத்துறையில் வேரூன்றி நிலைத்து நின்றன"*[54]

என்று சைவசமயத்தின் வளர்ச்சியை முப்பால்மணி எடுத்துரைக்கின்றார். இறைவனின் தன்மையைச் சைவ சமயத்தில் காரைக்கால் அம்மையார் பாடல்கள் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. இறைவனிடம் அசைக்கமுடியாத பற்றினை வைத்தவர் காரைக்கால் அம்மையார். அறிவானும் தானே அறிவிப்பானும் தானே, அறிவாய் அறிகின்றான் தானே அறிகின்ற மெய்ப்பொருளுந்தானே விரிசுடர்பார் ஆகாயம் அப்பொருளுந்தானே அவன் என்று இறைவனின் தன்மைகளை,

---

53. மு.வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப.99.
54. கி. முப்பால் மணி, தமிழகத் தத்துவச் சிந்தனைகள் மரபுகள், ப.147.

எப்பொருளுமாய் இறைவன் இருக்கும் நிலையைக் காரைக்கால் அம்மையார் பாடியுள்ளார்.

மாணிக்கவாசகர் சிவபெருமானைப் பற்றி கூறும்போது பந்தமும் வீடும் படைப்போன் காண்க என்றருளினார். ஆன்மாக்களுக்குப் பந்தநிலையையும் முக்தி நிலையையும் உண்டுபண்ணுபவன் சிவனே என்பது அதன் கருத்து. அறிவும் செயலும் இயல்பாகவே அமைந்த ஆன்மாக்கள் அநாதியான கேவலநிலையில் மும்மல தொடர்பால் அறிவும் மாண்டு செயலும் மாண்டு கிடந்தன. அப்போது ஆன்மாக்களை எடுத்து வெளிப்படுத்தி அவைகளின் இயல்பைப் பிரகாசிக்கும் படிச் செய்யச் சிவபெருமானே முன்வந்தார். மாயா மலத்தை உடலாகவும், கரணங்களாகவும், உலகங்களாகவும் காரியப்படுத்தி ஆன்மாக்களை அவற்றுள் புகுத்தினார். கன்ம மலத்தை நல்வினை, தீவினைகளாகவும் புண்ணிய பாவங்களாகவும் சுக துக்கங்களாகவும் ஆன்மாக்களை முற்கூறியவற்றை அனுபவிக்கும்படி செய்தார் என்று சைவசமயக் கடவுளான சிவனைப் பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

சைவம் நான்கு வகையான நெறிகளை கற்பிக்கின்றது.

> *"அகங்காரம் போனாலன்றிச் சிவன்பால் அன்பு உண்டாகாது. அது போவதற்குச் சாதனங்களாவன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் அவற்றுள் சரியையாவது சிவபெருமானின் கோயில் தலத்தை அலகிடல், திருமெழுக்குச் சாத்துதல், வழிபாட்டுக்காகப் பூக்கொய்தல், பூமாலை கட்டுதல், புகழ்ந்து பாடல், திருவிளக்கில் திருநந்தவனம் செய்தல் கிரியையாவது, வாசனை திரவியம், தூபம், தீபம், தீர்த்தம், புஷ்பம், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம் ஆகிய பூஜைக்குரிய பொருள்களைக் கொண்டு பஞ்சசுத்தி செய்து, உட்பூஜை, புறப்பூஜை, அக்கினி காரியம் முதலியவற்றை விதிப்படி செய்தலாம். யோகம், முக்குணங்களையும் ஐம்புலன்களையும் அடக்கி, மூலவாயுவை எழுப்புகின்ற இடைபிங்கலை என்னும்*

நாடிகளை அடைத்துச் சுழிமுனை வழியைத் திறந்து நடனச் சிலம்போசையுடன் சென்று பஞ்சாக்ஷரம், ஏகாக்ஷரமாம் தன்மை கண்டு அருளைத் தரும் புறவெளியில் புகுந்து அழுந்தி இருத்தல். ஞானமாவது பதி, பசு, பாசம் நீங்கி, பண்டை வினையின் பயனாகிய சிற்றறிவு நீங்குதல்"[55]

என்று தேவார நூல்கள் சைவத்தின் பக்தி வெளிப்பாட்டை உணர்த்துகின்றன. திருநாவுக்கரசர் தேவாரத்தில் சிவனின் பெருமைகளைக் கூறும்போது,

"நம்பனை நால்வேதங் கடந்தானை
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்ஆல் இருந்தான் தன்னைக் கற்பகமாய்
அடியார்க்கு அருள் செய்வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளுமுத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயை நீரை
அம்பொன்னை ஆவடுதன் துறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து (உ)ய்ந்தேனே"[56]

என்று இறைவனின் பெருமைகளாக நான்கு வேதங்களையும் கரைகண்டவனும், கடலானவனும், நன்மையின் வடிவமாகவே இருப்பவனும் என்று பலவாறாகப் புகழ்ந்துரைக்கின்றார்.

சைவ சமய இலக்கியங்களில் தத்துவங்கள் பொதிந்துள்ளன. வள்ளலார் பசித்தோர்க்கு உணவளித்தலின் இன்றியமையாமையை விளக்குகின்றார்.

"உள்ளலேன் உடையார் உண்ணவும் வறியார்
உறுபசி உழந்து வெந்துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
மற்றிதை நினைத்திருந்தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்றதுடம்பும்

---

55. **சுவாமி அவினாசானந்தர், தேவார, திருவாசகத் திரட்டு, ப.7.**
56. **மேலது, ப.110.**

எரிகின்ற தென் செய்வேன் அந்தோ
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்"[57]

என்ற அருட்பாவில் உள்ளவர், இல்லாதவர், பணக்காரர், ஏழை என்று வேறுபாடு கொண்டு செயல்படுவதைக் கண்டு குமுறினார். இந்த பேதங்களால் ஏழை மக்கள் பசியால் வருந்துவதை எடுத்துக்காட்டி, இந்த நிலைமாறி எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என்று வேண்டுகிறார்.

வைணவ சமய இலக்கியங்களில் தத்துவங்கள்

மனிதனுடைய சிந்தனையை நிர்ணயிப்பதில் வாழ்நிலையே முக்கியப் பங்கு வகிக்கிறது. வாழ்நிலையே சிந்தனையை உருவாக்குகிறது. அதில் சிறப்பானதொரு பங்காக சமயங்களும் சமய இலக்கியங்களும் விளங்குகின்றன. வைணவ சமயத்தை வலுப்பெறச் செய்ததில் முக்கியப் பங்காற்றிய பெரியோர்கள் அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்ற பிரிவுகளில் மாலவனை வணங்கினர். வைதீக சமயமான வைணவம் பெருந்தெய்வ வழிபாட்டு முறைமை உடையதாகும். தமிழில் வைணவசமய இலக்கியங்களாக ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் காணப்படுகின்றன. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொன்மை உடையது வைணவ சமயம். "மாயோன் மேய காடுறை உலகமும்" என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. வடமொழிச் சார்பும் புராணக்கலப்பும் இவ்வழிபாடுகளைச் சமய நிறுவனங்களாக வளர்க்கப் பயன்பட்டன.

இறைவனை மாயோனாகிய பெருமானை வழிபடும் முறைமையைக் கூறும் பூதத்தாழ்வார்,

---

57. இராமலிங்க அடிகளார், இராமலிங்க அடிகளார் திருவருட்பா, ஆறாம் திருமுறை, 5382.

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்"[58]

என்று பாடுகின்றார். இறைவனை மனதால் நினைக்க வேண்டும் என்பதாக அமைத்துள்ளது. இறைவன் மீது கொண்டுள்ள பற்றினை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்ற தத்துவத்தைப் பூதத்தாழ்வார் இப்பாடலில் சுட்டியுள்ளார். வைணவ சமய இலக்கியங்களின் தொகுப்பாக 'நாலாயிர திவ்யபிரபந்தம்' கருதப்படுகின்றது. இதனை ஒவ்வொரு பகுப்பாக பிரித்து அவற்றிற்குத் திருக்குருகைப் பிரான், பிள்ளான், நஞ்சீயர், பெரியவச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, அழகிய மணவாளர் போன்றோர் உரை இயற்றியுள்ளனர். இவையாவும் தத்துவ உரைகளாகும். மணிப்பிரவாளம் என்ற நடையில் வைணவ சமய இலக்கியங்களுக்கான உரை எழுதப்பட்டுள்ளது.

திருமழிசையாழ்வார் திருமால் மீது கொண்ட பக்தி அளவிடற்கரியது. பிற சமயங்களின் மீது இவர் வெறுப்புடையவராக இருந்துள்ளார். எல்லாமே திருமால் வடிவம் எனக் கருதியவர். "அன்பாவாய், ஆரமுதம் ஆவாய் அடியேனுக்கு இன்பாவாய் எல்லாமும் நீ ஆவாய்" என்று இறைவன் மீது அதீத பற்றுக் கொண்டவராக விளங்குகின்றார்.

முடிவுரை

தத்துவக் கோட்பாடு, தோன்றிய காலம் முதல் இன்று வரை பல்வேறு வகைகளும், வளர்ச்சி நிலைகளும் பெற்றுள்ளது. துறைசார்ந்த தத்துவங்கள் நாளடைவில் பெரும் வளர்ச்சி பெற்று சமூகம் சார்ந்த கூறாக மாறியது. தத்துவம்

---

58. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.

என்பது எந்தவொரு கட்டுப்பாட்டுக்குள்ளும் இல்லாமல் பிறரை அதன் (கொள்கை) கட்டுப்பாட்டிற்குள் கொண்டுள்ளது. இத்தத்துவங்கள் தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூறமுடியாது.

பெயரளவிற்குத் தத்துவம் என்று இல்லாமல் முடிந்த அளவிற்குச் சமுதாயத்தை அடித்தளமிட்ட கருத்துக்களில் ஈடுபாடு கொண்டிலங்குகின்றது. இந்தத் தத்துவங்கள் ஆன்மிகம், கல்வி, பொருளாதாரம், விவசாயம், அறிவியல் தொழில்நுட்பம், முதலாளித்துவம், தொழிலாளி வர்க்கம், நிலப்பிரபுத்துவம், கடவுள் மறுப்பு, பெண்ணியம் என்ற எண்ணிலடங்காக் கூறுகளைக் கொண்டு இலங்குகின்றது. இவையாவும் மேலைநாட்டுத் தத்துவங்கள், இந்தியத் தத்துவங்கள், தமிழகத் தத்துவங்கள் என்ற பகுப்பின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளன.

மேலை நாட்டில் மனித உணர்வுகளுடன் தொடர்புடைய தத்துவங்கள் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் புரட்சியை மையமிட்டு உருவாக்கப்பட்ட மார்க்சியம், லெனினியம் பற்றிச் சிந்திக்கின்றன. அவர்களின் கருத்துக்களில் ஈர்ப்பு கொண்டவர்கள் அதை உலகம் முழுவதும் பரவச் செய்யும் வழி வகைகளை ஆராய்கின்றனர். மக்களுக்குப் பயன்தரக்கூடியவையாக தத்துவங்கள் விளங்க வேண்டும் என்பது மேலைத் தத்துவக் கொள்கையாகும். அக்காலத்தில் அரிஸ்டாட்டில், பிளாட்டோ போன்ற அறிஞர்கள் தந்துள்ள வரையறைகளுக்கு எதிர்ப்பு இருந்தாலும் காலப்போக்கில் எல்லோராலும் இவை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தியத் தத்துவங்கள் வேதங்கள், உபநிடதங்களின் மீது நம்பிக்கை கொண்டுள்ளன. கடவுள் உண்மை ஆகியவற்றை வெளிப்படுத்த உதவும் காரணிகளாக வேதங்களும், உபநிடதங்களும் திகழ்கின்றன. கடவுள் மீது நம்பிக்கை கொண்டு வேள்வி செய்வது, வேதங்களில் கூறப்பட்டுள்ள முறைகளோடு நடக்காவிட்டால் பேராபத்து ஏற்படும் என்று நம்புவது, நோய்

நொடிகளுக்குக் காரணம் கடவுளை மதிக்காமை போன்றவை இந்தியத் தத்துவங்கள் கூறும் கருத்தாகும். இல்லறம், துறவறம் என்பதையும் தத்துவம் கூறுகின்றது.

தமிழகத் தத்துவங்கள் சைவ-வைணவ சமண-பௌத்த தத்துவக் கருத்துக்களைப் பற்றி அதிகம் பேசுகின்றன. காலப்போக்கில் இம்மதங்களின் கொள்கைகள் தமிழகத் தத்துவங்களாக மாறிவிட்டன. ஐம்பெருங்காப்பியங்களில் இடம்பெறும் நிலையாமை, கடவுள் மறுப்பு, சமயச்சடங்குகளுக்கு முதன்மை தராமை இவையாவும் தமிழகத் தத்துவங்கள் என்றாகிவிட்டன.

இயல்-2

தமிழ்ப் புதுக்கவிதைகளில் தத்துவச் சிந்தனைகள்

இயல்-2
தமிழ்ப் புதுக்கவிதைகளில் தத்துவச் சிந்தனைகள்

'தத்துவம்' என்ற சொல் கோட்பாடு, குறிக்கோள், கொள்கை என்ற பல்வேறு பொருளைக் கொண்டிருக்கிறது. தான் கருதிய ஒன்றினை முடிப்பதற்கு எந்த இடையூறு வந்தாலும் அதனை எதிர்கொண்டு, கொண்ட கொள்கையை விடாமல் இருப்பது தத்துவமாகும். புதிய நெறிமுறைகளை உருவாக்கி அதனைத் தன்முனைப்புடன் செயலாற்றவும் தத்துவம் பயன்படுகின்றது. தத்துவத்தை 'மெய்ஞானம்' என்றும் கூறுவர். தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே இயக்கங்கள் தோன்றின. புதுக்கவிதை படைக்கும் புதுக்கவிஞர்கள் இத்தத்துவத்தைக் கைக்கொண்டு எழுதும் நோக்கம் கொண்டவர்களாக உள்ளனர்.

தத்துவம்

'தத்துவம்' என்பது புறம் சார்ந்ததாய் அமையாமல் அகம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டு திகழ்கின்றது.

> *"தத்துவம் என்பது உண்மை பற்றிய அறிவாராய்ச்சியாகும். இதனை மெய்யியல், மெய்ப்பொருளியல் ஆகிய பெயர்களால் வழங்கும் மரபு உள்ளது. தத்துவத்தை ஆய்வு நோக்கில் அணுகுபவர்கள் அதனை அளவையியல் (தர்க்கம்), அழகியல், அறவியல், மீபௌதிகம்* (Meta Physics) *ஆகிய ஐந்து பகுதிகளைக் கொண்ட அமைப்பாகக் காண்பர்"*[1]

என்கிறார் ஞானி.

தத்துவம் பொதுப்படையான, அதேசமயம் மிகவும் முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகளைக் கிளப்புகிறது. வாழ்க்கை, அறிவு இவற்றின்

---

1. ஞானி, இந்தியாவில் தத்துவம் கலாச்சாரம், ப.2.

பலவகைப்பட்ட துறைகள்பால் மனிதனது அணுகுமுறையை நிர்ணயிப்பவை இவை. இந்தப் பிரச்சினைகளுக்கு மிகமிக வெவ்வேறான, சில சந்தர்ப்பங்களில் ஒன்றை ஒன்று நிராகரித்துவிடுகிற விடைகளைத் தத்துவவாதிகள் அளித்து வந்திருக்கிறார்கள்.

தத்துவம் என்பது செயற்கை விதிகளால் இயக்கப்படும் வாழ்க்கையைவிட இயற்கையில் தாமாக இயங்கும் அகமனத் தொடர்புடையது. அனைத்துச் செயல்களும் பிறரால் இயக்கப்படாமல் தானே தனித்து இயக்கவல்ல செயல்பாடுகளின் விளக்கங்கள் தத்துவமாகும்.

> *"தத்துவம் என்பது நம்மைச் சுற்றி நிலவும் யதார்த்தம் பற்றி முழுமையாகவும் மனிதனால் அது அறியப்படுதல் பற்றியும் உள்ள கருத்துக்களின் தொகுப்பாக விளங்குகிறது. பல்வேறு சமூகவர்க்கங்கள் குழுக்களின் நலன்களைத் தத்துவம் வெளியிடுகிறது."*[2]

உலகில் நிரந்தரமானது, இறுதியானது, புனிதமானது என்று எதுவும் கிடையாது. இயற்கை, சமூகம், மனிதசிந்தனை உள்ளிட்ட அனைத்தும் வளர்ச்சியடைகின்றன; மாறுதல் அடைகின்றன; மீண்டும் வளர்ச்சியடைகின்றன.

> *"தத்துவத்தின் முதன்மையான நோக்கம், மனித வாழ்வுக்கு அர்த்தம் சொல்வதாகத் தான் இருக்க முடியும். நான் யார் என்று தொடங்கி தொடர்ந்து எழும் பல கேள்விகளுக்கும் மாறுபட்டு வரும் வரலாறு மற்றும் பொருளியல் சூழலுக்கும் ஒத்தமுறையில் விடை காண்பதுதான் தத்துவத்தின் வரலாறாகவும் அமைகிறது"*[3]

என்பார் ஞானி. உலகில் உள்ள அனைத்தும் தனித்தனியானவை அல்ல. அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவை. உலகம் என்பது முழுமையானது. இதில்

---

2. தத்துவம் தொடக்கப் பயிற்சி நூல், ப.10.
3. ஞானி, மு.நூ., ப.1.

உள்ள ஒவ்வொரு துகளும் எண்ணற்ற தொடர்புகளைக் கொண்டவை எனினும் பொருள்களுக்கு இடையே முரண்பாடுகளும் உள்ளன. இதில் முக்கியமானது எதுவெனில், ஒவ்வொரு பொருள்களுக்கும் உள்ளே வளர்ந்துவரும் சக்திகளும் இருக்கும். தேய்ந்து கொண்டிருக்கும் சக்திகளும் இருக்கும். புதிதாக உருவாகும் சக்திக்கும் அழிந்து கொண்டிருக்கும் சக்திக்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கின்றன.

தத்துவம் - விளக்கம்

புதியன காணவேண்டும் என்ற ஆர்வத்துடிப்பு, மூலகாரணம் பற்றிய சிந்தனை ஆகியவற்றைத் தத்துவம் என்று சான்றோர் கருதினர். உலகியல் பற்றிய பகுத்தறிவுச் சிந்தனைகளும் வாழ்க்கை நடைமுறை பற்றிய கருத்துரைகளும் தத்துவத்தின் பாற்படும்.

> *"தத்துவம் என்னும் சொல் அதன் மெய்த்தன்மை என்னும் பொருளைத் தருவதாகும். சில இடங்களில் அது அச்சொல் கருவி என்னும் பொருளைத் தரும்"*[4]

என்று வாழ்வியற் களஞ்சியம் விளக்குகின்றது. தத்துவம் பற்றி ஜார்ஜ் பொலிட்ஸர்,

> *"எவற்றை எல்லாம் நடைமுறையில் மெய்ப்பித்துச் சாதிக்க விரும்புகிறோமோ அவற்றைப் பற்றி நாம் பெற்றிருக்கும் ஞானம் தான் தத்துவம்"*[5]

என்பார்.

---

4. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-9, ப.796.
5. ஜார்ஜ் பொலிட்ஸர், மார்க்ஸிய மெய்ஞ்ஞானம், ப.11.

உண்பதும் உறங்குவதுமாக அலைந்து திரிந்த மனிதர்கள் நாளடைவில் கூடி வாழ்ந்தனர். சமுதாய வாழ்வு மலர்ந்தது. தனது பாதுகாப்பிற்காகச் சட்டங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள் தோன்றின. அவற்றை நியாயப்படுத்துவதற்காகப் பல புதிய வழிமுறைகளையும், கோட்பாடுகளையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். சமயம் மற்றும் வாழ்வின் பல்வேறு சிக்கல்களையும் ஆராய்ந்தனர். சிக்கல்களைத் தீர்க்கும் முடிவுகளும் சிந்தனைகளுமே தத்துவங்கள் ஆயின. ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்டு தத்துவ விளக்கத்தை,

> *"தத்துவம் என்ற சொல் தத்+துவம் எனப் பிரிக்கப் பெறும். இதில் வரும் 'தத்' என்பது அதன் தன்மை என்றாகும். இதன் தன்மை என்பது உண்மையின் தன்மையாகும்"*[6]

என்பர் சோ.ந.கந்தசாமி. உண்மையை அறிதல் என்று பொருள்படும் தத்துவமானது நுண்ணிய உண்மைகளை எடுத்துக்கூறுகின்றது. இதனை,

> *"தத்துவம் என்றால் புரியாத - புரிந்துகொள்ள முடியாத புதிரன்று அல்லது விளங்காத விளக்க முடியாத ஒன்றன்று. கடவுள் பற்றிய உண்மைகளைப் பேசுவதும் எழுதுவதும் 'தத்துவம்' என்று கூறும் தகுதியுடையது என்று காலப்போக்கில் பொருள் கற்பிக்கப்பட்டுவிட்டது. தத்துவம் என்பது புனிதமான ஒன்றாகப்பட்டுவிட்டது"*[7]

என்கிறார் கோ.தான்யா.

கடவுள் கோட்பாடு ஒன்றே தத்துவமாகாது. உலகில் உள்ள நுண்ணிய அறிவுசார் கொள்கைகள் அனைத்தும் தத்துவங்கள்தான். இதில் முரண்பாட்டுக்

---

6. சோ.ந. கந்தசாமி, தமிழும் தத்துவமும், ப.1.

7. கோ.தான்யா, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம், ப.20.

கோட்பாடுகள் எல்லாம் தத்துவத்திற்குள் அடங்கி இருக்கும். தத்துவக் கருத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் காரண, காரியத் தொடர்பு இருத்தல் அவசியமானதாகும். தலைமுறைகளுக்கிடையே வாழ்க்கையில் அமைப்புமுறை மாறிக்கொண்டே செல்வதுபோல் தத்துவமும் மாறுபடுகிறது; மாறுபட வேண்டும் அவ்வாறு மாறாமல் பழமை பேசும் தத்துவத்தால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை.

> *"சமூகப் பயன்பாட்டு நிலையில் நோக்கும்போது தத்துவம் என்பது ஒருவர் தன்னையும் தன் சூழலையும் பற்றி உருவாக்கிக் கொள்ளும் கருத்து நிலைக்கு அடிப்படையான பார்வை எனலாம். இந்தப் பார்வையே அவரது நடத்தை, சமூக அரசியல் செயற்பாடு, கலையுணர்வுசார் வெளிப்பாடு ஆகியவற்றை உருவாக்கி நெறிப்படுத்தி நிற்பது. இவ்வகையில் ஒரு முழுநிறைவான தத்துவம் என்பது பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துவதாக அமைய வேண்டும். அவை உயிர்நிலை, உணர்வுநிலை, அனுபவங்கள், நடத்தை, வாழ்வியல், சமூக உறவு நிலை, உலகம் (இயற்கை சூழல்) உலகிற்கு அப்பாலான நிலை"*[8]

இவற்றைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பர் ஞானி.

தத்துவார்த்த செயல்பாடுகள் யாவும் முடிவுற்றன. ஒருவரைவிட்டு ஒருவர் மாறிக்கொண்டு, செல்லும் தன்மை படைத்தன. அவரவருக்கென்று தனிப்பட்ட எண்ணங்கள் உருவாகினாலும், அதை வேறு ஒருவர் உடன்பாடு பின்பற்றினாலும் அதனைத் தத்துவமாக உலகம் ஏற்றுக்கொள்ளும் பழமைத் தத்துவமாயினும், புதுமைத்தத்துவமாயினும் ஒருவர் தான்கொண்ட கொள்கை அல்லது கோட்பாட்டில் இருந்து பின்வாங்காமல் இருப்பதே தத்துவ நிலைப்பாட்டிற்கு காரணமாகும்.

---

8. ஞானி, மு.நூ., ப.2.

> *"தத்துவமானது ஒரு குறிப்பிட்ட வகை உலகக் கண்ணோட்டமாகும். அது உலகையும், மனிதனையும் பற்றிய கருத்தாக்கமாகும். இவ்விரண்டையும் பற்றிய அறிவாகும். இவ்வறிவைப் பொதுமைப்படுத்துகிற சிறப்பான முறையாகும். கிடைக்கக்கூடிய விவரங்களைக் கூடுமானவரை பொதுமைப்படுத்துவது மட்டுமல்ல தத்துவத்தின் பணி. தத்துவ வகையில் பொதுமைப்படுத்துவது என்பது தவிர்க்க இயலாமல் போய்விட்டது"*[9]

என்று எஸ்.வி.ராஜதுரை விளக்குகின்றார்.

உலகளாவிய தத்துவத்தைப் பல்வேறுபட்டோரும் மெய்ஞ்ஞானம் என்று கூறுகின்றனர். மெய்ஞ்ஞானம் என்பது உண்மை அறிவு. அறிவு என்ற நுட்பம் பொருளை உணர்த்தவல்லதாகும். எந்தத் துறை சார்ந்த தத்துவ அறிஞரும் உண்மை அறிதலை மையமிட்டே தத்துவங்களை வளர்த்துள்ளனர். அறிவியல், ஆன்மிகம், உளவியல், சமூகவியல், அமைப்பியல் என்று இன்னும் பல தத்துவ கோட்பாட்டாளர்கள் உண்மைநிலையை உணர்த்துவதையே தத்துவம் என்று வரையறுத்துச் செல்கின்றனர்.

> *"தத்துவம் என்றாலே மெய்ஞானம்-மெய்யறிவு என்பதாகும். 'ஞானம்' என்றால் ஏதோ அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஊசலாடிக்கொண்டிருக்கும் கருத்து வந்து மனத்தில் புகுந்துகொண்டதாக அதனால் அவன் ஞானியாகி விட்டதாகக் கூறி வருகின்றனர்"*[10]

என்கிறார் கோ.தான்யா.

---

9. எஸ்.வி.ராஜதுரை, எக்சிஸ்டென்ஷியலிசம், ப.5.
10. கோ.தான்யா, மு.நூ., ப.23.

'ஞானம்' பெற்றுவிட்டேன் எனக்கு எல்லாம் தெரியும் என்ற 'மமதை'தான் இன்றைய ஞானியரிடத்தில் நிலைத்துள்ளது. கலை, அறிவியல், ஆன்மிகம் சார்ந்தவர்களிடத்தில் தன் துறையில் எல்லாம் தெரிந்த ஞானியர் என்ற போக்கை அக்கறை கொண்டவர்களிடம் இத்தகைய ஞானப்போக்கை காண்பது அரிது.

உலகத்தத்துவங்கள்

உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை அடியொற்றி தோன்றிய தத்துவங்களை உலகத்தத்துவம் எனக் கூறலாம். இவை அரசியல், அறிவியல், ஆன்மிகம், பெண்ணியம் போன்ற கோட்பாடு அடிப்படையிலான தத்துவங்கள் என்றும் கூறலாம். பிரச்சினைகள் முடிவுற்றன. உலகம் முழுவதும் பரவி இருக்கும் பொதுவான சிக்கல்களுக்குத் தீர்வை கண்ட தத்துவங்களில் மார்க்சியம், சமதர்மம், பொதுஉடைமை, சோஷலிஸ்ட் அகிம்சை, காந்தியம், கற்பனாவாதம் போன்ற எண்ணற்ற தத்துவங்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளன. இவற்றின் கருத்துக்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளமைக்குக் காரணம் மக்களின் தனிப்பட்ட பிரச்சினைகள், மற்றும் பொது வாழ்வில் ஈடுபட்டோரின் அக்கறை உணர்வு ஆகியவையே ஆகும். ஏற்றத்தாழ்வு, மதம், விவசாயம், தொழிலாளி-முதலாளி பிரச்சினைகள், கூலி, அறிவியல், ஆதாயம், இயற்கை, கடவுள் கோட்பாடு, நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், இலக்கியம், தர்க்கம், உளவியல் சார்ந்த பிரச்சினைகள் இவையாவும் உலகம் முழுவதும் பரவியுள்ளன. இதனை அடியொற்றி தோன்றிய தத்துவங்கள், இயக்கங்களாகச் செயல்பட்டு வருகின்றன. உலகத்தத்துவம் பற்றி,

> *"உணர்வுக்கும் இருத்தலுக்கும் ஆன்மாவுக்கும் இயற்கைக்கும் இடையே நிலவும் உறவு பற்றிய பிரச்சினை தத்துவத்தின் அடிப்படை பிரச்சினையாக விளங்குகிறது. இயற்கையையும், சமுகத்தையும், மனிதனையுமே பற்றிய தத்துவம் கண்ணோட்டத்தையும் நிர்ணயிக்கும் மற்ற எல்லாப்*

பிரச்சினைகளையும் தெளிவுபடுத்தவது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையே முடிவில் பொறுத்திருக்கிறது"[11]

என்கிறது தத்துவம் குறித்த நூல். சித்தாந்தம், வேதாந்தம், தத்துவம் இவை எல்லாம் ஒரு சில மாற்றங்கள், முரண்பாடுகள் கொண்டவை. இவற்றின் முடிவும், ஒன்றாகவே காணப்படும்.

"சித்தாந்தம் முடங்கியுள்ள வரையறைகளில் இருந்து விலகி அல்லது அந்த வரையறைகளை உடைத்து தத்துவம் பிரச்சினைகளைப் பார்க்கிறது. சித்தாந்தத்தின் பார்வை எல்லையைவிட தத்துவத்தின் பார்வை எல்லை விரிவுடையது. முற்றான விரிவு என்று இதனைக் கூறிவிட முடியாது. தத்துவம் சித்தாந்தமாக இறுகும். பிறகு, புதிய பிரச்சினைகளைக் கண்டு தன்னை உடைத்துக்கொண்டு தத்துவமாகும் அல்லது முதலில் சித்தாந்தமாக இருந்து புதிய பிரச்சினைகள் வரும்போது இறுகத்தொடங்கி மேலும் இறுகமுடியாமல் தன்னைத் தகர்த்துக் கொண்டு தத்துவமாகும்"[12]

என்கிறார் ஞானி.

வேதாந்தம், சித்தாந்தம், தத்துவம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை அல்ல; வெவ்வேறானவை. ஆனால் நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் வேற்றுமை குறைந்தே காணப்படும். உலகளாவிய தத்துவத்தைப் பல்வேறுபட்டோரும் மெய்ஞானம் என்று கூறுகின்றனர். மெய்ஞானம் என்பது படைப்புக்களில் வலிந்து இயற்றப்படுவதன்று. படைப்பாளியின் படைப்புக்களில் இவை எதார்த்தமாகச் சுட்டப்படுகின்றன.

---

11. **தத்துவம் தொடக்க பயிற்சி நூல், ப.12.**

12. **ஞானி, மார்க்சியமும் தமிழ் இலக்கியமும், பக்.395, 396.**

"சிந்திக்கும் இயல்பு வாய்ந்த மனித மனதிலிருந்து பிறக்கும் கருத்துகள் கணக்கற்றவை. வாழ்க்கையின் பலவித அம்சங்கள் அவனைப் பாதிப்பதால் அந்தந்தத் துறைகளுக்கான கருத்துகள் அவ்வப்போது அவனுக்குள் உருவாகின்றன. அந்தக் கருத்துகளை அவன் நடைமுறையில் கடைபிடித்து பரிசீலித்து பலாபலன்களை வைத்து அவற்றிற்கு ஏற்ற ஒரு கொள்கையை வகுத்துக் கொள்கிறான். பிறகு அந்தக் கொள்கை அங்கீகாரம் பெற ஏதாவது அடிப்படைகளை வகுத்துக் கொள்கிறான். அப்போது அது ஒரு தத்துவமாக ஆகிவிடுகிறது"[13]

என்று சி.சு.செல்லப்பா அவர்கள் படைப்புக்களில் தத்துவம் ஒளிர்வதைக் குறிப்பிடுகின்றார். படைப்புக்களில் இடம்பெறும் கருத்துக்களின் கொள்கைப் பிடிப்புகள் தத்துவமாகி விடுகின்றன. சீனத்தத்துவத்தில்,

"தத்துவம் என்பது பேரண்டம், பரம்பொருள் பற்றிய ஆய்வுதான். தனிப்பட்ட குறிப்பிட்ட தோன்றி மறைந்துவிடும் வடிவங்களை எடுக்கிற தோற்றமும் முடிவுமற்ற என்றுமுள்ள உண்மை பற்றிய ஆய்வுதான் என்கிற கருத்தைச் சீனத்தின் தாவோயிசமும் இந்தியத் தத்துவப்போக்குகள் சிலவும் முன்வைத்தன"[14]

என்று சீனத்தின் தாவோயிசத் தத்துவத்தை இந்தியக் கோட்பாட்டோடு எஸ்.வி.ராஜதுரை ஒப்பிட்டுள்ளார். இதனை அடிப்படையான கருத்தாகக் கொண்டு ஒவ்வொரு நாட்டுத் தத்துவங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பதை அறியமுடிகின்றது.

<u>தத்துவக்கூறுகள் பற்றிய பொதுக்கருத்துகள்</u>

எளிதில் எவரையும் சூழும் வெறுமைத் தத்துவம் பல பேசும். தத்துவங்களை உள்ளடக்காத மதம், நாடு, அரசியல், தனிமனிதன் என எவையும்

---

13. சி.சு.செல்லப்பா, படைப்பியல், ப.1.

14. எஸ்.வி.ராஜதுரை, மு.நூ., ப.1.

இல்லை. ஒவ்வொரு கூறுகளிலும் இயற்கையின் ஆற்றலும் தத்துவத்தின் வெளிப்பாடும் காணப்படுகின்றன. இதனை நாம் நோக்கும்போது கண்களால் புலப்படாது. இவற்றைக் கருத்துகள், உணர்வுகளால் அறியமுடிகின்றது.

> *"ஒரு நல்ல கலைஞன் தனது படைப்பில் தத்துவத்தை வலியப் புகுத்துவதில்லை. வாழ்க்கையின் பிரமாண்டமும் அதில் அவனுடைய பங்கும் சார்பும் தத்துவத்தின் அம்சங்களை அவனுடைய படைப்பில் உள்ளார்ந்த ஒன்றாக மிக இயல்பாக ஆக்கிவிடுகின்றன"*[15]

என்ற கருத்து தத்துவப் படைப்புக்களில் இயல்பான ஒன்றாக உள்ளதை உணர்த்துகின்றது. தத்துவத்தின் வரலாற்றைக் கூறும் வாழ்வியற் களஞ்சியம்,

> *"வாழ்க்கையில் நிகழும் உண்மையின் தன்மைகளைத் தத்துவம் எனலாம். இறைவன் தத்துவங்களாகவும் (மூலப்பொருளாகவும்) அவற்றைக் கடந்தவனாகவும் தத்துவங்கள் அறிந்த அடியார்கள் தொழப்படுவனாகவும் திகழ்கின்றான் என்பதைத் தத்துவங்கள் ஆனான் தன்னை (609) 'தாயவன் காண் (481) தத்துவத்து அடியார் தொழும் பெம்மான் திறம் (989) என வரும் அப்பர் பாடல்கள் தெளிவுறுத்தும்"*[16]

என்கிறது. இதுபோன்ற தத்துவத்தின் தோற்றங்களைப் பல சமய இலக்கியங்களும் பறைசாற்றுகின்றன.

தத்துவங்கள், உயிர் உள்ளவை, இறைவன், உயிர், உலகம் இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டவை. வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் மனிதன் இம்மண்ணில் வாழ வேண்டிய முறைகளைக்

---

15. ம.நடராசன், மு.மதியழகன் சிற்பியின் படைப்புலகம், ப.139.
16. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி.9, ப.796.

கூறுகின்றன. இவை இறைத்தத்துவம் பற்றியும் அழியும் உலகத்தைப் பற்றியும் அழியாத உயிரைப் பற்றியும் விளக்கமாகக் கூறுகின்றன.

> *"நமது கண்ணுக்குப் புலனாகும் நீர், நிலம், காற்று, வான், தீ, உலகம் இவையனைத்தும் காட்சிக்குப் புலப்படுபவை. எனவே இவை காணப்படும் இவ்வுலகம் காணப்படாத மூலப்பொருளிலிருந்து உற்பத்தியாகின்றன. அதுவே இறைவன்"*[17]

என்று கி.இலட்சுமணன் கூறுகின்றார். இறைவெளிப்பாடானது பலதரப்பட்டதாக இருக்கக்கூடும். ஆனாலும் இவையனைத்தும் மெய்ப்பாடுகளின் தோற்றங்கள் ஆகும்.

இந்தியத் தத்துவங்களின் வரலாறானது அதன் தொடக்க நிலையில் அதாவது கி.மு.5-6ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியிலே 'சமூகத்தின் உலகியல் சார் துன்ப துயரங்களுக்கு விடை நாடும் இயல்பான சமூக அக்கறை, அறிவுசார் தேடல் விளக்கம் ஆகியவற்றினூடாக ஊற்றெடுத்தது. நாளடைவில் அது மரபுசார் நம்பிக்கைகள் தர்க்கவாதத்திறன் ஆகியவற்றின் புகலிடமாக – பயில்களமாக – மாற்றம் எய்தியது. இந்தியத் தத்துவமானது சமூக அக்கறையினின்று பெருமளவு விலகி விட்டது. உபநிடதங்களின் சிந்தனைகள், சமண, பௌத்த சிந்தனைகள் என்பனவற்றிற்கும் அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் முதலியனவாக அமைந்த தத்துவங்களுக்கும் இடையில் உள்ள முக்கிய வேறுபாடாக தர்க்கமும் மரபுசார் நம்பிக்கைகளும் திகழ்கின்றன.

---

17. கி.லக்ஷ்மணன், இந்தியத் தத்துவ ஞானம், ப.15.

எல்லாக் காலத்திற்கும் ஏற்றாற்போல ஒழுங்கமைவுடன் காணப்படும் தத்துவத்தைப் பலரும் பின்பற்றுகின்றனர். தத்துவங்கள் பின்பற்றப்படுவதற்குச் சமுதாயமும் மக்களின் மனநிலையும் காரணமாக அமைகின்றன.

> *"மனிதன் தன் வாழ்க்கையை – இனிதாக்குவதற்கு உலகிலுள்ள பொருட்களை எவ்விதமாகப் பயன்படுத்தலாம் என்றும் இந்த வாழ்க்கையும் இந்த உலகமும் எதற்காக என்பதை அறிவதும் தத்துவ ஞானமாகும்"*[18]

என்கிறார் கி.லக்ஷ்மணன்.

இயற்கை நிகழ்ச்சிகள், இயக்கப் போக்குகளின் மாற்றங்கள் இவற்றைக் கண்டு வியப்புற்ற பண்டைய மனிதன், உயிரினங்களின் தோற்றம், உலகத்தின் தோற்றம், இயற்கை இயக்கங்கள் இன்னபிற பற்றிய கேள்விகளாலும் ஐயப்பாடுகளாலும் உண்மை அறியும் விளைவால் தோன்றியது தத்துவமாகும்.

தத்துவம் நேர்மறை, எதிர்மறை என்ற இரண்டு தளங்களில் இயங்குகின்றது. 'கருத்து முந்தியது; பொருள் பிந்தியது' என்ற கொள்கைக்கு இடையே நடந்த போராட்டத்தின் விளைவே இரண்டு பெரிய தத்துவங்களின் தோற்றமாகும். இந்த இருவேறு துருவக் கொள்கையரிடையே நடந்த போராட்ட வரலாற்றில், கருத்து முதல்வாதிகள் 'ஆத்திகர்' என்றும், பொருள் முதல்வாதிகள் 'நாத்திகர்' என்றும் அழைக்கப்பட்டனர்.

> *"தத்துவமானது, வாழ்க்கையின் பிரபஞ்சத்தின் (அண்டகோளம்) இயற்கையின் மாற்ற நிலைகளை, வளர்ச்சி நிலைகளை எடுத்துக்கூறும் உண்மையறிவுக் கருத்தாக இருப்பதன்றி*

---

18. கி.லக்ஷ்மணன், மு.நூ., ப.15.

மாற்றுதற்கு—வளர்ப்பதற்குத் துணைபுரியும் துணைக்கருவியாகவும் திகழ வேண்டும்"[19]

என்கிறார் கோ.தான்யா.

உள்ளும் புறமும் திகழும் உண்மைகளின் வெளிப்பாடு மட்டுமின்றி நடப்பியல் உண்மைகள், பின்பற்றத்தக்கனவாய்த் திகழும் கொள்கைகளின் கருவூலம் தத்துவமாகும். எல்லாமாகி இருக்கும் பொருள்களுக்குள் நிறைந்திருக்கும் உண்மைகளை வெளிக்கொணர்ந்து அவற்றை நிலைபெறச் செய்வதில் தத்துவத்தின் பங்கு உண்டு. முழுமையான கருத்து தன்னைப் புறவயப்படுத்துகின்றது; வெளிப்படுத்துகின்றது. முழுமையானகருத்து முதலில் தன்னைச் சடப்பொருளாகவும் (பௌதீக, இரசாயன உலகம்) பின்னர் உயிரினங்களாகவும் (தாவர, விலங்கு உலகம்) அதற்கும் பின்னர் மனித வாழ்வாகவும் (மனம், வரலாறு) புறவயப்படுத்திக் கொள்கிறது.

"*தத்துவம் என்றாலே உலகைக் கடந்த அபூர்வ உண்மையை அறிவதும் அதனோடு ஒன்றிணைந்த அனுபூதி நிலையை எட்டுவதும்*"[20]

என்று ந.முத்துமோகன் கூறுகிறார்.

"*உலகப் பொருள்கள் எந்த அளவிற்கு மூலக்கருத்துக்களைப் பாவிக்கின்றனவோ, அந்த அளவிற்கு அவை முழுமை பெறுகின்றன. உலகப் பொருள்கள் மூலப்பொருள்களின் பிரதிபலிப்பு. அவை மூலக்கருத்துகளில் முழுமையற்ற வடிவங்கள், பிரதிகள், முயற்சிகள், முழுமையை நோக்கிய முயற்சிகள், உலகப்பொருட்கள் மூலக்கருத்துகளின் நிழல்கள் நித்தியத்தின் அநித்திய வடிவங்கள் அவை*"[21]

---

19. கோ.தான்யா, மு.நூ., ப.24.
20. ந,முத்துமோகன், சமூகவியல், ப.20.
21. கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம், ப.62.

என்று கிரேக்கத் தத்துவஞானி எய்டோஸதின் கருத்தைக் கண்ணதாசன் எடுத்தாண்டுள்ளார்.

மனிதன் பிறந்தது முதல் தத்துவத்தில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றான். தனக்கொரு பாதை என்று வகுத்துக்கொண்டு வாழ்பவனும் தத்துவவாதி. பிறருக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்பவனும் தத்துவவாதி.

> *"வாழ்க்கை சகலதுறைகளிலும் உண்மைகளைத் தேடுவது அக்கினிப் பரிட்சைக்கு நம்மை ஆளாக்கிக் கொள்வதாகும். அந்த சோதனை கேட்டு நிற்கும் தியாகங்களை நம்மால் அளிக்க முடியுமா? ஆனால் ஒவ்வொருவராலும் தன்னால் முடிந்த மட்டும் உண்மையின் முகங்களை இனம்கண்டு கொள்ள முடியும். முடிந்த மட்டும் உண்மையான பக்கத்திநின்று குரல் கொடுக்கலாம். அதன்மூலம் நம் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தைத் தேடிக் கொள்ளலாம்"*[22]

என்று வாழ்க்கை பற்றிய தத்துவத்தை எடுத்துரைக்கும் சுந்தரராமசாமி தத்துவம் என்பது 'உண்மை அறிதல்' என்பதை உணர்த்துவதாக அமையும் என்ற அறிஞர்கள் கருத்தை மெய்ப்பிக்கின்றார்.

<u>தத்துவவியலாளர்கள்</u>

காலந்தோறும் தத்துவஞானிகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றார்கள். ஆரியப்பட்டா, பாஸ்கரா, தொடங்கி கலிலியோ, சாக்ரடீஸ், அரிஸ்டாடில், பெர்னாட்ஷா, புத்தர், மகாவீரர், நபிகள், இயேசுபிரான், பன்னிரு ஆழ்வார்கள், நாயன்மார்கள், திருமூலர், திருவள்ளுவர் மற்றும் பல்வேறு இலக்கிய, இலக்கண ஆசிரியர்கள் என்று எண்ணிலடங்காத் தத்துவஞானிகள் தோன்றியுள்ளனர். துறைதோறும் பலர் இருந்தாலும், சமூக அக்கறை கொண்டு தனிமனித வாழ்வு,

---

22. சுந்தரராமசாமி, காற்றில் கலந்த பேராசை, ப.276.

பொதுமக்கள் நலன் இவற்றைச் சிந்தித்த மனிதர்களின் தத்துவங்களே உலகில் நிலைத்த இடம்பெற்றுள்ளன.

பிளாட்டோ, தத்துவம் பற்றிக் கூறும்போது,

> "மெய்யியல் என்பது பிளாட்டோ சொல்வதுபோல வெகு அணுக்கமான உவகை; பணிவுள்ள நன்னடத்தை பிறழ்ந்த உண்மை என்பதில் நாட்டம் இருக்கும்போது, அது மாம்ச இச்சைகளோடும், இவ்வகிலத்தின் இன்பத்துளிகள் ஆகியவற்றோடும் ஒப்பீடு செய்ய இயலாத அளவுக்கு உயர்ந்து வெகு மகிமையுள்ளதாகத் தோன்றும்"[23]

என்று கூறுகின்றார். அதாவது அன்பு, உண்மை சார்ந்த கூறுகளின் வெளிப்பாடு தத்துவம் என்கிறார்.

> "மெய்ம்மை, இருப்பு, அறிவு, விழுமியங்கள், பகுத்தாய்வு, மனம் மற்றும் மொழி ஆகியவற்றோடு தொடர்புடைய பொதுவான மற்றும் அடிப்படையான பிரச்சினைகளைக் குறித்த கல்வியே மெய்யியல் ஆகும்"[24]

என்று 'wikipedia' இணையதளம் விளக்கம் தருகின்றது. தமிழில் மட்டுமின்றி உலகம் தழுவிய சொல்லாடலாகத் தத்துவம் பேசப்படுகின்றது. இதனை ஆங்கிலத்தில் 'Philosophy' என்று அழைக்கின்றோம். ஆனால் Philosophy என்பது ஆங்கிலச் சொல் அன்று.

---

23. Will Durant, The story of Philosophy Introduction, p.1. (*When philosophy, was in fact what plato calls it that dear delight; when the love of a modesty elusire truth seemed more glorious incomparably, than the hust for the ways of flesh and the drops of the world*)

24. Wikipedia இணையதளம். (*Philosophy is the study of general and fundamental problems, such as those connected with reality, existence, knowledge, values reason, mind and language*)

"கிரேக்கமொழி வார்த்தையாகிய 'ஃபிலாஸபியா' (ஞானத்தில் நாட்டம்) என்ற வார்த்தையிலிருந்து வந்ததே 'ஃபிலாஸஃபி' (Philosophy) என்ற வார்த்தையாகும். வெகு இயல்பான பேச்சு வழக்கில், ஒரு தனிப்பட்ட மனிதன் தன்னிடம் தக்க வைத்துக் கொண்டிருக்கும் நம்பிக்கைகளே 'ஃபிலாஸஃபி' (மெய்யியல்) என்று குறிக்கப்படும்"[25]

என்பதன்மூலம் கிரேக்கச் சொல்லில் இருந்து 'Philosophy' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

மேலைநாடுகளில் எத்தனையோ தத்துவவாதிகள் தோன்றியுள்ளனர். எனினும் பலரது இயக்கச் சிந்தனைகள் போதுமான பலனைச் சமூகத்திற்குத் தரவில்லை. சமூகத்தின் வளர்ச்சிப் பாதைக்குக் காரணமாக இருந்த இயக்கங்கள் மக்களால் பெரிதும் பேசப்பட்டன. அதனை உருவாக்கிய கோட்பாட்டாளர்களும் தத்துவஞானிகளாகத் திகழ்ந்தனர்.

மேலைநாட்டில் தோன்றிய மார்க்சியம், இந்தியாவில் தோன்றிய காந்தியம், தமிழகத்தில் தோன்றிய பெரியாரியம் என்ற மூன்று பெரும் இயக்கங்களால் மக்களிடம் எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் தோன்றியது.

காரல்மார்க்சின் மார்க்சியமும் மகாத்மா காந்தியடிகளின் காந்தியமும், தந்தைப் பெரியாரின் பெரியாரியமும் ஒன்றுக்கொன்று உடன்பாட்டுத் தத்துவக் கருத்துக்களையும் பல வேறுபட்ட தத்துவக் கருத்துகளையும் கொண்டுள்ளன.

---

25. மேலது. (*The word 'Philosophy' comes from the Greek (Philosophia), which literally mean 'Love of wisdom'. In more casual speech the 'Philosophy' of a particular person can refer to the beliefs held by that person*)

'தத்துவம்' என்பதைப் பொறுத்தவரையில் விஞ்ஞானம், ஆன்மிகம், அரசியல் என்று விளங்கும் பலதரப்பட்ட துறைகளில் உண்மை தேடல் என்பதை மையமிட்டதாக விளங்குகின்றது.

'தர்க்கம்' அல்லது 'வாதம்' என்ற சொல் தத்துவத்திற்குப் பெரிதும் பயன்படக் கூடியச் சொல். அந்த வகையில்,

1. கருத்து முதல்வாதம்
2. ஆன்மிக வாதம்
3. ஐயுறவு வாதம்
4. ஊழ்வலி வாதம்
5. இயற்பண்பியல் வாதம்
6. பழமை வாதம்
7. முதுமரபு மீட்சிவாதம்
8. லோகாயத வாதம்
9. பொருள் முதல்வாதம்
10. இயந்திரவியல் பொருள் முதல்வாதம்
11. இயக்கவியல் பொருள் முதல்வாதம்
12. வரலாற்றுப் பொருள் முதல்வாதம்
13. சீர்திருத்த வாதம்
14. பகுத்தறிவு வாதம்
15. அழகியல் வாதம்
16. உருவ வாதம்
17. இருண்மை வாதம்
18. எபிகூரிய வாதம்
19. சிற்றின்பவாதம்
20. ஃப்ராய்டிய வாதம்
21. தனிநபர் வாதம்
22. இருப்பியல் வாதம்
23. மிகை எதார்த்தவாதம்
24. கற்பனாவாத சோஷலிசம்
25. எதார்த்த வாதம்
26. விமர்சன எதார்த்தவாதம்
27. சோஷலிஸ்ட் எதார்த்தவாதம்

என்ற வகைகளை ந.பிச்சமுத்து வரிசைப்படுத்துகின்றார்.

1. கருத்து முதல்வாதம்

'ஐடியலிசம்' என்பதைக் கருத்து முதல்வாதம் அல்லது கற்பனைவாதம் என்பர். பருமையாகவும் நுண்மையாகவும் இருக்கின்ற பொருள்களுக்கு

அப்பாற்பட்ட உணர்வு அல்லது எண்ணம் அல்லது கருத்து முதன்மையானது என்ற கொள்கையை வலியுறுத்துவது கருத்து முதல்வாதம்.

கருத்து முதல்வாதம் கொள்கைகளைக் கூறுவதில் இந்திய வேதாந்தங்களும் சீனநாட்டுக் கன்ஃபியூசியஸ் கொள்கைகளும் மிகப் பழமையானவை.

2. ஆன்மிக வாதம்

உலகம் தோன்றியது கடவுளின் செயல் என்று ஆன்மிக வாதிகள் கூறுவர். வேறு சில ஆன்மிகவாதிகள் மனித உணர்வின் பொய்த்தோற்றமே இவ்வுலகம் என்பர். புது உலகத் தத்துவவாதிகள் கருத்து முதல்வாதத்தை ஆன்மிகவாதம் என்றும் குறிப்பிடுவர்.

3. ஐயுறவு வாதம்

பொருள்களின் உண்மையான இயல்பை அறிய முயற்சிப்பது பயனற்ற வேலை. எள்ளளவுகூட நாம் அறியக்கூடியதெல்லாம் அவற்றின் வெளித்தோற்றங்கள் மட்டுந்தான் என்பதே சம்சயவாதத்தின் அடிப்படை. உண்மைப்பொருளை அறிந்துகொள்ள முடியாத ஐயத்திற்கு உரியது ஐயுறவு வாதம்.

4. *ஊழ்வலி வாதம்* (Fatalism)

உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் இருந்துவரும் கொள்கை ஊழ்வலி வாதம். உலகில் நடைபெறும் எல்லா நிகழ்வுகளும் ஊழ் அல்லது விதியால் நிர்ணயிக்கப்படுபவை. தவிர்க்க முடியாதவை என்று விளக்குவது. வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், வறுமை, நன்மை, தீமை ஆகியவற்றிற்கு ஊழ்வினையே காரணம் எனக் கருதப்படுவது. சமண, பௌத்த, சமயங்கள் இந்துசமயப் புராணங்கள் போன்றவற்றிலும் ஊழ்வலி வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

5. இயற்பண்பியல் வாதம் (Naturalism)

இயற்பண்பியல் வாதம் என்பது 19ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் உருவான ஒரு இலக்கியக் கொள்கை. இது பால்சாக் (Balszae) என்பவரால் தொடங்கப்பட்டது. எமிலிசோலா (Emilezola 1840 – 1902) கான்கோர்ட் சகோதரர்கள் (Gonconut Brothers) ஆகியோரால் ஓர் இயக்கமாக வளர்ந்தது.

தொடக்கத்தில் மூடநம்பிக்கைகளையும், இலட்சியமயமாக்குவதையும் கண்டிப்பதாக இருந்த இயக்கக்கொள்கை, காலப்போக்கில் கற்பனைவாதக் கருத்துக்களைக் கொண்டிருந்தது.

உள்ளதை உள்ளதுபோல் காட்டும் கண்ணாடிபோல் அப்படியே காட்டுவது இக்கோட்பாடாகும்.

6. பழமை வாதம் (Primitivism)

> *" 'பிரிமிடிவிஸம்' எனப்படும் பழமைவாத இலக்கிய இயக்கம் மேலை நாடுகளில் இருபதாம் நூற்றாண்டில் வளர்த்த புதிய பாணிக்கலை இயக்கத்தில்* (Modern Art) *தோன்றிய ஒரு வகையான உருவ வாத போக்காகும்"*[26]

என்கிறார் ந.பிச்சமுத்து. பழங்காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தை மட்டும் எடுத்துக்கொண்டு அதைப் பொற்காலம் எனப் போற்றுவது இப்பழமைவாதத்தின் ஒரு கூறாகும். சர்ரியலிஸத்தின் ஒரு கூறாகப் பழமைவாதம் விளங்குகின்றது.

7. முதுமரபு மீட்சிவாதம் (Alavism)

பழங்காலத்திற்கு முந்திய முன்னோர்களின் மரபுகள் ஒரு தனிநபரிடமோ, குழுவிடமோ அல்லது இனமக்களிடமோ திரும்பவும் தோன்றுவதாகும். பழங்கால

---

26. ந.பிச்சமுத்து, இலக்கிய இயக்கங்கள், ப.24.

மரபுகள், நம்பிக்கைகள் போற்றப்பட்டு ஒரு குழுவினரிடமோ அல்லது பொதுவாக எல்லோரிடமும் போற்றப்பட்டு வந்த மரபுகள் சிறந்ததென்று கூறி பின்பற்றுவது முதுமரபு மீட்சி வாதமாகும்.

8. லோகாயத வாதம் (Lokayata)

பழங்கால இந்தியாவில் உருவான ஒருவகைப்பொருள் முதல்வாதக் கொள்கை லோகயதவாதமாகும். தமிழ்நாட்டுத் தத்துவவாதிகளாலும் வடநாட்டுத் தத்துவவாதிகளாலும் வேறுபாடு இன்றி ஒருமுகமாக மறுக்கப்படுகின்ற ஒரே தத்துவம் லோகாயதவாதமாகும். கடவுள், ஆன்மா, கர்மம், உடலைவிட்டுப் பிரிந்த உயிர் வேறு ஓர் உடம்பில் குடியேறுதல் போன்ற கருத்துக்களை லோகாயதவாதம் மறுக்கிறது.

> *“மனிதன் பெறுகின்ற அறிவுகள் அனைத்தும் புலன்களின் வழியாகப் பெறப்படுவனவே என்றும் புலன்களுக்கு அப்பாற்பட்ட உணர்வு அல்லது அறிதல் எதுவும் இல்லை என்றும் வரைவுறுத்துகிறது லோகாயதவாதம்.”*[27]

9. பொருள் முதல்வாதம் (Materialism)

‘மெட்டீரியலிசம் என்று சொல்லப்படுகின்ற பொருள் முதல்வாதம் என்பது கருத்து முதல்வாதத்திற்கு முற்றிலும் மாறுபட்ட, விஞ்ஞானப்பூர்வமாக வளர்ந்து வந்துள்ள ஒரு தத்துவக் கருத்தாகும். பொருள் முந்தியது, கருத்து பிந்தியது என்ற கொள்கை கொண்டது பொருள் முதல்வாதம்.

பொருள் முதல்வாதம் 1. இயக்கவியல் பொருள் முதல்வாதம்

2. வரலாற்றுப் பொருள் முதல்வாதம்

என்று பிரிக்கப்படுகின்றது.

---

27. ந.பிச்சமுத்து, மு.நூ., ப.28.

"இயக்கத்தில் உள்ள பொருள் இடத்திலும் காலத்திலுமின்றி வேறு எந்த வகையிலும் அசைக்க முடியாது"[28]

என்று இயக்கவியல் பொருள் முதல்வாதம் குறித்து லெனின் கூறுகின்றார்.

இயற்கை, சிந்தனை, சமுதாயம் ஆகிய அனைத்தும் அதனதன் விதிகளுக்குப்பட்டு இயங்குகிறது; மாறுகிறது என்பதே இயக்கவியல் பொருள் முதல்வாதம்.

இயக்கத்திற்கும் மாற்றத்திற்கும் உட்பட்ட இயற்கையும் சமுதாயமும் சிந்தனையும் எந்தெந்த காலக்கட்டத்தில் எப்படி மாறியது – வளர்ந்தது என்பதையும் இந்த மாற்றங்களினால் எந்தெந்த காலக்கட்டத்தில் உற்பத்தி உறவுகள், உற்பத்தி சாதனங்கள் வளர்ந்தன என்பதையும் வரலாற்று ரீதியில் பார்ப்பது வரலாற்றுப் பொருள்முதல்வாதமாகும்.

10. இயந்திரவியல் பொருள் முதல்வாதம் (Mechnical Materialism)

இயற்கை விஞ்ஞானங்களைக் காட்டிலும் இயந்திர இயக்க விஞ்ஞானம் (Mechanics) ஒன்றுதான் அதாவது பூமியின் ஈர்ப்பு சக்தி பற்றிய இயந்திர இயக்க விஞ்ஞானம் ஒன்றுதான் திட்டவட்டமான முடிவு கூறுகின்றது.

பூமியின் ஈர்ப்பாற்றல் காரணமாகவே தாவரங்களும் விலங்கினங்களும் உயிர்பெற்று வாழ்ந்து வருகின்றன என்பர். இயந்திரவியல் பொருள் முதல்வாதிகள் இந்த உலகமே கடிகாரத்தைப்போல் ஓர் இயந்திரம் என்கின்றனர்.

11. இயக்கவியல் பொருள் முதல்வாதம் (Diatectial Materialism)

அண்டத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் இயங்கிக்கொண்டே இருப்பதோடு மாறிக்கொண்டும் இருக்கின்றன. எல்லாம் தோன்றிக்கொண்டும்

---

28. வி.இ.லெனின், தொகுப்பு நூல்கள் பாகம். 14, ப.175.

மறைந்து கொண்டும் இருக்கின்றன என்பதே இயக்க இயல் பொருள் முதல்வாதமாகும். இயற்கை, வரலாறு, சிந்தனை அனைத்திலும் இயக்கமும் மாற்றமும் இருந்துகொண்டே இருக்கின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டது இயக்க இயல் (Dialecticism) ஆகும்.

12. வரலாற்றுப் பொருள் முதல்வாதம் (Historical Materialism)

அண்டத்திலுள்ள பொருள்களின் இயக்கப்போக்கு மனித வரலாற்றிலும் அடங்கி இருப்பதை விளக்கிய முதல் தத்துவம் வரலாற்றுப் பொருள் முதல்வாதமாகும்.

> *"வரலாறு என்றால் மாறுதல். சமுதாயத்தில் ஏற்படுகின்ற மாறுதல் என்று பொருள், சமுதாயத்திற்கு ஒரு வரலாறு உண்டு. அது தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது"*[29]

என்கிறார் ஜார்ஜ் பொலிட்சர்.

விலங்குகளைப்போல் வாழ்ந்த மனிதன் பின்னர் ஆடு, மாடுகளை வளர்க்கவும் இயற்கையை மெல்லமெல்ல வெல்லவும் கற்றுக்கொண்டான். மனிதன் படிப்படியாக மாறி வந்ததன் அடையாளங்களே காட்டுமிராண்டிச் சமுதாயம், அடிமைச் சமுதாயம், நிலமானியச் சமுதாயம், முதலாளித்துவச் சமுதாயம், சோஷலிசச் சமுதாயம் போன்ற வளர்ச்சி நிலைகளாகும். இந்த வளர்ச்சிகளெல்லாம் மனித முயற்சியால், உழைப்பால் விளைந்த மாற்றங்கள் என்றும், அது மேலும் மேலும் வளர்கிறது என்றும் விளக்குவது வரலாற்றுப் பொருள் முதல்வாதமாகும்.

---

29. ஜார்ஜ் பொலிட்சர், மு.நூ., ப.189.

13. *சீர்திருத்தவாதம்* (Reformism)

சீர்திருத்தவாதம் என்பது வர்க்கப்போராட்டத்தையும் சோஷலிஸ்ட் புரட்சியையும் தொழிலாளர்களின் சர்வாதிகாரத்தையும் மறுப்பது. முரண்பட்ட வர்க்கங்களின் ஒருங்கிணைந்த செயல்பாட்டையும் திருத்துதல் ஆகும். அதாவது சீரழிந்த ஒன்றை முற்றிலுமாக அழித்துவிட்டுப் புதிதாக ஆக்கிப் பயன்படுத்துவதை விடுத்துச் சீரழிந்துபோன அதையே பழுது பார்த்துப் பயன்படுத்துவது போன்றது. வரலாற்றில் சீர்திருத்தவாதம் என்பது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய ஓர் இயக்கமாகும்.

தமிழகத்தில் சுயமரியாதை இயக்கத்தலைவர் ஈ.வெ.ராமசாமி சீர்திருத்தவாதத்தை முழங்கியவராவார்.

14. பகுத்தறிவு வாதம்

> *"மனிதன் பகுத்தறிவு உள்ள பிராணி. அவனிடம் உள்ள அந்த பகுத்தறிவு, வேறு எந்த பிராணிகளிடமும் இல்லை"*[30]

என்பார் அரிஸ்டாடில்.

உயிரினங்களின் சிந்தனை சக்தியும் சிந்தித்தபின் தோன்றும் உணர்ச்சியும்தான் அறிவு என்று சொல்லப்படுகின்றது. அச்சிந்திக்கும் தன்மையின் கூர்மையைப் பகுத்தறிவு என்று எண்ணலாம். பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி ஆகும். உயிரினங்களில் மனிதனுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. மற்ற உயிரினங்களிடம் இருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது பகுத்தறிவாகும். மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு பகுத்தறிவில் தெளிவு பெறுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு பக்குவமானவனாகவும் பகுத்தறிவில் எந்த அளவுக்குத்

---

30. ஆசார்ய மகாபிரக்ய, புதிய மனிதன் புதிய உலகம், ப.1.

தாழ்ந்த நிலையில் இருக்கின்றானோ அந்தளவுக்குக் காட்டுமிராண்டித் தனமுடையவனாகவும் இருப்பான்.

"பகுத்தறிவு வளர்ச்சித்தன்மைதான் சமதர்மக் கொள்கைக்கு மக்களை இழுத்துச் சென்றது. பொதுவுடைமை என்பது பகுத்தறிவின் எல்லையாகும்"[31]

என்கிறார் ஈ.வெ.ரா.

15. அழகியல் வாதம் (Aestheticism)

ஈஸ்திடிக்ஸ் என்னும் சொல் புலனுணர்வு, உணர்வுக்காட்சி, கலையுணர்வுக்கூறு என்று பொருள்படும். Aestheis என்னும் கிரேக்கச் சொல்லடியாகப் பிறந்ததாகும்.

"ஈஸ்திட்டிசிஸம் என்பது கலை, இலக்கிய அழகியல் தத்துவம் பற்றியது என்றும் அழகுக்கலைக்கோட்பாடு என்றும் சொல்லலாம்"[32]

என்பார் ந.பிச்சமுத்து. இயற்கை, கலை, அழகுத்தோற்றம் கண்டு அனுபவிக்கும் உணர்ச்சி தொடர்புடையது அழகியல் தத்துவமாகும்.

"கலை என்பது மனித உறவின் சாதனம். அது வார்த்தைகளின் மூலம் தன்னை இனம் பிரித்துக் காட்டுகிறது என்னும் டால்ஸ்டாயின் கூற்றுக்கு வார்த்தைகளின் உதவியால் ஒரு மனிதன் தனது சிந்தனைகளை வேறொருவனுக்குக் கொண்டு செல்கிறான். கலையின் மூலம் மக்கள் தங்கள் உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள்"[33]

என்ற பிளக்காணோவ்வின் கூற்றை ஞானி எடுத்துக்காட்டுகின்றார்.

---

31. ஈ.வெ.ரா., ஈ.வெ.ரா. சிந்தனைகள், முதல் தொகுதி, பக்.147, 148.
32. ந.பிச்சமுத்து, மு.நூ., ப.63.
33. ஞானி, மார்க்சியமும் இலக்கியமும், ப.56.

கலை என்பது உணர்வுப்பூர்வமான அழகியல் சார்ந்த இன்ப, துன்பங்களின் வெளிப்பாடாகும். இன்பம், துன்பம் நிறைந்த நிதி உலக வாழ்க்கையை மக்களுக்கு எடுத்துரைக்கும் சாதனம் கலை. இக்கலை அழகுடையது; ஆழ்ந்த பொருளும் நோக்கும் கொண்டது.

16. உருவ வாதம் (Foramlism)

உருவ வாதம் என்பது முதலாளித்துவச் சமுதாயச் சம்பிரதாயத்திற்குரிய பல்வேறு போக்குகளையும் கொண்ட எதார்த்தத்திற்கு மாறான அழகியல் பற்றிய இலக்கியக் கொள்கையாகும்.

சமுதாயக் கருத்துகள், உயிர்த்துடிப்புடைய சார்புநிலைகள், சமுதாயக் கொள்கைகள், அழகுணர்ச்சி ஆகியவற்றிலிருந்து விலகி இருப்பதை வலியுறுத்தும் அழகியல், இன்பம் பற்றிய கருத்து முதல்வாதக் கொள்கையிலிருந்து உருவவாதம் தோன்றுகிறது. முதலாளித்துவக் கொள்கைகளை உள்ளடக்கமாகக் கொண்டிருப்பதே உருவவாத இலக்கியங்களின் உள்ளடக்கமாகும்.

சுருங்கச்சொன்னால், பொருளைப் பற்றிக் கவலைப்படாமல் உருவத்திற்கு (Form) முதன்மை கொடுத்து, எதுகை, மோனையோடு சொற்களைக் கோவை செய்து கவிதை வடிவத்தில் தருவது உருவவாதமாகும்.

17. இருண்மை வாதம் (Obscurantism)

அப்ஸ்கியூராண்டிஸம் எனப்படும் இருண்மை வாதம் ஒரு கலை இலக்கியக் கொள்கையாகும். திட்டமிட்டு ஒரு செய்தியைக் கூறாமல் விடுதல், தெளிவில்லாத கருத்து, தெளிவான செய்திகளைப் புரியாமல் சொல்லுதல், கூறவேண்டிய கருத்தைக் குழப்பமாக்குதல் இவை எல்லாம் இருண்மை கவிதைகள் எனப்படும். இருள் (dark) என்று பொருள்படும் இலத்தீன்

சொல்லடியாகப் பிறந்த அபஸ்கியூராண்டிஸம் மூடி மறைத்தல் அல்லது கலை இலக்கியப் படைப்புக்களில் பொருளைக் குழப்புதல் என்று பொருள்படும்.

18. எபிகூரிய வாதம்

எபிகூரிய வாதம் என்பது கிரேக்க நாட்டுப்பொருள் முதல்வாத தத்துவஞானி எபிகூரியஸ் (Epicorus 341 – 270 BC) தத்துவத்தைக் குறிப்பதாகும். இன்பநுகர்வே வாழ்க்கையின் குறிக்கோள் என்னும் எபிகூரியவாதம் ஹெடோநிஸத்துடன் தொடர்புடையது. இவரின் தத்துவப்படி தெய்வங்கள் மனிதனின் அன்றாட வாழ்க்கையிலும் ஆத்மார்த்த வாழ்க்கையிலும் தலையிடுவதில்லை. உலகம் அணுக்களால் ஆன அழிவில்லாத ஒன்று.

இவர் கொள்கைப்படி வாழ்க்கையின் குறிக்கோள் இன்பநுகர்வு என்பதாகும். இன்ப நுகர்வு என்பது வேதனைகள், இடையூறுகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்ட சுதந்தரமான நிலை என்பன போன்ற பரந்துபட்ட பொருளை உடையது.

எபிகூரிய வாதம் தோன்றுவதற்குச் சாதகமான சூழ்நிலை கிரேக்க நாட்டில் இருந்ததைப் போன்ற அரசியல், சமூகப் பொருளாதார நிலை தமிழ்நாட்டிலும் நிலவியது. அதாவது, மது, மாமிசம், மங்கை ஆகியவற்றால் பெறும் இன்பமும் பேரின்பம் என்று எண்ணும் புலன் நுகர் இன்ப நாட்டக் கொள்கை பெரு வழக்காக இருந்தது.

19. *சிற்றின்பவாதம்* (Erotism)

'எரோட்டிஸம்' என்பது பாலியல் உணர்வுகளைத் தூண்டக்கூடிய செய்திகளுக்கு அழுத்தம் கொடுப்பதைச் சிற்றின்பவாதம் எனலாம். இத்தகைய இலக்கியங்களைச் சிற்றின்பவாத இலக்கியங்கள் என்பர். இவை உணர்ச்சி வயப்படுத்தும் தன்மை உடையவை.

20. ஃப்ராய்டிய வாதம் (Fredism)

ஆஸ்திரிய நாட்டு உளவியற் பகுப்பாய்வின் தந்தை என்றழைக்கப்படும் சிக்மண்ட் ப்ராய்டு (1856 – 1939) என்பவரின் கொள்கை ப்ராய்டிசம் எனப்படுகின்றது. மனிதனின் சுயஉணர்வு கடந்த நிலையை (Unconcious) நுணுக்கமாக ஆராயும் முறையை 'உளநிலைப் பகுப்பாய்வு' (Psychoanalysis) என்னும் பெயரில் விளக்கியவர் ப்ராய்டு.

> *"ப்ராய்டிசம் முதலாளித்துவ நாடுகளில் பல்வேறு கோணங்களில் சிறப்பாகக் கலை, இலக்கியத்தில் மிகப்பெரிய செல்வாக்குப் பெறலாயிற்று. இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழ்க் கலை இலக்கியங்களில் ஒரு கணிசமான அளவு செல்வாக்குப் பெற்று உள்ளது. ப்ராய்டிசத்தை விதந்து எழுதப்படும் புதுக்கவிதைகள் ஏராளம். தமிழ் நாவல்கள், சிறுகதைகள், புதுக்கவிதைகள், திரைப்படங்கள் போன்றவற்றை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் 'சர்ரியலிசம்' எனப்படும் மிகை எதார்த்த வாதம், தனிமனிதப் புலம்பலான வெளிப்பாட்டுப் பாங்கியல் 'நனவோடை உத்தி' போன்ற இலக்கிய இயக்கங்கள் ப்ராய்டிசக் கருத்துக்களை மிகையாகவே பெற்றிருப்பது வெளிப்படை"*[34]

என்கிறார் ந.பிச்சமுத்து. மனம் பற்றி அறிந்துகொள்ள முடியாத இட் (Id), லிபிடோ (Libido) என்ற உணர்வுகளின் உந்துதலே மனிதகுல வரலாறு, ஒழுக்கப்பண்பு, கலை இலக்கியம், விஞ்ஞானம், மதம், சட்டம், போர்கள் போன்ற உலக நடவடிக்கைகள் அனைத்துக்கும் காரணமாகும் என்பது ப்ராய்டின் முடிந்த முடிபாகும்.

---

34. ந.பிச்சமுத்து, மு.நூ., ப.117.

21. தனிநபர் வாதம் (Individnalism)

தனிநபர் வாதம் என்பது தனிநபரின் உரிமை பற்றிய ஒரு சமுதாயக் கொள்கையும் இலக்கியக் கொள்கையும் ஆகும். ஜெர்மானிய கருத்து முதல் வாதியான மாக்ஸ் ஸ்ட்ர்னர் (Max Stirner) என்பவரால் தனிமனிதக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. அறவியல் கோட்பாடுகளும், நீதியும், சட்டமும், சமுதாயமும் குப்பைக் கூளங்களைப் போன்ற பொய்யான சுமை என்று வீசி எறியப்பட வேண்டும் என்றும், தனிமனிதன் நீதி, நியாயங்களின் பிறப்பிடமாக இருக்கின்றான் என்பதே தனிநபர் வாதக் கொள்கை ஆகும்.

'தொழிற்புரட்சி ஏற்பட்ட காலத்தில் முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றிருந்தது. இதில் நிலமானிய சமுதாய அமைப்புச் சிதைந்து கூட்டுக்குடும்ப முறை உடையும் காலத்தில் தனிமனிதக் கோட்பாடு மேலோங்கி இருந்தது என்பதை,

> *"நிலமானிய அமைப்புச் சிதைவியல் கூட்டுக்குடும்பங்களும் சிதைகின்றன. கூட்டுக்குடும்பம் சிதையும்போது தனிமனித நெறிக்கு இடங்கொடுக்கும் தொழில் துறைகள் ஊக்கமளிக்கப்படுகின்றன. இந்தச் சூழலில் தனிமனிதனும் அவனுடைய நலன்களும் முக்கியத்துவம் பெறுகின்றன"*[35]

என்கிறார் தோத்தாரி.

நீட்சே என்னும் இருப்பியல்வாதக் கொள்கையாளரின் தத்துவங்களில் உயர்ந்த மனிதன் (Super Man) என்னும் தனிமனிதக் கோட்பாடு வலியுறுத்தப்படுகிறது. தமிழ் இலக்கியப் புதினங்களில் தனிமனிதக் கோட்பாடு

---

35. தோதாத்ரி, ஜெயகாந்தன் படைப்புக்களில் சார்பு நோக்கும் சார்பற்ற நோக்கும், பக்.35, 36.

அதிக அளவில் காணமுடியும். க.நா.சு., இந்திரா பார்த்தசாரதி, ஜெயகாந்தன் ஆகியோர் புதினங்களில் தனிமனிதக் கோட்பாடு, இருப்பியல் வாதம் எனப்படும் தனிமனித பூரண சுதந்திரம் இடம்பெறுகின்றன.

22. *இருப்பியல் வாதம்* (Existentialism)

இருப்பியல் வாதம் என்னும் இந்த எக்ஸிஸ்டென்ஷியலிசத்தைக் கிர்கேகார்டு (Kierk guard, 1813-1855) என்னும் பிரான்ஸ் நாட்டுத் தத்துவவாதி கண்டுபிடித்தார். தன் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவத்தை மையமாகக் கொண்டு இதனை உருவாக்கினார். இது, ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவத்திற்குச் சோதனை ஏற்பட்ட காலத்தில் தோன்றியதாகும்.

> "*அறிவாளிகள் மன அமைப்பிலும் போக்கிலும் ஒரு புதிய உலகப்பார்வை உண்டு பண்ணுவதற்கு முயன்ற இருப்பியலை* (Existence) *பற்றிய பகுத்தறிவுக்கொவ்வாத ஒரு புதிய தத்துவம். இத்தத்துவம் முதல் உலகப் போருக்குப் பின்னர் ஜெர்மனியிலும் பின்னர் பிரான்ஸ் நாட்டிலும் தோன்றியது*"[36]

என்கிறார் ந.பிச்சமுத்து. இருப்பியல் வாதக் கொள்கைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். 1. ஆத்திகம், 2. நாத்திகம்.

ஆத்திக இருப்பியல்வாதிகள், உலகத்திற்கும் தேவலோகத்திற்கும் இடையிலான நாடு, தனிமனித அனுபவங்களின் தற்செயல் நிகழ்ச்சி என்கின்றனர். நாத்திக இருப்பியல்வாதிகள் எதிர்காலம் என்பது கற்பனையானது, நிகழ்காலம் ஒன்றே எதார்த்தமானது என்கின்றனர்.

ஆத்திக இருப்பியல்வாதிகள் கெபிரியல் மார்சல் (Gabriel Marcel, 1889), நிக்கோலை அலெக்சாண்ரோவிச் பெர்டியவ் (Nikolai Alexandrovich Berdyayev,

---

36. ந.பிச்சமுத்து, மு.நூ., ப.131.

1874-1948), மார்டின் ஹைடேகர் (Martin Heidegger, 1889), ஆல்பர்ட் காமுஸ் (Albert Cambus, 1913-1960) ஆகியோர் ஆத்திகமும் ஜீன்பால் சார்த்தர் (Jeanpaul Sartre, 1905-1980) ஆகியோர் நாத்திக இருப்பியல்வாதிகளாகவும் கருதப்படுகின்றனர்.

23. *மிகை எதார்த்தவாதம்* (Surrealism)

சர்ரியலிசம் எனப்படும் மிகை எதார்த்தவாதம் ஓர் இலக்கிய இயக்கமாகும். இது 1920ஆம் ஆண்டு பிரான்ஸில் தோற்றம் பெற்றது. இது சமுதாயம், கடவுள், குடும்பம் போன்ற அமைப்புகளுக்கும் விருப்பு, வெறுப்பு, வெற்றி, தோல்வி, அன்பு, பெருமை, சிறுமை, ஒழுக்கம், ஒழுக்கக்கேடு, உயர்ந்தது, தாழ்ந்தது போன்ற சமுதாய மதிப்பீடுகளுக்கு எதிர்ப்பாக அமைந்தது.

இலக்கியத்தில் நடைமுறை வாழ்க்கையைத் திட்டமிட்டு மிகைப்படுத்திக் காட்டுவது என்றும் கூறலாம். டாடாயிசத்தையும் பிராய்டிசத்தையும் அடிப்படையாகக் கொண்டு மலர்ந்த கொள்கை என்பர்.

மிகை எதார்த்தவாத இலக்கியக் கொள்கை, கலை என்பது உணர்ச்சிமிக்கப் படைப்பாகவும் செயல்பாடாகவும் இருப்பதைத் தவிர வேறொன்றுமில்லை என்னும் பிராய்டின் அகநிலைக் கருத்து முதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்டது. இக்கொள்கையின்படி இறப்பு, வாழ்வு பற்றிய அருவருப்பான இயல்புணர்வுகளையும் படிமக் குறியீட்டு உத்திகளின் மூலம் வடித்தெடுத்துக் கொடுப்பதுவே இலக்கியத்தின் உள்ளடக்கமாகும். மேற்கண்ட கருத்தோடு முதலாளித்துவ சமுதாயத்தில் மக்கள் பசி, வறுமை, சுரண்டல், அந்நியப்படுதல் போன்ற பல பிரச்சினைகளால் அவதிப்படும் சூழ்நிலையையும் இலக்கியங்களில் வாழ்க்கைப் போக்கைக் கண்டு சலிப்படையும் படியான படிமங்களை உருவாக்கி விடுகின்றனர்.

24. கற்பனாவாத சோஷலிசம் (Utopian Socialism)

உட்டோபியன் சோஷலிசம் என்பதும் நடைமுறை சாத்தியமில்லாத கற்பனைமயமான அல்லது கனவுமயமான ஒரு சமுதாய அமைப்பைக் கொண்டது என்பதைக் குறிப்பதாகும். இதன் கொள்கைகள்,

1. உடைமை பொது
2. எல்லோருக்கும் கட்டாய வேலை
3. உற்பத்திப் பொருளில் சமஉரிமை

என்பதாகும். தனி உடைமை எதிர்ப்பும் பொதுஉடைமை சிறப்பும் பழங்காலக் கிரேக்க ரோமானிய இலக்கியங்களிலும் காணமுடிகிறது. கற்பனாவாத சோஷலிசக் கருத்துக்கள் விஞ்ஞான சோசலிசக் கருத்து வளர்ச்சிக்கு உதவியது.

> *“சோசலிச எதார்த்தவாதத்தின் தோற்றத்திற்குத் தேவையான வரலாற்றுச் சிறப்புமிக்கச் சூழ்நிலைகளைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருந்த சமூக, அரசியல் வாழ்வுக்கேவுரிய எதிர்கால விளைவுகள் ஏற்படுத்துகின்ற நடைமுறைகளில் காணலாம்”*[37]

என்கிறார் ஆவ்னர்ஸிஸ்.

மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோருடைய படைப்புக்களில் தொழிலாளி வர்க்கம் தன் அரசியல் மற்றும் தத்துவார்த்த ஒருமையை இனங்கண்டதுபோல், சோசலிச யதார்த்தத்திற்கு அடித்தளமிட்டவர் கார்க்கி.

> *“சோசலிச யதார்த்த வாதத்தின் கலைப்புதுமையாக்கமானது. கலைப்படைப்பாக்கத்தின் வாய்ப்பை விரிவுப்படுத்திற்று. முதல்முறையாக அது புதிய சோசலிச சகாப்தத்தில் பிறந்த*

---

37. ஆவ்னர்ஸிஸ், மார்க்சிய அழகியலின் அடிப்படைகள், பக்.344-345.

விசயங்களைக் கையாளத் தொடங்கிற்று. கலையில் அது ஒரு புதுவகையான நாயகனை – அதாவது யதார்த்த வாழ்விலிருந்து பெறப்பட்ட புதிய அம்சங்களோடு கூடிய நாயகனை – சோசலிசத்தைக் காட்டுபவனை உருவாக்கிற்று”[38]

என்ற ஆவ்னர்ஸிஸ் கருத்து யதார்த்தவாத சோசலிசத்தைக் கலைப்படைப்பின்வழி சமூகம் ஏற்றுக்கொண்டது என்கிறார்.

25. எதார்த்த வாதம் (Realism)

'Realism' என்பது புறவயமான வாழ்க்கையை நேர்மையோடு உள்ளதை உள்ளவாறு காட்டுவதை நோக்கமாகக் கொண்டது. 18ஆம் நூற்றாண்டில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட இலக்கிய இயக்கமாக எதார்த்தவாதம் திகழ்ந்தது. 19-20ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சி, பொருள் முதல்வாத வளர்ச்சி காரணமாக உணர்ச்சி வயப்படுத்தும் (நடை-நயம்) மிகுந்த அற்புத புனைவியலுக்கு எதிர்ப்பாக அமைந்த ஓர் இலக்கிய இயக்கமாகும்.

கலை இலக்கியங்கள் எதார்த்தமான இயற்கைக் கூறுகள், அழகு, இனிமை இவற்றை மறந்து மனித மனம் விகாரப்படும்படியான கசப்பான நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன. வகை மாதிரிகளை (Types) விளக்காமல் தனிநபர் பண்புகளைப் பற்றிப் பேசுகிறன.

26. விமர்சன எதார்த்தவாதம் (Critical Realism)

பூர்ஷ்வா சமுதாயத்தின் வெறுக்கத்தக்க இழிநிலைகளை வெளிப்படுத்துவதையும் அதன் முரண்பாடுகளைக் களைவதையும் நோக்கமாகக் கொண்டது விமர்சன எதார்த்தவாதம். இது 19ஆம் நூற்றாண்டின்

---

38. ஆவ்னர்ஸிஸ், மு.நூ., ப.358.

இடைப்பகுதியில் முற்போக்குக்கலை, இலக்கியப் படைப்பாளர்களைக் கவர்ந்த ஒருவகை இலக்கிய இயக்கம். இது மனிதனுடைய சிந்தனைகளில் சமுதாய, ஆன்மிக, முன்னேற்றத்தைத் தூண்டிவிடுவதிலும் ஜனநாயக சமுதாயச் சிந்தனைகளை வலியுறுத்துவதிலும் ஒரு முக்கியப்பங்கு வகித்தது. விமர்சன எதார்த்தவாதத்தை சோஷலிஸ்ட் எதார்த்த வாதத்தின் முன்னோடி என்று கூறலாம்.

27. *சோஷலிஸ்ட் எதார்த்தவாதம்* (Socialist Realism)

சோஷலிஸ்ட் எதார்த்தவாதம் என்பது உண்மையை, மறுக்க முடியாத வரலாற்றுப்பூர்வமான, புரட்சிகரமான மாற்றங்களைக் கணிப்பில் எடுத்துக்கொள்ளும் முற்போக்கான இலக்கிய இயக்கம். சோசலிஸ்ட் எதார்த்தவாதத்தின் அடிநாதமான கோட்பாடுகள் என்று கீழ்க்கண்டவற்றை ந.பிச்சமுத்து கூறுகின்றார்.

"1. *பொதுவுடைமைத் தத்துவத்தில் பற்று*
2. *மக்கள் தொண்டு*
3. *சுரண்டப்பட்ட வர்க்கச் சார்பு*
4. *தொழிலாளர்களின் போராட்டங்களில் நெருக்கமான பிணைப்பு*
5. *சோசலிஸ்ட் மனிதாபிமானம்*
6. *அனைத்துலகப் பார்வை*
7. *சமுதாயம் முன்னோக்கித் தான் வளர முடியும் என்னும் நம்பிக்கை*
8. *சடங்கியல், அகநோக்கு வாத இயற்பண்பு வாதமறுப்பு, பழமைவாத எதிர்ப்பு*"[39]

என்று பட்டியலிடுகின்றார்.

---

39. ந.பிச்சமுத்து, மு.நூ., ப.185.

“சோசலிச யதார்த்தவாதப் படைப்பாக்க முறைக்கு, யதார்த்தத்தை அப்படியே கலாபூர்வமாக ஆய்வு செய்வது தேவை”[40]

என்கிறார் ஆவ்னர்ஸிஸ்.

சோசலிஸ்ட் எதார்த்தவாதம் சமுதாயப் பிரச்சினைகளை விமர்சனம் செய்வதோடு, மேலே கூறிய எட்டுவகை இலக்கணங்களோடு கலைநயம் குன்றாமல் பிரச்சினைகளுக்கு ஒட்டுமொத்தமான தீர்வுகளைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ காட்டுகிறது. அதுவும் தனிமனிதத் தீர்வுகளை விடுத்து மக்களின் ஒருங்கிணைந்த போராட்டத்தின் மூலம் காணப்படும் புரட்சிகரமான தீர்வுகளைக் கொண்டது சோசலிஸ்ட் எதார்த்தவாதம்.

மேற்கண்ட தலைப்புக்களில் வாதம் (தர்க்கம்) என்பனவற்றுள் இடம்பெறும் தத்துவக் கொள்கைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

தத்துவங்கள் என்பது சிந்தனைகளின் வெளிப்பாடு. இவற்றை உலகத்தத்துவம், தனிமனிதத் தத்துவம், பொதுத்தத்துவம், வாழ்க்கைத் தத்துவம் என்ற பல்வேறு கோட்பாடுகளுக்குள் அடக்கமுடியும். இவை தவிர இயக்கங்கள் பற்றிய கோட்பாடுகளும் தத்துவங்களாகப் பேசப்படுகின்றன.

ந.பிச்சமூர்த்தி கவிதைகளில் வாழ்க்கைத் தத்துவங்கள்

‘வாழ்க்கைத் தத்துவங்கள்’ உடல், ஆன்மா, உண்மை, தேடல், ஆராய்ச்சி என்று எத்தனையோ அகம், புறம் தொடர்புடைய தத்துவங்கள் நிறைந்துள்ளன. ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் ஆன்மிகம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த உதவுகின்றது. ஆன்மாவைத் தொடும் ஆன்மத் தேடல்கள் கவிஞர் ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் நிறைந்துள்ளன.

---

40. ஆவ்னர்ஸிஸ், மு.நூ., ப.367.

‘ஒளியின் அழைப்பு’ என்ற கவிதையில் கழுகுமரம் நீண்டு வளர்வது இயற்கை. அது பெரிய மரங்களுடன் போட்டி போட்டுக்கொண்டு உடலை வளைத்து, நெளித்து ஒளியைப் பெறவேண்டும் என்று போராடிக் கொண்டே வளர்கின்றது. கழுகு வளர்வதற்கு ஒரு பெரிய போராட்டமே நிகழ்த்துகின்றது என்கிறார் கவிஞர். வாழ்க்கையில் வெற்றிபெற கழுகு போன்று வளைந்து, நெளிந்து போராட வேண்டும் என்பது கவிஞரின் கருத்து.

“ரவியின் கோடானு கோடி விரல்களின் அழைப்பிற்கிணங்கி
எப்படி உடலை நெளித்து நீட்டி, வளைத்து வளருகிறது!
எப்படி அமிருதத்தை நம்பி, ஒளியை வேண்டி
பெரு மரத்துடன் சிறு கழுகு போட்டியிடுகிறது!
அதான் வாழ்க்கைப் போர்!
முண்டி மோதும் துணிவே இன்பம்
உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி” (ந.பி.க., ப.4)

என்ற கவிஞரின் வரிகளில் ‘உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி’ என்று கூறும்போது உழைத்தால், முன்னேற முயற்சி செய்தால் வாழ்க்கையில் மகிழ்ச்சி கிட்டும் என்பது திண்ணம் என்று ந.பிச்சமூர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

‘கிளிக்கூண்டு’ என்ற தலைப்பில் வாழ்க்கையில் ஆன்மிகம் பெறும் இடம் என்ன? என்பதையும் கிளிக்கூண்டை மையமிட்டு இறைமைத் தத்துவத்தை அழகான வாழ்க்கைத் தத்துவமாகக் கவிஞர் கூறியுள்ளார். வாழ்க்கை என்பது காவிரி ஆறாகவும் அதில் கிளிக்கூண்டுகள் நிறைய உள்ளன. அந்த வாழ்க்கையாகிய காவிரியாற்றில் நானும் ஒரு கிளிக்கூண்டு கட்டினேன். வார்த்தை என்ற மணல், ஓசை என்ற நீர், என் விருப்பங்களே குவித்து வணங்கும் விரல்கள், பாட்டு என்ற கூடு ஒன்றைக் கட்டி அழகு என்னும் கிளியை அழைத்தேன் என்கிறார். அவ்வாறு கட்டிய கிளிக்கூண்டு,

“காலையில் கதவுகள் கிழக்கில் திறக்கவும்
ஒளியாற்றில் செம்மேக மாதுகள் குளிக்கவும்
மரங்களின் ஓசை மதுரமாய் மிதக்கவும்
கண்காணாக் கரிச்சான்கள்
களியேறிப் பாடின” (ந.பி.க., ப.11)

என்று கூறும் கவிஞர் கிளிக்கூண்டு மூலம் வாழ்க்கையில் ஆன்மத் தத்துவத்தை உணர்த்துகின்றார். வாழ்க்கையின் இன்பதுன்பத்தை மட்டும் அடைய முடியாது. துன்பத்தை நாமே தேடிச் செல்கின்றோம். ‘ஈசல்’ என்ற பூச்சி தானே தேடிச் சென்று ஒளியில் விழுந்து மரணத்தைத் தழுவுவதைப்போல, வாழ்வில் மரணத்தை நாமே தேடிச் செல்கின்றோம். அது நம்மைத் தேடி வருவதற்குமுன் என்று உணர்த்துகின்றார்.

‘எமனுக்கு அழைப்பா?’ என்ற கவிதையில் வெயிலினால் வெப்பம் பொழிந்தது. எனவே மழை வரும் என்று வருணக் கடவுளை எண்ணியதால், அவரும் கருணையோடு மழைமுகில் ஈந்தார். மனம் குளிர்ந்து உடலும் குளிர்ந்தது. அந்த நேரத்தில் எறும்புகள் சாரை சாரையாய் ஊர்ந்து சென்றன. பாச்சைகள், பல்லிகள் ஊர்ந்தன. ஈசல்கள் எல்லா இடங்களிலும் பறந்தன.

“சுவரெங்கும் ஈசல்.....
தரையெங்கும் இறகு....
பதுங்கிய பல்லிகள்
ஈசல் மேல் பாய்ந்தன
சித்தத்தில் தூண்டில் முள்
சுறுக்கென்று தைத்தது.
ஈரத்திற் கேங்கினால்
எமனுக்கழைப்பா!
இன்பத்தை நாடினால்
துன்பத்தின் அழைப்பா?” (ந.பி.க., ப.17)

என்ற கவிதையில் ‘ஈசல்’ மழைக்காலத்தில் வரும் பூச்சி, அவைகளைப் பதுங்கி இருந்த பல்லிகள் தனக்கு உணவாக்கிக் கொண்டன. ‘மழை’ இல்லாமல் வறண்டு போய் வெப்பத்தை அழைத்தால் மழைக்கால ‘ஈசல்’ தன் ஒரு நாள் வாழ்வில்கூடப் பல்லிக்கு உணவாகி விடுகின்றது. அதுபோல தான் மானிட வாழ்க்கையும் என்ற நிலையாமைத் தத்துவத்தைக் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

‘சாகா மருந்து’ என்ற கவிதையில் கவிஞர் மனிதர்களைப் படைத்து நல்ல வழியில் இயக்காமல் இழிவான வாழ்வை வாழ வைத்துவிட்டான் என்பது கவிஞரின் கருத்து.

‘சாகா மருந்தை’ கனவில் கண்ட ஒருவன் அரளிப்பூவில் தேன் இருப்பதாகக் கூறுகின்றான். அதைப் பிறருக்கும் எடுத்துக் கூறுகின்றான். அதைப் பலரும் தேடிச்சென்று திரும்பி வந்து விடுகின்றனர். கனவில் சிவன் தந்த அமிர்தம் எங்கும் கிடைக்கவில்லை என்று கூறிவிடுகின்றனர். ஞானி மட்டும் கனவில் கண்ட அமுதத்திற்கு விடை தருகின்றார். வாழ்க்கை நிலையற்றது என்பதை ஈசன் கனவில் உணர்த்தினான் என்றுரைக்கின்றார்.

“ஒளி தோன்றச் செய்த அன்று
இருள் தோன்றச் செய்தாய் ஏனோ?
உருத் தோன்றச் செய்த அன்று
நிழல் தோன்றச் செய்தாய் ஏனோ?
அரளி தரும் அமுதம் சொன்னேன்
போதையே அமுதம் என்றார்” (ந.பி.க., ப.106)

உலகம் அமுதம் என்பதைப் ‘போதை’ தரும் பொருள் என்று எண்ணிக் கொண்டிருப்பதை உணர்த்துகின்றார். அமுதத்தைத் தேடி அலைந்து பின்னர் அது எங்கும் இல்லை என்று உணரும் மானிடன் தனக்குள் இருக்கும் வாழ்க்கையாகிய அமுதத்தைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை என்பது கவிஞரின் கருத்து.

"உடல் தோன்றி மறையும் என்றேன்
உடல் சாகா மருந்தி தென்றார்
உன் கலை மதித்தேன் ஈசா
பழுதுகள் இன்று கண்டேன்
உண்மையை அறிவில் நாட்டிப்
போலியும் ஏன் சமைத்தாய்?
உள்ளத்தில் அமுதம் காட்டி
உலகினில் நறவேன் வைத்தாய்?" **(ந.பி.க., ப.107)**

என்று கூறும் கவிஞர் மனிதர்களின் வாழ்க்கை இன்பமும் துன்பமும் இரண்டறக் கலந்த ஒன்று என்பதை வாழ்க்கைத் தத்துவமாய் கூறுகின்றார்.

'சுமைதாங்கி' என்ற கவிதையில் அழுது அழுதுதானே பிள்ளைபெற வேண்டும் என்பார்களே. அதுபோல தன்னுடைய துன்பத்தைத் தானே நீக்கிக் கொண்டு வாழவேண்டும். சுமைகளை இறக்கிவைக்க வழிஇல்லாத நடைபாதையில் பயணிக்கும் சுமைதாங்கிபோல வாழ்க்கை என்பதை உணர்த்தவரும் கவிஞர்,

"வேதனை அரசாயிற்று
சுமைதாங்கி இல்லாப்பாழில்
சுவடில்லாப் பாலையில்
சுற்றும் கிறுக்கானேன்
இறக்கி வைக்க இடமும்
ஒடுங்கால் ஆதரவும்
இல்லாத வாழ்வுக்குச்
சுமைதாங்க தேவையன்றோ?
தன்னுடைய தோள் மீது
தானேறும் திறமை
எனக்கில்லை
உங்களுக்குண்டா" **(ந.பி.க., ப.119)**

என்று கேட்கின்றார். 'சுமைதாங்கி'யின் வாழ்க்கைபோல, தனிமனிதன் ஒவ்வொருவனும் தம் வாழ்க்கையில் ஏற்படும் சுமைகளை இறக்கி வைக்க வழியின்றி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சுமையை மாற்றி வைக்க ஆளும் இல்லை; இடமும் இல்லை என்று ஏங்கும் ஒருவரின் மனஉளைச்சலை எடுத்துரைக்கின்றார்.

மானிட வாழ்க்கை நிலையில்லாதது. மரணம் வந்தே தீரும், மரணத்திற்கு வயதில்லை. எந்த வயதிலும் துன்பம் வந்தே தீரும். மரணத்தை எப்பொழுதும் எதிர்கொள்ளும் துணிவு ஒவ்வொருவருக்குள்ளும் இருக்க வேண்டும். இதுவே உண்மை நியதி என்று கூறும் ந.பிச்சமூர்த்தி,

"காலத்தின் ஆற்றங்
கரையோரம்
பரிசலில் கறுந்தேவன்
படர்ந்து கிடந்தாலும்
பாதை வழி எங்கும்
விழி நட்டிருந்தான்
குமரபுரத்தார்கள்
ஒருவர் பின் ஒருவராய்
பரிசலில் ஏறிப்
பணிவுடன் அமர்ந்ததைப்
பார்த்துப் பதைத்தான்" (ந.பி.க., ப.154)

என்கின்றார்.

வயதில் பழுத்தவர்கள், வாலிபர்கள், இடைவயதோர், நோயுள்ளோர், இல்லாதோர் அவசரமாய் வந்தேறுகின்றனர். ஆனால் வயதில் கலகக்காரன் மட்டும் பரிசலில் ஏறவில்லை என்று கூறும் கவிஞர்,

"சங்கொலிக்க நாங்கள் வந்தோம்
தங்கிவிட்டோர் தத்துவத்தை

நாங்கள் ஏதும் அறியோம்
காலம் முகஞ்சுளித்து,
தள்ளுகோ லெடுக்கப்
பரிசல் பறந்தது
கறும் வெளியனூடே...." (ந.பி.க., ப.155)

என்று வழித்துணை என்ற கவிதையில் மரணத்தை எப்பொழுதும் எதிர்கொள்ள வேண்டும் என்றுரைக்கின்றார். ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் எதார்த்தமான வாழ்க்கையின் தத்துவங்களை, தன் சொந்த வாழ்க்கை அனுபவங்களை உலகியல் கூறுகளோடு ஒப்பிட்டுக் கவிதைகளாக்கியுள்ளார். ந.பிச்சமூர்த்தியின் கலைத்துவம் நிறைந்த கவிதைகள், உள்ளார்த்தம் கொண்டு தனிவகைப் படிமக்கவிதையாக ஆக்கம் பெற்றுள்ளது. கவிதையின் மீட்சி, புத்துருவாக்கம், கலைநயம், தத்துவத்தை உள்நோக்கமாகக் கொண்டு எடுத்தாளப்பட்டுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

இன்குலாப் கவிதைகளில் வாழ்க்கைத் தத்துவங்கள்

மனித வாழ்க்கையில் நிகழும் நிகழ்வுகள் எல்லாவற்றிற்கும் விதி அல்லது இயற்கை என்று காரணம் கூறப்படுகின்றது. சமூகத்தின் மதிப்பைப் பெற மனிதன் போராடும் வாழ்வைப் புகழ் வாழ்வு என்கின்றோம். இதற்கு அப்பாற்பட்டு புகழ் அடைவதைவிட அடிப்படைத் தேவைகளுக்காக மனிதஇனம் போராடிக் கொண்டிருப்பதை வறுமைநிலை என்கிறோம். ஒவ்வொருவரும் தன் தேவைகளுக்காகப் பொருளைத் தேடிப் போராடும் போராட்டமே வாழ்க்கையாகின்றது. கற்பனைக்கு எட்டாத நிலைகள்கூட எதார்த்த வாழ்க்கையில் இன்று சாத்தியமாகி விடுகின்றது. உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டு, மனிதன் ஒவ்வொருவரும் தங்களுக்குள் போராடி உயிரை மாய்த்துக் கொள்ளும் பொல்லாத சமூக வாழ்க்கை நிலை இன்று நிலவுகின்றது என்பதை,

"கருவறையில் இவர்களுடைய பிறப்பு
அதிகார வர்க்கத்தால்
நிச்சயிக்கப்பட்ட போது
கல்லறையில் இவர்களுடைய இறப்பு
பாராக்களால் நிச்சயிக்கப்படுவது
நியாயம் தானே" (ஓ.பு., ப.27)

என்று 'பிரமிடுகள்' என்ற தலைப்பில் கவிஞர் பிறப்பு, இறப்பு இரண்டும் கடவுளால் நிச்சயிக்கப்பட்டது அல்ல. உயர்ந்தோர்களால் ஏழைகளுக்கு என்று கொடுக்கப்பட்ட கொடை, அதை ஏழைகள், அடிமைகள் அனுபவித்தே ஆக வேண்டும். இதுவே இவர்களின் வாழ்க்கையாகும் என்று கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

"மலை தன் அருவியால் பாடுகின்றது
கடல் தன் அலைகளால் பாடுகின்றது
நானோ
பூமியின் மௌனவயல் உதடு திறந்து
நெல்லின் கவிதையாம் அமுத ராகங்களை
வயிற்றுச் செவிகட்கு வழங்குகின்றேன்
பூமியைப்பாட வைக்கும் புலவனே நான்தான்
என்னுடைய பூமி இசைக்கும் பொழுதோ
என்னுடைய வயிறு செவிடாகின்றது" (ஓ.பு., ப.82)

என்று 'வயல்வெளிகளின் கதாநாயகன்' என்ற தலைப்பில் கவிஞர் எடுத்துரைக்கின்றார். கவிஞர்களின் வாழ்க்கை இயற்கையைப் பாடிவிட்டு 'வயிற்றுச் சோற்றிற்கு' ஏங்கித் தவிக்கும் வாழ்க்கை வாழ்வதால், கவிஞர்களும் உழவர்கள் என்று கூறுகின்றார்.

பயிர்செய்து உழும் உழவர்கள் நெல்சோறு பார்ப்பதில்லை. அதுபோல, நாற்றங்கால்களைப் பாடும் கவிஞர்களுக்கு வயிறு செவிடாகியது என்று கூறுகின்றார்.

'எழுக மனிதனே' என்ற கவிதையில் 'வீரம்' பொருந்திய வாழ்க்கையை வாழ எழுந்து புறப்படு என்று இளைய சமுதாயத்தைப் பார்த்துக் கவிஞர் அறைகூவல் விடுகின்றார்.

"உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுலகு உழைப்பவர்க்குரிய தென்பதையே"[41]

என்று பாரதிதாசன் இந்த உலகம் உழைப்பவர்களுடையது என்று கூறுகின்றார். எனவே உழைத்து உலகையும் தன்னையும் வளப்படுத்திக் கொள்ள எழுக... மனிதனே... எழுக! என்று இன்குலாப் கூறுகின்றார்.

"மனித நியாயத்தில் பூமியைச் சுழற்றக்
கைகளை இயக்கும் காலம் இதுதான்" (ஓ.பு., ப.90)

என்று நியாயங்களுக்காகப் போராடக் கைகளை உயர்த்திக்கொள்ளும் காலம் பிறந்துவிட்டதாகக் கவிஞர் பாடுகின்றார்.

'நட்சத்திரங்களை வெற்றி கொள்ள வேண்டிய நீ' என்ற கவிதையில் மானுட வாழ்க்கையில் முன்னேற்றம் காண உழைக்க வேண்டும் என்பதை,

"கடமையைச் செய். பலனை எதிர்பாராதே
என்ற புல்லாங்குழலின் கீதத்தால்
எவ்வளவு காலம் நீ ஏமாற்றப்படுவாய் ....
பங்களாமுன் உள்ள பசும்புலப் வெளிகளில்

---

41. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொ.1, ப.151.

சாயும் சூரியனின் தங்க ரேகைகளில்
உலாவருபவர்கள் உபதேசம் செய்கிறார்கள்
உழையுங்கள் .... உழைத்தால் உயர்வீர்கள்" (ஒ.பு., ப.107)

என்கின்றார் கவிஞர் இன்குலாப்.

> *"உழைப்பாளி மக்கள், உடல் வருத்தி உழைத்த பின்னும், குடிக்கக்கூழ் இன்றியும் கட்டக் கந்தையின்றியும் பரிதவிக்கும்போது எந்தவிதமான வேலையும் செய்யாது, பணக்காரனாகத் தொழிலாளியைக் கொடுமைப்படுத்திக் கொண்டு டம்பாச்சாரித்தனமாக வாழ்வது சரியல்ல"*[42]

என்கிறார் பெரியார்.

இத்தகைய முதலாளித்துவப் போக்கிலிருந்து மனிதன் மேலும் அவர்களை ஊக்கப்படுத்தாமல் தன்னைத்தானே முன்னேற்றிக் கொள்ளும் வழி அறிந்து செயலாற்றி உழைக்க வேண்டும் என்கின்றார்.

உயிர்வாழ அடிப்படைத் தேவை உணவு. உணவிற்காக மனிதன் போராடிய காலம்போய் இன்று ஆடம்பரத் தேவைகளுக்காகத் தன்மானத்தையும் இழந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றான். உணவை முதன்மைப்படுத்தி வாழும் வறுமை வாழ்க்கையில் இன்றைய சமுதாயம் பல்வேறு போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதில் வெற்றி பெறச் சமூகத்திற்கு ஒவ்வாத செயல்களைச் செய்ய வேண்டிய சூழ்நிலை நிலவுகின்றது. இதனை 'ஜீவகாருண்யம்' என்ற கவிதையில்,

"கிளி ஜோஸ்யன் கிருஷ்ணமூர்த்தி
ஐம்பது ரூபாய் அபராதம் செலுத்தினான்
'கிளியின் கூண்டு ரொம்பச் சிறுசு
இறக்கையைச் சரியாய் விரிக்க வராது

---

42. பெரியார், பெரியார் புரட்சி மொழிகள், பக்.50-51.

காற்றோட்டம் சரியாய் இல்லாததாலே
மூச்சுத்திணறிச் சாகக் கூடும்'
கூண்டும் போயி...
கிளியும் போயி...
பிளாட்பாரத்தில்
கிருஷ்ணமூர்த்தி
ஒட்டிய வயிற்றோடு
குப்புறக் கிடக்கிறான்" (ஒ.பு., ப.146)

என்று கிளியை வைத்து சோதிடம் சொல்லித் தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் மனிதன், கிளியின்மீது வைத்த நம்பிக்கையைத் தன்மீது வைத்து உழைத்திருந்தால் முன்னேறி இருப்பான் என்பதைக் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார்.

'முழக்கங்கள்' என்ற கவிதையில் மரணம், நாட்டுப்பற்று, அரசியல், திரைப்படம் என்று எல்லாவற்றிலும் இருக்கும் ஊழல், சுரண்டல் பற்றி விமர்சிக்கும் இன்குலாப்,

"இங்குள்ள குப்பைத் தொட்டில்கள் எல்லாம்
கூளங்களால் மட்டும் நிரம்புவதில்லை
கூளங்களோடு கூளங்களாக
குற்றுயிராகக் கிடக்கும்
நம்பிக்கைக் குழந்தைகள்
'வறுமையே வெளியேறு'
ஒன்று வாய் பிளக்கும்
ஊழலை ஒழிப்பேன்
ஒன்றுக்கு மூச்சிழுக்கும்" (ஒ.பு., ப.157)

என்று வறுமையினால் குப்பைத் தொட்டில்களில் கிடக்கும் குழந்தைகள் பற்றிப் பாடியுள்ளார். வாழ்க்கையின் கடைக்கோடியில் வறுமையில் அல்லற்படும் மானிடர்கள் குறித்துச் சமூக அக்கறையோடு பாடியுள்ளார்.

அடிப்படைத் தேவை பற்றிச் சிந்திக்கும் மனிதருக்கு வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லை. வெளி உலகம் மட்டுமே வாழ்க்கை என்று கூறிவிட முடியாது. அதற்கு அப்பாற்பட்டது வாழ்க்கை என்று 'வீணான வீணையை மீட்பதற்கு' என்ற கவிதையில்,

"புற உலகத்தோடு
செயல் புரியாது
முடங்கிக் கிடக்கும்
மூளைகள் எல்லாம்
வாழ்க்கையைப் பற்றித்
தெரிவதும் இல்லை
வாழ்க்கைக்காகச்
சிந்திப்பதும் இல்லை" (ஒ.பு., ப.162)

என்கிறார் இன்குலாப். தனிமனித நடவடிக்கைகள் எல்லாம் அகம் சாராமல் புறம் சார்ந்தவையாக இருக்கின்றன என்பதை அறியமுடிகின்றது.

குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாய் இருந்த காலம். வறுமை, பசி, பட்டினி என்று அல்லல்பட்ட காலம் மனிதன் வாழ்ந்தால்போதும் என்ற நிலையினால் பெற்றோர்கள் குழந்தைகளைத் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு வேலைக்கு அனுப்புகின்றனர் என்பதை 'ஒரு புன்னகை சமிக்ஞையால்' என்ற தலைப்பில்,

"சோறு காணாத
தட்டுகளோடு
வயிற்றைப் பிசைபவர்களும்
உன் மக்கள் அல்லவா?
தீக்குச்சி மருந்தில்
தீய்ந்து போகும் கைகள்
சிலேட்டில் முத்துக்கோக்க வேண்டிய
கைகள் அம்மா!" (ஒ.பு., ப.175)

என்று கல்வி இல்லாமல் வேலைக்குச் செல்லும் பிஞ்சுக் குழந்தைகள் பற்றிக் கவிஞர் கூறியுள்ளார். சமுதாயத்தை மாற்ற எண்ணி எத்தனையோ கரங்கள் உயர்த்தப்பட்டாலும் தனக்குப் பின்னர் வரும் சந்ததியினர் கல்வி கற்காமல் வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை மனதில் எண்ணி எண்ணிலடங்கா போராட்டங்களைச் சந்திக்கின்றனர்.

'சுகாதாரம்' சமுதாயத்தை மிகவும் பின்னடையச் செய்துவிட்டது. எங்கு பார்த்தாலும் குப்பைக்கூளங்கள், சந்துகள், எல்லாம் பொதுக் கழிப்பறை என்று முகவரி இல்லாமல் மாறிவிட்டது. யாரைப் பற்றியும் சிந்திக்காத அறிவுடைய; (அறிவில்லா) மனிதன் பிறருக்குத் தரும் சமூகப்பரிசு, நோய்கள். இதனை எதிர்க்கும் குரலாய் இன்குலாப், 'அரசின் சாதனையை அண்ணாந்து தேடியபோது' என்ற கவிதையில்,

"*சுகாதாரச் சாதனைகளைச்*
சிந்திப்பதில் மூழ்கியவனாய்
தரையை மறந்து
ஆகாயம் தடவி
சந்தைக் கடக்கையில் தான்
சலக்கென்று 'அதை' மிதித்தேன்" (ஒ.பு., ப.188)

என்று கூறுகின்றார். அரசின் சாதனைகளை விளக்கும் கவிதை அரங்கிற்குச் செல்லும் வழியில் கவிஞருக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கவிதை வடிவில் கூறியுள்ளார்.

'விடியல்' என்ற கவிதையில் மகளிர் தினத்தையொட்டி, தன் மனைவி பற்றி இன்குலாப் எழுதிய கவிதையில்,

"*உன்னை*
இந்த வாழ்க்கை

எனக்கு மட்டுமன்று...
உனக்கே எப்பொழுதேனும்
உணர்த்திய துண்டா?" (ஓ.பு., ப.218)

என்று இல்லற வாழ்க்கைத் தத்துவத்தை எடுத்துரைக்கின்றார்.

'கொள்ளையர்கள் எப்படி இருப்பார்கள்?' என்ற கவிதையில் வெளிவேஷம் போட்டுக்கொண்டு பிறரை ஏமாற்றிப் பிழைக்கும் மனிதர்களாக,

"களவு கொடுத்த கணக்கில் வந்தவை
பொருள்கள் மட்டுமல்ல
நானும் என் வாழ்க்கையும்
என்னோடு சேர்ந்த
எல்லா முகத்திலும்
களவாடப்பட்ட வாழ்க்கையே
எழுதப்பட்டுள்ளது" (ஓ.பு., ப.227)

என்று கூறுகின்றார். பொருள் சேகரிப்பதன் மூலம் அமைதி இழந்து நிம்மதி இல்லாத வாழ்க்கை வாழ்வதால் மனதில் அச்ச உணர்வுடன் முகம் கலை இழந்து எதையோ தொலைத்துவிட்ட உணர்வுடன் வாழும் நிலை காணப்படுகின்றது என்கிறார் கவிஞர். முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாட்டில் போராட்டத்தை மட்டுமே எதிர்கொள்ளும் மனிதன்,

"போராட்டத்தின்
சரிதமாகிய
உங்கள் வாழ்க்கையை
நினைவு கூரும் ஒரே வழி
போராடுவது தான்" (ஓ.பு., ப.284)

என்று 'ஒன்றுபடுவோம் போராடுவதற்கு' என்ற தலைப்பில் மார்க்ஸ் நினைவு நூற்றாண்டு விழாவிற்காகப் பாடிய கவிதையில், போராடுவதை வாழ்க்கையாகக் கொண்டவர்கள் போராடியே தீரவேண்டும் என்கின்றார். போராடினால்தான் புரட்சி

உண்டாகும், புரட்சி உண்டானால் வெற்றி கிடைக்கும் என்பது திண்ணம் என்றுரைக்கிறார்.

'விடுதலை' வேண்டும் என்று அறைகூவல் விட்டால் போதாது. எப்பொழுதும் அதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே இருக்கவேண்டும். கணக்கில்லாத உயிர்கள் பலியாக வேண்டும். அப்பொழுதுதான் விடுதலை என்ற வாசல் திறக்கும். நம்பிக்கையுடன் உழைத்தால் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கலாம் என்பது இன்குலாப் கருத்தாகும்.

"*மானுடம் பிணித்த*
தளைகள் அனைத்தும்
நொறுங்கும் ஓசைதான்
உண்மையில் உண்மையில்
உன் விடுதலைக்கான
உலகக் குரலை" (ஒ.பு., ப.310)

விடுதலை கிடைத்தால் மட்டும் போதாது. மானுடத்தின் அடிமை நிலை அல்லது தனிமனித அடிமைநிலை மாறவேண்டும். அப்பொழுதுதான் சுதந்திரம் அடைந்ததாகக் கருதமுடியும். இன்குலாப்பின் கவிதைகளில் வாழ்க்கைத் தத்துவங்கள், இருப்பினும் அதிக அளவில் சமுதாயத் தத்துவங்களே பேசப்பட்டுள்ளன.

ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் வாழ்க்கைத் தத்துவங்கள்

நடைமுறையில் பின்பற்றப்படும் ஒவ்வொரு செயல்களிலும் தத்துவங்கள் அடங்கியுள்ளன. தனிமனித வாழ்க்கை, பொது வாழ்க்கை என்ற இரண்டுவிதமான நிகழ்வுகளும் வாழ்க்கைத் தத்துவத்திற்குள் இடம்பெறும். இன்பமும் துன்பமும் இணைந்ததே வாழ்க்கை. இதனைப் பயனுள்ள முறையில் ஆக்கிக் கொள்வது ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஊற்றெடுக்கும் ஆசை. இதில்

வெல்லக்கூடியவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவதும், வெல்ல இயலாமல் போராடக் கூடியவர்கள் தோற்றுவிடுவதும் இயல்பு. இத்தகைய வாழ்க்கைத் தேடல், போராட்டங்களை அடியொற்றி பல்வேறு தத்துவங்கள் தோன்றியுள்ளன. மனித வாழ்க்கை பற்றிப் பெரியார் கூறும்போது,

> *"மனிதப் பிறவியானது ஒரு இலட்சியமற்ற பிறவி என்றே கூறுவேன். மனிதன் பிறக்கிறான். பற்பல எண்ணங்களை எண்ணுகிறான். பல வகைகளை இச்சிக்கிறான். எவ்வளவோ காரியங்களில் விருப்பம் கொண்டு அவைகளை நிறைவேற்ற முற்படுகிறான். ஒரு சிலவற்றில் ஆசை நிறைவேறுகிறது. மற்றவைகளில் ஏமாற்றமடைகிறான். இறுதியில் செத்துப் போகிறான்."*[43]

என்ற பெரியாரின் கருத்தை மா.நன்னன் எடுத்துரைக்கின்றார். சங்ககாலம் முதல் தற்காலம் வரை வாழ்க்கை குறித்த வரையறைகளில் நிறையவே காணமுடியும். கணியன் பூங்குன்றனாரின் கூற்றில்,

> *"யாதும் ஊரே யாவரும் கேளீர்*
> *தீதும் நன்றும் பிறர்தர வாரா"*[44]

என்ற ஆழ்ந்த வாழ்க்கைத் தத்துவத்தை உணரமுடிகின்றது. மனித வாழ்க்கை குறித்து பல்வேறு தத்துவங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ்க் கவிதைகளில் வாழ்க்கைத் தத்துவங்கள் அடிப்படையான பாடுபொருளாக அமைகின்றது. அந்த வகையில் ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் காணலாகும் வாழ்க்கை பற்றிய பொதுவான தத்துவங்களைக் காணலாம்.

---

43. **மா.நன்னன், பெரியார் தன்னிகரற்ற சுயசிந்தனையாளர், ப.102.**

44. **புறநா.192.**

அறம் என்பதனை,

“அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீத்தல் அரிது”[45]

என்று திருக்குறள் அறம் செய்வதை வலியுறுத்துகின்றது. திருவள்ளுவரின் கருத்தைத் தமிழன்பன்,

“இறவாமை பெறவேண்டில் மானந்தன்னை
இழவாமை தழுவுகின்ற செயல்புரிந்தே
அறவழியில் நழுவாமை வேண்டும்! அந்த
அழகான வாழ்க்கையினை வாழ்வோம் வாரீர்” (த.க.தொ.1, ப.95)

என்கின்றார். ‘மானம்’ பெரிது என்று வாழும் மானிடர்கள் அறச்செயல்கள் மட்டுமே வாழ்க்கை என்று வாழ்வர். சங்ககாலத்தில் நீர்வேட்கையினால் வாயிற்காப்போனிடம் நீர் கேட்டதே மானத்திற்கு இழுக்கு என்று கருதி உயிர் நீத்த சோழன் செங்கணான் அறத்தை நிலைநாட்டியவன். இத்தகைய வாழ்க்கை தான் பயனுள்ளது என்கிறார் தமிழன்பன். பிறவிகள் எத்தனை எடுத்தாலும் அவையாவும் பிறந்ததாகக் கருதமுடியாது.

“பிறந்தோர்கள் எல்லாரும் பிறந்தோரில்லை
பெருஞ்செயல்கள் புரிந்தோரே பிறந்தோராவர்!
இறந்தோர்கள் எல்லாரும் இறந்தோரில்லை!
இழிசெயல்கள் புரிந்தோரே இறந்தோராவர்” (த.க.தொ.1, ப.94)

இழிவான செயல்களை அகற்றி நற்செயல்களைச் செய்தல் வேண்டும். அறம் எனப்படும் கொடை நோக்கு ஒவ்வொருவருக்கும் இருந்தால் வாழ்க்கை இன்பமயமாகும் என்று தமிழன்பன் கூறுகின்றார்.

---

45. குறள்.8.

மதங்கள் அறங்களை வளர்க்கத் தோன்றின. ஆனால் இன்று மதங்களால் அறங்கள் அழிந்து வருகின்றன என்பதை,

> "*மனித வாழ்க்கையின் ஆதாரம் நியாயமே என்பது கடவுளின் விருப்பம். ஆகையால் மனிதர்கள் தேவையையொட்டி நியாய வழியிலோ, தவறான வழியிலோ தம் காரியத்தை நடத்திக்கொண்டு போகலாமென்று எண்ணுவதை அறவே விட்டுவிட வேண்டும்*"[46]

என்கிறார் மகாத்மா காந்தியடிகள்.

அறவழியில் வாழ்க்கை அமைய வேண்டும், அமைத்துக் கொள்ள வேண்டும். நியாயமான எண்ணங்கள் உயர்ந்த இலட்சியத்தை எட்டும்வழி. அதற்கு மதங்களைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதனை,

> "*மரம் வளர்த்தல் கனிகளுக்கா?*
> *தூக்கிட்டு மடிவதற்கா?*
> *அறம் வளர்க்கத் தான் மதங்கள்*
> *அடித்துக் கொண்டு அழிவதற்கா?*" (த.க.தொ.1, ப.163)

என்று வினா எழுப்புகின்றார் கவிஞர் ஈரோடு தமிழன்பன். வாழ்க்கையின் ஒரு பகுதியாக மதம் விளங்க வேண்டுமேயன்றி மதமே வாழ்க்கையாகிவிடக் கூடாது என்பதைக் கவிஞர் வலியுறுத்துகின்றார்.

வாழ்க்கை என்பது ரோசா மலர் போன்றது. அதனுள் முட்களும் இருக்கும். அழகிய மலர்களும் மலரும். முட்களை நாடாமல் தேனீக்கள்போல் மலரை மட்டும் நாடித் தேன் எடுக்கும் வித்தையைக் கற்றுக்கொண்டால் வாழ்வு இனிதாகும் என்பதைத் தமிழன்பன் 'திரும்பி வந்த தேர்வலம்' என்ற கவிதைத் தொகுப்பில் 'பாரதி கண்ட மானுடம்' என்ற கவிதையில்,

---

46. மகாத்மா காந்தி, சர்வோதயம், ப.10.

"மானிடரே
ஒரு முறையேனும் நீங்கள்
சரியாக
வாழக் கூடாதா?
மானிடம் என்றும்
புல்லாங்குழலை வாசியுங்கள்
அதன்
பொத்தல்களில் புழுக்களாய்
நெளிய வேண்டாம்!
வயதுகளை
வளர்ப்பதற்காக - நீங்கள்
வாழ்க்கையைக்
கொன்று விடுகிறீர்கள்" (த.க.தொ.1, ப.218)

என்று நாட்களைக் கடத்திக்கொண்டு வாழ்க்கையைக் கொன்றுவிடும் மனிதர்கள் எதையும் சாதிக்காமல் பிறந்தோம், வாழ்ந்தோம் என்று மடிந்து விடுகின்றனர். பறவைகள் விண்ணளவிற்கு பறந்து விண்ணைத் தொட்டுவிட்டு வருகின்றன. அந்த அளவிற்கு மனித சாதனைகள் திகழ வேண்டும் என்கிறார் கவிஞர்.

"இயற்கையில் ஏற்படும் மாற்றம் சிந்தனையை வளர்க்கிறது. சிந்தனை வளர்ச்சி சமுதாயத்தை மாற்றுகிறது. அதேபோல், இயற்கையின் மாற்றத்தால் ஏற்பட்ட சிந்தனை மாற்றமும், இயற்கையை மீண்டும் மீண்டும் அறியவும் அதனை மாற்றவும் சமுதாய நன்மைக்கு பயன்படவும் முனைகிறது"[47]

என்ற கோ.தான்யாவின் கூற்றைக் கவிஞர் தமிழன்பனின் வரிகள் மெய்ப்பிக்கின்றன.

"கடல் நிலம்
நிலா – இவற்றைப்

---

47. **தான்யா, கோ., மு.நூ., ப.20.**

படைத்தபோது
நூற்றுக்கு நூறு மதிப்பெண்
பெற்றது
இயற்கை
மனிதனைப்
படைத்துவிட்டுப்
பூஜ்யம்
வாங்கியது" (த.க.தொ.1, ப.314)

என்று 'எது பண்பு' என்ற கவிதையில், இயற்கை பெற்ற பிள்ளைகளில் மனிதன் மட்டுமே தன்னைத் தாழ்த்திக் கொண்டவன். நிலம், நீர், காற்று, மண், ஆகாயம் எல்லாம் இயற்கையால் படைக்கப்பட்டவை. இதில் மனிதனும் இயற்கையின் படைப்பே. அவனால் இயற்கையாக வாழ இயலாமல் பொய், சுரண்டல், ஏமாற்றுதல் போன்ற அறத்திற்கு ஒவ்வாத செயல்களால் தன்னிலை இழக்கின்றான் என்கிறார் கவிஞர்.

பிறந்ததற்காக வருந்தக்கூடிய ஒரு பிறவி மனிதன் மட்டும்தான் என்பதை, தமிழன்பன் 'ஊர் சுற்றிவந்த ஓசை' என்ற கவிதைத் தொகுப்பில் 'இருபதாம் நூற்றாண்டு தமிழனே உனக்கு ஒரு சொல்' என்ற கவிதையில்,

"*மரணத்தைப் பற்றி*
நினைக்காதே – அது
தானாக வரும்
வாழ்க்கையைப் பற்றி
நினை - அது
நீ வாழ்ந்தால் தான் உண்டு" (த.க.தொ.1, ப.381)

என்று கூறும் தமிழன்பன், பிறந்ததற்காக வருந்தும் ஒரே பிறவி மனிதன்தான் என்று கூறுகின்றார். அதுபோல இளைய சமுதாயம் நம்பிக்கை இழந்து

வருந்திக்கொண்டு ஏன் பிறந்தோம்? என்று எண்ணியே வாழ்க்கையை முடித்துக் கொள்வதாகக் கூறுகின்றார்.

"வாலிபமே!
இந்த நாட்டில்
வெயில் இன்னும்
அடிக்கிறது
காற்று இன்னும்
வீசுகிறது. ஆனால்
வாழ்க்கையின் வாசலுக்குள்
வராமல்
நம்பிக்கை எங்கோ காத்திருக்கிறது" (த.க.தொ.1, ப.388)

என்று 'வாலிபமே வழக்குப் போடுகிறது' என்ற கவிதையில் நம்பிக்கை இழந்து வாழ்வைத் தேடும் இளைஞர்கள், ஆயுள்கள் / எத்தனையோ முடிந்துவிட்டன / வாழ்க்கை மட்டும் / இன்னும் ஆரம்பிக்கவில்லை / பிறந்ததே குற்றம் என்று / நினைக்கும் மக்களுக்கு / வாழ்க்கையே / தண்டனையானது என்று கூறுகின்றார்.

அதுபோல வாழ்க்கை என்பது வாழ்ந்து புளித்துப் போய்விட்டது என்ற எண்ணம் ஒவ்வொருவரிடமும் உள்ளது. இதனை, 'வார்த்தைகள் கேட்ட வரம்' என்ற கவிதை தொகுப்பில் 'ஊருக்கு நல்லது சொல்வேன்' என்ற கவிதையில்,

"ஆட்டி வைக்கும்
மாவு கூட
அடுத்தநாள் தான்
புளிக்கிறது!
வாழ்க்கை
மனிதனிடம்
வந்த தருணத்திலேயே
புளித்துப் போகிறது" (த.க.தொ.1, ப.579)

என்று வாழ்க்கை வயதான பிறகு என்ன வாழ்ந்தோம்? என்ற எண்ணத்தை ஒவ்வொருவருக்குள்ளும் விதைத்து விடுகின்றது என்கிறார்.

வாழ்க்கை எப்படிப்பட்டது? அதை எவ்வாறு வாழவேண்டும்? என்று திருக்குறள், ஆசாரக்கோவை போன்ற நீதி நூல்கள் எடுத்துக்கூறியுள்ளன. தமிழ்ப் பண்பாட்டோடு வாழ வேண்டும் என்று காப்பியங்கள் பலவும் கூறுகின்றன. இன்பமயமாய் வாழ்க்கையை மாற்றிக்கொள்ளுதல் வேண்டும். அதில் பேரின்ப மகிழ்ச்சி நிறைந்துள்ளது என்பதை உணர்தல் வேண்டும் என்று ‘குடை ராட்டினம்’ என்ற கவிதைத்தொகுப்பில் ‘வாழும் நெறி’ என்ற கவிதையில்,

> “*மூச்சு விடுவது வாழ்க்கையல்ல – தொந்தி*
> *முட்ட விழுங்குதல் வாழ்க்கையல்ல!*
> *பேச்சை அளப்பது வாழ்க்கையல்ல - பணப்*
> *பேயாய் அலைவது வாழ்க்கையல்ல*” (த.க.தொ.2, ப.590)

என்கிறார். வாழ்க்கை எண்ணுவதெல்லாம் தரும் என்று சொல்லிவிட முடியாது. அவ்வாறு எண்ணுவதெல்லாம் உடனே கிடைத்துவிட்டாலும் அது வாழ்க்கையாகிவிடாது. தேடல், உழைப்பு, சலிப்பற்ற வாழ்க்கை இவை எல்லாம் உண்மை வாழ்க்கையை உணரச் செய்யும் வழிகள் என்று கூறுகின்றார் கவிஞர்.

இவ்வுலகில் புகழ் பெறவேண்டும் என்று எண்ணாதவர்கள் மிகச் சிலரே திருவள்ளுவர் புகழ்பெற்று வாழ வேண்டும் என்பதை,

> “*ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
> *ஊதியம் இல்லை உயிர்க்கு*”[48]

என்ற திருவள்ளவரின் கருத்தைத் தமிழன்பன், ‘தீவுகள் கரையேறுகின்றன’ என்ற கவிதைத்தொகுப்பில், ‘ஒற்றை மரணமும் ஓர் ஆயிரம் வாழ்க்கையும்’ என்ற கவிதையில்,

---

48. குறள்.231.

"அழியும் மனிதனின்
அமர சுவாசமே
புகழ்
காற்றைச் சுவாசித்தே
காற்று விலங்கும்
உயிர் வாழ்கிறது – ஆனால்
உண்மை மனிதனோ
புகழைச் சுவாசித்தே
பூமியில் வாழ்கிறான்
பெரும்புகழ் பெறாத
ஒரு வாழ்வென்பது
ஆயிரம் மரணங்கள்" (த.க.தொ.3, ப.97)

என்கிறார் தமிழன்பன். நிலைத்த வாழ்வைப் பெறப் புகழ்பெறுதல் அவசியம். பழிச்செயல் செய்து புகழ்பெறுதல் கூடாது என்பதே உண்மை. இன்பமும் துன்பமும் இணைந்ததுதான் வாழ்க்கை. எப்பொழுதும் இன்பம் மட்டுமே துய்க்கவும் அல்லது துன்பம் மட்டுமே துய்க்கவும் முடியாது. அவ்வாறு இன்பம் மட்டுமே அனுபவிப்பவர்கள் புகழ் அடைவதும் இல்லை. துன்பம் மட்டுமே அனுபவிப்பவர்கள் துவண்டு விடுவதும் இல்லை என்பதை எதார்த்தமான நடையில் தமிழன்பன்,

"வாழ்க்கைப் பாற்கடலில்
அமிர்தத்தை மட்டுமே
அருந்திய சிறியவர்
அழிந்து போகிறார்.....
ஆல காலம்
அருந்திய சான்றோர்
அமரர் ஆகின்றார்" (த.க.தொ.3, ப.103)

என்று கூறுகின்றார். இவ்வுலக வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு செயல்களும் தத்துவத் தேடல்கள். வாழ்க்கையை மையமிட்டுத்தான் உலகில் தோன்றிய

எல்லாத் தத்துவங்களும் உருவாயின. ஆடம்பரமான வாழ்க்கையினால் எந்தப் பயனும் இல்லை. அதனால் துன்பம் மட்டுமே மிஞ்சும். புகழின் உச்சியில் வாழ்வோர் ஆடம்பரத்தை விரும்பினால் அதனால் அவனுக்கு இழப்புமட்டும் தான் ஏற்படும். தன்னை மறந்து உலக வாழ்க்கை அல்லது பொது வாழ்க்கையை எண்ணுபவர்களை உலகம் நேசிக்கும். இவர்களுக்கு மரணமில்லாப் பெருவாழ்வு ஏற்படும் என்பதைத் தமிழன்பன்,

"எவன் தன்னை மறந்தானோ
அவனை உலகு நினைக்கும்
எவன் தன்னை நினைத்தானோ
அவனை உலகு மறக்கும்" (த.க.தொ.3, ப.103)

என்கிறார்.

மனிதர்களை நால்வருணத்திற்குள் அடக்கி வேதங்கள் பேசுகின்றன. தமிழர் பண்பாடு, செய்யும் தொழில் அடிப்படையில் நான்கு வகையாக அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்று பகுக்கின்றது. தமிழன்பனின் 'காலத்திற்கு ஒரு நாள் முந்தி' என்ற கவிதை தொகுப்பில் 'நாலு பேர்' என்னும் கவிதையில்,

"மணலிலிருந்து
கயிறு திரிப்பவர் – பொய்யர்
அந்தக் கயிற்றால்
சுவர்க்கத்தைக்
கட்டி இழுப்பவர் – கவிஞர்
அதற்குக்
கட்டணம்
வசூலிப்பவர் – அரசியல்வாதி
நெரிசலில்
மரணம் அடைபவர் – பொதுமக்கள்" (த.க.தொ.3, ப.176)

என்று பொய்யர், கவிஞர், அரசியல்வாதி, பொதுமக்கள் என்ற நான்குபேர் இவ்வுலகை ஆள்கின்றனர். இதில் பாதிக்கப்படும் பொதுமக்கள் எந்தப் பிழையும் அறியாத பாமரர்கள் என்பதைக் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார்.

"*மனிதன் சிந்திக்க வேண்டும் என்பதை முதன்முதலில்*
எடுத்துரைத்தவர் சாக்ரடீஸ் என்னும் தத்துவஞானி"[49]

சிந்திக்கும் ஆற்றலால் அவனின் தத்துவ அறிவு வளர்கின்றது. அவனின் சிந்தனைகள் பலவித உணர்வு, தேடல், ஞானம் போன்றவற்றை அது உலகிற்கு வழங்குகின்றன.

சமூகம் 'மரணம்' என்பதை எண்ணி அச்சத்தால் நிலைகுலைந்து விடுகின்றது. ஆனால் ஒருநாள் வாழ்வுடைய மலர்களுக்கு அத்தகைய எண்ணம் இல்லை என்பதைத் தமிழன்பன், 'காலத்திற்கு ஒருநாள் முந்தி' என்ற கவிதை தொகுப்பில் 'பூவின் குரல்' என்ற தலைப்பில்,

"*சமாதிகள் மேல்*
பூக்களை வைக்காதீர்கள்!
மலர்கள்
மரணத்தை அல்ல
வாழ்வை
உச்சரிக்கின்றன" (த.க.தொ.3, ப.184)

என்று எழுதியுள்ளார். இது, மனித வாழ்க்கைக்கும் பொருத்தமுடையது. 'சமாதிகள்' மனிதர்களுக்காக எழுப்பப்பட்டது. அதில் ஒரு நாள் மட்டுமே வாழும் மலர்கள், பிறரின் மகிழ்ச்சிக்காகவே மலர்கின்றன. பிறர் வாழ்வில் துன்பத்தை ஏற்படுத்துவதற்காக அல்ல. எனவே, மரணத்தை மறந்து வாழ்வை மட்டுமே எண்ணும் மலர்களைச் சமாதியில் இடாதீர்கள் என்கிறார் கவிஞர்.

---

49. வைத்தியநாதன், பொன்., தமிழர் தத்துவத்தில் அறிவுக்கோட்பாடு, ப.46.

எப்போதும் கவலை ரேகைகள் எட்டிப்பார்க்கும் முகங்களும் ஒளி இல்லாத இருண்ட வாழ்வும் ஒன்றுதான். புன்னகை ஒன்றே முகத்திற்கு அழகு சேர்க்கும். அதனை, மறைக்க முடியாது. எனவே அழுகை, கவலை மறந்து மலர்ந்த முகத்தோடு வாழ்ந்தால் வாழ்க்கை வசந்தமாகும் என்பதை, 'காலத்திற்கு ஒரு நாள் முந்தி' என்ற கவிதைத் தொகுப்பில் 'காயங்களில் இருந்து காவியங்கள்' என்ற கவிதையில்,

"கவலைகள் என்னும்
மரணத் துணுக்குகளை
மனத்துள்
நிரப்பிக் கொண்டு
எந்தச
சாளரத்தை நீ திறந்தாலும்
இருளின் முகவரியே
எழுதப்பட்டிருக்கும்" (த.க.தொ.3, ப.226)

என்று மகிழ்ச்சியான வாழ்வே வசந்தத்தைத் தரும் என்கிறார் கவிஞர்.

"வாழ்வில் எதிர்படும் முரண்பட்ட நிலைகளைக் கடந்து வருதலே வாழ்வின் இன்பமாகும். வெற்றி, தோல்வி, இன்பம், துன்பம் இவற்றுள் சிக்கிக் கொள்ளாமல் இருக்கும்போதே வாழ்க்கைக்கு இன்பமானதாகத் தொடர்ந்து செல்லும்"[50]

என்று சமநிலையைப் பற்றிச் சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

இன்பமாக வாழ்க்கையை மாற்றிக்கொள்ளக் கவலையில் வீழ்தல் கூடாது என்பதை விளக்குகின்றார். அதேபோல், வாழ்க்கைத் தத்துவம் பொதுவான கூறாக விளங்கவேண்டும் என்பதைத் தமிழன்பன் 'அந்த நந்தனை எரித்த

---

50. சுவாமி விவேகானந்தர், வாழும் வழி, ப.10.

நெருப்பின் மிச்சம்' எனும் கவிதைத் தொகுப்பில் 'புதிய சுருதியில் ஒரு பூபாலம்' என்ற கவிதையில்,

"விவாதம் இல்லாமல்
விளங்கக்கூடிய விளக்கின்
வெளிச்சம் போல ஒரு
பொது வாழ்க்கைத் தத்துவம்
உருவாகட்டும்" (த.க.தொ.3, ப.285)

என்று பதிவு செய்துள்ளார்.

எதிலும் அச்சமின்றி செயல்பட வேண்டும். நேர்மையுடன் இருந்தால் அச்சமின்றி வாழமுடியும். அப்பொழுது வாழ்க்கை அழகானதாக அமையும் என்ற பொருளில், 'பகலில் உச்சரிப்பு நீ' என்ற கவிதையில்,

"அதைரிய முள்களின் மேல்
அன்றாடம்
கிழிபடுபவன்
வாழ்க்கை மலர்த்தேனைப்
பருக முடியாது!
தயக்கங்கள் என்பன
மூச்சில் விழுகின்ற முடிச்சுக்கள்
இந்த
முடிச்சுகளின் அதிகரிப்பில்
வாழ்க்கைத் தேர்
வீதிகளை இழக்கும்" (த.க.தொ.3, ப.311)

என்று அச்சம், தயக்கமின்றி வாழ்ந்தால் வாழ்க்கை சிறக்கும் என்கிறார் தமிழன்பன்.

'காலம் பொன் போன்றது' என்ற பழமொழிகள் உண்டு. காலத்தின் அருமை கருதி வாழ்ந்தால், வெற்றி கிட்டும். உயிரோடு இருக்கும்வரை

காலத்தைத் கழித்துவிட்டு இறக்கும்தருவாயில் பிழைக்க மறந்துவிட்டோமே என்று வேதனைப்படக் கூடியவர்கள் ஏராளம். அவ்வாறு வாழும் மனிதர்களைக் கண்ட தமிழன்பன், 'ஊமை வெயில்' என்ற கவிதைத் தொகுப்பில் 'கால தாமதமாக' என்னும் கவிதையில்,

"அறையில்
மரணம் என்னைத்
தழுவிக் கொண்டிருந்தது
வெளியே
கதவைத் தட்டிக்கொண்டே
நின்றது
வாழ்க்கை" (த.க.தொ.3, ப.377)

என்று காலத்தை வீணடித்துவிட்டு மரணம் வரும் வேளையில் வாழ்வை எண்ணுவதால் பயன் இல்லை என்ற தத்துவத்தை உணர்த்துகின்றார்.

வெற்றியும் தோல்வியும் நிரந்தரமில்லாதவை. வாழ்க்கை அதற்கு விதிவிலக்கல்ல. வாழ்ந்து கொண்டிருக்கும்போதே தன்னம்பிக்கையுடன் வாழ்ந்தால் தோல்விகளால் துவண்டுவிடாமல் வாழலாம் என்பதை உணர்த்தவரும் தமிழன்பன், 'சூரிய பிறைகள்' என்ற கவிதைத் தொகுப்பில்,

"பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு
முத்தமிட்டுச் சொன்னது பூமி
ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ" (த.க.தொ.3, ப.468)

என்று கூறும் கவிஞர் கனவுகளில் வெற்றி கிட்டினால் வாழ்க்கையிலும் அது சாத்தியப்படும் என்கிறார்.

போராட்டம் நிறைந்த வாழ்வில் வெற்றிமாலை நிச்சயம் என்பதை உணர்த்தும்விதமாக, 'என் வீட்டு எதிரே ஓர் எருக்கஞ்செடி' என்ற கவிதைத் தொகுப்பில் 'புண்களைவிட பூக்கள் மணப்பதில்லை' என்ற கவிதையில்,

"கனவுகள் மேல்
வெற்றிக்கொடி பறக்க விடு!
தோற்றால பரவாயில்லை
தூக்கத்தையேனும் தொலைத்துவிடு!
போராட்டத்தில் உன்மேல்
கனவுகள் போடும் காயங்கள்
வெற்றித் தேவதை உன்னைக்
காணத் திறக்கும் சன்னல்கள்" (த.க.தொ.3, ப.562)

என்ற கவிதையில் கனவுகள் வாழ்வின் வெற்றிக்கு உதவும் என்றுரைக்கின்றார். அதுபோல, இலக்கு இருந்தால் வெற்றியை எட்டிவிடலாம் என்பது திண்ணம். அதை உறுதிசெய்யும் விதமாய்,

"எதுவரை தொடருமோ பயணம்
அதுவரை கிடைப்பதும்
வெற்றியே. அந்த
வெற்றிக்கு
முத்தம்
இலக்கு
குத்தகையாக்கும்" (த.க.தொ.3, ப.572)

என்று 'குத்தகை முத்தங்கள்' என்ற தலைப்பில் கூறியுள்ளார்.

முடிவுரை

தத்துவம் குறித்த கருத்துக்கள் 'உண்மையை அறிதல்' என்னும் பொதுப்பொருளை விளக்குகின்றன. வாழ்க்கை, அறிவு இரண்டிற்கும் இடையே

தத்துவம் இடையறாமல் இயங்கிக்கொண்டு இருக்கின்றது. மனிதனைச் சுற்றி நடக்கும் ஒவ்வொரு செயல்களும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

தத்துவம், கடவுள் பற்றிய உண்மைகளை மட்டும் பேசுவதல்ல. உலகம் முழுவதும் காணப்படும் சமூகஅவலங்கள், மக்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள், சுரண்டல், பொருளாதாரம், அறிவியல் கண்டுபிடிப்புகள் இவை அனைத்தும் தத்துவத்தின் உள்ளடக்கங்களாகக் கொண்டுள்ளன.

மனிதன் பிறந்தது முதல் நாள்தோறும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய உண்மைகளைத் தேடல் அல்லது ஆராய்தல் தத்துவமாகிறது. அதுபோல, நிலையாமை பற்றி இலக்கியங்கள் அதிகமாகப் பேசியுள்ளன. வாழ்க்கை நிலையில்லாதது; அதை உணர்ந்து மனிதன் வாழப் பழகுதல் அவசியமானது. புகழ் மட்டும்தான் நிலையானது. வாழ்க்கை நிலையற்றது. எனவே, இருக்கும்வரை இன்பமாக, பிறருக்குத் தீங்கு செய்யாமல் வாழ வேண்டும்.

உணர்வுக்கும் இருத்தலுக்குமான தொடர்பு தத்துவமாகும். உணர்வு என்பது தனிமனிதன் மற்றும் சமூகம் சார்ந்ததாக அமையும். மெய்ஞானம் எனப்படும் ‘உண்மை அறிவு’ ஆன்மிகத்தோடு மட்டும் தொடர்புடைய சொல்லாக மாறிவிட்டது. அவ்வாறு இல்லாமல் எல்லாவகையான காலத்திற்கும் ஏற்ற உண்மைகளை அறியும் அறிவாகத் தத்துவம் கருதப்படுகின்றது.

ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் சித்தாந்தம், வேதாந்தம் என்பதை நேரடியாகக் கூறாமல், சற்று மாற்றி அமைத்துச் சமூகத்தின் உள்ளார்ந்த கூறுகளை வாழ்வியல் முறைமைகளோடு கூறப்பட்டுள்ளது.

தமிழ்ப் புதுக்கவிதைகளில் ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் வாழ்க்கைத் தத்துவம், நேர்மையுடன் வாழ்வது, கொண்ட கொள்கைகளில் விடாப்பிடியாக

இருத்தல், இலக்கு பற்றிய கண்ணோட்டம் ஆகியவை மிக எளிமையாக எடுத்தாளப்பட்டுள்ளன.

இன்குலாப் கவிதைகளில் முற்போக்குச் சிந்தனைகள் நிழலாடுகின்றன. மரணம் பற்றிய கருத்துக்களில் நிலையற்ற வாழ்க்கை குறித்தும் வயிற்றுச்சோற்றுக்கு ஏங்கித் தவிக்கும் மக்களின் துன்பங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

உலக அளவில் காணப்படும் தத்துவ இயக்கங்கள் எவை என்பதும் அவற்றிற்கான விளக்கங்கள் சமூகம் சார்ந்ததாக அமைந்துள்ளமை பற்றியும் அறியமுடிகின்றது.

இயல்-3

தமிழ்ப் புதுக்கவிதைகளில் மார்க்சியச் சிந்தனைகள்

இயல்-3
தமிழ்ப் புதுக்கவிதைகளில் மார்க்சியச் சிந்தனைகள்

உயிரினங்கள் வாழும் இவ்வுலகத்தைப் பற்றியும், மனித சமுதாயத்தைப் பற்றியும் விளக்கும் ஒரு பொது மெய்யியலே மார்க்சியமாகும். காரல்மார்க்ஸ் என்னும் ஜெர்மானிய அறிஞரின் பெயரால் அது 'மார்க்சியம்' என அழைக்கப்படுகின்றது. பொருள் முதலியல் என்பதுதான் மார்க்சியத்தின் அடிப்படையாகும்.

எந்த ஒரு தத்துவமும் வாழ்வைப் பற்றியும் வாழ்க்கையில் காணப்படும் சிக்கல்கள் பற்றியும் சிக்கல்களுக்குரிய காரணம் பற்றியும் அவற்றைப் போக்குதற்கான நல்லதொரு வழிமுறையைக் கூறக்கூடியதாக இருக்கவேண்டும். அதாவது வாழ்வின் உண்மையைப் பேசுவதாக இருக்கவேண்டும். அனுபவங்களில் தோய்ந்து கூறும் கூற்றுகளாக அமைதல் வேண்டும் என்று தத்துவம் பற்றிப் பொதுவான கருத்தைக் கூறலாம்.

> *"மார்க்சியம், தத்துவம் என்பதை மனிதனது நடைமுறை அனுபவத்தின் பொழிப்புரையாகவும், பொதுமை விளக்கமாகவும் கருதுவதே அன்றி, நடைமுறையினின்று கோட்பாடு ரீதியில் மாறுபடுவதாகக் கருதவில்லை"*[1]

என்கிறார் லெனின்.

மார்க்சின் கருத்துக்களின், போதனையின் முழு தொகுப்புமுறையே மார்க்சியம் ஆகும்.

---

1. வி.இ.லெனின், மார்க்சிய லெனினியத்தின் அடிப்படைகள், ப.164.

"மார்க்சியம் இயக்கவியல் லோகாயதவாதம் என்ற மெய்ஞ்ஞானத்துடனும் ஆய்வு முறையுடனும் பிணைக்கப்பட்டுள்ளது"[2]

என்பார் ஜார்ஸ் பொலிட்ஸர்.

"பிரபஞ்ச மாற்றம் பற்றிய விஞ்ஞான அறிவு மார்க்சியத் தத்துவம்"[3]

என்று நா.வானமாமலை கூறுகிறார்.

"நாம் வாழும் உலகம், அந்த உலகின் ஒரு பகுதியாகிய மனித சமூகம் ஆகியவைகளின் பொதுத்தத்துவம். மார்க்சிஸம் காரல்மார்க்ஸ் (1818-1883) பெயரிலிருந்து பிறந்தது மார்க்சியம். அவரும் பிரடரிக் ஏங்கல்சும் (1820-1895) சேர்ந்து கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தத் தத்துவத்தை உருவாக்கினர்"[4]

என்கின்றார் எமிலிபேர்ன்ஸ்.

மனித சமூகம் இன்றைய சூழ்நிலையில் இத்தகைய வாழ்க்கை வாழக்காரணம் என்ன?, சமூக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இதனுடைய அடிப்படைபோக்கு யாது?, விதிமுறைகள் வகுக்கப்பட்டதாகச் சமூகம் மாறிக்கொண்டே இருப்பதற்குரிய செயல்கள் குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன, ஒவ்வொரு செயல்களுக்கும் சமூகக் காரணிகள் மற்றும் காரணங்களைச் சுட்டமுடியாது, அவை தொடர்பான அறிவியல்பூர்வமான காரண காரியங்களும் இருப்பதை மக்கள் உணரவேண்டும் என்பது மார்க்சியக் கொள்கையாகும்.

---

2. ஜார்ஸ் பொலிட்ஸர், மார்க்ஸீய மெய்ஞ்ஞானம், ப.10.
3. நா.வானமாமலை, மார்க்சிய சமூக இயல் கொள்கை, ப.2.
4. எமிலிபேர்ன்ஸ், மார்க்சியம் என்றால் என்ன?, ப.7.

மார்க்சின் கொள்கைகள் அவருக்குப் பின் அவர் வழியில் தோன்றிய வி.ஐ.லெனின் (1870-1924) அவர் வழியில் வந்த ருஷ்ய சோஷலிஸ்டு சமுதாயத்தை நிர்மாணித்த ஜோசப் ஸ்டாலினும் மார்க்சியத்தை வளர்த்தனர். இவ்வாறாக வளர்ந்த மார்க்சியத்தைப் பற்றி லெனின் கூறுகையில்,

> *"ஒரு புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்கவே முடியாது"*[5]

என்று கூறியுள்ளார்.

காரல்மார்க்ஸ் பற்றிய செய்தியை மு.சேகரன் கூறுகையில்,

> *"சரித்திரத்தையும், சாஸ்திரங்களையும் மதங்களையும் பக்தியையும் மனித சமூகத்தின் புதிய கண்ணோட்டத்துடன் நோக்கலானார். உலக சரித்திரத்திலேயே மனித சமுதாயத்தைப் பொருள் முதல்வாத அடிப்படையில் இயங்குவது என்ற முதல் சிந்தனையாளர் காரல்மார்க்ஸ்தான். அவர் அதையும் விஞ்ஞானக் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்தார். தம்முடைய எண்ணங்களையும் கோட்பாடுகளையும் தொடர்ந்து எழுதி எழுதி உயிரோட்டமுள்ள நூலாக மாற்றினார்."*[6]

என்றுரைக்கின்றார்.

மார்க்சியத் தத்துவம் உலகம் பற்றிய தத்துவ ஞானம் மட்டுமன்றி மனித சமுதாயம் பற்றிய விஞ்ஞானக் கருத்துக்களையும் கூறுகின்றது; பொருளாதாரத் தத்துவத்தையும் பேசுகின்றது. மனித சமுதாயத்தின் ஆய்வுப்பணியை மேற்கொண்டிருக்கின்றது. கற்பிக்கின்ற பாடங்களிலிருந்து தத்துவங்களைத் தம் கொள்கையாகப் பறைசாற்றிக் கொள்கின்றது. வாழ்வதற்கான அடிப்படைத் தேவைப் பொருள்களுக்கு முக்கியத்துவம் தருகின்றது. கடவுள் மறுப்புக்

---

5. ஜார்ஜ் பொலிட்ஜர், மு.நூ., ப.1.
6. மு.சேகரன், அணுசக்தியும் ஓம்சக்தியும் ப.86.

கொள்கையுடையது. மனிதனுக்கு அப்பால் சுயமாக எதுவுமில்லை என்று உறுதியாகக் கூறி விஞ்ஞானத்தைத் துணையாக அழைப்பது. கூலி, அடிமைமுறை இவற்றை ஒழிக்கப் போராட வேண்டுமென்று பறைசாற்றுவது. தனியுடைமை ஒழிப்பால் உற்பத்திச் சாதனங்களைச் சமுதாயப் பொதுவாக்க பாடுபட வேண்டும் என்கின்றது. பாட்டாளிவர்க்கத்தின் விடுதலைக்குத் தேவையான முதல் விதிமுறை ஒன்றுபடுவதே என்பதை வலியுறுத்துவது. மார்க்சியம் தோன்றுவதற்கு முன்னர் உலகம் பற்றிய தத்துவக் கருத்துக்கள் தோன்றியிருக்கின்றன. ஆனால் அவை உலகம் பற்றி மட்டுமே இருந்தன. இதை மாற்றும் கருத்துகள் இவற்றில் இடம்பெறவில்லை. மார்க்சியம் ஒன்றே உலகை மாற்றும் பணியில் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது.

மார்க்சியம் என்ற சொற்பொருளின் விளக்கத்தை,

> *"ஒரு பொருளையோ கோட்பாட்டையோ உருவாக்கியுள்ளவர்களின் பெயர்களை அப்பொருளுக்கோ கோட்பாட்டிற்கோ சூட்டி அழைப்பது உலக இயல்பு. இவ்வடிப்படையிலேயே மார்க்சியம் என்ற சொல்லும் வழங்கப்படுகின்றது"*[7]

என்று கூறுகின்றார் லெனின்.

> *"பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டில் முன் அரைப்பகுதியிலும் கிளர்த்தெழுந்து போராடிப் பல சாதனைகளை ஈட்டிய பாட்டாளி வர்க்க இயக்க அனுபவங்களைத் தொகுத்து மார்க்சியம் எனும் மகத்தான புரட்சித் தத்துவம் தந்திருக்கிறது"*[8]

என்று மார்க்சியம் பற்றி ந.இரவீந்திரன் கூறுகின்றார்.

---

7. வி.இ.லெனின், மு.நூ., ப.24.
8. ந.இரவீந்திரன், மதமும் மார்க்சியமும், ப.205.

> *"மார்க்சிய இலக்கியக் கோட்பாடு ஒரு மூலத்திலிருந்து தோற்றம் பெற்றதாகச் சொல்லமுடியாது. ஆயினும் அதற்கு உருவம் கொடுத்தவர்களென்று மார்க்சு, ஏங்கெல்சு, லெனின் ஆகிய மூவரைக் குறிப்பிடலாம். கலை, இலக்கியம் ஆகியவைப் பற்றிய மார்க்சியப் பார்வைகளைத் தந்தவர்கள் டிராட்ஸ்கி* (Trotsky), *பிளெகெனோவ்* (Plekhanov), *சாடனோவ்* (Zhatanov) *ஆகிய மூவரும் ஆவர்"*[9]

என்பர் முனைவர் ப. மருதநாயகம்.

> *"மார்க்ஸியம் சென்ற நூற்றாண்டின் 40களில் ஜெர்மனியில் உதயமாயிற்று. விஞ்ஞானம் சமூக வரலாற்று நடைமுறை ஆகியவை அனைத்தினுடைய வளர்ச்சியின் விதிமுறைக்கு ஏற்ற விளைவாக விளங்கியது அது. அந்தக் காலத்திற்குள் பூர்ஷ்வாக்கள் சமூகத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் ஆழ்ந்த முரண்பாடுகள் வெளிப்பட்டுவிட்டன. அதேசமயம் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டலிலிருந்து விடுவிப்பதற்கான எதார்த்தச் சூழ்நிலைகள் உருவாகியிருந்தன"*[10]

என்ற மார்க்சியத்தின் தேவை, சூழ்நிலைகளுக்கேற்ப மக்கள் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாய நிலை இவற்றை மார்க்சியம் கற்பிக்கின்றன.

தொல் பழங்காலப் பொதுவுடைமைச் சமுதாயம்

மனித இனம் தோன்றி வளர்ந்து வர்க்கங்களாகப் பிரிவதற்கு முன் நிலவிய தொன்மைச் சமுதாயம் எல்லாக் காலத்தும் வர்க்கங்களாகப் பிரிந்து கிடந்ததில்லை. தொல்பழங்காலத்தில் வர்க்கங்களே இல்லை என்பதும் உண்மை. அவ்வாறு வகுப்பு வேற்றுமை இல்லாத காலத்து சமுதாயத்தைத் தொல் பழங்காலத்துப் பொதுவுடைமைச் சமுதாயம் என்று அழைப்பர்.

---

9. ப.மருதநாயகம், மேலை நோக்கல் தமிழ்க் கவிதை, ப.60.
10. தத்துவம் தொடக்கப்பயிற்சி நூல், ப.50.

"மனிதவர்க்கம் பிறந்து கம்யூனிசத் தொட்டிலில் தான் வளர்ந்தது. ஆதிகாலத்தில் மக்கள் விளைபொருள், செய்பொருள் எல்லாவற்றையும் பொதுவுடைமையாக வைத்து ஆண்டு அனுபவித்தார்கள். அன்று அரசனில்லை; கோர்ட்டுகள் இல்லை; கொடுஞ்சிறைகள் இல்லை; போலீசில்லை; பட்டாளமில்லை; துப்பாக்கிகளில்லை; தூக்குமரமில்லை. ஆயினும் நாடெங்கும் சமாதானம் நிலவியிருந்தது; தேவைப்பொருட்கள் எல்லோருக்கும் தட்டின்றி முட்டின்றிக் கிடைத்தன. உடையவர்கள் இல்லாதவர்கள் என்ற இருவேறுலகம் அந்நாளில் இல்லை. உற்பத்திச் சாதனங்களும் உற்பத்திப் பலன்களும் பொதுவுடைமையாயிருந்தன"[11]

என்று ப.ஜீவானந்தம் விளக்குகின்றார்.

தொன்மைச் சமுதாயத்தின் தொடக்கநிலையில் உழைப்பு எல்லோருக்கும் பொதுவாக இருந்தது. மனிதர்கள் உற்பத்தி செய்த பொருட்களை எல்லோரும் பொதுவிலே துய்த்து வந்தனர். தமது உற்பத்திக்குத் தாமே தலைவர்களாயிருந்தார்கள். உற்பத்தி செய்த பொருளின் மீது உற்பத்தியாளர்கள் கட்டுப்பாடு வைத்திருந்தார்கள். பொதுவுடைமை அடிப்படையில் குடும்ப நிர்வாகம் நடைபெற்றது. இத்தொன்மைக் காலச் சமுதாயம் சிதறிக்கிடந்த சிறு சிறு சமூகங்களை உள்ளடக்கியதாக இருந்தது. இங்குத் தங்கள் பயன்பாட்டுக்கு மட்டுமே பொருள் உற்பத்தி செய்து வந்தனர். உற்பத்திக் கருவிகள் எல்லாம் பொதுவுடைமையாகவே இருந்தன. விளைநிலங்கள் பொதுவில் இருந்தன.

"பொதுவுடைமையர் தமது கருத்துக்களையும், நோக்கங்களையும் மூடி மறைக்க மனம் ஒப்பாதவர்கள் இன்றுள்ள சமுதாயத்தின் அனைத்து நிலைமைகளையும் வன்முறை மூலம் வீழ்த்தவேண்டும். அப்போதுதான் நமது இலட்சியங்கள் நிறைவேறும் என்று

---

11. ப.ஜீவானந்தம், சோஷலிஸ்ட் தத்துவங்கள், பக்.17, 18.

பொதுவுடைமையர் ஒளிவுமறைவின்றி பறைசாற்றுகிறார்கள். பொதுவுடைமைப் புரட்சி வருகிறதென்று ஆளும் வர்க்கங்கள் அஞ்சி நடுங்கட்டும்"[12]

என்று மார்க்சும் ஏங்கெல்சும் அறிவித்தனர். ஆனால், வன்முறையில் ஈடுபட வேண்டும் என்று அவர்கள் கூறியதன் பொருள் 'அநீதியை அழித்து நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதை மையமிட்டதே தவிர மக்களைத் தீநெறிக்கு இட்டுச் செல்வதற்காக அன்று' என்பதை அறியலாம்.

"பொதுவுடைமை வெறும் அரசியலுக்கு மட்டும் பொருந்துகிற தத்துவமோ அனுஷ்டான முறையோ இல்லை. அது மனித வாழ்க்கையைப் பயன்படுத்திக் காட்டுகிற ஓர் ஒழுங்குமுறை. மானிட ஜாதியின் சரித்திரத்தைப் புரிய உருவத்தைக் காட்டுகிற கண்ணாடி, பொருளாதாரத்தை முக்கிய அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தின் தோற்றம். முதலாளித்துவத்தின் முடிவு இன்னபடிதான் ஆகும் என்று அறுதியிட்டு சொல்கிற இறுதிவாசகம் என்று பொதுவுடைமைத் தத்துவத்தை விளக்குவர்"[13]

என்பார் ப.கருணாகரன்.

மார்க்சியம் – பகுப்புமுறை

மார்க்சிய தத்துவத்தை
1. கருத்து முதல்வாதம்
2. பொருள் முதல்வாதம்

பொருள் முதல்வாதம்
1. இயக்கவியல் பொருள் முதல்வாதம்
2. வரலாற்றுப் பொருள் முதல்வாதம்

---

12. மார்க்ஸ், ஏங்கெல்சு, கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை, ப.100.
13. ப.கருணாகரன், பாரதியார் படைப்புகளில் இலக்கிய உத்திகள், ப.86.

இயக்கவியல் பொருள் முதல்வாதம்

1. எதிர்மறைகளின் ஒற்றுமை
2. நிலை மறுப்பின் நிலை மறுப்பு
3. அளவு மாறுபடும் குணமாறுபடும்

சரித்திரவியல் பொருள் முதல்வாதம்

1. புராதனப் பொதுவுடைமைச் சமுதாயம்
2. அடிமைச் சமுதாயம்
3. நிலப்பிரபுத்துவச் சமுதாயம்
4. முதலாளித்துவம் சமுதாயம்

இவ்வாறாக மார்க்சியத் தத்துவம் பகுக்கப்பட்டுள்ளது. ஓர் இயக்கம் என்பது எல்லாக் காலத்திலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் உருவாகி விடாது. சமுதாயத்தின் புறவடிவ அமைப்பை ஒட்டி அகநிலையின் பரிணாம வளர்ச்சியின் இறுக்க நிலையை ஒட்டி ஏற்படுவதாகும். ஒவ்வொரு தேவையையும் காலம்தான் நிர்ணயிக்கின்றது. தேவையின் அவசியத்தைக் காலம் நமக்கு உணர்த்துகின்றது. இவ்வாறாக மார்க்சியக் கோட்பாடுகள் சமுதாயத்தை மையமிட்டு இயங்குவதை அறியமுடிகின்றது. தமிழ்ப் புதுக்கவிதைகளில் மார்க்சியத்தாக்கம் பெற்ற கவிதைகள் ஏராளம். அவற்றை

1. பொருளாதாரப் போராட்டம்
2. அரசியல் போராட்டம்

என்ற இரு கூறுகளாகப் பகுக்கலாம்.

பொருளாதாரப் போராட்டம்

மனிதன் தோன்றிய காலம் தொட்டு நடைபெற்று வரும் மிகப்பெரியப் போராட்டமாகக் கருதப்படுவது பொருளாதாரப் போராட்டமாகும். உணவிற்காகக் காடுகளிலும், மலைகளிலும் சுற்றித் திரிந்த மனிதன் தன் சுயத்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள பல்வேறு போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. பொருளாதாரம் குறித்த பல்வேறு சமூக ஆய்வுகளை

வல்லுநர்கள் நிகழ்த்தியுள்ளனர். இத்தகைய ஆய்வுகள் யாவும் மார்க்சியம் பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

மார்க்சியப் பொருளாதாரக் கொள்கைகள் சமூகமாற்றத்தை ஏற்படுத்துவனவாய் இருந்தன. சமூகத்தின் அடித்தட்டு மக்கள், மேல்தட்டு மக்கள் என்ற பிரிவினையை உலகம் உணர்ந்துகொள்ள மார்க்சியப் பொருளாதாரக் கொள்கை வழிவகைச் செய்தது.

> *"மார்க்ஸியம் பொருள் முதல்வாதத் தத்துவமாகும். அது பொருளை எல்லாவற்றுக்கும் அடிப்படையாகக் கருதுகிறது. அதன் கண்ணோட்டத்தில் பொருள் என்பது ஒரு அசைவில்லாத உயிரில்லாத அம்சமல்ல. அது உலகம் முழுவதும் எல்லாக் காலங்களிலும் மிகவும் இயங்கக் கூடியது. அசைவதும் வினாடிக்கு வினாடி மாறிக்கொண்டே இருப்பதுமாகும். பொருளின் இயக்கத்தாலேயே உலகமும் அதன் ஒவ்வொரு உறுப்பும் பிறந்து கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கின்றன. ஆகவே இவற்றின் வளர்ச்சிக்கு வேறொரு காரணமும் தேவையில்லை"*[14]

என்று ராகுல் சாங்கிருத்யாயன் மார்க்சியப் பொருளாதாரம் குறித்து குறிப்பிடுகின்றார். சமூகத்தின் அடிப்படைக் கூறாகக் கருதப்படுகின்ற பொருளாதாரமே சமுதாய மேல் மட்ட அமைப்புகளாக இருக்கின்ற அரசு, கலை, இலக்கியம் ஆகியவற்றின் இடத்தை நிர்ணயம் செய்கின்றது. உழைக்கக் கூடியவர்களைச் சுரண்டிப்பிழைக்கும் முதலாளி வர்க்கம் மட்டுமே மேற்கண்ட செயல்களில் ஆதிக்கம் செலுத்த முடியும். இதற்கு மூலதனக் குவிப்பு முழுக் காரணமாக இருக்கின்றது. உழைக்கும் வர்க்கத்திற்குக் கிடைக்கும் பொருளாதார விடுதலையே அரசியல் போராட்ட விடுதலைக்கும் இன்ன பிறவற்றிற்கும் வழி

---

14. ராகுல் சாங்கிருத்யாயன், ராமராஜ்யமும் மார்க்சியமும், ப.69.

வகுக்கும் என்பது மார்க்சியக் கொள்கையாகும். இந்தப் பொருளாதாரப் போராட்டத்தின் முக்கிய காரணியாக உற்பத்திச் சாதனங்களைக் கூறலாம். உற்பத்திச் சாதனங்கள் இல்லாமல் உழைப்பாளிகள் தங்கள் உழைப்பினை விற்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆட்படுத்தப்படுகின்றனர். எனவே, ஏழைகள் தங்கள் வாழ்க்கைக்கு உதவக்கூடிய பொருட்களை ஈட்ட உழைப்பை விற்கின்றனர்.

மார்க்சியக் கொள்கையின் அடிப்படைக் காரணியான பொருளாதாரத்தைக் கொண்ட சமூகவியல் சூழ்நிலையை,

1. இயக்கவியல் பொருள் முதல்வாதம்
2. வரலாற்றுப் பொருள் முதல்வாதம்
3. முதலாளித்துவம்
4. தொழிலாளிவர்க்கம்
5. சுரண்டல்
6. உழைப்பு

என்று பகுக்கலாம்.

1. இயக்கவியல் பொருள் முதல்வாதம்

> *"மார்க்சியப் பொருள் முதலியல் கொள்கை தருக்க மயமானது. வாதம் செய்து ஒரு சிக்கலுக்கு எதிராக இன்னொரு சிக்கலை எழுப்பி உண்மையைக் கண்டறியவும் எகலின் இயங்கியல் முறை மார்க்சை மிகவும் கவர்ந்தது"*[15]

என்கிறார் வெ.சாமிநாத சர்மா. ஹெகலின் இயங்கியல் முறையில் சில மாற்றங்களைச் செய்து மார்க்சு அதனை எடுத்துக்கொண்டார்.

இவ்வுலகத்தோடு பிறந்த இயற்கை, உலகம் தோன்றிய பின்னர் பிறந்த மனிதன், அவனது எண்ணம் ஆகிய மூன்று கூறுகளுக்கும் இடையே நிலவும்

---

15. கார்ல்மார்க்ஸ், வெ.சாமிநாதசர்மா, ப.159.

உறவு பற்றியும் உண்மை பற்றியும் தெளிவாக ஆராய்ந்து சொல்வதற்கு உதவக்கூடிய கருவிகளில் ஒன்று இயக்கவியல் பொருள் முதல்வாதம்.

> *"நவீன இயந்திரவுலகத்திலும் பொருள் உற்பத்திக்கு மூலதனமும் உழைப்பும் இரண்டும் தேவை. மூலதனமில்லாமல் உழைப்பாளரால் ஒன்றும் செய்ய முடியாது. பொருளுற்பத்திக்கு முதலாளிக்கு உழைப்பு தேவைப்படுகிறது. அதனால் அவர் உழைப்பை விலை கொடுத்து வாங்குகிறார். அவர் தொழிலாளிக்கு ஒரு குறிப்பிட்ட கூலி தந்து, வருவாய்க்கு உரிமையாளராகிறார்"*[16]

என்று தொழிலாளி, முதலாளி நிலை பற்றி ராகுல் சாங்கிருத்யாயன் குறிப்பிடுகின்றார்.

இயங்கியற் பொருள் முதல்வாதத்தைப் பாட்டாளிகளின் கையில் ஒரு போராட்டக் குவியலாகவும், முதலாளிச் சமுதாய அமைப்பைத் தகர்த்தெறிந்து விட்டுப் புரட்சிகரமான ஒரு புதிய அமைப்பை நிறுவுவதற்குரிய அறிவியலாகவும் மார்க்சு அதனை வளர்த்தெடுத்தார். மார்க்சிய இயங்கியல் ஹெகலின் இயங்கியல் கொள்கையிலிருந்து மாறுபட்டது.

> *"ஹெகலின் இயங்கியல் தலைகீழாக நின்று கொண்டிருந்தது, அதனை அதன் கால்மேல் நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று. எனது இயங்கியல் முறையானது. ஹெகலின் இயங்கியல் முறையிலிருந்து மாறுபட்டது மட்டுமன்று, நேர்எதிரானது"*[17]

என்று மார்க்சு குறிப்பிடுகின்றார். இயற்கையை மையமிட்ட இயக்கவிற் பொருள் முதல்வாதக் கொள்கை கொண்ட மார்க்சிய கவிதைகள் தமிழில் உள்ளன.

---

16. ராகுல் சாங்கிருத்யாயன், ராமராஜ்யமும் மார்க்சியமும், ப.29.
17. Karlmarx, Capital, vol.1, p.29.

ந.பிச்சமூர்த்தி, ஈரோடு தமிழன்பன், இன்குலாப் கவிதைகளில் இயக்கவியல் பொருள் முதல்வாதக் கருத்துகள் காணப்படுகின்றன.

நாம் வாழும் இவ்வுலகம் தானே தோன்றியதா அல்லது எல்லாம்வல்ல இறைவனால் தோற்றுவிக்கப்பட்டதா? என்னும் வினா நெடுங்காலமாகக் கேட்கப்பட்டு வருகிறது. அறிவியல், இந்த உலகம் தானே தோன்றியது என்கிறது. இந்த அறிவியல் உண்மையை அடிப்படையாகக் கொண்ட மார்க்சின் இயங்கியற் பொருள் முதலியலும் உலகம் தோற்றுவிக்கப்படவில்லை; அது தோன்றியது என்கிறது. ந.பிச்சமூர்த்தியின் ‘இருளும் ஒளியும்’ கவிதையில் இருள், ஒளி ஆகிய இரண்டும் ஆதிகாலம் முதல் உள்ளன. இவற்றை யாரும் தோற்றுவிக்கவில்லை இயற்கைதான் உலகின் முதல் பொருள் என்பதை எடுத்துக் கூறுகின்றது.

“பரிதிக் கதிர் பரவி நிற்க
மரநிழலில் சுகித்திருந்தோம்...
இரவில் ஒளி ஏற்றும் வேலை
வந்ததேனோ விரைவினிலே!
பரவி நிற்கும் பாரினிலே
தேங்கி நின்ற பகலொளியும்
காணாது போன தென்ன?.” (ந.பிச்சைமூர்த்தி கவிதைகள், ப.19.)

என்ற கவிதையில் பகல் நேரத்தில் இருந்த ஒளி மறைந்து எங்கும் இருள் சூழ்ந்தது. இது அறிவியலின் மூலம் பொருள் முதலாகக் கொண்ட மார்க்சிய இயக்கவியற் கொள்கையைக் கூறும் ந.பிச்சமூர்த்தியின் கவிதையாகும். அதே கவிதையில் காலையில் தோன்றும் சூரியனின் அழகு உருவம் பற்றி கூறுகின்றார்.

“ரவியான பொன் பருந்து
விடுதலையாய் வட்டமிட்டான்
ஒளியான பொன் பசுக்கள்
குதித்து வந்து மூச்சு விட்ட
கதிரான கன்றுகளும்

வால்தூக்கித் துள்ளி வந்த
போதையாம் ஒளி இன்பம்
பாரெங்கும் பொங்கியது.” (ந.பி.க., ப.22)

என்கிறார். இந்த புவியின் இயக்கம் சூரிய, சந்திரனால் ஆனது. கடவுளால் இயங்கவில்லை என்ற மார்க்சிய இயக்கவியல் பொருள் முதல்வாதக் கருத்து இக்கவிதையில் காணமுடிகிறது.

இவ்வுலகத்தில் காணப்படும் இயற்கைப் பொருட்களின் இருளும், ஒளியும் மாறிமாறித் தோன்றும் இயக்கவியல் தத்துவத்தைத் தமிழன்பனின் ‘மீன்’ என்னும் கவிதையில் உணர்த்தியுள்ளார்.

“விசும்புக் குடையில் விழுந்த ஓட்டைகள்!
நீலக்கடலின் நெருப்புத் தீவுகள்!
மெருகிட்டு மேகம் துடைத்து வைக்கும்
வானக் கடையின் வயிரத் துண்டுகள்!
நெய்யும் திரியும் இல்லா தெரிய
வானத் தெருவில் வைத்த விளக்குகள்!
நீலத் தகட்டில் அடித்து நிறுத்திய
தங்க ஆணிகள்! தமிழ் மூவேந்தர்
பொன்முடி யழுத்திய நன்மணித் திரள்கள்!
சின்னக் குறுந்தொகைச் செய்யுள் போல
இன்பம் வழங்கும் இயற்கைப் படைப்புகள்!”

(தமிழன்பன், கவிதைத் தொகுப்பு, ப.73)

என்ற கவிதையில் இயற்கைப் படைப்புகள் இன்பம் தருவன என்பதாகப் பாடியுள்ளார். இயற்கை அனைத்தும் இயங்கும் பொருட்கள். இவற்றை அடிப்படையாகக் கொண்டு உலக இயக்கம் உள்ளது என்ற மார்க்சிய இயங்கியல் தத்துவத்தை இவரது கவிதை சுட்டுகின்றது.

புற உலகில் மனதிற்கு அப்பாற்பட்டு வெளியில் ஒரு பொருள் வாழ்கிறது. அதனுடைய இயக்கமே அதன் தோற்றத்திற்கு மூலமாகும். ஒன்றுமே இல்லாமல்

எதுவும் தோன்ற முடியாது. வெறுமையில் இருந்து வெறுமைதான் தோன்ற முடியும் என்று கருதிய மார்க்சு கடவுளை உலகப் படைப்பாளி அல்ல என்கிறார். மனிதனின் கற்பனையில் உருவானதே கடவுள் என்பது மார்க்சின் கருத்தாகும்.

> *“மனிதர் தம் மூளையில் உற்பத்தியான பொருள் அவர்களின் கைகளிலிருந்து அப்பாற் சென்று விட்டது. அவர்களைப் பொருந்தாக் கற்பனைகளிலிருந்து சமய நுகத்தடிகளைச் சுமந்து வாடி வதங்குவதிலிருந்தும் அவர்களை நாம் விடுதலை செய்வோம்”*[18]

என்று கடவுள் பற்றிய சிந்தனை குறித்து மார்க்சு குறிப்பிடுகின்றார்.

> *“காரல்மார்க்ஸ் (1818-1883) மற்றும் பிரெடரிக் ஏங்கெல்சினால் (1820-1895) உருவாக்கப்பட்ட இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத் தத்துவஞானம் ஒரு மகத்தான அறிவியல் சாதனையாகும்”*[19]

என்று வி.கிராபின் குறிப்பிடுகின்றார்.

2. வரலாற்றுப் பொருள் முதல்வாதம்

வரலாறு என்பது மன்னர்களையும் அரசியல் தலைவர்களையும் பற்றி எழுதப்படுவது என்ற எண்ணம் பழங்காலம் முதல் கூறப்பட்டுவரும் கருத்தாகும். ஆனால் வரலாறு என்பது சமூகவியல் அடிப்படையில் மக்களை ஒருங்கிணைக்கும் கருவி என்பார் மார்க்ஸ். இவரின் சிந்தனைப்படி வர்க்கப் போராட்டங்களின் சங்கிலித் தொடரே வரலாறு என்று கூறுகின்றார். இவர் வர்க்கப் போராட்டங்களை உருவாக்கவில்லை. வர்க்கப் போராட்டங்களுக்குத் தீர்வினை ஏற்படுத்தினார். உழைப்பாளிகளின் சூழ்நிலைகளை உணரச்செய்து அடிமை நிலை மாற வழிவகுத்தது வரலாற்றுப் பொருள் முதல்வாதம் எனலாம்.

---

18. Morx & Engels, Collected Works, p.23.
19. வி.கிராபின், இயக்கவியல் பொருள் முதல்வாதம் என்றால் என்ன?, ப.89.

"சமுதாய வரலாற்றினை அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்த மார்க்ஸ், வர்க்கங்களுக்கிடையே நிகழும் தொடர்ச்சியான போராட்ட நிகழ்வுகளின் தொகுப்பே வரலாறு என்று குறிப்பிடுகின்றார்."[20]

இயக்கப் பொருண்மையின் அடிப்படையில் பொதுவுடைமைச் சமுதாயத்தின் உருவாக்கம் தவிர்க்க முடியாதது. மார்க்சும் ஏங்கெல்சும் இயங்கியல் பொருள் முதல்வாதத்தைச் சமூக வாழ்க்கையில் பொருளுணர்த்தி விளக்குவதற்குப் பயன்படுத்தி, ஒரு புதியக் கோட்பாட்டை அதாவது சமுதாயத் தோற்றம், அதன் வளர்ச்சி, அதன் புத்தமைப்பு ஆகியவற்றைப் பற்றிய புதிய கோட்பாடான வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தைப் படைத்தனர். இவ்வரலாற்றுப் பொருள் முதல்வாதத்திற்கான அடிப்படை மனிதருடைய உணர்வுகள் அவர்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில்லை. ஆனால் அவர்களின் சமூக வாழ்வுதான் அவர்களுடைய சமூக உணர்வுகளைத் தீர்மானிப்பதாகும். விவசாயிகள் பிறதொழிலாளர் வர்க்கத்திலிருந்து வேறுபட்ட கூலிகளைப் பெறுகின்றனர். இங்கிலாந்தில் கப்பல் கட்டும் தொழில், சுரங்கத்தொழில் செய்யக்கூடிய உழைப்பாளர்கள் தங்களின் உழைப்பிற்கு ஏற்ற ஊதியத்தைப் பெறுகின்றனர். அவர்களால் உருவாக்கப்படும் பொருள்கள் ஏற்றுமதியில் அதிக அளவில் இலாபத்தைத் தருகின்றன. ஆனால் ஏழை விவசாயிகளின் உழைப்பு அதிகம். அவர்களின் உற்பத்திப் பொருட்கள் சந்தைகளில் மிகக் குறைந்த அளவில் விற்கப்படுகின்றன. இதனால் இவர்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகிவிட்டது. இவ்வாறாக முதலாளி, தொழிலாளி ஆகியோர் தொடர்புடைய சமூக உணர்வுத் தொடர்பானதாக வர்க்கப்

---

20. The world book Encyclopedia, vol.12, p.411.

போராட்டம் உள்ளதால் இது வரலாற்றுப் பொருள் முதல்வாதமாக மார்க்ஸ் கருதுகின்றார்.

> *"மார்க்சியத் தத்துவமானது பொருள் முதல்வாதத்தை முன் வைத்து சமுதாய நடவடிக்கைகள், நிறுவனங்கள், ஆகியவற்றிற்கெல்லாம் அடிப்படை பொருளாதாரமென்றும் சமுதாயப் பிரிவுகளுக்குள் நிகழ்கின்ற இடையறாத போராட்டங்கள் தொழிலாளரின் வெற்றிக்கு வழிவகுத்து இனவேற்றுமை ஒழிந்த உலகை நிறுவுமென்றும் வாதிட்டது. காரல்மார்க்சு, சமுதாயப் பொருளாதார நிலைகளே மனித உணர்வைத் தீர்மானிக்கின்றனவென்றும் பொருளாதார அடிப்படையே பண்பாட்டு மேல் தளத்தை நிறுவுகின்றது எனக் கருதினர்"*[21]

என்கிறார் முனைவர் ப.மருதநாயகம். பண்பாட்டு தளத்தை சரியான முறையில் நிறுவுவதற்குரிய காரணியாக மார்க்சியம் திகழ்கின்றது.

வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்பது உணர்வுத் தொடர்புடையது. உணர்வுகளை எடுத்துக்கூறுபவர்கள் உண்மைக் கவிஞர்கள் ஆவர். அகிம்சை பேசும் காந்தியமும் உணர்வு தொடர்புடையது. அந்த வகையில் ந.பிச்சமூர்த்தியின் 'அக்னி' என்னும் கவிதையில் உணர்வுத் தொடர்புடைய வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தை காணமுடிகின்றது.

> *"பேருக்குப் பெற்றோர்கள் நீர்*
> *உண்மையை உணரமாட்டீர்*
> *பதறிடாமல் பத்துப் பெண்கள்*
> *ஆரணி இரண்டும் கடைந்திடவே*
> *தீத்தெய்வம் தோன்றலானேன்"* (ந.பி.க., ப.38)

---

21. ப.மருதநாயகம், மேலை நோக்கில் தமிழ்க்கவிதை, ப.67.

என்ற வரிகள் உண்மை என்பது உணர்வினால் அறியமுடியும். அக்னியின் தோற்றமும் அவ்விதமேயானது. தத்துவத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால் அது உலகத்தை முழுமையாகக் கொண்டு விளக்கவும் அதன் சாரத்தையும் நிலையையும் விளக்க எப்போதுமே முயல்கிறது என்பதாகும்.

> *"பருப்பொருள், இயற்கைதான் முதன்மையானது என்றும், உணர்வு என்பது இரண்டாம் பட்சமானது பொருளாயத வாழ்நிலையைச் சார்ந்து என்றும் நம்புகின்ற தத்துவஞானிகள் பொருள் முதல்வாதிகளின் முகாமை அமைத்துள்ளனர்"*[22]

என்கிறார் கிராபின்.

பொருள் முதல்வாதமானது வரலாற்றை மையமிட்டு இயங்கும் உண்மை என்பது மார்க்சு, ஏங்கெல்சு இவர்களின் தத்துவமாகும். பொருள் முதல்வாதம் என்பது முற்போக்கு வர்க்கங்களையும், கருத்து முதல்வாதம் என்பது பிற்போக்கு வர்க்கங்களின் உலகக் கண்ணோட்டமாகவும் இருந்து வருகின்றன. சமுதாயத்தில் முற்போக்கு, பிற்போக்கு வர்க்கங்கள், சக்திகள் ஆகியவற்றிற்கு இடையேயான போராட்டம் தத்துவத்தை அடிப்படைக் காரணியாகக் கொண்டுள்ளன.

> *"சரித்திரத்தையும், சாஸ்திரங்களையும் மதங்களையும் பக்தியையும், மனித சமுகத்தையும் புதிய கண்ணோட்டத்துடன் நோக்கலானார். உலக சரித்திரத்திலேயே மனித சமுதாயத்தைப் பொருள் முதல்வாத அடிப்படையில் ஆராய்ந்த முதல் சிந்தனையாளர் காரல்மார்க்ஸ் தான். அவர் எதையும் விஞ்ஞான கண்ணோட்டத்தோடு ஆராய்ந்தார். தம்முடைய எண்ணங்களையும் கோட்பாடுகளையும் தொடர்ந்து எழுதி எழுதி உயிரோட்டமுள்ள நூலாக மாற்றினார்."*[23]

---

22. பி.கிராபின், இயக்கவியல் பொருள் முதல்வாதம், ப.25.
23. மு.சேகரன், மு.நூ., ப.86.

என்று மு.சேகரன் குறிப்பிடுகின்றார். இப்படிப்பட்ட ஆற்றல் வாய்ந்த கருத்துக்களை உருக்கொண்டு மார்க்சிய தத்துவம் எல்லா இடங்களிலும் பரவி மக்களின் முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட ஓர் இயக்கமாக மாறியுள்ளது.

> *“வரலாற்றுப் பொருள் முதல்வாதம் தத்துவத்தின் அடிப்படைப் பிரச்சினையை சமூகத்துக்கு இணக்கப்படுத்தி ஆராய்கையில் சமூக இருத்தல், உற்பத்தி முறை ஆகியவற்றிற்கும் மக்களது சமூக உணர்வு அவர்களது அரசியல், சட்ட, தத்துவ நோக்குகள் பிற கருத்துகள் ஆகியவற்றிற்கும் உள்ள உறவை நிலை நாட்டுகிறது”*[24]

என்று வரலாற்றுப்பொருள் முதல்வாதத்தின் அடிப்படைக் கருத்து ஆராயப்பட்டுள்ளது.

வரலாறு என்பது காலம் கடந்த நிகழ்வுகள் என்றாலும் அவை சமூக உணர்வை, வருங்காலத்திற்கு உணர்த்தும் பதிவேடுகளாகும். இந்த வரலாற்றின் பொருளை மையப்படுத்திக் கூறுவதே மார்க்சு கூறும் வரலாற்றுப் பொருள் முதல் தத்துவமாகும். இன்றைய காலகட்டத்தில் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தைக் கருவாகக் கொண்டு கவிதை எழுத வேண்டும் என்று எந்தக் கவிஞரும் எண்ணுவதில்லை. அவர்களை அறியாமல் இது போன்றதொரு தத்துவங்கள் கவிதைகளில் தொற்றிக் கொள்கின்றன. அந்தவகையில் ஈரோடு தமிழன்பனின், “உன் வீட்டிற்கு நான் வந்திருந்தேன்”(-வால்ட் விட்மன்) என்ற கவிதை தொகுப்பில், “கரிய மலைகள் கருத்தரித்த கவிதைகள்” என்ற தலைப்பில்,

“பழைய கதைகளில்
பாதை போட்டுக் கொண்டு

---

24. தத்துவம் தொடக்கப் பயிற்சி நூல், ப.61.

இந்த வீரர்கள் வரும்போது
கரியமலைகள்
பாசறைக் கூடாரங்களாய்
மாறி விடுகின்றன
தொல் இந்தியர் வரலாறு
திரும்புகிறது...
காயம்பட்டு விழுந்த வாழ்க்கையின்
சதைத் துண்டுகளாய்
மாறிவிடுகின்றன மறுபடியும்
கரிய மலைகள்" **(த.க.தொ-4, ப.194)**

என்ற வரிகளில் பழைய இந்தியர்களின் வரலாற்றைக் கரிய மலைகள்கூட பேசுகின்றன. கரியமலைகளிடம் அழகிய மலர்கள் பூப்பதில்லை. இருண்டு போன இயற்கைச் சூழலைப் பார்த்தபோது மக்களின் உணர்வுகளும் இப்படித்தான் இருக்கின்றது என்பதைக் இக்கவிதை சுட்டிக்காட்டுகின்றது. இருண்ட கரிய மலைகளைப் பார்த்தபோது, பறவைகள்கூட பாட மறந்துவிட்டன. நிலாவொளியும் இன்றி சட்டென இருண்டு விட்டது. இப்படியாக, இயற்கைச் சூழலின் மாற்றம் இருக்கின்றன. இது போன்றே சமூகத்தின் குரலாக மக்களின் வாழ்க்கைச் சூழல்கள் உள்ளன என்கிறார் தமிழன்பன்.

'செயின்ட் லூயி வளைவு' அமெரிக்காவில் உள்ளது. இதைப் பார்த்த தமிழன்பனின் மனதில் உதித்த கவிதை செவ்விந்தியர்களைப் பற்றியது.

"கடந்த காலத்திற்குள் போன
கண்கள்
சிவப்பைச் சேகரித்தன
கறுப்புக்கு என் நெஞ்சு
தொட்டில் கட்டியது
ஒரு
செவ்விந்தியக்
கிரீடத்திலிருந்து

ஒரு சிறகு உதிர்ந்தது என்கையில்
உறைந்து போன
கறுப்பு இரத்தத்தில் இருந்து
ஒரு சொட்டு நெகிழ்ந்தது
ஒரு கவிதை
என்னிடமிருந்து இறங்கியது
காகிதத்தில்" (த.க.தொ. 4, ப.199)

இவ்வாறாக செவ்விந்தியர்களின் வாழ்க்கையைக் காட்டுவதாக இக்கவிதை வரிகள் அமைந்துள்ளன. வரலாற்றுப் பொருள் முதல்வாதமானது சமுதாயத்தின் முற்போக்கு எண்ணத்தை எடுத்துரைப்பன. அந்தவகையில் மனித குலத்தின் முன்னேற்றத்திற்காக, பொருளாதார விஞ்ஞான, கலாச்சார வளர்ச்சியின் நலன்களுக்காக வரலாற்றுப் பொருள் முதல்வாதமானது பாடுபடும். தமிழன்பனின் மேற்கண்ட கவிதையில் செவ்விந்தியர்களின் போராட்ட எண்ணத்தை "உறைந்து போன கறுப்பு இரத்தத்தில் இருந்து ஒரு சொட்டு இரத்தம் நெகிழ்ந்தது" என்று எழுதியுள்ளார்.

வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்பது அரசியலைப் பண்பாட்டு கோணலில் இருந்து மாற்றி புதுவகையான எண்ணங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட தத்துவமாகும். உலகின் குருட்டுத்தனமானப் போக்கைக் கடிந்து மக்களின் குறைகளைச் சமூக அக்கறை கொண்டு தீர்க்க முயலவேண்டும் என்பதே வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் கொள்கையாகும் என்பதைத் தமிழன்பனின் "நடைமறந்த நதியும் திசை மாறிய ஓடையும்" என்ற கவிதைத் தொகுப்பில் 'வரலாற்றுக்கு ஒரு பாடம்' என்ற கவிதையில்,

"சரித்திரத்திற்கு உரிய
அசல் மனிதர்களின்
அடையாளங்களைத்
தேர்ந்தெடுக்கும்படி

கட்டளை போடுவோம்
முதல் அத்தியாயத்திற்கு
பதவி வெறிகளால்
கடித்துக் குதறப்பட்ட
பண்பாட்டு அரசியலின்
காயங்களின்
கறைகளிலிருந்து
வார்த்தைகளைச் சேகரம் செய்யட்டும்
வாக்கியங்கள்" (த.க.தொ.4 ப.237)

என்று அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து நாட்டிற்குப் பயன்படக்கூடிய வகையில் அவர்களைத் தொண்டு செய்யச் செய்வது என்பது இன்றைய நிலையில் மிகவும் கடினமான செயல் என்பது கவிஞர் கருத்து. வரலாற்றை மையப்படுத்தி உண்மை மனிதர்களை ஆராயும் நிலையைச் சமூகம் மறந்துவிட்டது. பொய்மை மட்டும் புடம்போட்ட தங்கம்போல் ஜொலிக்கின்றது என்கிறார். இவ்வாறாக தமிழன்பன் கவிதைகளில் வரலாற்றுப் பொருள் முதல்வாத தத்துவம் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகின்றது. படைப்பாளன் கவிதை எழுத முனையும்போது கருவை மையமிட்டு மட்டுமே எழுதுவான். அவனை அறியாமல் இது போன்றதொரு தத்துவக்கூறுகள் அதில் அமைந்து விடுகின்றன.

மார்க்சியத் தத்துவங்கள் இன்குலாப் கவிதைகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இந்தியா மட்டுமன்றி உலகளாவிய மக்களின் துயரங்களுக்காகக் கவிதை எழுதுபவர் கவிஞர் இன்குலாப். அவரின் 'நட்சத்திரங்களை வெற்றி கொள்ள வேண்டிய நீ' என்ற தலைப்பிலான கவிதையில், இரவு நேரத்தில் நீக்ரோ தொழிலாளி உடலில் உள்ள அரும்பும் நட்சத்திர வேர்வைத் துளிகளைப் பூமி தனது சிவப்புத் துவாலையால் துடைத்து விடுகின்றது என்ற பொருளில் கவிதையின் தொடக்கம் அமைந்துள்ளது. 'சிவப்பு

நிறம்' என்பது போராளிகளின் நிறம். இரத்தம் சிந்த உழைக்கும் மக்களின் வேர்வைகள் யாவும் சிவப்பாய் மாறுகின்றன என்பது மார்க்சியக் கொள்கை. வரலாற்று உண்மைகளை உணர்வுடன் வெளிப்படுத்தி மக்களின் சமூக அவலங்களை இன்குலாப் கவிதை வெளிப்படுத்துகின்றன. அதில்,

"சரித்திரம் உன்னை இருட்டடிப்புச் செய்தது
பொய்மண்டிக் கிடந்த சரித்திர வெளிகள்
ஒரு தாடிக்காரனால்
தோண்டப்பட்ட பொழுதுதான்
உன் புதைக் கிரணங்கள்
புலப்படத் தொடங்கி
அந்தகாரத்தில் ஆழ்ந்த ஆதிப்பூமி
உன்னால்தான்
வெளிச்சப்பட்டது என்ற
தரிசனம் கிட்டியது" (ஒ.பு., ப.103)

இவ்வாறாக இவ்வுலகம் முழுவதும் இரவு நேர இருளைக் கலைந்து இரவு பகல் பாராமல் உழைப்பவர்கள் தொழிலாளர்கள். அவர்களின் உணர்வுகளை முதன்மைப்படுத்த வேண்டும் என்பது கவிஞரின் கருத்தாக உள்ளதை அறியமுடிகின்றது.

'மானுடத்தின் காயங்கள்' என்ற மற்றுமொரு கவிதையில் அமைதி உடன்பாட்டுக்காகத் தலைவர் வந்திறங்க வரவேற்று முழங்கிய பீரங்கி ஓசையில் எல்லாப் புறாக்களும் நடுங்கின என்பதாகக் கவிதையின் தொடக்கம் அமைந்துள்ளது.

"துப்பாக்கிக் கைகளுடன்
காக்கிகள் விறைக்க
உருவிய வாளுடன்
வன்முறை நடக்க
நிழலாய் தலைவர்

தொடரும் போதே
குருதிச் சேற்றில்
அடி எடுத்து வைத்தது
அமைதி
ஆமாம் அமைதி." (ஒ.பு, ப.131)

வன்முறை இல்லாமல் மக்களுக்காக உணர்வுப்பூர்வமாகப் பாடுபடும் தன்மை கொண்ட தலைவர்கள் இல்லாத காலம். இப்பொழுதெல்லாம் மக்களுக்காக அமைதியாக இருக்க வேண்டியதில்லை. மக்களே வன்முறைகளைப் பார்த்து அமைதியாகி விட்டனர். காலம்தோறும் மக்களின் எண்ணங்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன என்பதே உண்மையாகும்.

முதலாளித்துவம்

உலகப் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற எல்லா நாடுகளின் ஒத்துழைப்பும் இன்றியமையாதது. காலம் காலமாக உலகம் முழுவதும் இருக்கும் முதலாளிகள் எள்ளளவும் மாறவில்லை. பொருள் சேர்ப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். உழைக்கும் பாட்டாளி வர்க்கம் உழைப்பதை மட்டுமே செய்கின்றனர். வாழ்வில் உயரவில்லை. இத்தகைய போக்கு எல்லா நாடுகளிலும் நிலவி வருவதை உணர்ந்தே காரல்மார்க்ஸ், ஏங்கெல்சு ஆகியோர் முதலாளித்துவத்திற்கு முட்டுக்கட்டைப் போடும் மார்க்சிய தத்துவங்களை முன்மொழிந்தனர்.

விளைநிலங்கள் சிறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு பயிர்த்தொழில் செய்யப்பட்டன. சிறு நிலவுடைமையாளர்கள் காலப்போக்கில் கடன்பட்டுத் தத்தம் நிலங்களை மிகப்பெரிய முதலாளிகளிடம் இழந்தனர். இது போன்றதொரு செயல் தமிழகம் மட்டும் அல்ல, உலகம் முழுவதும் நிலவி வந்தது.

"*மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோர் முதலாளிகளை பூர்ஷ்வாக்கள் என்ற சொல்லால் குறிப்பிட்டனர். அதாவது, நவீன*

முதலாளிகளின் வர்க்கம் என்று பொருள். இந்த நவீன முதலாளிகள் சமுதாயப் பொருளுற்பத்திச் சாதனங்களின் சொந்தக்காரர்கள். கூலிக்கு ஆட்களை அமர்த்தி வேலை வாங்குபவர்கள்"[25]

என்பது முதலாளிகளுக்குப் பிரெடரிக் ஏங்கெல்சு தரும் விளக்கமாகும்.

இந்த பூர்ஷ்வா வர்க்கம் நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியினால் தோன்றியது. நவீன பூர்ஷ்வா வர்க்கம், சமுதாயத்திற்குள் பிளவு உணர்ச்சியை வளர்த்தது. முதலாளி-தொழிலாளி, சுரண்டுபவன் – சுரண்டப்படுவான். உழைப்பவன் – உறங்குபவன் என்ற போராட்டக் கூச்சலை வளர்த்தது.

தொழில் உற்பத்திக்கான மூல இயந்திரங்களைப் பூர்ஷ்வா வர்க்கத்தினர் சொந்தமாகக் கொண்டிருந்தனர். இலாபத்தின் ஒரு பகுதி மூலதனத்தில் சேர்த்துக் கொண்டனர். எனவே அவர்களின் மூலதனம் குவிந்துகொண்டே வந்தது.

"*பிறரைப் பற்றி அக்கறை கொள்ளாத ஒரே சுதந்திரத்தைப் பூர்ஷ்வா வர்க்கம் ஏற்படுத்தி விட்டது.*"[26]

இப்படியாக முதலாளித்துவச் சமுதாயம் உற்பத்திப் பெருக்கம் காரணமாகவும், அவற்றை விற்கும் சந்தை காரணமாகவும் ஒன்றோடு ஒன்று போட்டிப் போட்டுக் கொள்ள ஆரம்பித்தது.

"*முதலாளியம் என்ற ஒரு பொருளியல் அமைப்பை வரையறை செய்யும்பொழுது இயந்திரத்தோடு சேர்ந்து உழைக்கிற தொழிலாளி வர்க்கத்தின் உழைப்புத் திறனை முதலாளி*

---

25. காரல்மார்க்ஸ் பிரெடரிக் ஏங்கெல்ஸ், கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை 1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு ஏங்கெல்ஸ் குறிப்பு.

26. காரல்மார்க்ஸ், பிரெடரிக் ஏங்கெல்ஸ், கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை, ப.46.

சுரண்டுவதன் மூலம் உபரி மதிப்பு கிடைக்கிறது என்பது ஒரு பொதுவான வரையறை"[27]

என்று முதலாளித்துவம் பற்றிய பொதுவான கருத்தை ஞானி குறிப்பிடுகின்றார்.

ஒரு சமுதாய உறுப்பினரிடையே நிலவும் உறவுகள் உற்பத்தி முறையைச் சார்ந்திருக்கின்றன. உற்பத்தி முறை மாறும்போது உறவுகளும் மாறுகின்றன. பொருளுற்பத்திக்கான கருவிகள் மாறுமானால் பொருளுற்பத்தி முறையும் மாறுகிறது. இம்மாற்றத்திற்கு ஏற்றாற்போல் பொருளுற்பத்தி முறையும் மாறுகிறது.

"*தொன்மைச் சமுதாயத்தில் நிலம் பொதுச் சொத்தாக விளங்கிய முறை கரைந்து நிலவுடைமைச் சமுதாயம் தோன்றியது. நிலவுடைமைச் சமுதாயத்தின் அழிவுக் குவியல்களிலிருந்து முதலாளித்துவச் சமுதாயம் முளைத்தெழுந்தது*"[28]

என்பது முதலாளித்துவம் பற்றிய மார்க்ஸ் ஏங்கெல்சின் கருத்தாகும். முதலாளித்துவம் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டிக் கொண்டு கூலியை உயர்த்துவதில்லை என்பதைத் தமிழன்பனின் "ஊர் சுற்றி வந்த ஓசை" என்ற கவிதைத் தொகுப்பில் 'தேசத்தை காத்தல் செய்' என்ற கவிதையில்,

"*தொழிலாளர்களே!*
உற்பத்தியைப் பெருக்குங்கள்
தேச விரோதமாகக்
கூலி உயர்வும் இலாபப்பங்கும்
கேட்காதீர்கள்" (த.க.தொ.1, ப.367)

என்று முதலாளிகளின் குரல்களைச் சுட்டிக்காட்டுகின்றார். கூலி உயர்வும், இலாபப் பங்கும் தொழிலாளர்கள் கேட்பது அவர்களின் உரிமை. ஆனால் அது தேச

---

27. ஞானி, உலகமயமாக்கலும் மார்க்சியமும், ப.28.
28. மார்க்சு, ஏங்கெல்சு கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை, ப.43.

துரோகச் செயலாகக் கவிஞர் கூறியுள்ளார். இது கவிஞரின் மனதில் எழுந்த முதலாளிகள் குறித்த எண்ணங்களின் பதிவாகக் கொள்ளலாம்.

"முதலாளிமாரின்
புன்னகை வெள்ளத்தில்
குளித்துக் கரையேறினால் உங்கள்
கண்ணீருக்குப்
புண்ணியம் உண்டு" (மேலது)

என்பதன் மூலம் முதலாளிகள் மகிழ்ச்சியோடு இருக்கத் தொழிலாளர்கள் பாடுபடுகின்றனர். தொழிலாளர்கள் மகிழ்ச்சியோடு வாழ முதலாளிகள் கூலி உயர்வும், இலாபப் பங்கீடும் தர முன்வருவதில்லை என்பதைக் கவிஞர் சுட்டிக் காட்டுகின்றார்.

வியாபார நோக்கம் கொண்டு முதலாளிகள் பொருள் உற்பத்தியைப் பெருக்கினர். உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டுவரப்பட்ட மூலதனத்தை தான்மட்டும் அனுபவிக்கும் மனப்பாங்கைக் கொண்ட உள்ளூர் சுரண்டல்காரர்களாக முதலாளிகள் விளங்கினர். இதுபோன்றதொரு செயல் இனிவரும் காலங்களில் முடியாது என்பதைத் "தீவுகள் கரையேறுகின்றன" என்ற கவிதைத் தொகுப்பில், 'கங்கையும் காவேரியும்' என்ற கவிதையில் தமிழன்பன்,

"மூச்சுவிடும் காற்றையும்
மூட்டைகட்டிப் பதுக்கி
முதலாளியாவார்கள்
முடியாது இது இனிமேல்" (த.க.தொ.3, ப.83)

என்று தொழிலாளர்கள் இனி உறங்கப் போவதில்லை, முதலாளிகளை எதிர்த்து குரல்கொடுக்கத் தயங்கப் போவதும் இல்லை என்பதாகக் கவிதை வடித்துள்ளார்.

"தீவுகள் கரையேறுகின்றன" என்ற கவிதைத் தொகுப்பில், 'புரட்சியின் கர்ப்பம்' என்ற கவிதையில்,

"இத்தோள்
முகடோரம்
தைரியச் சூரியன்
தலையெடுக்கும் போது
அதனை
எரிக்க நினைக்கும்
நெருப்புக் குச்சிகளே
கெடுபிடி செய்யும்
உடைமை வர்க்கம்" **(த.க.தொ.3, ப.114)**

என்று முதலாளித்துவத்தை முடக்கவேண்டும் என்பதைக் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார். முதலாளித்துவத்தைப் பாரதிதாசன், உழைப்போர் உரிமை கேட்கும்போது அவர்மீது அடக்குமுறையை ஏவி உரிமைக்கிளர்ச்சியை உண்டாக்குபவர்கள் என்ற பொருளில்,

"மண் மீதில் உழைப்போரெல்லாம்
வறியராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம்"[29]

என்று முதலாளிகளின் இயல்பைப் பாடுகின்றார்.

"சுரண்டும் வர்க்கம் ஆட்சியில் இருக்கும்போது மூலதனம் தனி மனிதனின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய தனியாளின் சக்தியாக விளங்குகிறது"[30]

---

29. **பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப.34.**
30. **மார்க்ஸ் ஏங்கெல்ஸ், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை, ப.54.**

என்று சுரண்டும் வர்க்கம் என்பதை முதலாளிகளாகக் குறிப்பிடுகின்றார். "நடைமறந்த நதியும் திசை மாறிய ஓடையும்" என்ற கவிதைத் தொகுப்பில் '1996 எரியும் வினாக்கள்' என்ற கவிதையில், இருட்டுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் இந்த ஜனநாயகம் பார்வையைத் திருப்பி பார்க்குமா மக்களை? என்ற வினா எழுப்புகின்றார்.

"முதலாளியத்துக்கு
மூக்கு சொரியும் இந்த அரசு
ஏக போகங்களுக்கு
இரத்தின கம்பளம் விரிக்கும் இந்த அரசு
சாவின் மார்பைச்
சப்பி கொண்டிருக்கும் மனிதனுக்குச்
சவப் பெட்டியேனும்
சலுகை விலையில் தருமா?" (த.க.தொ.4, ப.260)

என்று முதலாளிகளின் மனதில் இருக்கும் தீயஎண்ணங்களைச் சாடுகின்றார். உழைப்பவர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள்தானே என்ற எண்ணம் இல்லாதவர்களை மனிதர்கள் என்ற வகையில் அடக்கமுடியாது என்கிறார்.

தமிழன்பன் போன்று இன்குலாப் தனது கவிதைகளில் மார்க்சியத்தின் முதலாளித்துவத்தை அதிக அளவில் சுட்டிக்காட்டுகின்றார். படைப்பாற்றலின் செழுமையில் பிறந்து தவத்தில் உயர்ந்த கவிதைகள் இன்குலாப் கவிதைகள். மார்க்சியத்தின் சாரத்தைப் புரட்சி கொண்டு உணர்ந்த கவிஞர் உடைமை வர்க்கம் என்று முதலாளிகளைத் தன் கவிதைகளில் குறிப்பிடுகின்றார்.

"பீட்டர் சாலையில் பெய்த மழையால்
ராஜம் என்ற இந்நாட்டு ராணி
ராஜராஜனின் சிலைபோல் நனைந்தாள்
பதினேழு வயது... கனவுகள்
விழி வீதிகளில் தளர்வதும் போகும்

வசந்த காலம்

இவளோ வறுமையின் கைதி" (ஓ.பு, ப.69)

என்றும்,

"கோணி அடைப்பின் கந்தல் கண்களால்
உடைமை வர்க்கத்தின் உல்லாச மாளிகைகளைப்
பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுபவள்
ஊருக்கெல்லாம் கட்டிடம் கட்டும்
கொத்தனார் இவளைப் பெற்ற அப்பன் இவர்கள்
கோணிப்பை அடைப்புக் குடியிருப்பில்" (ஓ.பு., ப.69)

என்றும் காட்சிப்படுத்தியுள்ளார். மிகப்பெரிய உல்லாச மாளிகைகளைப் பார்த்து ஓர் ஏழைப்பெண் வருந்துவதாகவும், அவளின் தந்தை இது போன்ற மிகப் பெரிய மாளிகைகளைக் கட்டும் கொத்தனார். ஆனால் இவர்கள் கோணிப்பை போன்ற சிறிய குடியிருப்பில் வசிக்கின்றனர் என்று ஏழைகளின் துயரங்களைக் கூறி முதலாளிகளைச் சாடுகின்றார்.

"கடலில் பெரிய நீச்சலோட்டம்" என்ற கவிதையில் இன்குலாப், காலந்தோறும் மக்களுக்கு நடக்கும் சடங்குகள் எல்லாம் கடலில் நடப்பதாகவும் அதில் சுறாமீன்கள் பிற மீன் இனத்தின் நாட்டாமை என்று கூறியுள்ளார். அந்த கவிதையில் சுறாமீன்களை அரசியல்வாதிகள் (அ) முதலாளிகளாகவும் மற்ற மீன்கள் ஏழை மக்களாகவும் உருவகித்துள்ளார்.

"மீன்களின் நலனே சுறாக்களின் நலனாம்
சுறாக்களின் நலனே மீன்களின் நலனாம்
கட்டுப்படுவதும், கண்காணிப்பதும்
மீன்கள், சுறாக்களின்
கடமைகள் உரிமைகள்
கடமை தவறாத மீன்களுக்கெல்லாம்
கடலின் சொர்க்கம் நிச்சயம் உண்டு
சொர்க்கவாசல் சுறாக்களின் வாய் தான்" (ஓ.பு., ப.221)

இக்கவிதை வரிகளில் சமூகத்தில் உழைக்கும் மக்களைச் சுறாக்கள் போன்ற முதலாளிகள் சுரண்டிப் பிழைப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களை அழித்தும் விடுகின்றனர் என்கின்றார். இவ்வாறாக முதலாளித்துவம் பற்றிய கவிதைகள் தமிழன்பன், இன்குலாப் ஆகியோர் கவிதைகளில் மிகுதியாகக் காணமுடிகின்றது.

தொழிலாளி வர்க்கம்

தொழிலாளி தன் உழைப்பாற்றலை ஒருமுறை முதலாளிக்கு விற்று விட்ட பிறகு அவன் உழைப்பாற்றல் உருமாற்றப்பட்டு வேறு ஒரு பொருள் உருவாக்கப்பட்ட பிறகு அப்பொருள் மீது உரிமை கொண்டாட அவனுக்கு எவ்வித உரிமையுமில்லை. இப்பொருள் முதலாளிக்கு அதிக மதிப்பைக் கொடுக்கின்றது.

முதலாளிகள் உற்பத்திச் சாதனங்களைச் சொந்தமாகப் பெற்றிருப்பதன் மூலம் உழைப்பைச் சுரண்டுகிறார்கள். தொழிலாளி அவனுடைய உழைப்பாற்றலை மட்டுமே நம்பியிருக்கின்றான். அவன் உயிர் வாழ்வதற்குரிய நிலையானதொரு பிழைப்பு வழி தேவை. எனவே நிலங்கள், இயந்திரங்கள் முதலானவற்றின் மூலம் குவித்து வைத்துள்ள மூலதனத்தினால் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டுள்ள முதலாளிகளை அவன் நாட வேண்டியிருக்கிறது. நிலக்கிழார்கள் ஏராளமான நிலத்தைத் தன் பொறுப்பில் பெற்றிருப்பதன் மூலம் நிலமுதலாளியாகி மிகை மதிப்பைப் பெறுகின்றனர். இதனை,

> *“தொன்றுதொட்டு உழைப்பானது சுரண்டலுக்கு ஆட்பட்டு வருகிறது. உழைப்பின் நிலைமைக்குத்தக்கவாறு சுரண்டலின் அளவு மாறுபட்டு நின்றது. தொன்மைக் கிரேக்கச் சமுதாயத்தில் அடிமைத்தனம் ஒரு நிறுவனமாக விளங்கியது. பெரும் எண்ணிக்கையிலான அடிமைகள் தொழிற்சாலைகளில் வேலை செய்தனர். இவ்வடிமைகள் மட்டுமீறி உழைத்தார்கள். ஆனால் அவர்கள் உயிர் வாழ்வதற்கு சிறிதளவே உணவு தரப்பட்டது.*

ஆனால் அடிமைச் சொந்தக்காரன் தன் அடிமைகளால் பெற்ற மிகை மதிப்போ மிக அதிகம். "ஏதென்சு வீழ்ச்சி அடைந்ததற்கு அடிமை முறையே காரணம். அது அவர்களின் உழைப்பைச் சுரண்டியதோடு மட்டுமல்லாது அவர்களை இழி நிலைக்கும் உள்ளாக்கியது."[31]

என்று ஏங்கெல்சு குறிப்பிடுகின்றார்.

சமுதாயத்தில் ஏழைகளின் எண்ணிக்கை அதிகரிக்க தனியுடைமையும், உடைமை வர்க்கமும், அவ்வர்க்கத்தின் சுரண்டல் பண்பும்தான் முக்கிய காரணமாக இருக்கின்றன.

இன்றைய நூற்றாண்டிலும், இதற்கு முன்னரும் பாடிய மார்க்சியக் கவிஞர்கள் பெரும்பாலும் எதார்த்தவாதப் பாடல்களைப் பாடியுள்ளனர். அதாவது வர்க்க முரண்பாட்டைப் புரியவைத்து, அம்முரண்பாட்டால் விளையும் தீய விளைவுகளை எடுத்துக்காட்டி, அம்முரண்பாட்டைத் தீர்க்கவழி வகைகளைக் கூறியுள்ளனர். அவ்வகையில் தமிழன்பனின் "ஊர் சுற்றி வந்த ஓசை" என்ற கவிதைத் தொகுப்பில், 'வாழிய பாரத மணித் திருநாடு' என்ற கவிதையில்,

"இங்கே,
தொழில்கள் வளர்ந்தன.
தொழிலாளிகளின்
குரல்களை மென்று
வேளாண்மை வளர்ந்தது
உழுபவனின்
இரத்தப் பாசனத்தில்" (த.க.தொ.1, ப.409)

---

31. பிரெடரிக் ஏங்கெல்சு, 'குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், பக்.185-186.

என்று தொழிலாளர்கள் வளர்த்த தொழில்கள் நன்றாக வளர்ந்தன. ஆனால் தென்னை வளர்த்தவன் எப்படி தேங்காய் அடுத்த வீட்டில் சென்று விழுவதை எண்ணி புலம்புவானோ? அதுபோல தொழில்களை வளர்த்தவன் பயன்பெறாமல் உழைத்ததை எண்ணி புலம்பிக் கொண்டிருக்கின்றான் என்று தமிழன்பன் கூறுகின்றார்.

"கதவை தட்டிய பழைய காதலி" என்ற கவிதைத் தொகுப்பில், 'மே நாளே வா' என்ற கவிதையில்,

"காடழித்து வயலாக்கிக்
கணக்கற்ற பயிர் விளைத்துத்
தேடி நலம் கொழிப்பவர்-மே
நாளே வா!" (த.க.தொ.2, ப.192)

என்று காடுகளை அழித்து வயல்களாக்கி நாட்டை புதுப்பித்துக் கொண்டு உழைப்பவர்களின் நினைவாகக் கொண்டாடப்படுவது மே தினம் என்கிறார். இதில் உழைப்பாளர்களின் உழைப்பின் உன்னதத்தை உணர்த்தும் விதமான கவிதைகளைத் தமிழன்பன் படைத்துள்ளார்.

"கட்டிடங்கள் வாய்க்கால்கள்
கவிதை நகர மாக்கி நிலம்
பட்டொளிரச் செய்தவர் சீர்
நாளே வா!" (த.க.தொ.2, ப.193)

என்று உழைக்கும் தொழிலாளர்களின் பண்புகள் குறித்துக் கவிஞர் குறிப்பிடுகின்றார்.

இத்தகைய உழைக்கும் கரங்கள் பொங்கி எழுந்தால் எப்படி இருக்கும் என்று தமிழன்பன் "தோணி வருகிறது" கவிதைத் தொகுப்பில், 'தண்ணீரால் வெறுக்கப்பட்ட தாகங்களே' என்ற கவிதையில்,

"விரல்களே ஈட்டியானால்
விமோசனம் பிறந்திடாதா?
மின்மினி வேள்வி செய்தால்
வெயில் வட்டமாகும்! பச்சைப்
புல்நுனி வேள்வி செய்தால்
பூகம்பம் நடத்திக் காட்டும்!
விரல்களை ஈட்டியாக்கும்
வேள்வியின் அழைப்பை ஏற்பீர்" **(த.க.தொ.2, ப.235)**

என்று பாட்டாளிகள் ஒன்று சேர்ந்து போரிட்டால் தொழிலாளர் நலனுக்கான வழி பிறக்கும் என்று தமிழன்பன் கூறுகின்றார்.

'சிவப்பு முக்கோணம்' என்ற கவிதையில் தொழிலாளர்கள் ஒன்று கூடி போராட்டம் நடத்தினால் வெற்றி கிடைக்கும் என்ற மார்க்சியக் கருத்தைக் கொண்டு தமிழன்பன் எழுதிய கவிதை,

"சுதிதேய்ந்த யாழ்மேடைச்
சோக நரம்புகளாம்
தொழிலாளர் போராட்டம்
தொடங்கினால் பொன்னப்பன்
எரிமலைக்குள் பிறப்பெடுப்பான்
இடிமுகாம்கள் அமைத்திடுவான்.
கொடி மின்னல் கொண்டு வந்து
கொடிக்கயிறு கட்டிடுவான்.
வளைக்கின்ற வறுமைக்கு
வளைகின்றான்.... ஓடிய வில்லை" **(த.க.தொ.2, ப.252)**

என்று போராட வேண்டும் என்ற துணிவை தமிழன்பனின் இக்கவிதை வரிகள் வெளிக்காட்டுகின்றன.

"தமக்கென்று சொந்தமாக உற்பத்தி சாதனங்களைப் பெற்றிராதவர்களுக்கு வாழ்க்கையை நடத்துவதற்குத் தமது உழைப்புச் சக்தியை விலைபேசி விற்க வேண்டிய நிலைமைக்குத்

தாழ்த்தப்பட்டிருப்பவர்களுமான நவீன காலத்துக் கூலி உழைப்பாளிகளின் வர்க்கம் பாட்டாளி வர்க்கம்"[32]

இந்த வர்க்கத்தைச் சேர்ந்த உழைப்பாளிகள் வேலை கிடைத்தால் மட்டுமே வாழமுடியும் என்ற நிலையில் உள்ளனர்.

தமிழன்பன் "தீவுகள் கரையேறுகின்றன" என்ற கவிதைத் தொகுப்பில், 'உழைப்பவன் உயர்கிறானா?' என்ற கவிதையில்,

"ஊரை உலகை உழைப்பு உயர்த்தும்
உழைப்பவனை அது உயர்த்துகின்றதா?
உராய்வு இல்லாமல் உலகம் சுழல
உழைப்புச் செக்கில் உடம்பைப் பிழிந்து
வேர்வை எண்ணெயை விநியோகிப்பவர்
வாழ்க்கை வெளிச்சத்தின் வரவேற்பு இழந்தனர்"
(த.க.தொ.3, ப.105)

என்கிறார். மக்களுக்காக ஒளியைத் தரப் பாடுபட்ட தொழிலாளர்கள் குறைவான கூலி பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாமல் வாழ்க்கை வெளிச்சத்தின் வரவேற்பை இழந்துவிட்டனர் என்கிறார் தமிழன்பன். ஒரு தொழிலாளி தான் பட்டபாட்டை மற்றொரு தொழிலாளிக்குக் கூறுவதாக,

"பாட்டாளித் தோழா
பாடு படு
பாடு படு
பாடுபட்டால் தான்
என் பாட்டு
உனக்குப்புரியும்" (த.க.தொ.3, ப.196)

என்று தமிழன்பன் தொழிலாளர்களின் துன்பத்தைப் பதிவு செய்துள்ளார்.

---

32. கார்ல்மார்க்ஸ், பிரடெரிக் ஏங்கெல்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை ப.46.

"அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம்" என்ற கவிதைத் தொகுப்பில் 'இந்தியனாக இறப்பதற்குப் பெருமைப்படு' என்ற கவிதையில்,

"அம்சத் திட்டங்கள்
ஆக்கப் பணிகள்
அனைத்திற்கும் அத்திவாரம்
தொழிலாளிகளே
அத்திவாரம் - புதைப்பதற்கு
மாற்று வார்த்தை வார்ப்பு
இந்த நாட்டில்
தொழிலாளி உயருவது
எல்லாம் முடிந்து
நாலுபேர் தூக்கும்போது தான்
அப்போது மட்டுமே
அவனுக்குத் தோள் கொடுக்க
ஆள்களுண்டு" (த.க.தொ.3, பக்.338-339)

என்கிறார். இவ்வாறாக தொழிலாளி இறந்த பின்புதான் அவனுக்காக உழைக்க நாலுபேர் வருகின்றனர். அவன் வாழ்க்கையில் உயர்வது இல்லை என்பதை 'எல்லாம் முடிந்து நாலுபேர் தூக்கும்போது தான் உயர்கின்றான்' என்று கவிஞர் கூறுவதன்மூலம் தொழிலாளர்களின் வாழ்க்கையை உணர்ந்துகொள்ள முடிகின்றது. இவ்வாறாக தமிழன்பன் கவிதைகளில் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை சுட்டப்பட்டுள்ளது.

அன்றைய சமுதாயச் சூழலில் அடிப்படைத் தேவைகள், இரந்துண்ணும் இழிநிலை, பொருள் இல்லாமல் அவதிப்படும் சூழ்நிலை இவை காலம்காலமாக மனித இனம் சந்தித்து வரும் அவலங்கள். இதனை உணரக்கூட முடியாமல் மக்கள் துன்பப்பட்ட வேளையில் காரல்மார்க்ஸின் சிந்தனைகள் மக்களைத் தட்டி எழுப்பியது. வாழ்க்கைப் போராட்டத்தின் எல்லையில் நின்று தவித்த மக்கள் கூட்டம் மார்க்சியக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்தது.

"மார்க்சியம் வரலாற்று நிகழ்ச்சியால் ஒரு கொள்கை இயக்கமாக உருப்பெற்றது. இவ்வியக்கத்தினரால் தோற்றுவிக்கப்பட்ட தனியுடைமை எதிர்ப்பு, பொதுவுடைமைக்கு வரவேற்பு, சுரண்டல் எதிர்ப்பு, உழைப்புக்கும் பாட்டாளிக்கும் பாராட்டு தொழிற்சங்க உரிமை, போன்ற பணிகள் சமுதாயத்தில் சிக்கல்களாக விளங்கின. அரசியல் இயக்கமாக தொடங்கப்பெற்ற மார்க்சியம் தன் கொள்கைகளையும் மேற்கூறிய சிக்கல்களையும் மக்களிடையேப் பரப்புவதற்குக் கலைகளைக் குறிப்பாக இலக்கியத்தைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டது"[33]

என்பார் இரா.சம்பத். இவ்வாறாக இலக்கியத்தின் ஒரு கூறான கவிதைகளில் இன்குலாப்பின் பங்களிப்பும் போற்றுதற்குரியதாகும்.

அரசியல் நடத்துபவர்கள் இனிவரும் காலங்களில் மக்களைச் சுரண்டி பிழைக்க முடியாது என்பதை இன்குலாப்-பின் 'யுகப்பிரளயம்' என்ற கவிதையில்,

"சுரண்டல் சாம்ராஜ்யங்களின்
தர்பார் மண்டபங்களில்
நீங்கள் புரோகிதம்
புரிந்தீர்களோ
அந்தச் சாம்ராஜ்யங்கள்
பரிவாரங்கள்
வேதங்கள்
பஜனைகள்
எல்லாம் இந்த யுகப் பிரளயத்தின்
கந்தக அலைகளால்
சாம்பலாகின்றன" **(ஓ.பு, ப.19,20)**

என்று அரசியல், ஆட்சிமுறையைப் பின்பற்றி தொழிலாளர்களைச் சுரண்டிப் பிழைக்கும் வர்க்கங்கள் இனி அழிந்து விடும் என்று முழக்கமிடுகின்றார்.

---

33. **இரா.சம்பத், புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம், ப.210.**

வேலைகளுக்காக அடிமைகளாக இருந்த காலம் மாறவேண்டும் என்பதே பாட்டாளிகளுக்காகப் பாடும் கவிஞர்களின் கருத்தாகும். அத்தகைய சிந்தனைப் படைப்பாளிகளுக்கு இருந்தால்தான் சமூக மறுமலர்ச்சி ஏற்படும்.

இன்று உழைத்தால் நாளை பலன் பெற முடியும் என்பது நம்பிக்கை. ஆனால் உழைப்பவன் உழைத்துக்கொண்டு மட்டும்தான் இருக்கின்றான். உயர்வு என்பது அவனுக்கு எட்டாக் கனியாகப் போய்விட்டது. மேல்தட்டு மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலையை உருவாக்கிய தொழிலாளி பற்றி,

"உரிமை கேட்டு
எங்கள் உதடசைத்தால்
உங்கள் சிரிப்பைக்
காட்டியே எங்களை
மயக்குகிறார்கள்
எங்கள்
வேர்வை முத்துக்களை
இந்தப் பனியாக்கள்
மலிவான விலைக்கு
வாங்கும் போது" (ஒ.பு, பக்.18,19)

என்று பாடியுள்ளார். உழைக்கும் தொழிலாளர்களின் வியர்வைகளை முதலாளிகள் மலிவான விலைக்கு வாங்குகிறார்கள் என்கிறார் இன்குலாப்.

'பிரமிடுகள்' என்ற தலைப்பில் கவிஞர் சீனப்பெருஞ்சுவர், தாஜ்மஹால், உலகப் பிரமிடுகள் என்று நாம் அதிசயப்படுகிறோம். ஆனால் அதில் எத்தனை எத்தனை வேதனைகளும் துன்பக் கதைகளும் கண்களில் இரத்தம் சொரியச் செய்கின்றன. பரோமன்னர்களின் பிரமிடுகளின்மீது வரையப்பட்ட, செதுக்கப்பட்ட கண்ணீர் சிற்பங்கள் பற்றி இன்குலாப் குறிப்பிடும்போது,

"இவர்கள் ஏந்திய
இன்ப மதுக் கிண்ணத்தில்

ஏழை அடிமையரின்
இரத்தம் நிறைந்தது
. . . .
இவர்கள் எழுப்பிய
இந்தப் பிரமிடுகள்
அடிமை வர்க்கத்தின்
வேர்வை அதிசயங்கள்" (ஒ.பு., ப.23)

என்று கூறியுள்ளார். மனிதனுக்குத்தான் வரலாறு. விலங்குகளுக்கு இல்லை. அதுபோல் அடிமை விலங்கு என்பது மனிதனுக்கு இல்லை. இங்கே மனித விலங்குகள், விலங்குகள் பூட்டப்பட்டு சிறையில் இருப்பது போன்ற வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர்.

'வெண்மணி' என்ற கவிதையில் கீழவெண்மணியில் கொத்தடிமைகள்போல வாழ்ந்த உழைப்பாளிகளை எரித்துச் சாம்பல்களாய்க் கூலியைத் தந்த பண்ணையார்களின் நிழல்கள்கூட உழைப்பினை எரிக்கின்றன என்று கவிஞர் கூறுகிறார். அதிகார வர்க்கம் எதையும் செய்யலாம் என்ற துணிவு, குச்சி அடுப்பெரியப் பற்றாத நெருப்பெல்லாம் இன்று கூரை எரித்தது. அழும் குழந்தைகளைத் தாயின் மடியோடு கொழுத்திய கொடுமை நடந்தது என்று கூறும் இன்குலாப்,

"கொத்தடிமை வளர்த்திடும் பண்ணைகள் ஆதிக்கக்
கொடுமையின் சிகரமிது
சத்தியம் புதைத்தது
மானுடம் எரிந்தது
வெண்மணி குடிசைகளில் - நியாயம்
தணலில் வெந்ததம்மா" (ஒ.பு, ப.343)

என்பதில் எத்தனை சோகங்கள் உண்மையாகிவிட்டன. சுட்டெரித்த ஏழைகளின் சாம்பல் துகள் ஒவ்வொன்றும் பற்றும் ஊழித்தீயாக சுழன்று கொண்டுள்ளதை அறியமுடிகிறது. கூலியை உயர்த்தித் தரவேண்டும் என்ற கோரிக்கை வைத்த

உழைப்பாளர்களைத் தீக்கிரையாக்கிய முதலாளிகளின் கொடுஞ்செயலை வைத்து 'வெண்மணி' என்ற கவிதையை இன்குலாப் எழுதியுள்ளார்.

> *"மக்களின் ஒரு பிரிவினர் இன்னொரு பிரிவினருடன் போராடுவதாகும். உரிமையாளர்களையும் கொடுமையாளர்களையும் புல்லுருவிகளையும் எதிர்த்து சகல உரிமையற்றவர்களும் அடக்கப்பட்டவர்களும் பாட்டாளி மக்களும் நடத்தும் போராட்டம். சொத்துடைமையாளர்கள் அல்லது பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து கூலித் தொழிலாளர்கள் அல்லது புராலிடேரியன்கள் நடத்தும் போராட்டம்"*[34]

என்று லெனின் பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட வாழ்க்கையைச் சுட்டிக்காட்டுகின்றார்.

'ஒரு நாள்' என்ற கவிதையில் சூரிய உதயம் இங்கு விடுதலைச் சூரியன் என்று உவமிக்கின்றார். ஏழை உழவர்களின் நினைவுச் சின்னங்களில் ஆயிரம் ஆயிரம் கதிர்களை விரிக்கிறான். மறையாமல் இன்னும் சுடர்கிறான் என்று பாடும் கவிஞர் இன்குலாப்,

"அக்டோபர் மாசத்தில்
ஏதோ ஒரு நாள்
எரிந்து சிவந்தது
முளையிலே கிள்ளி எறிவதற்காக
நீண்ட ஆதிக்க இரும்புக்கரங்கள்
உழவர் புரட்சிச் சம்மட்டி அடியால்
நொறுங்கும் போதெல்லாம்
நூறு நூறு
தீயின் கொழுந்துகளாய்
அப்பு சிரிக்கிறான்.

---

34. லெனின், கிராம ஏழை மக்களுக்கு, ப.101.

தீண்டும் அதிகாரக்

கரங்களை எரிக்கிறான்" (ஒ.பு, ப.267)

என்கிறார். தமிழகத்தில் நடந்த உழவர் புரட்சியின் முதல் இடியாக முழங்கிய தோழர் 'அப்பு' நினைவில் கவிஞர் மனதில் தோன்றிய கவிதை உழைக்கும் மக்களுக்கும் அதைச் சுரண்டும் முதலாளிகளுக்கும் இடையிலான அடக்குமுறைகள் ஆளுமைகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்பது இன்குலாப் கருத்தாகும்.

சுரண்டல்

முதலாளிவர்க்கத்தால் சுரண்டப்படுவதும், பாட்டாளி வர்க்கத்தால் உற்பத்தி செய்யப்படுவதுமாகிய மிதமிஞ்சிய செல்வமே சமுதாயத்தில் எதிரெதிராக நிற்கும் இரண்டு வர்க்கங்களின் அமைதியின்மைக்கு முக்கியக் காரணமாகும். முதலாளியச் சமுதாயத்தில் பாட்டாளிகளின் உழைப்பு சுரண்டப்படுகிறது. தான் பெறும் கூலிக்கு உழைப்பைவிடப் பன்மடங்கு அதிகமாகப் பாட்டாளிகள் உழைக்கிறார்கள். ஆனால் இந்த மிகை உழைப்பிற்குத் தொழிலாளர்களுக்கு எவ்விதக் கூலியும் கொடுக்கப்படுவதில்லை. மூலதனத்தின் உரிமையாளர் என்ற முறையில் முதலாளி மிகை மதிப்பு முழுவதையும் கைப்பற்றுகிறபோதுதான் சிக்கல் ஏற்படுகிறது. முதலாளியச் சுரண்டலுக்கு இதுதான் மூலகாரணமாகும். சுரண்டலின் தீவிரம் எண்ணிறந்த வழிகளில் வளர்க்கப்பட்டு மூலதனம் ஒரு சிலரின் கைகளில் குவிக்கப்படுகிறது.

> *"தொன்றுதொட்டு உழைப்பானது சுரண்டலுக்கு ஆட்பட்டு வருகிறது. உழைப்பின் நிலைமைக்குத் தக்கவாறு சுரண்டலின் அளவு மாறுபட்டு நின்றது. தொன்மைக் கிரேக்கச் சமுதாயத்தில் அடிமைத்தனம் ஒரு நிறுவனமாக விளங்கியது. பெரும் எண்ணிக்கையிலான அடிமைகள் தொழிற்சாலைகளில் வேலை செய்தனர். இவ்வடிமைகள் மட்டுமீறி உழைத்தார்கள். ஆனால்*

இவர்கள் உயிர்வாழ்வதற்கு மனித உருவைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சிறிதளவு உணவே தரப்பட்டது. ஆனால் அடிமைச் சொந்தக்காரன் தன் அடிமைகளால் பெற்றமிகை மதிப்போ மிக அதிகம்”[35]

முதலாளியின் கீழ் வேலை செய்யும் பாட்டாளிகள் உடலுழைப்பைத் தந்தே வாழ வேண்டியவர்களாயிருக்கிறார்கள். பாட்டாளிகளைப் பொருத்த வரையில் அவர்களது உழைப்புதான் அவர்களுக்கு முதல். உழைப்பை நம்பியே அவர்களிருக்கிறார்கள். உழைப்பை மட்டுமே வைத்துக் கொண்டுள்ள பாட்டாளிக்கு வேறு எந்த சேமிப்பும் கிடையாது. அவன் எப்போதும் ஏழை. தன்னிடம் இருக்கும் உழைப்பினை விற்றால்தான் சோறு. எனவே, நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறான். இந்தத் தருவாயில் முதலாளிகள் அவர்களது உழைப்பைக் குறைந்த கூலிக்கு வாங்குகிறார்கள். இவ்வாறு தொழிலாளர்களை முதலாளிகள் சுரண்டுகிறார்கள்.

“பொருளின் மதிப்பை உருவாக்குகிற தொழிலாளிக்குக் குறைந்த கூலி தரப்படுகிறது. முதலாளி மேலும் செல்வத்தைப் பெருக்குகிறார். ஆலைகள் பெருகுகின்றன. எந்திரங்கள் வருகின்றன. இதனால் எண்ணற்ற தொழிலாளர்கள் வேலைக்கு வருகின்றனர். பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது. குட்டிப் பூர்ஷ்வா என்றழைக்கப்படும் சிறு முதலாளிகளின் தொழில்கள் நசுக்கப்படுகின்றன. அவர்கள் மூலதனத்தை இழக்கிறார்கள். பின்னர் அவர்களும் தொழிலாளர் அணியில் வந்து சேருகிறார்கள்.”[36]

என்று சுரண்டல் பற்றி அரங்க. சுப்பையா கருத்து தெரிவிக்கின்றார்.

---

35. பிரெடரிக் ஏங்கெல்சு, ‘குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், பக்.185-186.

36. அரங்க. சுப்பையா, இலக்கியத் திறனாய்வு-இசங்கள்-கொள்கைகள், ப.332.

தொழிற்புரட்சியின் விளைவாக நிலப்பண்ணைப் பொருளாதாரம் முதலாளியப் பொருளாதாரமாக மாறியபோது முதலாளி வர்க்கம், கூலி உழைப்பாளிகளைத் தீவிரமாகச் சுரண்டியது. இதனால் தொழிலாளர்கள் மேலும் வறுமை நிலை அடைந்தனர். எனவே தொழிலாளர்கள் தாமாகவே விருப்பப்பட்டு முன்வந்து முதலாளிக்கு மூலதனத்தைக் குவிப்பதற்கு வசதியாக மிகை மதிப்பை அவர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தங்கள் உழைப்பாற்றலைச் செலுத்துவதற்கு ஒத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

இப்படியாக காரல்மார்க்ஸின் கொள்கைகளில் மக்களுக்காக, போராடும் போராட்ட மனப்பான்மையைக் கவிஞர்களும் பின்பற்றத் தொடங்கிவிட்டனர். அந்த வகையில், பாட்டாளி வர்க்கத்திற்காகப் புரட்சிகர கலைஇலக்கியம் படைக்கும் படைப்பாளிகள் மார்க்சிய சித்தாந்தத் தெளிவோடு படைக்க வேண்டும் என்பதை இன்குலாப் கவிதைகள் நிறுவுகின்றன.

மார்க்ஸ் நினைவு நூற்றாண்டு விழாவில் கவிதை வாசித்த இன்குலாப் கனவுகளின் இடத்தில் விஞ்ஞானத்தை வைத்த உங்களை ஒரு மனிதராகக் கண்டே மரியாதை செய்கிறோம் என்று சதங்கை கட்டாத வார்த்தைகளைக் கொண்டும் அரிதாரம் மினுக்காத கருத்துக்களைக் கொண்டு எழுதப்பட்ட கவிதை,

"மானுடம் கருகிய
வயிற்றுத் தீயினும்
வானத்தில் வேறு
நரகத்தீ உண்டோ?
வேர்வைத் துளிகளின்
அற்புதத்தைக் காட்டிலும்
ஆகாயம் வேறு
சொர்க்கம் கண்டதோ?" (ஒ.பு., ப.279)

என்று பாடியுள்ளார். போராளி மார்க்சின் சிந்தனைத் தேடலில் இன்றைய உலகம் வெற்றி காண்கிறது. குன்றுகளிலும், குகைகளிலும், பள்ளத்தாக்கிலும் சமவெளியிலும், கரையிலும், கடலிலும், மண்ணிலும், விண்ணிலும், களத்துமேட்டிலும், தொழிற்சாலையிலும், வீட்டிலும், தெருவிலும், சிதறுண்டு கிடக்கும் தீப்பொறிகள் எல்லாம் மார்க்ஸ் என்னும் சூரியனில் இருந்து புறப்பட்டவை.

பாட்டாளிவர்க்கப் பார்வையோடு சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும் என்ற துடிப்பு உணர்வை ஏற்படுத்த முனைபவர் மார்க்ஸ் என்பதை இன்குலாப் 'த வாரிஷ்' என்ற கவிதையில்,

"வைர மகுடத்தைப் புழுதிக் கால்களின்
விளையாட்டுப் பந்தாக்கி-ஆளும்
வாரிசு வர்க்க அரண்மனை வாழ்க்கையைக்
குடிசைகளால் அடித்து-சுரண்டல்
கொடுமைகளை முடித்து
தோழன் எங்கள் தோழன் – கைகளில்
தொல்லை விலங்குகள் முறிக்கின்றான்" (ஓ.பு., ப.255)

என்று வெளிப்படுத்தியுள்ளார். தொழிலாளர்களின் கைகளை முறிக்கும் சுரண்டல் முதலாளிகளைச் சாடும் விதமாக அவர்களை எதிர்க்கும் ஏழை வர்க்கம் இனி உருவாகும் என்பதைக் கூறுகின்றார்.

முதலாளியப் பொருளாதாரத்தின் தனிச்சிறப்பு, அதிக அளவில் தொழிற்சாலைகளை உருவாக்குவது என்பதாகும். இதனால் பொருளுற்பத்தி அதிகமாகிறது. தன் பொருட்களை விற்பதற்கு இடைவிடாமல் விரிவடையும் சந்தைகள் முதலாளி வர்க்கத்திற்குத் தேவைப்படுகின்றன. இதுவரை தொழிலாளர்களைச் சுரண்டி வந்த முதலாளிவர்க்கம் இச்சந்தைகள் மூலமாகப் பயனீட்டாளர்களையும் சுரண்டத் தொடங்குகிறது. இத்தகைய சுரண்டல்

வர்க்கத்தை இன்குலாப் எதிர்த்துக் குரல் கொடுக்கின்றார். 'மாவோ' என்ற கவிதையில்,

"சுரண்டலுக்கெதிரான
கத்தியும்
துப்பாக்கியும்
உழைக்கும் வர்க்கத்தின்
போதியும்
சிலுவையும்
இந்த
மனிதாபிமானத்தின் கனிந்த வெளிப்பாடே
தூக்குக் கயிற்றையும் துச்சமாய் மதிக்கிறது" **(ஓ.பு., ப.264)**

என்று சுரண்டலுக்கு எதிராகப் போராடித் தூக்குக் கயிற்றையும் துச்சமாக, மதிக்கும் துணிவு வேண்டும் என்று கூறுகின்றார் இன்குலாப்.

வெயில் என்ற கவிதையில்,

"சுரண்டிக் கொழுப்பவர்கள்-உன்
சூட்டில் பொசுங்கவில்லை
சுரண்டப்படுபவர் தாம்-உன்
சூட்டில் பொசுங்குகிறார்" **(ஓ.பு., ப.320)**

என்று சுரண்டும் முதலாளிகள் வெயிலில் சுடப்படுவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

தமிழன்பன் கவிதைகளில் 'சுரண்டல்' பற்றிய கருத்துக்கள்

தொழிலாளி தன் உழைப்பாற்றலை ஒருமுறை முதலாளிக்கு விற்று விட்ட பிறகு அப்பொருள்மீது உரிமை கொண்டாட அவனுக்கு எவ்வித உரிமையுமில்லை. அப்பொருள் முதலாளிக்கு மிகை மதிப்பைக் கொடுக்கிறது. இவ்வாறு தொழிலாளியின் உழைப்பாற்றலால் உருவான பொருளுக்கும் அவனுக்கும் தொடர்பில்லாமல் அவன் அன்னியப்படுத்தப்படுகிறான்.

இப்படிப்பட்ட தொழிலாளர்களின் நிலைகளையும், தாங்கள் சுரண்டப்படுகின்றோம் என்ற உணர்வும் இல்லாமல் உழைப்பவர்களையும் தமிழன்பன் கவிதைகளில் சுட்டிக்காட்டுகின்றார்.

"திரும்பி வந்த தேர்வலம்" கவிதைத் தொகுப்பில், 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' என்ற கவிதையில்,

"உலகம் உண்ண உண்
என்றாய்!
இதற்கு
விரிந்த கைக்காம்புகளில்
சோற்றுக் கவளமலர்
சூட்டென்று
பொருள் அல்ல.
சுரண்டாதே என்பதே இதன் சூத்திரம்" (த.க.தொ.1 ப.240)

என்று இந்த உலகம் முதலாளிகளின் பக்கமாகச் சுற்றுகின்றது. அம்முறையை மாற்றும் அச்சாணியாகத் தொழிலாளர்கள் இருக்க வேண்டும் என்று தமிழன்பன் கூறுகின்றார்.

"கதவைத் தட்டிய பழைய காதலி" என்ற கவிதைத் தொகுப்பில் 'நெடு மூச்சு' என்னும் கவிதையில்,

"உலகமெல்லாம் பரவுமணம் சிறுநெருப்பை
ஊதிவிடும் ஓரேழை நெடுமூச் சென்பேன்
பலகாலும் ஆள்வோனின் கொடுமை தன்னால்
பதைத்திட்டோர் நெடுமூச்சில் ஆட்சி மேடை
கலகலத்து வீழ்ந்த துண்டு கண்கலங்கிக்
கதறுகின்ற உழைப்பாளன் நெடியமூச்சில்
வெலவெலத்துப் பணமூட்டை சரிந்த துண்டு
விண்மேகம் நெடுமூச்சில் நகர்வதுண்டு" (த.க.தொ.2, ப.118)

என்று ஏழைகள் படும் துன்பத்தையும், அவர்களைச் சுரண்டிப் பிழைக்கும் முதலாளிகளின் பணமூட்டை ஏழைகளின் பெருமூச்சினால் சரிந்து விட்டதாகவும் கவிஞர் தமிழன்பன் பாடுகின்றார்.

"காலத்திற்கு ஒரு நாள் முந்தி" என்ற கவிதைத் தொகுப்பில், 'பாரத தரிசனம்' என்னும் கவிதையில்,

"பாம்புக் கூண்டில்
பலநாள் வாழ்வதைச்
சாதனை என்று
சேதி தருகின்றனர்
பாம்புக் கூண்டுகள்
பத்திரமானவை!
சுரண்டும் சமூகத்தில்
இந்தியன்,
சுவாசம் விடுகிறானே
அதுவல்லவா அதிசயம்?" **(த.க.தொ.3, ப.219)**

என்று பாதுகாப்பற்ற வாழ்க்கை வாழும் ஏழைகள் பணமுதலைகளால் சுரண்டப்படுகின்றனர் என்கிறார்.

> *"முதலாளித்துவ உலகில் உழைப்பாளிகள் அனுபவிக்கும் இன்னொரு பெருந்தொல்லை வேலையில்லாத் திண்டாட்டம் ஆகும். வளர்ச்சி மிக்க பூர்ஷ்வா நாடுகளில் லட்சோப லட்சம் மக்கள் வேலைவாய்ப்பு அற்றவர்களாக இருக்கிறார்கள். உழைப்பாளி மக்கள் வர வர அதிகமாகச் சுரண்டப்படுதல், அவர்களது வாழ்க்கைத் தரம் தாழ்தல், அவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றின் விளைவாக*

முதலாளித்துவச் சமூகத்தில் வர்க்கப் போராட்டம் தீவிரம் அடைகிறது"[37]

என்று மக்களின் உழைப்பைச் சுரண்டும் முதலாளி வர்க்கத்தை எதிர்த்து தொழிலாளி குரல் எழுப்ப வேண்டும் என்கிறார் மார்க்ஸ்.

உழைப்பு

தொழிலாளர்கள் சமுதாயத்தின் உயிர்நாடி போன்றவர்கள். இவர்களின் நேர்மையான உழைப்பும் ஒற்றுமையும் சமுதாய முன்னேற்றத்திற்கானப் படிக்கற்களாகும்.

நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுபவர்கள் உழைப்பாளர்கள். எனவே, அவர்களை நாட்டின் முதுகெலும்பு என்று சிறப்பிக்கின்றனர். தொழிலாளர்களுள் பெரும்பான்மையோர் வறுமை நிலையிலேயே இருக்கின்றனர். உரிமைக்காகப் போராடும்போது இவர்களுக்குச் சிறுசிறு சலுகைகள்கூட இல்லாமல் போய்விடும். உழைப்பாளர்கள் நாட்டைச் சீர்மைப்படுத்துபவர்கள். உழைக்கும் மக்களின் உணர்ச்சிகளை அரசும், முதலாளிகளும் ஏற்பதில்லை, புரிந்து கொள்வதுமில்லை.

"மண்மீதில் உழைப்பாரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலைவர் செல்வராம் இதைத்தன்
கண்மீதில் பகலிலெல்லாம்
கண்டு கண்டந்திக்குப் பின்
விண்மீனாய்க் கொப்பளித்த
விரிவானம்"[38]

---

37. தத்துவம் தொடக்கப்பயிற்சி நூல், ப.334.
38. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப.34.

என்று அரசு, அரசியல் என்ற போர்வைக்குள் தம்மை எதிர்க்கும் எவரையும் மன்னர்களும், அமைச்சர்களும் விட்டுவைப்பதில்லை எனப் பாரதிதாசன் கூறுகின்றார்.

இன்குலாப் கவிதைகளில் உழைப்பு

பொதுவுடைமை நடைமுறைக்கு வரும் காலத்தில் சமூகநீதி செழித்தோங்கும். உழைப்பால் உற்பத்தியாகும் பொருள்கள் உழைப்பவர்கட்கே சொந்தமாகும். ஆனால் இன்றைக்கு எத்தனையோ தொழிற்சங்கங்கள் வைத்து உரிமை கேட்டும் எத்தகைய பயனும் விளையவில்லை. உழைப்பாளர் நாளும் நாளும் உழைத்து உருக்குலைந்து போகின்றனர். வறுமை, பசி, துன்பம் ஆகியவற்றால் அவர்கள் வருந்துவதும் வாடிக்கையாகி விட்டது. இதனை இன்குலாப் 'நீங்கள் என்னைக் கம்யூனிஸ்ட் ஆக்கினீர்கள்' என்ற கவிதையில்,

"அடடா....
போராடும் போது தான் மனிதன் பிறக்கிறான்
நான் தான்
அரசியலை விரும்பாத சராசரி ஆயிற்றே
உழைப்பைப் பலி கொடுத்து உரிமை பெறாத
நாட்கள் என் நினைவில் நகர்கின்றன" (ஒ.பு., ப.78)

என்று உழைக்கும் தொழிலாளர்களின் கனவினைப் பற்றிப் பாடுகின்றார். 'வயல் வெளிகளின் கதாநாயகன்' என்ற கவிதையில்,

"பாழ்வெளியான பூமிப்படுதாவில்
உழைப்புத் தூரிகையால் ஓவிய வயல்களை
வரைந்த கைகளின் வாரிசுகள் யார்?
பிரபஞ்சம் நடத்திய அழகுப் போட்டியில்
பூமியின் உடலை வயல்களால் வார்த்துக்
கோள்களை எல்லாம் வெற்றிக் கொள்ள
வைத்தவை எந்த வர்க்கத்தின் கைகள்?" (ஒ.பு., ப.83)

என்று வயல்வெளிகளை உருவாக்கியவர்கள் உழைப்பாளிகள் என்பதை வெளிப்படுத்துகின்றார். இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு பொருள்களையும் இறைவன் படைத்தான் என்பர் ஆன்மிகவாதிகள். மார்க்சியவாதிகள் இவ்வுலகில் உள்ள எல்லாப்பொருட்களும் உழைக்கும் மக்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது என்பர். அதேகருத்தை இன்குலாப் தன் கவிதையில் கூறியுள்ளார்.

சமுதாயத்தில் உழைப்பவன் அதன் பயனை இன்று அனுபவிக்க இயலவில்லை. உழைக்காத முதலாளி அதன் பயனை அனுபவிக்கின்றான் என்கின்றனர்.

'நட்சத்திரங்களை வெற்றி கொள்ள வேண்டிய நீ' என்ற கவிதையில் இன்குலாப்,

"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே
என்ற புல்லாங்குழலின் கீதத்தால்
எவ்வளவு காலம் நீ ஏமாற்றப்படுவாய்....
பங்களா முன் உள்ள பசும்புல் வெளிகளில்
சாயும் சூரியனின் தங்கரேகைகளில்
உலாவருபவர்கள் உபதேசம் செய்கிறார்கள்
உழையுங்கள்... உழைத்தால் உயர்வீர்கள்" (ஒ.பு., ப.107)

என்று உழைப்பைச் சுரண்டி பிழைக்கும் முதலாளிகள் ஏழைகளைச் சுரண்டுகின்றனர். வேர்வையில் நனையும் ஏழைகள், எப்பொழுதும் வேர்வைத் துளிகளை மட்டுமே கூலிகளாகப் பெறுகின்றனர் என்று இன்குலாப் உழைக்கும் பாட்டாளி மக்களின் நிலைக்காக இரங்கிப் பாடுகின்றார்.

தமிழன்பன் கவிதைகளில் உழைப்பு பற்றிய சிந்தனை

உலகத் தொழிலாளர்களின் பெரும்பான்மையான போராட்டங்கள் தோல்வியுற்றதற்குக் காரணம் சிலர், முதலாளிகள் தரும் சிறு சிறு சலுகைகளாலும்,

பணத்தாலும் ஆசைகொண்டு ஒற்றுமையின்றிச் சிதறிப் போவதே ஆகும். இத்தகைய சிறுசிறு பொருட்களுக்கும், சலுகைகளுக்கும் ஆசைப்படாமல் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு உழைத்து அதற்கேற்ப கூலிக்கான போராட்டங்களையும் நடத்தி வெற்றி பெறவேண்டும்.

> *"சுரண்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வரும் வர்க்கம் (பாட்டாளி வர்க்கம்) சுரண்டியும் ஒடுக்கியும் வரும் வர்க்கத்திடமிருந்து (முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து) இனி, தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமானால் சமுதாயம் அனைத்தையும் சுரண்டலில் இருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் என்றென்றைக்குமாய் விடுவித்தே ஆக வேண்டும்"*[39]

என்று ஏங்கெல்சு குறிப்பிடுகின்றார். இன்றளவும் உலகம் முழுவதும் முதலாளி-தொழிலாளி பிரச்சினைகள் உழைப்பினை மையமிட்டு நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

பாடுபட்டு உழைத்து உருவாக்கிய வளமெல்லாம் பாழாய்ப் போனதை எண்ணி உழைப்பாளி வருந்துவதாகக் "கதவைத் தட்டிய பழைய காதலி" என்ற கவிதைத் தொகுப்பில், 'முயற்சியும் தளர்ச்சியும்' என்ற கவிதையில்,

> *"வேர்வை பொழிந்தொரு*
> *நேரிய பூம்பொழில்*
> *பாரில் பயன் தர ஆக்கி வைத்தேன்-அங்கு*
> *யாருமே வந்திலர் இன்புறவே"* **(த.க.தொ.2, ப.97)**

உழைப்பாளியின் எண்ணத்தை எடுத்துக்காட்டுகின்றார் கவிஞர்.

'ஒளியேற்ற வாருங்கள்' என்ற கவிதையில்,

> *"உடல் தேய உழைத்தவர்கள்*

---

39. **ஏங்கெல்ஸ், கலை இலக்கிய ஈடுபாடும் அறிவும், ப.75.**

ஓடாகத் தேய்ந்தவர்கள்
முடம்பட்டுத் திரும்புகின்றார் பாருங்கள்
முன்வந்தே மனந்தேற்ற வாருங்கள்" **(த.க.தொ.2 ப.129)**

என்று உழைத்து முடமாகிப் போனவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டும் எனக் கவிஞர் பாடியுள்ளார். அதேபோல், "தோணி வருகிறது" என்ற கவிதைத் தொகுப்பில், 'அவர்கள்' என்ற கவிதையில்,

"அவர்கள் வேர்வை கடலாகிறது
அதில் சிலர் வாழ்வு படகாகிறது" **(த.க.தொ.2 ப.221)**

என்று உழைப்பவர்கள் உழைத்துக் கொண்டேதான் இருக்கின்றனர். அவர்களைச் சுரண்டிப் பிழைப்பவர்களும் நன்றாகப் படகின்மீது பயணித்துக் கொண்டுதான் இருக்கின்றனர் என்கின்றார்.

"அடிமைத்தனம் அல்லது கொத்தடிமைத் தொழில் என்பது முதலாளி வர்க்கச் சுரண்டல் மூலங்களில் ஒன்றாகும். இந்தக் கொத்தடிமைத் தனத்திலிருந்தும் வட்டிக்குக் கடன் கொடுப்போரிடமிருந்தும் உழைப்பாளிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று சமதர்ம அறிக்கை கூறுகிறது"[40]

என்கிறார் கி.வீரமணி. இவரது கூற்றை நிறுவும் விதமாக "நாம் இருக்கும் நாடு" என்ற கவிதைத் தொகுப்பில், 'ஒரு விரல் தேவை' என்னும் கவிதையில்,

"உழைப்பவன் குருதியை
உறிஞ்சிக்
கொழுக்கும்
மூட்டைப் பூச்சிகளை
அழுத்துவதற்குப்

---

40. **கி.வீரமணி, நமது குறிக்கோள், ப.29.**

பழுத்த கோபத்தின்
ஒரு விரல் தேவை" (த.க.தொ.2 ப.490)

என்று உழைப்பாளர்களின் எதிரிகளாக இயங்கும் முதலாளிகளை இயங்கவிடாமல் செய்ய வேண்டும் என்கின்றார். இதற்கு உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்பட்டால்தான் முதலாளியச் சுரண்டலிலிருந்து அவர்கள் விடுபட முடியும். உழைப்பாளர்களைப் போற்றுதல் அவசியம் என்பதைத் "தீவுகள் கரையேறுகின்றன" என்ற கவிதைத் தொகுப்பில் 'கங்கையும் காவேரியும்' என்ற கவிதையில்,

"புன்னகை விளக்கேந்திப்
போகுமிடம் காட்டுங்கள்!
ஆரத்தி அவரவரின்
வேர்வையினால் எடுங்கள்!
உழைப்பவர்க்கே வாழ்வென்று
உங்கள் தலைமுறை
எழுதுகின்ற சாசனத்தை
எடுத்து வந்து காட்டுங்கள்" (த.க.தொ.3 ப.83)

என்று உழைப்பாளர்களின் பெருமைகளைப் பறைசாற்றுகின்றார். ஏழை மக்களிடம் தொழில்முறை அறிவு இருந்தது. ஆனால், அதற்கான போதிய பணம் அவர்களிடம் இல்லை; நிலமும் இல்லை. இதனால் அவர்கள் செல்வந்தர்களிடம் கூலி வேலை செய்து பொருளைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் கூலி வேலை செய்து முதலாளிகளுக்கு மூலதனத்தைப் பெருக்கிக் கொடுத்தனர்.

"ஊமை வெயில்" என்ற கவிதைத் தொகுப்பில், 'வளரும் பாரதம்' என்ற கவிதையில்,

"இந்த
வாழ்க, ஒழிகவெலாம்
போதும் நிறுத்து

இன்று முதல்.....
உழைப்பவன் இந்தியன்-
என்று சொல்
உறிஞ்சுபவன் அந்நியன் என்று
சொல்" (த.க.தொ.3, ப.426)

என்று தன்நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்கின்றனர். அவ்வாறு ஏமாற்றப்படுபவர் உழைப்பாளர்கள் என்றும், ஏமாற்றுபவர்கள் அந்நியர்கள் என்றும் கவிஞர் கூறுகின்றார்.

"நடை மறந்த நதியும் திசைமாறிய ஓடையும்" என்ற கவிதைத் தொகுப்பில், 'தவம் செய்யும் நெஞ்சோடு தை முதல் நாள்' என்ற கவிதையில்,

"வேர்வைகளுக்கு
நாடு
ஆரத்தி எடுக்குமா?
உழைக்கும்
தோள்களை முத்தமிட்டு
உலகம் சுழலுமா?" (த.க.தொ.4, ப.306)

என்று வினா எழுப்புகின்றார். உழைப்பவர்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கக்கூட உரிமையற்ற வாழ்வை வாழ்கின்றனர். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களின் தோள்களை யாரும் ஆராதிக்கப்போவதில்லை என்பதைக் கவிஞர் தெளிவுபடுத்துகின்றார்.

'ஆளுக்கு ஓர் அலை கொடுத்தால் அவளுக்கு நதி' என்ற கவிதையில்,

"உழைப்பைப் பாராட்ட
உதடுகளால் உத்தியோகம்
பார்க்க வேண்டாம்
வேர்வைகளை அதற்கு
அனுப்பி வைப்போம்" (த.க.தொ.4, ப.324)

என்று தமிழன்பன் உழைப்பைப் போற்றி அவர்களின் வேர்வையை மதிக்கும் மனநிலை உடையவர்களாகத் திகழவேண்டும் என்றுரைக்கின்றார்.

அரசியல் போராட்டம்

அரசியல் என்பது நாடு, மக்கள் மட்டுமல்ல உலகம் தழுவியது. இதில் ஒற்றுமைக் கூறுகள் இருந்தால் மட்டுமே அவை தழைத்தோங்கும் அந்த வகையில் அரசியல் மனிதனை மேம்படுத்தும் கூறாக இருக்கவேண்டும். ஆட்சி நடத்தும் மன்னனின் கடமையை,

"படைகுடி கூழ் அமைச்சு நட்பரண்
ஆறும் உடையானாம் அரசருளேறு"[41]

என்று வள்ளுவம் எடுத்துரைக்கின்றது. சமூகத்தில் அரசியல் மாற்றங்கள் ஏற்படக் காரணமாயிருந்தவர்கள் மார்க்சும், ஏங்கெல்சும் ஆவர். முதலாளித்துவத்தின் தோற்றத்தையும் உற்பத்தி மாற்றங்களையும் எடுத்துரைக்கும் மூலதனம் என்ற நூலில் காரல்மார்க்ஸ், அறிவியல் முறையில் பொருளாதார மாற்றத்தை எடுத்துரைக்கின்றார். அரசியல் போராட்டம் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தை உணர்த்துகின்ற மெய்ம்மையைக் காரல்மார்க்ஸ் எடுத்துரைக்கின்றார்.

"தொழிலாளி முதலாளிக்கு விற்கும் சரக்கு அவனுடைய உழைப்பாகும். அவன் பெறும் ஊதியமே அதன் விலையாகும். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும் போது, அவசியத்துக்கும் அதிகமான தொழிலாளிகள் கிடைக்கிறார்கள். இதனால் உழைப்புச் சக்தி என்னும் சரக்கு மிகவும் குறைந்த பட்சம் கூலிக்குக் கிடைக்கிறது. முதலாளித்துவச் சுரண்டல் இங்கே தான்

41. குறள்.381.

ஆழமாக வேர்விடுகிறது. உழைக்கும் வர்க்கத்தின் இடைவிடாத போராட்டம் ஒன்றே இந்தச் சுரண்டலை வெற்றிக் கொள்ளும்”[42]

என்கிறார் ஜெகநாதன். இப்படி வெற்றி பெறக்கூடிய முதலாளிகள் பலரும் சேர்ந்து அரசியல் மாற்றங்களை உருவாக்குகின்றனர். அன்றாட வாழ்க்கையில் நிகழும் சமுதாய, அரசியல், ஆன்மிக நடைமுறைகளின் பொது இயல்புகளின் மீது பொருளாதார உற்பத்தி முறை ஆளுகை நடத்துவதையும் மார்க்சியம் காட்டுகிறது.

அரசியல் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் முனைப்புடன் செயல்பட்டால் வெற்றிபெற முடியும். அப்படி வெற்றி பெற்ற பின்னர் செய்ய வேண்டிய கடமைகள் பற்றி மார்க்சும், ஏங்கெல்சும் குறிப்பிட்டவற்றை ஆ. செகந்நாதன் பட்டியலிடுகின்றார்.

“ 1. *சொத்துடைமையையும், சொத்துரிமையையும் ஒழித்தல்*
2. *உழைப்பைச் சரிசமமாக எல்லோருக்கும் உரிய கடமையாக்குதல்*
3. *தனியுடைமைகளே இல்லாமல் நிலம், தொழில் அனைத்தையும் அரசுடைமையாக்குதல்*
4. *செய்தித் தொடர்பு, போக்குவரத்துச் சாதனங்களை அரசின் கைகளில் மையப்படுத்துதல்*
5. *உழவு, தொழில் ஆகியவற்றை இணைத்து கிராமத்துக்கும் நகரத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அகற்றுதல்*
6. *எல்லாக் குழந்தைகட்கும் பொதுப் பள்ளியில் பயனுள்ள இலவசக் கல்வி தருதல்”*[43]

---

42. ஆ.ஜெகநாதன், புதிய கவிதைகளில் மார்க்சியம், ப.12.
43. ஆ.செகந்நாதன், மு.நூ., ப.5.

இத்தகைய புரட்சிகரமான செயல்களைப் பாட்டாளி வர்க்கம் ஆட்சி ஏற்ற பின்னர் பின்பற்ற வேண்டும் என்று கூறுகின்றார். இத்தகைய அரசியல் போராட்டம் பற்றி மார்க்சு, ஏங்கெல்சு கூறும் கருத்துக்கள் இன்றைய புதுக்கவிதைகளிலும் காணப்படுகின்றன. இதனை,

1. பொதுவுடைமைத் தத்துவம்
2. பெண்ணியம்
3. புரட்சி
4. நிறவேறுபாடு

என்ற தலைப்புக்களில் ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், தமிழன்பன் ஆகியோரின் கவிதைகளில் இடம்பெற்றுள்ள கருத்துக்களைத் தொகுத்துக் காணலாம்.

பொதுவுடைமைத் தத்துவம்

மார்க்சியத்தின் அனைத்துக் கூறுபாடுகளையும் ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அரசியல் கட்சியே பொதுவுடைமைக் கட்சியாகும்.

சோசலிசம் என்பது பொதுவுடைமையைக் குறிக்கும் சொல்லாகும். இது தனியுடைமையை முற்றிலும் மாற்ற வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டது. உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள், நிலங்கள், ஆலைகள் ஆகியவற்றால் உழைப்பவருக்கும் உரிமையுண்டு என்பதை அடிப்படையாகக் கொண்டது.

பொதுவுடைமைக் கொள்கையை உலகம் வரவேற்கின்றது. முதலாளிகள் மட்டும் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. தமிழ்க் கவிதைகளில் பொதுவுடைமைப் பற்றிப் பேசும்போது பாரதிதாசனைச் சுட்டாமல் வேறு கவிஞர்களைக் கூறமுடியாது. அந்த அளவிற்குப் பொதுவுடைமைமீது ஈடுபாடு கொண்டவர். அவரின்,

"நடவு செய்த தோழர் கூலி நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பில்லாத செல்வர் உலகை யாண்டு உலாவலும்
கடவுளாணை என்றுரைத்த கயவர் கூட்டம் மீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத் தொழிலாளரை ஏவுவோம்"[44]

என்று முதலாளிகள் உருவாக்கிய ஆணை கடவுளின் ஆணை போன்றது என்று கூறி மக்களை ஏமாற்றிப் பிழைக்கின்றனர் என்கின்றார். பொதுவுடைமை சமுதாயம் ஒளிரும் காலத்தில் அரசியலின் ஆதிக்கவெறி அடங்கும்; உழைப்பாளர்களின் கரம் ஓங்கும்.

ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் பொதுவுடைமைச் சிந்தனைகள்

பொதுவுடைமைச் சிந்தனை இருந்தால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற நிலை மாறும்; ஒற்றுமை நிலவும். உரிமைப் போராட்டம் மாறி உற்பத்திப் பொது என்ற சிந்தனை மேலோங்கும். எனவே, உயர்வு தாழ்வு மாறி உழைப்பு முக்கியத்துவம் அடையும்போது சமூகமாற்றம் ஏற்படும். 'காட்டு வாத்து' என்ற கவிதையில் ந.பிச்சமூர்த்தி, பொதுவுடைமைக்கு எதிரான குரல் கொடுப்பதான வரிகள் இடம்பெற்றுள்ளன.

"பூட்டிருந்தால்
பேர்த் தெறியமுயலாதே
குடைக் கம்பி தேடாதே....
கட்டிடம் கட்டவரும் கடப்பாரையை
ஆயுதமாக்காதே
ரத்தத் துளியைப்
போர்க்கொடியின்
ஊடும் பாவும் ஆக்காதே" (ந.பி.க., ப.134)

---

44. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப.134.

என்று சமூகத்தை மாற்றும் வேலை மக்களுக்கு இல்லை. புதிதாய் எதுவும் மாறிவிடப் போவதுமில்லை என்று கூறுகின்றார். அதுமட்டுமின்றி உலகைத் திருத்தும் உத்தமச் செய்கை உனக்கேனப்பா? என்ற வினாவைத் தொடுக்கின்றார். சமூக அவலத்தினை எண்ணி அனைத்தையும் பொதுவுடைமை ஆக்க வேண்டும் என்ற குரல்கள் ஒலிக்கும் காலத்தில் எதிலும் தலையிடக்கூடாது என்று கவிஞர் கூறுவது பொருத்தமுடையதன்று. அதோடு மட்டுமன்று,

> *“சுயநலத்தைப் பொதுத் தொண்டாக்கும்*
> *ஜாலக் கண்ணாடி வித்தை*
> *காட்ட நான் பாடவில்லை*
> *பழவேதப்படையை ஓட்டி*
> *லோகாயத வேதப்படையின்*
> *தமுக்கமாய் ஒலிக்க நான்*
> *தரணியில் அதிரவில்லை”* (ந.பி.க,, ப.135)

என்று பாடுகின்றார். சமுதாயத்திற்காக உரிமையுடன் அனைவரும் போராட வேண்டும் என்று கவிதைகள் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் அதற்குப் பதிலான மாற்றுக் கருத்தைக் கவிஞர் இயற்றியுள்ளமை சமூகத்தின் மீது அக்கறை இல்லாத கவிஞர் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது.

இவ்வுலகம் முழுவதும் கசப்பு உணர்வே அதிகம் காணப்படுகின்றது. அரசியல் நடத்தும் ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இறுதி வரை கசப்பு உணர்வுதான் மிஞ்சுகின்றது. எப்பாடுபட்டாவது நாட்டை முன்னேற்றலாம் என்ற எண்ணம் கொண்டு உழைத்தாலும் அது பகற்கனவாகி விடுகின்றது என்பதை, ‘பொங்கல்’ என்ற கவிதையில்,

> *“எப்பலனும் கோராது*
> *தன்னலமும் இல்லாது*
> *தன்னொளியைக் காட்டி*

தர்மத்தைச் சொல்லி வரும்
தன்மையினைச் சரணடைவோம்
உணர்வின் அறைக்கதவை
ஒட்டத்திறந்து வைத்து
தன்னலத்தைக் கொளுத்தி
நீராத்துப் பால் தெளிப்போம்" (ந.பி.க,, ப.74)

என்று தன்னலம் இன்றி தொண்டுகள் புரியவேண்டும் என்று கூறுகின்றார். முரண்பாடுகள் இல்லாத மனிதர்கள் இல்லை. அதற்குக் கவிஞர்கள் விதிவிலக்கானவர்கள் அல்லர். அந்தவகையில், ந.பிச்சமூர்த்தி ஒரு கவிதையில் பொதுவுடைமைக் கொள்கையை எதிர்த்தும், மற்றொரு கவிதையில் தன்னலம் இல்லாது, தன்னலத்தைக் கொளுத்தி என்ற சொற்களைப் பயன்படுத்தியும் உள்ளார்.

இன்குலாப் கவிதைகளில் மார்க்சியத் தத்துவம்

பொதுவுடைமைச் சமுதாயத்தின்மீது ஈர்ப்பும், நம்பிக்கையும் கொண்ட புரட்சிகர கவிஞர் இன்குலாப் ஆவார். இவர் எந்த கட்சியும் சாராமல் நேரடியாக மார்க்சிய கோட்பாடுகளை முழங்குபவர். 'ஒன்று படுவோம் போராடுவதற்கு' என்ற கவிதையில்,

"வர்க்கச் சுரண்டலுக்கு
மௌன சாட்சி ஆகாத
உலகக் கம்யூனிஸ்டுகளே!
ஒன்றுபடுங்கள்
போராடுவதற்காக!" (ஒ.பு., ப.285)

என்று கம்யூனிஸ்டுகள் ஒன்றுபட்டு நாட்டிற்காக உழைக்க முன்வரவேண்டும் என அழைக்கின்றார்.

"கம்யூனிச சமுதாயம் என்பது நிலம் ஆலைகள் யாவும் பொதுவுடைமையாய் இருந்து மக்கள் பொதுவில் கூட்டமாய்

வேலை செய்யும் சமுதாயமாகும். இது தான் கம்யூனிசம் எனப்படும். கம்யூனிஸ்டு என்பது இலத்தீன் சொல். இலத்தீன் மொழியில் 'கம்யூனிஸ்' என்றால் பொதுவான என்று பொருள்"[45]

என்று மார்க்ஸ் கூறுவார். இத்தகைய கம்யூனிசம் என்ற கருத்தை இன்குலாப் வரவேற்கின்றார். அதுபோல் மார்க்சியக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கிய ஒவ்வொருவரும் மௌனமாக இருக்கமாட்டார்கள். போராடத்துணிந்த புரட்சியாளர்களாக விளங்குவார்கள் என்பதை,

"மார்க்ஸ்!
நெருப்பாற்றில் நீந்தக்கற்ற
ஒவ்வொரு கம்யூனிஸ்டும்
சோவியத்திலிருந்தாலும்
சீனத்திலிருந்தாலும்
வர்க்கச் சுரண்டலுக்கு
மௌன சாட்சியாக மாட்டான்" (ஒ.பு., ப.284)

என்று கூறுகின்றார். சமூகத்தின் தளைகளிலிருந்து வீணான செயல்களுக்கு முக்கியத்துவம் தராமல் உரிமைகளுக்காகப் போராடும் மனப்பக்குவம் கொண்டவர்களாகத் தொழிலாளி வர்க்கம் திகழவேண்டும் என்கின்றார்.

தமிழன்பன் கவிதைகளில் பொதுவுடைமைத் தத்துவம்

மார்க்சின் தத்துவக் கருத்துக்களை நடைமுறைப்படுத்தத் தோன்றிய இயக்கம் பொதுவுடைமை இயக்கமாகும். இது அரசியல் சார்பானது. இவ்வியக்கம் தனது கருத்துக்களை மக்களிடையே பரப்ப பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தியது. அதில், குறிப்பாக இலக்கியங்களும்

---

45. லெனின், மார்க்ஸ் ஏங்கெல்சு - மார்க்சியம், ப.19.

அடங்கும். மக்களிடம் காணப்படும் ஏற்றத்தாழ்விற்குக் காரணம் வர்க்க முரண்பாடும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுமே ஆகும்.

வாழ்க்கை என்றும், வரலாறு என்றும், இலக்கியமென்றும் பேசும்போது தத்துவம் என்பதை ஒதுக்கி வைத்துப் பேசமுடியாது. தத்துவம் இல்லாமல் வாழ்க்கையோ, இலக்கியமோ இல்லை. நிலத்தடியில் மறைந்திருக்கும் நீரோட்டத்தைக் கண்டறிவதைப்போல இவர்களின் கவிதைகளுக்குள் தத்துவத்தைக் கண்டறிய வேண்டும். 'சமுதாய பொருளாதாரக் கட்டுக்களிலிருந்து மானுடம் விடுதலை பெற்று சமத்துவமாக, சகோதர உறவுகளோடு வாழ செயல் முறையில் வழிகாட்டும் மார்க்சிய அணுகுமுறை தமிழ் இலக்கியத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி படைப்பு உலகிலும், திறனாய்வு உலகிலும் புதிய வழிகளை உருவாக்கி உள்ளது.

இவ்வாறு வர்க்கப் போராட்டம் பற்றியும், ஏகாதிபத்தியங்களின் கொடுமைகள் பற்றியும், புதிய சமுதாயம் படைப்பதற்கான புரட்சி பற்றியும் பாட்டாளிகளின் மேன்மை பற்றியும், எதார்த்த நிலையிலுள்ள அவலங்கள் பற்றியும் தமிழன்பன் பாடுகின்றார். "தீவுகள் கரையேறுகின்றன" என்ற கவிதைத் தொகுப்பில், 'மரணித்து விடுங்கள் வார்த்தைகளே!' என்ற கவிதையில்,

"பொதுவுடைமை என்னும்
புதிய புலரியில்
இங்கே
கம்பீரமான
நம்பிக்கை என்னும்
வாக்கியத் தோரணத்தில்
தொடுக்கப்பட வேண்டிய
நீங்கள்

நெருஞ்சி முள்களாய்
நிலை மாறிப் போனீர்கள்" (த.க.தொ.3 ப.67)

என்று 'பொதுவுடைமை'க் கருத்தைப் பாடுகின்றார். விடுதலை பெற்ற இந்தியாவின் வளங்களையெல்லாம் உறிஞ்சிக் கொழுக்கும் சுரண்டல்காரர்களைப் பற்றிப் பாடும் கவிஞர், இவர்களிடம் ஏமாந்துபோன தொழிலாளர்கள் குறித்து வருத்தப்படுகின்றார்.

"அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'புதிய சுருதியில் ஒரு பூபாளம்' என்ற கவிதையில்,

"ஓர் இதழ் உதிர்ந்தால்
உயிர் வாழாத
கவரிப்பூ.., இந்த உலகம்!
அனைத்து நாடுகளும்-இதன்
அழகிய இதழ்கள்
பொதுமை வண்டு-இதில்
மகரந்த சேர்க்கை புரியட்டும்" (த.க.தொ.3, ப.225)

என்று உலகம் முழுவதும் பொதுவுடைமைத் தத்துவம் பரவிச் சமூகம் செழிப்படையட்டும் என்று வாழ்த்துகின்றார். பொதுவுடைமை உலகம் முழுவதும் பரவி இருக்க ஒவ்வொருவரும் தமது பங்களிப்பைத் தரல் வேண்டும் என்பதை, "நிலா வரும் நேரம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'கிழக்குக் கிளையில் ...' என்ற கவிதையில்,

"சமூக
இருட்டைச் சாடும்
வீரிய வாரியம் திறக்கட்டும்
மங்கல
மலர்களின் மகரந்தம் தூவிப்
பொதுவுடைமைப்

பொன்கனாக் கனிய

நம்

பங்கினை அளிப்போம் வா!" (த.க.தொ.2 ப.440)

என்று சமூக அக்கறை கொண்டு பொதுவுடைமைத் தத்துவத்தை எல்லா இடங்களுலும் பரவச் செய்ய வேண்டும் என்கின்றார். அதற்காக ஒவ்வொருவரும் பாடுபட்டு உழைக்க வேண்டும் என்பதே தமிழன்பனின் கருத்தாகும்.

பெண்ணியம்

பெண்கள், பிள்ளைப்பருவத்தில் தந்தையாலும், பருவத்தில் கணவராலும் முதுமையில் மகனாலும் காப்பாற்றப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு விடுதலை உரிமை இல்லை என்று பழங்காலக் கருத்துக்களின் அடிப்படையில் பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். குழந்தைப் பருவத்திலே பெண்களின் சிந்தனையையும், அறிவு வளர்ச்சியையும் தடுக்கும் பொருட்டு அவர்தம் செவிகளைச் சமயக் கதைகளாய் நிரப்பி அவர் மனங்களில் மூடநம்பிக்கைகளைக் குடியேற்றினர். பெண்கள் கல்வி கற்பது தடை செய்யப்பட்டிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பொருளாதார அடிமைத்தனம் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட பெண்களின் நிலையை லெனின்,

> *"இவர்களிடையிலிருந்து தான் எல்லா நாடுகளின் முதலாளிகளும் (ஆண்டான்களும், நிலக்கிழார்களும்) எண்ணற்ற காமக்கிழத்திகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். சமுதாய வரலாறு முழுவதும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் எல்லாம் ஒடுக்குவோருக்கு முதலில் தமது கூலி கொடுக்கப்படாத உழைப்பையும்,இரண்டாவதாக முதலாளிகளின் வைப்பாட்டிகளாக இருப்பதற்குத் தமது மகளிரையும் கைம்மாற்றிக் கொடுக்கும் படியான கட்டாயத்திற்குள்ளாகி வந்துள்ளனர்"*[46]

---

46. வி.இ.லெனின், மாதர் விடுதலைப்பற்றி லெனின், ப.47.

என்று வேதனையுடன் குறிப்பிடுகிறார். முதலாளிகள் இத்தோடு நிறைவடையாமல் தங்களுக்குள் ஒருவர் மனைவியை இன்னொருவர் வசப்படுத்திக் கொள்வதில் மிக அதிகம் இன்பம் அடைந்துள்ளனர்.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக்
கொளுத்துவோம்"

என்ற பாரதியின் கூற்றிற்கிணங்க பொதுவுடைமைச் சமுதாயம் தோன்ற வேண்டும். அதில் பெண்களுக்கென்று மறுக்கப்பட்ட சுதந்திரம் பெற முனைதல் வேண்டும் என்பதைக் கவிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

> *"எல்லா விடுதலைக்கும் பிறப்பிடம் என்று கருதப்படும் பொருளதார விடுதலை சமவுடைமைச் சமுதாயத்தில்தான் பெண்களுக்குக் கிடைக்கிறது. பொருளாதாரத் தற்சார்பு பெண்களை உடை, உணவு, வீடு, பயணம் முதலான செலவினங்களுக்கு ஆண்களிடம் கைநீட்ட வேண்டிய தேவையில்லாமலும், பேறுகாலம், பிணி, மூப்புக்காலங்களில் கணவரையோ மகனையோ சார்ந்திருக்க வேண்டிய தேவையில்லாமலும் செய்கிறது. இதுவே அவர்களுக்கு உண்மையான விடுதலை"*[47]

என்று பெண்கள் ஆண்களோடு சரிநிகரான சமத்துவ வாழ்வை மேற்கொள்வதற்கு எல்லா வாய்ப்புக்களும் சோசலிச அமைப்பில் கிடைக்கின்றன என்கிறார் இராகுல் சாங்கிருத்யாயன். இவ்வாறாக பெண்ணியம் மார்க்சியத்தில் இடம்பெற்றுள்ள பாங்கை ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், தமிழன்பன் ஆகியோர் கவிதைகளிலும் காணலாம்.

---

47. இராகுல் சாங்கிருத்யாயன், பொதுவுடைமை தான் என்ன?, ப.53.

ந. பிச்சமூர்த்தி கவிதைகளில் பெண்ணியம்

பொதுவுடைமை பற்றிய கருத்துக்கள் ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் அதிகம் இடம் பெறவில்லை பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கியவுடன் பெண்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தை 'முரண்' என்ற கவிதையில்,

"மகப்பேறு நிலையத்தில்
உம்மை எல்லாம் கண்டு
கைகூப்பி வந்த பின்னர்
குதி உயர் காலணி
. . . .
செஞ்சாந்தென்று
பருவத் தெறிப்பில்
பல்லை இளிக்கின்றேன்
. . . .
அன்பே சிவக் கழகத்தில்
தேன் போன்றுழைத்து
நிலைப் பேற்றைப் பெற்றாலும்
ரத்தக் களறிக்கு
முகூர்த்தக்கால் நடுவதிலே
மோகம் என்ன?" (ந.பி.க., ப.175)

என்ற கவிதையில் பெண்களைக் கவர்ச்சிப் பொருளாகப் பார்க்கின்ற ஆண்கள் பொதுவுடைமை என்ற எண்ணம் பேசப்படும் காலத்திலும் சற்றும் மாறவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. பெண்கள் பொதுவுடைமைச் சமுதாயத்தில் கீழானவர்கள் என்றும், சமுதாய வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் தமது பங்கை ஆற்ற இயலாதவர்கள் என்ற எண்ணமும் பரவலாக உள்ளது என்பதை மேற்கண்ட ந.பிச்சமூர்த்தியின் கவிதை வரிகள் மெய்ப்பிக்கின்றன.

இன்குலாப் கவிதைகளில் பெண்ணியம்

பொதுவுடைமைக் கொள்கையில் தீவிர பற்றுக் கொண்டவரான இன்குலாப் பெண்கள் பற்றிக் கூறும்போது புரட்சிகரமான கருத்துடையவர்களாகத் திகழ வேண்டும் என்று கூறுகின்றார். மெல்ல இசைக்கும் வளையல்களும், காதில் ரகசியம் சொல்லும் ஜிமிக்கிகளும் சொல்லாத செய்தியைப் பெண்களுக்குச் சொல்வதாகக் கூறுகின்றார். பெண்களை நிலவு என்றும், வாசமிக்க மலர் என்றும் கவிதைகளில் வர்ணிக்க விருப்பமில்லை என்னும் கவிஞர், 'சுதந்திரத்தின் செய்தி' என்ற கவிதையில்,

"வாயில்லா வெறும் பூச்சிகளாய்-நிஜ
வாழ்க்கையில் பெண்ணை மதிப்பவர்கள்
கோயிற் சிலைகளாய்ப் பெண்ணை வைத்து-நிதம்
கும்பிடும் சடங்கினில் குறைச்சலுண்டோ?" (ஒ.பு., ப.336)

என்கின்றார். தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாகப் பெண்களுக்குச் சமய நம்பிக்கைகளை ஊட்டி வளர்த்ததால் மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற காடாகத் தமிழகம் விளங்கியது.

"கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்
கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்"[48]

என்று பாரதிதாசன் பெண்கள் கல்வி இல்லாமல் முன்னேற முடியாது என்கிறார். மேற்கண்ட கருத்தை இன்குலாப் கவிதையில் உரிமை பெறப் போராட வேண்டும். அதற்குக் கல்வி வேண்டும் என்பதாக,

"தாமரைப் பூவில் சரசுவதியாய்-பெண்ணை
தாங்கள் மதிப்பதாய்க் கதை அளப்பார்

---

48. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் பக்.127, 128.

தாமரைப் பூவினில் வாழாத – சேரிச்
சரசுகள் எத்தனை பேர் படித்தார்?
. . . .
வெண்மணி வர்க்கச் சகோதரிகள் – இனி
வெடிகளின் பாஷையில் பாடட்டும்" (ஒ.பு, ப.337)

என்று பாடுகின்றார். உரிமைகளுக்காகப் போராடக் கல்வியும், வர்க்கப் போராட்டங்களில் இருந்து மீளப் புரட்சிகர எண்ணங்களும் பெண்களுக்கு வேண்டும் என்று இன்குலாப் கூறுகின்றார்.

தமிழன்பன் கவிதைகளில் பெண்ணியம்

சமுதாயத்தில் மனித இனத்தின் தோற்றத்திற்கும் அதன் பல்வேறு செயல்பாடுகளுக்கும் பெண்கள் அடிப்படைக் காரணங்களாக அமைகின்றார்கள். பிறப்பு முதல் இறப்பு வரை அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஆண்களின் வாழ்வில் ஒருபகுதியாக அமையும் பெண்களைப் பற்றிப் பண்டைக்காலந்தொட்டு இன்று வரை பலரும் பலவாறாகக் கூறியுள்ளனர்.

இன்றைய சமுதாயச் சூழலுக்கேற்பப் பெண்களின் பல்வேறு நிலைகளையும் அவர்கள் சமுதாயத்தில் இடம்பெறும் இடத்தினையும் தமிழன்பனின் "வார்த்தைகள் கேட்டவரம்" கவிதைத் தொகுப்பில், 'எத்தனை கோடி இன்பம்' என்ற கவிதையில், 'பாரதியிடம் சென்று நகைகளைக் கேட்காதீர்கள் என்றும், கண்ணுக்கு மை தீட்டிக் கொண்டிருக்க இதுவா காலம்? கண்கள் துக்கம் அனுசரிக்கக் கறுப்புச் சின்னம் எழுதியது போதும்' என்றும் பாடுகின்றார். மேலும்,

"கைகளுக்கு
ஆயுதம் கேளுங்கள் பாரதி தருவான்
காதுக்கு ஜிமிக்கி கேட்க
அவனிடம் போகாதீர்கள்!

வாள்கள் தயாரிக்கும் பட்டறையில்
வளையல்கள் செய்யப்படுவதில்லை!
. . . .
முரட்டுத்தனம் மிகுந்தது-இந்தச்
சமூகம்-நீங்கள்
முள்களாக இருக்கவும்
தெரிந்து கொள்ளுங்கள்" (த.க.தொ.1, ப.542, 543)

என்று எண்ணற்ற கனவுகளைச் சுமந்து கொண்டு வாழ்க்கையும் கனவுபோல் ஆகிவிடக் கூடாது என்பதையும் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார்.

> "*அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்டு தோன்றிய பெண்விடுதலை இயக்கம், பெண் இழிவுபடுத்தப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுப்பதையும் ஓட்டுரிமை, சொத்துரிமை பெற அவளுக்கும் உரிமையுண்டு என நிலைநாட்டுவதையும் அடிப்படை நோக்கமாகக் கொண்டது*"[49]

என்று வெ.வேணுபாண்டியன் கூறுகின்றார். பெண்களை வியாபார நோக்கத்துடன் விளம்பரப் பலகைகளில், சுவரொட்டிகளில் கேவலப்படுத்தப்படுவதைத் தமிழன்பன் சாடுகின்றார். அந்த "நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்" என்ற கவிதைத் தொகுப்பில் 'வாலிபக் கல்லறையே உனக்கு என் வருத்தங்கள்' என்ற கவிதையில்,

"உன் ஆன்ம அவமானத்திற்கு
அடையாளந்தானே
பத்திரிகை அட்டைகள்-
உன் பெண்மையை என்னமாய்
உறிஞ்சிக் கொழுக்கின்றன" (த.க.தொ.3, ப.335)

---

49. வெ.வேணுபாண்டியன், பன்னிரண்டாவது ஆய்வுக் கோவை, தொ.6, ப.22.

என்று பாடுகின்றார். இப்படி விளம்பரத்தைத் தேடும் வியாபார நிறுவனங்களின் கரங்களில் காசு குவியும் ஆனால்,

"உன் கரத்திலோ
பெண்மையின்
வெந்த எலும்புச்
சாம்பல்" (த.க.தொ.3, ப.335)

என்று கூறும் கவிஞர் சோப்பு விளம்பரத்திற்காக அழகான புன்னகையை பிரசவித்துவிட்டு வாழ்க்கை அழுக்கில் வழுக்கி விழுந்தாள் என்று பெண்களின் வாழ்க்கை பேரின்பம் தரக்கூடியதல்ல பேரிடர் தரக்கூடியது என்பதைக் கவிஞர் உறுதிபடுத்துகின்றார்.

புரட்சி

மார்க்சு காண விரும்பிய அரசியல் அமைப்பு முறையானது; உயர்வு தாழ்வின்றி எல்லோரும் சமம் என்பதே ஆகும். பொதுவுடைமைச் சமுதாயத்திற்கு வழி நடத்திச் செல்கிற சமவுடைமை அமைப்பை முதலில் உருவாக்க வேண்டும். பொதுவுடைமை உருவாகப் புரட்சி அவசியம். அந்த வகையில் தமிழில் புரட்சிக் கருத்துக்களைக் கூறியவர் பாரதியார். அதுபோல, பொதுவுடைமை என்ற சொல்லை முதலில் தமிழ்மொழியில் பயன்படுத்தியவரும் அவரே.

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுஉடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை"[50]

---

50. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.213.

என்று பாரத சமுதாயம் பற்றி பாடுகிறார். பாரதி சோவியத் புரட்சியைப் பாடினார். அவரைத் தொடர்ந்து வந்த எல்லா முற்போக்குக் கவிஞர்களும் அதைத் திரும்பவும் பாடினர். பாரதியின் காலத்தில் சோவியத் புரட்சிதான் மார்க்சியத் தத்துவத்தின் செயல்பாட்டு வெற்றியை உலகத்திற்குக் காட்டியது.

> *"முதலாளித்துவ உலகில் உழைப்பாளிகள் அனுபவிக்கும் இன்னொரு பெருந்தொல்லை வேலையில்லாத் திண்டாட்டம் ஆகும். வளர்ச்சி மிக்க பூர்ஷ்வா நாடுகளில் லட்சோப லட்சம் மக்கள் வேலை வாய்ப்பு அற்றவர்களாக இருக்கிறார்கள். உழைப்பாளி மக்கள் வரவர அதிகமாகச் சுரண்டப்படுதல், அவர்களது வாழ்க்கைத்தரம் தாழ்தல், அவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றின் விளைவாக முதலாளித்துவச் சமூகத்தில் வர்க்கப் போராட்டம் தீவிரம் அடைகிறது"*[51]

என்று புரட்சியின் காரணமான வர்க்கப் போராட்டம் பற்றித் தத்துவம் பற்றிய தொடக்கப் பயிற்சி நூல் கூறுகின்றது. செல்வாக்கு மிக்க மக்கள், ஏழ்மையில் வாடும் தொழிலாளர் நிலை பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் அவர்களை அடிமைகளாக நடத்துவதையும், அவர்களின் உழைப்பையும், வளங்களையும் சுரண்டுவதையும் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றது. இத்தகைய முதலாளித்துவ எண்ணங்களால் தொழிலாளர்களின் புரட்சி மேலோங்குகிறது என்பதே இன்றையப் புதுக்கவிஞர்களின் கவிதைகளில் காணப்படுகின்றன.

ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் புரட்சி

மார்க்சியக் கருத்துக்கள் அதிக அளவில் ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் இடம்பெறவில்லை என்றாலும், ஒரு சில ஆங்காங்கே தொட்டுச் செல்லப்பட்டுள்ளன. அதில் 'மார்கழிப் பெருமை' என்ற கவிதையில்,

---

51. தத்துவம் தொடக்கப்பயிற்சி நூல், ப.334.

"இதோ கொசு மொய்க்கும் சாலவம்
தெருவெங்கும் எச்சில் இலைகளின் இனிப்பு
மார்கழி பெருமையில் தோட்டிக்குத் தேவாரமுண்டா?
தெருக்கூட்டிக்குக் கம்பளி உண்டா?" (ந.பி.க., ப.15)

என்று பொதுவுடைமையில் புரட்சி பேசுகின்றார். தோட்டிகளுக்குத் தேவாரப் பாடல் பற்றி தெரியாது, தெருக் கூட்டுபவர்கள் குளிர் பற்றிப் பொருட்படுத்த மாட்டார்கள் என்ற பொருளில் பாடியுள்ளார். அதே கவிதையில்,

"அன்னையை நினைத்துக் குழந்தை அலறுது
கூடவே நாயும் குரலோசை காட்டுது
ஈனத்தொழில் செய்யும் தோட்டிச்சி ஒருத்தி
கூடையைக் கைவிட்டு குழந்தையைத் தூக்குகிறாள்" (ந.பி.க, ப.15)

அன்னையின் மார்பில் அலறல் ஒடுங்குது என்று கவிதையை முடிக்கின்றார். இக்கவிதையில் குழந்தையின் ஓசை கேட்டு நாய்கூட குரல் எழுப்பிக் குழந்தை அழுவதைத் தெரிவிக்கின்றது.

இன்குலாப் கவிதைகளில் புரட்சிக் கருத்துக்கள்

முதலாளித்துவம் அதிக அளவில் தொழிலாளர்களைச் சுரண்டியதால் வறுமைக்குள்ளான அவர்களது வாழ்க்கை கேட்பாரற்றுப் போனது. பிறநாட்டினரிடம் இருந்து விடுதலை பெற்றாலும் உள்நாட்டு விடுதலை கிடைக்காமல் இருக்கும் மக்களின் நிலை நாளுக்கு நாள் தேய்பிறையாகியது. இத்தகைய சூழ்நிலையானது மாறவேண்டும் என்று போராடிய மார்க்ஸ், பாட்டாளிகள் அடிமைகளாக வாழ்வதை உணர்த்த மிகவும் சிரமப்பட்டார். கல்வி அறிவற்றவர்களாய் இருந்தமையால் மார்க்ஸ் கூறும் கருத்தைப் புரிந்துகொள்ள பாட்டாளி வர்க்கம் மிகவும் சிரமப்பட்டது. தாங்கள் அடிமைகளாக இருக்கின்றோம் என்பதைப் புரிந்த பின்னர் புரட்சி சிந்தனைகள் அவர்களுக்குள்

உருப்பெறத் தொடங்கின. அந்த வகையில் இன்குலாப்பின் கவிதைகளும் புரட்சிகர செயல்களை எடுத்துரைக்கும் நேரியவரிகளாக இடம்பெற்றுள்ளன.

“போராட்டம்
என் பிறப்பின் நியதி!
போராட்டம்
என்வாழ்வின் நியதி!
போராட்டம்
என் முடிவின் நியதி!” **(ஒ.பு., ப.181)**

என்று புரட்சிக்கான வேர் தனக்குள் இருப்பதைக் கவிஞர் உறுதிபடுத்துகின்றார்.

புரட்சி பற்றி ‘மாவோ’ என்ற கவிதையில் கூறும் கவிஞர் உலகின் விலங்குகளைத் தனது சிந்தனை வாளால் உடைத்தவன். அஞ்ஞான போதையில் மயங்கிக் கிடந்த நாட்டை விழித்தெழச் செய்தவன். பூமியின் இருண்ட கரைகளைப் பொங்கும் புரட்சியால் சிவப்பாக்கியன் என்கின்றார்.

“அஞ்ஞான இருளில்
அபினி மயக்கத்தில்
புலம்பிக் கிடந்த தேசம்-உன்
வருகையால் தெளிந்தது
எழுந்தது” **(ஒ.பு., ப.261)**

என்று கூறும் கவிஞர்,

“உனது வரலாற்றுத் தடயங்களாக
எண்பது கோடி முகங்கள் எழுகின்றன
இன்று புகைகிற கொரில்லாத் துப்பாக்கிகள்
உனது சிந்தனைத் தோட்டாவை உமிழ்கின்றன
இங்கே உனது சிந்தனை இசைத்த
வசந்தத்தின் இடி முழக்கத்தால்
திரிபுவாதத் தூக்கம் கலைகிறது” **(ஒ.பு, ப.262)**

என்று சுரண்டலுக்கு எதிரான கத்தியும் துப்பாக்கியும் உழைக்கும் வர்க்கத்தின் போதியும் சிலுவையுமாகும் என்கிறார். தவறு கண்டால் கண்களை மூடிக் கொள்ளும் குரங்கு பொம்மைபோல இல்லாமல் அதை எதிர்க்க, தகர்க்க புரட்சி மயமான சிந்தனைகள் தொழிலாளர் வர்க்கத்திற்கு தேவை என்பது இன்குலாப்பின் கருத்தாகும்.

'அபஸ்வரங்கள்' என்ற கவிதையில்,

"*இன்று அறுவடை செய்வது நாங்களே*
இன்றும் காய்வது எங்களின் வயிறே
இன்றும்,
ஆலைச் சங்குகள் அலறுகின்றன
சக்கையாய் விழும் எங்கள் சரித்திரம் தொடர்கிறது" (ஒ.பு, ப.95)

என்று வறுமை பற்றி தொழிலாளர் படும் அவலங்களைக் கவிஞர் முன்வைக்கின்றார்.

மனிதன் தோன்றிய காலந்தொட்டே பொதுவுடைமைத் தொட்டிலில்தான் வளர்ந்தான். ஆதிகாலத்தில் மக்கள் விளைப்பொருட்கள், செய்பொருள் ஆகிய அனைத்தையும் பொதுவுடைமையாக வைத்துக்கொண்டு அனுபவித்தார்கள். அன்றைய காலத்தில் அரசர்களில்லை ஆணைகள் இல்லை, நீதிமன்றங்கள் இல்லை, தவறுகள் இல்லை என்பதால் கொடுமையான சிறைச் சாலைகளும் இல்லை, காவல்துறை இல்லை, இராணுவங்கள் இல்லை, எனினும் நாடெங்கும் அமைதி நிலவியது. பொருள் உடையவர்கள் இல்லாதவர்கள் என்ற பேதம் இல்லை. உற்பத்திச் சாதனங்களும் அதன் பலன்களும் பொதுவுடைமையாக இருந்தன. காலம் மாற, மாற மனிதன் தடம் பதிக்கும் களங்கள் அனைத்தும் மாறிவிட்டன. எதிர்காலம் பற்றிய சிந்தனை கொண்டிருந்த மனிதன் தங்களை இனம் பிரிக்கும் களம் ஒன்றை உருவாக்கிவிட்டான். இப்படி பிரிக்கப்பட்டதே ஏற்றத்தாழ்வு கொண்ட முதலாளி, தொழிலாளி என்ற வர்க்கங்களாகும். இவை

தோன்றிய பின்னர் இயக்கங்களின் தேவை அதிகரித்தது அத்தகைய இயக்கமே மார்க்சியமாகும்.

'ஒன்றுபடுவோம் போராடுவதற்கு' என்ற கவிதையில் இன்குலாப், உங்கள் மகளுக்குத் தொட்டிலையும் மகனுக்குப் பாலையும் மறுத்த வர்க்கத்தின் வாரிசுகளிடம் போய் உங்களைக் கௌரவிக்க மடிப்பிச்சை கேட்பதோ? என வினவுகின்றார். மேலும்,

"போராட்டத்தின்
சரிதமாகிய உங்களை
நினைவுகூரும் ஒரே வழி
போராடுவது தான்
அக்டோபர் புரட்சி
உங்களைக் கௌரவிக்கும்
நீண்ட பயணம்
உங்கள் நினைவுக்கு அஞ்சல்" (ஒ.பு, ப.281)

என்று புரட்சியின் மூலம் போராடி வெற்றி பெற வேண்டும் என்னும் கருத்தை எடுத்துக் கூறுகின்றார்.

தமிழன்பன் கவிதைகளில் புரட்சிக் கருத்துக்கள்

முற்கால சமுதாயத்தில் ஓரிடத்தில் மட்டுமே குறுகிக் குவிந்து கிடந்த மக்கள் அந்தச் சமுதாயத்தின் வேர்கள் பிடுங்கப்பட்டு விட்டதால் இருந்த இடத்தை விட்டு வெவ்வேறிடங்களுக்குத் தொழில்களை நாடிச் செல்ல வேண்டியவர்களாகிவிட்டனர். முன்னைய சமுதாயத்தின் பாதுகாப்பு இவர்களுக்கு இல்லை. அதுபோல, முன்னைய சமுதாயத்தின் பழமையும் இவர்களிடம் இல்லை. முன்னைய சமுதாயம் பொதுமைச் சமுதாயம். இச்சமுதாயம் உடைமைச் சமுதாயம். போட்டி, பொறாமை, தற்பெருமை முதலிய பண்புகளை வளர்க்கும்

சமுதாயம். இப்படிப்பட்ட உடைமைச் சமுதாயத்தினால் தான் அதிக பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

> *"கல்பொரு திரங்கும் மல்லற் பேரியாற்று வெள்ளம் போலப் போராற்றலோடு வந்தது. இந்தப் புதிய சமுதாயம் இந்தச் சமுதாய வெள்ளத்தில் அகப்பட்டவர்கள் புணைகளைப் போல, புதிய சமுதாயத்தின் விதி வழியே சென்றாக வேண்டும். இதன் வேகத்தை எதிர்த்து நிற்க முடியாது. கண்ணுக்குப் புலப்படாமல், ஆகவே வெறித்தனமாக வரும் இந்தச் சமுதாயத்தில் சிலர் திடீரென உயர்ந்த இடத்திற்கு ஏறிப் பெரியவராகின்றனர்"*[52]

என்று ஞானி கூறுகின்றார். இவ்வாறு திடீரென உயர்ந்தவர்கள் முதலாளிகள் என்னும் பூர்ஷ்வா சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களால் எந்த விதப் பயனும் சமுதாயத்திற்கு இல்லை. அதிக அளவில் சொத்துக்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு ஏழைகளிடம் சுரண்டிப் பிழைக்கும் நாகரிகக் கொள்ளையர்கள். இவர்கள் செய்யும் அநியாயங்களை எதிர்த்து தீரத்துடன் போர் செய்யும் ஆற்றல்களை மார்க்ஸ், ஏங்கெல்சு போன்றோர் சுரண்டப்பட்ட மக்களுக்கு ஆயுதங்களின்றி போராடும் புரட்சிச் சிந்தனைகளை விதைத்துள்ளனர். அந்த வகையில் கவிதை என்ற ஆயுதம் கொண்டு மார்க்ஸ் கூறும் புரட்சிக் கருத்துக்களைத் தமிழன்பன் கவிதைகளில் காணமுடிகின்றது.

"வார்த்தைகள் கேட்ட வரம்" கவிதைத் தொகுப்பில், 'எட்டையபுரத்தான் எதற்கு வந்தான்' என்ற கவிதையில், இங்கே குப்பைத் தொட்டிகள் குழந்தைகளைப் பெறுகின்றன. அதனால்தான் குப்பைத் தொட்டிகளோடு இவர்களுக்கும் அப்படியொரு தாய்ப்பாசம். நாயோடும் அந்தத் தாயருகே சமபந்தி உணவு என்றும்,

> *"தனி ஒருவனுக்கு*
> *உணவிலை எனில்*

52. ஞானி, மார்க்சியமும் தமிழ் இலக்கியமும், ப.5.

ஜகத்தினை அழிப்போம்!
கோபத்தால்
பாரதி வார்த்தைகள்
சிவந்து
கவிதையிலிருந்து வெளியே
வீதிக்கு வந்தன.
அவற்றின் கைகளில்
தீப்பந்தங்கள்
எதிரிகளைக் குறி வைக்கும்
ஏ.கே. நாற்பதுகள்" **(த.க.தொ.1, ப.528)**

என்று பாரதியாரின் சொல் புரட்சியைத் தமிழன்பன் மேலும் மெருகேற்றியுள்ளார்.

"பொதுவாகவே ஒரு வர்க்கத்துக்கும் இன்னொரு வர்க்கத்திற்குமிடையே உள்ள முரண்பாடு பொருளாதார நலன்களைப் பொறுத்துத்தான் பலவித வடிவமெடுக்கும். அத்தகைய நேரங்களில் ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தின் மீது தன் நலன்களை வலுவில் திணிக்கும். வலியமுறையில் அடக்கநினைக்கும்"[53]

என்றும் 'மாரிசுகாரின் போர்த்' என்பவரின் கருத்தைப் பாலன் மொழி பெயர்த்துள்ளார். சமூகத்தின் புரட்சித் தன்மை வலுப்படவேண்டும் என்பதை இன்றைய தலைமுறைக் கவிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். புரட்சிக்குரல் எழுப்பினால் போதும் புறப்படத் தயாராக நாங்கள் இருக்கின்றோம் என்பதைத் "தோணி வருகிறது" என்ற கவிதைத் தொகுப்பில் இதே தலைப்பிலான கவிதையில்,

"கறுத்தபகல் நாள்களிலே
காவியிருள் அலைகளிலே
உறுத்தலுற்ற வர்க்கத்தின்

---

53. **மொ.ப.பாலன், இயக்கவியல் பொருள் முதல்வாதம், ப.45.**

உயிர்விழிப்பு வருகிறதோ?
போதனையைப் புறந்தள்ளிப்
போராட்டக் கருவியுடன்
போதிமரத் தோணியிது
புறப்பட்டு வருகிறதோ?" (த.க.தொ.2, ப.220)

என்று மாறுபட்ட சிந்தனைப் புரட்சியைக் கவிஞர் கூறுகின்றார். போதிமரம் என்பது மௌனத்தின் குறியீடு. அது போராட்டக் கருவியுடன் வருகின்றது என்று கூறியுள்ளமையால், நாட்டில் நடக்கும் வன்முறைகளைப் பார்த்த போதிமரம்கூட புரட்சி செய்யத் தொடங்கிவிட்டது என்பதாகக் கவிஞர் கூறுகின்றார்.

அதுபோல, "தோணி வருகிறது" கவிதைத் தொகுப்பில், 'தண்ணீரால் வெறுக்கப்பட்ட தாகங்களே' என்ற கவிதையில்,

"விரல்களே ஈட்டியானால்
விமோசனம் பிறந்திடாதா?
மின்மினி வேள்வி செய்தால்
வெயில் வட்டமாகும்! பச்சைப்
புல்நுனி வேள்வி செய்தால்
பூகம்பம் நடத்திக் காட்டும்!
விரல்களை ஈட்டியாக்கும்
வேள்வியின் அழைப்பை ஏற்பீர்" (த.க.தொ.2, ப.235)

என்று விரல்களை ஈட்டிகளாக உவமித்து புரட்சி எண்ணத்தை ஒவ்வொருவருக்குள்ளும் உருவாக்கும் கருத்துக்களைத் தமிழன்பன் கவிதைகளில் காணமுடிகின்றது.

"உன் வீட்டிற்கு நான் வந்திருந்தேன்.... வால்ட்விட்மன்" என்ற கவிதைத் தொகுப்பில், 'கஹோலியாவில் கேட்ட இரத்தக் கதைகள்' என்ற கவிதையில், மிசிசிபி, மிசௌரி சங்கமமாகும் இடத்திற்கு அருகில் கஹோலியா என்ற நகரம்.

அமெரிக்கத் தொல்குடிமக்களின் குடியிருப்புச் சின்னமாக விளங்கும் இந்த நகரத்தின் வேதனையை,

"வேட்டை வெறி பிடித்த
ஐரோப்பியர்களுக்கு மட்டும்
விலங்காகிப் போனதோ எங்கள் சந்ததி?
வரலாற்றின் அத்தியாயங்களை
உருப்படுத்திய
நாட்டு மிராண்டிகள் பார்வையில்
காட்டு மிராண்டிகள் எம் இனத்தார்!" **(த.க.தொ.4, ப.202)**

என்று 'ஐரோப்பியர்களுக்கு மட்டும் விலங்காகிப் போனதோ எங்கள் சந்ததி' என்னும் வரிகளில் கஹோலிய இனமக்கள் வாழ்க்கைச் சோகத்தை விளக்குகின்றார். இம்மக்கள் நாள்தோறும் படும் துன்பத்தை,

"இரத்தக் கதைகளின்
சத்தம் மட்டும்
இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறது" **(த.க.தொ.4, ப.203)**

என்னும் சொற்களால் அவர்களின் வாழ்க்கை புரட்சியில் புண்களாய்ப் போனதைக் கூறுகின்றார்.

முடிவுரை

மார்க்சியத் தத்துவம் சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை அடிப்படை நோக்கமாகக் கொண்டு உருவான இயக்கமாகும். காரல்மார்க்ஸ், பிரெடரிக் ஏங்கெல்சின் கருத்துக்களில் உள்ள உண்மைத் தன்மையை அறிதலை இவர்களின் மெய்ஞ்ஞானம் விளக்குகின்றது. மனித சமூகம் அடிமைப்பட்டு வாழக் காரணம் என்ன? என்பதைப் பற்றி சிந்திக்கச் செய்த தத்துவம் மார்க்சியம் ஆகும்.

உலகம் பொருளை முதலாகக் கொண்டது. விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது என்ற பலவித கருத்துக்களை அறியாமல் இருந்த மக்களுக்கு எடுத்துரைக்கும் இயக்கமாக மார்க்சியம் விளங்குகின்றது. கூலி, அடிமைமுறை இவற்றை ஒழிக்கவேண்டும் என்ற கருத்தைப் பறைசாற்றுகின்றது.

மேற்கண்ட மார்க்சியக் கொள்கைகளை உள்ளடக்கி தத்துவத்தை முதல் நிலையாகக் கொண்டு, பல்வேறு கவிஞர்கள் கவிதைகள் படைத்தாலும், ந.பிச்சமூர்த்தி கவிதைகளில் ஆங்காங்கே சில மார்க்சியக் கருத்துக்கள் அவரை அறியாமலே ஊடுருவி உள்ள பாங்கை அறியமுடிகின்றது.

மார்க்சியம் பற்றி சிந்திக்காத மனிதர்கள் இல்லை. தான் மார்க்சியவாதி இல்லை என்றாலும் அவர்களுக்குள் இருக்கும் உள்உணர்வு அவர்களை அறியாமலே அனிச்சையாக மார்க்சியத்தை எழுதத் தூண்டுகிறது.

இன்குலாப் கவிதைளில் பொருள் முதல்வாதத்தை முன்னிருத்தி மக்களின் உழைப்பு, பொருளாதார தன்னிறைவு போன்றவற்றைப்பெறப் போராட வேண்டியதன் அவசியத்தைத் தன் கவிதைகளில் எடுத்தாண்டுள்ளார்.

இன்குலாப் எதையும் துணிந்து எழுதும் மனப்பக்குவம் கொண்ட கவிஞர். அவரின் கவிதைகள் சமுதாயத்தின் அகமனத்தை ஒளிரச் செய்து புதுவகையான கருத்தினை மக்களுக்கு ஊட்டுகின்ற பெருவாரியான, கவிஞர்களுக்கு இருக்கும் சிந்தனைகளைத் தாண்டி இவரது மனம் மார்க்சியத்தின் ஆழ்ந்த ஈடுபாட்டோடு இருப்பதால்தான் இவரின் கவிதைகள் ஏழ்மை வடிவம் கொண்டதாகக் காட்சி தருகிறது. பரிதாபத்திற்கு உரிய சொற்களைப் பயன்படுத்திப் புரட்சிகர சிந்தனையை வெளிப்படுத்துவதில் இன்குலாப் சிறந்தவர்.

தமிழன்பனின் கவிதைத் தொகுப்புகள் எல்லாம் பொழுதுபோக்காகப் படிக்க முடியாது என்பதையும், பல்வேறுபட்ட உள்ளீடுகளை எதார்த்தமான

வார்த்தைகளைப் பயன்படுத்திக் கூறுவதில் வல்லவர் என்பதையும் உணரமுடிகின்றது. முதலாளிகளின் சுரண்டலை, தொழிலாளர்களின் வறுமையைத் தனது கவிதைகளில் சொல்லும் போதெல்லாம், தொழிலாளி அந்த கவிதையைப் படித்தால் வீறுகொண்டு எழுவான். முதலாளி வர்க்கம் படித்தால் சுரண்டல் என்ற எண்ணத்தையே மறந்து விடுவான். அத்தகைய சிறப்பான கருத்துக்களை மார்க்சியத்தின் ஊற்றுக்கால்களை இந்த ஆய்வு வெளிப்படுத்துகின்றது.

இயல்-4

தமிழ்ப் புதுக்கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள்

இயல் - 4

தமிழ்ப் புதுக்கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள்

உலகில் எண்ணற்ற மொழிகள் தோன்றியுள்ளன. அவை அனைத்தும் எல்லோராலும் பேசப்படுவதில்லை. ஆனால் அம்மொழிகளில் தோன்றிய இலக்கியங்கள் பல மொழிகளில் பேசப்படுகின்றன. ஒரு மொழிக்கும் மற்றொரு மொழிக்கும் இடையில் காணப்படும் கருத்தொற்றுமைதான் இலக்கியங்கள் பேசப்படக் காரணம் எனலாம். அதுபோல, ஒரு காலகட்டத்தில் பல்வேறு சமூக இயக்கங்கள் தோன்றுவதற்கு ஒரு நாட்டில் நடைபெறும் அரசியல், சமூகநிலை இவற்றைக் காரணமாகச் சுட்டலாம். இயக்கங்களின் கொள்கைகளை வெளிப்படுத்துவதற்குக் கருவிகளாக அமைபவை இலக்கியங்களாகும். இலக்கியங்கள் சமூகத்தின்மீது அக்கறை கொண்டவை. அந்தவகையில் எண்ணற்ற இலக்கிய வகைகள் இருந்தாலும் தமிழில் 'புதுக்கவிதை' என்ற வடிவம் பொதுவான பலதரப்பட்ட இயக்கச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் போற்றுதலுக்குரிய காலகட்டம் புதுக்கவிதை காலகட்டம் ஆகும். சமூகத்தின் பல்வேறு சூழ்நிலைகளைப் புதுக்கவிதைகள் மூலம் வெளிப்படுத்திய காலம். 'தமிழ்' என்றால் கவிதை என்றும் பொருள் கூறலாம் எனச் சொல்லிற்குள் புதுமைகளைப் புகுத்தி நாட்டின் எழுச்சி, புரட்சி, ஏழ்மை, ஏற்றத்தாழ்வு இவற்றைப் புகட்டிய காலம் புதுக்கவிதையின் காலமாகும். 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்று போராடிய பேச்சொலியோடு, 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்று சொற்புரட்சியினால் மட்டுமே சுதந்திரம் வெல்லும் என்று நம்பிய காலம் கவிதையின் காலம். இத்தகைய புதுக்கவிதையில் எந்த ஒரு வேற்றுமையும் இன்றித் தத்துவங்களும் இடம்பெற்றுள்ளன. பல்வேறு தத்துவங்கள் உலகம் முழுவதும் பேசப்பட்டாலும், இந்திய மண்ணில் தோன்றிய

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் கொள்கைகள் எல்லோராலும் பின்பற்றக் கூடிய எளிய கொள்கைகளைக் கொண்டு புதிய சிந்தனைகளை உருவாக்குவனவாய்த் திகழ்கின்றன. அவரின் தத்துவக் கருத்துகள் 'காந்தியம்' என்றழைக்கப்படுகின்றது.

காந்தியம் - விளக்கம்

> *"மனிதன் இப்படிதான் வாழவேண்டுமென மனித வாழ்வுக்கு இலக்கணம் வகுப்பது திருக்குறள். மனிதன் வாழவேண்டிய நல்லநெறியில் வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள். அவரது வாழ்க்கையே காந்தியம்"*[1]

என்று காந்தியத்திற்கு விளக்கம் கூறப்படுகின்றது. பலவிதமான வாழ்வியற் கோட்பாடுகளை வகுத்தவர் காந்தியடிகள். அதுபோல, தான் வகுத்த கொள்கைகளின்படி வாழ்ந்தும் காட்டியுள்ளார். காந்தியம் என்பது, இந்தியாவில் உள்ள வேற்றுமைகளையும், பிணக்குகளையும் ஒழிக்க வேண்டும். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுமாறு அவர்களைப் பழக்கப்படுத்தி விடவேண்டும். அரசியல், பொருளாதாரம், சமுதாயம் முதலியவற்றில் ஆண்கள் அடைந்திருக்கின்ற இலக்கைப் பெண்களும் அடையவேண்டும். தேசத்தைப் பல பிரிவுகளுக்குள்ளாக்கி இருக்கிற மதவேறுபாட்டினை நீக்கவேண்டும். தீண்டாமையை ஒழித்து இந்து சமயத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டும் போன்ற கொள்கைகளின் கொள்கலனாக காந்தியம் திகழ்கின்றது. எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருந்த இந்திய மக்களை விழித்தெழச் செய்தது காந்தியக் கோட்பாடுகளே ஆகும்.

---

1. சு.மணிவண்ணன், நாமக்கல் கவிஞர் பாடல்களில் அகிம்சைக் கோட்பாடு, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, பக்.11-12.

> *"உடைமையின்மை என்பது வஸ்த்துகளை மாத்திரம் பற்றியவை அன்று; அது அபிப்ராயங்களையும் பற்றியதாகும். பயனற்ற விஷயங்களால் மூளையை நிரப்பிக் கொள்பவனும் இந்த தருமத்தைப் புறக்கணித்தவனே ஈச்வரனுக்கு எதிரிடையாக நம்மை இழுத்துச் செல்லும் எண்ணங்களும் அவனிடம் வெல்வதற்குத் தடையாக இருக்கும் எண்ணங்களும் பயனற்றனவே; என்பதே காந்தியம் ஆக, உண்மை உடைமையின்மை என்பது வஸ்துக்களின் மீது மட்டுமல்ல எண்ணங்களின் மீதும் எண்ணப்படுவதாகும் என்றதொரு புதிய சிந்தனை காந்தியடிகளின் கருத்தாகும்"*[2]

என்று முத்து இலக்குமி கூறுகின்றார்.

இன்று தேசாபிமானிகளைக் காந்தியவாதிகளாகக் கூறும் போக்கு காணப்படுகின்றது. காந்தியம் நாட்டுப்பற்றை அதிகம் வலியுறுத்துகின்றது.

> *"தேசாபிமான தத்துவம் இப்பொழுது ஒவ்வொரு மனிதனும், தன்குடும்பத்திற்காகவும், ஒவ்வொரு குடும்பமும் கிராமத்திற்காகவும், ஒவ்வொரு கிராமமும் தன் மாவட்டத்திற்காகவும், ஒவ்வொரு மாவட்டமும் மாநிலத்திற்காகவும், ஒவ்வொரு மாநிலமும் நாட்டிற்காகவும் தன்னைப் பலியிட வேண்டும் என்று போதிப்பதைப் போல, தேவையானால் உலகத்தின் நன்மைக்காக தன்னை பலியிடும் பொருட்டு ஒவ்வொரு நாளும் சுதந்திரமாயிருந்தாக வேண்டும். எனவே, எனக்கு நாட்டுப்பற்று இருப்பதற்குக் காரணம் என் நாடு சுதந்திரமாயிருந்தால் தேவையானால் உலகம் உய்யும் பொருட்டு மக்களினம் நல்வாழ்வு பெறும்பொருட்டு, என் நாடு முழுவதும் பலியாக முடியுமென்பதே, அதில் சாதி இன துவேஷங்களுக்கு இடமில்லை. இதுவே நம் தேசாபிமான தத்துவமாயிருக்கட்டும்"*[3]

---

2. **ஆண்டியப்பன், முத்துலக்குமி, கோட்பாடுகளில் காந்தியம், பக்.38-39.**
3. **காந்தியடிகள், உலக அமைதிக்கு அகிம்சைவழி, ப.56.**

என்கிற தத்துவக்கூறு காந்தியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் மகாத்மாவின் கொள்கைகளைக் காந்தியமாக நாம் கூறினாலும் அவர் அதை ஏற்றுக்கொள்வதில்லை.

> *"காந்தியம் என்று ஒரு தனி மார்க்கம் இல்லை. என்னுடைய பெயரில் ஒரு தனி மார்க்கத்தை விட்டுப் போக நான் விரும்பவில்லை. ஒரு புது சமயத்தையோ கொள்கையையோ நான் கண்டு உபதேசிக்கவுமில்லை. சாதாரணமாக இருந்து வந்த பெரியோர்கள் கண்ட பழைய உண்மைகளைத் தினசரி வாழ்க்கையிலும் செய்யும் காரியங்களிலும் செலுத்திப் பார்க்கலாம் என்பதுதான் என்னுடைய முயற்சி"*[4]

என்ற காந்தியின் கூற்று சிந்திக்கத்தக்கது. காந்தியின் கொள்கைகள் ஒவ்வொரு களத்திலும் முத்திரைப் பதித்தவையாகத் திகழ்கின்றன. அவரின் அரும்பெரும் பணிகளை ஆராய்ச்சி செய்யுங்கால் வாழ்வியற் கோட்பாடுகளை வகுத்தளித்து அதன்வழி பல தத்துவங்களையும் வடித்துள்ளார். உருக்கமும் அன்பும் கொண்ட காந்தியின் போதனை அஞ்சாமையும், சத்தியமும்தான். இதனை இலட்சியமாகக் கொண்டு பாடுபடுதல் எப்பொழுதும் பெருந்திரளான மக்களுடைய நன்மைக்கு முதன்மை அளித்தல், அச்சமின்மை தனிப்பட்ட நபருக்கும் நாட்டுக்கும் மாபெரும் அருட்கொடை என்று நமது தொன்மை நூல்கள் கூறியுள்ளன.

> *"சத்தியமும் ஜீவகாருண்யமும் புதிய விஷயங்கள் அல்ல. நம்முடைய ஆறுகளையும் மலைகளையும் போல் மிகப் பழமையானதும் பழகி வந்ததுமான தத்துவங்கள். நான் புதிதாகச் செய்வது என்னவென்றால் இந்தப் பழைய தத்துவங்களை வைத்து என்னால் ஆன அளவு பிரயோகப் பரிட்சை விஸ்தாரமாகச் செய்து வருகிறேன். இவ்வளவே இந்த பிரயோகத்தில் சில சமயம் தவறும் செய்திருக்கிறேன். தவறு*

---

4. **காந்தியடிகள், சத்தியமே கடவுள், ப.12.**

செய்ததன் பயனாகத் திருத்தம் அடைந்து அறிவும் பெற்றிருக்கிறேன். வாழ்க்கையும் தினசரி விவகாரங்களும் என்னைப் பொறுத்தமட்டில் சத்தியம், அஹிம்ஸை இந்த தத்துவங்களின் சோதனைக் களங்களாகி விட்டன. சத்தியம், அகிம்சை இந்தக் கொள்கையில் எனக்குள்ள பக்தியானது உறுதியடைந்து வளர்ந்து வருகிறது”[5]

என்று காந்தியடிகள் கூறியுள்ளார். இவருடைய கொள்கைகள் காந்தியம் என்ற தத்துவமாக இன்று மக்களிடம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சமூகம் என்ற அமைப்பை உருவாக்கப் பாடுபட்ட இவரின் கொள்கைகள் வாழ்வியல் நடைமுறைகளோடு தொடர்புடையனவாகும்.

காலந்தோறும் கருத்துப்புரட்சிகள் தோன்றிய வண்ணம் உள்ளன. சமூகத்தின் எதிர்பார்ப்புகளை இயக்கங்கள் நிறைவேற்றக் கருத்துச் சுதந்திரம் தேவை. அந்தவகையில் சமூகத்தின் எதிர்பார்ப்பை மிகவும் தெளிவாகப் புரிந்து கொண்ட காந்தியடிகளின் கொள்கைகளைக் காந்தியமாக சமூகத்தினர் மதிக்கின்றனர்.

“காந்தியம் என்ற சொல்லை முதன் முதலாகக் காந்தியடிகளும் கராச்சியில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார். காந்தி இறந்து விடலாம். ஆனால் காந்தியம் ஒரு போதும் இறவாது என்றார். அவர் காந்தியம் என்று குறிப்பிட்டது சத்தியமும் அகிம்மைசயும் பொதிந்த தம் தத்துவ நெறியே ஆகும்”[6]

என்று காந்தியடிகளின் கூற்றை சாந்தா ஆப்தே எடுத்துக் கூறுகின்றார். இவரின் தத்துவம் வாழ்க்கையை மாற்றி அமைக்க உதவக் கூடியது என்பதை அறியமுடிகின்றது.

---

5. காந்தியடிகள், சத்தியமே கடவுள், ப.13.
6. ந.சாந்தா ஆப்தே, தமிழ்ச் சிறுகதைகளில் காந்தியத்தாக்கம், ப.1.

“புத்தரின் கொள்கைகள் பௌத்தமாக உருப்பெற்றது போல், இயேசுவின் கொள்கைகள் கிறித்தவமாக மலர்ந்தது போல், இந்நூற்றாண்டில் நம் கண்ணெதிரே வாழ்ந்து உலக அமைதிக்குப் பாடுபட்ட காந்தி காந்தியடிகளின் கொள்கைகள் காந்தியம் எனப் போற்றப்படுகிறது”[7]

என்று காந்தியம் பற்றி உமா குறிப்பிடுகின்றார்.

“அவருடைய வாழ்வு, பண்பு நலன்கள், செயல்கள், வெற்றிகள், அறவுரைகள் ஆகியவை ஒன்று சேர்ந்து உருவாக்கிய ஒரு தத்துவமே காந்தியம் எனலாம்”[8]

என்று காந்தியம் குறித்த விளக்கத்தை ந.சாந்தா ஆப்தே கூறுகின்றார்.

இந்திய விடுதலைப் போர் வரலாற்றில் 1906 முதல் 1920 வரையுள்ள பதினைந்து ஆண்டுகளைத் திலகர் ஊழி என்றும், 1920 முதல் 1948 வரையுள்ள காலத்தைக் காந்தி ஊழி என்றும் குறிப்பிடலாம். 1920க்குப் பிறகு எழுதப்பட்ட கவிதைகளில் காந்தியத்தாக்கம் பேரளவிற்குப் படிந்துள்ளது. 1920க்குப் பிறகு புதுக்கவிதையின் முன்னோடியாகப் பாரதியார் திகழ்கின்றார். அவருடைய கவிதைகளில்,

“வாழ்க நீ எம்மான், இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க”[9]

---

7. வ.உமா, காந்தியம் அழைக்கிறது, ப.85.
8. ந.சாந்தா ஆப்தே, மு.நூ., ப.1.
9. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.999.

என்று வாழ்த்துகின்றார். பாரதியாரைவிட காந்தியச் சிந்தனைகள் ஆழ்ந்து தோய்ந்து அக்கொள்கை விளக்கத்திற்காகவே இலக்கிய வாழ்வை மேற்கொண்டவர்கள் நாமக்கல் கவிஞர், இராய.சொக்கலிங்கம், சுத்தானந்த பாரதி ஆகியோர் ஆவர். அவர்களைப் பின்பற்றியே பலரும் காந்தியத்தைப் பாடத் தொடங்கினார்கள்.

காந்தியத்தைப் பாடிய கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் ந.பிச்சமூர்த்தி. இவர் மனிதவாழ்க்கையில் ஒரு பொதுஉறவு வேண்டிக் குறியீடுகள் மூலம் கவிதைகளின் பொருள்களைப் புரிய வைத்தவர். இவர் 'பூக்காரி' என்ற கவிதையில் பூ விற்கும் பூக்காரிபோல அன்பும் அஹிம்சையும் விற்று வந்தால் அதை வாங்குவோர் யாரும் இல்லை என்ற பொருள்பட பாடியுள்ளார். பொதுவான காந்தியத்தின் கருத்து அன்பு என்பதை உணர்வுப்பூர்வமாக வெளிக்காட்டி நிற்கும் கவிதை வரிகளில்,

"அன்பும் அஹிம்சையும்
விற்று வந்தேன் ஆதிமுதல்
பூக்காரி பூவைப் போல்
கண்ணெடுப்பார் யாருமில்லை
ருத்திரனின் வெறிக் கூத்தில்
கருமேகம் கொண்டு விட்டார்" **(ந.பி.கவிதைகள், ப.115)**

என்று ந.பிச்சமூர்த்தி 'பூக்காரி' என்ற குறியீட்டின் மூலம் காந்தியின் அன்பு அஹிம்சைத் தத்துவத்தை உணர்த்துகின்றார்.

"அன்பையும், அஹிம்சையையும் முற்காலத்தில் உபதேசித்த பெரியோர்கள் அவற்றை மனிதனுடைய நல்வாழ்வுக்குரிய மேலான குணங்களாகவும் மோட்ச சாதனங்களாகவும் உபதேசித்தார்களே தவிர, அந்த குணங்களை உலகிலுள்ள தீமைகளை எதிர்த்துப் போராடுவதற்குரிய ஆயுதங்களாக உபயோகிக்கலாம் என்று சொல்லவில்லை. அன்பையும் அஹிம்சையையும், சமூகத்

தீமைகளை ஒழிப்பதற்கு ஆயுதங்களாகச் செய்து காட்டிய அவதார புருஷர் மகாத்மா காந்திதான்"[10]

என்று கல்கி, மகாத்மாவின் எண்ணங்களை எடுத்துக்கூறுகின்றார்.

'இன்குலாப்' கவிதைகளில் வலிய புகுத்தப்படாமல் இயல்பாகவே காந்தியக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதனை, அவருடைய கவிதை நூலான "ஒவ்வொரு புல்லையும்" என்ற நூலின்வழி அறியலாம்.

காந்தியடிகளின் படங்கள் எல்லா அரசு அலுவலகங்களிலும் காணமுடிகின்றன. காவல்நிலையத்தில் அகிம்சாமூர்த்தியின் படம் கண்டிப்பாக இருக்கும். காந்தியடிகளின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய காவல்துறை அதிகாரிகள், வன்கொடுமைகளை எதிர்க்க வேண்டிய காவல்துறை அதிகாரிகள் செய்யும் தவறுகள் எண்ணற்றவை என்பதை இன்குலாப், 'உன் கூண்டுகள்' என்ற கவிதையில் 1992ஆம் ஆண்டு காவல்துறையினரால் பாலியல் வன்முறைக்கு ஆளான பத்மினி என்ற பெண்ணிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார்.

"உன்
விசாரணையில் தெறித்த
குருதியும்
சதையும்
ஒருபிடிக் கூந்தலும்
உடைந்த வளையலும்
உன்
அகிம்சைப் படத்தின்
உளுத்த சட்டங்களில்" (ஒ.பு., ப.212)

---

10. கல்கி, மாந்தருக்குள் ஒரு தெய்வம், ப.74.

என்ற கவிதையில் பெண்களுக்குப் பாதுகாப்பாக ஒவ்வோர் ஆணும் இருக்க வேண்டும் என்பதை மறந்து காவல்துறை அதிகாரிகள் தவறான, மதிபிறழ்ந்த செயல்களைச் செய்கின்றனர் என்பதைப் பதிவு செய்துள்ளார்.

ஆரோக்கியமான உடல்நலம் காக்கச் சுற்றுச்சூழல் தூய்மையாக இருத்தல் வேண்டும். சுத்தமான காற்று, நல்ல சீதோஷ்ணநிலை, சுற்றுப்புறத்தூய்மை இவையாவும் இருந்தால்தான், மக்கள் எந்த நோயும் இன்றி ஆரோக்கியமாக வாழமுடியும் என்பதை உணர்ந்தவர் காந்தியடிகள். எனவே, சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் எடுத்துரைத்தார்.

காந்தியடிகள் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு இல்லாத சேரிமக்களின் வாழ்க்கையை மாற்றவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அவரின் கருத்துக்கள் இன்றைய காலகட்ட கவிஞர்களிடமும் காணமுடிகின்றது. கவிஞர் இன்குலாப், ‘சேரிக்குமரி ஒரு விடுகதை போடுகிறாள்’ என்ற தலைப்பில் எழுதிய கவிதையில், இரவு நேரத்தில் கவிதைபாடும் சங்கீத வித்வானி, பணமில்லாத பாமரர்களுக்காக இரவுநேரத்தில் கச்சேரி நடத்துகின்றன என்று கொசுக்கள் பற்றி சேரிக்குமரி விடுகதைப் போடுவதாகப் பாடுகின்றார்.

> “*பணமில்லாத பாமரர்களுக்காகக்*
> *கச்சேரி நடத்தும் இந்தக் கலைஞர்*
> *கோப்பை மதுவைக் குடிப்பதில்லை*
> *சேரிக் குடிகளைக் குடித்தே சிந்திப்பார்*” (ஒ.பு., ப.142)

என்று வினாத் தொடுத்து விடையைச் சேரிப்பெண்ணே கூறுவதாகக் கவிதை வரிகள் இடம்பெற்றுள்ளன.

> “*என்னை விரும்பும் இரவுக் காதலர்*
> *இவர்களை விடச் சிறந்த காதலர்*
> *தெரியவில்லையா? என் சிந்தை கவர்ந்தவர்....*
> *இனிய கம்பியில் உயிரை இழைத்தவர்....*

சிட்டின் அலகு போல் சிறகு பெற்றவர்...
பறக்கத் தெரிந்த கறுப்புச் சீரகம்...
இவரை –
கொசு வென்று நீங்கள் குறை கூறாதீர்" (ஒ.பு., ப.143)

என்று சுகாதாரத்தின் இன்றியமையாமையைக் கூறும் கவிஞரின் வரிகளில் சமூக அக்கறையை உணரமுடிகின்றது.

காந்தியத்தின்மீது ஈர்ப்பு கொண்டவர்கள் காந்தியக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு வலித்துக் கவிதை எழுதுவர். ஆனால், எதார்த்தப் போக்கில் காந்தியம் பற்றிப் பாடவேண்டும் என்ற சிந்தனை இன்றி சமூக அக்கறை கொண்டு படைக்கப்படும் கவிதைகளில் காந்தியம் எதார்த்தமாய் இடம்பெறும். அந்த வகையில் கவிஞர் இன்குலாப்பின் கவிதைகளில் காந்தியம் பற்றிய சிந்தனை இயல்பாகவே இடம்பெற்றுள்ளன.

ந.பிச்சமூர்த்தி, கவிஞர் இன்குலாப் ஆகியோரைத் தொடர்ந்து ஈரோடு தமிழன்பன் கவிதைகளிலும் காந்தியத் தத்துவத்தைக் காணமுடிகின்றது.

சுகாதாரத்தைப் பற்றிக் காந்தியடிகள் சிந்தித்தவை பொதுவான தத்துவம் என்று கூறலாம். அதனையும் தாண்டி இன்றைய கவிஞர்கள் மனதில் ஆயிரக்கணக்கான சுகாதாரத் தேடல்கள் உள்ளன. மருத்துவம் சார்ந்த தேடல்கள் அறிவியல் உலகை ஆட்டிப்படைத்துக் கொண்டுள்ள இன்றைய காலத்தில் மருத்துவத்துறையில் சுகாதாரம், ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வு மிக அவசியமானதாகிறது என்பதை ஈரோடு தமிழன்பனின் "வார்த்தைகள் கேட்ட வரம்" என்ற நூலில் 'அறிவியல் செய்வோம் அன்னைத் தமிழில்' என்ற கவிதையில்,

"ஆரோக்கியமாய், நோய் வாழ்வதன்
அடையாளம் வலி...

அது வாழ்வது முனகல் முகவரியில்!
அனத்தலின்
ஆதார சுருதி வலி...” **(த.க. தொ.1, ப.615)**

என்று நோய்களை அடையாளப்படுத்தும் வலி பற்றிக் கூறியுள்ளார். ஆரோக்கியமாக வாழ சுத்தமான காற்று, சுகாதாரமான சூழ்நிலை அவசியம் என்பதைக் கவிஞர்களும் வலியுறுத்துகின்றனர்.

“நல்வாழ்வு மனிதனோடு
நடத்தும் ஊடல்தான் வலி...
மருத்துவர்களே
ஊடல் தணிக்கும் வாயில்!” **(த.க.தொ.1, ப.617)**

என்று தமிழன்பன் நல்வாழ்விற்கு ஆரோக்கியம் என்பதும் இன்றியமையாதது. அதற்கு, மருத்துவம் வழிவகை செய்கின்றது என்கிறார். எனினும் மருத்துவம் மட்டுமின்றி உடற்பயிற்சி, தியானம், யோகா, உணவுப் பழக்கவழக்கங்கள் போன்றவை ஆரோக்கியமாக வாழத் துணைபுரிகின்றன என்பது காந்தியடிகளின் தத்துவமாகும்.

“வார்த்தைகள் கேட்ட வரம்” என்ற கவிதைத் தொகுப்பில் ‘சுதந்திரப் பொன்விழாவில் - இவை என்ன பேசும்?’ என்ற கவிதையில், சுதந்திரம் பெற்றதைப் பற்றி காந்தியடிகளின் கண்ணாடி என்ன சொல்கின்றது? என்று கூறவரும் ஈரோடு தமிழன்பன்,

“அந்தக் கண்ணாடியைப்
போட்டுக் கொண்டு
பார்த்தால்-
கோடி கோடி குடிசைகளில்
இளைத்து நொந்த பாரதமாதா
தெரிகிறாள்” **(த.க.தொ.1, ப.665)**

என்று ஏழைப் பெண்கள் சுதந்திரம் பெற்ற பின்புகூட மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவிக்கவில்லை என்கின்றது காந்தியடிகளின் மூக்குக் கண்ணாடி.

காந்தியடிகளின் மூக்குக் கண்ணாடியைப் பாரதமாதா அணிந்து கொண்டு தேச பக்தர்களைத் தேடினாள். தேசபக்தர்கள் அத்தனை பேரும் அரசியல்வாதிகள் என்று அவர்கள் அணிந்திருந்த முகமூடி காண்பிக்கின்றது. சுதந்திரம் பெற்ற நாடு என்னுடையது என்ற சிந்தனை ஒவ்வொருவருக்குள்ளும் ஏற்பட வேண்டும் என்பதைத் தமிழன்பனின் கவிதைகள் உணர்த்துகின்றன.

> *"பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்க வேண்டும். மக்களில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்பதே இருக்கக் கூடாது. எல்லாச் சமூகத்தினரும் அன்யோன்யமாய் வாழ வேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்"*[11]

என்று அறிஞர் அண்ணா காந்தியடிகளின் சிந்தனையை விளக்குகின்றார். நாடு நமக்காகச் செய்வதற்கும் நாம் நாட்டிற்காகச் செய்வதற்கும் வேறுபாடுகள் நிறைய உண்டு. நாட்டிற்காக உழைக்க வேண்டும், பாடுபடவேண்டும் என்ற சிந்தனை ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இருக்க வேண்டும் என்பது காந்தியடிகளின் கருத்தாகும்.

> *"மண்ணிலிருந்தே*
> *கண்ணாடி தயாரிக்கப்பட்டாலும்*
> *அணிந்த வர்க்கெல்லாம் தெரியவில்லை*
> *இந்த மண்.*
> *அண்ணலுக்குத் தெரிந்தது…*

---

11. சி.என்.அண்ணாத்துரை, உலகப்பெரியார் காந்தி, ப.37.

இந்த மண் மட்டுமா...
இந்த மண்ணுக்கு ஏற்பட்ட
அடிமைத் தனமென்னும்
அவமானப் புண்ணும் தெரிந்தது" (த.க.தொ.1, ப.667)

என்று காந்தியடிகளின் நாட்டுப்பற்று உணர்வைத் தனது கவிதை வரிகளின் மூலம் விளக்குகின்றார்.

"கதவைத் தட்டிய பழைய காதலி" என்ற கவிதைத் தொகுப்பில் 'இனிய என் தாய் நாடே' என்ற கவிதையில் தாய்நாட்டைப் பார்த்துக் கவிஞர் பேசுவதாகக் கவிதை வரிகள் இடம்பெற்றுள்ளன. 'உனது எல்லையில் ஒரு பிடி மண்ணும், ஒருவனும் அள்ள ஒரு கணம் தரியோம், பகையை அழித்துப் பழியைத் தடுக்க, கனலாய்ப் புனலாய் கடலாய் எழுவோம்' என்று கூறும் கவிஞர்,

"கொள்கை மறவோம் கொடுமை புரியோம்
கொள்ளை அடித்துக் காசு குவியோம்
கலப்படம் செய்யோம் கள்ளக் கணக்கிலே
உள்ளம் செலுத்தோம் ஒழுக்கம் தவறோம்" (த.க.தொ.2, ப.195)

என்கிறார். தாய்நாட்டிற்காகவும் சுயவாழ்க்கை மேம்பாட்டிற்காகவும் சிந்தனையில், சொல்லில், செயலில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதைக் கவிதைவரிகள் எடுத்துரைக்கின்றன.

"தொண்டே மோகம்
தொழிலே யாகம்
தன்னல மறுப்பே
தாயக யாகம்" (த.க.தொ.2, ப.195)

என்று நாட்டிற்காக வேள்வி செய்ய வேண்டும். அதுவே நமது தியாகமாகும் என்றுரைக்கின்றார் தமிழன்பன். நாட்டின்மீது மக்களுக்கு உண்மையான பற்று

இருந்தால், எத்தனை இடையூறுகள் இருந்தாலும் அவை எளிமையாக மாறிவிடும் என்பது திண்ணம்.

காந்தியடிகளின் பல்வேறு கொள்கைகள் பலராலும் பின்பற்றப்படுகின்றன. நிலங்கள் அதிகம் கொண்ட பண்ணையார்களிடமிருந்து நிலமில்லா கூலி விவசாயிகளுக்குப் பெற்றுத் தரும் காந்தியடிகளின் நிலதான முறையை முதன்முதலில் வினோபாஜி நடைமுறைப்படுத்தினார். "அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்" எனும் கவிதைத்தொகுப்பில்,

"பஜனைப் புரட்சி
வினோபா பாவே
கால்நடையாகவே வந்து
பூமிதானம் என்றவுடன்
பண்ணையாட்களுக்குப்
பட்டாக் கொடுத்தவர்" (த.க.தொ.3, ப.247)

என்று பூமிதான இயக்கம் பற்றி கவிஞர் கூறியுள்ளார்.

"காந்தியச் சமுதாயம் என்பது சர்வோதய சமுதாயம். அது அனைவரின் நலனை உள்ளடக்கும் ஏற்றத் தாழ்வில்லாமல் தனி மனிதர் ஒவ்வொருவரும் எல்லாத் துறைகளிலும் நலன் பெறுவதை அது குறிக்கும். அச்சர்வோதயம் வளரும் ஒரு தத்துவம். அது வாழ்க்கைத் தத்துவம்"[12]

என்ற மா.பா.குருசாமி காந்தியச் சமுதாயம் சமூக நலன் காக்க உதவும் என்றுரைக்கின்றார்.

'சத்தியப் பரிமாணம்' என்ற கவிதையில் தமிழன்பன்,

"நீதி நூல் வாசல்களில் மட்டுமே
வாய்மைக்கு

---

12. மா.பா., குருசாமி, சர்வோதயம், ப.13.

வரவேற்பு.
வாழ்க்கையின் முற்றத்திலோ
பொய்ம்மைக்கே
வெற்றிலை பாக்கு" (த.க.தொ.3, ப.292)

என்று பொய்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் உலகம், வாய்மை பற்றி ஒரு போதும் சிந்திப்பது இல்லை என்பதை உணர்த்துகின்றார்.

மேலும், இதே நூலில் 'பகலில் உச்சரிப்பு நீ' என்னும் கவிதையில்,

"சத்தியம்
தற்காலிகமாகப் பதவியில்
அமர்த்தப்பட்டால்...
பொய்மை
அதைக் கவிழ்க்கப்
பலம் திரட்டிக் கொள்ளும்" (த.க.தொ.3, ப.314)

என்கின்றார்.

இதன்மூலம் வாய்மை என்னும் சத்தியத்தைப் பொய்மைகள் புரட்டிப்போடும் என்று உலகநியதியைக் கவிஞர் முன்னிறுத்துகின்றார்.

"சச்சிதானந்தம் என்று கடவுளைச் சொல்லுகிறோம். சத்தியம் என்கிற சொல் 'சத்' என்கிற பகுதியிலிருந்து பிறந்தது. 'சித்' என்றால் இருப்பது 'உளது' என்பது பொருள். உண்மை ஒன்றே உளது. சத்தியம் அல்லாதது சத் அல்ல. இதனாலேதான் 'சத்' என்பது ஆண்டவனுடைய பல பெயர்களில் முக்கியமான ஒரு பெயர் என்னுடைய கருத்தில் உண்மையே கடவுள் சத்தியம் பரம்பொருள்"[13]

என்ற சத்தியம் பற்றிய காந்தியடிகளின் கருத்து போற்றுதற்குரியது. இன்றைய காலகட்டத்தில் உண்மையைப் பின்பற்றாமல் சட்டங்கள் மக்களை ஏமாற்றிக்

---

13. மகாத்மாகாந்தி, சத்தியமே கடவுள், ப.41.

கொண்ட ஊழல், நிரம்பியதாகக் காணப்படுகின்றன என்பதைத் தமிழன்பன் “நடைமறந்த நதியும் திசைமாறிய ஓடையும்” என்ற கவிதைத் தொகுப்பில், ‘இன்னொரு சுதந்திரம்’ என்ற தலைப்பில்,

“ஊழல்
நாட்டின் சுவாசப் பையில்
ஓட்டைகள் போட்டது!
கங்கைக் கரை முதல்
காவேரிக் கரை வரை
எங்கும்
அடையாளம் தெரியா அபலைப்
பிணங்களாய்ச்
சட்டமும் ஒழுங்கும்” (த.க.தொ.4, ப.290)

என்று உண்மையை மறந்து, சுதந்திரம் பெற்ற சூழ்நிலையை மறந்து நேர்மையில்லாமல் சட்டங்கள் செயல்படுவதைக் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

காந்தியம் உலகியல் சார்ந்த தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிய ஓர் ஒப்பற்ற கொள்கை. தனிமனித சுய சிந்தனையின் வெளிப்பாடுகளாய் விளங்கும் கொள்கைகளைக் கொண்டது. காந்தியம் அறிவியல், ஆன்மிகம், வாழ்க்கைக் குறிக்கோள், பண்பாட்டு நெறி என்று ஒட்டு மொத்த தத்துவக் கூறுகளையும் உள்ளடக்கியது. இவரின் கொள்கைகளை இன்றைய கவிஞர்களின் படைப்புக்களில் எதார்த்தப் போக்குடன் கூடிய பொதுவான தேடலின் விடைகளாய்க் காணமுடிகின்றன.

காந்தியடிகள் பல்வேறு தத்துவங்களை மக்களுக்காக எடுத்துக் கூறியுள்ளார். அவற்றைப் பின்வரும் தலைப்புகளில் பகுத்து ஆராயலாம்.

- ஆன்மிகச் சிந்தனைகள்
- கல்விச் சிந்தனைகள்
- அரசியல் சிந்தனைகள்

- சத்தியாகிரகச் சிந்தனைகள்
- அகிம்சைச் சிந்தனைகள்
- பெண்ணுரிமைச் சிந்தனைகள்
- பொருளியல் சிந்தனைகள்

மேற்கண்ட பகுப்புகள் யாவும் சமூகம் அறிந்தவைகள் எனினும், அவை சொல்லப்படும் முறைகளால் வேறுபாடு உடையனவாய்த் திகழ்கின்றன. இன்று நிலவும் சமூகச் சூழலில் தத்துவங்களில் புதிய முறைகளைப் புகுத்தி ஆராய்தல் எளிதன்று. பழமையின் வாயிலாக புதுமைகளைப் புகுத்துதல் வேண்டும். இத்தகைய முறைமைகளைக் கையாண்டு பல்வேறு கவிஞர்கள் கவிதைகள் இயற்றியுள்ளனர். அவற்றில் ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், ஈரோடு தமிழன்பன் ஆகியோரின் படைப்புக்களில் காணப்படும் காந்தியக் கோட்பாடுகளை இப்பகுதி ஆராய்ந்து விளக்குகின்றது.

1. ஆன்மிகச் சிந்தனைகள்

கடவுள் பற்றி இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாக விவாதம் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. ஆனால் ஆண்டவன் வெகுதூரத்தில் இல்லை. ஒவ்வோர் உயிர்களுக்குள்ளும் இருக்கின்றான் என்பதே உண்மை. இதனை, பல்வேறு இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. தங்களின் சூழ்நிலைக்கும், சமூகத்திற்கும் தக்கவாறு கடவுளை மக்கள் மாற்றிக் கொண்டனர். எனினும் உலகம் தழுவிய கடவுள் ஒருவரே என்ற கோட்பாடு நிலையானதாயிற்று. அத்தகைய ஒருவனே தேவன் எனும் கோட்பாட்டின்வழி காந்தியடிகளின் ஆன்மிகச் சிந்தனையும் காணப்படுகின்றது.

> *“ஆண்டவனை எந்த வடிவத்தில் தியானித்தாலும் சரியே ஆகும் என்பது விளங்கும். ஒருவன் ஆண்டவனைப் புருஷ வடிவத்தில் தியானிக்கலாம். மற்றொருவன் தாய் வடிவம் தந்து வணங்கலாம். வேறு சிலர் அவனை வடிவமற்ற சக்தியாகவே வைத்துக்*

கொண்டு வழிபடலாம். அவரவர்களுக்கு அவரவர்களின் பாவனை சரியானதேயாகும்"[14]

என்பது காந்தியடிகளின் கருத்தாகும்.

"வழிபாடு என்பது உள்ளத்தை ஆய்வுக்கு உட்படுத்தும் முறை, பணிவுடன் இருக்குமாறு அறை கூவுவது. தன் தூய்மையும் உள் ஆராய்ச்சியும் இன்றியமையாதவை என்பதை வலியுறுத்துவது, இறைவனிடம் மிகுந்த பக்தியுடன் ஏதாவது கேட்பதுடன் பக்தியோடு செயல்படுவது, இறையுடன் ஒன்றிய நிலையை அடைய இறையருளைப் பெற உள்ளத்தின் வேட்கையை வெளியிடுவது, மாசு நீங்கித் தூய்மை அடைய உள்ளம் விரும்புவது, தம்முடைய தகுதியின்மையையும் பலவீனத்தையும் ஒப்புக் கொள்வது ஆகும்"[15]

என்று வழிபாடு குறித்த காந்தியடிகளின் கருத்தைச் சாந்தா ஆப்தே கூறுகின்றார். ஆன்மிகத்தில் வழிபாட்டின் நோக்கம் நிறைந்திருப்பதாக காந்தியடிகள் கூறுகின்றார்.

"மனிதர் ஒன்று சேர்ந்து மேற்கொள்ளும் வழிபாட்டினைச் சிறந்த வழிபாடாக ஏற்கும் காந்தியடிகள் அத்தகு வழிபாட்டின் நோக்கம் ஒற்றுமையை நிறுவுதலாகும்"[16]

என்று ஒற்றுமையை வலியுறுத்துவதே வழிபாட்டின் நோக்கம் என்று கூறுகின்றார். ஆன்மிகம் மனிதனை மூடநம்பிக்கைக்கு இட்டுச் செல்லக்கூடாது என்பதில் காந்தியடிகள் தீவிரமாக இருந்தார். காந்தியடிகளின் கருத்துப்படி சமூகத்தை மேம்படுத்தும் ஆயுதமாக மட்டும் ஆன்மிகம் திகழவேண்டும் என்றுரைக்கின்றார்.

---

14. மகாத்மாகாந்தி, காந்தியடிகளின் ஆன்மிகத்தத்துவங்கள், ப.12.
15. ஆ.சாந்தா ஆப்தே, மு.நூ., ப.135.
16. M.K.Gandhi, Harijan, date 03.03.1946.

"உருவ வழிபாடு மூடநம்பிக்கையன்று. மனித இயல்புக்கு ஏற்புடையது என்பது காந்தியடிகளின் எண்ணம். கண்ணுக்குப் புலனாகாத கடவுளை வழிபடக் கண்ணுக்குப் புலனாகும் ஒரு சின்னம் வேண்டியுள்ளது. சிலருக்கு கோவிலுக்குள் வீற்றிருக்க ஓர் உருவம் வேண்டும். அதனால் கோவில்களை மூடநம்பிக்கையின் வடிவங்களாக எண்ண வேண்டா என்று விளக்குகின்றார்"[17]

உருவ வழிபாடு என்பதை மூடநம்பிக்கையாக எண்ண வேண்டாம் என்பதைக் காந்தியடிகள் விளக்குகின்றார். போலித்தனமான நம்பிக்கைகளால் மாசுபட்டு இழிநிலையை அடையும்போது உருவ வழிபாடு இழிவான ஒரு சமூகத் தீமையாகி விடுகிறது. அதற்கு மாறாக, தனது கொள்கைக்குப் பருப்பொருள் உருவம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தால் உருவ வழிபாடு செய்வது மனிதனின் இயல்புக்கு ஏற்புடையதே ஆகும் என்றும் கூறுகின்றார். அக்காலம் முதல் இக்காலம் வரை எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளவன் கடவுள். கடவுள் என்ற கோட்பாடு பொதுவான ஆன்மிகத் தேடலுக்கு உட்பட்டது. இதனைப் பற்றி காந்தியடிகள் கூறும்போது,

"மற்றவர்களை விட எனக்கு பிரத்யேகமாக கடவுளுடைய சித்தம் வெளிப்பட்டதாக நான் எண்ணவில்லை. ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலுமே தெய்வம் பேசுகிறது. நாம் தான் அதைக் கேட்காதபடி காதைப் பொத்திக் கொள்ளுகிறோம். நமக்கு முன்னால் ஒளிப் பிழம்பாக நிற்கும் அந்த ஜோதியைப் பார்க்காமல் கண்ணை மூடிக் கொள்கிறோம். அவ்வளவே தான். நான் என்னைப் பற்றிச் சொல்லக் கூடியது என்னவென்றால் ஆண்டவன் எங்கும் பரவி நிற்கிறான் என்பதை உணர்ந்தேன்"[18]

---

17. M.K.Gandhi, Harijan, date 23.01.1937.
18. **மகாத்மாகாந்தி, சத்தியமே கடவுள், பக்.65-66.**

என்று இறைவனைப் பற்றிய எண்ணத்தை வெளிப்படுத்துகின்றார். எங்கும் பரவி இருக்கும் பரம்பொருள் இறைவன் என்பதே இவரின் எண்ணமாகும்.

அதுபோல, வழிபாடு என்பது பொதுவாழ்வில் ஈடுபாடு கொண்டவர்கள் சேர்ந்து பிரார்த்தனை அல்லது வழிபாடு செய்வதைக் குறிக்கும் என்பது காந்தியடிகளின் கருத்தாகும்.

> *"எனக்கு ஒன்று தா என்று குறிப்பிட்டு ஆண்டவனைக் கேட்க வேண்டுமானால், அது தாய் தகப்பனோடு பேசும் பாஷையில் தான் இருக்க வேண்டும். இதைப் பற்றி சந்தேகமில்லை. தருமம் ஓங்க வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அறம் பிறழாமல் தான் நடந்து கொள்ள வேண்டும் என்று ஒருவன் பிரார்த்தனை செய்தால் அதுவே மிகச் சிறந்த பிரார்த்தனையாகும்"*[19]

என்றுரைக்கின்றார். இவ்வாறாக காந்தியடிகளின் ஆன்மிக ஈடுபாட்டை அவரின் கருத்துகள் மூலம் அறியமுடிகின்றது. இவருடைய ஆன்மிகம் பற்றிய கருத்துகள் இன்றைய புதுக்கவிதைகளிலும் காணமுடிகின்றது. காந்தியம் காலங்காலமாக காணப்படவில்லை. காந்தியடிகளின் கொள்கைகளை மக்களாகவே காந்தியமாக வகுத்துக் கொண்டனர். சமூகத்தின் பழமைகளில் மாற்றமும் பாமரர்களின் எண்ணங்களில் கருத்துத் தெளிவும் அவசியம் என்பதை உணர்ந்து காந்தியடிகள் காட்டிய நெறியே காந்தியமாகப் போற்றப்படுகின்றது. இதில் ஆன்மிகமும் அடங்கும்.

காந்தியத்தின் முதன்மைக் கூறாகச் சுட்டப்படும் 'ஜீவகாருண்யம்' என்பது உயிர்களிடத்து ஆன்மிகச் சமத்துவத்தை உணர்த்தும் ஆன்மிகமாகும். மேலை நாடுகளில் காணமுடியாத ஒன்று ஆன்மாக்களின் சமத்துவம் நம் நாட்டில் ஆன்மிகமாகப் போற்றப்படுகின்றது. அதுபோல, அன்பினை அடிப்படைக்

---

19. மகாத்மாகாந்தி, காந்தியடிகளின் ஆன்மிகத் தத்துவங்கள், ப.273.

காரணியாகக் கொண்டது ஆன்மிகமாகும். இதனை, ந.பிச்சமூர்த்தி இயற்றிய 'பூக்காரி' என்னும் கவிதையில் 'காந்திய ஆன்மிகம்' உணரமுடிகின்றது. இன்றைய சூழ்நிலையில் அன்பு, உண்மை, அகிம்சை இவை மூன்றும் எங்கே கிடைக்கும் என்று கேட்க வேண்டிய காலகட்டமாகி விட்டது. இந்த அன்பு, அகிம்சை, இதனை பூக்காரி விற்பதுபோல விற்று வந்தேன். ஆனால் அதனைப் பார்க்கக் கூட யாருமில்லை. ருத்திரனின் நடனத்தில் (வெறியாட்டத்தில்) இவ்வுலகம் மோகம் கொண்டுள்ளது. அந்த மோகத்தைத் தந்த காமனை ருத்திரன் எரித்தான். ஆனால் காமனின் அன்பில் ருத்திரன் குளிர்ந்தான் என்ற பொருளை அடிப்படையாகக் கொண்ட பாடலில் அன்பு ஒன்று மட்டுமே ஆன்மிகத்தை வளர்க்கும் வழி என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

> *"காமனை எரித்த ருத்ரன்*
> *கண் சிமிட்டில் தணிந்து போவான்*
> *அன்பே சிவமானான்.*
> *மங்கலமாய் மலர் தருவான்*
> *வேண்டுவார் வாரீர்*
> *வாங்குவோர் கூடீர்"* (ந.பி.க., ப.115)

என்ற கவிதை வரிகளில் அன்பும் அஹிம்சையும் கடைத்தெருவில் கிட்டும் பொருளாய்ப் பேசப்பட்டிருந்தாலும், சமூகத்தின்மீது கவிஞர் காட்டும் அக்கறையோடு கூடிய காந்தியம் பேசப்பட்டுள்ளது. எவ்வளவு கோபக்கனல் உள்ள கடவுளாக இருந்தாலும் அன்பைக் காட்டும்போது கோபம் மறைந்து விடும் என்ற மறைபொருளைச் சுட்டுவதாய்க் கவிதை வரிகள் அமைந்துள்ளன.

'கிளிக்கூண்டு' என்ற கவிதையில் இறைவன் எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள், அதை உணர்தல் வேண்டும் என்று ந.பிச்சமூர்த்தி கூறுகின்றார்.

> *"மனமே! காய்கனிகளின் ரஸமே தெவிட்டா அமுதம்*
> *மலர்களின் மணமே தெய்வ வாசனை.*

ஸ்பரிசமே தெய்வத் தீண்டல்.
பார்வையே ஒளியின் அலை.
உலகின் ஒலிகளே பரத்தின் நாதம்...
மனமே! புலன்கள் தளையல்ல;
விடுதலைக் கால்வாய்
அவைகளுக்கு சக்தி தந்தவன் ஈசன்
அவனை அறிய,
ஆதி அழகில் மூழ்கி எழு" (ந.பி.க., ப.7)

மேற்கண்ட கவிதைவரிகளில் ந.பிச்சமூர்த்தியின் கிளிக்கூண்டு கவிதை வாழ்க்கைப் பயணத்திற்கு ஆன்மிகத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் கூறுகின்றது. பிறப்பு, இறப்பு, ஆன்மாவின் இடையறாத ஜன்மத் தொடர்புகள் சிருஷ்டியின் அரூபமான அகண்டாகாரம். மனித அறிவின் பலவீனமான குறுகிய எண்ணங்கள், இயலாமைகள் இப்படிப்பட்ட மாயத் தத்துவங்களும் அத்வைதப் பார்வையும் இவருடைய பார்வையில் இன்றியமையாத பொருளாகி விடுகின்றன. இவரின் பார்வையில் எல்லாமாய் இறைவன் இருக்கின்றான் என்பதை உணர்த்த 'கிளிக்கூண்டை' கருவியாக்கி உள்ளார்.

ஐம்பூதங்களையும் கடவுளின் உருவமாய்க் கருதும் நாடுகளும் உண்டு. இத்தகைய நாட்டில் சூரியனை முதல்வனாய் கொண்டு வணங்கும் வழிபாட்டு முறை போற்றுதற்குரியதாகும். இயற்கை மீது ஈடுபாடு கொண்ட கவிஞர் அதனை இறைவனின் உருவோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றார்.

"நீ தந்த கனி இது, நீ தந்த கரும்பிது
நீ தந்த நெற்கதிர் இது;
நீ தந்த நீர் இது, நீ தந்த சீர் இது
நீ தந்த ஒளியும் இஃதே
நீ தந்த சீரும் நீ தந்த திருவும்
நினக்கே நிவேதனம் கதிரவா" (ந.பி.க., ப.63)

என்று இறைவன் தந்த எல்லாப் பொருட்களும் அவனுக்கே உரியது என்பதையும், மக்களின் துயர் துடைக்க மலர்ந்த கதிரவன் இறைவன் என்பதையும் உணர்த்துகின்றார்.

பிறப்பின் பயனே கடவுளைக் காண்பது என்ற கொள்கையைக் கொண்டவர் காந்தியடிகள். எல்லாப் பொருளிலும் அவரே இருக்கின்றார் என்ற எண்ணம் கொண்ட காந்தியடிகளைப் போல, ந.பிச்சமூர்த்தியும் எல்லாப் பொருளும் அவனே! என்று வலியுறுத்துகின்றார்.

"மண்ணென்ற ஒன்றைத் தருவார்
வளர்ந்திடும் ஏக்கம் தருவார்
வானத்திடையே வீணில்
ஒளியினைக் கொட்டும் கோள்கள்
மந்தையை ஓட்டிச் செல்வார்
கோடையெனும் பெரிய அன்பின்
மடைகளைப் பிடுங்கி வைப்பார்
நாமின்றிக் கடவுளேது" (ந.பி.க., ப.116)

இறைவன் எல்லாப் பொருள்களையும் பயன் கருதி படைத்துள்ளார். இந்த மானுட வர்க்கத்திற்கு மட்டுமின்றி இவ்வுலக நன்மைக்காகவும்தான் இறைவன் புல்லை உண்டாக்கி அதை உண்ணும் விலங்கையும் படைத்தான். அந்த விலங்கின் பாலைக் கன்று பருகுவது மட்டுமின்றி மானுடரும் பருகிடச் செய்த ஒப்பற்ற விஞ்ஞானி கடவுள் என்ற தத்துவம் ந.பிச்சமூர்த்தியின் கவிதையில் புலப்படுகின்றது. அண்ணலும் கடவுளை விஞ்ஞானி என்று கூறும் கோட்பாட்டை ஏற்கும் தன்மை கொண்டவர்.

"ஆண்டவன் எங்கேயோ வானத்திலிருந்து கொண்டு ஆட்சி புரியவில்லை. நமக்குள் மறைந்து நிற்கிறான். நம்முடைய ஊனுக்குள், உயிருக்குள் அந்தரங்கமாக இருக்கிறான். ஆராய்ச்சியும் முயற்சியும் இடைவிடாது செய்து வந்தால்

நமக்குள் இருக்கும் சக்தியை நாம் காண்கிறோம். அப்படியே நமக்குள் இருக்கும் ஆண்டவனையும் கண்டு கொள்ளலாம். அதற்கு வைராக்கியமும் விடாமுயற்சியும் வேண்டும்"[20]

என்கிறார் காந்தியடிகள். இறைவன், பற்றிய கோட்பாடுகள் எக்காலத்திலும் பேசப்படக்கூடிய ஒன்று. நம்பினோருக்கு இறைவன் இருக்கின்றான் என்பதை ஆன்மிகம் எடுத்துரைக்கின்றது.

காந்தியக் கோட்பாடுகளில் காணப்படும் ஆன்மிகம் பற்றிய கருத்துக்களுடன் ந.பிச்சமூர்த்தி கவிதைகளில் காணப்படும் ஆன்மிகம் பற்றிய கருத்துக்கள் ஒத்துள்ளன. எல்லா கவிஞர்களிடமும் காணப்படும் ஆன்மிகக் கருத்துக்களைக் காந்திய ஆன்மிகக் கருத்துகளுடன் ஒப்பிட்டுக் கூறமுடியாது. எனினும் ஒருசில கருத்துக்கள் ஒத்தும் ஒரு சில கருத்துக்கள் வேறுபட்டும் காணப்படும் போக்குகள் நிறைய உள்ளன. அந்த வகையில், இன்குலாப் கவிதைகளில் காணப்படும் ஆன்மிகக் கருத்துகள் காந்தியத்துடன் சற்று வேறுபட்டு காணப்படுகின்றன. 'கண்மணி ராஜம்' என்ற கவிதையில்,

"தூக்கத்தை விட தொழுகை மேலானது
அல்லா பெரியவன்... அல்லா பெரியவன்
நெருப்பு விரல்கள் நிலத்து வீணையில்
வெயிலை மீட்டும் வேளைக்கு முந்திய
கருக்கலில் அந்தக் கல்லூரிக்குள்ளேயே
மசூதியில் இருந்து அழைப்பு வந்தது" (ஒ.பு, ப.67)

என்ற வரிகளில் கவிஞரிடம் காணப்படும் ஆன்மிகத்தின் சாரம் அறியமுடிகின்றது. உறங்கிக்கொண்டே இருப்பதைவிட இறைவனை வணங்கிக் கொண்டே இருப்பது மகத்தானது என்பதைக் கவிஞர் உணர்த்துகின்றார். எல்லா

---

20. மகாத்மாகாந்தி, சத்தியமே கடவுள், ப.273.

இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளவன் இறைவன். இறைவனை நினைவுபடுத்தாத எந்தப் பொருளும் உலகத்தில் இல்லை.

ஆன்மிகம் என்ற பெயரில் கற்சிலைகளை வைத்து வணங்கும் போக்கினை இன்குலாப் எதிர்க்கின்றார். அத்துடன் கற்சிலைகளை எதிர்த்துக் கொண்டே அரசியல் களம் காண முயலும் எத்தர்களையும் சாடுகின்றார். 'நீங்கள் என்னை கம்யூனிஸ்ட் ஆக்கினீர்கள்' என்ற கவிதையில்,

"இருபதாம் நூற்றாண்டில் இவர்கள் தெய்வங்கள்தான்
கற்சிலைக் கடவுளைக் கண்டனம் செய்தே
ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த தெய்வங்கள்
இவர்கள் இதயத்தையோ
இரும்பாக்கிக் கொண்டார்கள்
சிலைகளுக்குத் தீபம் காட்டி
அர்ச்சனை செய்யும் அறியாத்தனத்தைப்
புதுப்பித்துக் கொள்கிற போஸ்டர் தெய்வங்கள்" (ஒ.பு, ப.75)

என்று கடவுளின் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகளைச் சாடுகின்றார். அதுபோல, புராணங்கள் சொல்லும் பொய்மைக் கடவுள்கூடப் பித்தன் என்றும், பேயன் என்றும் பக்தன் சொல்வதைப் பொறுத்துக் கொண்டு ஆன்மிக அரசியல் நடத்தப்படுவதைக் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார். வயிற்றுப் பிழைப்பிற்காக கிளியை வைத்துச் சோதிடம் சொல்லும் முறையை ஜீவகாருண்யம் 2 என்ற கவிதையில்,

"கிளியின் கூண்டு ரொம்ப சிறுசு
இறக்கையைச் சரியாய் விரிக்கவராது.
காற்றோட்டம் சரியாய் இல்லாததாலே
மூச்சுத் திணறி சாகக் கூடும்" (ஒ.பு, ப.146)

என்று உயிர்களிடத்தில் அன்பு வேண்டும், தெய்வம் (உண்மை) உண்டு என்பதை தான் உணர்தல் வேண்டும் என்ற பாரதி வரிகளையும், வள்ளலார் கண்ட

ஜீவகாருண்ய ஒழுக்கத்தையும் எடுத்துரைக்கும் ஆன்மிகச் சிந்தனையை உணர்த்துகின்றார்.

கிளி சோதிடம் பார்த்த கிருஷ்ணமூர்த்தியை விலங்குநல அமைப்பைச் சேர்ந்தவர்கள், கிளியைக் கொடுமைப்படுத்தியதால் தண்டித்து 50 ரூபாய் அபராதம் விதித்தார்கள். இதில் கிளி மீது அவர்கள் காட்டிய ஜீவகாருண்யத்தைக் கவிஞர் பேசியுள்ளார். ஜீவகாருண்யம் என்பது மண்ணுயிர் எல்லாவற்றையும் தன்னுயிர்போல் கருதும் தன்மையை ஆன்மிகம் எடுத்துக் கூறுகின்றது. ஆனால் வயிற்றுப் பிழைப்பிற்காகக் கிளிச் சோதிடம் பார்த்த கிருஷ்ணமூர்த்தியின் நிலையைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று கூறியுள்ளார்.

கவிஞர் இன்குலாப் கவிதைத்தொகுப்புகளில் ஒருசில கவிதைகளில் மட்டும் ஆன்மிகக் கருத்துக்களைக் காணமுடிகின்றன. இவர் ஆன்மிக ஈடுபாடு கொண்டவர் எனினும்கூட தன் கவிதைகளின்வழி போலி மூடப்பழக்கத்தை எதிர்க்கின்றார் என்பதை அறியமுடிகின்றது.

இவருடைய கவிதைகள் ஆன்மிகத்தை விட ஆன்மாக்களைப் பற்றியே அதிகம் பேசுகின்றன. ஆன்மிகம் என்பது மனிதனை முன்னேற்றத்திற்குக் கொண்டு செல்லவேண்டுமே தவிர, மதம் என்ற போர்வைக்குள் அவர்களை வருத்தக் கூடாது என்பது இன்குலாப்பின் எண்ணம்.

> *“மசூதியில் விழுந்த சம்மட்டி அடிகள்*
> *உலகம் முழுக்க எதிரொலித்தது-*
> *மறந்து போன அந்தச் சன்னமான ஒலியில்*
> *ஹேராம் என்று”* (ஒ.பு, ப.134)

என ‘ராம் வருக! ரகீம் வருக!’ என்ற தலைப்பிலான கவிதையில் கூறுகின்றார். பொதுவுடைமைத் தத்துவத்தை முன்னிறுத்தி இவரின் கவிதைகள் பேசப்பட்டாலும் எதார்த்த வாதம் என்ற போக்கில் காந்தியத்தின் ஆன்மிகத் தத்துவம் இடம்பெற்றுள்ளது என்பதை மறுக்கமுடியாது.

எம்மதமும் சம்மதம் என்ற போக்கில் இவர் ஆன்மிகத்தை வழிநடத்துகின்றார் என்பதற்கு,

“மசூதியில் இல்லை பாபரின்
சிம்மாசனம்
அது
மதநெறியர் ஒவ்வொருவர் மனசிலும்
இருந்தது.
மசூதியில்
இருந்தது
நம்பிக்கை.
நம்பிக்கை எதற்கும் ஊறுநேராது என்ற
நம்பிக்கை
உனது
நம்பிக்கை எதுவுமற்ற
எனதும் கூட
உடைந்து கிடக்கும் ஒவ்வொரு
கல்லிலும்
புத்தனின் ஞானம்
மகாவீரனின் இரக்கம்
சித்தனின் கலகம்...
வரலாறு வரித்த மனித நாகரிகம்” **(ஒ.பு, ப.135)**

என்ற கவிதையில் கல்லினுள் இறைவன் இருக்கின்றான் என்பதை மசூதியில் உடைக்கப்பட்ட கற்களுக்குள் புத்தனின் ஞானம், மகாவீரரின் இரக்கம், சித்தனின் கலகம் இருக்கின்றது என்று கூறுகின்றார். ந.பிச்சமூர்த்தி கவிதைகளில் நேரடியாக ஆன்மிகத் தத்துவம் காணப்படுகின்றது. ஆன்மிகத்தின் சாரத்தைக் காந்தியத்தின் பகுதியாகக் கொண்ட கவிதைகள் இன்குலாப்பின் கவிதைகளில் இடம்பெற்றுள்ளன. பொதுவான ஆன்மிகத் தாக்கங்களுக்கு உட்பட்ட ஜென் தத்துவக் கூறுகள் ஈரோடு தமிழன்பனின் கவிதைகளில் காணப்படுகின்றன. காந்தியடிகள் இந்துத்துவத்தின்மீது அதீத நம்பிக்கை கொண்டவர் என்பதை,

"வேத, உபநிடதங்கள், புராணங்கள் மற்றும் இந்துமத சாத்திரங்களில் வழங்கப்படும் அனைத்துப் புத்தகங்களையும் நான் நம்புவதால் அவதாரங்களையும், மறுபிறப்பையும் நம்புகிறேன்"[21]

என்ற சங்கர் என்பவரின் கூற்றின் மூலம் காந்தியடிகளின் இந்துத்துவக் கோட்பாட்டை அறியமுடிகின்றது. காந்தியத் தாக்கம் கொண்ட இந்துத்துவக் கொள்கை அடிப்படையிலான எதார்த்தவாதக் கவிதைகள் ஈரோடு தமிழன்பனின் கவிதைகளில் காணப்படுகின்றன.

ஆன்மிகத்தில் கடவுள் வழிபாட்டால் எதனையும் வெல்லலாம் என்ற கொள்கை கொண்டவர் காந்தியடிகள். சமூகம் இன்று தன் சூழ்நிலையில் பிறழ்ந்து செயல்படக் கூடிய காலகட்டம். இதிலிருந்து மாற்றத்தைப் பெற வேண்டும் என்றால் அதற்கு ஆன்மிகம் ஒன்றே வழிகாட்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

"கொல்லா நெறியினைக்
கொண்டு மனநலம் தீட்டியவர்-அதில்
கொள்ளைப் புகழுவந் தீட்டியவர்-இதில்
வெல்லும் சமர்முறை
மேன்மை அறமெனத் தீட்டியவர்-அருள்
ஏந்திடும் ஆன்மிக ஈட்டியவர்" (த.க.தொ.1, ப.167)

என்று புதுக்கவிதையில் காந்தியின் ஆன்மிக, அருள் நோக்கை ஈரோடு தமிழன்பன் கூறியுள்ளார். பிற உயிர்களைக் கொள்வது பாவம் என்று இந்து, கிறித்தவம், இஸ்லாம் மதங்கள் வலியுறுத்துவதுபோல காந்தியடிகளும் வலியுறுத்துகின்றார்.

---

21. Ghandhi, Gandhism and the partition of India, p.50. (I believe in the Vedas, the Upanishad s, the purnanas and all that goes by the name of Hindu scriptures, and therefore, in avatars and rebirth).

"தெய்வம் குறித்த கருத்தே காந்தீய தத்துவத்தின் மையக்கூறு ஆகும். 'வாழ்வின் போராட்டத்தின்போது, தெய்வம் குறித்த பிரக்ஞையில் காந்தி வாழ்ந்து கொண்டிருந்தார்' என்று பி.அச்சுதன் (1925) குறிப்பிடுகிறார். 'தெய்வம் என்பது விளக்க இயலாததும், நாம் அறியாமலும், ஆனால் உணர்ந்தும் எது உள்ளதோ அதுவேயாகும்' என்று 'யங் இந்தியா' பத்திரிகையில் காந்தி எழுதினார். அவரைப் பொறுத்தமட்டில், கடவுள் என்பது அன்பு, ஒழுக்க விழுமியங்கள் மற்றும் அச்சமின்றி இருத்தல் ஆகியனவாகும். நாத்திகவாதியின் நாத்திகம் கூட அவரிடம் இருந்தது. பேச்சு, பகுத்தாய்வு ஆகியனவற்றைக் கடந்து அவர் நின்றார். அவர் பொறுமையாகவும், அதே நேரத்தில் அச்சமூட்டுமாறும், உலகம் அறிந்தவர்களுள் தலையாய ஜனநாயகவாதியாகவும் இருந்தார்"[22]

என்று காந்தியின் ஆன்மிகச் சிந்தனையைக் குருபிரசாத் சௌத்ரி கூறுகின்றார். எத்தனை வழிகள் மனிதனை முன்னேற்ற கண்டுபிடிக்கப்பட்டாலும் ஆன்மிகம் ஒன்றுதான் நிரந்தரமான வழி என்பது காந்தியடிகளின் எண்ணமாகும்.

தனிமனிதன் முன்னேற்றம் காணவேண்டுமெனில் உழைப்போடு ஆன்மபலம் வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் காந்தியடிகள்.

"இவ்வுலகைப் பற்றி சிந்திக்கும் எவருக்கும் அதில் காணப்படும் இயற்கைப் பொருள்கள் உயிர், தன்னறிவு அனைத்திற்கும் மூலகாரணமான ஓர் அத்யாத்மப் பொருள் இருக்கவேண்டும்

---

22. Relevance of Handism, p.22. (The nuclear element of Gandhian ideology seems to be the idea of God. B. Achuttan (1925) observed that Gandhi lived in God-consciousness while lighting the battle of life. Gandhi himself wrote in young India that God is indefinable, some thing which we all feel but which we do not know. To him, God was truth and love, ethics, and morality. God was consciousness and fearlessness. He was even the athesism of the atheist. He transcended speech and reason. He was patient for him but also terrible and the greatest democrat world knew)

என்பதில் ஐயத்திற்கு இடமே இல்லை என்பது காந்தியடிகளின் முதல் கொள்கை" [23]

என்று காந்தியின் கொள்கையைக் க.சந்தானம் எடுத்துரைக்கின்றார். இயற்கைப் பொருட்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய அனைத்திலும் ஒப்பற்ற தன்மை கொண்ட இறை தத்துவம் நிறைந்துள்ளது என்பது உலகம் அறிந்த உண்மை. இதைப் பின்பற்றி நடப்பவனுக்கு ஆன்மபலம் கிட்டும் என்று தமிழன்பனின் கவிதைகள் புலப்படுத்துகின்றன. "ஊர் சுற்றி வந்த ஓசை" என்ற கவிதைத் தொகுப்பில், 'வெற்றித்தேர் வருகிறது விரைவாக' என்ற கவிதையில், இனி வசந்த மேகங்கள் சிகரங்களைத் தாண்டி சின்னஞ்சிறு குடிசைகளின் கூரைகளில் கூடு கட்டும் என்று கூறிவிட்டு,

"நம் வாழ்க்கை மீது
படிந்துள்ள அழுக்கைக்
கண்ணின் ஊற்றில்
கழுவிடுவோம்!
அலையடிக்கும்
ஆன்மக்கடல் முத்தால்
ஒப்பனை செய்வோம்" (த.க.தொ.1, ப.359)

என்று வாழ்க்கை முன்னேற்றத்திற்காக மன அழுக்கைக் கண்ணீரால் கழுவி ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி அழகானதாக்க வேண்டும் என்கிறார். ஆன்மா தூய்மையானால் ஆன்மிக ஒழுக்கக் கூறுகள் ஆன்மாவைப் பலப்படுத்தும் என்ற கூற்று காந்திய தத்துவக் கூறாகக் காட்சியளிக்கிறது.

இன்று ஆன்மிகம் என்ற கருத்தை மையமிட்டு நடக்கும் போலிவேடம் புனைந்த கபடதாரர்களைத் தமிழன்பன் எதிர்க்கின்றார். பௌத்தம், இசுலாம், இந்து, கிறித்துவம் என்று மதங்களின் பெயர்களைப் பயன்படுத்தி மக்களை

---

23. க.சந்தானம், காந்திய நெறி, ப.9.

ஏமாற்றிப் பிழைக்கும் வஞ்சகர்களைச் சாடுகின்றார். ஆன்மிகவாதிகள் மக்களுக்குச் சேவை செய்பவர்களாகத் திகழவேண்டும் என்பது காந்தியடிகளின் எண்ணம்.

> *"சேவை செய்வது கஷ்டமான காரியமாகத் தோன்றாமல் களிப்பான காரியமாகத் தோன்றுமாறு செய்யக்கூடிய அளவு சேவை செய்ய வேண்டும் என்ற ஆவலைத் தம்முடைய இதயத்தில் நிறைந்து விடும்படி கேட்கிறார்"*[24]

காந்தியடிகள் சேவை செய்வதற்கு உரிய மனம் கொண்டவர்கள் உண்மை ஆன்மிகவாதிகள் என்பார். ஆனால் இன்றைய தலைமுறையில் அத்தகைய தொண்டுள்ளம் கொண்டவர்கள் எவரும் இலர் என்பதைத் தமிழன்பனின் கவிதை வெளிப்படுத்துகின்றது. "ஊர் சுற்றி வந்த ஓசை" என்ற கவிதைத் தொகுப்பில் 'தேசத்தை காத்தல் செய்' என்ற கவிதையில்,

> *"ஞானப்பாலில்*
> *காம மாத்திரை கலக்கி விற்கும்*
> *ஆன்மிக மருத்துவர்*
> *ஆச்சாரியா ரஜனீஸ்*
> *முடியலங்கார வைர ஒளியில்*
> *புத்தரின் போதனைகள்*
> *கறுத்துப் போய்விட்டன"* **(த.க.தொ.1, ப.368)**

என்ற வரிகளில் காந்தியடிகள் கூறிய சேவை எண்ணம் இல்லாமல் தன் ஒப்பனை பெரியதாய் கொண்டு பௌத்த மதத்தின் சாரத்தைக் கூறியதால் புத்தரின் நன்னம்பிக்கை, நன்னடத்தை, நல்லொழுக்கம் ஆகியன கறுத்துவிட்டன என்கிறார்.

---

24. **மகாத்மாகாந்தி, பிரார்த்தனைப் பிரசங்கங்கள், ப.17.**

"இன்றைய ஆசிரமங்களில் வேதங்கள் 'சூப்'பாக
வழங்கப்படுகின்றன" (த.க.தொ.1, ப.368)

என்ற தமிழன்பனின் கவிதை வரிகளில் வேதம் என்பது மக்களை மயக்கும் பானமாக மாறிவிட்டதைச் சுட்டிக்காட்டுகின்றார். ஆன்மிகம் சமுதாயத்தை நல்ல வழிகளுக்கு இட்டுச் செல்லவேண்டும். பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆன்மிகக் கல்வி பயில இங்கு வருகின்றனர். ஆனால் இங்கே ஆன்மிகம் என்பது நோய்களைப் பரப்பும் கொலைக்களங்களாக மாற்றம் அடைந்துவிட்டன என்கிறார் கவிஞர்.

"ஆன்மிக வேள்விகளுக்குப் பின்
ஆதிபராசக்தி அருளால்
நாடு
முன்னேறாமல் இல்லை...
அமெரிக்காவுக்குப் போட்டியாக
அடைந்து விட்டோம் முன்னேற்றம்
'எய்ட்ஸ்'
இங்கேயும் கொடி உயர்த்தியுள்ளது" (த.க.தொ.1, ப.369)

ஆன்மிக வளர்ச்சி மீது அக்கறையற்ற போலி ஆன்மிகவாதிகளால் நாடு, சமுதாயம் தவறான வழிக்கு இட்டுச் செல்லப்படுகின்றது என்கிறார்.

"மனம், உடல், ஆன்மா ஆகிய மூன்றுமே ஒத்திசைவுடன் செயல்பட்டாலன்றி அவற்றை மானிடத்தின் தொண்டிற்காக போதிய அளவு பயன்படுத்த இயலாமற் போகும். இவற்றின் ஒத்திசைவுக்கு தூய்மை வாய்ந்த உடலும் தூய உள்ளமும் ஆன்மிக நோக்கும் அத்தியாவசியம்"[25]

---

25. ச.ஜெயபிரகாசம், காந்திய சிந்தனைக் களஞ்சியம், ப.126.

என்ற காந்தியடிகளின் ஆன்மிகக் கருத்தைச் ச.செயப்பிரகாசம் எடுத்துக்கூறுகின்றார். மானிடர் உடல், உள்ளம் ஆகியவற்றுடன் ஆன்மாவும் பெற்றுள்ளனர் என்ற கொள்கையைக் காந்தியடிகள் ஏற்றுக் கொண்டுள்ளார்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற அவ்வையின் அமுதமொழிகளை மறந்துவிட்டோம். கோவிலுக்குச் செல்லும்போது அம்மனின் பட்டாடையும் அவள் அணிந்திருக்கும் நகைகளும்தான் நம்மவர்களின் கண்களில் படுகின்றன. இவர்கள் இறைவனை வணங்குவதாகச் சொல்லி நாடகமாடுவதைப் பார்த்தால் இறைவனே நாத்திகனாகி விடுவான் என்கிறார் தமிழன்பன். "வார்த்தைகள் கேட்ட வரம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'விளக்குகள்' என்ற கவிதையில்,

"கோபுர விளக்கு
ஆன்மிகம் உயர்த்திய வெளிச்சப் பதாகை
கடவுளையே
களவாடியவர்கள் கொடையாக அதனைக்
கோபுரத்தில் ஏற்றும்போது
ஆலயத்தின்
அத்திவாரமே ஆட்டம் காண்கிறது" (த.க.தொ.1, ப.464)

என்று கூறி, பக்தர்களுடைய பக்தியைப் பார்த்துப் பார்த்துக் கடவுளே நாத்திகன் ஆனான் என்கிறார். கடவுள்மீது பக்தி கொண்டவர்கள் யாவரும் கருணை உள்ளம் கொண்டவர்களாக இருத்தல் அவசியம். அதற்குத் தக்கச் சான்றாக வடலூர் வள்ளலாரைக் கூறலாம்.

"வானமும் பூமியும் பெற்றெடுத்த வள்ளலார்... காற்றும்
கனலும் தாலாட்டி வளர்த்த வள்ளலார்..." (த.க.தொ.1, ப.489)

என்று தமிழன்பன் வள்ளலாரைப் புகழ்கின்றார். ஏழைகளுக்காக இரக்கம் காட்டும் நபர்களிடம் இறைவன் நடம்புரிகின்றான் என்பதில் நம்பிக்கை கொண்டவர்.

வள்ளலார் சன்மார்க்க நெறி சார்ந்தவர். மதம் சாராதவர் என்பதை "வார்த்தைகள் கேட்ட வரம் கவிதை" தொகுப்பில் 'வடலூரரார் என்னும் வற்றாத மக்கள் நேயம்' என்ற கவிதையில்,

"அருட் தந்தை இராமலிங்கர்
அனைத்துயிரும்
கடைத்தேற வந்த
சன்மார்க்கப் பாதிரியார்" **(த.க.தொ.1, ப.490)**

என்று கிறித்தவ அருட்தந்தையாக வள்ளலாரைக் குறிப்பிடுகின்றார். அனைத்து உயிர்களையும் காத்து நிற்கும் இறைவன் கருணை நிறைந்த உள்ளங்களில் கடவுளாகத் தோன்றுகின்றான். அதுபோல வள்ளலார் என்ற அருட்கடலில் இறைவனின் உருவத்தைக் காணலாம்.

"ஞானி புத்தன்
தோளில் சுமந்த ஆடுகளின்
சந்ததி....
கசாப்பு கனவுகளின்றி
ஆடித்திரிவது
அருட்பாத் தோட்டத்தில்" **(த.க.தொ.1, ப.491)**

என்று உயிர்ப்பலி இன்றி, உயிர்களிடத்தில் இரக்கம் காட்டும் ஆன்மநேய ஒருமைப்பாடு வள்ளலாரிடத்தில் காணப்படுவதைக் கவிஞர் சுட்டிக்காட்டுகிறார்.

உண்மையான ஆன்மிகவாதிகள் இருந்த நாட்டில் போலிச் சாமியார்களின் புரட்டுச் சிந்தனைகளும் கபடவேடங்களும் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன என்கிறார் தமிழன்பன்.

"போலிச் சாமியார் உடம்பைச்
சவப்பரிசோதனை செய்த போது
பத்துப் பெண் சடலங்களைக்
கைப்பற்றினார்கள்!

மற்ற உடம்புகள்
கதை என்ன என்று கேட்டபோது
சீடர்கள் சொன்னார்கள்
ஒருவேளை
ஜீரணமாகியிருக்கலாம்" **(த.க.தொ.1, ப.491)**

என்று போலித்தனமான வாழ்க்கை நடத்திப் பெண்களைக் கொண்டு ஆன்மிகம் என்ற பெயரில் அற்ப வாழ்க்கை நடத்தும் ஆன்மிகவாதிகளைச் சாடுகின்றார்.

பௌத்த மதத்தின் முக்கியமான கூறு நம்பிக்கை. இன்று பொழுது நல்லதாக அமையும் என்ற சிந்தனைதான் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்பதைத் "தோணி வருகிறது" என்ற கவிதைத் தொகுப்பில், 'சாதனை' என்ற கவிதையில்,

"கண்களின் இரண்டு
கரங்களும் கலந்தே
ஊமைச் சத்தங்கள்
உற்பத்தி செய்தன.
அந்த
நிசப்த அலைகளின்
நம்பிக்கை நாளைகள்" **(த.க.தொ.2, ப.239)**

என்ற கவிதை அரசியல் பற்றிப் பேசினாலும் பொதுவான மனிதர்களுக்குப் பயன்படும் நம்பிக்கை என்பதையும் எடுத்துரைக்கின்றது. காந்தியமும் நம்பிக்கை என்பதை மையமிட்டே கொண்டுணரப்பட்டுள்ளது. காந்தியடிகளின் வாழ்க்கைத் தத்துவங்கள் பௌத்த மதத்தின் கூறாய் விளங்கும் நம்பிக்கைப் பரிணாமங்களை வெளிப்படுத்துவன.

"இன்றுபோல் என்றுமே வருங்காலம் எப்படியிருக்கும் என்பது பற்றிய யூகங்களும் கற்பனைகளும் இவ்வளவு தோன்றியதேயில்லை. உலகம் என்றுமே ஹிம்சை மயமாகத் தானிருக்குமா? உலகில் எப்பொழுதும் ஏழைமையும் பட்டினியும் துயரமும் தானிருக்குமா? நாம் சமயத்தினிடம் இன்னும் அதிக

உறுதி வாய்ந்ததும் பரந்ததுமான நம்பிக்கைப் பெறுவோமா? அல்லது உலகமே கடவுள் அற்றதாக ஆகிவிடுமா?”[26]

என்று உலகம் எப்பொழுது மாறும் என்பதைக் கேட்கும் காந்தியடிகள் நாளை அஹிம்சையால் மாறும் என்று நம்பிக்கை கொள்ளுதல் அவசியம் என்கிறார். அதுபோல சொர்க்கம் என்பது இல்லாத பொருள். அதை உணரமட்டுமே முடியும். எனவே இல்லாத பொருள்மீது நம்பிக்கை வைப்பது சரியானதல்ல என்பது தமிழன்பனின் கருத்து. அதனை ‘நயனதாரா’ என்ற கவிதையில்,

“நிலாவின் வெள்ளிய
விழுதுகளைப் பிடித்துக் கொண்டே
அவளுக்கென்று
வானத்திலிருந்து
எத்தனையோ கனவுகள்
இறங்கி வந்திருக்கின்றன.
சொர்க்கம்... இதில் எனக்குத்
துளிகூட நம்பிக்கை இல்லை” (த.க.தொ.2, ப.242)

என்கிறார். கவிஞரின் பார்வையில் சொர்க்கம் இல்லாத பொருளாய்க் கூறப்பட்டுள்ளது.

“பிரார்த்தனை நிறைந்த உள்ளம் உடையவர்களுக்கு எப்பொழுதும் கருணை செய்பவராய் இருக்கும் கடவுள் எவ்விதமான தீங்கும் வராமல் பார்த்துக் கொள்வார். அப்படிப்பட்டவர்கள் தீங்கு வந்து விட்டால் அதற்காகத் தங்கள் விதியை நொந்து கொள்ளாமல் கலங்காத நெஞ்சுடனும், கடவுளுடைய சித்தப்படி நடக்கும் என்ற களிப்புடனும் அந்தத் தீங்குகளைப் பொறுத்துக் கொள்வார்கள்”[27]

---

26. மகாத்மா காந்தியடிகள், ஜனநாயகம் உண்மையும் போலியும், பக்.74-75.
27. காந்தியடிகள், அணுகுண்டும் அகிம்சையும், பக்.5-6.

என்று இறைநம்பிக்கைக் கொண்டவர்கள் எதையும் தாங்கும் துணிவும் கொண்டவர்களாக இருப்பர் என்கிறார் காந்தியடிகள்.

காந்தியடிகள் பல மதங்களில் உள்ள நன்மைகளை உணர்ந்து அதை ஏற்றுக் கொள்ளும் உள்ளம் கொண்டவர். காந்தியம் மட்டுமல்ல எந்த தத்துவமாயினும் உண்மையை உரைப்பது மட்டும்தான் சாலச்சிறந்தது என்பதை வலியுறுத்துகின்றன.

> *"உண்மையான பக்தியுள்ளவனுக்கு எம்மதமும் நல்வழிகாட்டியாக உதவும். அது எவ்வளவு கவர்ச்சியில்லாமலும் குருட்டு நம்பிக்கைகள் கொண்டதாக இருப்பினும் பரவாயில்லை. அதில் சிறிதளவு உண்மை இருந்தே தீரும். எப்பெரும் சமயமும் பரம்பொருளை ஏகாந்தமாகவோ, பேரளவிலோ அறிந்து விட்டதாகக் கூறமுடியாது. எண்களின் எல்லைக்கு ஒன்றை விட நூறு அதிக நெருங்கி இருப்பதாக எண்ணுவது மூடத்தனமாகும். எல்லா மதங்களையும் மரியாதையின் சகிப்புத் தன்மையுடன் நோக்க வேண்டும்"*[28]

என்கிறார் காந்தியடிகள். மேலும் எண்ணற்ற கட்டுப்பாடுகள் கொண்ட மதங்களினால் கொள்கைத் தளர்ச்சி செய்து கொள்ள முடியாது என்பதையும் உணர்தல் அவசியம். காலங்கடந்து வாழும் மதங்களில் இஸ்லாம் மதமும் ஒன்று. அது தன் கொள்கைகளில் ஒரு போதும் பின்வாங்காது என்பதைத் தமிழன்பனின் 'பிடிவாதம்' என்ற கவிதை மூலம் அறியமுடிகின்றது. இதற்கு விளக்கத்தை ஒரு கதையைக் கவிதை வடிவில் கூறியுள்ளார். நீரோடையில் நீராடிக் கொண்டிருந்த நபிகள் நாயகம் தேள் ஒன்று நீரில் தவிப்பதைக் கண்டார். அதன் உயிரைக் காப்பாற்ற நீரில் இருந்து பக்குவமாய் கரையேற்ற முயன்றார். அந்தத் தேள் அவரைக் கொட்டியது. மீண்டும் அதைக் கரையேற்ற முயற்சிக்கும் போதும்

---

28. க.சந்தானம், காந்திய நெறி, ப.10.

கொட்டியது. அதைப் பார்த்த வழிப்போக்கர் நபிகளிடம் அதைக் கரையேற்ற முயலாதீர்கள் என்று கூற அதற்கு நபிகள்,

"கொடுந்தேளோ தன்னுடைய
கொடுங்குணத்தைச் சற்றேனும்
விடுவதற்கு விரும்பவில்லை!
என்னிடத்தே இருக்கின்ற
விடுதற்கு முடியாத
மேலான நற்குணத்தை
விடுவதற்கு நான் மட்டும்
விரும்புவேனா" (த.க.தொ.2, ப.601)

என்று சொன்னார். மதம் என்பது நற்குணம் கொண்டது. அதை நல்வழியில் பயன்படுத்துதல் அவசியம். கொடுந்தேள் தன் குணத்தை மாற்றாமல் இருப்பதுபோல் நல்லவர்களும் தம் நற்பண்புகளை மாற்றுதல் கூடாது. இதுவே ஆன்மிகத்தின் ஆணிவேர் என்பதை உணர்தல்வேண்டும் என்கிறார் தமிழன்பன்.

உண்மை ஆன்மிகம் ஒருவனைத் தன்னை அறியச் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும். இறைவனைப் புறப்பொருளாகக் கருதி வெளியில் தேடுதல் உண்மை ஆன்மிகமாகாது. இதனை, "தீவுகள் கரையேறுகின்றன" என்ற கவிதைத் தொகுப்பில் 'சிறப்பின் சிகரமே' என்ற கவிதையில்,

"சந்தனம் ... மணத்தைச்
சந்தைகளில் தேடுவதில்லை...
தென்றல் குளிர்ச்சியைத்
தெருக்களில் பெறுவதில்லை...
உன் வாழ்வை
உன்னைத் தவிர்த்து
வேறெங்கே தேடுகிறாய்" (த.க.தொ.3, ப.74)

என்று தன் வாழ்வை உணர்ந்து தன்னை தனக்குள்ளே தேடுவதே ஆன்மிகத்தின் அடித்தளம் என்பதை விளக்குகின்றார் தமிழன்பன்.

நாமக்கல் கவிஞர் 'நெஞ்சோடு பிணங்கள்' என்ற தலைப்பில் எழுதிய கவிதையில்,

"தள்ளரிய தெய்வத்தின் நினைவு கூட்டும்
பிள்ளையார் சுழிபோட்டுக் கடிதம் தீட்டும்
தெள்ளறிஞர் நமது முன்னோர் செயலைக் கூட
எள்ளி நகையாடுகின்றாய் ஏழை நெஞ்சே"[29]

என்று கடவுளை வணங்கிச் செய்யும் செயல்களுக்கு முக்கியத்துவம் தருதல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். அதுபோல,

"எத்தொழிலைச் செய்தாலும் காந்தியைப் போல்
எஜமானர் கடவுளென எண்ண வேண்டும்
……………………………………..
நித்தியனாம் சர்வேசன் கடமை யென்ற
நிஜபக்தி காந்தியைப் போல் நிலைக்க வேண்டும்"[30]

என்ற கடவுள் கோட்பாட்டை நாமக்கல் கவிஞர் முன்னிறுத்துகின்றார். இந்தியர்கள் அனைவரும் ஆன்மிகத்தின்மீது பற்று கொண்டவர்கள். உலகம் முழுவதும் பல்வேறு மதங்கள் பரவியுள்ளன என்னும் இந்துமதத்தின் ஆன்மிகப் பாதை மேலைநாட்டினர் போற்றும் விதமாய் அமைந்துள்ளதை அறியமுடிகின்றது. "தீவுகள் கரையேறுகின்றன" என்ற கவிதைத் தொகுப்பில் 'சுதந்திரச் சுவடுகள்' என்ற கவிதையில் தமிழன்பன் சுதந்திர மனிதன் திரியும் தேசம் பற்றிய கருத்துக்களைக் கூறும்போது,

"ஆன்மிக வெள்ளம்
அலைபுரளும் பாரதம்

---

29. வெ.இராமலிங்கம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் பாடல்கள் ப.21.
30. மேலது, ப.87.

அறிவியல் உச்சியில்

ஆர்ப்பரிக்கும் அமெரிக்கா” (த.க.தொ.3, ப.91)

என்று பாரதநாடு ஆன்மிகப் பெருவெள்ளம் கொண்டுள்ளதாகக் கூறுகின்றார்.

ஆன்மிகத்தில் உயர்ந்த அறத்தைக் கூறும்போது பிறர் செய்யும் தவறுகளை மன்னித்தலே சிறந்தது என்று கருதப்படுகின்றது. கிறித்துவமும் பாவம் செய்தவர்களை மன்னிக்கவேண்டும் என்று கூறுகின்றது. காந்தியமும் தவறு செய்தவர்களை மன்னிப்பதே சிறந்தது என்றுரைக்கின்றது. காந்தி தன்னைச் சுட்ட கோட்ஸே-வையும் இறுதி நேரத்தில் மன்னித்தவர். மன்னிப்பு வழங்குவது உயர்ந்த அறம். நாம் செய்த பாவங்களில் இருந்து அது நம்மைக் காப்பாற்றும் என்று ஆன்மிகம் கூறுகின்றது. ஆன்மிகமே மக்களை மன்னித்தாலும், மரபு என்பது மக்களை விட்டு வைப்பதில்லை என்கிறார் தமிழன்பன். “ஊமை வெயில்” என்ற கவிதைத் தொகுப்பில் ‘வறுமைப்பாடு’ என்ற கவிதையில் கர்த்தரே, மரணத்தின் முன்கூட ஒரு கடைசிப் போஜனம் உமக்கு இருந்தது. ஆனால் முதல் போஜனத்துக்கு முன்னாலேயே நாங்கள் முடிந்து விடுகிறோம் என்று எழுதியுள்ளார்.

“வறுமையில்
அறையப் பட்டோம்
உயிர்த்தெழுவது ஒருபோதும்
இல்லை
இன்னதென அறியாமல்
இவர் செய்யும் பிழையை
மன்னியும்-என
வேண்டினீர்
. . . .
. . . .
இறைவனும் மன்னிக்கலாம்
எங்கள் மரபு
மன்னிக்காது” (த.க.தொ.3, ப.403)

என்று வறுமையில் இருப்பது மரபாகிப் போனதையும், அது மன்னிக்க முடியாத பெருங்குற்றமாகவும் இவ்வுலகம் எண்ணுவதைக் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார்.

காந்தியடிகள் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியைக் கூறும்போது,

> *"உண்மையாகவே கடவுளை இதயத்தில் வீற்றிருக்கச் செய்துவிட்டால் அந்தக் கணமே உடல், அறிவு, ஒழுக்கம் சம்பந்தமான சகல நோய்களும் பறந்து போகும். அப்படி நிகழக் காணாததால் அதைப் பொய் என்று தள்ளி விடமுடியாது"*[31]

என்கிறார் காந்தியடிகள். அதுபோல பிரார்த்தனை என்பது மிக முக்கியமானதொரு கருவி என்றுரைக்கின்றார்.

> *"பிரார்த்தனை என்பது கிழவிகளின் சோம்பேறிப் பொழுது போக்கன்று சரியான முறையில் அறிந்து அனுஷ்டித்தால் சர்வ வல்லமையுள்ள சக்தியாக ஆகும்"*[32]

என்று ஆன்மிகத்தின் ஒருவழியாகப் பிரார்த்தனையைக் கூறுகின்றார். இப்படிப்பட்ட ஆன்மிகத்தைப் பயன்படுத்தி ஏமாற்றிப் பிழைப்பவர்களும் உள்ளனர் என்கிறார் தமிழன்பன். "நடைமறந்த நதியும், திசை மாறிய ஓடையும்" என்ற கவிதைத் தொகுப்பில், 'மனிதனைத் தேட மார்க்கம் என்ன?' என்ற கவிதையில்,

> *"பூசாரிகளும் அரசியல்*
> *பொறுக்கிகளும்*
> *கடவுளரை அப்புறப்படுத்திவிட்டுக்*
> *கைப்பற்றி விட்டனர் கோவில்களை"*(த.க.தொ.4, ப.315)

---

31. நாமக்கல் கவிஞர், (மொ.ப.), காந்தி வழி, ப.6.
32. மேலது, ப.6.

என்று கடவுள் பெயரைப் பயன்படுத்திப் பூசாரிகளும், அரசியல்வாதிகளும் கோவில்களையும் கோயில் சொத்துக்களையும் அடைய முற்படுகின்றனர் என ஆதங்கப்படுகின்றார். மக்களுக்காக உருவாக்கப்பட்ட மதங்கள் இன்று அவர்களை அழிக்கும் ஆயுதங்களாக உருமாறி விட்டன. ஆன்மிகம் அரச போகங்களைத் துய்ப்பதற்காகவும், பொருள் சம்பாதிக்கும் பொருளாதாரக் கூடமாகவும் மாறிவிட்டது. ஆனால் மக்களுக்காக நேரிய ஆன்மிகப் பாதை வகுத்து தந்த இயேசு, இராமானுசர், நபிகள் நாயகம் பற்றித் தமிழன்பன் கூறும்போது,

"சுமந்த சிலுவையிலிருந்து
ஏசு
மனிதனுக்காகத் தனது
காயங்களையே
கனிகளாக்கி உதிர்த்தார்...
முகம்மது-தன்னைத்
தாக்கிய கற்களும் மனிதனுக்காகப்
பூக்களைக்
கர்ப்பந்தரிக்கச் செய்தார்.
அன்று அலைந்த இராமானுசர்
மனிதனுக்காகத்
தனது
பாதங்களையே உருக்கிப்
பாதைபோட்டார்" (த.க.தொ.4, பக்.316 317)

என்று சமுதாயத்தில் ஆன்மிகத்தின் நன்மை தீமைகளைக் கவிஞர் ஆராய்ந்துள்ளார். காந்தியத்தின் ஒரு நிழல்போல, ஆன்மிகம் விளங்குகின்றது. மக்களை நன்னெறிப்படுத்த உதவும் ஆன்மிகம் மூடநம்பிக்கைகள், போலித்தனங்களால் சிதைக்கப்பட்டு வருகின்றது.

காந்தியடிகளின் ஆன்மிகம் குறித்த கருத்தை,

> *"கிறித்துவ சமயமும் ஆண்டவன் ஏசுபிரான் மனித உருவில் தோன்றி, உலகில் உள்ள இன்னல் அனைத்தையும் அனுபவித்துப் பாவிகளுக்காகப் பாவம் எனும் சிலுவையைச் சுமத்தார் என்று கூறும். அதே சமயத்தில் இயேசுநாதர் பாவிகளின் பாவங்களை மன்னித்தார். ஆகவேதான் 'ஒவ்வொருவரும் தமது சிலுவையைத் தமது தோளில் சுமந்து ஆகவேண்டும்' என்ற கூற்று நிலவுகிறது. தமது பாவங்களை, துன்பங்களை நாம்தாம் சுமக்க வேண்டும்"*[33]

என்று ஜி.பங்கஜம் கூறியுள்ளமை ஒப்புநோக்கத்தக்கது.

உண்மை ஞானிகள் ஆர்ப்பாட்டமில்லாமல், ஆடம்பரமில்லாமல் இருப்பர். போலிகள்தான் கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு ஆர்ப்பரிப்பர் என்பதை உணர்த்த தமிழன்பனின், "மின்மினிக்காடு" என்ற கவிதைத் தொகுப்பில்,

> *"ஒரு ஞானி*
> *மரணமடைந்தபோது*
> *அவன் படுக்கை அருகே*
> *கண்ணீர் விட்டபடி*
> *அவன் செய்த உபதேசங்களைத்*
> *தவிர*
> *வேறு யாருமே இல்லை"* (த.க.தொ.5, ப.155)

என்று உண்மை ஞானியின் நிலையை எடுத்துரைக்கின்றார். இவ்வாறாக தமிழன்பனின் கவிதைகளில் காந்தியத்தின் ஒரு பகுதியான ஆன்மிகம் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகின்றது.

---

33. ஜி.பங்கஜம், காந்தியும் சமயமும், ப.25.

2. கல்விச் சிந்தனைகள்

பண்டைக்கால குருகுலக்கல்வி முறைப்படி பயின்ற, ஆன்றோர்களும், சான்றோர்களும் பல நல்ல நூல்களை உலகிற்கு ஆக்கித் தந்துள்ளனர். அந்த நூல்களைக் கற்று அதன்படி வாழ்வதே வாழ்க்கை. இதனை உணர்ந்து கற்றால் அது வாழ்க்கைக் கல்வி. காந்தியடிகள் கல்வி என்பதை வாழ்க்கைக்குப் பயன்படும்படி மாற்றிக்கொள்ள வேண்டும் என்கிறார்.

'கல்வி கரையில், கற்பவர் நாள் சில' என்று நாலடியார் கூறுகின்றது. மனிதன் சிறந்தனவற்றைத் தேடிக் கண்டறிந்து தேர்ந்து தெரிந்து உள்வாங்கிக் கொள்வதற்கு அவனுக்குக் கட்டாயம் வேண்டுபவை இரண்டு. 1. கல்வியறிவு, 2. அனுபவ அறிவு. அதாவது தானாக தன் சொந்த செயல்பாட்டின் மூலம் அறிந்து கொள்ளும் அறிவு. இத்தகைய அறிவு மனிதனை விலங்குகளிலிருந்து மாறுபட்டுச் சிந்தித்துச் செயல்படும் பண்பினை நல்கி மனிதனாகவும் தன்னம்பிக்கை உடையவனாகவும் மாற்றும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய கல்வித் தத்துவங்களை மானுட உளவியல் சார்ந்த நிலையில் காந்தியடிகள் நோக்குகின்றார்.

> *"அண்ணல் காந்தியடிகள் ஒவ்வொரு துறையிலும் உண்மையைக் கண்டறியச் சோதனைகள் பல செய்த ஓர் வித்தியாசமான மனிதர். மாமனிதர் கல்வித் துறையிலும் அவரைப் போல் சோதனைகள் செய்தவர் யாரும் இல்லை என்று கூறலாம். எனவேதான், குழந்தையிடமும் மனிதரிடமும் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றில் அடங்கியிருக்கின்ற சிறந்த ஆற்றல்களை எல்லாம் மலர்வித்து வெளிக் கொணர்வதே கல்வியாகும்"*[34]

---

34. ரா.வேங்கடராஜீலு, மகாத்மாகாந்தி நூல்கள், பக்.70-72.

என்று கல்வியின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தியிருப்பதில் இருந்து காந்தியின் கல்வி முக்கியத்துவ உணர்வை அறிந்து கொள்ள முடிகிறது. எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வது மட்டும் கல்வியாகாது என்று கூறியிருப்பதில் இருந்து கல்வி பற்றிய அவரின் சிந்தனைகள், கோட்பாடுகள் தெரிய வருகின்றன. அவை அவரின் கற்பனையில் உதித்து உருவான கோட்பாடுகள் அல்ல. அவர் உணர்வுப் பூர்வமாக வாழ்ந்து அனுபவித்த, சோதனைகள் பல செய்ததன் விளைவாக மலர்ந்த கோட்பாடுகள் ஆகும். காந்தியடிகளின் கொள்கைகளைக் காந்தியம் என்ற சொல்லால் கூறுவதில் அவரின் கல்வித் தத்துவமும் அடங்கும்.

காந்தியத்தின் கல்விக்கோட்பாடுகளில் பாரம்பரியக் கல்விமுறை, காலனி ஆதிக்கக் கல்விமுறை, இளமைக் காலக்கல்வி, மொழிக்கல்வி, சமயக்கல்வி, கைத்தொழில் கல்வி, சுயராஜ்ஜியக் கல்வி, சாதனைக் கல்வி, கூட்டுறவுக் கல்வி என்று பலவகைப்படும். இவற்றில் மானுட வாழ்க்கைக்குப் பயன்தரும் கல்வி மகத்தானது என்ற தத்துவத்தைக் காந்தியம் விளக்குகின்றது.

காந்தியக் கல்வி முறைகள் யாவும் பல பொதுப்படையான உள்வாங்குதலைக் கொண்டு சமூக அவலங்களுக்குத் தீர்வு காணும் முதன்மை நோக்கம் கொண்டது.

பாரம்பரியக் கல்வி முறையில் குரு தான் அறிந்ததை மட்டும் மாணவர்களுக்குச் சொல்லித் தருவார். ஏட்டுக்கல்வி இல்லாத நிலையில் போதிய அறிவு வளர்ச்சி மாணவர்களுக்குக் கிட்டவில்லை. இத்தகைய கல்விக் கோட்பாடு சமுதாயத்திற்கு உகந்தது அல்ல. கல்வி என்பது கல்விச் சாலை சென்று கற்பது மட்டுமல்ல. ஒன்றை அனுபவப் பூர்வமாக உணர்ந்து, அதனைப் பின்பற்றினாலே மகத்தானது என்ற கொள்கை உடையவர் காந்தியடிகள். இதனை,

> *"நாடகக் குழுவினர் நடத்திய அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்த காந்தியடிகள், அரிச் சந்திரனைப் போல் எல்லோரும் ஏன்*

சத்திய சீலர்களாக ஆகக் கூடாது என்று எண்ணிக் கொண்டேயிருந்தார். இந்தச் சம்பவம் பின்பு காந்தியடிகள் சத்தியப் பாதையில் செல்ல உறுதுணைப் புரிந்தது"[35]

இதுவும் கல்விக் கோட்பாட்டைச் சார்ந்தது. காந்தியடிகளின் கல்விக் கோட்பாட்டில் மிக முக்கியமானது தன் பணிகளைத் தானே செய்தல் ஆகும்.

"கல்வி என்பது ஒரு கருவியே தவிர அதுவே ஒரு குறிக்கோள் அல்ல. நல்ல ஒழுக்கத்தை வளர்ப்பதற்கு உதவி செய்யும் கல்வி முறையைத்தான் உண்மையான கல்வி என்று சொல்ல முடியும். இப்போது நமது பள்ளிக் கூடங்களில் நிலவும் கல்வி முறையினால் இந்தப் பலன் ஏற்படுகிறது என்று யாரும் உண்மையில் கூறமுடியாது"[36]

என்று காந்தியடிகளின் கருத்தை உதயசங்கர் கூறுகின்றார். மேலும் நம் நாட்டில் இருக்கும் கல்விமுறையில் மாற்றம் ஏற்பட்டால்தான் மக்களிடம் தன்னம்பிக்கையும், மனபலமும் ஏற்படும் என்பதைக் காந்தியடிகள் வலியுறுத்தியுள்ளார். எல்லோருக்கும் பொதுவானதாக கல்வி திகழவேண்டும். ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்பதையும் எடுத்துரைக்கின்றார்.

"இன்று நம் நாட்டிலுள்ள ஆரம்பக்கல்வி என்பது வெறும் கேலிக்கூத்து, இது கிராம இந்தியாவுக்கு என்ன தேவை என்பதைச் சிறிதும் கவனியாமலே ஏற்படுத்திய கல்விமுறையாகும். நகரங்களின் தேவையைக் கூட இது கவனிக்கவில்லை. ஆதாரக் கல்வியானது நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள எல்லாக் குழந்தைகளையும் இந்தியப்

---

35. **மகாத்மாகாந்தி, சத்தியசோதனை, ப.5.**
36. **உதயசங்கர், (தொகு.ஆ.), புதுமுறைக்கல்வி, பக்.12-13.**

பண்பாட்டில் மிகச் சிறந்தது எதுவோ, நித்தியமானது எதுவோ, அதனோடு கலந்து வளரச் செய்கிறது”[37]

என்று கல்வியின் அவசியமும், நகரம், கிராமம் என்ற பாகுபாடு இன்றி ஆதாரக்கல்வி பொதுவான பயன்பாட்டைத் தரக்கூடியது என்கின்றார் காந்தியடிகள். இவ்வாறாக காந்தியடிகள் வகுத்துரைத்த பல்வேறு கல்விமுறைகள் சமூகத்திற்குப் பயன்பாடு தரக்கூடியதாக அமைய வேண்டும் என்று பலரும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். காந்தியக் கல்வி முறையில் உணர்வுப் பூர்வமான சிந்தனைகள் மானுட மேம்பாட்டிற்கு வழிகாட்டுவதான அமைப்புகள் நிறைய காணப்படுகின்றன. அவையாவும் சாமானியர்கள் பின்பற்றி பயன்பெறக் கூடியவை. இவரின் கல்விமுறை தமிழன்பன், இன்குலாப் ஆகியோர் கவிதைகளில் ஒரு சில இடங்களில் காணப்படுகின்றது. ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் காந்தியக் கல்வி பற்றிய கவிதைகள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழன்பன் “வார்த்தைகள் கேட்ட வரம்” என்ற கவிதைத் தொகுப்பில், ‘காமராசர்’ என்ற கவிதையில், இந்தியாவின் பார்வை தமிழகத்தில் இருக்கும் விருதுநகரைத் திரும்பிப் பார்க்கச் செய்தவர் காமராசர். தன்னால் கற்கமுடியாத கல்வியை இலவசமாக எல்லோர்க்கும் வழங்க முயன்று வெற்றிகண்டவர் காமராசர். அதுமட்டுமல்ல கட்டாயக்கல்வி முறையை அறிமுகப்படுத்தியவரும் இவரே என்று பலவாறு புகழ்ந்து பின்னர்,

“அவர் கால்கள் இயற்றிய
காவியம்
சமதர்ம யாத்திரை,
அவர் கை
விரல்கள் எழுதிய
சரித்திரம்
இலவசக் கட்டாயக்கல்வி” (த.க.தொ.1, ப.593)

---

37. மு.அருணாச்சலம், (மொ.பெ.), நிர்மாணத்திட்டம், ப.17.

என்று காமராசர் செய்த கல்விப் பணியைப் பாராட்டுகின்றார். காந்தியடிகள் கூறிய ஆதாரக்கல்வியை எல்லோர்க்கும் பொதுவானதாக, இலவசமாக வழங்கியவர் காமராசர். "கதவைத் தட்டிய பழைய காதலி" என்ற கவிதைத் தொகுப்பில், 'இனிய என் தாய் நாடே' என்ற கவிதையில்,

"கலைமகள் வீணையின் கனவுகள் காப்போம்
விலையிலாக் கல்வியை எவர்க்கும் வார்ப்போம்
அறிவியல் புதுமைகள் அனுதினம் செய்வோம்
அன்னை உனக்காய்ப் புகழ் மலர் கொய்வோம்"
(த.க.தொ.2, ப.195)

என்று கல்விக்கு விலையில்லை என்கின்றார் தமிழன்பன். ஆனால் இன்றைய கல்வி கூவிக் கூவி விற்பனை செய்யப்படுகின்றது. பலசரக்கு வாங்குவோர் மாத மாதம் பொருள் கொடுத்து வாங்குவதுபோல இன்று கல்வியையும் மாத மாதம் தவணை முறையில் தொகைக் கட்டி விலைக்கு வாங்கிக் கற்கின்றனர் என்பதை மறைமுகமாகக் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார். அதுபோல, கல்வியின் அவசியத்தைக் "குடை ராட்டினம்" என்ற கவிதைத் தொகுப்பில் 'கண் எது?' என்ற கவிதையில்,

"கல்வியற்ற மனிதனுக்குக்
கண்கள் பயனில்லை-அவை
கண்களல்ல புண்களென்று
கருதல் நயவுரை" (த.க.தொ.2, ப.587)

என்கிறார் தமிழன்பன். இதனை,

"எண்ணென்ப எனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிருக்கு"[38]

---

38. குறள். 392.

என்னும் குறளும் நினைவுபடுத்துகின்றது. அதுபோல கல்வி பற்றிக் காந்தியடிகள் கூறும்போது,

"எது சுதந்திரம் அளிக்குமோ அதுதான் கல்வி"[39]

என்கிறார்.

கல்வியை மையமிட்டே வாழ்க்கையின் அடிப்படைகளை உணரமுடியும். கல்விமுறை நாட்டிற்கு நாடு மாறுபட்டு காணப்படும். அன்னியர்கள் வகுத்த கல்விமுறை நம் நாட்டிற்குப் பொருந்தாது என்பது காந்தியடிகளின் எண்ணம். கல்விக்கூடங்கள் எல்லாம் கடைச்சரக்கு விற்கும் கடைபோல மாறிவிட்டன. கல்விக்கூடங்களில் ஒலிக்கும் மணியோசை பற்றிக் கூறவந்த கவிஞர் "மின்மினிக்காடு" என்ற கவிதைத் தொகுப்பில்,

"பள்ளிக்கூட
மணியோசையில்
கல்விக்குக்
காது செவிடாகிவிட்டது" **(த.க.தொ.5, ப.180)**

என்கிறார். இவ்வாறாகக் கல்வி என்பது மாணவர்களுக்குக் கற்றுத் தருவது மட்டுமன்று. அதன் வழி நின்று வாழ வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும் என்கிறார் தமிழன்பன். இன்றைய கல்விமுறை குறித்து கூறவந்த இன்குலாப், 'கண்மணி ராஜம்' என்ற கவிதையில்,

"இந்தியத் தாயின் எதிர்கால நம்பிக்கைக்கு
காவல் நிதியமாய் வரவேண்டியவர்கள்
கல்வித் திட்டத்தால் மெய்யும் நெஞ்சும்
வலுவிழந்து போன வாலிப வயோதிகர்கள்" **(ஒ.பு., ப.68)**

---

39. **நாமக்கல் கவிஞர், காந்திய வழி, ப.74.**

என்கிறார். இந்திய நாட்டின் எதிர்கால நம்பிக்கைக்குக் காவல்நிதியமாய் வரவேண்டியவர்கள் இளைஞர்கள். ஆனால் இன்றைய கல்வி திட்டம் சரியாக வகுக்கப்படாததால் மனம், வலு இழந்ததால் வயோதிகர்களாகிவிட்டார்கள். எனவே இளமையிலே முதுமைத் தோற்றம் உடையவர்களாகி விட்டனர் என்பதைக் கவிஞர் இன்குலாப் எடுத்துரைக்கின்றார்.

மனனம் செய்து ஒப்பித்தல் மட்டுமே கல்வி அல்ல. மனனம் செய்வதோடு முடிந்து விடுவதில்லை கல்வி, அதை வாழ்க்கைக்கு உரியதாக உணர்வுப் பூர்வமாகக் கற்றல் மட்டுமே சிறந்த கல்வியாகும் என்பதை இன்குலாப் 'வீணான வீணையை மீட்பதற்கு' என்ற கவிதையில்,

"ஒண்ணாவது வகுப்பிலிருந்து
பல்கலைக்கழகம் வரை
ஒப்பிக்கத் தெரிவது
மட்டுமே கல்வி" (ஒ.பு., ப.161)

என்கிறார். கல்வி என்றும், கேள்வி என்றும் சொல்லப்படுவன குறித்த காந்தியடிகளின் கருத்தை,

"நம் பெரியோர்கள் படிக்கும் முறையைக் கல்வி என்றும், 'கேள்வி' என்றும் இருவிதமாக வகுத்திருக்கிறார்கள். ஏட்டில் படித்துப் பெறுகிற அறிவைக் கல்வி என்கிறார்கள். ஆசிரியர்களிடமிருந்தோ பெரியோர்களிடமிருந்தோ காதினால் கேட்டுப் பெறும் அறிவைக் 'கேள்வி' என்றும் சொன்னார்கள்"[40]

என்று கல்கி எடுத்துக் கூறுகின்றார். இவ்வாறாகக் காந்தியடிகளின் கல்வி பற்றிய கொள்கைகள் ஒரு சில மட்டுமே கவிதைகளில் காணப்படுகின்றன. காந்தியடிகள் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் தரக்கூடியவர். கல்வி கற்க போதிய விளக்கு

---

40. கல்கி, மாந்தருக்குள் ஒரு தெய்வம், ப.263.

வசதி இல்லாத சூழ்நிலையில் படிப்போர் நிலையை இன்குலாப் கூறும் போது, தெருவிளக்கடியில் படித்தவர்களெல்லாம் நாட்டிற்குப் பெருமை சேர்க்கலாம். தெருவிளக்கடி சிலர்க்குப் படிப்பறை ஆகும். ஆனால் நாட்டிற்குப் பெருமை சேர்க்காது என்பதைத் 'தெருவிளக்கு' என்ற கவிதையில்,

"வீட்டுக்குள்ளே கல்வி
வெளிச்சம் வரவேண்டுமென்றால்
வீட்டுக்குள்ளே விளக்கின்
வெளிச்சம் வரவேண்டும்" (ஒ.பு., ப.168)

என்கிறார். வீட்டிற்கும் நாட்டிற்கும் பயன்தரும் கல்வியை விளக்காக உருவகம் செய்துள்ளார் இன்குலாப். பயன்தரக்கூடிய கல்வியைக் கற்றால் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும் என்பது காந்தியடிகளின் கருத்தாகும்.

"கல்வி என்றதுஞ் சிலருக்கு நூல்கள் மீதும் கட்டடங்கள் (கல்லூரிகள்) மீதும் நினைவு செல்லும். இயற்கையையுந் தன்மையும் ஆராய்ந்து உண்மை கண்ட பெரியோர் தமது வாழ்வின் அடைவைப் பின்வருவோர் எளிதில் உணருமாறு நூலாக எழுதிச் சென்றனர். அந்நூல் கலை ஞானத்தை விளக்குமேயன்றி அநுபூதி (Realisation) *என்னும் மெய்யறிவை விளக்குவதாகாது. சில வேளைகளில் சிலருக்கு நூலறிவு, மெய்யறிவு அவாவை எழுப்புவதுண்டு. ஆகவே, நூலைக் கல்வியறிவிற்கு ஒரு கருவி என்று கூறலாம்"*[41]

என்று நூலின் தன்மை கல்வியறிவை மேம்படுத்தப் பயன்படும் கருவியாக திரு.வி.க கூறுகின்றார். காந்தியடிகள் காந்தி இளமைக் காலத்தில் நாட்டுக் கல்வி பயின்றவர். பின்னர் ஆங்கிலப் பள்ளியில் இக்காலக் கல்வியும், தென்னாப்பிரிக்காவில் இயற்கைக் கல்வியும் பயின்றவர். இவர் தான் கற்ற கல்வியைப் பிறருக்கும் பயன்படும்படி செய்தல் வேண்டும் என்பதில் விருப்பம்

---

41. திரு.வி.க., மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், ப.132.

கொண்டு அதற்காகப் பாடுபட்டு உழைத்துள்ளார். கல்வியின் பயன் அனைவருக்கும் சென்று சேருதல் அவசியம் என்பதை உணர்த்துகின்றார்.

3. அரசியல் சிந்தனைகள்

மக்கள் நாடோடி நிலையைவிட்டு நிலையான வாழ்க்கையை மேற்கொள்ளவும், பகைவர்களின் போரிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், பிறர் தங்களுடைய பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போகாமல் இருக்கவும், சண்டைச் சச்சரவுகள் இன்றி அமைதியாக நல்வாழ்வு வாழவும் ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதற்கு ஒரு வலிமையுடைய தலைவனை நியமித்து ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தங்களுக்குரியதாக்கி மேற்பார்வை பார்த்துவரச் செய்ததில் இருந்து அரசு என்பது தோன்றியிருக்க வேண்டும். அல்லது வல்லான் ஒருவன் பிறரை அடக்கித் தலைவனாக்கி ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பைத் தனக்குரியதாய் அமைத்துக் கொண்டதால் அரசு தோன்றியிருக்கலாம் என்று கூறுவர்.

முதலில் மாடுகளாகிய செல்வம் மிக்கவன் தமிழகத்தில் தலைவனாகி இருந்ததனால் மக்கள் அத்தலைவனைக் கோன் என்று கூறினார்கள். கோன் என்னும் பெயர் பிற்காலத்தில் அரசனைக் குறிப்பிடப் பயன்பட்டது. அரசனால் ஏற்பட்ட ஆட்சி அரசாட்சி எனப்பட்டது.

அரசு – என்பதன் விளக்கம்

அரசு என்னும் சொல் தமிழ்மொழியில் அரசனைக் குறிக்கும். அரசியல் நூலில் அரசு என்பது மாநிலத்தைக் குறிக்கும். அரசு என்பது அதற்குரிய நிலப்பகுதி, குடிமக்கள், சிறந்த ஆட்சியமைப்பு, அவ்வாட்சி அமைப்பில் அதிகாரம் போன்றவற்றைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆட்சியமைப்பே அரசாங்கமாகும். அதில் மன்றங்கள் செயல்படுத்தும் நிலையங்கள், நீதி மன்றங்கள் ஆகியன இடம் பெற்றிருக்க வேண்டும். அரசு என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் அடங்கிய ஒரு வகைச் சமுதாய அமைப்பு. மனிதன்

தன் இனத்தவரோடு கூடி ஒரு சமுதாயமாக வாழும் இயல்புடையவன். இத்தகைய சமுதாய அமைப்புக்கு இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்வதற்காக அதிலுள்ள மக்களால் பின்பற்றப்படும் சட்ட விதிகள், செயல்கள், அதிகாரங்கள் ஆகியவை எல்லாம் அரசியலில் சேரும்.

அரசு என்ற சமுதாய அமைப்புக்கு வில்சன் என்னும் ஆசிரியர்,

"ஒரு குறிப்பிட்ட நில எல்லைக்குள் சட்டத்திற்குக் கீழ்படிந்து வாழ்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டமே அரசு"[42]

என்று இலக்கணம் வகுக்கின்றார்.

"சமுதாயத்தின் அரசியல் ஒழுங்கமைப்புக்காக வரலாற்று முறையில் உருவான ஒரு வடிவம். உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை தலை தூக்கி, சமுதாயம் சுரண்டுவோராகவும், சுரண்டப்படுவோராகவும் பிளவுண்டதும் அரசு உதயமாயிற்று"[43]

என்று அரசியல் சொற்களஞ்சியம் விளக்கமளிக்கிறது. 'தனிமனிதனைப் பற்றி எழாத ஒரு கேள்வி அத்தனிமனிதனோடு மற்றொருவன் சேர்ந்துவிட்டாலே உண்டாகி விடுகிறது. இருவரையும் நடத்திச் செல்லத்தக்க ஒரு பொதுமறை எதுவோ அதுதான் அரசியல்' ஆகும்.

அரசியல் என்பது நாகரிகம் அடைந்த ஒரு சமூகத்தின் அரசாங்கம், அடிப்படைச் சட்டம், குடிமக்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள தொடர்புகள் இவற்றை வகுக்கக் காக்கும் நீதிகள், சமூக நிலைகள் ஆகியவற்றின் குறிக்கோள்கள் என்பன பற்றிக் கூறும் ஒரு அறிவுத் துறையாகும்.

---

42. வாழ்வியற் களஞ்சியம் தொ-1, அரசியல், ப.651.
43. அரசியல் சொற்களஞ்சியம், தொ-1, ப.9.

சமூகத்தைப் பல நிலைகளிலும் நின்று நோக்கி ஒவ்வொரு துறையிலும் அதற்குரிய விவரங்களைத் தொகுத்து விளக்கும் அறிவுத் துறைகள் பல. இன்று இவற்றைப் பொதுவாக சமூக அறிவியல் என்று கூறுவர். இத்தகைய அறிவுத் துறைகளில் அரசியலும் ஒன்று எனக் கருதப்படுகிறது.

> *"மனிதர்கள் எல்லோரும் சமூக வாழ்க்கையினர். பலர் ஒன்றாகக் கூடி வாழும் பண்பு அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்துள்ளது. மனிதன் நல்வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலையை ஏற்படுத்தவே இராச்சியம் (அரசியல்) தோன்றி வளர்ந்து வந்துள்ளது"*[44]

என்று கிரேக்க அறிஞரான அரிஸ்டாடில் கூறியுள்ளார்.

> *"அரசியல் என்பது சமுதாயத்தைப் பற்றிய ஆய்வின் முக்கியமான கூறாகும்"*[45]

என்று க.பாஸ்கரன் குறிப்பிடுகின்றார்.

மேற்கண்ட கூற்றுகள் உண்மை அரசின் நிலையை எடுத்துரைக்கின்றன. அதே சமயத்தில் அரசு என்னும் அமைப்பிற்குப் பொதுமக்கள் நிலவியல் ரீதியில் குறிப்பிட்ட பரப்பளவு, நிர்வாகம் அல்லது அரசாங்கம், தனியுரிமையாட்சி அல்லது இறையாண்மை என்ற நான்கு முக்கிய குணங்கள் இருக்கும் என்பர். காந்திய அரசியல் முற்றிலும் மாறானது. நாட்டுப்பற்று, சுதேசியம், உண்மை, வாக்குரிமை, மக்கள் நலம் இவற்றை மட்டும் கொண்டு அரசியல் நடத்தமுடியாது என்பதில் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவர்.

> *"உலகத்தில் அரசாங்கங்கள் எதற்காக ஏற்படுத்தப்படுகின்றனவோ அந்தக் காலத்தை எந்த நாட்டில் எந்தக் காலத்தில் எந்த அரசாங்கம் மிகவும் வெற்றிகரமாகச் செய்து முடிக்கிறதோ அந்த*

---

44. அரிஸ்டாடில், யதேச்சதிகாரம், ப.5.
45. க.பாஸ்கரன், சமூகவியல், ப.18.

அரசாங்கம்தான், அந்தக் காலத்திற்கு அந்த நாட்டிற்கு மிகவும் சிறந்த அரசாங்கம்"[46]

என்று அரிஸ்டாடில் அரசியல் பற்றிய செய்தியை விளக்குகின்றார்.

இதனடிப்படையில் ஆய்விற்குரிய மூன்று கவிஞர்களின் கவிதைகளில் காணப்படும் காந்திய அரசியலை,

அ. நாட்டுப்பற்று
ஆ. சமதர்மம்
இ. வன்முறை எதிர்ப்பு
ஈ. வாக்குரிமை

என்ற தலைப்புகளின் வழி பகுத்து ஆராயலாம்.

அ. நாட்டுப்பற்று

காந்தியடிகள் ஒரு சமுதாயப்புரட்சியாளர். மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாய்த் தொடங்கிய அவரது வாழ்க்கை கண்மூடிப் பழக்கங்களை, சமுதாயச் சீர்கேடுகளை, பொருளாதாரச் சிறுமைகளை, அரசியல் அடிமைத் தனங்களை, சமய வேறுபாடுகளை மண் மூடச் செய்கின்ற புரட்சி வாழ்க்கையாக மாறியது.

"*ஒரு நாட்டுக்கு இயல்பாய் அமைந்துள்ள மொழி, வழக்க ஒழுக்கம், அரசு, அறம் முதலிய யாவுஞ் சேர்ந்த ஒன்றே சுதேசியமாகும்*"[47]

என்று சுதேசியம் குறித்துத் திரு.வி.க கூறியுள்ளார். இந்தியா மீது கொண்ட ஆழ்ந்த பற்றின் காரணமாக எந்தப் பதவியிலும் இல்லாமல் எளிய தொண்டனாக இருந்து நாட்டிற்குச் சேவை செய்யவேண்டும் என்ற எண்ணத்தினால் நாடுதோறும் சென்று அங்கிருக்கக் கூடிய எளிய மக்களுக்குத் தன்னால் இயன்ற

---

46. அரிஸ்டாடில், மு.நூ., ப.5.
47. திரு.வி.க., மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், ப.318.

வழிமுறைகளைக் கூறத் தொடங்கினார். நாட்டுக்காகப் போராடக் கூடியவர்கள் இரத்தம் சிந்தக் கூடாது. மிதவாதத் தன்மை கொண்டு போராடுதல் வேண்டும் என்று கூறினார். அணு ஆயுதம் இல்லாதவர்களாய்ப் போராடி சுதந்திரம் பெற வேண்டும் என்பதில் உறுதியோடு இருந்தார்.

> *"மிதவாதிகள் அரசியல் விடுதலைக்கான நேரடிப் போராட்டத்திற்கான காலம் கனியவில்லை என்று கருதியதால் மக்களைத் தட்டி எழுப்பி, விடுதலை வேட்கையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துவதே தங்களது கடமை என்று கருதினர். மக்களிடம் நாட்டுப் பற்றை உருவாக்கி பெருமளவில் அவர்களைத் தேசிய இயக்கத்தில் ஈடுபடுத்தி, அரசியலிலும் அரசியல் போராட்டத்திலும் பயிற்சியளிப்பதை உடனடித் தேவை என்று எண்ணினர். சாதி, மத, உணர்வுகளால் பிளவுப் பட்டிருந்த மக்களிடம் நாட்டுப்பற்றின் மூலம் 'எல்லோரும் இந்தியர்கள் சமமானவர்கள் என்ற எண்ணத்தையும் தேசிய ஒருமைப்பாடு உணர்வையும் உருவாக்க முனைந்தார்"*[48]

என்பதன் மூலம் நாட்டுப்பற்று மிக்கவராய் காந்தியடிகள் இருந்துள்ளார் என்பதை அறியமுடிகின்றது. ந.பிச்சமூர்த்தி 'பொங்கல்' என்ற தலைப்பிலான கவிதையில்,

> *"ஆண்டு பல முன்னம்*
> *பூகம்பம் பீகாரில்*
> *பிறந்தழிவை உண்டாக்கிப்*
> *பாரதத்தைப் பாழ்படுத்தக்*
> *கண்டதொரு பெருங்கிழவன்*
> *உண்மை ஒன்றைச்*
> *சொல்லி வைத்தான்"* **(ந.பி.க., ப.72)**

என்று கூறுகின்றார்.

---

48. **காந்தியடிகள், காந்தியுகம், ப.42.**

"அரசாங்க மாளிகையில்
அறிஞர் அமர்ந்தாலும்
அன்பாலே ஆட்சி செய்ய
அருந்தலைவர் அலைந்தாலும்
வானத்தை மறந்து
வழிதப்பிச் சென்று வரும்
நம்நாட்டு மக்கள்
நலம் பெறுதல் பகற்கனவு" (ந.பி.க., ப.73)

என்று நாட்டு மக்களின் நலத்தைப் பெரிதுபடுத்தும் அரசியல் உணர்வைக் கவிஞர் பிச்சமூர்த்தி மறைமுகமாக எடுத்துரைக்கின்றார். அதுமட்டுமின்றி ஏற்றத்தாழ்வு மிக்க மக்களின் வாழ்வைச் சட்டங்கள் சீர்ப்படுத்திப் பார்க்கின்றன என்பதையும் சுட்டுகின்றார்.

"அறிவால் அளவெடுத்தீர்
தர்க்க
அறிவால் எடை போட்டீர்
தாளெடுத்தீர்
புள்ளிக் கணக்கெடுத்தீர்
தலைக் கட்டுக் கிது வென்று
சட்டங்கள் போட்டு வைத்தீர்" (ந.பி.க., ப.75)

என்று அரசியலை அடிப்படையாகக் கொண்டு மக்களின் நடைமுறை மரபுகளுக்குச் சட்டங்கள் பிறப்பிக்கப்படும் நிலையை உணரமுடிகின்றது. இதில் போதிய நாட்டுப்பற்று இல்லாத மக்களின் மனநிலையைக் கவிஞர் சுட்டிச் செல்கின்றார்.

"எந்த அரசாங்கம் தன்னுடைய பிரஜைகளைத் தன்னுடைய கருவிகளாக உபயோகிப்பதற்காக அவர்களுடைய சுதந்திர உணர்ச்சிகளையும் சொந்த ஆற்றல்களையும் வளரவிடாமல் செய்து விடுகிறதோ அந்த அரசாங்கமானது இறுதியில் சின்ன

மனிதர்களைக் கொண்டு பெரிய விஷயங்களைச் சாதிக்க முடியாத பரிதாப நிலைமைக்கு வந்து விடும்"[49]

என்று மக்களைக் கருவிகளாக உபயோகிக்கும் நாடுகள் மக்களின் உணர்வுகளை மதிக்காது என்ற எண்ணத்தைக் காந்தியடிகள் உணர்த்துகின்றார். மக்களின் அறிவு வளர்ச்சியைப் பொறுத்து அரசு செயல்படுகின்றது. நாட்டின்மீது பற்று உடையவர்களாக மக்களை மாற்றுவதில் அரசின் பங்களிப்பும் முக்கியமானது.

காந்திய அரசியலில் நாட்டுப்பற்றை முதன்மைப்படுத்துவதன் நோக்கம் மக்களின் தொழில், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றை மேம்படுத்துவதாகும். அதற்கு இவர் பயன்படுத்திய ஆயுதம் ராட்டை. மேலும் நாட்டிற்கும், காலத்திற்கும் தகுந்த ஒத்துழைக்கக் கூடிய மனப்பாங்கை மக்களிடம் உருவாக்க வேண்டும் என்பதே இவரின் எண்ணமாகும்.

"எல்லா தேசங்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் மிகச் சிறந்த அரசுமுறை என்ற எதுவும் இருக்க முடியாது என்பதே, அரசியல் அமைப்பை, அந்தந்த நாட்டின் இறந்த காலத்துப் பரம்பரைப் பழக்கவழக்கங்களை எண்ணிப் பார்த்து, நிகழ்காலத்து சமய சந்தர்ப்ப நிலைமைகளையும் கவனித்துத்தான் நிச்சயிக்க வேண்டும்"[50]

என்கிறார் நாமக்கல் கவிஞர். மரபு என்ற பெயரில் நம்மால் நடத்தப்படும் அரசியல் முறைகள் போதிய விழிப்புணர்வு இன்றி மக்களைத் தவிக்க வைத்துள்ளது. நாட்டுப்பற்று என்பது மனிதனை வறுமை உடையவனாய் ஆக்கிவிடக் கூடாது. நாட்டின் வளர்ச்சியோடு, குடும்பத்தின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர்களாக மக்களை மாற்ற வேண்டும். அந்தவகையில் காந்தியடிகளின் கதர், இராட்டைக் கோட்பாடு தன்னையும், நாட்டையும்

---

49. நாமக்கல் கவிஞர், (மொ.பெ.), காந்தீய அரசியல், ப.46.
50. மேலது, ப.17.

முன்னேற்றப்பாதையில் கொண்டு செலுத்த அவர்களை ஊக்கப்படுத்துகின்றதெனலாம். காந்தியடிகளின் நாட்டுப்பற்றில் காணப்படும் இராட்டைக் கோட்பாடு பற்றித் தமிழன்பன் "திரும்பி வந்த தேர்வலம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'தறியைக் கவிதை நெய்கிறது' என்ற கவிதையில்,

"உழவன்
கணக்குப் பார்த்தால்
உழக்குத் தான் மிஞ்சும் என்பர்
நெய்தவன்
கணக்குப் பார்த்தால்
நெடுமூச்சே மிஞ்சும் என்பேன்" (த.க.தொ.1, ப.247)

என்பதில் நெய்பவருக்கு எதுவும் கிடைப்பதில்லை வறுமைதான் மிச்சமிருக்கும் என்று கூறுகின்றார்.

"நாடெல்லாம்
தூங்க
நடுவான நிலாத்தூங்கப்
பாரெல்லாம்
தூங்கும் வேளையிலும்
எம்மூர்
ஏழைத் தாய்மாரின்
இராட்டை தூங்காது" (த.க.தொ.1, ப.248)

என்று கணவனை இழந்தப் பெண்கள் இராட்டையைக் கொண்டு இரவு பகல் பாராமல் உழைக்கின்றனர் என்பதைக் கவிஞர் பதிவு செய்துள்ளார்.

அதுபோல திருப்பூர் குமரன் நாட்டிற்காக கையில் ஏந்திய மூவண்ணக் கொடியை விடாது உயிர் நீத்த தியாகி என்பதை,

"திருப்பூர்த் தெருவில்
அன்று அவன்

சிந்திய இரத்தம் தான்
சுதந்திர தேவியின்
மாணிக்கப்
பதக்கத்திற்குக்
காணிக்கையாகிச்
சிவந்து சிறந்தது
ஆவியையும், அன்னை
நாட்டிற்கு-அவன்
தியாகம் செய்தான்" (த.க.தொ.1, ப.251)

என்று கவிதைப்படுத்தியுள்ளார் தமிழன்பன். இவ்வாறாக நாட்டின்மீது பற்றுகொண்டு தம் இன்னுயிரைத் தியாகம் செய்வது பெருமையாகும் என்பது காலங்காலமாகக் கூறப்பட்டு வரும் கருத்தாகும்.

அதுபோல நாட்டின் பெருமைகளைப் பலரும் உணரும் விதமாக எடுத்துரைக்க வேண்டும் என்பார் காந்தியடிகள். அந்த வகையில் "தமிழன்பனின் கவிதை" என்ற கவிதைத் தொகுப்பில்,

"பாரத தேசத்தில்
பரிணாமம் எழுதுகின்ற
தலை வசந்தம் வருகுதென்று
தைரியமாய்ச் சொல்லுங்கள்!
கங்கை நதி தீரம்
காவேரி நதியோரம்
எங்கும் இந்தியாதான்!
எவரும் இந்தியர்தான்!" (த.க.தொ.1, ப.84)

என்று நாட்டிற்கு வளம் சேர்க்கும் கூறுகளை எடுத்துக் கூறி, ஒன்றுபட்ட பாரதத்தை உலகிற்குக் காட்டுவதாகக் கவிதை இடம்பெற்றுள்ளது. "வார்த்தைகள் கேட்ட வரம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'காமராசர்' என்ற கவிதையில்,

"கரிய மலையின் சரிவில்
வெள்ளை
அருவியாக
அந்த மேல்துண்டு
கதர் பெற்ற கவுரவம்
மடிந்த
அந்த மேல்துண்டுகளுக்குள்
மடியாமல் இருந்தது
நாட்டுப்பற்று" (த.க.தொ.1, ப.595)

என்று காமராசரின் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தியுள்ளார் தமிழன்பன். 'ராம ராஜ்யம்' என்பது காந்தி வலியுறுத்தும் அரசியல் முறையாகும்.

"இராமராஜ்யம், சுயராஜ்யத்தின் ஆதர்ச இலட்சியமாகும். இதன் பொருள் தர்ம ராஜ்யம், நீதியின் ஆட்சி அல்லது அன்பாட்சி, அஹிம்சா சுயராஜ்யம் அல்லது மக்கள் சுய ஆட்சி"[51]

என்று காந்தியடிகள் வலியுறுத்தும் சுயராஜ்யத்தை மஷ்ருவாலா எடுத்துரைக்கின்றார். ஆனால் இந்த சுயராஜ்ஜியத்தால் மக்களுக்கு நன்மை ஏற்படுமா? என்பதே கேள்விக்குறி என்பதாகத் தமிழன்பனின் 'கடப்பைக் காந்தம்மா' என்ற கவிதையில் இடம்பெற்றுள்ளது.

"நோயாளிக் கணவன்
சேய்கள் மூவர்... இவர்களைக்
காப்பாற்றவா.... இல்லை...
கொத்தவரும் சாவைக்
கொஞ்சம் தள்ளிப்போட
இந்தக்
காந்தி கண்ட ராமராஜ்யத்தில்

---

51. மஷ்ருவாலா, காந்திய நவநீதம், ப.677.

இவள் என்ன செய்வாள்?
மெய்தான்...." (த.க.தொ.1, ப.280)

இவ்வாறாக ராமராஜ்யத்தின் குறைபாட்டையும் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார். இவ்வாறாக தமிழன்பன் கவிதைகளில் நாட்டுப்பற்று இடம் பெற்றுள்ளது.

தமிழன்பனின் கவிதைகளில் காணும் நாட்டுப்பற்றைவிட இன்குலாப் கூறும் நாட்டுப்பற்று சற்று வேறுபட்டு காணப்படுகின்றது. எளிமையாக மக்களின் குறைகளைச் சுட்டிக்காட்டுபவர் ஈரோடு தமிழன்பன். உணர்வுகளுக்கு ஊக்கமளித்து புரட்சிகர தேடலாய் சொற்களை இனங்கண்டு எழுதுபவர் இன்குலாப். நாட்டின் நேரிய செயல்களையும், ஒற்றுமைக் கூறுகளையும் இனம்கண்டு சுட்டிச் செல்கிறார் இன்குலாப். இவரின் 'போர்ப்பந்தரிலிருந்து' என்ற கவிதையில்,

"*ரகுபதி மந்திரமும் – ராம*
ராஜ்ஜியக் கனவுகளும்
அகிம்சை போதனையும் – ராட்டை
யாகமும் பஜனைகளும்
பசித்த வயிற்றுக்கு – ஒரு
பருக்கையும் போடவில்லை" (ஒ.பு., ப.41)

என்ற கவிதையில் காந்தியத்தின் இராமராஜ்யத்தில் காணப்படும் நிறையைச் சுட்டிக்காட்டுகின்றார். நாட்டிற்குள் ஒற்றுமை இல்லை என்பதை எடுத்துக்கூறி உண்மைத் தன்மையைத் தேடுதல் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றார்.

"*தோட்டாதுளைத்ததுண்டு – எங்கள்*
தெலுங்கானாத் தோழர்களை
பாட்டாளி வர்க்கத்தின் – இரத்தம்
பருகி மகிழ்ந்ததுண்டு
துப்பாக்கிக் கத்திகளால் – எங்கள்
தோழர்கள் ரத்தத்தால்

அப்பா நேரு பிரான் – காந்தியடிகள்
அகிம்சைக்கு உரை செய்தார்.” (ஒ.பு., ப.2)

கல்வி அறிவுடையோர், அற்றோர் யாராயினும் தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்துவதைத் தமது கடமையாகக் கொண்டுள்ளனர். ஆனால் தேசியக்கொடி என்று ஒன்று உண்டு என்பதைக்கூட அறியாத மக்கள் இருக்கின்றனர் என்பதை ‘நாடோடிகள்’ என்ற கவிதையில் இன்குலாப்,

“பந்தங்கள் ஏற்றி
ஆடுகின்றாரே
பந்தயம் போட்டுப்
பாடுகின்றாரே
இவர்கள்
தேசியகீதம்
பாடத் தெரியாமல்
தெம்மாங்கு பாடத்
தெரிந்த நாடோடிகள்
தேசக் கோட்டையோ
தேசியக் கொடியையோ
நேசிக்கத் தெரியாத
சர்வ தேசியவாதிகள்” (ஒ.பு., ப.139, 140)

என்று நாட்டின் கீதம், கோட்டைப் பற்றி அறியாத இவர்களும் தேசியவாதிகள்தான் என்கிறார்.

ஆ. சமதர்மம்

சமதர்மம் என்பது காந்தியச் சாரமாகும். பொதுவுடைமை என்பது மார்க்சிய, பெரியாரியச்சாரம். எல்லா பொருட்களும் எல்லோருக்கும் பொது என்பதும், நடைமுறையில் உள்ள சாதி ஏற்றத்தாழ்வு, ஆண்-பெண் பாகுபாடு இன்றி அனைத்தும் சமம் என்பதைச் சமதர்மம் என்கிறோம். காந்தியடிகள் சமதர்மத்தை ஒவ்வொரு மக்களும், ஒவ்வொரு நாடும் கடைபிடிக்க வேண்டும்

என்று கூறுகின்றார். சமதர்மம் அல்லது சர்வோதயம் என்றும் இதனை நாம் கொள்ளலாம்.

> *"சர்வோதய சமுதாயம் எல்லா மக்களும் சரிநிகர் சமமாக சமத்துவமாக வாழ வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருக்கிறது. மக்களுக்கு இடையில் பிறப்பாலோ, சாதி சமய வேறுபாட்டாலோ, பொருளாதார நிலையினாலோ எந்த வகையான ஏற்றத்தாழ்வும் இருக்கக் கூடாது. எல்லா மக்களும் ஒரே தாய் பெற்ற பிள்ளைகள் போல, இணைந்து சமநிலையில் வாழவேண்டும். இதுவே சர்வோதய சமுதாயத்தின் இலட்சியம்"*[52]

என்று சர்வோதயம் குறித்த காந்தியடிகளின் கருத்தை மா.பா.குருசாமி விளக்கிக் கூறுகின்றார். பங்கீட்டு முறை அமல்படுத்த வேண்டும். பொருட்கள், சொத்துகள் நிறைய கொண்டுள்ளவர்கள் தங்களிடம் உள்ளதைப் பிறருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். அதற்குப் பணம் கொண்டவர்கள் மனம் உவந்து உதவ வேண்டும் என்ற முறையைத் 'தர்மகர்த்தா முறை' என்று காந்தியடிகள் அறிமுகம் செய்துள்ளார். இதுவும் சர்வோதயத்தின் வகைமைகளில் ஒன்றாகும்.

> *"பங்கீட்டுக் கடை என்ன*
> *சல்லடையா?*
> *முறமா?*
> *நெல் மிஷினா*
> *பலகைக் காரியா?"* (ந.பி.க., ப.90)

என்று ந.பிச்சமூர்த்தியின் கவிதையில் பங்கீட்டுக் கடை என்பது தேவையற்றதை புடைத்து எடுக்கும் பொருளா? என்று கேட்கின்றார். எல்லோருக்கும் எல்லாப் பொருட்களும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதைக் காந்தியம் வலியுறுத்துகின்றது.

---

52. மா.பா.குருசாமி, காந்தியச் சிந்தனைகள், ப.80.

"முட்டையைப் பிரிக்குமுன்னர்
முந்நூறு பேரிருந்தால்
சலிப்பதெங்கே?
புடைப்பதெங்கே?
புண்ணியம் செய்யத்தான்
பொழுது எங்கோ
அங்கயற்கண்ணியின்
அருளென்ன சொல்வேன்
பங்கீடு வாழ்க!
பாழ் வயிறும் வாழ்க" (ந.பி.க., ப.94)

என்னும் கவிதையில், சர்வோதய சமுதாயத்தில் பொருட்களைப் பங்கீட்டுமுறை மூலம் தருவது என்பது எவ்வகையில் சாத்தியமாகும் என்ற கருத்து நிலவுகின்றது.

நாட்டின் விடுதலைக்கோ, முன்னேற்றத்திற்கோ காந்தியடிகள் எந்த அரசியல் திட்டம் வகுத்தாலும், அதனுடன் ஏதாவது ஒரு நிர்மாணத்திட்டம் அவசியம் இருக்கும். அந்தவகையில் நாட்டின் முன்னேற்றத்திற்காக காந்தியடிகள் வகுத்த இயக்கம் சமதர்மம் (அ) சர்வோதயம் ஆகும். இந்தியாவிற்கு ஆங்கிலேயர் வருவதற்கு முன்னர் கல்விச் சூழ்நிலை, அறிவு, ஞானம், ஆன்மிகம் ஆகியவற்றை மையமிட்டு இருந்தது. இவையாவும் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு சர்வோதயம் தோன்றியது.

"தாயைக் காட்டிலும் பெருமை வாய்ந்தது நாம் பிறந்த நாடாகும். அதன் மீது காட்டும் அன்புக்கு நாட்டுப்பற்று என்று சொல்கிறோம்"[53]

என்கிறார் சபரிராஜன். இந்த நாட்டுப்பற்று மக்களின் மனதில் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த வேண்டும். சமதர்மத்தை நிலை நாட்ட வேண்டும் என்பது காந்தியடிகளின் பேரவா ஆகும். சமதர்மம் என்பது நாட்டில் இருந்தால் மக்களின்

---

53. சபரிராஜன், சத்திய வேட்கை, ப.32..

நலன் பேணப்படும். ஆனால், அதை நடைமுறையில் பின்பற்றுவது சற்று சிக்கலான செயலாகும் என்பதைத் "திரும்பி வந்த தேர்வலம்" என்ற கவிதைத்தொகுப்பில், 'அறிவியல் முழக்கம்' என்ற கவிதையில்,

"தொடமுடியாத தூரம் அல்ல.
நம்
அரசியல் வாதிகள்
அதர நெசவான
சமதர்மம் போல் அது சாத்தியப்படாத
மாயையும் அல்ல..." **(த.க.தொ.1, ப.199)**

என்று சமதர்மம் என்பது அரசியல்வாதிகளால் இடம் தெரியாமல் சென்றுவிட்டது என்பதைத் தமிழன்பன் சுட்டிக்காட்டுகின்றார். "ஊர்சுற்றி வந்த ஓசை" என்ற கவிதைத் தொகுப்பில், 'வெற்றித் தேர் வருகிறது விரைவாக' என்ற கவிதையில்,

"பகிர்ந்து கொள்ளாமல்
பகல்கள்
யார்க்கும்
சமமாய்க் கிடைப்பதுபோல்
வாழ்க்கை
கிடைக்கட்டும்" **(த.க.தொ.1, ப.356)**

என்று சமதர்ம வாழ்க்கை அனைவருக்கும் கிடைக்கட்டும் என வாழ்த்துகின்றார் தமிழன்பன். 'தேசத்தைக் காத்தல் செய்' என்ற கவிதையில்,

"நியாயம்
எப்போது நேத்திரம் திறக்கும்?
அநீதிகள்
எரிகொள்ளிகளைக்
கீழே எறியும்போது,
அசல்கள்
எப்போது ஆராதிக்கப்படும்?
போலிகள் முகத்திரை

கிழிபடும்போது
சமத்துவம்
எப்போது சாத்தியம் ஆகும்?
குபேர மேடுகள்
உடைபடும்போது" (த.க.தொ.1, ப.374)

பொருள் வளம் கொண்டவர்கள் தன்னிடம் உள்ளதைப் பகிர்ந்து தர வேண்டும் என்று எண்ணும்போது சமதர்மம் தழைக்கும் என்கிறார். சமதர்மம் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துதான், எனினும் அதை செயல்படுத்த எண்ணும்போது பலவிதமான இடையூறுகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

தமிழன்பன் சமதர்மத்தை அனைவருக்கும் பொருந்துமாறு கூறியுள்ளார். இன்குலாப் உழைக்கும் மக்களை மட்டும் எடுத்துக் கொண்டு அவர்களின் சமதர்மத்தைப் பற்றி பேசுகின்றார். 'கிரௌஞ்ச வதத்திற்கு, கேள்விகள் இல்லையா?' என்ற கவிதையில்,

"*எங்கள் உழவர்கள் போராடுகின்றார்*
எங்கள் தொழிலாளர் போராடுகின்றார்
எங்கள் பெண்கள் போராடுகின்றார்
எங்கள் மக்கள் போராடுகின்றார்" (ஒ.பு., ப.73)

என்று உழவர்கள், தொழிலாளர், பெண்கள், மக்கள் என ஒட்டுமொத்த உழைக்கும் வர்க்கத்தையும் 'எங்கள்' என்ற சமதர்மச் சொல்லால் ஒன்றிணைக்கின்றார்.

இ. வன்முறை எதிர்ப்பு

வன்முறை என்ற ஆயுதத்தை உபயோகிக்காமல் அனைவரும் மிதவாதக் கருத்தை ஏற்று பின்பற்றல் நாட்டின் முன்னேற்றத்திற்கும் சுயமுன்னேற்றத்திற்கும் வழிகாட்டும் என்பது காந்தியடிகளின் எண்ணம். வன்முறை இல்லாமல் நாட்டை ஆன்மிகப் பாதையில் வழி நடத்தவேண்டும் என்பது இவரின் தீர்க்கமான

எண்ணம். வறுமை ஒரு காலத்தில் வன்முறைக்கு வித்திட்டது. காலப்போக்கில் சாதி, மதம் சார்ந்த நடவடிக்கைகள் வன்முறையைத் தோற்றுவிக்கும் காரணிகளாகின. எனவே வன்முறை இல்லாத சமுதாயம் உருவாகப் பாடுபடவேண்டும் என்கிறார் காந்தியடிகள்.

> *"அகிம்சை என்பது வெறும் தத்துவார்த்தக் கோட்பாடு அல்ல. அது ஒரு விதி; அவரது ஜீவியத்தின் மூச்சு. அது அறிவார்ந்த வஸ்து அல்ல; மனதுடன் அது தொடர்புடையது"*[54]

என்று வன்முறை என்பது வாழ்வின் மூச்சுபோல உள்ள சூழ்நிலை மாறவேண்டும் என்கிறார். அதுபோல சத்தியாக்கிரகம் என்பது வன்முறை இல்லாத சமுதாயத்தை உருவாக்கும் என்ற பொருள்பட,

> *"சத்தியாக்கிரகம் என்பது அகிம்சை வழியில் யுத்தம் நடத்தும் முறையாகும்"*[55].

என்று நிர்மல்குமார் போஸ் காந்தியடிகளின் கூற்றின் வழி உணர்த்துகின்றார். ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் காந்தியடிகள். வன்முறைக்கு எதிராக செயல்பட்ட மிதவாதி, புரட்சியால் எதையும் வெல்ல முடியாது. வன்முறை என்பது நாட்டை பாழ்படுத்தும் என்பதில் ஆழ்ந்த சிந்தனை கொண்டவர்.

அரசியலைப் பயன்படுத்தி வன்முறைச் செயல்களில் பலரும் ஈடுபடுவதை எதிர்த்தார். எனவே, தன்னால் இயன்றவரை வன்முறையை எதிர்த்துப் போராடுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இந்திய விடுதலை இயக்கத்தில் பலரும் தீவிரவாதப் போக்கை முன்னிறுத்தி விடுதலை பெற

---

54. As quoted in Andrews C.F Andrew C.F. Mahatma Mahatma Gandhi's Ideas London Gandhi's Ideas, George Allea of win 1949 pp.142-143.
(Non-violence was not a mere philosophical principle. It was the rule and the breath of his life. It was a matter not of the intellect but of the hearts)

55. Bose Nirmalkumar, Studies in Gandhism Calcutta 1962, p.116. (Sathyagraher as a way of conducting war by means of non-violence)

முடியும் என நம்பினர். ஆனால் காந்தியடிகள் அகிம்சை வழியில் வெற்றி பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். புரட்சியாளர்களின் குரலுக்குச் செவி சாய்க்கவில்லை. வங்காளத்தில் பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தங்களது உயிரையும் பொருட்படுத்தாது வெள்ளையர் அதிகாரிகளைச் சுட்டுக் கொல்வது, அவர்கள் செல்லும் ரயிலைக் கவிழ்ப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு ஆட்சியாளர்களைக் கலங்க வைத்தனர். இது போன்ற வன்முறைகளால் உயிர்களை இழக்கச் செய்வது என்பது நாட்டினைத் தவறான வழிகளில் இட்டுச் செல்வதாக அமையும் என்று எண்ணினார் காந்தியடிகள். இத்தகைய வன்முறைக் கொடுமை இன்று நீங்காத நிகழ்வாக எல்லா நாடுகளிலும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

> *"அஹிம்சை தான் உலகத்தில் எல்லாவற்றிலும் மிகப்பெரிய சக்தி. அது தான் வாழ்க்கையின் முடிவான சட்டம். 'ஒன்றையொன்று இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிற ஆகர்ஷண சக்தியினால் உலகம் எப்படி நிலை பெயராமல் இருக்கிறதோ அதைப் போலவே 'அஹிம்சை' என்ற சக்தியினால் தான் மக்களின் சமூக வாழ்க்கை நிலை குலையாமல் இருந்து வருகின்றது"*[56]

என்கிறார் காந்தியடிகள். அஹிம்சை என்பது வன்முறை இல்லாத சமுதாயம் உருவாக வழிவகுக்கும். வன்முறை இல்லாத மக்களின் அமைதியை மையமிட்ட கருத்துக்களை வலியுறுத்தவேண்டும் என்பதைக் கவிஞர்களும் பின்பற்றத் தொடங்கினர். அந்தவகையில் ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் வன்முறை இல்லாத 'அமைதி'யைக் காணமுடிகிறது. 'அக்னி' என்ற கவிதையில்,

> *"கல்லடித்துத் தீ எடுத்தோம்*
> *குடிசையிலே ஏவி வைத்தோம்*
> *காதல் கொண்ட காற்றுவரக்*

---

56. காந்திஜி ஹர்ஜன், 11.02.39.

கொளுத்தலாமோ குட்டித் தீயும்?
பேணிவந்த பெற்றோர்களைப்
பதைத் தழிக்கும் பாதகனை
அழித்திடலே அறிவு ஆகும்" (ந.பி.க., பக்.41, 42)

என்று அழிப்பது அறிவுடைமை ஆகாது என்பதை எடுத்துக் கூறுகின்றது. சமுதாயத்தின்மேல் அக்கறை கொண்டவர்கள், உயிர்கள்மீது பற்று கொண்டவர்கள், அன்புநெறி தழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் வன்முறையில் ஈடுபடமாட்டார்கள். அமைதி நெறியைப் பின்பற்றுவர் என்பது திண்ணம். அதுபோல 'முரண்' என்ற கவிதையில்,

"அன்பே சிவக் கழகத்தில்
தேனீ போலுழைத்து
நிலைப்பேற்றைப் பெற்றாலும்
ரத்தக் களறிக்கு
முகூர்த்தக்கால் நடுவதிலே
மோகம் என்ன?" (ந.பி.க., ப.175)

என்று அன்பை வலியுறுத்தி அதற்கான உழைப்பையும் செய்துவிட்டு வன்முறைக்கு வித்திடும் கொலைபாதகச் செயல்களைச் செய்வது தவறு என்பதை உணர்த்துவதாய் பிச்சமூர்த்தியின் கவிதை அமைந்துள்ளது.

'புரட்சி' என்ற சொல்லை அமைதி வழியில் பின்பற்றலாம். ஆனால், ஆயுதம் தாங்கியதாக மாற்றி மக்களைச் சிதைக்கும் வன்முறை இன்று புரட்சியாக மாறிவிட்டது என்பதைத் தமிழன்பனின் "திரும்பி வந்த தேர்வலம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' என்ற கவிதையில் கூறுகின்றார்.

"ஏன்?
என்று கேட்கும்போது

எதிர்ப்பு என்பர்!
இது சரியில்லை —
எனும் போது
கிளர்ச்சி என்பர்!
போர்க்கொடி
ஒருவர்
தூக்கும்போது கலாட்டா
என்பர்.
சேர்ந்த பலரின்
சினம்
கனக்கும் போது
கலவரம்
என்பர்" **(த.க.தொ.1, ப.239)**

இவ்வாறாக வன்முறைக்கு வித்திடும் செயல்களுக்குப் பலவகைச் சொற்கள் காணப்படுவதைக் கவிஞர் கூறியுள்ளார். "அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'புதிய சுருதியில் ஒரு பூபாளம்' என்ற கவிதையில், வன்முறையில் மக்களினம் அழிவுற்றதெல்லாம் போதும், இனிமேல் மனித சமுதாயம் விழித்தெழட்டும் என்கிறார். இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது ஹிரோசிமா, நாகசாகி அழிவுச்சின்னங்களாகிப் போனதை யாராலும் மறக்க முடியாது. இதனை,

"நாகசாகி ஹிரோசிமா
அழிவுச் சின்னங்கள்
அல்ல . . . .
அணுகுண்டு
நமது நெஞ்சில் திறந்த
இரண்டு கண்கள்
துப்பாக்கிகளின்
இரும்பு உதடுகள்
உச்சரித்ததெல்லாம் போதும்" **(த.க.தொ.3, ப.286)**

என்று தன் உள்ளக் குமுறல்களைக் கவிஞர் வெளிப்படுத்துகின்றார். நாட்கள் நகர்ந்தாலும் மனதை விட்டு நீங்காத பெரிய சோகத்தில் மக்களை ஆழ்த்திய அணுகுண்டுப் போர் முடிவுற்றபோது அழிவுற்ற ஜப்பானிய வல்லமை நகரங்கள் இன்று மீண்டும் புத்தொளி பெற்றுள்ளது மறுக்கமுடியாது.

> *“நாட்டின் சிப்பாய் குடிகளின் நண்பனாயிருந்து, மக்களுக்கு ஆபத்து வரும்போது அதைத் தடுக்கும் பொருட்டு தன் உயிரையும் அளிப்பானானால், அவன் க்ஷத்திரியனாவான். ஆனால் குடிகளை அச்சுறுத்தி உடல் வலிமையாலோ, ஆயுதபலத்தாலோ துன்புறுத்துவோன் கொள்கைக்காரனே. அவனை ஆதரிக்கும் இராச்சியம் கொள்ளைக்கார இராச்சியமே”*[57]

என்று காந்தியடிகளின் கருத்தை மஷ்ரூவாலா கூறுகின்றார். அகிம்சை தருமத்தைக் கைக்கொண்டு மக்களுக்குப் பாதுகாப்பு தரும் கருவியாக அதைப் பின்பற்ற வேண்டும். பீரங்கி, துப்பாக்கி, போர்க்கப்பல் முதலியவை தேவையில்லை என்பது காந்தியடிகளின் கொள்கையாகும்.

‘தீண்டாமை பெருங்குற்றம்’ என்று பேசப்படும் இந்திய நாட்டில் தீண்டாமையால் ஏற்பட்ட கொடுமையை இன்குலாப் கவிதையாக்கியுள்ளார். குளப்பாடி கிராமத்தில் மிராசுதார் வீட்டுத்தோட்டத்தில் குளிக்கப்போன தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த குழந்தைகளைத் தண்ணீரில் மின்சாரம் பாய்ச்சிக் கொன்றனர். இந்த வன்முறை தீண்டாமையால் ஏற்பட்ட மிகப்பெரிய பாதகச் செயலாகும். இந்த செய்தியை ‘அந்த பம்புசெட்டை ரிப்பேர் செய்து விட்டார்களாம்’ என்ற தலைப்பில், இன்குலாப் கவிதை இயற்றியுள்ளார்.

---

57. மஷ்ருவாலா, காந்தீய நவநீதம், ப.77.

"தண்ணீரில் விரித்த மின்சார வலையில்
சிறகுகள் பொசுங்கிய சேரிச் சிட்டுகள்
குளிர்ந்த தண்ணீரில்
நெருப்பின் கொடுமையை
எதிர்பாராத அந்த
இளஞ்சிட்டுகள் நான்கும்
ஆத்தாவை அழைத்த வண்ணம்
கருகிவிட்டன" **(ஒ.பு., ப.115)**

என்று தீண்டாமை எண்ணத்தால் பச்சிளம் குழந்தைகளைக் கொன்ற சாதிய வன்முறையை எதிர்க்கின்றார் இன்குலாப்.

'மானுடத்தின் காயங்கள்' என்ற கவிதையில் இன்குலாப், அமைதி முழக்கங்களுக்காகத் தலைவர் வருவதை வரவேற்கவும் பீரங்கிகள் முழங்கப்படுகின்றன என்பதைப் பின்வரும் கவிதையில் பதிவு செய்கிறார்.

"துப்பாக்கிக் கைகளுடன்
காக்கிகள் விறைக்க
உருவிய வாளுடன்
வன்முறை நடக்க
நிழலாய் தலைவர்" **(ஒ.பு., ப.131)**

அமைதியை அடையாளப்படுத்த பீரங்கிகள் முழக்கப்படுவதை வன்முறையாகத் தோன்றவில்லையா? என்கிறார்.

"ஆயுத முழக்கத்தில்
கொடிகள் உயர்கையில்
நிர்வாணப்படுவது
அவ்வத் தேசமே என்று
பிறகு
எந்த நோக்கத்தில்
பீரங்கிப் புகைச்சல்?

எதைச் சாதிக்கப்

படை அணிவகுப்பு?" (ஓ.பு., ப.132)

என்று புரட்சி சிந்தனைகளை அரசே வகுத்து வன்முறை அணிவகுப்பைத் தலைவர்களே ஏற்றால் நாட்டின் நிலை என்னவாகும்? என்பது கவிஞரின் கேள்வியாகும். இதுபோன்ற வன்முறையைப் பின்பற்றினால் நாட்டின் அமைதி சீரழியும் என்ற காந்தியக் கருத்து கவிஞர்களின் கவிதைகளில் காணமுடிகின்றது.

ஈ. வாக்குரிமை

பல்வேறு கட்சிகள் தேர்தலில் போட்டியிடும்போது தன் தொகுதியில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகப் பல வாக்குறுதிகளைக் கூறி வாக்குக் கேட்பது வழக்கமாகிவிட்டது. காந்தியடிகளின் கொள்கைப்படி வாக்குக் கேட்பவர்கள் உண்மைக்குப் புறம்பான வழியில் வாக்குகளைச் சேகரிக்கக் கூடாது. மக்களுக்கு நன்மைகளைச் செய்வதில் பொய்மைக்கு இடம் தரக்கூடாது. மக்களை ஏமாற்றி வாக்குரிமையை தட்டிப்பறித்தல் முற்றிலும் தவறான எண்ணமாகும். அதே நேரத்தில் வாக்கு அளிப்பது தங்களின் தனிப்பட்ட விருப்பம் என்பதை வாக்களிப்போர் உணர்தல் வேண்டும்.

முடியாட்சியிலும் குடவோலைமுறை மூலம் கிராம நிர்வாக உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் முறை காணப்பட்டது. சுதந்திரம் பெற்ற பின்னர் மன்னர்களைத் தேர்வு செய்யும் உரிமையை மக்களிடம் கொடுக்கப்பட்டு மக்களாட்சி என்ற முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

> *"இந்தியா ஒரு வெகு புராதனமான நாடு. அதன் சரித்திரத்தில் காணப்படுகின்ற பழைய அரசியல் முறைகளைக் கவனித்தால், கிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஏறத்தாழ இப்போது நாம் எண்ணக் கூடிய எல்லாவிதமான*

அரசாட்சி முறைகளையும் இந்தியா அனுபவித்திருக்கிற அறிகுறிகள் தெரிகின்றன"[58]

என்பார் காந்தியடிகள். சுதந்திரப் போராட்ட காலத்தில் தியாகிகள் பலர் சுதந்திரம் பெறவேண்டும் என்பதில் முழு முனைப்போடு ஈடுபட்டனர். அவர்களின் நோக்கம் எல்லாம் சுதந்திரம் பெறவேண்டும் என்பது மட்டும்தான். எனவே, வாக்குரிமை பற்றி சிந்திக்கவில்லை. உண்மையானவர்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என்பது பற்றி சுதந்திரம் பெற்ற பின்பு சிந்தித்து வாக்களித்தனர். எனவே, ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் 'வாக்குரிமை' பற்றிய கருத்தமைந்த கவிதை இடம்பெறவில்லை. இவருடைய காலம் சுதந்திரப் போராட்டக் காலமாக இருந்ததால், இவரின் கவிதைகளில் வாக்குரிமை பற்றிய கருத்தாக்கம் இடம்பெறவில்லை.

உ. சத்தியாக்கிரகச் சிந்தனைகள்

இயற்கைத் தொடர்புடைய வாழ்வில் அறியாமை காரணமாகச் சில தவறுகள் நடப்பது என்பது மாற்ற இயலாது. இயற்கை வாழ்வை ஈந்த ஆண்டவன் அதற்கு இடர் நேரும்போது, அதைக் காப்பதற்கும் ஓர் இயற்கை அறநெறியை நமக்குக் காட்டியுள்ளார். அதுவே சத்தியாக்கிரகமாகும்.

"*சத் என்பது என்றும் அழியாமல் ஒரு பெற்றித்தாயிருப்பது. அதை 'உண்மை' என்று தமிழர் உரைப்பர். அதற்கு என்றும் இருத்தல் என்பது பொருள். சத்தெனுஞ் செம்பொருள் யாண்டும் நீக்கமற நிலவுவது அதை மறந்து வாழும் மனிதனது அறியாமை என்னே!*"[59]

என்று திரு.வி.க சத்தியத்தின் தன்மையை எடுத்துரைக்கிறார்.

---

58. நாமக்கல் கவிஞர், காந்தீய அரசியல், ப.11.
59. திரு.வி.க., மனித தெய்வம் காந்தியடிகள், ப.343.

"சத்தியாக்கிரகம் என்ற சொல்லுக்கு 'சத்தியத்தை உறுதியாகக் கடைபிடிப்பது' என்பது பொருளாகும். ஆகையால் அது சத்தியத்தின் சக்தி. சத்தியம் என்பது உயிர் அல்லது ஆன்மா. ஆகையால் அது ஆத்மசக்தி என்றும் கூறப்படும்"[60]

என்று நாமக்கல் கவிஞரும்,

"சத்தியம் என்பதில் அன்பும், அஹிம்சையும் அடங்கியுள்ளன என்பது காந்தியடிகளின் நம்பிக்கை. எனவே காந்திமகான் உலகத்துக்குக் கண்டுபிடித்துக் கொடுத்த புதிய போர்முறைக்குச் சத்தியாகிரஹம் என்னும் பெயரே நிலை பெற்று விளங்குகின்றது"[61]

என்று கல்கியும் காந்தியடிகளின் சத்தியம் பற்றிய கோட்பாட்டை விளக்குகின்றார். ந.பிச்சமூர்த்தியின் 'இருளும் ஒளியும்' என்ற கவிதையில் சத்தியத்திற்காகப் போரிடும் இருள் ஒளியின் போராட்டத்தை எடுத்துக்காட்டுகின்றார்.

"வான்கருவில் இருள் மலைகள்
வரிசையாய் விம்பி நிற்க
இருள்மலையின் மைக்குகையில்,
ஒளிமாடு ஓலமிட,
கதிர்க் கன்றின் சோக ஒலி
கடுஞ்சிறையில் கம்ம...." **(ந.பி.க., ப.21)**

என்று இருளும் ஒளியும் உண்மையை அறிய போராட்டம் நடத்துகின்றது என்கிறார்.

"அழிந்த மலர் அலர்வதுண்டோ?
விழுந்த பழம் எழுவதுண்டோ?

---

60. **நாமக்கல் கவிஞர் பாடல்களில் அஹிம்சைக் கோட்பாடுகள், ஆய்வேடு, பக்.11-12.**

61. **கல்கி, மாந்தருக்குள் ஒரு தெய்வம், ப.286.**

போன ரத்தம் புகுவதுண்டோ?
செத்த பிணம் பிழைப்பதுண்டோ?" (ந.பி.க., ப.23)

என்று இழந்தபொருள் எதுவும் மீண்டும் உயிர்ப்பதில்லை. ஆனால் உண்மை என்பது என்றும் அழிவதில்லை. அதற்கான போராட்டங்கள் வெற்றி அடைவது என்பது நிலையானது என்ற காந்தியக் கோட்பாடான சத்தியாக்கிரகத்தைக் கவிதை எடுத்துரைக்கின்றது.

"தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர்கள் கைக்கொண்ட சாத்வீகமான எதிர்ப்பு என்ற நிலையை விளக்குவதற்காக 'சத்தியாக்கிரகம்' என்ற வார்த்தையை காந்தியடிகளே உருவாக்கினார்"[62]

என்று அப்பாதுரை காந்தியடிகளின் சத்தியாகிரகம் உருவான விதத்தை எடுத்துரைக்கின்றார். பொய் பேசுவதை முற்றிலும் தவிர்க்க தோன்றிய சத்தியம் அல்லது உண்மை என்ற அறநெறியைத் தன் வாழ்நாள் முழுவதும் வைராக்கியமாகக் கொண்ட அரிச்சந்திரனின் புராண நாடகத்தைப் பின்பற்றி தன் வாழ்க்கை முழுவதும் அதைப் பின்பற்றிய அறநெறியாளர் காந்தியடிகள்.

இன்று பிள்ளைகளை நல்லமுறையில் வளர்க்க வேண்டும் என்பதற்காகப் பெற்றோர்கள் பல பொய்களைக்கூறி பிள்ளைகளை வளர்க்கின்றனர். பெண்களுடன் பேசினால் காதறுந்து போகும். தவறுகள் செய்தால் சாமி கண்களைக் குத்தும் என்பவை போன்ற பொய்கள் தொடர்கதைகளாய் நீளுகின்றன. ஆனால், இந்த வகையான பொய்களைக்கூட சொல்லக்கூடாது என்று சத்தியாகிரகம் வலியுறுத்துகின்றது.

---

62. Appadurai Document on political thought in modera India vol-1 D.no 1973, Document 124, p.290. (The term sathyagraha was coined by Gandhi in south Africa to express the force that the Indians there used and it was coined in order to distinguish and south Africa under the name of possive resistance)

" 'சத்தியாக்கிரகம்' என்ற வார்த்தை 'காந்தி' என்ற பெயருக்கு இணைச்சொல்லாகிவிட்டது. அவரது மகோன்னதமான கண்டுபிடிப்பு அல்லது உருவாக்கம் சத்தியாக்கிரகம் என்ற வார்த்தையாகும்"[63]

என்று சத்தியாகிரகத்திற்கான விளக்கம் கூறப்பட்டுள்ளது.

"தமிழன்பனின் ஊர் சுற்றி வந்த ஓசை" என்ற கவிதைத் தொகுப்பில் 'இருளில் இருந்து ஒளியைத் தேடி' என்ற கவிதையில் உண்மை பேசுவதைப் பற்றி,

"கற்பூரமாகச்
சில மனிதர்களை....
பொய் தன்
கையில் வைத்துச் சத்தியம் செய்ததால்
பொக்கென்று போனவர்கள்" **(த.க.தொ., ப.441)**

என்று பொய் கூறினால், இல்லாமல் போய் விடுவார்கள் என அச்சத்தை மக்களிடம் ஏற்படுத்தி பொய்பேசாமல் தவிர்க்க வேண்டியது கட்டாயம் என்பதைத் தமிழன்பனின் வரிகள் உணர்த்துகின்றன.

"வார்த்தைகள் கேட்ட வரம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'ஊருக்கு நல்லது சொல்வேன்' என்ற கவிதையில்,

"தட்டுத் தடுமாறித்
திணறித் தவிக்காமல்
பேசுதல் நல்லது
அதை விட
உண்மையைக் கொஞ்சம்

---

63. Seean Vincent lead kinding light Newyork Random House 1949, p.244. (Sathyagraha has practically become synonymous with Gandhi. `His supreme invention or creation was Sathyagraha)

அதில் தொட்டுக் கொண்டு வந்து
பேசுதல் நல்லது" **(த.க.தொ.1, ப.577)**

என்று காந்தியத்தின் சாரமாய்த் திகழும் சத்தியத்தின் மேன்மையை மனிதன் கடைபிடித்தல் அவசியம் என்பதை உரைக்கின்றார். அறநெறி தவறாத வாழ்க்கை நடத்தப்பட வேண்டுமானால் சத்தியத்தைப் பின்பற்றல் வேண்டும் என்பதைத் "தமிழோவியம்" என்ற கவிதைத் தொகுப்பில் 'வா! வா! வா!' என்ற கவிதையில்,

"எதிலும் ஒழுக்கம்
பேணுவாய் வா! வா! வா!
ஏற்றுக் கடமை
ஆற்றுவாய் வா! வா! வா!
சிதறிடாத
நேர்மையாய் வா! வா! வா!
சிந்திடாத
அறத்தினாய் வா! வா! வா!" **(த.க.தொ.2, ப.681)**

என்று நாடு சிறப்புற இயங்கவும், புகழுடையவனாக மனிதன் வாழவும் ஏற்ற அறநெறியைப் பின்பற்றல் வேண்டும் என்பதைத் தமிழன்பனின் கவிதை உணர்த்துகின்றது.

சத்தியத்தைக் கடைபிடித்தல் என்பது எளிய செயல் அல்ல. அதனால் ஏற்படும் இழப்புகளை எதிர்கொள்ளும் உறுதி கொண்ட நெஞ்சம் இருந்தால் மட்டும் சாத்தியமாகும் என்பதை மேற்கூறிய கவிதைத் தொகுப்பில், 'பூப்போலத் தெம்மாங்கு' என்ற கவிதையில்,

"நம்பிக்கைக் கிடமாவோம்!
நாணயத்தை விடமாட்டோம்!
வம்பு வழக்கென்று தினம்
வாழ்வை நடத்தோம்!

வாழும் முறை தெரிஞ்சதனால்

ஊழல் தடுப்போம்" (த.க.தொ.2, ப.658)

என்று அநீதியை எதிர்க்கும் ஆற்றல்மிக்க சக்தியாக விளங்கும் சத்தியாகிரகம் பற்றிய தமது கருத்தைத் தமிழன்பன் பதிவு செய்துள்ளார்.

சத்தியாகிரகம் என்பது இப்பொழுது தோன்றியதல்ல. பழங்காலம் முதலே உலகின் பல இடங்களில் தனிமனிதப் பண்பாக இருந்து வந்துள்ளதை,

> *"கடலைக் கடக்க உதவும் ஓடம் போன்றது சத்தியம். இது வீடு பேறடைய வழிகாட்டும் என்பது விதுரர் கூறும் அறமாகும். இச்சத்தியத்தை உறுதியாகக் கைக்கொள்வதே சத்தியாக்கிரகம் ஆகும். அது கொடுமையைக் கண்டு பயந்து ஒதுங்கி விடுவதன்று. கொடுமைக்கு எதிராக முழு ஆன்மபலத்தையும் நிறுத்துவதாகும்"*[64]

என்று மா.பா.குருசாமி விளக்கமளிக்கிறார். எதிரியை வீழ்த்துவது சத்தியாகிரகம் அல்ல. பகைவனின் மனதை மாற்றுவதே உண்மையான சத்தியாகிரகமாகும். அது நேர்மையைப் பின்பற்றி செயலாற்றப்படுதல் வேண்டும். காந்தியடிகளின் சத்தியாகிரகம் என்பது நல்வழியைப் போதிக்கும் செயல்களில் அல்லது கருத்துக்களில் உறுதியாக இருப்பதாகும். அந்தவகையில் பொய்யுரை இல்லாமல் மெய்ம்மை மட்டும் கடைபிடிக்கப்படுமேயானால் 'சத்தியம்' வெற்றி பெறும் என்பதைப் 'பறந்து போ பறந்து கொண்டே உரையாடு பறவையோடு' என்ற கவிதையில்,

"விண்ணோடு
கிழக்கில் நீயும் சேர்ந்து
வெளுத்துவிட்டால்
பொழுதுகள் புரிவது எளிது.

---

64. மா.பா. குருசாமி, காந்தியச் சிந்தனைகள், ப.151.

எனினும் பொய்மையைப்
புரிந்த கொள்ள
மெய்யாக இரு!
மரணத்தைப்
புரிந்து கொள்ள
வாழ்க்கையாக இரு" (த.க.தொ.3, ப.564)

என்கிறார். இவ்வரிகளில் 'பொய்'த்தன்மை உடையவர்களை அறிய வேண்டுமென்றால் உண்மைத்தன்மை உடையவர்களாய் வாழ்தல் வேண்டும். அப்பொழுது மட்டுமே நம்மால் பொய்மையை உணரமுடியும் என்ற கருத்தைச் செம்மைப்படுத்தியுள்ளார்.

"சத்தியம், அஹிம்சை, அன்பு இம்மூன்றும் முடிவில் ஒன்றாகக் கலந்திடும் தத்துவங்கள். அந்த உச்ச நிலையை வெகு சிலரே அடையக்கூடும்"[65]

என்கிறார் க.சந்தானம். நேர்மையைக் கடைபிடித்து வாழ்பவர்கள் சத்தியாகிரகிகள் என்பது திண்ணம். நெல்சன் மண்டேலா, காந்தியடிகள் போன்றவர்கள் சத்தியாகிரகத்திற்காகப் போராடிய அகிம்சாவாதிகள். நெல்சன் மண்டேலாவுக்கு ஒரு தலித் அனுப்பும் செய்தி என்ற குறிப்புடன் 'அந்நியமில்லை நீயும் நானும்' என்ற தலைப்பில் இன்குலாப் எழுதிய கவிதையில்,

"எரிந்த எங்கள் குடிசைகளுக்குள்
சுண்டிப் போன குருதியின் மீதும்
கரிந்து போன எம்
மழலையர் முகங்களில்
நிலை குத்தி நின்ற
கருமணிகளிலும்
உனது வரலாறும்
எழுதப்பட்டுள்ளது" (ஒ.பு., ப.307)

---

65. க.சந்தானம், காந்திய நெறி, பக்.18-19.

என்ற வரிகளில் இவர் சத்தியவழியில் மக்களுக்காகப் பாடுபட்டவர் என்பதை இன்குலாப் உணர்த்துகின்றார்.

ஊ. அகிம்சைச் சிந்தனைகள்

மனிதனிடம் காணப்படும் மகத்தான ஆயுதம் அகிம்சை. படைவீரர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் அனைத்தையும்விட பலம் கொண்ட ஆயுதம் அகிம்சையாகும். மானிட தர்மத்திற்குக் கொலை என்பது முற்றிலும் மாறுபட்டது. மனிதன் முன்னேற தன் இனத்தையே அழிப்பது சரியல்ல. ஒவ்வொரு கொலையும் வதையும் எக்காரணங்களால், எச்சூழ்நிலையால் நடந்ததாயினும் அது உலகத்துக்கே செய்த ஒரு துன்பமாகும்.

> *"அகிம்சை என்றால் தீமைக்கு எதிராகப் போராடாமல் இருப்பது என்று பொருள் இல்லை. நேர்மாறாகத் தீமையை அதிகமாக்கக் கூடிய பழிக்குப் பழி வாங்கும் முறையை விட தீமைக்கு எதிரான அதிக வலிமையுள்ள உண்மையான போராட்டம்தான் அகிம்சை"*[66]

என்று என்.ஏ.வேலாயுதம் விளக்குகின்றார்.

> *"அஹிம்சைதான் உலகத்தில் எல்லாவற்றிலும் மிகப்பெரிய சக்தி. அதுதான் வாழ்க்கையின் முடிவான சட்டம். ஒன்றையொன்று இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிற ஆகர்ஷண சக்தியினால் உலகம் எப்படி நிலை பெயராமல் இருக்கிறதோ அதைப் போலவே 'அஹிம்சை' என்ற சக்தியினால்தான் மக்களின் சமூகவாழ்க்கை நிலை குலையாமல் இருந்து வருகின்றது"*[67]

என்று காந்தியடிகள் கூறுகின்றார். அகிம்சையைப் பின்பற்றினால் பிற உயிர்களைக் காக்கும் எண்ணத்துடன் வாழும் மனிதர்களின் எண்ணிக்கை மிகுதியாகும்.

---

66. என்.ஏ.வேலாயுதம், காந்தியப் பாதைக் காண்போம், ப.34.
67. காந்திஜி, ஹரிஜன், 11.02.39.

இவ்வுலகத்தின் ஒட்டுமொத்த பிரச்சினைகளுக்கானத் தீர்வு அன்பு என்ற வார்த்தையில் அடங்கிவிடும். எனவே, எப்படிப்பட்ட தீய எண்ணம் கொண்டவர்களையும் அகிம்சையால் வென்றுவிடலாம். ந.பிச்சமூர்த்தி எழுதிய 'பூக்காரி' என்ற கவிதையில், தெருவில் மல்லிகை, மரிக்கொழுந்து, சாதி மல்லிகை ஆகிய மலர்களை விற்க பாடுபடுகின்றாள். ஆனால் அதை வாங்குவதற்கு யாருமில்லை என்பதை,

"மல்லிகை ரத்தினம்
மருக்கொழுந்து பச்சை,
ஏறி மணக்கும் கூந்தலோர் வாரீர்,
மல்லிகை வேணுமா?
ஜாதி மல்லிகை
என்றழுதாள் பூக்காரி" (ந.பி.க., ப.114)

என்றும் பூக்களை விற்க அவள் சிரமப்படுவதாகவும் கவிஞர் கூறுகின்றார். அதே மலர்கள் எப்படிப்பட்டவை என்பதை,

"அன்புச் சரக்கு
அழியாத சரக்கு
தின்றாலும் எக்காலும்
தித்திக்கும் சரக்கு
வேண்டுவோர் வாரீர்
வாங்குவோர் கூடீர்" (ந.பி.க., ப.113)

என்று அன்பை முன்வைத்து இவ்வுலகில் என்றைக்கும் அழிவற்றது அன்பு ஒன்றேயாகும் என்கிறார். அப்படிப்பட்ட அன்பினால் எவ்வகையான துன்பங்கள் வந்தாலும் அவை நீங்கும் என்பது திண்ணமாகும். மேலும் பூக்காரி பேசுவதாக,

"அன்பும் அஹிம்சையும்
விற்று வந்தேன் ஆதிமுதல்,
பூக்காரி பூவைப் போல்
கண்டெடுப்பார் யாருமில்லை" (ந.பி.க., ப.115)

என்று அன்பை மையப்படுத்தி கூறுகின்றார். அன்பை அடிப்படையான கருவியாகக் கொண்டதே அகிம்சை என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். செம்மையும், சீர்மையும் கூடிய நல்லியல்புகள் மக்களிடம் ஊற்றெடுக்க அன்பு என்பது அமைதியின் ஆயுதமாகக் கருதப்படவேண்டும் என்பதே காந்தியடிகளின் எண்ணமாகும்.

> *"எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும், அகிம்சையைப் பேணுதல், பேச்சில் இனிமை, எந்த நிலையிலும் கோபத்தை அடக்குதல் பகைமையை உருவாக்கும் வீண்பேச்சுக்களை விட்டொழித்தல், ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்தல், புலனடக்கம், அலை பாயாத மனம், மன்னித்தல், மனத்திண்ணம், உடல்தூய்மை, பொறாமையின்மை, கர்வமின்மை ஆகிய இலட்சியங்கள் ஒருவன் இயற்கையாக பெற்ற நன்கொடைகள் என்று பகவத் கீதை கூறுகின்றது"*[68]

என்ற பகவத்கீதை கூறும் அகிம்சை சாரத்தை உட்கொண்டு அப்துல்ரசாக் குறிப்பிட்டுள்ளார். அகிம்சை என்பது தீமையை வெறுத்து, தீயவரை வெறுக்காத மாண்பினைக் கொண்டது. உடலாலும், மனதாலும் பிற உயிர்களை இம்சிக்காததே உண்மையான அகிம்சையாகும்.

'அக்னி' என்ற கவிதையில் நல்ல எண்ணம் தேடினால் நன்மை கிடைக்கும், தீயவை தேடினால் தீமையே மிஞ்சும் என்ற பொருள்பட அஹிம்சையைக் கவிஞர் ந.பிச்சமூர்த்தி சுட்டிச் செல்கின்றார்.

> *"தீயை அணைத்திட*
> *தெய்வத்தால் ஆகாது*
> *அக்னி அழித்திட*
> *அரணாலும் ஆகாது*

68. அப்துல், சொல் அகிம்சை, ப.4.

அக்னிக்குப் பெற்றோர்
அரணிக்கும் அப்பால்,
பூட்டைத் திறந்திட்ட
விரல்களுக்கப்பால்
நன்மையை நாடினால்
தீமையும் உண்டு.
பசியற்ற கனலைக்
கனவிலும் காணீர்" (ந.பி.க., ப.39)

என்று 'நெருப்பு' இவ்வுலகையே அழிக்கும் தன்மை பெற்றது. ஆக்கலும் அழித்தலும் வல்ல தன்மை கொண்ட 'அக்னி' அகிம்சை என்ற கோட்பாட்டிற்குள் இடம்பெறாது. இவ்வாறாக அகிம்சைக் கோட்பாடு காந்தியநெறியில் ந.பிச்சமூர்த்தி கவிதைகளில் காணப்படுகின்றன.

ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் மார்க்சியம் அதிகமாக இழையோடினாலும், காந்தியத் தாக்கமும் இடையிடையே ஊடாடி வருகின்றன. அந்தவகையில் அகிம்சை பற்றிய கருத்துக்களும் இருப்பதைக் காணமுடிகின்றது.

"அஹிம்சை என்பது கொல்லாமை மட்டுமன்று. மனத்தில் கூட மற்றவர்க்குத் தீமை எண்ணாத நிலையே அஹிம்சை. வள்ளுவர் வாக்கின்படி 'அறவினை யாது எனில் கொல்லாமை, கேடில் பிறவினை எல்லாம் தரும்' கொல்வது அனைத்துப் பாவங்களுக்கும் இட்டுச் செல்லும். கத்தியின்றி, இரத்தமன்றி ஒரு பெரும் யுத்தத்தை நிகழ்த்தி அதில் வெற்றியும் பெற்றச் சூரியனே அஸ்தமிக்காத நாடு எனக் கூறப்பட்ட இங்கிலாந்தின் ஆட்சியிலிருந்து இந்தியாவுக்கு விடுதலைப் பெற்றுத் தந்து அகிம்சையின் புகழை உலகுக்கு உணர்த்தினார் காந்தியடிகள்"[69]

---

69. டாக்டர் பங்கஜம், காந்தியும் சமயமும், ப.31.

என்று பங்கஜம், காந்தியடிகள் பின்பற்றிய அகிம்சை பற்றிய ஆளுமைத் தன்மை மிக்க விளக்கங்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

தமிழன்பனின் "ஊர்சுற்றி வந்த ஓசை" என்ற கவிதைத் தொகுப்பில் 'தண்ணீரைத் தட்டினால்' என்ற கவிதையில்,

"உப்பிய உடலின்
எல்லா இடத்திலும்
தெரிவது
தேசப்பற்று!
அவர்களின்
அந்திம மூச்சை அசைபோட்டபடி
கரை மீது இன்னும்
காந்தியம்
அமர்ந்திருக்கிறது!
கடை வாயில்
அகிம்சை வழிகிறது" **(த.க.தொ.1, ப.405)**

என்று அகிம்சை பற்றிய கருத்தைக் கூறியுள்ளார்.

"தோணி வருகிறது" என்ற கவிதைத் தொகுப்பில், 'சாராயக் கடையும் சன்மார்க்க சங்கமும்' என்ற கவிதையில், தமிழன்பன், தீமைகளைச் செய்பவர்களே சமூக நன்மைக்காகப் பாடுபடும் சங்கத்தலைவர்களாக இருக்கின்றனர். 'கற்பை விற்ற காசினிலே காசி யாத்திரை போய்வந்தாள்' என்கின்ற கவிஞர் பகவத்கீதை ஏட்டுள் வெடி மருந்து வைப்பவர்களே அரே கிருஷ்ண வாயின் அலங்காரம்' என்று பாடுகின்றார்.

"இராஜகாட்டின் இமையோரம்
இளகிய அமைதியில் தியானங்கள் – ஒரு

இராஜாளிப் பாய்ச்சல் ஏழைகள் மேல் – நர
ரத்த தாகம் எப்போதும்
அகிம்சா என்னும் பத்திரிகைக்கு அவரே
ஆசிரியர் – நடத்தும் நிர்வாகி" **(த.க.தொ.1, ப.225)**

இவ்வாறாக பொறுப்புணர்வோடு செயல்புரிய வேண்டியவர்கள் நேர்வழியில் இயங்காமல் தீமைகளை வழி நடத்துபவர்களாக தங்களின் பொறுப்புகளை உணராமல் இருக்கின்றனர் என்கிறார்.

அன்பு என்பது விலைமதிப்பில்லாத பொருளாகும். அகிம்சையின் ஆயுதமாக அன்பு விளங்குகின்றது. அத்தகைய அன்பை ஒருவரின் கண்கள் காட்டிக் கொடுக்கும் என்பதைத் "தமிழோவியம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'அழகு' என்ற கவிதையில்,

"உண்மை பேசும் உதட்டில்
ஒளியைச் சிந்தும் அழகு!
கண்கள் பொழியும் அன்பில் – தமிழ்க்
கவிதை வழியும் அழகு" **(த.க.தொ.2, ப.617)**

என்று காந்தியத்தின் கருத்தான உண்மை, அன்பு ஆகிய இரண்டும் கூறப்பட்டுள்ளன.

"தீவுகள் கரையேறுகின்றன" என்ற கவிதைத் தொகுப்பில், 'வேள்விக் கண்டம்' என்ற தலைப்பிலான கவிதையில் உதரவெறி கொண்ட ஓநாய்களை- இந்த அக்கினியில் ஆகுதியாக்கினால் தவம் பலிக்கும் என்று வன்முறையை எதிர்த்து அகிம்சையைக் கவிதையின் இறுதிவரிகள் வலியுறுத்துகின்றன.

"ஆட்டுப்பால் வார்த்த
அக்கினிக் குண்டத்தில்
அகிம்சை புகைகிறது" **(த.க.தொ.3, ப.113)**

என்று அகிம்சை யாராலும் பின்பற்றப்படாமல்போன அவலநிலையைக் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார்.

பொய்மை மட்டுமே பேசும் உலகில் அகிம்சையால் போராடினால் வெற்றி பெற இயலாத சூழ்நிலை நிலவிவருகின்றது. இதனை, நாட்டின் சுதந்திரம் பெற மட்டும் அகிம்சையைப் பயன்படுத்திவிட்டு பின்னர் மறந்துவிடுதல் சாத்தியமாகாது. ஆனால் எதனால் சுதந்திரம் பெற்றோம் என்பதை இந்தியா மறந்துவிட்டது என்பதைக் கவிஞர் "நடைமறந்த நதியும் திசைமாறிய ஓடையும்" என்ற கவிதைத் தொகுப்பில், 'நீ எங்கே இருக்கிறாய்' என்ற கவிதையில்,

"வெளியே
இலஞ்சத்தைத் தேடி
கைது செய்யப்
பிடி ஆணை உத்தரவுகள்!
பொய்ம்மை
அறிக்கைகளுக்குப்
பொம்மைகளின் கையெழுத்து!
சுதந்திர தேவி
வெள்ளையனே வெளியேறு!
என்றோம்.
வெளியேறி விட்டான்.
கொள்ளையனே வெளியேறு
யாரைப் பார்த்து
யார் சொல்வது" (த.க.தொ.1, பக்.252, 253)

என்று நாட்டில் நடக்கும் அநீதிகளை எடுத்துக்கூறி அகிம்சையாக சுதந்திரம் பெற்றோம் என்பதையும் மறந்து மக்கள் அநீதிகளைச் செய்துவருகின்றனர் என்கின்றார். ந.பிச்சமூர்த்தி, தமிழன்பன் ஆகியோரின் கவிதைகளில் அகிம்சை இடம்பெற்றுள்ளது. இன்குலாப் கவிதைகளில் அகிம்சை குறித்த சிந்தனைகள்

இடம்பெறவில்லை. மாறாக காந்திய எதிர்ப்புக் கவிதைகளே அதிகம் காணமுடிகின்றன.

ஏ. *பெண்ணுரிமைச் சிந்தனைகள்*

காந்தியடிகள் பிறக்கும்போது மகாத்மாவாகப் பிறக்கவில்லை. ஆனால் வாழும்போது மகாத்மாவாக வாழ்ந்தார். தன்னுடைய வாழ்க்கையில் எதையும் எதிர்பார்க்காமல் வாழ்ந்த காரணத்தினால் அவரால் எதையும் சாதிக்க முடிந்தது. இவர் தன் வளர்ச்சியில் பெரும்பங்கு தன் தாயைச்சேரும் என்று அடிக்கடி கூறுவார்.

> *"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்*
> *செய்திட வேண்டுமம்மா"*[70]

என்று போற்றப்படும் பெண்கள் மானுடத்தின் உயர் வளர்ச்சிக்கு நிலைக்களனாக விளங்கும் சிறப்பினைப் பெற்றவர்கள். பெண்களைக் காட்டிலும் மென்மையான, மேன்மையான படைப்பு வேறெதுவுமில்லை என்பது காந்தியடிகளின் கருத்தாகும்.

> *"காந்தியடிகள் தனது வாழ்வியற் சோதனைகள் மூலம் சாதனைகளைக் கண்டறிந்தவர். அவரது பெண்ணியக் கோட்பாட்டிற்குத் தரவுகளாக அமைந்தவர்கள் அவரது தாய்-செவிலித்தாய்-மனைவி நட்புறவுடன் பழகிய பெண்மணிகள் விடுதலை வேள்விக்கு முன்வந்து தங்களை ஈடுபடுத்திக் கொண்ட வீரப்பெண்மணிகள், நண்பர்களது மனைவி-ஆசிரமத்து மகளிர் போன்ற பலராவர்"*[71]

இவர் தம் வாழ்நாளில் கண்ட பெண்கள் அனைவரும் அல்லல்படுவதைக் கண்டு மனம் பதைத்துள்ளார். வரலாற்றில் தாய்வழிச் சமூகம் மறைந்து தந்தை வழிச் சமூகம் உருவானபோது ஆணாதிக்கம் தலை தூக்கியது. ஆணாதிக்கத்தின்

---

70. கவிமணி-கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை கவிதைகள்
71. ஆண்டியப்பன், முத்துலக்குமி, கோட்பாடுகளில் காந்தியம், ப.90.

எல்லைப் பரந்துபட்டதோடு எல்லாவற்றிலும் வேரூன்றிக் கால் பரப்பி அழுத்தம் பெற்று வலுவாக விளங்கத் துடித்தது. இடைக்காலத்தில் ஆண்மக்களால் படைக்கப்பட்ட படைப்புகள், குனியக் குனியக்குட்டி வீழ்ந்த வண்ணம் இருந்த காரணத்தால் குனிந்த நிலையிலிருந்து பெண்ணினம் நிமிர்ந்து தலைதூக்கிப் பார்க்க விழைந்தது. இதற்குக் குரல் கொடுத்து உதவிய சமூகச் சிந்தனையாளர்களில் முதன்மையானவர் காந்தியடிகள் என்று சொன்னால் மிகையன்று.

> *"இயற்கை, பெண்களை மேன்மை இளகிய மணம், இரக்கம், தாயன்பு ஆகிய குணங்களுடன் படைத்திருக்கிறது. அவளுக்கும் தெரியாமலேயே இக்குணங்கள் அவளிடம் அமைந்துள்ளன. எனவே அவள் எந்தச் செயலையும் உணர்ச்சி வசப்பட்டுச் செய்கிறாள்"*[72]

என்ற காந்தியடிகளின் கருத்து தாய்மையை வெளிப்படுத்துகின்றது. இவருடைய கருத்திற்கு ஏற்ப ந.பிச்சமூர்த்தியின் கவிதை வரிகளில்,

> *"அன்னையை நினைத்துக் குழந்தை அலறுது*
> *கூடவே நாயும் குரலோசை காட்டுது*
> *ஈனத் தொழில் செய்யும் தோட்டிச்சி ஒருத்தி*
> *கூடையைக் கைவிட்டு குழந்தையைத் தூக்குகிறாள்*
> *அன்னையின் மார்பில் அலறல் ஒடுங்குது"* (ந.பி.க., ப.16)

என்ற வரிகளில் தாய்மை உணர்வைக் கவிஞர் வெளிப்படுத்துகின்றார். தாய்மை என்ற தன்மை போற்றுதற்குரியது என்ற காந்தியக் கருத்தை உணர்த்துகின்றது.

வேதகாலம், இடைக்காலம், பிற்காலம், தற்காலம் என்று எல்லா காலங்களிலும் பெண் அடிமைப்பட்ட நிலையில் இருந்தாள். சமூகத்தில் பொருளாதாரதரம் பெற பெண்களுக்குத் தகுதி இல்லை என்ற நிலை

---

72. மகாத்மாகாந்தி, பெண்களுக்கு, ப.31.

காணப்பட்டது. இந்த நிலையை மாற்றிய சக்தி காந்தியடிகளுக்கும் உண்டு. ஆன்மிகம், கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் பெண்களுக்கு முன்னுரிமை தரப்படவில்லை. அவ்வாறு தரப்பட்டாலும் அதனை எதிர்த்துக் கேட்கும் வலிமை இருந்தவர்களுக்கு மட்டும் கிடைத்தது. பெண்களைச் சமூகம் கைப்பாவைகளாக்கி விட்ட நிலை சமூகத்தில் தொடர்ந்தது. பால்யவிவாகம், கைம்மை நிலை, உடன்கட்டை ஏறுதல் போன்ற வன்கொடுமைகள் பெண்களுக்கு இழைக்கப்பட்டன. பெண்களிடம் அறிந்து கொள்ளக்கூடிய நற்பண்புகளையும் அவர்களின் தன்மையையும் காந்தியடிகள்,

> *"பெண் என்றால் தியாகத்தின் வடிவம் எனக் கருதுபவன் நான். ஆயினும், ஆண்களுக்கில்லாத அபாரமான சக்தி தங்களிடம் உண்டு என்பதைப் பெண்கள் மறந்தே விட்டனர்"*[73]

என்கிறார். காந்தியடிகள் கூறும் பெண்ணியக் கருத்துக்கள் சில கவிதைகளில் காணமுடிகின்றன.

ந.பிச்சமூர்த்தியின் 'மோகினியாள்' என்ற கவிதையில்

'வானத்தில் கையைக் கண்டேன்
மோகினியாள் சிரித்தாள்
நள்ளிரவில் முல்லை மலர் அள்ளிவிட்ட லாகிரி போல்
மோகத்தில் மயங்கி நின்றேன்
மொழியலுற்றாள் மோகினியாள் வாடா என் கண்மணியே.....'

எனத் தொடங்கி,

"பணமென்னும் பெண்ணைக் கூடி
பலநாள் தனித்திருந்தோய்
ஐம்புலனின் பெருங்கிடங்கில்
கதவம் தட்டிக் கால் கடுத்தோய்...
. . . .
. . . .

---

73. மகாத்மாகாந்தி, பெண்களுக்கு, ப.44.

மணமாலை, மஞ்சம், வத்தி
நெடுநாளாய் வைத்திருந்தேன்
வாய்த்தேனும் வடிவழகும்
வெகு யுகமாய்ப் பாதுகாத்தேன்" (ந.பி.க., ப.27)

என்ற கவிதை பெண் போகப் பொருளாகக் கருதப்பட்டதை எடுத்துக்கூறுகின்றது.

"பெண் தன்னை ஆடவனின் சிற்றின்பச் சாதனமாகக் கருதுவதை நிறுத்த வேண்டும். இதற்கு உபாயம் அவனிடமல்ல. அவளிடமே இருக்கிறது. அவள் ஆடவனுடன் சமபங்காளியாய் இருக்க வேண்டுமென்றால் ஆடவனுக்காக கணவனுக்காகக் கூட தன்னை அலங்கரித்துக் கொள்ள மறுத்துவிட வேண்டும். சீதை தன் அங்க அவயங்களின் அழகைக் கொண்டு இராமனை மயக்க எப்பொழுதேனும் முயன்றிருப்பாள் என்று என்னால் எண்ணவே முடியவில்லை"[74]

என்று காந்தியடிகள் கூறிய அதேகருத்தை இன்றைய புதுக்கவிதைகளிலும் காணமுடிகின்றது. "தமிழன்பன் கவிதைகள்" என்ற கவிதைத் தொகுப்பில், 'மனைவி' என்ற கவிதையில்,

"திரை முகத்து மீன்களைப் போல் கணவன் காசைத்
தினந்தோறும் தூளாக்கி முகத்தில் பூசி
அரையுடலைக் காலுடலைக் காட்டிக் கற்பாம்
அறநெறிக்குத் தம்முடைய முதுகுக் காட்டி
இரையாகிப் பார்ப்பவரின் விழிகளுக்கே
எங்கெங்குத் திரிகின்ற அவளா இல்லாள்?" (த.க.தொ.1, ப.134)

இவ்வாறு பெண்கள் நாகரிகம் என்ற போர்வையில் செயற்கை முகஒப்பனை, ஆடம்பர அரைகுறை ஆடை அணிவது, முதுகைக் காட்டுவது போன்ற செயல்களைக் கண்டிக்கின்றார். இதுபோன்ற எண்ணங்கள் பின்பற்றத்தக்கனவல்ல

---

74. **யங் இந்தியா 21.07.1921.**

என்பதைத் "திரும்பி வந்த தேர்வலம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'புரட்சிக்கவிஞரின் வீரத்தாய்' என்ற கவிதையில்,

"தின்பண்டமே
பெண் பண்டம்
என்று கருதும்
ஆண் வர்க்கம்
திருந்துவதற்காக
அழகிய பெண்களுக்கு
மீசை
அரும்புவதையும் – நான்
ஆதரிக்கிறேன்!" **(த.க.தொ.1, ப.305)**

என்கிறார். ஆணாதிக்கத்தின் போக்கில் மாற்றம் ஏற்பட பெண்கள் துணிச்சல் உடையவர்களாக இருப்பது நலம் தரும் என்பது தமிழன்பனின் கருத்தாகும்.

"இந்நாட்டில் பெண்ணுக்கு அளிக்கவேண்டிய சரியான கல்வி தன், கணவன் அழைப்பையும் திடமாக மறுக்கக் கற்பித்தலும், 'அவன் கைப்பாவையாக இருத்தல் தன் கடமையல்ல' என்பதை அவளுக்கு உணர்த்துதலுமாகும் என்பது என் அபிப்ராயம். அவளுக்கு கடமைகள் உள்ளதைப் போல உரிமைகளும் உள்ளன"[75]

என்ற கருத்தினைக் கொண்டவர் காந்தியடிகள். அதுபோல தாய்மையின் மீது பற்று கொண்டவர்கள் சிறந்த கவிஞர்களாக இருப்பர் என்பதைத்; தமிழன்பனின் "வார்த்தைகள் கேட்ட வரம்" என்ற கவிதைத் தொகுப்பில் 'பாரதித்தாய்' என்ற கவிதை உணர்த்துகின்றது.

"தாயான பிறகு
பெண்ணின் அழகு

---

75. **காந்தியடிகள், சமூகத்தில் பெண்கள், ப.33.**

தீர்ந்து போய் விடுவதில்லை
தாய்மையே அழகாகிறது
அவளது
இளமையே
குழந்தையிடம்
இடம் மாறி வளர்கிறது" (த.க.தொ.1, ப.482)

என்ற கவிதை வரிகளில் தாய்மையின் சிறப்பையும் குழந்தையின் நலனையும் எடுத்துரைத்துள்ளார். "தமிழோவியம்" என்ற கவிதைத் தொகுப்பில், 'மனுசி' என்ற கவிதையில் தமிழன்பன்,

"*மானெண சொன்னது போதும்,*
மயிலெனச் சொன்னது போதும்
மனிதனைப் போலோர் படைப்பு-அவள்
மனுசி மனுசி மனுசிதான்" (த.க.தொ.1, ப.671)

என்று பெண்களைப் பிற உயிரினங்களுக்கு ஒப்புமைப்படுத்திப் பாராட்டி அவளை அடிமைப்படுத்தியது போதும். அவளும் ஒரு மனிதப் படைப்புதான் என்பதை ஆண்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்கிறார். அவளாலும் சாதிக்கமுடியும் எனவே சாத்திரங்கள் பேசி அவளை ஒதுக்கிவிட வேண்டாம். பேதங்கள் உண்டாக்க வேண்டாம் என்பது கவிஞரின் எண்ணம்.

> "*நூறுமனிதர்கள் ஒன்று கூடித் தங்களை ஒரு கூட்டமாக ஆக்கிக் கொள்ள முடியும். ஆனால் குடும்பத்தை உருவாக்க ஒரு பெண்ணால் மட்டும் தான் முடியும் என்கிறது ஒரு சீனப் பழமொழி. எனவே தான் காந்தியடிகளும் குடும்பச் சக்கரத்தில் அச்சாணியாக இருப்பவள் பெண் என்ற சிந்தனையை முன் வைக்கிறார்.*"[76]

---

76. மகாத்மா நூல்கள் தொ-7, ப.832.

காந்தியடிகள் கூறும் மரபுப் பெண்ணியத்தின் தாக்கம் இன்று புதுக்கவிதைகளில் காணமுடிகின்றது. பெண் கல்வி கற்றவளாக இருந்தாலும், கல்வியறிவற்றவளாக இருந்தாலும் அவள் வழியாக குடும்பத்திற்கு வருமானம் வர வேண்டும் என்ற காலமாக மாறிவிட்டது. தாய் தன் குழந்தைகளை வளர்க்கத் தன் பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேலைக்குச் செல்கின்றாள். எனினும், அவள் ஆண்களால் அடிமை போலவே நடத்தப்படுகின்றாள்.

"பிரகதீஸ்வரர் ஆலயத்துக்காக
குடும்ப விளக்கின் கொழுந்துகளையெல்லாம்
மண்ணில் தேய்த்த மாபாதன் இவன்
தஞ்சை நகரில் தேவடியார் தெருக்களுக்குக்
கால்கோள் விழாச் செய்த காமுகன் இம்மன்னன்" (ஓ.பு., ப.202)

என்று பெண் இனத்தை இழிவுபடுத்திய இராஜராஜனை இன்குலாப் சாடுகின்றார்.

ஏ. பொருளியல் சிந்தனைகள்

காந்தியடிகளின் எல்லா வகையான கொள்கைகளும் மக்களால், அரசால் பின்பற்றப்பட்டால் நாடு முன்னேற்றம் அடைவது மட்டுமன்றி வன்முறை இல்லாத அமைதியான இந்தியாவைக் காணமுடியும். அவரின் ஒப்பற்றக் கொள்கைகளில் பொருளாதாரமும் அடங்கும். தனிமனித பொருளாதாரக் கோட்பாடு முதல் அரசியல் பொருளாதாரக் கோட்பாடுவரை பல விதிகளை வகுத்துக் கூறியுள்ளார்.

"பொருளாதார சமத்துவம் இல்லாமல் அரசியல் ஜனநாயகம் சாத்தியமில்லை. இதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உண்மையான பொருளாதார சமத்துவம் ஏற்படாமல் அரசியல் சமத்துவம் மட்டும் இருந்தால், அது காரியாம்சத்தில் ஒரு போதும் சமத்துவமாக இருக்க முடியாது. அந்நிலையில்

அரசியல் அதிகாரம் பொருளாதார அதிகாரத்தின் கையாளாகத் தான் இருக்கமுடியும்”[77]

என்று காந்தியடிகளின் பொருளாதார சமத்துவக் கொள்கைகளை ஸ்ரீமந் நாராயண அகர்வால் கூறியுள்ளார். பொருளாதார முன்னேற்றம் மட்டும் ஒருதலைபட்சமாக இருந்தால் அதற்கான பின்விளைவுகளும் துன்பமானதாய் இருக்கும். செல்வத்தை மட்டும் சேர்த்து வைத்துக் கொண்டே இருப்போம் என்று எண்ணினால் அதுவும் முற்றிலும் தவறான கொள்கை என்பதை “வணக்கம் வள்ளுவ” என்ற கவிதை நூலில் ‘இன்பம்’ என்ற கவிதையில் தமிழன்பன்,

“செல்வத்தைச் செலவழித்தவன்
இன்பத்தைச் சேமிக்கிறான் என்றும்,
செல்வத்தைச் சேமித்தவன்
இனபத்தை இழக்கிறான் என்றும் பேசினான்.
உண்மை தான்...
வங்கிக் கணக்கை மட்டும் வளர்ப்பவன்
வாழ்க்கைக் கணக்கில் விடை தெரியாமலே
விடை பெறுகிறான்” (த.க.தொ.5, ப.299)

இவ்வாறாக வாழ்க்கைக்குத் தேவையானதைக் கொண்டு பெறும் செல்வத்தைப் பிறருக்குப் பயன்படும்படி பகிர்ந்தளிக்க வேண்டும். அதுவே, மிகப்பெரும் இன்பமாகும் என்று கூறுகின்றார். அயராத உழைப்பினால் செல்வம் சேர்த்து விட்டால் மட்டும் போதாது, அதை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும். ‘செல்வத்தின் பயன் ஈதலே’ என்பதை எண்ணத்தில் கொண்டு செயலாற்ற வேண்டும் என்பது காந்தியடிகளின் கொள்கையாகும். பொருட்செல்வத்தை மட்டும் சேர்க்க வேண்டும் என்று எண்ணுபவன் வாழ்க்கையில் பிற செல்வத்தை இழக்கின்றான் என்பது கவிதையின் கருத்தாகும்.

---

77. ஸ்ரீமந்நாராயணஅகர்வால், காந்தீயத்திட்டம், ப.16.

காந்தியடிகள் மேற்கல்வி பயில தென்னாப்பிரிக்கா சென்று திரும்பிய போது இந்திய நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினார்.

> *"1915-இல் இந்தியாவிற்குத் திரும்பி பொது வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு முன்பே தாய்நாட்டின் பொருளாதார நிலையை காந்தியடிகள் ஓரளவு அறிந்தே இருந்தார். இந்தியாவை வாட்டும் வறுமை நிலையைப் படித்து நெக்குருகி கண்ணீர் சிந்தியவர் காந்தியடிகள். ஆதலால் 1915-இல் இந்தியாவிற்கு வந்த காலத்திலிருந்து தொடர்ந்து இந்தியப் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பாடுபட்டார்"*[78]

என்று காந்தியப் பொருளாதார மேம்பாடு பற்றி ம.பா. குருசாமி கூறுகின்றார். நம் நாட்டு மக்கள்தொகையில் 75% மக்கள் கிராமங்களில் வாழ்க்கை நடத்துவதைச் சுட்டி அவர்களின் மேம்பாட்டிற்காக முன்னுரிமை வழங்க வேண்டும் என்று பாடுபட்டார். கைத்தொழில், சிறுதொழில் யாவும் அறியாமல் விவசாயம் ஒன்றை மட்டுமே நம்பி வாழ்ந்ததால் இந்திய மக்கள் வறுமையில் அல்லல் பட்டனர். வறுமை, நோய், அறியாமை ஆகியவற்றில் பிடிக்கப்பட்டனர். இவற்றிலிருந்து மனிதன் விடுதலை அடைய உழைப்பு முக்கியம் என்பதை உணர்ந்தார் காந்தியடிகள். இங்கிலாந்தில் காணப்பட்ட தொழில் புரட்சியை நேரில் கண்டவர் காந்தியடிகள். ஒரு சில நாடுகள் தொழில் வளர்ச்சி அடைந்ததால் பிறநாடுகள் சுரண்டப்படுவதையும் அறிந்தார். சுரண்டப்படும் நாடுகளில் ஒன்றாக இந்தியாவும் திகழ்ந்தது. மேற்கத்திய பொருளாதாரத்தால் மனித நிலத்தின் ஆக்கத்தை விட அழிவே மிகுந்திருப்பதை உணர்ந்தார்.

> *"மேற்கத்திய பொருளாதாரத்தில் அறக்கோட்பாடுகளுக்கு இடம் இல்லை. ஆனால் காந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படையாக இருப்பது அறம்"*[79]

---

78. ம.பா.குருசாமி, காந்தியுகம், ப.278.
79. ஆண்டியப்பன், முத்துலக்குமி, கோட்பாடுகளில் காந்தியம், ப.44.

என்று முத்துஇலக்குமி எடுத்துரைக்கின்றார். பொருளாதார அடிப்படை பற்றி காந்தியடிகள் 'யங் இந்தியா' இதழில் கூறும்போது,

> *"உண்மையில் (சத்தியத்தில்) அகிம்சையில் இருந்து விலகிச் செல்கின்ற அதுவும் மனித சமுதாயத்திற்கு (நிலைத்த) நன்மையைத் தராது. ஒழுக்க மதிப்புகளை ஏற்றுக்கொள்ளாத பொருளாதாரம் பொய்மையானதாகவே இருக்கும்"*[80]

என்றுக் கூறுகின்றார்.

காந்தியடிகள் கூறும் பொருளாதாரத்தின் அடிப்படைகளாக எளிய வாழ்க்கை முறை இருப்பது அவசியமானதாகும். நாடு நிலைபெற்று வாழ வேண்டுமானால் மக்கள் வாழ்வை நல்ல முறையிலே அடைவதற்கு முயலவேண்டும். மக்களின் அடிப்படைத் தேவைகளை அமைத்துக் கொடுப்பதற்கே நாடு தோன்றுகிறது. பொதுவாகக் கூறினால், மக்களின் அடிப்படைத் தேவைகள் உண்பதும் உடுப்பதும் ஆகும். இவற்றை மட்டும் மக்கள் பெற்றுவிட்டால் பெருவாழ்வு பெற்றவர்கள் என்று சொல்லவே முடியாது என்பது பொருளாதாரத்தை மையப்படுத்துகின்றது. பொருள் இல்லாதவர்களை இவ்வுலகம் எள்ளி நகையாடும். எனவே, பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள உழைப்பது அவசியம். கடையனும் கடைந்தேறி முன்னேற வேண்டுமானால் கடன் இல்லாமல் உழைப்பது அவசியமாகும். தனக்கென்று வீடு கட்டி வாழக்கூட தகுதியற்றவர்கள் கட்டிடத் தொழிலாளிகளாகவும், செங்கல் சூளையில் வேலை பார்ப்பவர்களாகவும் வைத்திருப்பவர்களாகவும் உள்ளனர் என்பதை ஈரோடு தமிழன்பனின் 'ஊருக்கு நல்லது சொல்வேன்' என்ற கவிதையில்,

> *"ஊரோடு ஒத்து வாழ்*
> *என்பதற்கும் அர்த்த அடர்த்தி*

---

80. யங் இந்தியா-13, ப.1921.

உண்டு அதனால்...
தனக்கென வீடு கட்டிக் கொள்ளத்
தம்படி இல்லாதவன்
செங்கற் சூளை வைத்திருக்கிறான்
. . . .
இன்று
கடன் கேட்டவுடன் கொடுத்தால்
கேட்டவன் மயங்கி விழுகிறான்.
வாங்கியவன் திருப்பித் தந்தாய்,
கொடுத்தவன் மயங்கி விழுகிறான்...
தண்ணீர் தெளிக்கத்
தயாராய் நிற்கிறது பண்பாடு" (த.க.தொ.1, ப.582)

என்ற வரிகளில் கடனினால் மக்களின் வாழ்க்கை நிலை மாற்றம் அடைந்து வருகின்றது. பொருளாதாரத்தை நிலை நிறுத்த மக்களின் தேவைகளைச் சரிகட்ட கடன் பெற்று உழைக்க வேண்டிய சூழல் நிலவுவதைக் கவிஞர் சுட்டுகின்றார்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை அறிந்து அதனைப் பின்பற்றி உழைத்தல் அவசியமானதாகும்.

இன்குலாப் கவிதைகளில் காணப்படும் காந்திய எதிர்ப்புக் கருத்துகள்

இன்குலாப் கவிதைகளில் காந்தியத்தாக்கம் போதுமானதாக இல்லை காந்தியத்தின்மீது அவருக்கு வெறுப்பு அதிகமாக இருந்ததால் அவரின் கருத்துக்கள் சூழ்நிலைக்குப் பொறுத்தனவாக கவிஞர் எடுத்துக்கொண்டுள்ளார். இவரின் 'நாட்டாமை செய்ய நரிகள் வந்தபோது' என்ற கவிதையில்,

"ஆறறிவு உயிர்களின்
கானகத்தில்
நாட்டாமை செய்ய
நரிகள் வந்தன
மான்களின் கால்களில்
ஓட்டம் கூடாது.

செவலைக் காளைக்குக்
கொம்புகள் குற்றம்
நம்பிக்கை வேண்டும்.
நரிகளிடத்தில்
அன்பு . . . . அகிம்சை
நரிகளின் சட்டம்" (ஓ.பு., ப.283)

என்பதில் அன்பும் அஹிம்சையும் எல்லா உயிர்களிடத்திலும் வேண்டும் என்ற காந்தியம் வலியுறுத்துகின்றது. எனினும் அவை நரிகளிடத்தில் அன்பும் அகிம்சையும் இருப்பதுபோல் இன்றைய மக்களை ஆளும் தந்திரக்கார மக்களாட்சியிடம் அன்பும் அஹிம்சையும் காணப்படுவதைக் கவிஞர் எடுத்துக் காட்டுகின்றார்.

'புரிந்து கொள்ளுங்கள்' என்ற கவிதையில் உதட்டில் நெளியும் சாத்வீக மந்திரம் உள்ளத்தில் ஆயிரம் ஓநாயின் ஊளை ஒலி கேட்கின்றது. இப்படிப்பட்டதாக மக்களின் மனம் இருக்கின்றது. இதில்,

"அகிம்சை உறைக்குள் ரத்தவாடை
அமைதிவனத்தில் நச்சுப் பூக்கள்
தருமச் சக்கரம் நகரும் தடங்களில்
புதையும் மானுட உயிரின் ஓலம்" (ஓ.பு., ப.348)

இவ்வாறாக ஒவ்வோர் உயிரின் வாழ்க்கைத் தன்மைகளைக் கவிஞரின் கவிதைகளில் காந்தியக் கருத்துக்களுக்கு ஒத்துப்போகாத ஒரு போக்காகத் தெரிகின்றது என்பதை அறியமுடிகின்றது.

மக்கள் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள உழைக்க வேண்டும். கதர் ஆடை நெய்தல் வேண்டும். இராட்டை பயன்படுத்த வேண்டும் என்கிறார் காந்தியடிகள். கவிஞர் 'எது தலைமை!' என்ற கவிதையில்,

"அரசுக்கு வன்முறை மதமான பின்பு

விடுதலைக் கோரிக்கை இரட்டினம் சுற்றுமோ?" (ஒ.பு., ப.403)

என்பதாக வினா தொடுக்கின்றார். விடுதலை வேண்டும் என்ற கோரிக்கையை ஆங்கிலேயர்களுக்குக் காந்தியடிகள் வைக்கின்றார். வன்முறை இல்லாமல் சுதந்திரம் பெற முடியாது என்ற கருத்தை இன்குலாப் கவிதையில் கூறுகின்றார்.

முடிவுரை

உலகில் மனித இனம் தோன்றிய காலம் தொட்டு பல்வேறு வகையான மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. அதில் இலக்கியங்களும் விதிவிலக்கல்ல. இலக்கியங்கள் சமூக அக்கறை கொண்டவை. அந்த வகையில் பலதரப்பட்ட இயக்கம் சிந்தனைகளின் ஒட்டுமொத்த வடிவமாக விளங்குகின்றது.

இயக்கங்கள் தானே தோன்றுவன அல்ல. உலகில் உள்ள மரபுசார் செயல்களுக்கு மாற்று வடிவம் கொடுக்க முனையும் பெருமக்களின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குவன.

இந்திய மண்ணில் தோன்றிய மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் கொள்கைகள் எல்லோராலும் பின்பற்றக்கூடிய எளிய கோட்பாடுகள் அல்லது தத்துவங்கள் ஆகும். இவர் மனிதன் வாழவேண்டிய நல்ல வழியில் வாழ்ந்து காட்டியவர்; உலக மக்களுக்கு முன்னுதாரணமாக விளங்கக்கூடியவர்.

காந்தியடிகள் பலவித வாழ்வியல் கோட்பாடுகளை வகுத்துத் தந்தவர். அதன்படி வாழ்ந்து காட்டியவர். மக்கள் வேற்றுமைகளையும் பிணக்குகளையும் மறந்து வாழவேண்டும் என்று இவரின் 'காந்தியம்' எடுத்துரைக்கின்றது. பயனற்ற வாழ்க்கையைத் தவிர்த்து வாழ்க்கையை இயற்கையோடு கலந்ததாக வாழப் பழக வேண்டும் என்பது காந்தியக் கருத்தாகும்.

காந்தியடிகள் மனித வாழ்க்கையின் கூறுகளாக ஆன்மிகம், கல்வி, அரசியல், சத்தியம், அகிம்சை, பெண்கள், பொருளியல், இயற்கைவாழ்வு, மானுடவியல் போன்றவற்றை வலியுறுத்துகிறார். இந்த கருத்துக்கள் யாவும் இன்றைய தலைமுறையில் எல்லோராலும் பின்பற்றப்படுகின்றனவா என்பது ஐயத்திற்குரியது.

தமிழ்ப்புதுக்கவிதைகளில் ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் காணப்படும் காந்தியச் சிந்தனைகளில் ஆன்மிகத்தத்துவத்தில் கடவுளை வழிபடுவதற்குப் பின்பற்றத்தக்க கூறுகளை அன்பு, அகிம்சை என்பதாக ந.பிச்சமூர்த்தி, தமிழன்பன் கூறுகின்றனர். இன்குலாப் ஆன்மிகத்திற்கு எதிரானவர். அன்பும் அகிம்சையும் பற்றி இன்குலாப் கவிதைகள் இடம்பெறவில்லை.

கல்வி முறையானது இன்று புதுமுறைக்கல்வி என்ற பெயரில் பணக் கொள்ளை செய்யும் போலித்தனமான முறையில் கடைச்சரக்குப் பொருள்போல விற்பனை செய்யப்படுகின்றது என்பதை இன்குலாப், தமிழன்பன் கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

அரசியல் என்பது காலங்காலமாக மக்களை அடிமைப்படுத்திக் கொண்டேதான் இருக்கின்றது. அதிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற உணர்வை ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், தமிழன்பன் கவிதைகள் சுட்டுகின்றன.

சத்தியம், அகிம்சை இவை இரண்டும் காந்தியடிகள் கண்கள் என்பார். அந்த வகையில், உலகமக்கள் போற்றும் சிறந்த கொள்கைகளாகச் சத்தியமும், அகிம்சையும் உள்ளது என்பதை ந.பிச்சமூர்த்தியின் பூக்காரி கவிதை உணர்த்துகின்றது. காந்தியடிகள் பெண்களைச் சமூகத்தில் உயர்வுடையவர்களாக நடத்துதல் வேண்டும் என்ற கருத்துடையவர் என்பதை, அவரது பல்வேறு கருத்துரைகளில் காணமுடிகின்றது. எனினும் அதற்கு மாறாக பெண்கள்

வன்முறைகளையும், கொடுமைகளையும் சந்தித்து வருகின்றனர் என்பதைப் புதுக்கவிஞர்களிடம் காணமுடிகின்றது. ஆடவனுக்காக தன் ஆசைகளை அர்ப்பணித்துவிட்டு எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் வாழும் பெண்களைக் கவிஞர் சாடுகின்றார். பெண்கள் ஒருபோதும் கைப்பாவைகளாக இருந்துவிடக்கூடாது என்பதைத் தமிழன்பன் தெளிவுபடுத்துகின்றார்.

இயல்-5

தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெரியாரியச் சிந்தனைகள்

இயல் - 5

தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெரியாரியச் சிந்தனைகள்

சமூக மாற்றத்திற்குப் பல்வேறு தலைவர்கள் பாடுபட்டு உழைத்துள்ளனர். ஒவ்வொரு நூற்றாண்டிற்கும் ஒரு மாபெரும் புரட்சிச் சிந்தனை கொண்ட மாமனிதர்கள் தோன்றுகின்றனர். அந்தவகையில் 20ஆம் நூற்றாண்டில் விடுதலை இயக்கம் வீறுகொண்டு எழுந்த சமயம் ஆரிய, திராவிட இயக்கம் அலைமோதியது. அவ்வாறு தோன்றிய இயக்கங்களால் இனப்போராட்டம், மொழிப்போராட்டம் என்னும் பண்பாட்டுப் போராட்டங்கள் தோன்றின. சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவுச் சிந்தனை, வர்க்கப் போராட்டம் போன்றவை எழுந்தன. தமிழகத்தில் மக்களின் எண்ணங்களுக்கு ஒளி தந்தவராக ஈ.வெ.ரா பெரியார் தோன்றினார். சமுதாயத்தின் எழுச்சிக்காகவும், ஏற்றத்திற்காகவும் பாடுபட்ட மாபெருந் தலைவர் தந்தைப் பெரியார். அவர் சமுதாயத்தில் பேசாத பிரச்சனைகள் இல்லை. எல்லாத்துறைகளிலும் காணப்படும் இடர்களைத் தீர்க்கப்பாடுபட்டவர். ஒவ்வொருவருக்குள்ளும் காணப்பட்ட ஏராளமான ஏற்றத்தாழ்வு சிந்தனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தவர். எதையும் ஏன்? எதற்கு? என்று பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து தனக்குச் சரியெனப்பட்டதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்துடையவர்.

பெரியார் தமிழகத்தில் தோன்றி தமிழக மக்களுக்காகக் குரல் கொடுத்தாலும் உலக அளவில் பேசப்படுகின்ற தலைவர்களுள் ஒருவராக திகழ்ந்தார். மத எதிர்ப்பு, இந்திமொழி எதிர்ப்பு, பெண் விடுதலை, தொழிலாளர் நிலை, சாதி-சமய வேறுபாடுகள் எதிர்த்தல், மூடநம்பிக்கைகளை எதிர்த்தல் போன்ற கருத்துக்களில் ஈடுபாட்டோடு சமூகச் சூழ்நிலையைப் புரிந்து உழைத்தார். பெரியார் சமூகப்பணிகளில் அக்கறை கொண்டவர். எனவே மக்களுக்காக உழைக்கும் கட்சியோடு இணைந்து நாட்டிற்காகப் பாடுபட

வேண்டும் என்று எண்ணினார். காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து உழைத்தார். காங்கிரசு மாநாடுகளை முன்னின்று நடத்தினார். காங்கிரசுக் கட்சியின் தமிழகப் பிரிவில் செயலாளராகவும் இருந்தார்.

> *"காந்தியாரின் பல்வேறு செயல் திட்டங்களைப் பெரியார் நிறைவேற்றினார். காந்தியாரின் மதுவிலக்குக் கொள்கையை ஏற்றுத் தாதம்பட்டியில் தமக்குச் சொந்தமாக இருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்"*[1]

என்று பெரியார் பற்றி வே.ஆனைமுத்து குறிப்பிடுகின்றார். நாட்டின் நலனுக்காகப் பாடுபடும்போது தன் சுயநலத்தைப் பற்றி சிந்திக்கக்கூடாது என்னும் கொள்கை கொண்டவர் தந்தை பெரியார். காங்கிரசுக்கட்சி கூறும் வழிவகைகளை தொடக்கக் காலங்களில் பெரியார் பின்பற்றியுள்ளார். ஆங்கில அரசின் திட்டங்கள் எதற்கும் ஒத்துப்போகக் கூடாது என்ற காந்தியடிகளின் கொள்கையை ஏற்று,

> *"ஆங்கில அரசின் வழக்கு மன்றங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்ற காந்தியாரின் கொள்கைப்படி, பெரியார் கடன் பத்திரங்கள் மூலமாகத் தம் குடும்பத்திற்கு வரவேண்டிய ரூபாய் ஐம்பதினாயிரத்தையும் சேலம் விசயராகவாச்சாரியார் சொல்லையும் கேட்காமல் வழக்கு மன்றங்களுக்குச் செல்லாமல் இழந்து விட்டார்."*[2]

இவ்வாறாக காங்கிரசுக் கட்சிக்காக, நாட்டின் விடுதலைக்காகப் பல்வேறு சொத்துக்களை இழந்தவர். அதுபோல காந்தியடிகளின் கருத்தை ஏற்றுக்கொண்டு கள்ளுக்கடை மறியலை முன்நின்று நடத்தி வெற்றியும் கண்டவர். கள்ளுக்கடை

---

1. வே.ஆனைமுத்து (ப.ஆ.), பெரியார் ஈ.வே.ரா. சிந்தனைகள், தொகுதி 1 தந்தை பெரியார் அவர்களைப் பற்றி, ப.xxiv
2. நெ.து.சுந்தரவடிவேலு, புரட்சியாளர் பெரியார், ப.83.

மறியல் மட்டும் இல்லாமல் ஒத்துழையாமை இயக்கம், கதர் உற்பத்தித் திட்டம் போன்றவற்றில் தன்முனைப்போடு ஈடுபட்டார். முதன்முறையாக ஆங்கில அரசை எதிர்த்துக் கள்ளுக்கடை மறியலை முன்னின்று நடத்தி ஒரு மாத காலம் சிறை சென்றார். இதனை,

> *"1921-இல் ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலை முன்னின்று நடத்தினார் பெரியார். தம் நீண்ட பொதுவாழ்க்கையில் பெரியார் முதன்முறையாக ஒருமாதச் சிறைத்தண்டனைப் பெற்றார்"*[3]

என்று நெ.து.சுந்தரவடிவேலு கூறுகின்றார்.

ஆங்கில அரசின் கருத்துக்களுக்கு ஒத்துழைக்கக்கூடாது என்ற காந்தியடிகளின் எண்ணத்தைக் கொண்டு ஆங்கில அரசினால் கிடைத்த பல பதவிகளையும் துறந்தார். இவ்வாறாக காங்கிரசுமீது தீவிர நம்பிக்கை கொண்டவராகச் செயல்பட்டார். இப்படியாக காங்கிரசு அரசின் செயல்பாடுகளை முன்னின்று நடத்திய பெரியார் ஒரு காலக்கட்டத்தில் மக்களின் குறைகளைக் களைவதில் காங்கிரசு தீவிரம் காட்டவில்லை. பிற மாநிலத்தின் நிலைமையை அனுசரித்துக் கொண்டு அதேமுறையைத் தமிழகத்திற்கும் பின்பற்றுவது சரியான செயலாக இருக்க முடியாது என்று உணர்ந்தார். மாநிலத்திற்கு மாநிலம் மக்களின் தேவைகளும் எண்ணங்களும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதைக் காங்கிரசு உணரவேண்டும் என்று எண்ணினார். இதனை,

> *"இந்தியா பூராவிலும் உள்ள மக்களைப் பற்றியும் அவர்களுக்காகவும் நாம் எடுத்துக்கொள்ளும் எந்த முயற்சியிலும் நாம் வெற்றி பெற முடியாதவர்களாக இருக்கிறோம். நம் மாகாண நிலைமையும் உணர்ச்சியும் வேறு வெளி*

---

3. நெ.து.சுந்தரவடிவேலு, மு.நூ., பக்.33-34.

மாகாணங்காரர் நிலையும் உணர்ச்சியும் வேறு. வெளி மாகாணக்காரர்கள் எந்த வகுப்பாராய் இருந்தாலும் பார்ப்பன சமயக் கொள்கைகளை ஒப்புக்கொள்கிறவர்களாகவும் தனி உரிமை கேட்பது என்பதை தேசத் துரோகமாகவும் விடுதலைக்கு முட்டுக்கட்டையாகவும் கருதுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். அதனாலேயே காங்கிரஸ்காரர்கள் எந்தக் காரியத்திற்கும் இந்தியா பூராவையும் சேர்த்துப் பேசி நம் மாகாணத்தவர்களை மைனாரிட்டிகளாக ஆக்கி நமது கூப்பாடுகளை அலட்சியப்படுத்தி பார்ப்பன ஆதிக்கத்திற்கு வேண்டியவைகளை மாத்திரம் சுலபமாக சாதித்துக் கொள்ள முடிகிறது"[4]

என்று குடிஅரசு இதழில் பெரியார் கருத்துத் தெரிவித்துள்ளார். காங்கிரசின் தேசியம், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகியவற்றின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொண்ட பெரியார் தங்கள் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அமைப்பும் வலிமையும் தேவை என்பதை உணர்ந்தார். எனவே நீதிக்கட்சியை ஒரு வெகுமக்கள் கட்சியாக ஆக்குவதற்கான முயற்சிகள் செய்வதற்குப் பதிலாக நீதிக்கட்சியைச் சேர்ந்த முந்தைய தலைவர்கள் அரசாங்கத்தைச் சார்ந்திருத்தல், பதவிகளை நாடுதல், தேர்தல்களில் பங்கேற்றல் என்பதைக் கைவிடாமல் இருந்தனர். எதிர்கால இந்தியாவில் ஏற்படப் போகும் எந்தவோர் அரசியல் சீர்த்திருத்தத்திலும் நீதிக்கட்சி பங்கேற்குமளவிற்கு ஆட்சியாளர்களாய் அங்கீகரிக்கப்பட்ட அக்கட்சிக்கு மக்களிடையே போதிய செல்வாக்கு வளரவேண்டும் என்று பெரியார் ஆசைப்பட்டார்.

பெரியார் சுயமரியாதை உடையவர்களாகத் தமிழர்கள் திகழவேண்டும் என்றார். அந்த அடிப்படையில் பெரியாருடன் இருந்த எஸ்.ராமநாதன், அ.பொன்னம்பலனார், வி.வி.ராமசாமி, சௌந்திர பாண்டியனார் போன்றோர்

---

4. கு.அ. 19-2-1940.

விலகி 'சுயமரியாதைச் சங்கம்' என்ற பெயரில் பதிவு செய்தனர். ஆனால் அதனைப் போலி சுயமரியாதைச் சங்கம் என்று அறிக்கை விடுத்தார் பெரியார்.

பெரியாரின் காங்கிரசு நீக்கம்

காங்கிரசில் பெரியார் சேர்ந்தபோது அரசியல் தலையீடு இன்றி சமுதாயத்திற்குச் சமநீதி வழங்கும் கொள்கையைக் காங்கிரசு ஏற்றுள்ளதாகக் கூறியது. வேலை வாய்ப்பில் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு 15% ஒதுக்கி அளிக்கப்படும் எனவும் வாக்குறுதி தரப்பட்டது. இதனை உண்மை என நம்பி பெரியார் காங்கிரசில் சேர்ந்து அதன் செயல்திட்டங்கள் வெற்றி பெற அயராது பாடுபட்டார். வகுப்புரிமைக் கோரிக்கையைக் காங்கிரசு மாநாடுகளில் வலியுறுத்தினார். திருச்சி, திருநெல்வேலி, திருப்பூர், சேலம், திருவண்ணாமலை போன்ற இடங்களில் வகுப்புரிமைக் கொள்கையை வலியுறுத்தினார். ஆனால் அவையாவும் பலன் தரவில்லை.

1924-1925இல் சேரன் மாதேவியில் வ.வே.சு.ஐயர் நடத்தி வந்த 'தேசிய வீரர்கள் பயிற்சிக் கூடம்' என்ற குருகுலப் பள்ளியில் பார்ப்பனப் பிள்ளைகளுக்கும், பார்ப்பனர் அல்லாப் பிள்ளைகளுக்கும் உண்ணும் உணவிலும் உணவுக் கலங்களிலும், உண்ணும் இடத்திலும் வேறுபாடு காட்டப்பெற்றது. இச்செயல் பார்ப்பனரல்லாத காங்கிரசுத் தலைவர்களிடையே பெருங்கொதிப்பை ஏற்படுத்தியது. காங்கிரசு இயக்கத்தின் பணமும் தமிழ் மக்களின் நன்கொடையும் வ.வே.சு. ஐயரின் குருகுலத்திற்குப் பொருள் ஆதாரங்களாகப் பயன்பட்டன.[5]

காந்தியின் கட்டளைப்படி ஆங்கில அரசு நடத்திய பள்ளிக்குச் செல்லாமல் குருகுலம் நிறுவி கல்வி கற்பிக்கப்பட்டது. அந்தக் குருகுலத்தில் நடைபெற்ற

---

5. C.S.Ramanathan, 'Self Respect Movement,' குத்தூசி குருசாமி நினைவு மலர், ப.39.

வெறுக்கத்தக்கச் செயல்கள் பெரியாரை மிகவும் பாதித்தது. பார்ப்பனரால் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தனித்தனியாக நடந்த கொடுமைகள், யாவும் அவரைச் சிந்திக்க வைத்தது. இவற்றை 'மாநில காங்கிரசு குழு'வில் எடுத்து விளக்கினார்.

பிறப்பினால் உயர்வுதாழ்வு கற்பித்தல் தவறு என இக்குழு முழுமையாக காங்கிரசைக் கண்டித்தது. இதனைப் பார்ப்பன உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

> *"தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் சி.இராஜகோபாலச்சாரியார் உட்படப் பார்ப்பன உறுப்பினர் அனைவரும் மாநிலக் காங்கிரசு குழுவிலிருந்து விலகிவிட்டனர்."*[6]

இந்நிகழ்ச்சி பெரியாரைப் பெரிதும் சிந்திக்க வைத்தது. மாநிலக் காங்கிரசுக் குழுவில் ஏற்பட்ட பிளவு தமிழகமெங்கும் பரவியது. சாதி அமைப்பை நீக்கும் புதிய தன்மான இயக்கம் தோன்ற வழிகோலியது. பல்வேறு கொள்கைகளின் புகலிடமாகத் திகழ்ந்த பெரியார் காங்கிரசின் கொள்கைகளை ஏற்றுக் காந்தியடிகளின் எண்ணங்களை உணர்ந்து கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார். தான் மட்டும் நின்று செயல்படாமல் தன்மனைவி நாகம்மையார், சகோதரி கண்ணம்மாவையும் ஈடுபடச் செய்தார்.

ஆங்கில அரசு சங்கரன் நாயர் என்பவரைக் காந்தியிடம் தூதனுப்பிக் கள்ளுக்கடை மறியலை நிறுத்துவதற்கு ஆவண செய்யுமாறு கேட்டுக் கொண்டது. அதற்குக் காந்தியடிகள்,

---

6. C.S.Ramanathan, 'Self Respect Movement,' குத்தூசி குருசாமி நினைவு மலர், ப.39.

"மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. அது ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைக் கேட்க வேண்டும்"[7]

என்று கூறினார்.

மதுவை ஒழிக்க வேண்டும் என்ற கொள்கையானது பெரியாரின் இல்லத்தில் காந்தியார், இராசகோபாலச்சாரியார், பெரியார் ஆகிய மூவரும் பேசிக் கொண்டிருந்தபோதுதான் எடுக்கப்பட்டது. இத்தகைய பொறுப்புணர்வு கொண்ட பெரியார் காங்கிரசில் இருந்து விலக வேண்டிய சூழலும் நிலவியது.

காங்கிரசு பணியில் பெரியார் ஒத்துழையாமை இயக்கத்திற்கும் உறுதுணை நல்கினார். 1920 ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை உருவாக்கினார். இதன்படி காங்கிரசு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆங்கில அரசு தந்த எல்லாப் பொறுப்புகளையும் விட்டுவிட வேண்டும். அந்த ஆட்சியோடு தொடர்புடைய எந்தப் பதவியிலும் இருக்கக் கூடாது என முடிவெடுக்கப்பட்டது. அவ்வகையில் பெரியார் துறந்த பதவிகளின் எண்ணிக்கை 29.

"1921ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் நாள் தடையை மீறி வேலூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றி உரை நிகழ்த்தச் சென்ற பெரியார் சிறைப்படுத்தப்பட்டு மூன்று மாதத் தண்டனை அடைந்தார்."[8]

இது போன்ற செயல்களில் பெரியார் ஈடுபட்டு காங்கிரசுக்கு உறுதுணையாக இருந்த போதிலும் அவரின் வகுப்புரிமைப் போராட்டம் நிறைவேறவில்லை. வகுப்புரிமையை வகுப்புவாதம் என்று பெரியார் கூற, அதை

---

7. சாமி சிதம்பரனார், தமிழர் தலைவர், ப.89.

8. கோ.தங்கவேலு, இந்திய வரலாறு கி.பி.1773 முதல் இன்று வரை, ப.429.

காங்கிரசுத் தலைவரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இதுவும் பெரியார் கங்கிரசிலிருந்து நீங்க முக்கிய காரணமாக அமைந்தது.

அடுத்த கட்டமாக கதர் உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பெரியார் பெரிதும் பாடுபட்டார். தானே கதர் ஆடைகளைத் தெருத் தெருவாகச் சுமந்து விற்றுச் சமுதாயச் சீர்கேடுகளை எடுத்துக் கூறி, சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். புகழ் பெற்ற திருச்செங்கோட்டு கதர் ஆசிரமத்தைப் பெரியார் திறந்துவைத்தார். இரண்டு இலட்சம் ரூபாய் நன்கொடையாகத் திரட்டிக் காந்தியடிகளிடம் பெரியார் கொடுத்தார். இது போன்ற செயல்களினால் காங்கிரசு மேலும் வலுவடைந்த கட்சியாக மாறியதாகக் கூறப்படுகின்றது. காஞ்சியில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் பெரியாரின் வகுப்புரிமை வாதப் போராட்டத்தை வலியுறுத்திப் பேச திரு.வி.க. (தலைவர்) அனுமதிக்கவில்லை. எனவே மிகுந்த கோபத்துடன் பெரியார் காங்கிரசில் இருந்து வெளியேறினார்.

> *"காங்கிரசென்பது இங்கு சாதி வேற்றுமையின் இருப்பிடமாக பார்ப்பன வகுப்பாரின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் கூடாரமாக இருக்கிறது. பார்ப்பனர் அல்லாதவர்கள் காங்கிரசால் எள்ளள நன்மை கூட பெறமுடியாது. காங்கிரசை ஒழித்துக் கட்டுவதுதான் இனிமேல் என் வேலை. அதன் அழிவுக்கு முழுமூச்சோடு பாடுபடுவேன்"*[9]

என்று கூறிவிட்டுப் பெரியார் காஞ்சி மாநாட்டிலிருந்து வெளியேறினார்.

இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர்கூட காங்கிரசுமீது பெரியாரின் கோபம் சிறிதும் குறையவில்லை. தமிழ்நாட்டிற்கு இந்த அரசியல் இயக்கத்தால் எந்தப் பயனும் இல்லை என்று கருதியே தான் வெளிவந்ததாகப் பெரியார் குடியரசு இதழில் அறிவித்தார்.

---

9. மங்கையர்க்கரசி, வரலாறு கண்ட வைக்கம் வீரர், ப.107.

வைக்கம் வீரர் - பெரியார்

தீண்டாமை இந்தியாவில் நீண்டகாலமாகத் தொடர்ந்து வந்த கொடுமைகளுள் ஒன்று. காந்தியத் திட்டங்களுள் ஒன்றாகத் தீண்டாமையொழிப்பும் திகழ்ந்தது. பெரியார் இயற்கையாகவே சாதி வேற்றுமைக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். எனவே, காங்கிரசின் தீண்டாமை ஒழிப்புப் பணி பெரியாருக்கு மகிழ்வை ஏற்படுத்திய போதிலும் சில செயல்பாடுகளால் காங்கிரசில் இருந்து வெளியேற வேண்டிய சூழலுக்கு ஆளானார்.

கேரளாவில் உள்ள வைக்கம் என்ற பகுதியில் உள்ள தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக்கூடாது என்று நீண்டகாலமாக கட்டளைவிடப்பட்டிருந்தது. இதனை அறிந்த காங்கிரசு தலைவர்கள் அவ்விடத்தில் அறப்போராட்டம் நடத்தினர். 19 அரசர்கள், தலைவர்கள், திருவிதாங்கூர் அரசர் முதலானோர் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலையில் போராட்டம் கைவிடப்படுமோ? என்றஞ்சிய ஜார்ஜ் ஜோசப், நீலகண்ட நம்பூதரி போன்றோர் பெரியாருக்குக் கடிதம் எழுதி அவரை வரவழைத்தனர்.

திருவிதாங்கூர் மன்னர் பெரியாரின் வருகையை எதிர்நோக்கியவராக அவரை வரவேற்றார். எனவே வைக்கம் பகுதி மக்கள் சற்றுக் குழப்பம் அடைந்தனர். காரணம் யாதெனில் மன்னர் டெல்லி செல்ல நேரும் பொழுதெல்லாம் ஈரோடு இரயில் நிலையத்தில் பெரியாரின் பரம்பரைச் சத்திரத்தில் இளைப்பாறல் வழக்கம். அதற்கு நன்றிக் கடனாக இந்த வாய்ப்பை மன்னர் பயன்படுத்தக் கருதினார். ஆனால் அரசரின் வரவேற்பைப் பெரியார் ஏற்கவில்லை. சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றார். இந்த வைக்கம் போராட்டத்தில் பெரியாரின் மனைவி நாகம்மையாரின் பங்களிப்பும் இருந்தது.

1924இல் கேரளத்தைச் சேர்ந்த முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி எம்.கோவிந்தன்,

> *"வைக்கம் சத்தியாகிரகத்திற்கு இவரே உயிராக இருந்தார். அந்த நீண்ட தொடர்ச்சியான போரைச் சித்தியேற்படும்படியான முடிவிற்குக் கொண்டு வந்து விட்டு திரு.ராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். எனது நாட்டில் சுயமரியாதைக் கருத்து விதைகள் இவரால்தான் முதன்முதலாக ஊன்றப்பட்டன. மிகுந்த விளைவு கட்டாயம் ஏற்படும்"*[10]

என்று பெரியாரைப் பாராட்டினார்.

இவ்வாறாக காங்கிரசுக் கொள்கைகள் அனைத்தையும் தம் உயிர் மூச்சாகவே கருதிப் பாடுபட்ட பெரியார் இடைஇடையே வகுப்புரிமைத் தீர்மானத்தை வலியுறுத்தினார். இறுதியில் 1925ஆம் ஆண்டு நவம்பரில் காஞ்சிபுரத்தில் திரு.வி.க. தலைமையில் கூடிய மாநாட்டில் தமது வகுப்புரிமை பற்றிய தீர்மானம் நிராகரிக்கப்படவே வெகுண்டு காங்கிரஸ் இயக்கத்தினின்று வெளியேறினார்.

பெரியாரின் தொண்டுள்ளம்

மிக நெடுங்காலமாக படிப்பு, பதவி என எதுவும் இல்லாமல் உடல் உழைப்பு, குடிசை வாழ்க்கை இவையையே பெரிதாக நம்பி வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சமூக நீதியும், சம வாய்ப்பும், விழிப்புணர்வும் கிடைக்க வேண்டும் என்பதில் முழுமூச்சாகப் பெரியார் இறங்கினார். திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமூகத்திற்கு இணையாக மானமும், அறிவும் உள்ளவர்களாக மாற்றும் தொண்டினை முழுமையான மனதோடு

---

10. நெ.து.சுந்தரவடிவேலு, மு.நூ., ப.39.

செய்வதாகக் கூறினார். இந்த சமூகத்தை மாற்ற எவரும் முன்வராததால் அதனை முனைப்புடன் செய்வதில் ஈடுபட்டுள்ளதாகக் கூறுகின்றார்.

"எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும்"[11]

என்ற பாரதிதாசனின் கூற்றை மெய்ப்பிக்கும் வண்ணம் தொண்டுள்ளம் கொண்ட பெரியார் செயற்கரியச் செயல்களைச் செய்தார்.

சமூகத்தில் பிறப்பின் அடிப்படையில் சாதி பிரிக்கப்பட்டது. சாதி பற்றி டாக்டர் அம்பேத்கர் கூறுகையில்,

"சாதி என்னும் பொருள் பற்றிய விவரத்தை முழுவதும் அறிந்து கொள்ள வேண்டுமாயின் சமூக அமைப்பிலுள்ள அடிப்படைக் கோட்பாடுகளைப் பெரிதும் தெரிந்திருக்க வேண்டும். இந்து சமூகத்தின் அடிப்படைக் கோட்பாடு, நான்கு வகுப்புகள் அல்லது வருணங்களாக இந்து சமூகத்தைப் பிளவுப்படுத்தியதிலிருந்து ஆரம்பமாகிறது"[12]

என்கிறார்.

சமுதாயத்தில் உள்ள அடித்தள மக்கள் கல்வி, நீதி, நிர்வாகம், படைப்பிரிவுகள் ஆகியவற்றில் வாய்ப்பு மறுக்கப்பட்டு பிற்படுத்தப்பட்டார்கள். சமுதாயத்தின் பெரும்பான்மை மக்கள் எந்தச் சாதியின் அடிப்படையில் உரிமைகள் மறுக்கப்பட்டதோ அதே அடிப்படையில் உரிமைகள் வழங்க

---

11. பாரதிதாசன், பாண்டியன் பரிசு, ப.53.
12. கி.வீரமணி, கீதையின் மறுபக்கம், ப.10.

வேண்டும் என்ற வகுப்புரிமையை, சமூக நீதியை நீதிக்கட்சியும், திராவிடர் கழகமும் வலியுறுத்திப்பாடுபட்டன.

இந்தியா குடியரசு ஆனது முதல் நடப்பிற்கு வந்த இந்திய அரசியல் சட்டம் தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய இடஒதுக்கீட்டிற்காகவே முதன்முதலாக 1951ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. இதற்குக் காரணம் திராவிட இயக்கத்தின் தொடர் வலியுறுத்தலாகும். தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்ற அன்றைய பிரதமர் நேரு கால மத்தியஅரசு இடஒதுக்கீட்டை அமலாக்கியது. இந்தப் பெருமை பெரியாரின் திராவிட இயக்கத்தயே சாரும்.

இந்திய அரசியல் சட்டம் இந்து மதப் பாதுகாப்பிற்காகச் செய்யப்பட்டதாகும். அது சூத்திரத் தன்மையைப் பாதுகாப்பதாகும். அதில் சாதி ஒழிப்பிற்கு எந்த வழிமுறையும் சொல்லப்படவில்லை. எனவே அது சூத்திரர்களைக் காலந்தோறும் சின்னச் சாதிகளாக வைத்து இழிவுபடுத்துவதற்குத் துணைநிற்கிறது.

> *"இந்திய நாட்டோடு சேர்ந்திருப்பதால் அல்லவா, இழிவுபடுத்தும் இச்சட்டத்திற்கு நாம் அடங்கிப் போக வேண்டியதாகிறது. இந்தியாவிலிருந்து பிரிந்து போய் விட்டால் எல்லோரும் சமத்துவமாக, சாதி ஏற்றத் தாழ்வு ஒழிந்த சமுதாயமாக வாழ்வதற்கு வழிவிடும் நமக்கு ஏற்ற அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம்"*[13]

என்று பெரியார் கருதினார். பெரியார் மிகப்பெரிய சமுதாயப் புரட்சிகளை உருவாக்கி அதன் மூலம் பார்ப்பனரல்லாத மக்களின் முன்னேற்றத்தை விரிவுபடுத்த எண்ணினார்.

---

13. ம.நாராயணன், பெரியாரும் மனித நேயமும், ப.174.

பகுத்தறிவு மிக்கோர் நாடு, இனம், மொழி, கடவுள், மதம், சாதி என்னும் இவை எதுவும் இன்றி மானிடப் பற்றுடன் அறிவைக் கொண்டு தங்கு தடையின்றிச் சிந்தித்துச் செயல்புரிவர். இத்தகைய கடமை உணர்வு கொண்டு பெரியார் செயல்பட்டார்.

எல்லாத் தரப்பு மக்களும் எந்தப் பதவியிலேனும் அமரலாம் என்கின்ற பொதுவுடைமைப் போக்கு நம் நாட்டில் நிலவுகின்றது. இதற்குப் பெரியார் நிகழ்த்திய சமுதாயப் போராட்டங்கள் பெரிதும் பங்கு வகிக்கின்றனன. அவை வைக்கம் போராட்டம், கள்ளுக்கடை மறியல், பிராமணாள் காப்பி கிளப் ஒழிப்புப் போராட்டம், காட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், தமிழ்நாடு தமிழர்க்கே, வகுப்புரிமைப் போராட்டம், குலக்கல்வி முறை ஒழிப்புப் போராட்டம், சாதி ஒழிப்புப் போராட்டம், பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டம், இராமன் பட எரிப்புப் போராட்டம், தேசப்பட எரிப்பு, தமிழ்நாடு பெயர் மாற்றப் போராட்டம், சமுதாய இழிவு ஒழிப்பு என்று பட்டியல் நீள்கின்றது.

பெரியார் தன்னுடைய வாழ் நாள் முழுவதும் எதிர்ப்புகள், போராட்டங்கள், கிளர்ச்சிகள் இவற்றிலே நீந்தி தமது பிறவியைக் கடந்தவர். இவரின் வாழ்நாள் பெரும்பாலும் சிறைச் சாலையிலே கடந்தது. கிளர்ச்சிகளின் தனி நாயகமாக பெரியார் விளங்கினார். அதே சமயத்தில் எவ்வித வன்முறைகளும் நிகழக்கூடாது என்று தன்னுடைய தொண்டர்களுக்குக் கட்டுப்பாடு விதித்தார். தனி நலன் கருதியோ கட்சியின் பெருமைக்காகவோ போராட்டங்கள் நடத்தவில்லை. பிற நாட்டு மக்களைப்போல தன் நாட்டு மக்களும் கொடுமைகளில் இருந்து நீங்கி சுய மரியாதையுடன் வாழ வேண்டும் என்பதற்காகப் போராட்டம் நடத்தியவர்.

பிறரால் கூற இயலாத கருத்துக்களைப் பகீரங்கமாக எடுத்துக் கூறினார். மானிடர்க்குத் தீங்கு செய்யக்கூடியது எதுவாகிலும் அதனை முற்றிலும் அழிக்கப் பாடுபட்ட பகுத்தறிவாளர். மிகநேர்மையாக, பொறுப்புணர்வுடன்

போராட்டங்களை நடத்தி அதன் பயனைப் பலரும் உணரும் வகையில் செய்தார். பெரியாரின் பணியை வே.ஆனைமுத்து வாழ்த்திக் கூறும் போது,

> *"இரத்தம் சிந்தாமல் கத்தியைப் பயன்படுத்தாமல் பிறர் எவர்க்கும் தீங்கு விளைவிக்காமல் – ஆட்சியைக் கைப்பற்றாமல்-தம் தொண்டர்கட்கு உடல் வருத்தம் மட்டுமே விளைவிப்பதன் மூலம் – 49 ஆண்டு காலத்தில் 2000 ஆண்டு கால சமூக, அடிமை நிலையை மவுனப்புரட்சி மூலம் (Silent Revolution) பெரிய அளவுக்கு மாற்றிய ஒரே தலைவர் உலக வரலாற்றில் பெரியார் அவர்களே ஆவார்"*[14]

பெரியார் என்ற ஒரு தனி மனிதர் இயக்கமாக உருவாவதற்கு அவர் நடத்தி வெற்றி பெற்ற பல்வேறு சமுதாயப் போராட்டங்களே முக்கியக் காரணமாக அமைந்தது.

பெரியாரின் தனித்தன்மைகள்

பெரியாரின் மனிதநேயப் பாங்கு, சமுதாயச் சிந்தனைகள், வீரம், துணிவு, பணிவு, மாறுபட்ட பார்வைகள், சொல்லாற்றல், சிக்கனம், விரைந்து பதிலுரைக்கும் திறன், காலந்தவறாமை போன்றவை இவரின் தனித்தன்மைகள் என்று கூறலாம்.

பெரியாரின் நீதிக்கட்சித் தோற்றம்

பார்ப்பனர் அல்லாதவர்களின் இயக்கத்தை 1917 முதல் 'ஜஸ்டிஸ் கட்சி' என்று பெயரிட்டு அழைக்கத் தொடங்கினார்கள். நாட்டில் விடுதலை இயக்கம் நாளும் வளர்ந்து வந்ததால் ஆங்கில அரசு நாட்டு மக்களுக்கு அரசாட்சியில் பங்கு கொள்ளும் உரிமையை வழங்கியது. 1923, 1929 ஆகிய இரு காலக்கட்டத் தேர்தல்களிலும் பார்ப்பனர் அல்லாதார் இயக்கமாகிய நீதிக்கட்சியே தேர்தலில்

---

14. ம.நாராயணன், பெரியாரும் மனித நேயமும், ப.180.

வெற்றி பெற்றுத் தொடர்ந்து 16 ஆண்டுகள் சென்னை மாநிலத்தில் ஆட்சி நடத்தியது.

> *"ஆனால் 1934இல் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி தோற்றது. பார்ப்பனர் அல்லாதார் பலவகை அரசியல் சமூக நன்மைகளை இவ்வாட்சியில் சட்டப்பூர்வமாக அடைந்தனர். நீதிக்கட்சி திராவிட தேசியம், தமிழ்த் தேசியம் இரண்டையும் வளர்த்தது."*[15]

1935இல் ஈ.வெ.ரா. சுயமரியாதை வேலைத் திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக்கொள்ளவே பெரியார் நீதிக்கட்சியைத் தொடர்ந்து ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார். நீதிக்கட்சி தேர்தலில் தோற்றாலும் பெரியார் தேற்றுதலால் தொடர்ந்து செயல்பட்டது. பின்னர் 1944ஆம் ஆண்டு நீதிக்கட்சி 'திராவிடர் கழகமாக' மாற்றப்பட்டது. 1947இல் இந்திய விடுதலை திராவிடர்களால் மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படவில்லை. 1948ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப்போர் தொடங்கப்பட்டது. திராவிடர் கழகத்திலிருந்து அண்ணா பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினார்.

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள்

மனித சமூகத்தில் உள்ள குருட்டுப் பழக்கவழக்கத்தால் மூடநம்பிக்கைகளையும் விளக்கமறியாச் சடங்குகளையும் அவற்றிற்காகச் செய்யப்படும் வீணான செலவுகளையும் ஒழித்தல் என்பது சுயமரியாதை இயக்கத்தின் முக்கியக்கொள்கையாகும்.

சுயமரியாதை இயக்க கொள்கைகளைப் பெரியார்,

> *"சாதி, மதம், வகுப்பு, ஆகியவைகளின் பேரால் ஏற்பட்டுள்ள பேதங்களையும் சமூகத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும்*

---

15. சே.இராசேந்திரன், தமிழ்க் கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம், ப.50.

இருந்து வரும் உயர்வு தாழ்வுகளையும் அகற்றி மக்கள் யாவரும் ஒரே சமூகமாகவும் சகோதரத்துவமாகவும் சமமாகவும் வாழும்படிச் செய்தல். பகுத்தறிவுக்கும், சுயமரியாதைக்கும் கட்டுப்பட்டு நடக்கும்படி மக்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்குதல் முதலானவை சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் என்று பெரியார் குடியரசில் எழுதினார்."[16]

மேலும் அரசியல்களின் பேரால் நமது நாட்டிலுள்ள கட்சிகளைப் போலல்லாமல் அந்நியர்களிடமிருந்து எந்தவொரு சிறுசெயலையும் எதிர்பார்க்காமல் மக்களின் அறிவை விளக்கி அவரவர்களின் மனப்பான்மையை மாற்றுவதன் மூலமே உண்மையான விடுதலையையும் சமத்துவத்தையும் தன் மதிப்பையும் உண்டாக்கக் முடியும். அதற்கான ஓர் இயக்கம் சுயமரியாதை இயக்கம் ஆகும் என்கிறார்.

"*சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் கொள்கையானது பார்ப்பன ஆதிக்கக் காங்கிரசை எதிர்ப்பதும் அதற்காக எவ்வளவு அல்லல்பட்டாலும் அவ்வளவு அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதும், சமுதாய இயலில் சாதி மத பேதங்களை அகற்றுவதும் மூடநம்பிக்கைகளை ஒழிப்பதும் சமதர்மமுமேயாகும்*"[17]

என்று பெரியார் குடியரசில் அறிக்கைவிட்டார். சுயமரியாதை இயக்கமானது திராவிடரின் பழம் பெருமையை அவர்களுக்கு மீட்டுக் கொடுப்பதற்காகவும், அவர்களைத் தலைநிமிர்ந்து நடக்கச் செய்யவும், சமூகத்தில் பார்ப்பனரே உயர்ந்தோர் என்னும் கொள்கையை முறியடிப்பதற்காகவும், சமூக அமைப்பில் பார்ப்பனர்களுக்கிருந்த உயர்சாதி நம்பிக்கையை ஒழித்துக் கட்டவும் தன்னை

---

16. **நெ.து.சுந்தரவடிவேலு, புரட்சியாளர் பெரியார், ப.63.**

17. **குடியரசு அறிக்கை, 10-3-1935**

ஒப்படைத்துக் கொண்டது. இத்தகைய சுயமரியாதைக் கொள்கையைப் பாரதிதாசன் கவிதைகளில்,

> *"அலைக்கூட்டத்தைக் கடல் என்பது உன் பிழை, நட்டுப் பார்ப்பதைவிட்டு நிமிர்ந்து நோக்கு கடல் தெரியும் அது எத்தனை பெரிது. எத்தனை ஆழமுடையது, எத்தனை தெளிவுள்ளது, சமத்துவமுடையது, விடுதலையுடையது சுயமரியாதைக் கடல் மற்றொரு முறை கூறுகின்றேன். அது பெரு நோக்கமுடையது. ஆழ்ந்த கருத்துக்களுள்ளது. சமத்துவமும் விடுதலையுடையது. சுயமரியாதைக் கொள்கையின் அளவு உன் கருத்தைப் பரப்பு, நீ அறிஞரால் அறிஞன் என்று கருதப்படுவாய். அப்போது நீ ஓர் குள்ளமனிதனாய் இருக்க வழியில்லை. நீ பேரறிஞன்"*[18]

என்று சுயமரியாதை இயக்கத்தை அறிவுக் கடலாய்க் காட்டுகிறார்.

பெரியார் சுயமரியாதை இயக்கம் சார்ந்த திருமணங்களை எல்லா இடங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எண்ணினார். எனவே,

> *"1932-நவம்பரில் புதுவையில் நடந்த 'சிவசங்கரன் - கிருட்ணவேணி கேசவன் பட்டம்மாள் ஆகியோர் திருமணத்திற்குத் தலைமை ஏற்றார் பெரியார். பாரதிதாசன் மணமக்களை வாழ்த்திக் கவிதை ஒன்றைப் படைத்தார்."*[19]

சுயமரியாதைத் திருமணம் என்பது நாட்டு மக்களின் முன்னேற்றம் கருதி உழைக்கின்ற நல்ல நோக்கமுடையவர் காட்டும் வழியில் அமைந்த திருமணம் என்பது பெரியார் கருத்தாகும். நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெருவாரியான இயக்கங்கள் பாடுபட்டுள்ளன. ஆனால் பொருள் சார்ந்த கருத்துக்களால் மக்களிடம் பல்வேறு கருத்து மற்றும் கொள்கை முரண்பாடுகளும் தோன்றின.

---

18. பாரதிதாசன், 'புதுவை முரசு,' 27-4-1931; பாரதத்தாய் குயில், 10-10-67, ப.42.
19. கு.அ., 9-10-1932.

சில இயக்கங்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாத அளவிற்கு மக்களும் பிறஇயக்கங்களும் திண்டாடின. அந்த வகையில் பெரியார் முன் நிறுத்திய கேள்விகளுக்கு விடை கூற முடியாதவர்களாய்ப் பிற இயக்கங்களின் தலைவர்கள் இருந்தனர்.

பெரியாரியத்தின் கொள்கைகள் சமூகத்தில் நிலைத்த இடம் பெறவில்லை என்றாலும், அதைப் பின்பற்றுவோர் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்கள் என்றாலும், மக்களைச் சிந்திக்கச் செய்யக் கூடியதாகப் பெரியாரியத்தின் கருத்துக்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் பெரியாரியக் கொள்கைகள் தமிழ்ப் புதுக்கவிதைகளில் காணப்படும்மாற்றை,

1) மொழிக்கோட்பாடு
2) அரசியல் கோட்பாடு
3) சாதிக் கோட்பாடு
4) மதக் கோட்பாடு
5) பெண்ணியக் கோட்பாடு
6) பகுத்தறிவுக் கோட்பாடு

என்ற தலைப்புகளின்கீழ் பகுத்து அறியலாம்.

1. மொழிக் கோட்பாடு

'மொழிதல்' என்னும் தொழிற்பெயரில் இருந்து தோன்றியது மொழி என்னும் பெயர்ச்சொல். மொழிதல் என்றால் பேசுதல் எனப் பொருள்படும். ஒருவர் தன்னுடைய கருத்தைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ள உதவும் கருவி மொழியாகும். இத்தகைய மொழிப்பற்று பற்றிப் பேசும் பெரியார்,

> *"எனக்கு மொழி அபிமானம், இலக்கிய அபிமானம் என்பதெல்லாம் கிடையாது. வெறும் மனிதாபிமானம் தான் உண்டு"*[20]

---

20. பெரியார், 'மொழியும் அறிவும்', பக்.30-31.

என்கிறார். விலங்கு, பறவைகளுக்கு மனஅறிவு அதாவது பகுத்தறிவு என்பதில்லை. ஏனென்றால், அவைகளுக்கு மொழியில்லை. மனிதனின் பகுத்தறிவு வளர்ச்சிபெற மொழியறிவு முக்கியமானதாகும். மொழி மனிதனுக்குப் புகழ் தரும்; செல்வத்தைச் சேர்க்கும்; அவனுடைய வரலாற்றை நிலை நிறுத்தும். இத்தகைய மொழி மீது பற்று கொண்டவர்களாக ஒவ்வொருவரும் திகழ வேண்டும்.

> *"ஒரு நாட்டிற் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாயப் பற்று மொழிப்பற்றேயாகும். மொழிப்பற்று இராதவரிடத்து தேசப்பற்று இராதென்பது நிச்சயம். தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. ஆதலால் தமிழர்களுக்குத் தாய்மொழிப்பற்றுப் பெருக வேண்டும் என்பது எனது பிரார்த்தனை"*[21]

என்கிறார் பெரியார். அதுபோல பாரதிதாசனும்,

> *"ஒரு நாட்டுக்கு மொழி வெறி உயிரென்று*
> *நல்லறிவுலகைக் கேட்டால் நவிலும்*
> *ஓரினத்திற்கு மொழி வெறி உணர்வென்று"*[22]

என்று மொழியின் புகழைப் பாரதிதாசன் பாடுகின்றார். எனவே ஒவ்வொருவரும் மொழிப்பற்று உடையவர்களாக வாழவேண்டும்.

தாய்மொழிப்பற்று, தமிழ் மொழிப்பற்று என்று ஆனதால்தான் பிரச்சனை தோன்றுகின்றது. உலகம் தோன்றிய நாள் முதல் வாழும் தொன்மையான மொழி தமிழ் மொழி. இப்படிப்பட்ட தொன்மையான மொழியினாலே தமிழ்மீது தனக்கு விருப்பம் ஏற்பட்டதாகப் பெரியார் கூறுகின்றார்.

---

21. பெரியார், புரட்சிமொழிகள், பக்.36-37.

22. பாரதிதாசன், குயில், 24-6-1958, ப.3.

> *"தமிழனுக்குத் தமிழ்மொழி, தமிழன் தோன்றிய நாளில் தோன்றியது எனில் தமிழன் தோன்றியது மக்கள் தோற்றத்தின் முதற்பகுதி என அறிதல் வேண்டும். எனவே தமிழ்மொழி முதன்மையானது"*[23]

என்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

பெரியார், தனித்தமிழை வளர்த்த மறைமலையடிகளைப் பாராட்டுகிறார். பிறமொழிச் சொற்களைத் தவிர்த்துத் தமிழ்மொழிச் சொற்களை முழுவதுமாக பேசுவதைத் தன் கொள்கையாகவே கடைபிடித்தார். பெரியார் தமிழ் மொழியில் எழுத்துச் சீர்த்திருத்தத்தைப் புகுத்தினார். பிறமொழிச் சொற்கள் பயன்படுத்துவது மட்டுமின்றி இந்தி மொழியை முற்றிலும் எதிர்த்தார். பெரியார் கொண்டுள்ள மொழிப்பற்றினைத் தமிழ்மொழி, தமிழினம், இந்தி எதிர்ப்பு ஆகியவை பற்றிய அவரின் கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.

தமிழ்மொழிப்பற்று

தமிழ்மொழி வளர்ச்சி பெற வேண்டுமானால் தமிழ்மொழியில் நல்ல பயிற்சி பெற்றவர்களாக ஒவ்வொருவரும் திகழவேண்டும். அயல்மொழி ஆதிக்கம் குறையவேண்டும். சீனா, ஜப்பான் போன்ற நாடுகளைப்போல தாய்மொழி வழிக்கல்வி மட்டுமே பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

> *"உலகிலேயே முதன்முதல் தோன்றிய நாடு தமிழ் நாடெனும் உலகிலேயே, மனித வர்க்கம் தோன்றிய இடம் தென்னாடு என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்"*[24]

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர்களின் வழித் தோன்றல்கள் தமிழர்கள். மேலை நாட்டினருடன் சிறப்பாக வாணிகம் நடத்தி வெற்றி

---

23. பாரதிதாசன், குயில், 2-12-1958, ப.5.
24. பெரியார் ஈ.வெ.ரா.சிந்தனைகள், முதல் தொகுதி, ப.587.

கண்டவர்கள். இலக்கியங்கள் பலவற்றை உலகிற்கு வழங்கிய கொடைஞர்கள். தமிழின் திருக்குறள் போன்றதோர் அறஇலக்கியம் உலகில் எம்மொழியிலும் காணப்படாத ஓர் அற்புதப் பெட்டகம். இன்று சீன மொழியிலும் கூட திருக்குறள் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்புடைய தமிழ்மொழி பற்றிய பெரியாரின் கருத்துக்கள் இன்குலாப்பின் 'எதிர்கொள்' என்ற கவிதையில்,

"வெள்ளை எதிர்ப்பின்
மனிதம் புரியக்
கருப்பனாய் இருந்துபார்
ஆதிக்க மொழி எதிர்ப்பின்
வரலாறு தெரியத்
தமிழனாய் இருந்துபார்" (ஓ.பு.ப.130)

என்று தமிழ்மொழியை எதிர்க்கும் ஆதிக்க மொழியாக இந்தியைக் கூறுகின்றார். அதுபோல 'தோண்டிகளுக்கு ஒரு வேண்டுகோள்' என்ற கவிதையில் 1981ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி மதுரை அருகில் கோவலன் பொட்டல் என்ற இடத்தில் ஓர் எலும்புக் கூடு கிடைத்தது. அது கோவலனுடையது என்றும் கூறினார்கள். அந்த எலும்புக்கூடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்பதை,

"தமிழ்ப்பால் பருகிய எலும்புக் கூடுகள்
எந்தக் காலத்திலும் மக்கிப் போகாது" (ஓ.பு., ப.148)

என்று காலம் கடந்து வாழும் தமிழின் பெருமையைக் கவிஞர் சுட்டுகின்றார்.

"கற்பின் அற்புதமும்
தமிழின் கன்னித்தன்மை போல்
காலங்கடந்தது என்பதை 'ஆராய்ச்சி'யால்
நிறுவ. . .
தோண்டிப் பெருமக்களே!
தோண்டிக் கொண்டே இருங்கள்" (ஓ.பு., ப.149)

எனத் தமிழ்மொழி பழமையானது என்பதைக் கவிஞர் கூறுகிறார். இப்படிப்பட்ட பழமையான தமிழ்மொழியை வளர்க்க யாரும் இல்லை என்று பெரியார் கவலை கொள்கின்றார்.

> *"ஆரியக்கலை, ஆரியப்பண்பாடு ஆகியவற்றைத் தென்னாட்டு மக்களிடையே முழுமுச்சாய்ப் பரப்பி நிலை கொள்ளச் செய்தனர் ஆரியர். இவர்களைப் போல் திராவிடக்கலை, திராவிடப் பண்பாடு ஆகியவற்றைப் பரப்புவதற்குத் தமிழ் மக்களிடத்தில் புலவர் யாரும் இல்லையே"*[25]

என்று பெரியார் வருந்துகிறார். இவ்வாறாகத் தமிழ் மொழியின், தமிழினத்தின் மீது பெரியார் பற்று கொண்டவராகத் திகழ்கின்றார்.

தமிழன்பன் கவிதைகளில் மொழிப்பற்று

தமிழன்பன் பெரியாரின் கருத்துக்கள்மீது பற்றுக் கொண்டவர். இவர் இலக்கிய உலகிற்குப் பல்வேறுபட்ட படைப்புகளை வழங்கியுள்ளார். இவரின் படைப்புக்களில் திராவிடக் கழகத்தின் தாக்கம் காணப்படுகின்றன. தமிழ் மீது பெரியார் கொண்ட பற்றுபோல இவரும் தன்னுடைய 'தமிழன்பன் கவிதைகள்' என்ற கவிதைத் தொகுப்பில் 'மானம்' என்ற கவிதையில்

> *"சொந்தமொழி! விந்தைமொழி! காவலர்கள்*
> *சொத்தாக ஒத்தமொழி! பாவலர்க்குச்*
> *சிந்தைமொழி! பத்தர்க்குப் பயனளிக்கும்*
> *தெய்வமொழி! அரசுமொழி! நீதி செய்ய*
> *வந்துதவும் சட்டமொழி! எமது வாழ்க்கை*
> *வளமாக இலகு மொழி! என்றிருக்கும்*
> *செந்தமிழை எம்முயிரை இன்பப்பேற்றைச்*
> *சிதையாத புதுநலனைக் கருவூலத்தை"* (த.க.தொ.1., ப.91)

---

25. பெரியார் ஈ.வெ.ரா., விடுதலை, 15-7-1952.

என்று தொடர்ந்து தமிழின் பெருமையை நிலைநிறுத்தும் கவிதைகளை அடிபிறழாமல் சொல்லிச் செல்கின்றார்.

தமிழ்மொழியை வாழ வைக்க வேண்டும் என்ற கருத்தில், 'ஊர்சுற்றி வந்த ஓசை' என்ற கவிதைத் தொகுப்பில், 'இருபத்தொன்றாம் நூற்றாண்டுத் தமிழனே' என்ற கவிதையில்

"கதா காலட்சேபங்களில்
பட்டி மண்டபங்களில்
கட்சிக் கூட்டங்களில்
வார்த்தைகள்
வெடித்துச் சிதறின...அவற்றின்
கூரிய சில்லுகள் குத்தித்
தமிழ்த்தாயே
நடக்க முடியாமல்
விழுந்தாள்" **(த.க.தொ1, ப.380)**

என்று தமிழ்மொழியின் சொற்கள் சரியாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதைச் சுட்டும் கவிஞர்,

"இனிவரும் தமிழனே!
துடைப்பத்தால்
இவற்றை எல்லாம் கூட்டித் தள்ளிவிட்டு
நட
மொழி என்பது
சப்தம் அல்ல. . . சுடர்!
உதடுகளை அசைத்தசைத்து
அணைத்து விடாதே.." **(த.க.தொ.1, பக்.380-381)**

என்று வருங்காலத் தமிழர்களுக்குத் தமிழ்மொழியை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்றும், மொழியை வாழச்செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார்.

> *"மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கம் பெருமளவிற்கு வெற்றியை ஈட்டுவதில் பெருந்துணை புரிந்தது பெரியாரின் தன்மான இயக்கம்"*[26]

என்று பெரியாரின் இயக்கம் 'தனித்தமிழ் இயக்கம்' வளர உதவியது. மேலும், 1916இல் மறைமலை அடிகளாரால் தோற்றுவிக்கப்பட்ட தனித்தமிழ் இயக்கம் இறந்த வடமொழிச் சொற்களை உயிருள்ள தமிழ் மொழியில் கலந்து வாழும் மொழியைச் சாகடிக்கும் முயற்சி என்று கூறுகின்றது. இப்படியாகத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பலரும் பாடுபட்டனர். அதில் மறைமலையடிகளாரின் பங்கு குறிப்பிடத்தக்கது என்பதைக் 'கதவைத் தட்டிய பழைய காதலி' என்ற கவிதைத் தொகுப்பில் 'நெடுமூச்சு' என்ற கவிதையில்,

> *"மறைமலையின் தமிழைத் தாழ்த்தி*
> *அருவி தரும் இசையிகழ்ந்தார் தமிழர் நாட்டில்*
> *எப்படியும் தமிழ் தாழ்த்தி தமிழழித்தே*
> *ஏற்றமுறை வழியுண்டு தடுக்கின்றோர் யார்?*
> *ஒப்புக்குத் தமிழரென்பார் தமிழைக் காக்க*
> *ஒரு போதும் எண்ணுகிலார் என்றுளத்தில்*
> *தப்பாக உணர்ந்தாரோ என்று பொங்கும்*
> *தமிழ்மகனின் நெடுமூச்சே தமிழின் மூச்சு"* **(த.க.தொ.2-119)**

என்று தமிழ்மீது பற்றுக் கொண்டவர்கள்போல் நடித்துக்கொண்டு போலியாக திரிகின்றனர் என்கின்றார் தமிழன்பன். தமிழ்மொழியைப் பேண வேண்டும் என்ற

---

26. **மறைமலை அடிகள், திராவிடர் தந்தைப் பெரியாரின் 1979 ஆண்டுச் சிறப்பு மலர், பினாங்கு, ப.**

எண்ணம் இல்லாதவர்கள் தமிழ் என் மூச்சு என்று முழங்குகின்றனர். இப்படிப்பட்ட தமிழ்மொழியின் மீது தீவிர ஆர்வம் கொண்டவர்களாக விளங்கும் மக்கள் எண்ணிக்கை மிகமிகக் குறைவு.

“தனித்தமிழ் குறித்துப் பெரியாரின் பேச்சுகளும் எழுத்துகளும், இந்தி எதிர்ப்பு போன்ற போராட்டங்களும் பெரியாரின் தன்மான இயக்கத் தோழர்களின் தனித்தமிழ் ஈடுபாடுகளும் அவ்வெற்றியை ஈட்டித்தந்தன. தமிழ் வளர வேண்டும் அதன் வளர்ச்சியில் பிறமொழிகள் குறுக்கிடலாகாது என்பது பெரியாருடைய அழுத்தமான கருத்து”[27]

தமிழ் மொழியில் நிறைவான நூல்கள் உருவாக்கித் தொண்டு செய்து பல மொழிகளிலும் தமிழின் புகழ்பாடும் மொழியாக்கங்கள் இடம் பெற வகை செய்ய வேண்டும். தரமான நூல்கள் தூய தமிழில் இடம் பெற்றால் அதுவே மிகப் பெரும் தமிழ்த்தொண்டாகும். தாய்மொழியாம் தமிழைக் காக்கப் போராடியவர்களின் நினைவாக “விடியல் விழுதுகள்” என்ற கவிதைத் தொகுப்பில் ‘இவர்கள்’ என்ற கவிதையில்,

“இவர்கள்
கல்லறைக் கதவில் காணும் கீறல்கள்
தமிழரின் புனிதச் சரித்திர வரிகள்!
விழிகளில் இவர்கள் இன்றைய தமிழகம்!
மரணம் என்னும் வார்த்தை இவர்கள்
பிறப்பு என்னும் பொருளைத் தந்தனர்
இவர்கள்
எலும்புச் சாம்பலை எடுத்துப் போட்டதே
செந்தமிழ் நாட்டுச் சித்திர வாசலின்
புள்ளிக்கோலம்! புதிய காலம்!” **(த.க.தொ.2, ப.323)**

---

27. **மா.இராசமாணிக்கனார், விடுதலை மலர், 1988, ப.13.**

என்று தமிழர்கள் எழுதிய வரலாறுதான் இன்று எல்லோருக்கும் பயன்படக்கூடியதாக அமைந்துள்ளது என்பதை எடுத்துக்கூறுவதாக இக்கவிதை வரிகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் மொழியின் பெருமையைக் கூற வரும் பாரதிதாசன்,

“வையத்தின் பழநிலவே
வாழ்வுக்கோர் புத்துணர்வே
மயிலே மேலோர்
ஐயத்திற்கறி வொகரியே
ஆடல தரும் செந்தமிழே” [28]

என்று பாராட்டுகின்றார். பாரதிதாசன்போல பெரியாரும் தமிழின்மீது பற்று கொண்டவர். தமிழ் மக்களின் சமூக வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஆரிய மொழியின் ஆதிக்கம் இருந்ததைக் கண்ட பெரியார் இதனை முறியடித்துத் தமிழ்மொழியே அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தமிழன்பன் “உன் வீட்டிற்கு நான் வந்திருந்தேன் வால்ட்விட்மன்” என்ற கவிதைத் தொகுப்பில் ‘இங்கும் ஒரு தமிழகத்தைப் படையுங்கள்’ என்ற கவிதையில்,

‘செருப்புத் தைப்பவனும், ஆடை அணி
செய்பவனும்
பெட்டிக்கடை வைத்து
வெற்றிலை பாக்கு விற்பவனும்
தமிழ் ஒலியை தமிழ் வாழ்வை
இந்த மண்ணில் வளர்ப்பான்!
தமிழினச் சங்கிலியின்

---

28. பாரதிதாசன், தமிழியக்கம், ப.6.

தங்கக் கண்ணிகளாய்
உங்கள் பிள்ளைகள் வளர்வார்கள்!
உங்கள் இரத்தம் அவர்களில்
உச்சரிக்கும் தமிழை" **(த.க.தொ.4, ப.223)**

என்று அமெரிக்காவில் தமிழர்களின் பிள்ளைகள் தாய் மொழியை மறந்து விடாமல் கட்டிக்காக்க வேண்டும் என்று கூறுகின்றார். ஆங்கிலத்தைப் பயன்படுத்தாத ஆயிரம் தமிழர்களை அமெரிக்காவில் உருவாக்குங்கள் என்று கூறுகின்றார்.

அதுபோல "நடை மறந்த நதியும் திசைமாறிய ஓடையும்" என்ற கவிதைத் தொகுப்பில் '1996-எரியும் வினாக்கள்' என்ற கவிதையில்,

'எதைத்
தமிழன் எதிர்பாக்கிறான்
நேற்றின் அத்திகளையா?
இன்றின் அரும்புகளையா?
சிங்கள வெறியர்களால்
அழிகிறது ஈழத்தமிழினம்
இங்குள்ள தமிழன்?
நம்பிக்கைகள்
கறுத்துப் போகவோ சூரிய வெளிச்சம்?
பாடல்கள்
கிழிபட்டுச் சாகவோ இராக வெள்ளம்?" **(த.க.தொ.4, ப.264)**

என்று தமிழன்பன் தமிழகத்தில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமல்ல எங்கெங்கும் வாழும் தமிழர்களாயினும் நம்பிக்கை இழக்காமல் வாழ வேண்டும் என்று கூறுகின்றார். அமெரிக்காவிலும் தமிழர்கள் தங்களையும் மொழியையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற கவிஞர், மொழி, இன வெறியர்களாக

இல்லாமல் அழியும் தன் மொழி இனத்தைக் காக்கப் பாடுபட வேண்டும் என்று கூறுகின்றார்.

'அருவிகளில் அலை கடல்களில்' என்ற கவிதையில்,

"ஓர் உடல் வாழ
ஒருயிர் போதும்
பத்து உயிர் வேண்டும் என்பது
பைத்திக்காரத்தனம்
ஓர் உயிரான தமிழ் போதும்
தமிழனுக்கு
இது
குறுகிய நோக்கம் என்றால்
இந்தக்
கற்புள்ள தப்பு
மீண்டும் மீண்டும் செய்யப்படும்" **(த.க.தொ.4, ப.288)**

என்று தமிழ்மொழி மீது தீராதப் பற்று கொண்டவராகத் தமிழன்பன் விளங்குகின்றார் என்பதை அவரது கவிதை சுட்டுகின்றது. எதைச் சொல்ல நினைத்தாலும் அதைச் சொல்ல சொற்கள் தேட வேண்டியதில்லை. அதற்குமுன் தானே வந்துவிடும் தமிழ்மொழியின் சொற்கள் என்பது கவிஞரின் கருத்தாகும். எந்தவொரு கவிஞனும் தமிழ் மொழியை விரும்பவில்லை என்று சொல்வதற்கு வாய்ப்பே இல்லை. அள்ள அள்ளக் குறையாத செல்வம்போல தமிழ்மொழியில் சொற்களும் புதிது புதிதாக உருவாகிக் கொண்டு இருக்கின்றன என்பது கவிஞரின் எண்ணமாகும். கவிஞரின் கருத்தைப்போல பெரியாரும் தமிழ்மொழியை ஏற்றுக்கொண்டவர் என்பதை,

"நமது மேன்மைக்கு நமது தகுதிக்கு நமது முற்போக்குக்கு ஏற்ற மொழி தமிழை விட மேலான ஒரு மொழி இந்நாட்டிலில்லை என்பதற்காகவே தமிழை விரும்புகின்றேனே தவிர அது அற்புத

அதிசயங்களை விளைவிக்கக் கூடியது என்பதற்காக அல்ல. சிவபெருமான் பேசிய மொழி என்பதற்காகவோ அகத்தியரால் திருத்தப்பட்டது என்பதற்காகவோ கூட அல்ல"[29]

என்று தமிழ்மீது தான் விருப்பம் கொண்டதன் காரணத்தைப் பெரியார் கூறுகின்றார்.

ந.பிச்சமூர்த்தி, இன்குலாப் ஆகியோருடைய கவிதைத்தொகுப்புகளின் மொழிப்பற்றுடைய கவிதைகளைக் காணமுடியவில்லை.

2. அரசியல் கோட்பாடு

'அரசியல்' என்பது ஆட்சி முறையோடு தொடர்புடையதாகும். ஜனநாயகம், சோஷலிஸம், சமுதாய நிறுவனங்கள், சமூக அமைப்பு, அதன்நீதி, நியதிகள் ஆகியவற்றை அரசியல் கோட்பாடுகளுக்குள் கொண்டு வரமுடியும். நமது சுதந்திரம் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை என்ற ஆழமான உணர்வு பெரியார் மனதில் வேரூன்றி விட்டது. அரசாங்கம் போட்ட சட்டத்திட்டங்கள் வர்க்க வேறுபாட்டை அதிகரிக்கச் செய்துவிட்டது. அரசியல் நடத்தும் அரசியல்வாதிகள் எல்லாம் ஆதிக்கச் சக்திகளாக விளங்குகின்றனர். அவர்களை எதிர்த்துப் போராடும் சக்தியற்றவர்களாக ஏழைகள் விளங்குகின்றனர். அந்த ஆதிக்கச் சக்திகளிடம் சிக்கித் தவிக்கும் மக்களின் துயரங்களைத் தீர்க்கப் போராட வேண்டும் என்கிறார் பெரியார்.

"உலகில் மனிதன் மற்ற உயிரினங்களை விடச் சிறந்தவனாக கருதப்படுவதற்கு காரணம் அவன் எல்லையற்ற அறிவுச் சக்தி பெற்றிருப்பது தான் மற்ற நாட்டு மனிதன் அந்த அறிவைப் பயன்படுத்தி மிக மிக முன்னேற்றம் கொண்டு வருகிறான் ஆனால் இந்த நாட்டு மனிதனோ அந்த அறிவைப்

---

29. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், இரண்டாம் தொகுதி, ப.177.

பயன்படுத்தாத காரணத்தினால் மிக மிகப் பின்னுக்குப் போய் கொண்டிருக்கிறான்."[30]

இப்படிப்பட்ட உலகை நாம் மாற்றுவதற்கு எண்ணாமல் சிதைத்துக் கொண்டு இருக்கின்றோம். அறிவைப் பயன்படுத்தி நல்லதொரு அரசியலை நடத்தி, ஆட்சி முறைகளின் குறைபாடுகளை நீக்கி சீர்மைமிக்க நாடாக மாற்ற முயலுதல் அவசியமாகும்.

இன்குலாப் 'அபஸ்வரங்கள்' என்ற கவிதையில் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடியவர்களின் தியாகங்கள் வீணாக்கப்பட்டு அதிலும் அரசியல் ஆட்சி செய்கின்றது என்னுரைக்கின்றார். விடுதலை என்ற விளம்பர வெளிச்சத்தில் கொடிதான் மாறியது. விடுதலை எங்கே? என்று உடைமைவர்க்கம் விடுதலையை விலை பேசியதாகக் கூறுகின்றார்.

'உன்
மடியில் புரளும் இந்திய மக்களுக்குச்
சுதந்திரம் என்பதை இருட்டடிப்புச் செய்தபின்
ஆளும் வர்க்கங்கள் அண்டை நாடுகளில்
ஜனநாயக விளக்கை ஏற்றி வைக்கிறார்களாம்
சின்னது சிறிய சிக்கிம் நட்சத்திரம்
இவர்களின் கிரகண இருட்சிறையிலே' (ஒ.பு., ப.96)

ஒரு நாட்டை அல்லது சமூகத்தை ஆட்சிபுரிவது அந்த நாட்டு மக்களின் நன்மைக்காகவே தவிர ஆட்சி புரிவோரின் நன்மைக்காக அல்ல என்பதை,

"அரசியல் என்பது யார் நம்மை ஆள்வது என்பதைப் பற்றியதல்ல. நமது மக்களுக்குப் எந்த மாதிரியான ஆட்சிமுறை இருக்க வேண்டும் என்பதைப் பற்றியதே ஆகும். நம் நாட்டுக்கு இன்று எவ்வித அரசியல் கிடைப்பதானாலும் அதில் சமூக

---

30. பெரியார், விடுதலை, 22-5-1961, ப.1.

சமத்துவமும் சமூக ஒற்றுமையும் உண்டாக்கக் கூடிய தன்மை இருக்க வேண்டும்”[31]

என்பார் பெரியார். இவ்வாறாக மக்களுக்கு பயன்தரக் கூடியதாக அரசியல் இருந்தால் மக்களின் வாழ்க்கைமுறைமாறி நாட்டின் முன்னேற்றமும் அதிகரிக்கும். அப்படியில்லாமல் மக்களின் வாக்குகளை விலை கொடுத்து வாங்கும் போலி அரசியல்வாதிகளை இன்குலாப் ‘தெருவிளக்கு’ என்னும் கவிதையில் சாடுகின்றார்.

“காலைச் செய்தித் தாளைப் புரட்டினால்
பஞ்சப்படிகள் உயர்த்தப்படுகின்றன
துப்பாக்கிச் சூடு செய்திகள் இல்லை
போலீஸ்காரனின் லத்திகள் எல்லாம்
கொல்லையில் முருங்கைக் காய் பறிக்கிறதாம்
தேர்தல் ஊர்வலம் வரும் தேசத்தலைவர்கள்
மாலைகளை எடுத்து மக்கள் மீது வீசுகிறார்கள்
மந்திரிமார்கள் மக்களை நேசிக்கிறார்கள்” (ஒ.பு.ப-168)

என்ற கவிதைவரிகளில் அரசியல்வாதிகளுக்கு மக்கள் மீதான பற்று அதிகமாகி விட்டது. காரணம் வாக்குப்பெட்டிகளில் தங்கள் கட்சிக்கான வாக்குகள் நிறைய வேண்டும் என்ற எண்ணம். சுயநலத்தின் உந்துதலில் அதிக வாக்குகள் சேர வேண்டும் என்ற எண்ணத்தால் இப்படிப்பட்ட அறிக்கைகளை வெளியிட்டு அரசியல்வாதிகள் சுயநலங்களின் பிறப்பிடமாக திகழ்வதாகக் கவிஞர் சாடுகின்றார்.

அரசியல் பற்றிய பல்வேறு கூறுகளை எடுத்துரைக்கும் அரசியல் சாசனம் இன்று தங்கள் தேவைகளுக்காக அரசியல்வாதிகளால் திருத்தி எழுதப்பட்டுக்

---

31. பெரியார், புரட்சி மொழிகள் ,ப.69.

கொண்டிருக்கின்றது. இன்குலாப் தனது 'கற்பி; கிளர்ச்சி செய்; ஒன்றுபடும்' என்ற கவிதையில்,

"அரசியல் சாசனப்
பக்கங்களுள்
பாரத ரத்னா
பூட்டைப் போட்டு
சிறை வைக்க முயன்றார்கள்
ஒரு நூற்றாண்டு முடிவில்" (ஓ.பு., ப.300)

என்று கவிதை தொடங்குகின்றது. இதில் பேச்சுரிமை மறுக்கப்பட்டு ஊமைகளாகத் திரியும் மனிதர்கள் அரசியல் நடத்திட முடியாது. எதற்கும் துணிந்து செயல்படும் துணிவுள்ளமும் அஞ்சாத தன்மையும் கொண்டவர்கள் சமூக விரோதச் செயல்களைச் செய்து அரசியல் நடத்திக் கொண்டிருக்கின்றனர் என்று கவிஞர் போலி அரசியல்வாதிகளைப் பார்த்து குமுறுகின்றார்.

தமிழன்பன் கவிதைகளில் இன்குலாப் கவிதைகள் போலவே அரசியல் ஊழல்கள், வாக்குரிமை பற்றிய கருத்துக்கள் நிறைந்துள்ளன. அதில் தமிழன்பன் "அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்" என்ற கவிதைத் தொகுப்பில் 'வாக்குச் சீட்டுகளுக்கு ஓர் அர்த்தம் வரட்டும்' என்ற கவிதையில் மதச் சார்பற்ற எமது நாட்டில் எல்லோர்க்கும் உரிய மாபெரும் பண்டிகைத் தேர்தல் எனத் தொடங்குகின்றார்.

"வாக்குச் சீட்டுக்கள்
ஒருநாள் ரொட்டிக்கு
'டோக்கன்'களாக
ஏழை இந்தியர்
எல்லோர்க்கும்
வழங்கப்படும்" (த.க.தொ. 3, ப.254)

என்று தேர்தல் நேரத்தில் நடத்தப்படும் அரசியல் திருவிளையாடல்கள் பற்றிக் கூறுகின்றார். மேலும்,

“கொடிமரங்களைப்
போலவே
கட்சிகளுக்கும்
இங்கே
இலட்சிய வேர் இல்லை
தெருவில்
மூலை முடுக்கெல்லாம்
விறைத்து
நிற்கும்
அஃறிணைப் பிணங்கள்” **(த.க.தொ.3, ப.257)**

என்று கட்சிக் கொடிகளைப் பற்றிப் பேசுகின்றார். அரசியலும், பொருளாதாரமும் சமூக அமைப்பு பெற்ற பிள்ளைகள்தான் இரண்டும் வேறு வேறல்ல.

“நாமும் நமது நாடும் முன்னேற வேண்டுமானால் சமுதாயத் துறையிலே பெரும் மாறுதலை உண்டாக்குவது அவசியமாகும். அதன் பின்னரே நல்ல ஆட்சியும் ஏற்படுத்த முடியும் என்பது திண்ணம். அவ்வாறு இல்லாது இன்றைய சமுதாய அமைப்பைக் கொண்டே யார் ஆட்சி செய்தாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள் ஒரு சிறிதும் நீங்குவதற்கு வழி இல்லை”[32]

என்று பெரியார் கூறுகின்றார். ஒரு தலைவன் சரியில்லை என்றால் நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும், வீடாக இருந்தாலும் முன்னேற்றம் இருக்காது. அந்த வகையில் தலைவன் என்பவன் நாட்டின்மீது பற்றுக் கொண்டு மக்களை நல்வழிப்படுத்துபவனாக இருக்கவேண்டும். இந்தவகையில், தமிழன்பனின்

---

32. பெரியார், மலர்கள், ப.136,

"கதவைத் தட்டிய பழைய காதலி" என்ற கவிதைத் தொகுப்பில் 'அலர் பெரிதே தோழி' என்ற கவிதையில்,

"நல்லதொரு தலைவனில்லா நாட்டை மாற்றோர்
நலிவு செயல் போலெழுந்த அலர்தான் இங்கே
எல்லையெலாம் இழந்திட்ட தமிழர் கூடி
எழுப்பியவோர் பேரொலியிற் பெரிதே தோழி" (த.க.தொ.2, ப.87)

என்று நல்ல தலைவன் இல்லையென்றால் நாடு தன் எல்லைகள் எல்லாம் இழந்து தவிக்கும் என்கிறார் கவிஞர் தமிழன்பன். தலைவனைத் தேர்வு செய்ய வாக்குகள் செலுத்தினாலும் அதன் பயன் என்ன? என்பதை உணராமல் மக்கள் இருக்கின்றார்கள். நீதிகளைச் சொல்ல வேண்டிய நீதிபதிகளே சிறைவாசம் புரிகின்ற காலம் இது. மக்களை நல்வழிப்படுத்த வேண்டிய ஆட்சியாளர்களே குற்றங்களைச் செய்கின்ற கொடுமையான காலம். இப்படிப்பட்ட காலத்தில் தேர்தல் என்பது வணிகநோக்கம் கொண்ட பெரும் சந்தையாக ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கடை விரிக்கின்றது. அதில் யார் வாக்குகள் அதிகம் விற்கப்படுகின்றன? என்பதே போட்டி என்பதைத் தமிழன்பனின் "நாம் இருக்கும் நாடு" என்ற கவிதைத் தொகுப்பில், 'வாக்கு வரம் தரும் தெய்வம்' என்ற கவிதையில்,

"நீ நிகரற்றவன்
உத்தமனே உன்
ஓட்டுகள் மேம்பட்ட
தித்தனமே!
காகிதம் தானய்யா
ஓட்டுனக்கு அதில்
ஆயிரம் லாபங்கள்
எங்களுக்கு!
....

ஆலய தெய்வத்தை
யார் தொழுவார் கையில்
ஓட்டுளின தெய்வமே
போற்றுகிறோம்
கற்பூர தீபங்கள்
காட்டுகிறோம் – அந்த
வாக்கு வரம்தர
நீட்டு கரம்! (த.க.தொ.2, பக்.474-475)

என்கிறார் தமிழன்பன்.

> *"வோட்டுகள் வாங்கி வெற்றி பெறும் மக்கள் பிரதிநிதிகளிடம் சீர்த்திருத்தம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் ஜனப் பிரதிநிதித்துவமான ஓட்டுகள் என்பன பெரிதும் பாமர மக்களிடையே இருக்கின்றன. பிரதிநிதிகளாக வருபவர்களும் பெரிதும் சீர்த்திருத்த விரோதிகளுக்குப் பயந்தவர்களாகவும் இருக்கிறார்கள்"*[33]

என்று வாக்களிப்பது பற்றிப் பெரியார் கருத்துத் தெரிவிக்கின்றார். வாக்களிக்கும் மக்கள் பணத்தை எதிர்பார்த்து வாக்குக்கு எவ்வளவு பணம் கொடுக்கின்றார்கள், உங்கள் ஊரில் எவ்வளவு?, எங்கள் ஊரில் இவ்வளவு என்று பேசத் தொடங்கியது போதும். அரசியல்வாதிகள் நாட்டின் நிதிநிலைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்து ஆட்சியைப் பிடிக்க வேண்டும். எந்தக் கட்சி எந்தக் கட்சியோடு கூட்டணி வைத்துள்ளது. தண்ணீர், அரிசித் தட்டுப்பாடு பற்றி பிறகு யோசிக்கலாம். வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு இவற்றைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தால் வேட்பாளர் சின்னங்கள் மறந்து போகும் ஏணியில் யார்?, எருதில் யார்?, எலியில் யார்? என்று தெரியாமல் போய்விடும்.

---

33. பெரியார், ஈ.வெ.ரா. சிந்தனைகள், தொ.1, ப.329.

“இனக்கலவரங்கள்
கொலை கொள்கைகள்
இந்த
அற்பக் கவலைகளில்
நேரத்தை
அவமானப்படுத்தினால்
புனித
சனநாயக் கடமையில்
தவறி விடுவோம்
ஆமாம். . . . இந்தத்தடவை
ஓட்டுக்கு
எவ்வளவு உத்தேசமாக?” (த.க.தொ.2, ப.529)

என்று “நாம் இருக்கும் நாடு” என்ற கவிதைத் தொகுப்பில் ‘ஓட்டுக்கு எவ்வளவு உத்தேசமாக’ என்ற கவிதையில் விற்பனைக்குள்ளான வாக்குகளும் வாக்குறுதிகளும் பற்றிக் கூறுகின்றார். அதேபோல “உன் வீட்டிற்கு நான் வந்திருந்தேன் வால்ட் விட்மன்” என்ற கவிதைத் தொகுப்பில் ‘எண்ணச் சிறகுகள்’ என்ற கவிதையில்,

“ஜனநாயகம்
வாக்குப் பெட்டிகளைச் சிந்தித்தது
மனிதன்
கள்ள வாக்குகளைச் சிந்தித்தான்” (த.க.தொ.4, ப.215)

என்று கூறுகின்றார். பதவி என்பது ஒரு போகப் பொருளாக மக்கள் கருதத் தொடங்கியதால் நல்லாட்சி நடத்த வேண்டும் என்ற எண்ணம் மறந்து பதவி வெறி பிடித்தவர்களாக மக்கள் திகழ்கின்றனர் என்று “நடை மறந்த நதியும் திசை மாறிய ஓடையும்” என்ற கவிதைத் தொகுப்பில் ‘வரலாற்றுக்கு ஒரு பாடம்’ என்ற கவிதையில்,

"இனி
தோற்கடிக்கப்பட்ட
நியாயங்களின் வாக்கு மூலத்திலிருந்து
தொடங்குவோம் வரலாற்றை
……………………
……………………..
பதவி வெறிகளால் கடித்துக் குதறப்பட்ட
பண்பாட்டு அரசியலின்
காயங்களின்
கறைகளிலருந்து
வார்த்தைகளைச் சேகரம் செய்யட்டும்
வாக்கியங்கள்" **(த.க.தொ.5, ப.237)**

என்று பதவி என்பது அரசியலாய்ப் போனது. பணத்திற்காகவும் கௌரவத்திற்காகவும் என்ன விலைகொடுத்தும் வாங்கத் தயாராகிவிட்ட அரசியல்வாதிகளுக்கு வாலை ஆட்டிக்கொண்டு தெண்டர்கள் கூட்டம் நிற்கின்றது என்று தமிழன்பன் ஆவேச முழக்கமிடுகின்றார். அரசியலைப் பற்றி இதே கவிதைத் தொகுப்பில் 'முள்களோடு பழகுவோம்' என்ற கவிதையில்,

"இரத்தப்
புற்றுநோய் கண்ட
இந்திய ஜனநாயகத்தின்
கழிப்பிடங்களே கட்சிகள்!
ஆரோக்கியமற்ற அரசியல்
நமது
மார்புக் கூட்டுக்குள் வந்து
இருமுகிறது
அயல்நாட்டுக் கடன்கள்
அதட்டுகின்ற நம் சுவாசப் பைக்குள்" **(த.க.தொ.4, ப.255)**

என்று அரசியலை நல்லாட்சி ஏற்படுத்தாத ஓர் அமைப்பாக மக்கள் கருதும் போக்கினைச் சுட்டுகின்றார். அரசானது கடமை மறந்து செயல்படக்கூடாது என்றும் தமிழன்பன் கூறுகின்றார். அரசின் கடமை பற்றிக் கூறவரும் பெரியார்,

> *"சாதி வித்தியாசமோ, உயர்வு தாழ்வோ கற்பிக்கின்ற புத்தகங்களைப் படிக்கக் கூடாது என்று சொல்லி விட வேண்டும். மீறிப் படிக்க ஆரம்பித்தால் அவற்றைப் பறிமுதல் செய்ய வேண்டும். உயர்வு தாழ்வு வித்தியாசம் முதலியவை கொண்ட மடாதிபதிகளைச் சிறையில் அடைத்து விட வேண்டும். பொது மக்கள் கிளர்ச்சி செய்தால் மடாதிபதிகளைத் தீவாந்திரத்திற்கு அனுப்பிவிட வேண்டும்"*[34]

என்கிறார். இவ்வாறாக அரசின் கடமைகளைக் கூறும் பெரியாரின் கருத்துக்களை அடியொற்றி, "சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள்" என்ற கவிதைத் தொகுப்பில் தமிழன்பன்,

> *'தலைவர் உடம்பெலாம் பொய்தான்*
> *ஊரை அடித்து உலையில் போட்டார்*
> *என்பது மட்டும் மெய்'* (த.க.தொ.4, ப.498)

என்று அரசியல் தலைவர்களை நையாண்டி செய்கின்றார். இதே கவிதைத் தொகுப்பில்,

> *"ஊதுவத்திச் சின்னம்*
> *கட்சி வென்று கோட்டை பிடித்தும்*
> *நாற்றம் போகலை இன்னும்"* (த.க.தொ.4, ப.519)

என்று கட்சிச் சின்னம் பற்றிக் கேலி பேசுகின்றார். அதுபோல,

---

34. பெரியார், குடிஅரசு, 9-12-1928.

"நீதி தேவன் சம்பளம்
தராசு விற்று வாங்குகின்ற
பழைய பேரீச்சம் பழம்" **(த.க.தொ.4, ப.562)**

என்று நீதி விலைபேசப்படுவதைக் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார். "இரவுப் பாடகன்" என்ற கவிதைத் தொகுப்பில் 'சூரியன் கடைசியாய்ச் சொன்னது' என்ற கவிதையில்,

"பொய் பிறப்பதற்கு
முந்திப் பிறந்த அரசியல் வாதிகள்
வாக்குரிமை இருந்தாலே
சூரியன் வார்த்தைகளைக்
கேட்க மாட்டார்களே - 'தெரியாது'
என்றனர்" **(த.க.தொ.4, ப.616)**

என்று அரசியல்வாதிகள் எப்பொழுதும் பொய்யானவர்கள் என்பதாகக் கவிஞர் கூறுகின்றார். மேற்கண்ட கவிதைகள் அரசியல் வாழ்க்கையைப் போலியானதாக மாற்றி உண்மைக்குப் புறம்பான நடவடிக்கைகளைச் செய்யும் அரசியல் தலைவர்களைப் பற்றிக் கூறுகின்றன. பெரியாரும் உண்மைத்தன்மையுடன் இல்லாத தலைவர்களை உண்மையாக எதிர்க்கவும், கண்டிக்கவும் தயங்காதவர், அவரின் கருத்துக்கள் போலவே தமிழன்பனின் கவிதைகளும் உண்மையை எதிர்க்கும் சக்தியாகத் திகழ்கின்றன.

3. சாதிக்கோட்பாடு

சாதி ஆங்கிலத்தில் 'Caste' **என்று பொருள்படும். சாதி, வருணம் என்றும் தமிழில் கூறுவர்.** 'Caste' **என்னும் சொல்** *'Caster'* **என்ற போர்த்துக்கீசியச் சொல்லிலிருந்து தோன்றியது. சாதி என்பது ஒரு குறிப்பிட்ட கலாச்சாரம், சடங்குகள், எல்லைகள், தொழில் தனித்தன்மைகளையே குறிக்கின்றது.**

சாதி என்பது தானே தோன்றியதல்ல, மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். காலம்தோறும் பாடுபட்டு உழைக்கும் மக்களினத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யும் தொழில் முறையால் சாதி பகுக்கப்பட்டது. பாரதிதாசனின் பாடலில்,

> *"பிரமன் உடல் தனில் நான்கு வகையாம் மக்கள்*
> *பிறந்தாராம், பார்த்தானாம் என்றன் தந்தை*
> *பிரமன் முகந் தனிற்பார்ப்பார் பிறந்திட் டாராம்*
> *பிரமன் தோள் பெற்றதுவாம் மன்னர் தம்மைப்*
> *பிரமனிடை தனிற் பிறந்தார் உலகிலுள்ள*
> *இதுனுநூல் ஆரியர் சொல்*
> *பிழைக்க வந்த ஏமாற்றுக் காரர் சூழ்ச்சி"*[35]

என்கிறார். இறைவனின் ஒவ்வோர் உறுப்புகளிலும் இருந்து மனிதன் பிறந்ததாகவும், அந்த உறுப்பை அடிப்படையாக வைத்து சாதிப் பாகுபாட்டைப் பகுத்து வைத்துள்ளனர். அறம், பொருள், இன்பம் அடைவது மனித வாழ்வின் உயர்ந்த குறிக்கோளாகும். அடிமைத்தனம், சாதி, மதம் இவை நிலவும்போது மனித வாழ்க்கைத் தன்னிலை மறந்து, சீர்கெட்டுப் போகின்றது. ஒவ்வொரு மனிதனும் சமூகத்தைச் சார்ந்து வாழவேண்டும். மனித வாழ்க்கை என்பது தனி வாழ்க்கையன்று. அது ஒரு கூட்டு வாழ்க்கையாகும். அதைச் சாதி என்ற ஒரு காரணி கொண்டு சிதைக்க முயலக்கூடாது.

> *"சாதி என்பதே பொருளாதாரச் சுரண்டலுக்கும் உழைப்புச் சுரண்டலுக்கம் ஆதிக்கம் செலுத்தவும் சுயநலக் கூட்டத்தால் சதி செய்து உருவாக்கப்பட்ட அமைப்பு"*[36]

---

35. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-3, ப.76.

36. பெரியார், விடுதலை மலர்,_1972, ப.54.

என்கிறார் பெரியார். பகுத்தறிவோடு சிந்திக்கும் திறனை மனிதன் தொடக்கக் காலத்திலே பெற்றிருந்தால் சாதி தோன்றி இருக்காது.

நம் நாட்டு மக்கள் அறிவு வளர்ச்சி பெற வேண்டுமென்றால் நூலகங்கள் பல நிறுவப்பட வேண்டும். அவர்கள் உலகியலை அறிந்து அதற்கேற்றார்போல வாழ்க்கையை மாற்றிக் கொள்ள உதவும். ஆனால் இதையெல்லாம் பின்பற்றாமல் சாதியைப் பின்பற்றி பகுத்தறிவைப் புறந்தள்ளி மனித இனம் செய்யும் மூடநம்பிக்கையின் பழக்க வழக்கங்களால் சமூகத்திற்கு எந்தப் பயனும் இல்லை என்கிறார் பெரியார். மனிதனின் சுயநலப் போக்கால் உருவாக்கப்பட்ட சாதி இன்று அழிக்கமுடியாத ஆற்றல் பெற்றுவிட்டது.

இன்குலாப் கவிதைகளில் சாதியச் சாடல்

இன்குலாப்பின் ‘ராஜமகேந்திர சதுர்வேதி மங்கலம்’ என்ற கவிதையில்,

“நமது உழைப்பை உறிஞ்சும் உதடுகளாய்
ஐயனும் வேளாளனும் ஐக்கியப்படுகிறான்
நமக்கு எதிராய் நம்மைப் போலவே
நிலமில்லாதவரை நிறுத்தி வைக்கிறான்” (ஓ.பு., ப.49)

என்கின்றார். நிலமுடைய பொருளாதாரத்தில் போதிய வளர்ச்சி பெற்றவர்கள் உயர்ந்த சாதியாகவும் அன்றாடம் உழைத்து உயரும் எண்ணம் கொண்ட நிலமற்ற ஏழைகள் தாழ்ந்த சாதியினராகவும் சமூகம் உருவாக்கிவிட்டது என்று சாடுகின்றார்.

“வேதப் பார்ப்பானும் வெள்ளாளப் பயலும்
சாதியால் வேறு - தருமத்தால் ஒன்று” (ஓ.பு., ப.49)

என்று சாதியப் பாகுபாட்டை இன்குலாப் கூறுகின்றார். அதுபோல சாதிய அடக்குமுறைகளால் உயிர்கள் கொல்லப்படுவது சாதாரண செயலாகிவிட்டது என்பதை இன்குலாப்பின் ‘நிஷாந்த்’ என்ற கவிதையில்,

"அம்பலக்காரரின் கிட்டங்கி வாசலில்
சாத்தையா என்ற சக்கிலிச் சிறுவன்
சவுக்குக் காயங்களோடு செத்துக் கொண்டிருக்கிறான்" (ஓ.பு., ப.100)

என்ற வரிகளில் சாதியை அடிப்படையாகக் கொண்டு கூலி நிர்ணயிக்கப்படுவதும், அடிமைமுறைப் பின்பற்றுப்படுவதும், ஏழைகள் என்ற முத்திரையிடப்பட்டு சுரண்டப்படுவதும் தொடர்கின்றது. இந்த சாதி அமைப்பு பழங்குடியினரிடம் இருந்து தோன்றியது என்று சிலர் கூறும் கருத்தைப் பெரியார் மறுத்துரைக்கின்றார்.

"எனது சமுகத் தொண்டின் முதலானதும் முக்கியமானதும் சாதி ஒழிப்புத் தெண்டு தான் என்றாலும் நமது நாட்டைப் பொறுத்த வரையில் கடவுள், மதம், சாஸ்திரம், பார்ப்பனர் ஒழிப்புப் பிரச்சாரமாகத் தான் முடியும் இந்த நான்கும் ஒழிந்த இடம் தான் சாதி ஒழிந்த இடமாகும்"[37]

என்று பெரியார் கூறும் கருத்தை அடியொற்றிய சிந்தனைகள் இன்குலாப் கவிதைகளில் காணமுடிகின்றது. 'வீணான வீணையை மீட்பதற்கு' என்ற கவிதையில்,

"ரொம்பக் குனிபவன்
கீழ்ச்சாதி
குனியவே மறுப்பவன்
மேல்சாதி
மேல் சாதிக்காரனுக்கு
வேர்வை கண்டதெல்லாம்
வேலையால் அல்ல
வெப்பத்தால்" (ஓ.பு.ப.160)

---

37. **பெரியார், ஈ.வெ.ரா சிந்தனைகள், தொகுதி-3, ப.1974.**

என்று சாதியத்தின் எதிர்ப்பைக் கவிதைகளில் காட்டுகின்றார். இவ்வாறாக இன்குலாப் கவிதைகளில் பெரியாரின் சிந்தனைகளில் ஒன்றான சாதிய எதிர்ப்பு காணப்படுவதை அறிய முடிகின்றது.

தமிழன்பன் கவிதைகளில் சாதியச் சாடல்

பழங்காலத் தமிழகத்தில் தொழிலால் பாகுபாடு இருந்ததே தவிர பிறப்பால் ஏற்றத்தாழ்வு கருதும் அறியாமை இல்லை. வருணம் என்ற சொல்வழக்கு சங்க காலத்தில் தமிழர்கள் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை.

> *"வருணம், சாதி, பிராமணன், சத்திரியன், வருணாசிரமம் இந்து என்னும் சொற்கள் தமிழ்ச் சொற்கள் அல்ல. அதற்கு ஆதாரமாக உள்ள வேதங்களும் மனுதர்மம் போன்ற சாத்திரங்களும் நம் மொழியில் உள்ளவையுமல்ல. நம் மக்களால் எழுதியவையுமல்ல"*[38]

என்று கூறும் பெரியார் தமிழ்நாட்டில் ஆரியர் வருகைக்குப் பின்புதான் இத்தகைய நால்வருணப் பாகுபாடு காணப்படுகின்றது என்கிறார்.

உழைக்கும் மக்கள் இழிநிலைக்குத் தள்ளப்பட்டுப் பஞ்சமர்களாக ஆக்கப்பட்டார்கள். சாதிப் பிரிவினையால் எந்த ஓர் இலாபமும் இல்லை. ஏழைகள் துன்பத்தைத் தவிர வேறெந்த இலாபமும் அடையவில்லை.

> *"மேலான சாதி வேலை செய்யாமல்*
> *பாலான சோறும் பருப்போடு நெய்யும்*
> *உண்டு வாழுமே! ஊரில் மற்றவை*
> *கண் நடுங்குமே! கைகட்டி நிற்குமே!*
> *கீழான சாதி எக்கேடு கெட்டேனும்*
> *கூழும் இன்றிக் குடிசையில் தூங்குமே"*[39]

---

38. பெரியார், குடிஅரசு, 30-10-1927.

39. பாரதிதாசன், காதலா? கடமையா?, ப.47.

என்று சாதி பற்றிய செயலைப் பாரதிதாசன் படம் பிடித்துக் காட்டுகின்றார். இப்படிப்பட்ட சாதியினை எதிர்த்துக் குரல் கொடுக்கும் போக்கைத் தமிழன்பன் கவிதைகளில் காணமுடிகின்றது.

"தமிழன்பன் கவிதைகள்" என்ற கவிதைத் தொகுப்பில் 'மீன்' என்ற தலைப்பிலான கவிதையில்,

"சாதி சாதி என்றித் தமிழர்
நாதியற்றுள்ளம் நலிதல் கண்டே
புண்ணுற்ற வானின் கண்ணீர்த் துளிகள்
மேக மெத்தை மேல் மின்னும் கன்னிகள்" (த.க.தொ.1, ப.72)

என்று சாதியைப் பின்பற்றிக் கொண்டே தமிழர்கள் வாழ்வதால் அவர்களை ஆதரிப்பதற்கு யாருமின்றி அல்லல்படுகின்றனர் என்கின்றார்.

"திரும்பி வந்த தேர்வலம்" என்ற கவிதைத்தொகுப்பில் 'பாரதி கண்ட மானுடம்' என்ற கவிதையில் 'ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி' என்று அன்று கேட்டேன். ஆனால் இன்று,

"அடே! இந்தியனே!
இப்போது சொல்கிறேன்
ஆயிரம் ஜாதிகள்
இருந்தால் அந்நியர் வந்து
புகுவதுதானடா நீதி" (த.க.தொ.1, ப.217)

என பாரதி இன்று இருந்தால் இவ்வாறு தான் கூறியிருப்பார் என்கிறார் கவிஞர். சாதிகள் பல இருந்து தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால் அதைப் பயன்படுத்தி அந்நியர்கள் வந்து புகுந்துவிடுவர். எனவே நமக்குள் சாதியச் சண்டைகள் இருக்கக்கூடாது என்பதை இக்கவிதை மூலம் அறிவுறுத்துகிறார் கவிஞர்.

"வார்த்தைகள் கேட்ட வரம்" என்ற கவிதைத்தொகுப்பில் 'பாரதித்தாய்' என்ற கவிதையில்,

"வீதியெல்லாம்
நாறடிக்கும் சாதிப் பேரணிகள்
இவர்களுக்கு
பேதி மருந்து கொடுத்து
சுத்தப்படுத்த நீ
இத்தினம் வரவேண்டும்" (த.க.தொ.1, ப.487)

என்று சாதியின் பெயரால் சவாலாக இருக்கும் சமூகச் சீர்கேடுகளைக் கவிஞர் சுட்டிச் செல்கின்றார்.

4. மதக்கோட்பாடு

பெரியார் மதம் தொடர்பான கருத்துக்களைத் தன்னுடைய இதழ்கள், நாளேடுகள் போன்றவற்றில் வெளிப்படையாக எழுதியுள்ளார். பொதுவாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வோர் சமுதாயத்தில் புரையோடிப் போனவற்றை எவ்வாறு மாற்றி அமைப்பது என்பதில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பார்கள். அந்த விதத்தில் பெரியார் மிகப்பெரிய சமூகவாதி, மக்களின் ஆழ்மனதில் காணப்படும் மூடநம்பிக்கைகளைக் களைந்தெடுக்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டியவர். மதத்தினால் மக்கள் வகுப்புவாரியாகப் பிரிக்கப்பட்டனர் என்பதை மக்களுக்கு உணர்த்தியவர்.

இறைவனோடு தொடர்புடைய ஒழுக்கநெறியை சமயம் என்றும், மதம் என்றும், கடவுள் நெறி என்றும் கூறுவர். திருவள்ளுவர் 'பொய்தீர் ஒழுக்க நெறி' என்று கூறுகிறார். ஆங்கிலத்தில் சமயத்தை 'Religion' என்று கூறுவார்கள். இதன் பொருள் சேர்ப்பது அல்லது பிணைப்பது என்பதாகும். இலத்தீன் மொழிச் சொல்லின் திரிபு என்றும் கூறுவார். இதனால் மக்கள் உள்ளங்களை

இறைவனிடத்தில் பிணைப்பது சமயம் என்றும், மக்களின் உயிரையும் அறிவையும் ஆற்றலையும் இறைவனிடத்தில் ஒருமுகப்படுத்துவதே சமயம் என்றும் அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர்.

மதத்தின் தோற்றம் பற்றிப் பெரியார் கூறும்போது,

> *"ஆதிமனிதனின் அறியாமையே அவனது முயற்சிகளுக்குத் தடையாக இருந்தது. அறியாமையின் காரணமாக வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் மதங்கள் தோன்றின. இவை தோன்றிய காலத்து மக்களின் அறிவு நிலைக்குத் தகுந்தவாறே அமைந்தன. மக்களினம் அறிவு வளர்ச்சி பெறாத அக்காலத்தில் அவர்களை அச்சுறுத்திப் பணியச் செய்யவும் இந்த அச்சத்தின் மூலமாக அவர்களை அடங்கி நடக்கும்படிச் செய்வதற்காகவும் மதங்கள் தோற்றுவிக்கப்பட்டன"*[40]

என்கிறார்.

மதங்கள், மக்களின் சிந்தனையாற்றல் வளர்வதற்குத் தடையாக அமைந்தன. 1968ஆம் ஆண்டில் தமிழகத்தில் காங்கிரசு ஆட்சிக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நிலவியபொழுது பெரியார் 'மதச் சார்பின்மையும் நமது அரசும்' என்றொரு நூல் வெளியிட்டுள்ளார். இந்நூல் மூலம் அப்பொழுதைய தமிழகத்தில் மதங்களின் மீது அரசின் அணுகுமுறை எவ்வாறிருந்தது என்பதை அறியமுடிகின்றது.

> *"மதச்சார்பற்ற அரசு செக்குலர் ஸ்டேட்' என்றால் எந்த மதத்தையும் அரசு ஏற்காமல் விலகி இருந்து ஆட்சி புரிய வேண்டும் என்பது பொருளாகும். ஆனால் நம் இந்தியாவில் அப்பொருள் தலைகீழாகப் பயின்று வருகின்றது. அதாவது*

---

40. பெரியார், ஈ.வெ.ரா. சிந்தனைகள், தொ-3, ப.1348.

எல்லா மதங்களையும் அரசு ஏற்றுக்கொண்டு ஒன்றுபோலக் கருத வேண்டும் என்ற நிலை இருந்து வருகின்றது"[41]

என்று கூறும் பெரியார், பெண்களைப் பதிவிரதைகளாக நடந்து கொள்ள வேண்டும் என்று ஆண்கள் கூறிவிட்டு பெண்களிடம் எல்லா ஆண்களையும் கணவன்போலக் கருத வேண்டும் என்று கூறி, இதுதான் பதிவிரதைத் தன்மை என்று அர்த்தம் சொல்வதுபோல உள்ளது என்ற உவமையைக் கூறி வன்மையாகக் கண்டிக்கின்றார். இப்படிப்பட்ட மதம் சார்ந்த கோட்பாடுகளைப் புதுக்கவிஞர்களும் எதிர்க்கின்றனர். அந்த வகையில் ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் கடவுள் பற்றிய கோட்பாடு மட்டுமே காணமுடிகின்றது. மதம் தொடர்பான கவிதைகள் இடம்பெறவில்லை. அதேவேளை மதத்தின் பெயர் குறிப்பிடாமல் மதக் குறியீடுகளைப் புராணக் கதைவழி வெளிப்படுத்தும் கவிதை வரிகளைக் காணமுடிகின்றது.

ந.பிச்சமூர்த்தி கவிதைகளில் மதக்கோட்பாடு

மதத்தின் பெயரால் நடைபெறும் சமயச் சடங்கு முறைகள் ஒழிந்தால் நாட்டின் அடிமைமுறையும் அறியாமையும் நீங்குவதோடு பொருளாதாரம் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படும். சடங்குமுறை வளர்ந்தால் பகுத்தறிவு வாய்ந்த மனிதன் அதனை இழந்து விலங்காகி விடுவான். எந்த மதங்களும் மனித சமுதாயத்தின் வறுமையைப் போக்குவதில்லை. பெரும்பாலானவை மனிதனின் உழைப்பைச் சுரண்டி அதில் தன்னால் இயன்ற அளவிற்கு இலாபம் தேடவே முற்படுகின்றன. இத்தகைய மதக்குறியீட்டை ந.பிச்சமூர்த்தியின் 'உயிர்மகள்' கவிதையில்,

41. பெரியார், மதச்சார்பின்மையும் நமது அரசும், ப.7.

"உயிரே! அகலிகையே!
உலகத்தின் உன்னதமே!
அடி முடி அற்ற அனலே!
தான் தோன்றிப் பொன்பெருக்கே!
……………………………………..
……………………………
உடைமையின் காந்தக்கைகள்
கற்பெனும் இரும்பைத் தந்த
உரிமையின் ஆசைக் கண்கள்
சட்டதிட்டங்கள் அமைத்த
ராமன் கால் கல்லில் படவே
கன்னி நீ மீண்டதோடு
வந்தது கண் எனக்கும்" **(ந.பி.க., பக்.58-59)**

வைணவ மதம் சார்ந்த கடவுள் பெயர் இடம் பெற்றுள்ளது. ந.பிச்சமூர்த்தியின் கவிதைகள் ஆன்மீகக் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்ட கவிஞர் என்பதைப் பறைசாற்றுகின்றன. 'உயிர் மகள்' என்ற இக்கவிதை 'அகலிகை' பற்றிய புராணக்கதையைக் கவிதை வடிவில் விளக்குகின்றது.

மதங்களை உலகில் நிலைநிறுத்தப் பயன்பட்ட இலக்கியங்கள் புராணங்கள். அவை சமுதாயத்தின் மூடநம்பிக்கைகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றன. புராணங்களில் கூறப்படும் கடவுளர்கள் பெரும்பாலும் இந்துமதம் தொடர்புடையவை. அவற்றில் வரும் தேவர்கள் எல்லாம் மக்களின் சமய நம்பிக்கைக்கு வலு சேர்ப்பவர்களாக உள்ளனர் என்பதை 'அகலிகை' கதை எடுத்துரைக்கின்றது. ந.பிச்சமூர்த்தி 'விஞ்ஞானி' என்ற கவிதையை கடவுளை மெய்ஞ்ஞானத்துடன் இணைக்கும் கருவியாகப் படைத்துள்ளார்.

"கடவுளால் என்ன முடியும்?
புல்லைச் செய்வார்
மேயவென்று மாட்டைச் செய்வார்

பொங்கும் நுரைப்
பாலைச் செய்வார்"

எனத் தொடங்கும் கவிதையில் மாட்டுக்குக் கன்றைக் காட்டி பாலைச் சுரக்கச் செய்வது மடமை என்கின்றார். கடவுள் கோட்பாட்டு எதிர்ப்பாளர்போல, பழிப்பதுபோல கடவுளைப் பற்றிய மொழிகளை ஆங்காங்கே சுட்டிச் சென்று இறுதியில்,

"அருளெனும் ஜாலவித்தை
செலவாணி ஆகாதய்யா
மடமையால் உலகைச் செய்தால்
அறிவினால் களைதல் தவறா?"

என்று வினா எழுப்புகின்றார். இவ்வுலகம் மடமையால் இயங்குவதாகக் கூறும் கவிஞர் உலகைப் படைத்த கடவுளை 'விஞ்ஞானி' என்று உருவகிக்கின்றார். இவ்வாறாக, பெரியார் கூறும் எதிர்ப்பு, கடவுள் மறுப்பு போன்ற கோட்பாடுகள் ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளில் இடம் பெறவில்லை என்பதற்குச் சான்றாதாரமாக மேற்கண்ட கவிதைகள் காணப்படுகின்றன.

இன்குலாப் கவிதைகளில் மதக் கோட்பாடு

மதங்கள் மனிதனை வறுமையாக்கி விட்டன. சாதாரண வாழ்க்கை நிலையில் இருந்து முன்னேற்றம் அடைய மனிதன் முயன்றாலும் மதம் அவனை வறுமைக்கு ஆட்படுத்துகின்றது. நாட்டில் வறுமை மட்டுமே நிலைத்து விட்டதற்கு அரசியல்வாதிகளின் அடங்காத வெறித்தன்மைதான் காரணமாகும். மதங்களைத் தங்களின் கருவியாய் பயன்படுத்திச் சூதாட அரசியல்வாதிகள் துணிந்ததால் பெரும்பாலான மக்களின் நிலை உணவிற்கும் ஆடைக்கும் அல்லல்படுவதாகி விடுகிறது.

புராணங்கள் மனித வாழ்வை மாற்றும் என்று பெரியார் கூறினார். கற்பனையே புராணங்களாகும். எனவே கற்பனை வாழ்க்கைக்கு என்றும் உதவாது. காலங்கள் மட்டுமே கடந்து கொண்டிருக்கும். ஆனால் மதங்களால் நடத்தப்படும் போர்கள் நீங்காது. மனிதனை மனிதத்தன்மையில் இருந்து நீக்கி விலங்காக மாற்றியது மதம் தோன்றிய பிறகுதான் என்று கூறலாம்.

> *"மதமாவது மனிதனுக்கு மரியாதையாய், அன்பாய், பக்தியாய், சாந்தியாய் சகோதர தன்மையாய் ஒற்றுமையாய், ஒழுக்கமாய், உதவியாய், வாழும் கொள்கையே - இதைச் சமுதாயக் கொள்கை என்று சொல்ல எனக்கு இஷ்டம் (விருப்பம்) நீங்கள் இதை மதம் என்று சொல்வதை நான் ஆட்சேபிக்கவில்லை"*[42]

என்று மதத்தினைச் சமுதாயக்கொள்கை என்று கூறலாம். அதன்படி நடக்கலாம். ஆனால் அவற்றுள் சாதி இடம் பெறக்கூடாது என்பது பெரியாரின் விருப்பம். அத்தகைய கொள்கைகளை நாளடைவில் கவிஞர்களும் பின்பற்றத் தொடங்கிவிட்டனர்.

இன்குலாப்பின் 'கிரென்ஞ்ச வதத்திற்குக் கேள்விகள் இல்லையோ?' என்ற கவிதையில்,

> *"விடுதலை என்ற வசந்த வெளிகளில்*
> *மேய வந்த புள்ளி மான்கள்*
> *சுதந்திர வானில் சுற்றிச் சுற்றிப்*
> *பறக்கத் துடித்த பஞ்சவர்ண கிளிகள்*
> *மதம் என்ற பர்தா எம் விழிகளை மறைத்தது*
> *புரட்சிக் கொழுந்துகளில்*
> *பர்தாவைப் பொசுக்குகிறோம்"* (ஓ.பு., ப.72)

---

42. பெரியாரியச் சிந்தனைகள், தொ.1, ப.33.

என்று மதத்தை முற்றிலும் பொசுக்கிவிட வேண்டும். அதனால் சமுதாயத்திற்கு எந்த இலாபமும் இல்லை என்கிறார் இன்குலாப். அதேபோல 'ராம் வருக! என்ற கவிதையில்,

"மசூதியில் இல்லை பாபரின்
சிம்மாசனம்
அது
மதவெறியர் ஒவ்வொருவர் மனசிலும்
இருந்தது" (ஓ.பு., பக்.34-35)

என்று மதத்தைக் கடந்து நம்பிக்கை என்பதை வாழ்வின் ஊன்றுகோலாகக் கொள்ள வேண்டும் அதை விடுத்து மதத்தை நம்பினால் அதனால் பேரிடர் ஏற்படும் என்ற பெரியாரின் கருத்தை இன்குலாப் கவிதை முன்மொழிகின்றது. பெரியார்,

"தமக்குக் கடவுளைப் பற்றியாவது மதத்தைப் பற்றியாவது சிறிதும் கவலை இல்லை என்றும் துன்பப்படும் மக்களின் துன்பம் நீங்கி அவர்கட்கு அறிவு, ஆற்றல், இன்பம் ஆகியவற்றைப் பெறுவதிலுள்ள கட்டுப்பாட்டை உடைத்து விடுதலை வழங்க வேண்டும் என்பதே நோக்கம்"[43]

என்று பெரியார் கூறுகின்றார். மக்களின் துன்பம் களைவதற்காக உருவாக்கப்பட்ட மதம் எண்ணற்ற துன்பங்களின் வாழ்விடமாகவே திகழ்கின்றது என்பதை இன்குலாப்-பின் 'போகிப்பறை' என்ற கவிதையில்,

"மதங்களின் வடிவில்
மரபின் அழுத்தத்தில்
சட்டங்களின் அச்சுறுத்தலில்
ஆதிக்கங்கள் அனைத்துமாய்

---

43. ம.நாராயணன், பெரியாரும் மனித நேயமும், ப.143.

வீதிமுனைவரை கேட்கும் பறையே
எதனை அறிவிக்க
உனது பறையொலி
எரியும் நெருப்பே!
என்று பொசுக்குவாய்
இந்த நூலாம் படைகளை" (ஒ.பு.ப.205)

என்று மதங்களை நூலாம்படைகளாகக் கவிஞர் உருவகிக்கின்றார். நாட்டின் நிலையை மதமும், மதம் சார்ந்த கெள்கைகளும் ஆட்டிப் படைக்கின்றன என்பது கவிஞரின் கருத்தாகும்.

> *"இங்கே நாம் மதம் என்பதை மனித வாழ்விற்காக, மனிதன் நடந்து கொள்ள வேண்டியதற்காக, மனிதனுடைய முதலான இலட்சியத்தை அடைய வேண்டியது என்பதற்காக ஏற்பட்ட சில வழிகள் எண்ணங்கள் என்பதைச் சொல்லலாம் அது ஒன்றல்ல பல*"[44]

என்று மதம் பற்றிய தமது கருத்தைத் தந்தை பெரியார் எடுத்துரைக்கின்றார். 'மதங்கள் தேவையில்லை' என்ற கவிதையில் இன்குலாப் உலகின் அழகை நுகர மனமும், மணக்கும் பூவில் முகங்கள் பதிக்க, கரைகளில் நின்று அலைகளைப் பார்க்க, கவிதை வரிகளில் கடல்களைத் தேக்க மதங்கள் தேவையில்லை என்கின்றார்.

"*காலைக் கழுவிக் குடிக்கச் சொல்லும்*
மதங்களின் ஆசாரம்
கங்கையைக் கழிவுக் கூவமாய் மாற்றும்
மதங்களின் ஆசாரம்
ஆயுதங்களுக்குப் பூசை நடத்தும்
மதங்களின் ஆசாரம்

---

44. தந்தை பெரியார், மனிதனும் மதமும், ப.3.

ஆனால் மனிதனைச் சாதியால் மிதிக்கும்
மதங்களின் ஆசாரம்" (ஒ.பு., ப.346)

என்று மதங்கள் எதற்கும் பயன்படாது. அது தேவையற்றது என்கிறார் கவிஞர். எல்லா மதங்களுமே ஜீவகாருண்யத்தைப் பற்றிக் கூறுகின்றன. ஆனால் நாளொன்றுக்கு மனிதர்கள் தங்கள் கோபத்தினால் பிறரைக் கொல்வது மட்டும் குறையவில்லை. இவ்வாறாக சாதி, மதம் என்பது மனிதனை நல்வழிப்படுத்தவில்லை. அதனால் அதிக இழப்புகள்தான் ஏற்படுகின்றன என்பதை இன்குலாப் கவிதைகள் தெளிவுபடுத்துகின்றன.

தமிழன்பன் கவிதைகளில் மதக்கோட்பாடு

மதம் என்பது மனித வாழ்விற்காக, மனிதன் நடந்து கொள்ள வேண்டியதற்காக, மனிதனுடைய முடிவான இலட்சியத்தை அடைய வேண்டியது என்பதற்காக ஏற்பாடு செய்ய வேண்டிய சில விதிகள், எண்ணங்கள் என்று கூறலாம்.

"*அன்பு வாய்மை முதலிய நெறி பிறழாமல் வாழுங்கள் என்பது*
தான் சமயமாக இருந்தது"[45]

என்கிறார் பாரதிதாசன். மதத்தின் பெயரால் நடைபெறும் சமயச் சடங்குகளை பெரியார் முற்றிலும் எதிர்த்தார். மக்களிடம் காணப்படும் வேற்றுமைகளை நீக்கி ஒற்றுமை வளர்க்க உதவும் கருவியாக மதம் திகழ வேண்டும் என்பதே பெரியாரின் எண்ணம்.

"*தமிழ்ச் சமுதாயத்தில் பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பித்து மக்களிடையே வேற்றுமைகளை விரிவுபடுத்திப் பேசிய வைதீக சமயமே நிலையில் இருந்தது. இத்தகைய மதங்களை*

---

45. பாரததிதாசன், மானுடம் போற்று, ப.297.

அழிக்கும் வேளையில் உயிரைக் கொடுப்பதே உண்மையான மனிதனின் கடமை என்று பெரியார் கருதினார்"[46]

என்று பெரியாரின் கருத்தைப் ப.செங்குட்டுவன் எடுத்துரைக்கின்றார். ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் மதம் என்ற குகைக்குள் முடக்கப்பட்டு விட்டது. அதை மீட்க பெரியார் போன்ற போராளிகள் பாடுபட்டால் மதத்தை மண்ணோடு மண்ணாக மக்கச் செய்ய முடியும். அதற்குத் தமிழ் கவிஞர்களின் உழைப்பும் தேவைப்படுகின்றது என்பதையும் தமிழன்பனின் கவிதைகள் பறைசாற்றுகின்றன. 'விடியல் விழுதுகள்' என்ற கவிதைத் தொகுப்பில் 'கல் கனிந்தது' என்ற கவிதையில்,

"மதப்பிணக்குத் தேவையில்லை இதை விளக்க
மாநாடு நாக்குப் போர்ப் பட்டிமன்றப்
பதப்பிணைப்புப் பந்தல்கள் போட்டா வந்தார்" (த.க., தொ.2, ப.366)

என்று வினவுகிறார். மதத்தை மேலும் வலிமையாக்காமல் அதற்கு மாற்றுவழித் தேடி அழிக்க நினைத்தால் சமுதாயம் தழைக்கும். "தமிழோவியம்" என்ற கவிதைத் தொகுப்பில் 'புதிய இராகம் புதிய பாடல்' என்ற கவிதையில்,

"சமயம் நூறு மறைகள் நூறு
சனங்கள் மோதிச் சாகவோ – நம்
சனங்கள் மோதிச் சாகவோ - தினம்
சனங்கள் மோதிச் சாகவோ – இந்த
நிமிடம் முதலே மதங்கள் கடந்தால்
நெஞ்சம் கலந்து வாழலாம்" (த.க., தொ.2, ப.626)

---

46. ப.செங்குட்டுவன், பெரியார் ஒரு பொருள்முதல்வாதி, ப.4.

என்று மதங்கள் கடந்து மணங்கள் இணைந்து வாழ்ந்தால் ஒவ்வொருவர் வாழ்வும் இனிமையுடையதாக இருக்கும் என்கிறார் கவிஞர்.

> *"உலகில் உள்ள மதங்கள் எல்லாம் குருட்டு நம்பிக்கை என்கிற பூமியின் மீதே கட்டப்பட்டிருக்கின்றன. குருட்டு நம்பிக்கையை அறவே விட்டுப் பகுத்தறிவைக் கொண்டு பார்ப்பதனால் ஒரு மதமும் நிலைக்காது"*[47]

என்று மதங்களின் தன்மையைப் பற்றிப் பெரியார் கூறுகின்றார். இன்று மதத்தின் பெயரால் நடைபெறும் வன்முறையில் தன் இனத்தைத் தாமே அழிக்கின்றோம் என்ற உணர்வற்ற மனிதர்கள் மதங்களை மையப்படுத்திவிட்டு மனிதத்தை அழிக்கத் தொடங்கி விட்டனர் என்பதை "நடை மறைந்த நதியும் திசை மாறிய ஓடையும்" என்ற கவிதைத் தொகுப்பில் 'மனிதனைத் தேட மார்க்கம் என்ன?' என்ற கவிதையில்,

"தொழுகைகள்
தோத்திரங்கள், அர்ச்சனைகள்
கந்தக் கிடங்குகளில்
கைகளை நீட்டுகின்றன
இரத்தம் படிந்த வரங்களை
இவற்றுக்கு எந்த இறைவன் தந்தான்?
மனிதனை
மனிதனிடமிருந்து மறைக்க
எந்த மதம் திரை நெய்து கொடுத்தது?
குருதியில் தனக்குத்
திலகம் இடச் சொல்லி
எந்தச் சமயக் கடவுள் சட்டம்
செய்தான்? **(த.க., தொ.4, ப.313),**

---

47. பெரியார், குடிஅரசு, 3-11-1929.

என்று தமிழன்பன் வினா எழுப்புகின்றார். நாட்டின் சூழ்நிலைக்குத் தக்கவாறு நெகிழ்வுத் தன்மை உடையவர்களாக மக்கள் மாறினால் மதம் ஒரு பொருட்டாகத் தோன்றாது என்பதை,

"*மனிதனை மனிதன்*
மதிக்கும் மானிட நேயம்
மலர்வதற்கு
மதங்கள் தடையெனில்
மதங்களை ஒழிப்போம்" (த.க., தொ.4, ப.318).

என்று மதங்களை அழிக்க வேண்டும்; அதற்கு மக்கள் யாவரும் ஒன்றுபட வேண்டும் என்று கவிஞர் கூறுகின்றார். அதுபோல "கனா காணும் வினாக்கள்" என்னும் கவிதைத் தொகுப்பில்,

"*இல்லை என்று தான்*
தோன்றுகிறது
இருந்தாலும் ஒரு கேள்வி
கேட்டு வைப்போம்
கடவுளிடம்
நீ
இருப்பதால் என்ன பயன்?" (த.க., தொ.5., ப.532)

என்று 'கடவுள்' இருப்பதாகக் கூறினால் அதனால் என்ன பயன் இந்த உலகத்திற்கு என்று தமிழன்பன் வினா எழுப்புகிறார். இவ்வாறாக மதம் ஒரு நாட்டைச் சீர்படுத்தாமல் சீரழித்துக் கொண்டு இருக்கின்றது என்ற பெரியாரியக் கருத்துக்கள் ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், தமிழன்பன் ஆகியோர் கவிதைகளில் காண முடிகின்றது.

5. பெண்ணியக் கோட்பாடு

உலகம் தோன்றிய நாள் தொட்டு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதே வாழ்க்கை எனும் நிலை இருந்து வருகின்றது. ஆனால் ஆண்

உயர்ந்தவன், பெண் தாழ்ந்தவள் ஆணுக்குப் பெண் அடிமை என்னும் உணர்வும் தொடர்ந்து வளர்ந்து வந்திருக்கின்றது. அதனால்தான் எல்லா நிலைகளிலும் எல்லாத் துறைகளிலும் பெண்கள் புறக்கணிக்கப்பட்டு அவர்கள் பிள்ளைகள் பெறுவதற்கும், அடுக்களையில் சமைப்பதற்கு மட்டும் தகுதியுடையவர்கள் என்னும் நிலை தோன்றி விட்டது. அறியாமை இருளகற்றி அறிவு வெளிச்சம் பாய்ச்சும் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது பெரும் கொடுமையாகும். இந்த கொடுமை சிறிது சிறிதாக மாறிக்கொண்டு இருந்தாலும் முழுமையான சுதந்திரம் என்பது பெண்களுக்கு இன்னமும் கிடைக்கவில்லை.

> *“நீண்ட நெடுங்காலமாகப் பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டு வருகின்றனர். அவர்கள் வெறும் போகப் பொருள் என்று தான் பெண்களைப் பற்றிய மதிப்பீடு இருந்தது”*[48]

என்கிறார் பெரியார். இந்நிலையில் தென்னிந்தியாவில் பெண் ஏன் அடிமையானாள்? என்பதை ஆராய்ந்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழிகாட்டியவர் பெரியார்.

கி.மு. தொடங்கி கி.பி. 2000 வரை ஆராய்ந்தால் தமிழகக் கலை இலக்கிய வளர்ச்சித் துறைகளில் ஆண்களின் பெயர்ப்பட்டியல் நீளும் அளவிற்குப் பெண்ணின் பெயர்ப்பட்டியல் நீளவில்லை என்பது புலனாகிறது. இத்தகைய சமுதாயக் கட்டுப்பாடுகளையும் மீறிக் கொண்டு காக்கைப் பாடினியார், ஔவையார், நச்செள்ளையார் போன்றோர் அறிவுத்துறையில் வெற்றி பெற்றிருப்பது வியப்பிற்குரிய மகிழ்ச்சி தருகின்றது.

> *“பெண்களைக் கரையேற்றி அடிமைப்பட்ட பெண் சமுதாயத்தை அடிமை விலங்கொடித்து அவனியில் பவனிவரச் செய்த தலைவர்களில் தலைமை சான்றவர் பெரியார். குடும்பத்தில்*

---

48. பெரியார், ஈ.வே.ரா., குடிஅரசு, 21-9-2996.

நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் இருந்தால் பெண்ணுக்குத் தான் முதலில் கல்வி கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியவர் அவர்"[49]

என்று பெரியாரின் சிந்தனைகளைக் கு.ம.இராமாத்தாள் எடுத்துரைக்கின்றார். இந்து மதத்தின் ஆதிக்கம் சங்க காலத்தில் இல்லை. பின்னர் வந்த இடைக்காலம், பக்திக்காலம் இந்து மதத்தின் தத்துவங்களைப் போற்றிய காலம். எல்லா நிலைகளிலும் பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டுப் பெண்ணடிமை ஓங்கியிருந்த காலமாகும்.

பெண்கள் தாழ்வு மனப்பான்மையாலும், மூடநம்பிக்கையாலும் தாங்களே ஆண்வர்க்கத்தின் அடிமைகளாக மாறி விடுகின்றனர். பெண்களின் இத்தகைய மனநிலை மாறாத வரை எந்த வெற்றியும் பெற முடியாது. குடும்ப அமைப்பிற்கு அச்சாணியாக சமுதாய வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் துணையாக விளங்கும் பெண்கள் கல்வியின்றி உரிமையின்றி கடைத்தேற வழியுமின்றி கடைக்கோடிக்குத் தள்ளப்பட்டனர் என்பதே இடைக்காலம் காட்டும் பெண் வரலாறு. இத்தகைய வரலாற்றை மாற்றி சமுதாய வாழ்விற்கு மகளிரே தலைமையேற்கும் வரலாற்றை மீட்டெடுக்க முயன்றவர் பெரியார். அந்தவகையில் ந.பிச்சமூர்த்தியின் கவிதையில் பெண்ணியக் கோட்பாடுகளைக் காணமுடிகின்றது. 'முரண்' என்ற கவிதையில்,

"*மகப்பேறு நிலையத்தில்*
உம்மை எல்லாம் கண்டு
கைகூப்பி வந்த பின்னர்
குதி உயர் காலணி
உள்பாடி ஜன்னல் ரவிக்கை
செஞ்சாந்தென்று

---

49. கு.ம.இராமாத்தாள், பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள், ப.28.

பருவத் தெறிப்பில்
பல்லை இளிக்கின்றேன்” (ந.பி.க., ப.175)

என்று கூறுகிறார். பெண்கள் தம்மை அழகுபடுத்திக்கொண்டாலும் போதிய விழிப்புணர்வு இல்லாமல், தன்னிலை உணராமல் உள்ளனர் என்பதை இக்கவிதையின் மூலம் எடுத்துக்காட்டுகின்றார் கவிஞர் தமிழன்பன்.

> *“நம் நாட்டில் பெண் என்பவள் ஒரு சமையல் காரியாகவும் ஒரு வேலைக்காரியாகவும் அனைத்திற்கும் மேலாக வாரிசுகளாக உருவாக்கித் தரும் பண்ணையாகவும் மட்டுமே பயன்படுத்தப் படுகிறாள். ஆண்களின் கண்களுக்கு விருந்தளிக்கும் அலங்காரப் பொம்மையாக மட்டுமே வலம் வருகிறாள்”*[50]

என்றுரைத்த பெரியார் மக்களைச் சிந்திக்கச் செய்கின்றார் என்கிறார் ம.நாராயணன். இத்தகைய அலங்காரப் பதுமையாக மட்டுமே பெண் இருக்கின்றாள் என்பதை,

“சரிவையும் வளைவையும்
மலரையும் மலையையும்
கண்ட எழில் தூய்மையில்
கணிந்தேன் என்றாலும்
கரவின் கையணைப்பில்
கண்ட சுகம் போகவில்லை” (ந.பி.க., ப.175)

என்ற கவிதை வரிகளில் ந.பிச்சமூர்த்தி விளக்குகின்றார்.

இன்குலாப் கவிதைகளில் பெண்ணியக் கோட்பாடு

பெண்கள் விடுதலை அடைந்து விட்டதாக எண்ணி பாரதி கும்மிப்பாட்டு பாடினான். ஆனால் ஏட்டில் எழுதப்பட்டவை இன்னும் அரங்கேற்றம் ஆகவில்லை. சூழ்நிலைக் கைதிகளாகப் பெண்கள் மாறி தங்கள் கைகளில்

---

50. ம.நாராயணன், மு.நூ., ப.47.

விலங்கினைப் பூட்டிக் கொண்டார்கள். இதிகாசக் காலம் முதல் இக்காலம் வரை சாபம் பெற்ற இனமாகப் பெண்கள் மாறிவிட்டனர் என்பது முற்றிலும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

இன்குலாப் 'சுதந்திரத்தின் செய்தி' என்ற கவிதையில்

"சமூகம் என்ற பரந்த வெளிகளைச்
சந்திக்காத நிலவுகளோ?
சமையல் அறையில் மண்டும் புகையில்
சாம்பிய வேர்வை மலர்க்குலமோ? (ஓ.பு., ப.335)

என்று பெண்களை அடுக்களை அடிமைகளாக மாற்றிய உலகைச் சாடுகின்றார். மேலும்,

"வாயில்லா வெறும் பூச்சிகளாய் -நிஜ
வாழ்க்கையில் பெண்ணை மதிப்பவர்கள்
கோயிற் சிலைகளாய்ப் பெண்ணை வைத்து - நிதம்
கும்பிடும் சடங்கினில் குறைச்சலுண்டோ?" (ஓ.பு., ப.336)

என்கிறார். வீட்டிற்குள் அடிமைகளாக இருக்கும் பெண்களை மதிக்காமல் லெட்சுமி, சரஸ்வதி என்ற பெயரில் பெண் கடவுள்களை வணங்கும் போக்கை இன்குலாப் எதிர்க்கின்றார்.

"உலகில் மனித வர்க்கத்தினருக்கு இருக்கும் அடிமைத்தனம் ஒழிய வேண்டுமானால், பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும், கொடுமையும் ஒழிய வேண்டும். அது அழிந்த நிலையே சமத்துவம், சுதந்திரம் என்னும் முளை முளைக்கும் இடமாகும்"[51]

என்கிறார் பெரியார். ஒரு பெண் சமூகத்தில் தன்னைப் பற்றிய அல்லது பெண் இனம் பற்றிய முழுமையான எண்ணங்களை வெளியிட முடியாது என்று 'நூலாம்

---

51. கு.ம.இராமாத்தாள், மு.நூ., ப.43.

படைகளைத் துடைப்பம் துடைக்கும்' என்ற கவிதை தஸ்லிமா நஸ்ரின் என்ற பெண் கவிஞர் மீது மதவெறியர் நிகழ்த்திய தாக்குதல் பற்றிக் கூறுகின்றது.

"போ
தாயைத் துணைவியை மகளைப் போய் நீ கேள்
அவர்கள் அடை காத்த உணர்வுகள் எல்லாம்
அவளது பேனா முனையில் பிறந்ததால்
அவர்களைக் கொலை செய்
சொர்க்கத்தை உறுதி செய்
வளைகளை உடைத்துக்
கைகள் உயர்த்தும்
காலம்
இனி உன்
முகத்தில் முடியும்" (ஒ.பு., ப.216)

என்று அன்போடு வளர்க்கப்பட வேண்டிய பெண் அவலங்களை மட்டுமே சந்திக்கின்றாள். பெண் சுதந்திரம் இன்று பேணப்படாமல் போனதால் பெண்ணடிமை நாட்டில் மலிந்து விட்டது. பெண் கல்வி, சுதந்திரம் என்று எல்லா நிலைகளிலும் பாடுபட்ட பெரியார் பெண்களின் அவலநிலை குறித்தும் பேசத் தவறவில்லை.

1974-ல் குஜராத் மாநிலத்தில் விலைவாசி ஏற்றத்தைக் கண்டு கொதித்தெழுந்த பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதைப் பற்றிய செய்தியைப் படித்த இன்குலாப்பின் மனதில் தோன்றிய கவிதை "போர்பந்தரிலிருந்து" என்பதாகும். அந்தக் கவிதையில்,

"கிண்கிணி வளையல் பெண்மணிகள் தாம்
பெண்மணிகள் தாம் பிரளய வருகையை
முன்னறிவிப்பது போல முழங்குகிறார்கள்
படுக்கையறையில் தீபங்களாகவும்
சமையலறையில் விறகுகளாகவும்
தம்மையே எரித்துக் கொண்ட பெண்கள்" (ஒ.பு., ப.44)

என்ற கவிதை வரிகளில் பெண்களின் போராட்ட உணர்வு வெளிப்பட்டாலும் தாங்கள் அடிமைகளாக இருப்பதை உணர்ந்து அதற்கான போராட்டத்தில் அவர்கள் ஈடுபடவில்லை. அதற்காக அவர்களால் போராடவும் இயலாது. விலைவாசி ஏற்றம் என்பது பொருளாதாரம் உள்ளடக்கிய ஒன்று. எனவே இந்த பெண்களின் போராட்டம் ஆண்களின் உறுதுணையோடு நடைபெற்று வெற்றி கண்டுள்ளது.

தமிழன்பன் கவிதைகளில் பெண்ணியக் கோட்பாடு

பெண் பிறந்தது முதல் அவலமாகக் கருதப்படுகின்றார். தாய், தந்தை, உடன்பிறப்பு என எல்லோராலும் இகழப்பட்டு பின்பு சமூகத்தால் புறக்கணிக்கப்படுகிறாள். குடும்பத்தில் கணவன், மாமனார், மாமியார் போன்ற உறவுகளால் சிதைக்கப்படுகின்றாள். இன்று இந்த நிலை மாறிவிட்டது என்று நாகரிகக் கூச்சல்கள் மட்டுமே காணப்படுகின்றன.

இந்தியாவில் இந்து மதத்தின்படி பெண்கள் பாவம் செய்த பிறப்பு எடுத்தவர்கள் என்று கூறுவர். ஒரு குடும்பத்திற்கு ஆண் வாரிசு இல்லை என்றால் 'பிள்ளையில்லாத குடும்பம்' என்று சொல்லுவது வழக்கம். ஆனால் பெண் குழந்தை பிறந்தால் அதிருப்தி தரும் செய்தியாகக் கருதப்பட்டது. பெரியார் இத்தகைய போக்கினை முற்றிலும் மாற்ற எண்ணினார்.

சமூக நிலையில் பெண்களின் ஏற்றத்தாழ்வுகளை அகற்றி அவர்தம் விடுதலைக்காகக் குரலெழுப்பிய பெரியார் பெண்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்வில் கொண்டிருக்கும் விருப்பு வெறுப்புகளையும் பற்றிச் சிந்தித்துப் பல சீர்த்திருத்தங்களைச் செய்தார். பெரியாரின் சீர்த்திருத்தங்களில் விதவை மணம் ஒன்று. மற்ற நாடுகளைவிட விதவை நிலை இந்தியாவில் மிகக் கொடுமையானது.

> *"இராசாராம் மோகன்ராய் கணவனை இழந்த மகளிர் உடன்கட்டை ஏறியதை ஒழிப்பதற்காகப் பெரியார் பெரிதும்*

வருந்தினார்கள். மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற சமுதாயத்தில் கைம்பெண்களின் மறுமணம் மறுக்கப்பட்டதனால் மகளிர் ஆயுளுக்கும் சொல்லொணாத துன்பமடைய வேண்டியதாகிறது. அதைவிட உடன்கட்டை ஏறினால், உண்டாகின்ற துன்பம் விரைவில் தீர்ந்து விடும். ஆகையால் இராசாராமின் சீர்திருத்தம் மகளிர்க்கு வேண்டுகின்ற நன்மையைத் தரவில்லை"[52]

என்று கைம்பெண் கொடுமையைப் பெரியார் எடுத்துரைக்கின்றார். பெரியாரின் சிந்தனைகள் பலராலும் விமர்சிக்கப்பட்டவை என்றாலும் அவரின் சிந்தனைகள் சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டவையாக விளங்குகின்றன. பெரியார் கூறும் விதவைநிலை பற்றிக் கவிஞர் தமிழன்பனின் "கதவைத் தட்டிய பழைய காதலி" என்ற கவிதைத் தொகுப்பில் 'பட்ட மரம்' என்ற கவிதையில்,

"அணியற்றுப் பொட்டி ழந்தே
அல்லலில் நைவாள் கைம்பெண்
பிணியென அவளைப் பார்த்துப்
பேசிடும் மூடக் கூட்டம்
துணிவுடன் அன்னாள் தன்னைத்
தூக்கிட்டுக் கொள்ளக் கொம்பை
அணியெலாம் இழந்த நீயும்
அளித்திட இருக்கின்றாயோ?" (த.க., தொ.2, ப.101)

என்று பட்ட மரத்தைப் பாடுவதுபோல பெண்ணின் விதவைக் கோலத்தைக் கவிஞர் பாடியுள்ளார். மனைவி இறந்த பின்பு மற்றொரு பெண்ணின் துணையைத் தேடும் ஆடவனைப்போல் கணவன் இறந்த பின் வேறொரு துணைவனைத் தேடிக் கொள்வதற்குப் பெண்களைச் சமுதாயம் அனுமதிக்க வேண்டும். அனால்

---

52. பெரியாரியச் சிந்தனைகள், தொ.1, ப.139.

இன்றைய சமுதாயம் அதனை ஏற்றுக்கொள்ளாமல் கற்பிற்கு இழுக்கு ஏற்படும் என்று எண்ணுகிறது.

தமிழன்பன் 'நெடுமூச்சு' என்ற கவிதையில்,

"குலையாத ஓவியப்பெண்! அழகு மொய்த்துக்
குத்தகைக்குப் பிடித்திருக்கும் கழனி! ஆடி
அலைகடலின் அடியினிலே கிடைக்காது முத்தம்
அவள் மணந்த ஆடவனை விரைந்து வந்தே
வலைபோட்டுச் சாவென்னும் பெண் மணந்தர்
வயதழகு நெஞ்சுணர்வு பருவ வேட்கை
கலையாத கலைப்பாவை விதவையாக்கிக்
கருகிவிடும் நெடுமூச்சு சாவின் மூச்சு" (த.க., தொ.2, ப.118)

என்று பருவ வயதிலே விதவை நிலை எட்டிய பெண்ணின் மூச்சை 'நெடுமூச்சாக'க் கவிஞன் கூறுகின்றார். இத்தகைய அவலநிலை மாற பெண்களின் வாழ்க்கையில் சீர்த்திருத்தங்கள் ஏற்பட வேண்டும் என்பது பெரியாரின் கொள்கையாகும்.

திருமணம் என்பது பெண்களின் வாழ்வில் அவலமாகி விட்டது. பொருள் கொடுத்துப் பெண்களைத் திருமணம் செய்து கொண்ட ஆண்கள் இன்று பொருளை எதிர்பார்த்துத் திருமணம் செய்து கொள்ளும் நிலை உருவாகிவிட்டது.

"வயது வந்த ஒரு ஆணும், பெண்ணும் வாழ்க்கையில் பிரவேசிப்பதற்காகத் தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒப்பற்றதொரு ஒப்பந்தம் தான் திருமணம் என்பதைச் சமூகம் விளங்கக் கூறிய உண்மையான பெண் இன உரிமை போற்றிய தகைமையாளர் பெரியார் ஒருவரே ஆவார்"[53]

---

53. கு.ம.இராமாத்தாள், மு.நூ. ப.49.

இத்தகைய திருமண ஒப்பந்தத்திற்கு முன்பு பெண்களை விலைமாடுகளாய்ப் பார்க்கும் சமூகம், வரதட்சணை என்று விலை நிர்ணயப் பொருளாய்ப் பார்க்கின்றது. பெரியாரின் இந்த வரதட்சணை எதிர்ப்புக் கருத்தைத் தமிழன்பனின் "அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்" என்ற கவிதைத் தொகுப்பில் 'திசைகளில் கோளாறு, தேசப் படங்களைத் திருத்தி என்ன பயன்?' என்ற கவிதையில்,

"உன்
புன்னகையைப்
பறிமுதல் செய்தது
வரதட்சணையல்ல...
வாழும் சமூகச்
சுரண்டல் அமைப்புகள்" **(த.க., தொ.3, ப.264)**

என்று வரதட்சணை கேட்பதற்குச் சமூக அமைப்புகள்தான் காரணம் என்பதைக் கவிஞர் தெளிவுபடுத்துகின்றார்.

"சொத்துரிமைக்
காட்டேரி - உனது
கதவோரம்! நீ
சன்னலின் வரதட்சணைக்
கொக்கியை
நீக்கினால்
சரி என்கிறாயா?" **(த.க., தொ.3, ப.265)**

என்று வரதட்சணை பெண்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் முக்கிய கருவியாகி விட்டது என்பதைக் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார். இந்த வரதட்சணை ஒழிப்பு பற்றி மேலும்,

"வரதட்சணை ஒழிப்பு...
வேர்களில் சீழ் பிடித்திருக்கும் போது

கிளைகள் மேல
மருந்து தெளிக்கும்
கிறுக்குத்தனமே" (த.க., தொ.3, ப.267)

என்று முற்றிலும் மாற்றமுடியாத செயலாக சமூகத்தில் வேரூன்றி விட்ட வரதட்சணை பற்றிக் கவிஞர் குறிப்பிடுகின்றார். பெண்களைத் தங்க நகைகளை ஈட்டித் தரும் பொன்முட்டையிடும் வாத்துக்களாகச் சமூகம் பார்க்கின்றது. இவ்வாறாக, சமூக அவலம் மட்டுமன்றி பாலியல் ரீதியான சிக்கல்களையும் பெண்கள் சந்திக்க வேண்டியுள்ளது.

6. பகுத்தறிவுக் கோட்பாடு

"எப்பொருள்யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"[54]

என்பதற்கிணங்க எதையும் தெளிவாக ஆராய்ந்து தெளிந்த பின் அறிந்து உண்மைப் பொருளை விளங்க வைப்பதே பகுத்தறிவாகும். எதையும் பிறர் கூறுவதற்காக ஏற்றுக் கொள்ளாமல் உண்மை என்ன? என்பதை ஆராய்ந்து தெளியும் அறிவினைப் பகுத்தறிவு எனக் கொள்ளலாம்.

பகுத்தறிவு என்ற சொல்லில் பகுத்தல் என்ற தொழிற்பெயரும், எந்தல் என்ற தொழிற்பெயரும் சேர்ந்து இரண்டு வகையான செயல்பாட்டினைச் சுட்டி நிற்கின்றன. இலக்கண முறைப்படி பகுத்தறிவு என்ற சொல்லை நோக்குவோமாயின் பகுத்தல் என்ற தொழிற்பெயரானது 'பகுத்து' என்ற வினையெச்சமாக மாறி அறிவு என்ற சொல்லோடு இணைந்து ஒன்றின் பல நிலைகளைச் சிந்தித்துப் பெறும் அறிவு என்னும் பொருள்பட பகுத்தறிவு என்ற சொல் ஆக்கம் பெற்றுள்ளது.

---

54. குறள் 423.

பகுத்தறிவு என்பதற்குப் பெரியார் விளக்கம் தரும்போது,

"பகுத்தறிவு என்பது இருபக்கமும் முனையுள்ள ஆயுதம் போன்றது ஆகும். அதை எந்தப் பக்கம் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். ஆனால் நேர்மையின் பக்கமே பயன்படுத்த வேண்டும்"[55]

என்று நிலைபெற்ற தத்துவத்தைப் பெரியார் போற்றியுள்ளதாகக் கி.வீரமணி கூறுகின்றார். மனிதனிடமுள்ள வேறு எந்தச் சக்தியைக் காட்டிலும் பகுத்தறியும் சக்திதான் அவனை மற்ற எல்லா உயிர்களிடமிருந்தும் மேம்பட்டவனாக்குகிறது. ஆகவே பகுத்தறிவை உபயோகிக்கும் அளவிற்கு மனிதன் மனிதத் தன்மையைப் பெற்று இயங்குவதாகச் சொல்லலாம். பகுத்தறிவைப் பயன்படுத்தாதவர் மிருகமாகவே கருதப்படுவான் என்பது பெரியாரின் கருத்தாகும்.

"பகுத்தறிவு என்பது இயற்கை உணர்ச்சி. அது போதுமான அளவு இருப்பதுதான் நிபுணத்துவம்"[56]

என்ற பெர்னாட்சாவின் கருத்தைக் கடலூர்மணிமாறன் எடுத்துக் கூறுகின்றார்.

பகுத்தறிவிற்குப் பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனையை விளக்கவந்த மணிமாறன், பெரியார்,

"கடவுளாலோ மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதாலேயே நம்பி விடக்கூடாது. ஏதாவது ஒன்று நம்முடைய புத்திக்கு ஆச்சிரியமாய்த் தோன்றுவதாலேயே அதை தெய்வீகம் என்றோ மந்திரசக்தி என்றோ நம்பி விடக் கூடாது எப்படிப்பட்டதானாலும் நடுநிலைமையிலிருந்து பகுத்தறிவுக்குத் தாராளமாய் மனம் விட்டு ஆலோசிக்கத் தயராக இருக்க வேண்டும்"[57]

---

55. கி.வீரமணி (தொகு.ஆ.), பெரியார் களஞ்சியம், தொ.1.

56. கடலூர் மணிமாறன், புரட்சிக்கவிஞரின் கவிதைக் கோட்பாடுகள், ப.67.

57. மேலது, ப.69.

என்கின்றார். சமுதாயத்தில் நடைபெறும் எந்த நிகழ்வாக இருந்தாலும் அதனைப் பகுத்தறிவினோடு ஒப்பிட்டு நல்ல நிலையைத் தெள்ளத் தெளிவாக ஆராய்ந்து கூறல் வேண்டும். பிற உயிர்களைக் கண்டோ அல்லது பிறசெயல்களைக் கண்டோ மனிதன் அஞ்சத் தொடங்கும்போதே மனிதன் பகுத்தறிவை இழக்கின்றான். பகுத்தறிவுச் சிந்தனையானது கொடிய பழைய நம்பிக்கைகளை, மரபுகளை உடைக்கும்.

மனிதன் தான் செய்யும் எல்லாச் செயல்களும் கடவுளால் நடைபெறுவதாக எண்ணிக்கொண்டிருக்கிறான். உண்ணல், உறங்கல், கலவி செய்தல் போன்றவற்றில் கடவுளின் பங்களிப்பும் உள்ளதாக மனிதன் எண்ணிக் கொள்கிறான். மனிதன் தன்னால் நடைபெறும் செயல்களுக்குக் கடவுளைக் காரணகர்த்தாவாகக் கருதுவது பகுத்தறிவிற்கு ஒவ்வாதது.

> *"வாழ்வின் எல்லா நிலைகளிலும் அறிவற்றதனமாய் 'கடவுள் செயல் கடவுள் செயல்' என்று சொல்லிக் கொண்டு தனது முயற்சிக்கெல்லாம் கடவுளை வேண்டுவது போல் நடித்தும் கொண்டும் இருக்கின்றானென்பதல்லாமல் எந்த மனிதன் எந்தச் சிறுகாரியத்திற்குக் கடவுளை நம்பி எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறான்? நடந்து கொள்கிறான்?"*[58]

என்று அறிவுக்குப் புறம்பான செயல்கள் சமூகத்தில் நடைபெற்று வருவதைப் பெரியார் எடுத்துரைக்கிறார்.

ந.பிச்சமூர்த்தி கவிதைகளில் பகுத்தறிவுக் கோட்பாடு

இறைவனோடு ஒழுக்கநெறியைத் தொடர்புபடுத்தினால் சமூகம் மாறும் என்ற நம்பிக்கையே மதம் தோன்றக் காரணம் எனலாம். மதமும் மதம் சார்ந்த நம்பிக்கைகளும் மனிதனைப் பாழ்படுத்திவிட்டது. அத்துடன் இயற்கையில் உள்ள

---

58. கடலூர் மணிமாறன், புரட்சிக் கவிஞரின் கவிதைக் கோட்பாடுகள், ப.67.

நற்சிந்தனைகள் யாவும் அழிந்து விட்டது. இதனால் சுயமாக மனிதன் சிந்திக்கும் பகுத்தறிவை இழந்து தவிக்கின்றான். பொருளற்ற மூடவிழாக்களால் பொருட் செல்வமும் தன்மான பாதிப்பும் மக்களின் பொதுநலனும் பாதிக்கப்படுகின்றது. மதத்தினாலும் சமயங்களாலும் மூடநம்பிக்கைகள் வளர்கின்றன. இத்தகைய மனித சிந்தனைகளின் நடைமுறை வழக்கங்களால் ஏற்படும் இழப்புகளைப் பகுத்தறிவுக் கருத்தை ந.பிச்சமூர்த்தியின் 'பிரார்த்தனை' என்ற கவிதையில்,

"பணத்தினை வாயால் வைது
உள்ளத்தில் பூஜை செய்து
வளர்ப்பினைப் பழித்துப் பேசி
முகங்களைத் தொடர்ந்து நோக்கி
புலன்களை வேசியென்றும்
உயிரினைப் பகல் கனவென்றும்
மலங்களின் மகனென்றும்
உதட்டினால் வீரம் பேசி
நெய்யோடு பழ வகையும்
தின்றுமிக ஏப்பம் விட்டுப்
பையாகப் பொண்ணும் பொருளும்
சிவன் பெயரைச் சொல்லிச் சேர்த்து" (ந.பி.க., பக்.8-9)

என்று கடவுளின் பெயரால் மூடப்பழக்கங்கள் கொண்டு திரிவோரைக் கவிஞர் சாடுகின்றார். கடவுள் பெயரால் பலவகைச் செல்வங்களும் சேர்த்துக் கொண்டு தவறான செயல்கள் செய்து வாழ்பவரைக் கவிஞர் சாடுகின்றார். கடவுளைப் பற்றிய இழிவான கதைகள் மக்களை ஒழுக்கக் கேடுடையவர்களாக மாற்றுகின்றது. பெரியார் பகுத்தறிவு பற்றிய கோட்பாட்டைக் கூறும்போது,

"கோயில் வழிபாடு உருவச் சிலை வணக்கம், சடங்குமுறை, பாவ புண்ணியம், பொருளற்ற சமய விழாக்கள், ஊழ், சோதிடம், திதி,

பேய்பிசாசுகளின் நம்பிக்கை, சமயக்குறியீடுகளின் ஆகிய அனைத்தும் மூடநம்பிக்கையின் பாற்பட்டவைகள்"[59]

என்று கருத்துரைக்கிறார். மூடநம்பிக்கைகள் பகுத்தறிவிற்குத் தடையானவை. குருட்டு நம்பிக்கையும் மூடப்பழக்கங்களும் என்று ஒழிகின்றனவோ அன்றுதான் நாட்டில் சமதானம் தழைக்கும். மூடபழக்கங்களை நீக்குவதில் சமூகப் பொறுப்புணர்வு என்ற பெரியாரின் கருத்தை அடியொற்றி 'சாகுருவி' என்ற கவிதையில் இரவில் விண்மீன்கள் உதிர்ந்தது. பூ, பிஞ்சு, காய், வயதானவர் இறந்தனர். அதற்குக் கோயில் கோபுரத்தில் வாழ்ந்த சாகுருவியே காரணம் என்று கிராமத்தார்கள் எண்ணினார். இந்த இழப்பிற்குச் சாகுருவியே காரணம் என்று தீர்மானித்து அதைக் கொல்ல வேண்டும் என்று எண்ணினர்.

"துடுக்குப் பிள்ளை இரண்டு மூன்று
கோபுரத்தில் தாவினர்
சாகுருவி பிடித்து வந்து
ஊர்முழுதும் காட்டினர்
அரிசி காசு தண்டி வந்து
எமனின் தோல்வி முழக்கினர்
பின்னும் பாசம் விழுந்தது
பின்னும் மனிதர் இறந்தனர்
சாகுருவி செத்துப் போயும்
சாவு நித்தியம் வாழ்ந்தது" (ந.பி.க. ப.26)

இப்படி சாகுருவிதான் கிராமத்து மக்களின் இறப்பிற்குக் காரணம் என்ற பகுத்தறிவு இல்லா மூடப்பழக்கத்தைக் கவிஞர் சாடுகிறார். மக்களிடம் நோய்கள் பற்றிப் போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் இத்தகைய மூட நம்பிக்கைகள் போன்றவற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

---

59. வே.ஆனைமுத்து, ஈ.வெ.ரா. சிந்தனைகள், தொ.2, ப.1053.

இன்குலாப் கவிதைகளில் பகுத்தறிவுக் கோட்பாடு

பகுத்தறிவு என்பது தனக்குரிய எல்லா உரிமைகளைப் பெறுவதில் மட்டுமல்ல. தனக்கு கிடைக்காத உரிமையைத் தட்டிப் பறிப்பது அல்ல. தன் கடமை உணர்ந்து செயல்படும் குடிமக்களிடம்தான் இருக்கின்றது. இதனை உணர்ந்து செயல்படுவதே சிறப்பாகும்.

> *"பகுத்தறிவு வளர்ச்சிக்காகக் கிளர்ச்சிகளைப் பெரியார் மேற்கொண்டார். பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள் புதியன. எப்படிப்பட்ட செய்தியானாலும் அவற்றைப் பரப்ப பெரியார் மேற்கொண்ட வழிகள் புதியன. ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்கும் விழிப்புணர்ச்சியைப் பெரியாரின் பகுத்தறிவு இயக்கம் உண்டாக்கியது"*[60]

என்று பெரியாரின் பகுத்தறிவு சிந்தனை குறித்த பொதுக்கருத்தைச் சே.இராசேந்திரன் முன்னிருத்துகின்றார். ஆன்மிகம் தொடர்பான கருத்துக்களை முற்றிலும் பகுத்தறிவோடு நோக்கும் பெரியாரின் எண்ணங்கள் இன்குலாப் கவிதைகளில் இழையோடுகின்றன. 'ஏன் தன்னை மறந்தாய்' என்ற இன்குலாப் கவிதையில்,

> *"சபரி மலைக்குத் துணிகள் கறுத்தும்*
> *மருவத்தூருக்கு ஆடை சிவந்தும்*
> *நிறங்கள் எல்லாம் திசைமாறித் தொலையும்*
> *நிகழ்வில் இன்று நீயும் உன் காவியும்*
> *இறுதியை நெருங்கும்*
> *இந்த நூற்றாண்டில்*
> *உனது சாதனையை*
> *எதனில் சேர்க்கலாம்?* (ஓ.பு. 136)

---

60. சே.இராசேந்திரன், தமிழ்க்கவிதைகளின் திராவிட இயக்கத்தாக்கம், ப.217.

என்று ஆன்மிகத்தில் சுட்டப்படும் நிறங்களால் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை. பகுத்தறிவோடு நோக்கினால் மனிதன் ஆன்மிகத்தின்மீது கொண்டுள்ள மோகம், புரியாத பக்தி அவனை நல்வழிப்படுத்த மட்டும் அல்லாமல் எவ்வித ஆக்கப்பூர்வமான செயல்களையும் செய்யமுடியாத அளவிற்கு முடக்கி விடுகிறது.

'தீண்டாமை' மனிதனை அவமதிக்கும் ஒரு வகையான கருத்து, எண்ணம். தீண்டாமை என்னும் செயலில் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை புறந்தள்ளும் செயல் தவறானதாகும். அதனை 'நெருப்புக்கோலம்' என்ற கவிதையில்,

"*செருப்பணிந்து கொண்டு*
தெருவில் வராதே என்று
சொல்லுகின்றவனின்
தோலை உரித்தே
செருப்பாக்கி மாட்டித்
திமிர் நடை போடுவோம்" (ஒ.பு., 110)

என்று இன்குலாப் தீண்டாமையால் துன்பப்படும் மக்களுக்குப் பகுத்தறிவோடு கூடிய புரட்சி சிந்தனைகளைப் புகுத்துகின்றார். அடிமைகளாக மக்கள் நடத்தப்படும் நிலை மாறவேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் சமூக நிலைக்கு அவர்கள் உயரவேண்டும் என்பது கவிஞரின் கருத்தாகும்.

இன்குலாப் கவிதைகள் உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் பகுத்தறிவு சிந்தனைகளோடு நடைமுறைக் கூறுகளை எதிர்த்துக் கூலி உயர்வு, உழைக்கும் நேரம் இவற்றிற்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

தமிழன்பன் கவிதைகளில் பகுத்தறிவுக் கோட்பாடு

இந்தியாவில் தமிழகம்தான் மூடநம்பிக்கைகள் குறைவான மாநிலமாக ஒரு காலத்தில் இருந்துள்ளது. தமிழரல்லாதவர் ஆட்சி, வேற்று மொழி பேசுபவரின்

பண்பாட்டுத் தாக்கம் இவற்றால் தமிழகத்தில் மூடநம்பிக்கை அதிகமாகி விட்டது. தந்தை பெரியார் தமிழ் மொழியில் கலந்து விட்ட ஆன்மா, பாவம், புண்ணியம், மோட்சம், விதி முதலான வடமொழிச் சொற்களை எடுத்துக்காட்டித் தமிழரின் மூடநம்பிக்கைக்கு ஆரியரின் சமய நம்பிக்கையே காரணம் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

இரவில் வீடு தோறும் வரும் சாமக்கோடாங்கி பற்றி தமிழன்பன் கூறும் கவிதை வரிகளில் பகுத்தறிவு இல்லால் இன்றைய மக்கள்படும் அவல வாழ்வை எடுத்துரைக்கின்றார்.

> *“குடுகுடுப்பை ஓசை*
> *கூடுகளில் நுழைகிறது*
> *கிழிந்த உறக்கத்தின் வழியாக*
> *மலங்க மலங்கப்*
> *பார்க்கின்றன பறவைகள்*
> *நள்ளிரவின் மீது*
> *நடந்து வருகிற கோடாங்கி*
> *நாவில்*
> *உச்சாடனமாகும் நல்ல காலம்*
> *கறுப்பு நிறத்தில்*
> *கடக்கிறது வாசல் வாசலாய்”* (த.க.தொ.பு.ப.667)

இவ்வரிகளில் கறுப்பு நிறம் ஆன்மீகத்திற்கு ஒவ்வாதது. துன்பம் நடக்கப் போவதாகச் சாமக்கோடாங்கி கூறுவதாக அமைந்துள்ளது. கறுப்பு நிறம் என்பது பெரியாரைப் பொறுத்தவரை சமூகச் சீர்கேடுகளை நினைவுபடுத்தக் கூடியதாகக் கூறுவார்.

சாமக்கோடாங்கி அழைக்கும் ஜக்கமா என்ற தெய்வம் அவனை அமங்கலச் சொற்களை உச்சாடனம் செய்யச் சொல்லவில்லை. ஆனால்

தன்னிலை மறந்து கூறும் நம்பிக்கையற்றச் சொற்களுக்குத் தமிழன்பன் சாட்டையடி கொடுக்கும் விதமாக கவிதை வரிகளைப் புரட்டிப் போடுகின்றார்.

" சிவக்கச் சிவக்க
ஓசையைச் சுட்டெடுத்த
குடுகுடுப் பையை
வெடுக்கென்று சுழற்றி
வீசியெறிந்தாள்
ஜக்கம்மா கையில்
சாமக் கோடாங்கி
உடுக்கையாகிறாள்
அம்மணமான அவன் உடம்பு
துடிக்கிறது
குடுகுடுகுடு
ஓசை மடிந்து" **(த.க.தொ.4, ப.669)**

என்ற வரிகளில் நம்பிக்கை இன்றி பேசும் வார்த்தைகள் யாவற்றையும் தெய்வம் இருப்பின் பொறுக்காது. நம்பிக்கை மட்டுமே தெய்வம். அதனை உணர்வதே பகுத்தறிவாகும் என்பதைச் சாமக்கோடாங்கியின் மூலம் தமிழன்பன் வெளிப்படுத்துகின்றார்.

"சமயம் தாராளச் சிந்தனைக்குத் தடையாகிறது. மக்களைப் பகுத்தறிவற்றவர்களாக ஆக்குகிறது. ஆகவே ஏற்றத்தாழ்வற்ற போட்டி, பொறாமை இல்லாத அமைதியான உலக வாழ்க்கைக்குச் சமயங்கள் அழிக்கப்பட்டே ஆகவேண்டும்"[61]

என்பதில் பெரியார் உறுதியுடையவராக இருந்தார் என்ற கொள்கையை வலுப்படுத்தும் விதமாகத் தமிழன்பனின் கவிதை வரிகள் காணப்படுகின்றன.

---

61. **வே.ஆனைமுத்து, பெரியாரியச் சிந்தனைகள்-தொ.3, பக்.1405-1406.**

சமுதாயத்தின் முக்கிய சூழ்ச்சியால் இன்றைய கோடிக்கணக்கான இளைஞர்களின் மூளைகள் திசை திருப்பப்பட்டு விட்டன. எண்ணிலடங்கா இழப்புகளை நாடு சந்தித்து வருகின்றது. எந்த ஒரு சமயச் சான்றோரும் இளைஞனின் மூளைகள் சிதைக்கப்பட்டதை எண்ணவில்லை. விடிவெள்ளிபோல் அறியாமை நீக்கத் தந்தைப் பெரியார் பகுத்தறிவுப் பாசறை உருவாக்கித் தரவில்லை என்றால் இன்னும் ஆன்மிகத்தில் மூழ்கித் தமிழகம் சேதம் கண்டிருக்கும் என்பதே இன்றைய தலைமுறைக் கவிஞர்களின் கருத்தாகும். தமிழன்பனின் "விடியல் விழுதுகள்" என்னும் கவிதைத் தொகுப்பில் 'தூண்டில்' என்ற கவிதையில்,

"பட்டமரத்தினிலே பழுப்பறிப்பா?
பகுத்தறிவை இழந்தாயோ? உடலுக்குள்ளே
தொட்டுக் கொண்டிருந்த உறவை ஆவி
துண்டித்துக் கொண்டதென்று தெரிந்த பின்னும்
கிட்டத்தில் கிண்ணத்தை வைத்து பாலும்
கிடைக்குமென நிற்கின்றாய்! கிடைக்குமா சொல்?
கொட்டி வைத்துள்ளாயே கீற்றுப் பச்சைக்
குவியலதை உண்டிடுமோ ஊமைக்கூடு?"

என்ற கவிதை வரிகளில் உடலை விட்டு உயிர் பிரிந்த பின்பு பால் கிண்ணத்தில் குடிக்குமா? முன்னோர்கள் சொன்னது மூடநம்பிக்கை என எண்ணாமல், பகுத்தறிவோடு சிந்திக்காமல் இருப்பது சரியான செயலாகுமா? என்னும் வினாவைக் கவிஞர் எழுப்புகின்றார். இதே கவிதையில் உளிபட்டு கதவான மரத்தில் கனிகள் கிடைக்குமா? ஆவி ஒளியிருண்டு மாண்டவர்கள் விருந்து போட்டால் உண்ண வருவாரா? என்று சிந்திக்க வேண்டும் என்கிறார் கவிஞர்.

பெரியார் விடிவெள்ளியாகத் தோன்றியதால் பகுத்தறிவு கொண்ட கவிஞர்கள் தோற்றம் பெற்றனர். பெரியார் மூடநம்பிக்கைகளை எதிர்த்துக்

கூறியதுபோல வேறு எவரும் கூறியதில்லை. கடவுள், மதம், சாதி, கோயில், சிலை வழிபாடு, வணக்கம், திருவிழா, திருத்தலங்கள், சோதிடம், முற்பிறப்பு, நல்ல நேரம், பண்டிகைகள் போன்ற அறிவியல் ஆதாரமில்லாத நம்பிக்கைகள் மக்கள் வாழ்வில் இருந்து நீக்குவதற்காகப் பெரியார் அயராது பாடுபட்டார். அவரைப் போல சுயமரியாதை கொண்ட சமுதாயம் நிலவவேண்டும் என்பதற்காக இன்றைய கவிஞர்கள் முயற்சிக்கின்றனர் என்பதை அவர்களின் கவிதைகள் நிறுவுகின்றன.

முடிவுரை

'தமிழ்ப்புதுக்கவிதைகளில் பெரியாரியச் சிந்தனைகள்' என்ற இயலில் பெரியாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரின் அரசியல் ஈடுபாட்டோடு கூடிய சமூகச் சீர்த்திருத்த அக்கறை, எதற்கும் அஞ்சாத துணிவு ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

பெரியார் மொழி மீது பற்றுக் கொண்டவர். தமிழ்மொழியின் பழமையையும் அதன் உன்னதத்தையும் உணர்த்தும் விதமான கருத்துக்களைக் கூறியுள்ளார். இவரின் கருத்துக்கள் ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், தமிழன்பன் ஆகியோரது கவிதைகளில் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. தமிழ், தமிழ்மொழி, தமிழ்நாடு என முழங்கிய பாரதிதாசன்போல தமிழன்பனும் தம் கவிதைகளில் முழங்கியுள்ளார்.

பெரியாரின் அரசியல் என்பது பொதுவுடைமைச் சிந்தனையின் வேரில் தழைத்து, சுதந்திரம் என்பது மனித உணர்வுகளைப் புரிந்துகொண்டு யாராலும் கொடுக்கப்படாமல் தானே பெற்றுக்கொள்வது என்ற பெரியாரின் கருத்தை, இன்குலாப் அரசியல்வாதிகளால் சுதந்திரம் மறுக்கப்படுகிறது என்று சுட்டிக்காட்டுகின்றார். சுயநலத்தினால் அரசியல் சட்டதிட்டங்கள்

மாற்றப்படுகின்றன என்பதைத் தமிழன்பன் கவிதைகள் பேசுகின்றன. வாக்குகள் விற்கப்படும் அவல நிலையைக் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

சாதி எந்த நாட்டிலும் இல்லாத மற்றோர் அவலம் நம் நாட்டில் தலைவிரிந்து ஆடுகின்றது. இன்குலாப், தமிழன்பன் கவிதைகளில் இந்தியாவில் நிலவும் சாதிக் கொடுமைகள் பற்றிய கருத்துக்கள் பெரியாரியச் சிந்தனைகளுடன் ஒத்துப் போவதாக அமைந்துள்ளன. நிலமுடையவர்கள் உயர்ந்த சாதியாகவும், நிலமற்ற ஏழைகள் தாழ்ந்த சாதியாகவும் காலம் காலமாக கற்பிக்கப்படும் ஒடுக்குமுறை மாறவேண்டும் என்னும் பெரியாரியக் கருத்தின் தாக்கம் இன்குலாப், தமிழன்பன் கவிதைகளில் காணப்படுவதுபோல ந.பிச்சமூர்த்தி கவிதைகளில் இடம் பெறவில்லை.

மதம் என்பது உலகம் முழுவதும் பரவியுள்ள நோய் என்பது திண்ணம். அறியாமையின் காரணமாக மனிதன் மதத்தை உருவாக்கி விட்டான் என்று பெரியார் கூறுவார்.


மக்களின் சிந்திக்கும் திறனைக் குறைக்கும் கருவி மதமாகும். அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றிப் பிழைக்க மதம் சார்ந்த அரசியலை வலுப்படுத்தி நடத்தி வருவதாக இன்குலாப் கூறுகின்றார். மேற்கத்திய நாடுகள் எல்லாம் மதத்தை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு அரசியல் நடத்துகின்றன. எந்த மதமும் மனித சமுதாயத்தின் வறுமையைப் போக்குவதில்லை மாறாக, மக்களின் உழைப்பைச் சுரண்டிப் பிழைக்கின்றன என்கிறார் ந.பிச்சமூர்த்தி. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் மதம் என்ற குகைக்குள் முடக்கப்பட்டு விட்டதாகத் தமிழன்பன் கூறுகின்றார். ஆக மதம் சார்ந்த எதிர்ப்புக் கருத்தில் பெரியாரின் கருத்தை மூன்று கவிஞர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பெண்ணியம் சார்ந்த கருத்து உலகம் முழுவதும் பேசப்பட்டாலும் பெண்களுக்காகத் தீர்க்கமாகக் குரல் கொடுத்தவர் பெரியார். பெண் கல்வி, பால்ய திருமணம், விதவைத்திருமணம், பெண்களுக்குச் சொத்துரிமை என்ற பலவாறான நடைமுறைக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பெண்களின் உரிமைகளுக்காகப் போராடிய போராளி பெரியார். இவரின் பெண்ணுரிமை சார்ந்த கருத்துக்களை ந.பிச்சமூர்த்தியின் 'முரண்' என்ற கவிதையில் மட்டும் காணமுடிகின்றது. இன்குலாப் பெண்ணை அடிமையாக மாற்றிய உலகைச் சாடுகின்றார். பெண் அன்போடு போற்றப்பட வேண்டியவள் என்கிறார். பெரியார் விதவை மணத்தை ஆதரிப்பவர்; மறுமணம் குறித்தக் கருத்தைத் தமிழன்பன் கவிதைகளில் காணமுடிகின்றது.

பகுத்தறிவு என்பது உண்மை அறிவு என்று சொல்லப்படும் மெய்ஞ்ஞானத்துடன் தொடர்புயைச் சொல்லாகும். இத்தகைய பகுத்தறிவு சிந்தனை மேலோங்கி மக்கள் விழிப்புணர்வுடன் செயல்படுதல் அவசியமாகும் என்பது பெரியாரின் எண்ணம். மூடநம்பிக்கைகளில் மூழ்கிவிடாமல் கடவுள் பெயரைச் சொல்லி நடக்கும் சமயச்சடங்குகளுக்கு மதிப்பளிக்கக் கூடாது என்ற கருத்தினை ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், தமிழன்பன் ஆகிய மூவர் கவிதைகளிலும் காணமுடிகின்றது.

மேலும் பெரியாரின் கடவுள் மறுப்புக் கோட்பாடு, கல்விக் கோட்பாடு, பொருளாதாரக் கோட்பாடு, விதிக்கோட்பாடு, சுயமரியாதைக் கோட்பாடு போன்றவை மூவர் கவிதைகளிலும் அதிக அளவில் இடம்பெறவில்லை.

ஆய்வு நிறைவுரை



ஆய்வு நிறைவுரை

கவிஞர் ந.பிச்சமூர்த்தி, ஈரோடு தமிழன்பன், இன்குலாப் ஆகியோர்களின் புதுக்கவிதைகளை ஆய்வு செய்ததன் விளைவாகக் கண்டறியப்பட்ட மெய்ம்மைகள் 'ஆய்வு நிறைவுரை' என்னும் இப்பகுதியில் கீழ்க்காணுமாறு தொகுத்துத் தரப்படுகின்றன.

'**தத்துவம்-வரையறை**' என்ற முதல் இயலில் தத்துவத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்த கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. தத்துவம் துறைசார்ந்து பெற்ற வளர்ச்சி நிலைகள் பற்றியும், காலந்தோறும் மாறும் தன்மைகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன. சமுதாயத்தை மையமிட்ட கருத்துக்களில் தத்துவம் ஈடுபாடு கொண்டுள்ளது என்பதை இவ்வியல் புலப்படுத்துகின்றது.

தத்துவம் என்பது ஆன்மிகம், கல்வி, பொருளாதாரம், விவசாயம், அறிவியல், தொழில்நுட்பம், முதலாளித்துவம், தொழிலாளிவர்க்கம், நிலப்பிரபுத்துவம், கடவுள் மறுப்பு, பெண்ணியம் என்ற எண்ணிலடங்காக் கூறுகளைக் கொண்டு இலங்குகின்றது.

மேலைநாட்டுத் தத்துவங்கள், பொருளாதாரம், தொழில்புரட்சியை மையமிட்டு உருவாக்கப்பட்ட மார்க்சிய, லெனினியத் தத்துவங்கள் பற்றிய கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன. இவையாவும் மக்களுக்குப் பயன்தரக் கூடியத் தத்துவங்கள் என்பதைச் சமூக வளர்ச்சியின் மூலம் அறியமுடிகின்றது. இந்தியத் தத்துவங்கள், வேதங்கள், உபநிடதங்கள் மீது நம்பிக்கை கொண்டவை; கடவுள் என்பதை மெய்ஞ்ஞானம் என்று கூறுகின்றன. இல்லறம், துறவறம் ஆகியவற்றோடு தத்துவம் தொடர்பு கொண்டுள்ளது என்பதை இவ்ஆய்வு தெளிவுபடுத்துகின்றது.

இந்தியத் தத்துவம் போலவே தமிழகத் தத்துவமும் ஆன்மிகத்தோடு தொடர்பு கொண்டுள்ளது. தமிழகத்தில் பக்தி இயக்கங்களால் சைவ, வைணவத் தத்துவங்கள் வளர்ச்சி பெற்றன. பக்தி இயக்கங்களால் உருவாக்கப்பட்ட பக்தி இலக்கியங்கள் தமிழகத் தத்துவ மரபுகளைப் போற்றும் கருவிகளாகத் திகழ்ந்தன என்பதைத் 'தத்துவம்-வரையறை' என்ற இயல் புலப்படுத்துகின்றது.

'***தமிழ்ப் புதுக்கவிதைகளில் தத்துவச் சிந்தனைகள்***' என்ற இரண்டாம் இயலில், தத்துவம் என்பது உண்மை பற்றிய அறிதலாகும். அதன்மூலம் இயற்கையில் இயங்கும் அகமனத் தொடர்புகளை அறிந்துகொள்ள முடிகின்றன. தத்துவம் என்பது மெய்ம்மை என்ற பொருள் தரும் என்பதை எல்லாத் துறைகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுப் பொருளாகக் கருதப்படுகின்றது.

தத்துவம் பல்வேறுபட்ட துறைகளின் ஒட்டுமொத்தக் கூறுகளையும் ஆராயும் தன்மைகள் குறித்து விளக்குகின்றது. தத்துவங்களின் வகைகளையும் அதற்கான பொருளையும் குறித்து அறியமுடிகின்றது. ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், தமிழன்பன் ஆகியோரின் கவிதைகளில் காணலாகும் வாழ்க்கைத் தத்துவங்கள், தனிமனித வாழ்க்கைக்கூறுகள் இவை பற்றிய முடிபுகளை விளக்குகின்றது. உலகம் நிலையற்றது என்பதைப் பொதுப்பொருளாகக் கொண்டு வாழ்க்கைத் தத்துவம் பற்றிய கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன.

'***தமிழ்ப் புதுக்கவிதைகளில் மார்க்சியச் சிந்தனைகள்***' என்ற மூன்றாவது இயலில், சமூகத்திற்கான இயக்கங்கள் மக்களை நல்வழிப்படுத்துவனவாய் விளங்க வேண்டும் என்பது விளக்கப்பட்டுள்ளது. உலகம் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது என்ற கோட்பாட்டை மார்க்சியம் முன்னிறுத்துகின்றது. மார்க்சியத்தின் மெய்ஞ்ஞானத்தை ஏற்றுக்கொண்டவர்கள் உலகம் முழுவதும் இருக்கின்றனர். அவர்களின் கருத்துக்கள் இன்குலாப்,

தமிழன்பன் கவிதைகளில் பரவலாகக் காணப்படுகின்றன. ந.பிச்சமூர்த்தி கவிதைகளில் மார்க்சியம் சொல்லப்படாமல் அவற்றை அறியாத உள்உணர்வுக் கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. இவையாவும் மார்க்சியக் கோட்பாடாக ஒளிருகின்றன என்பது விளக்கப்பட்டுள்ளன. மார்க்சியம் என்பது மக்களின் இயக்கம், பொருளாதாரம், உழைப்பு சார்ந்த கருத்துக்கள், மக்கள், நாடு வளரக் காரணமாகின்றன என்பதை நிருவுகின்றது. சுரண்டல் என்பது எல்லாத் துறைகளிலும் மலிந்துபோன ஒன்று. ஆனால் கூலிகள், ஏழை விவசாயிகளை முதலாளி வர்க்கங்கள் சுரண்டிப் பிழைப்பது என்பது மாறாத ஒன்றாக நடைபெற்று வருகின்றது என்பதை இன்குலாப், தமிழன்பன் கவிதைகள் சுட்டிக்காட்டுவதுபோல ந.பிச்சமூர்த்தியின் கவிதைகள் சுட்டிக்காட்டவில்லை என்பதை அறியமுடிகின்றது.

'***தமிழ்ப் புதுக்கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள்***' என்ற நான்காவது இயலில் இந்தியாவில் தோன்றிய காந்தியடிகளின் கொள்கைகள் காந்தியமாகப் போற்றப்படுகின்றது. மனிதன் வாழும் முறைமைகளைப் பற்றிப் பல நூற்றாண்டுகளாகக் கூறப்பட்டுவரும் மரபுகள்வழி வாழ்ந்து அதை மற்றவரும் பின்பற்ற வழி வகைகளைக் கூறியுள்ளார் என்பதை அறியமுடிகின்றது. அரசியல், கல்வி, ஆன்மிகம், தனிமனித ஒழுக்கம் இவை பற்றிய காந்தியடிகளின் சிந்தனைகள் ந.பிச்சமூர்த்தி, தமிழன்பன் கவிதைகளில் காணப்படுகின்றன. இன்குலாப் கவிதைகளில் காந்தியச்சாடல்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. காந்தியடிகள் பின்பற்றிய சத்தியாக்கிரகம் தவம்போல பின்பற்றப்பட வேண்டும் என்பதைத் தமிழன்பன் கவிதைகள் விளக்குகின்றன.

'***தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெரியாரியச் சிந்தனைகள்***' என்ற ஐந்தாவது இயலில், தமிழகத்தில் தோன்றிய புரட்சிகளை உள்ளடக்கிய சமுதாய அக்கறை கொண்ட ஓர் இயக்கம் பெரியாரியம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எல்லாத் துறைகளிலும் காணப்படும் இடர்களைக் களையப் பாடுபட்ட பெரியாரின் கருத்துக்கள் ந.பிச்சமூர்த்தி, இன்குலாப், ஈரோடு தமிழன்பன் ஆகியோரின் கவிதைகளில் காணப்படுவதை இவ்ஆய்வு வெளிக்கொணர்ந்துள்ளது. பெரியாரின் மொழிக்கோட்பாடு, அரசியல் கோட்பாடு, சாதிக் கோட்பாடு, மதக்கோட்பாடு, பெண்ணியக் கோட்பாடு, பகுத்தறிவுக் கோட்பாடு போன்றவை பற்றிய கருத்தாக்கங்கள் மூன்று கவிஞர்களின் கவிதைகளிலும் இடம்பெற்றுள்ளன என்பது இவ்வியலின் முடிவாக அமைகின்றது.

துணைநூற் பட்டியல்

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரங்கள்

1. இன்குலாப், – **ஒவ்வொரு புல்லையும்,** பொன்னி, மடிப்பாக்கம், சென்னை, மு.ப. 1999.

2. தமிழன்பன், – **ஈரோடு தமிழன்பன் கவிதைகள்,** தொகுதி 1, 2, 3, 4, 5, பூம்புகார் பதிப்பகம், சென்னை, மு.ப. ஜூலை 2007.

3. பிச்சமூர்த்தி, ந., – **ந.பிச்சமூர்த்தி கவிதைகள் தொகுப்பு,** மதி நிலையம், சென்னை, மு.ப. ஆகஸ்டு 2000.

துணைமை ஆதாரங்கள்

4. அண்ணாத்துரை, – **உலகப் பெரியார் காந்தி,** திராவிடப் பண்ணை, திருச்சி, மு.ப.1968.

5. அப்துல் ரசாக், – **அகிம்சை,** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை, பதினேழாம் பதிப்பு, ஜனவரி 2010.

6. அருணாச்சலம், மு. (மொ.பெ.), – **நிர்மாணத்திட்டம்,** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை, மு.ப., மார்ச் 1967.

7. அனுமந்தன், — **நாமக்கல் கவிஞரின் உரைநடைப் படைப்புகளில் காந்தியமும் தேசியமும்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப.2004.

8. அஸ்வகோஷ், — **கடவுள் என்பது என்ன?** அலைகள் வெளியீட்டகம், சென்னை. மு.ப. ஜூன் 1995.

9. ஆசார்ய மகாபிரக்ய, — **புதிய மனிதன் புதிய உலகம்,** துளசி மகாபிரக்ய சாகித்ய அகாடமி, சென்னை, மு.ப.1999, ஜூலை 28.

10. ஆண்டியப்பன், முத்துலெக்குமி, — **கோட்பாடுகளில் காந்தியம்,** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை, நான்காம் பதிப்பு, 2010.

11. ஆனைமுத்து, வே. (ப.ஆ.), — **பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்,** தொ.1., பெ.சு.பி.நிறுவன வெளியீடு, திருச்சி, மு.ப.1965.

12. ,, — **பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்,** தொ.3., பெ.சு.பி.நிறுவன வெளியீடு, திருச்சி, மு.ப,1965.

13. ஆவ்னர்ஸீஸ், — **மார்க்சிய அழகியலின் அடிப்படைகள்,** நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப.1969.

14. இராமலிங்க அடிகளார், — *திருவருட்பா,*
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்,
மு.ப. 1979.

15. இராமாத்தாள், கு.ம., — *பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள்,*
விஜயா பதிப்பகம்,
கோவை,
மு.ப., ஜுன் 2001.

16. இராமலிங்கம் பிள்ளை, (மொ.பெ.), — *காந்திய அரசியல்,*
தமிழ்ப்பண்ணை,
தியாகராய நகர்,
சென்னை, ம.ப., 2002.

17. இராமலிங்கம் பிள்ளை, — *நாமக்கல் கவிஞர் பாடல்கள்*
முல்லை நிலையம்,
சென்னை, மு.ப. 2001.

18. இராமலிங்கம் பிள்ளை, (மொ.பெ.), — *காந்தி வழி,*
தமிழ்ப் பண்ணை,
சென்னை,
மு.ப., ஜுலை 1946.

19. இரவீந்திரன், ந., — *மதமும் மார்க்சியமும்,*
சவுத் விஷன்,
சென்னை, மு.ப. 2006.

20. உண்ணாமலை, வீ., — *புதுக்கவிதையில் சமுதாயம்,*
சிவகங்கை,
மு.ப., ஆகஸ்ட் 1999.

21. உதயசங்கர், தொ., — *புதுமுறைக் கல்வி,*
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,
மதுரை,
மு.ப., 1965.

22. உமா, வ., – **காந்தியம் அழைக்கிறது,** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை. மு.ப., 2000.

23. எமிலிபோர்ன்ஸ், – **மார்க்சியம் என்றால் என்ன?,** நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை, மு.ப. 1974.

24. கந்தசாமி, சோ.ந., – **தமிழும் தத்துவமும்,** மணிவாசகர் பதிப்பம், சென்னை, 2007.

25. கல்கி, – **மாந்தருக்குள் ஒரு தெய்வம்,** வானதி பதிப்பகம், மதுரை, மு.ப., டிசம்பர் 1991.

26. கல்யாணசுந்தரம், திரு.வி.க., – **மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப., அக்டோபர் 2000.

27. கலாவதி, இரா., – **சித்தர் பாடல்களில் நடப்பியல்,** காவ்யா, சென்னை, மு.ப., டிசம்பர் 2008.

28. கிராபிவின், வி., – **இயக்கவியல் பொருள் முதல்வாதம் என்றால் என்ன?,** முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, மு.ப., 1987.

29. கிருஷ்ணமூர்த்தி, வெ. (மொ.பெ.), – **இந்தியத் தத்துவம்-ஓர் அறிமுகம்,** படைப்பாளிகள் பதிப்பகம், சென்னை, மு.ப., 2008.

30. கிருஷ்ணமூர்த்தி, ந., — ***பாரத பண்பாடு,***
விவேகானந்தா கேந்திரம்,
தூத்துக்குடி, மு.ப.,1998.

31. குருசாமி, மா.பா., — ***காந்தியுகம்,***
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை, மு.ப., 2004.

32. ” — ***சர்வோதயம்,***
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை,
பதிநான்காம் பதிப்பு, 2008.

33. ” — ***காந்தியச் சிந்தனைகள்,***
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை,
ஏழாம் பதிப்பு, பிப்ரவரி 2000.

34. கோதண்டம், கொ.மா. (உ.ஆ.), — ***மணிமேகலை,***
கங்கை புத்தக நிலையம்,
சென்னை, மு.ப.2002.

35. சபரிராஜன், — ***சத்தியவேட்கை,***
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை,
ஆறாம் பதிப்பு, ஆகஸ்டு 2002.

36. சரவணன், ப. (ப.உ.), — ***சந்தியா பதிப்பகம்,***
நியூ டெக் வைபவ்,
சென்னை, மு.ப. 2008.

37. சந்தானம், க., — ***காந்திய நெறி,***
சர்வோதய இலக்கியப்பண்ணை,
சென்னை, மு.ப.1983.

38. சாமி சிதம்பரனார், — ***தமிழர் தலைவர்,***
பெ.சு.ம.பி.நி. வெளியீடு,
திருச்சி,
எட்டாம் பதிப்பு, 1983.

39. சாமிநாத சர்மா, வெ., — **கார்ல் மார்க்ஸ்,**
திருமகள் நிலையம்,
சென்னை,
மூன்றாம் பதிப்பு, 1982.

40. சாந்தா ஆப்தே, ந., — **தமிழ் சிறுகதைகளில் காந்தியத் தாக்கம்,**
செந்தில் முருகன் வெளியீடு,
மதுரை.
மு.ப., டிசம்பர் 1988.

41. சிவஞானம், ம.பொ.சி., — **தமிழர் கண்ட காந்தி,**
பூங்கொடி பதிப்பகம்,
சென்னை, மு.ப.

42. சுந்தரராமசாமி, — **காற்றில் கலந்த பேரோசை,**
காலச்சுவடு பதிப்பகம்,
நாகர்கோயில்,
மு.ப., ஜனவரி 1998.

43. சுந்தரவடிவேலு, நெ.து., — **புரட்சியாளர் பெரியார்,**
எஸ்.சந்த் அண்டு கம்பெனி,
சென்னை,
மறுபதிப்பு, 1980.

44. சுப்பையா, அரங்க., — **இலக்கியத் திறனாய்வு-இசங்கள் கொள்கைகள்,**
பாவை பதிப்பகம்,
சென்னை,
2007.

45. செகந்நாதன், ஆ., — **புதிய கவிதைகளில் மார்க்சியம்,**
மணிவாசகர் பதிப்பகம்,
சிதம்பரம்,
மு.ப., ஜூலை 1983.

46. செங்குட்டுவன், ப., — **பெரியார் ஒரு பொருள் முதல்வாதி,**
சேகர் பதிப்பகம்,
சென்னை,
மு.ப., 1979.

47. சேகரன், மு., – **அணுசக்தியும் ஓம் சக்தியும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., 1972.

48. ஞானி, – **இந்தியாவில் தத்துவம்-கலாச்சாரம்,** காவ்யா, பெங்களூர், மு.ப.2004.

49. ,, – **உலகமயமாக்கலும் மார்க்சியமும்,** அடையாளம் வெளியீடு, புத்தா நத்தம்-10, மு.ப.2004.

50. ,, – **மார்க்ஸியமும் தமிழ் இலக்கியமும்,** பரிமாணம் வெளியீடு, கோவை, மு.ப., 1988.

51. தமிழண்ணல், – **புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு,** மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. 23ஆம் பதிப்பு, ஆகஸ்டு 2013.

52. தமிழ்ப்பிரியன், – **திரிகடுகம்,** கற்பகம் புத்தக நிலையம், சென்னை, மு.ப., செப்டம்பர் 2012.

53. ,, – **ஆசாரக்கோவை,** கற்பகம் புத்தக நிலையம், சென்னை, மு.ப., 2008.

54. தான்யா, கோ., – **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் கவிதைகளில் மார்க்ஸியக் கொள்கைகளின் தாக்கம்,** ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, மு.ப., நவம்பர் 1988.

55. திரிகூடசுந்தரம், பொ., (ப.ஆ.), – **காந்தி வழி,** இலக்கியப் பண்ணை, சென்னை, மு.ப., ஜூலை 1946.

56. ,, – **அணுகுண்டும் அஹிம்சையும்,** இலக்கியப்பண்ணை, சென்னை, மு.ப., டிசம்பர் 1946.

57. தேவிபிரசாத் சட்டோபாத்யா, – **இந்தியத் தத்துவம்-ஓர் அறிமுகம்,** படைப்பாளிகள் பதிப்பகம், சென்னை, மு.ப., 2008.

58. தோதாத்ரி, – **ஜெயகாந்தன் படைப்புகளில் சார்பு நோக்கும் சார்பற்ற நோக்கும்,** தமிழினி வெளியீடு, சென்னை, மு.ப., 2008.

59. நடராசன், ம., மதியழகன், மு., (ப.ஆ.), – **சிற்பியின் படைப்புலகம்,** இலக்கியத் தென்றல் பதிப்பகம், கோவை, மு.ப, ஆகஸ்டு, 2004.

60. நன்னன், மா., – **பெரியார் தன்னிகரற்ற சுயசிந்தனையாளர்,** பெ.சு.பி. நிறுவன வெளியீடு, சென்னை, மு.ப., 2008.

61. நாராயணன், ம., – **பெரியாரும் மனிதநேயமும்,** நிறைவாணன் பதிப்பகம், வேலூர். மு.ப.2002.

62. பங்கஜம், ஜி., – **காந்தியும் சமயமும்,** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை, மு.ப.2003.

63. பாலன், (மொ.பெ.), — ***இயக்கவியல் பொருள் முதல்வாதம்,***
முன்னேற்றப் பதிப்பகம்,
மாஸ்கோ,
மு.ப., 1987.

64. பாரதிதாசன், — ***பாண்டியன் பரிசு,***
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை,
எட்டாம் பதிப்பு, 1967.

65. ,, — ***தமிழியக்கம்,***
செந்தமிழ் நிலையம்,
புதுக்கோட்டை,
மூன்றாம் பதிப்பு, 1980.

66. ,, — ***பாரதிதாசன் கவிதைகள்,***
ஸ்ரீசெண்பகா பதிப்பகம்,
சென்னை, மு.ப., 2001.

67. ,, — ***காதலா? கடமையா?,***
பாரி நிலையம்,
சென்னை, மு.ப.,
ஏப்ரல் 1948.

68. ,, — ***மானுடம் போற்று,***
செந்தமிழ் நிலையம்,
இராமச்சந்திரபுரம்,
புதுக்கோட்டை,
மு.ப., 1945.

69. ,, — ***அழகின் சிரிப்பு,***
செந்தமிழ் நிலையம்,
புதுக்கோட்டை,
மு.ப., 1974.

70. பிச்சமுத்து, ந., – **இலக்கிய இயக்கங்கள்,**
சக்தி வெளியீடு,
சென்னை-5,
மு.ப., நவம்பர், 1980.

71. பிரெடரிக் ஏங்கெல்ஸ், – **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்,**
முன்னேற்ற பதிப்பகம்,
மாஸ்கோ. ஆ.இ.

72. ,, – **கலைஇலக்கிய ஈடுபாடும் அறிவும்,**
முன்னேற்றப் பதிப்பகம்,
மாஸ்கோ, ஆ.இ.

73. பெரியார், – **மதச் சார்பின்மையும் நமது அரசும்,**
பெ.சு.பி. நிறுவனம்,
திருச்சி, மு.ப. 1914.

74. ,, – **மனிதனும் மதமும்,**
பெ.சு.பி. நிறுவனம்,
சென்னை, மு.ப.1914.

75. மகாத்மா காந்தி, – **சத்திய சோதனை,**
நவஜீவன் பிரசுராலயம்,
அகமதாபாத்,
மு.ப., ஜுன் 1994.

76. ,, – **சத்தியமே கடவுள்,**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை.
ஆறாம் பதிப்பு, டிசம்பர் 1995.

77. ,, – **பிரார்த்தனைப் பிரசங்கங்கள்,**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை, மு.ப.2002.

78. மகாத்மா காந்தி, – **உலக அமைதிக்கு அகிம்சை வழி,** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை. ஆறாம் பதிப்பு, ஆகஸ்டு 2003.

79. ,, – **ஜனநாயகம் உண்மையும் போலியும்,** பெரிய இலக்கியச் சங்கம், மதுரை, நான்காம் பதிப்பு, நவம்பர் 2004.

80. ,, – **சத்தியாகிரகம்,** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை. ஐந்தாம் பதிப்பு, பிப்ரவரி 2006.

81. ,, – **சர்வோதயம்,** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை. 17ஆம் பதிப்பு, செப்டம்பர் 2008.

82. ,, – **பெண்களுக்கு,** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை, 20ஆம் பதிப்பு, 2006.

83. மங்கையர்கரசி, – **வரலாறு கண்ட வைக்கம் வீரர்,** மருதமலையான் பதிப்பகம், சென்னை, மு.ப., 1980.

84. மணிமாறன், கடலூர்., – **புரட்சிக் கவிஞரின் கவிதைக் கோட்பாடுகள்,** விடியல் வெளியீட்டகம், திருச்சி, 1990.

85. மதுசூதனன், ம., – **தமிழ்ப் புதுக்கவிதைகளும் மெய்யியற் சிந்தனைகளும்,** காவ்யா வெளியீடு, சென்னை, மு.ப., நவம்பர் 2003.

86. மருதநாயகம், ப., – **மேலை நோக்கில் தமிழ் கவிதை,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப., 2001.

87. மஷ்ருவாலா, – **காந்திய நவநீதம்,** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை. ஆறாம் பதிப்பு, அக்டோபர் 2000.

88. மாணிக்கவாசகன், நா., (விளக்கவுரை), – **திருமந்திரம்,** உமா பதிப்பகம், சென்னை, மு.ப., மே 2003.

89. மாத்ரு பூதேஸ்வரன், எஸ்.எஸ்., – **உலகத் தத்துவ ஞானியர் ஐவர்,** நர்மதா பதிப்பகம், சென்னை. மு.ப., மார்ச் 2007.

90. முப்பால் மணி, கி., – **தமிழகத் தத்துவச் சிந்தனை மரபுகள்,** நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., ஜனவரி 2009.

91. மெய்யப்பன், (ப.ஆ.), – **பாரதியார் கவிதைகள்,** தென்றல் நிலையம், சிதம்பரம், மு.ப. 1998.

92. ராகுல் சாங்கிருத்யாயன், – **பொதுவுடைமை தான் என்ன?,** தமிழ் புத்தகாலயம், சென்னை, ஏழாம் பதிப்பு, 1973.

93. ராகுல் சாங்கிருத்யாயன், – **ராமராஜ்யமும் மார்க்சியமும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., அக்டோபர் 1984.

94. ,, – **விஞ்ஞான லோகாயதவாதம்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., ஆகஸ்டு 1985.

95. ,, – **இந்துத் தத்துவ இயல்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., ஆகஸ்டு 1985.

96. ,, – **பௌத்த தத்துவ இயல்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., ஆகஸ்டு 1985.

97. ,, – **இஸ்லாமிய தத்துவ இயல்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., ஆகஸ்டு 1985.

98. ,, – **மனித சமுதாயம்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., ஆகஸ்டு 2003.

99. ராஜதுரை, எஸ்.வி., – **எக்ஸிஸ்டென்சன்யலிசம்,** சாதனா ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை, மு.ப., 1975.

100 லக்ஷ்மணன், கி., – **இந்திய தத்துவ ஞானம்,** பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14, மு.ப., மே 1960.

101. லெனின், வி.இ., — ***கிராம ஏழை மக்களுக்கு,*** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., 1972.

102 ,, — ***மாதர் விடுதலைப் பற்றி,*** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., 1973.

103 ,, — ***மார்க்சிய லெனினியத்தின் அடிப்படைகள்,*** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., 1972.

104 லோகிதாசனார், — ***அண்ணலின் ஆன்மீகத் தத்துவங்கள்,*** சென்னை, மார்ச், 2002.

105 வரதராசனார், மு., — ***தமிழ் இலக்கிய வரலாறு,*** சாகித்ய அகாடெமி, நியூ டெல்லி, 21ஆம் பதிப்பு, 2012.

106 விவேகானந்தர், — ***வாழும் வழி,*** விவேகானந்தகேந்திர பிரகாசன் டிரஸ்டி, சென்னை, 4ஆம் பதிப்பு, 2001.

107 விமலானந்தன், மது.ச., — ***தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்,*** ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, மு.ப.1975.

108 வீரமணி, கி., — ***கீதையின் மறுபக்கம்,*** திராவிடர் கழக வெளியீடு, சென்னை, மு.ப., 1998.

109 வீரமணி, கி., – ***பெரியார் களஞ்சியம்,*** பெ.சு.பி.நிறுவனம். வெளியீடு, சென்னை, மு.ப., 1979.

110. ,, – ***நமது குறிக்கோள்,*** பெ.சு.பி. நிறுவனம் வெளியீடு சென்னை, மு.ப.1998.

111. வேலாயுதம், என்.ஏ., – ***காந்தியப் பாதைக் காண்போம்,*** அன்பு நிலையம், நாகர்கோயில், மு.ப.1978.

112. ஜார்ஜ் பொலிட்ஸர், – ***மார்க்சிய மெய்ஞ்ஞானம்,*** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப., 1959.

113. ஜீவானந்தம், – ***சோஷலிஸ்ட் தத்துவங்கள்,*** சென்னை, நான்காம் பதிப்பு, 1979.

114. ஜெயபிரகாசம், – ***காந்தியச் சிந்தனைக் களஞ்சியம்,*** காந்திய இலக்கியச் சங்கம், மதுரை.

115. ஸ்ரீசாமிநாத தேசிகேந்திர சிவயோகி, – ***பட்டினத்தார் பாடல்கள்*** பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, மு.ப.2003.

116. ,, – ***கருவூரார் பாடல்கள்,*** பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, மு.ப.2003.

117. ஸ்ரீமத் நாரயாண அகர்வால், – ***காந்தியத்திட்டம்,*** காந்தி இலக்கியச் சங்கம், மதுரை, மு.ப.1966.

118. ஸ்ரீஆனந்த நாச்சியரம்மா, – **அர்த்த சாஸ்திரம் என்னும் சாணக்கியரின் நீதிநூல்,** ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப., டிசம்பர் 2004.

இதழ்கள்

1.	குடியரசு	- 19.02.1940
2.	குடியரசு	- 10.03.1935
3.	குடியரசு	- 09.10.193
4.	குடியரசு	- 09.02.1928
5.	குடியரசு	- 30.10.1927
6.	குடியரசு	- 03.11.1929
7.	குடியரசு	- 21.09.1946
8.	குயில்	- 24.06.1958
9.	குயில்	- 02.12.1958
10.	புதுவை முரசு	- 27.04.1931
11.	விடுதலை	- 15.07.1952
12.	விடுதலை	- 22.05.1961
13.	யங் இந்தியா	- 13.10.1921
14.	ஹரிஜன்	- 11.02.1939
15.	விடுதலை	- 10.05.1950

ஆங்கில நூல்கள்

1. Appadurai, – **Document of Political thought in Modern India,** Vol.I, F.E.1973.

2. Andrews, C.F., – **As quoted in Andrews C.F. Mahatma Gandhi's Ideas London,** George Alleu & Unwin 1949.

3. Bose Nirmal Kumar, – **Studies in Gandhisam,** Calcutta, 1962.

4. Campbell Creiston, – **Philosophy and the Ecological Problems,** London, F.P. 1956.

5. Hiriyananna, M., – **Outlines of Indian Philosophy,** London, F.P.1956.

6. Karlmarx, – **Capital,** Vol.I, Progress Publishers, Moscow.

7. Lenin, V.I., – **Collected Works,** Vol.19, Progress Publishers, Moscow.

8. Marx Engels, – **Collected Works,** Progressive Publishers, Moscow.

9. – **The World Book Encyclopedia,** Vol.12.

10. Willpurunt, – **The Story of Philosophy (Introduction),** Published by Pocket Books, New Yorks, 1953.

11. – **Sankhyayana Grhya Sutra Vasista Dharma Sastra,** Vol.XVIII, p.12.

12. Gandhi, – **Gandhism and Partition of India,** M.M.Sankhdher 1982, Deep & Deep Publications, New Delhi, 22.

13. Guruprasath Sawdry, – **Relevence of Gandhi.**

ஆங்கில இதழ்கள்

1. Gandhi, M.K., – **Harijan,** date 03.03.1946.

2. Gandhi, M.K., – **Harijan,** date 23.01.1937.

இணையம்

1. இணையதளம் – **Wikipedia.**

கலைக்களஞ்சியம்

1. வாழ்வியற் கலைக்களஞ்சியம், அரசியல்.

ஆய்வேடு

1. அறிவழகன், மா., – **நாமக்கல் கவிஞர் பாடல்களில் அகிம்சைக் கோட்பாடு.** பாரதிதாசன் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு, திருச்சி.

2. வைத்தியநாதன், பொன்., – **தமிழர் தத்துவத்தின் அறிவுக் கோட்பாடு,** தத்துவ மையம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

ஆய்வுக்கோவை

1 முகமது பாரூக், சா., பீர் முகமது அப்பா, (ப.ஆ.), – **இலக்கிய ஆய்வுக்கோவை,**

பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு-1

கவிஞர் ந.பிச்சமூர்த்தியின் வாழ்க்கைத்தகவல்கள்

பெயர்	:	நடேச. பிச்சமூர்த்தி
பிறந்ததேதி	:	15.08.1900
ஊர்	:	தஞ்சை மாவட்டம் கும்பகோணம்
தொழில்	:	வழக்கறிஞர் – 14 ஆண்டுகள் கோயில் நிர்வாக அதிகாரி - 16 ஆண்டுகள்
ஓய்வு	:	1954
படைப்புப்பணி	:	127 சிறுகதைகள் 83 கவிதைகள் 11 ஓரங்க நாடகங்கள் ஏராளமான இலக்கியக் கட்டுரைகள் (எழுத்து இதழில் நிறைய கவிதைகள், சிறுகதைகள் எழுதியுள்ளார்).
சிறப்பு	:	காந்திய நிர்மாணத் திட்டத்தைப் பரப்பியவர்
இறப்பு	:	04.12.1976இல் சென்னையில் அமரரானார்.

பின்னிணைப்பு-2

கவிஞர் இன்குலாப்பின் வாழ்க்கைத் தகவல்கள்

இயற்பெயர்	:	சாகுல் அமீது
புனை பெயர்	:	இன்குலாப் (பொருள்-புரட்சி)
பிறந்ததேதி	:	05.04.1944
ஊர்	:	இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை
கல்வித்தகுதி	:	பி.யு.சி., துரைசிங்கம் கல்லூரி, சிவகங்கை இளங்கலை, தியாகராசர் கல்லூரி, மதுரை. முதுகலை-தனித்தேர்வர், சென்னைப் பல்கலைக் கழகம்.
பணி	:	தமிழ்ப் பேராசிரியர், புதுக்கல்லூரி, சென்னை (1969 முதல் 2002 வரை)
பிள்ளைகள்	:	2 மகன்கள் 1 மகள்
படைப்புப்பணி	:	கவிதை: வெள்ளை இருட்டு, சூரியனைச் சுமப்பவர்கள் கிழக்கும் பின்தொடரும், கூக்குரல் ஒவ்வொரு புல்லையும் (கவிதைகளின் தொகுதி) அவ்வை – நாடக நூல் குறிஞ்சிப்பாட்டு, குரல்கள், மணிமேகலை
மொழிபெயர்ப்புப்பணி	:	மார்க்சிலிருந்து மாசேதுங் வரை
விருதுகள்	:	தேனருவி - வடஅமெரிக்க தமிழ்ச்சங்கம் வெற்றித்தமிழர் பேரவை விருது-வைரமுத்து தமிழ்ப்பேரவை தமிழக அரசின் கலைமாமணி விருது
சிறுகதைகள்	:	துப்பாக்கிகள், பூவாளிகள், யுகாக்கிளி, நமது மானுடம், யாருடைய கண்களால், மூன்றாவது உலகம், வாழ்விலிருந்து இலக்கியம்

பின்னிணைப்பு-3

ஈரோடு தமிழன்பனின் வாழ்க்கைத் தகவல்கள்

இயற்பெயர் : செகதீசன்

புனை பெயர்கள் : தமிழன்பன், விடிவெள்ளி, மலையமான்

பெற்றோர் : திரு.செ.இரா.நடராசன்
திருமதி. வள்ளியம்மாள்

பிறந்ததேதி : 28.09.1933

பிறந்த ஊர் : சென்னிமலை, ஈரோடு மாவட்டம்

கல்வி :

- உயர்நிலைப் பள்ளிக் கல்வி, கொ.செ.உயர்நிலைப் பள்ளி சென்னிமலை.
- தமிழ்ப்புலமைக் கல்வி, கரந்தை புலவர் கல்லூரி, கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.
- ஆசிரியர் பயிற்சிப் பட்டயத் தேர்வு (1959), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
- தமிழ் முதுநிலை, 1975, சென்னைப் பல்கலைக்கழகம்
- முனைவர் பட்ட ஆய்வு, தனிப்பாடல் திரட்டு-ஓர் ஆய்வு (1982), சென்னைப் பல்கலைக்கழகம்.

பணி :

- 1959 முதல் 1970 வரை ஈரோடு மதராசா இசுலாமியர் உயர்நிலைப்பள்ளி, தலைமைத் தமிழாசிரியர்.
- 1970 முதல் 1992 வரை சென்னை புதுக்கல்லூரியில் முதுநிலைத் தமிழ்த்துறையில் பணி

படைப்புகள் :

1. தமிழன்பன் கவிதைகள், 1970
2. சிலிர்ப்புகள், 1970
3. தோணி வருகிறது, 1973
4. விடியல் விழுதுகள், 1977
5. தீவுகள் கரையேறுகின்றன, 1978
6. காலத்திற்கு ஒருநாள் முந்தி, 1982
7. அந்த நந்தனை எரிச்சு நெருப்பின் மிச்சம், 1982
8. ஊமை வெயில், 1984
9. நிலா வரும் நேரம், 1984

10. சூரியப்பிறைகள் ஹைக்கூ, 1985
11. திரும்பி வந்த தேர்வலம், 1985
12. கருவறையிலிருந்து ஒரு குரல், 1987
13. நாமிருக்கும் நாடு, 1989
14. ஊர் சுற்றி வந்த ஓசை, 1989
15. குடை ராட்டினம், 1990
16. கிழக்குச் சாளரம், 1991
17. என்வீடு எதிரே ஓர் எருக்கஞ்செடி, 1995
18. உன் வீட்டிற்கு நான் வந்திருந்தேன்...வால்ட் விட்மன்!, 1996
19. நடை மறந்த நதியும் திசைமாறிய ஓடையும், 1997
20. பனிபெய்யும் பகல், 1998
21. மின்மினிக்காடு, 2000
22. வணக்கம் வள்ளுவ!, 2000
23. ஓர் வண்டி சென்ரியு, 2001
24. தமிழோவியம், 2002
25. வார்த்தைகள் கேட்ட வரம், 2002
26. சென்னிமலை கிளியோபாத்ராக்கள், 2002
27. இரவுப்பாடகன், 2003
28. மின்னல் உறங்கும்போது, 2004
29. கனாக்காணும் வினாக்கள், 2004
30. இவர்களோடும் இவற்றோடும், 2004
31. கவின்குறுநூறு, 2005
32. கதவைத் தாட்டிய பழைய காதலி, 2005
33. மூன்று பெயர்களும் என் முகவரிப் புத்தகமும், 2006
34. அன்னை மடியே உன்னை மறவேன்

உரைநடை :

1. நெஞ்சின் நிழல், புதினம், 1965
2. தாயின் மணிக்கொடி, 1966
3. கொடி காத்த குமரன், வில்லுப்பாட்டு, 1968
4. கவி பாடிய காவலர், 1968

5. பாரத ரத்னா, லால் பகதூர், 1968
6. தனியாடல் திரட்டு, ஓர் ஆய்வு (முனைவர் பட்ட ஆய்வேடு, 1987)
7. சிகரங்கள் மேல் விரியும் சிறகுகள், 1988
8. கவிதைச் சிந்தனைகள், கட்டுரைகள், 1990
9. இலக்கியப்பயன், 1992
10. புரட்சிக்கவிஞர் கவிதைகளில் தமிழ்-தமிழன்-தமிழ்நாடு
11. ஒரு மழைநாளில், சிறுகதைகள், 1995
12. அணைக்கவா என்ற அமெரிக்கா, பயண இலக்கியம், 1998.
13. பாரதிதாசனோடு பத்து ஆண்டுகள், கட்டுரைகள், 2000
14. கலையா! கைவினையா! கட்டுரைகள், 2001
15. கண்மணிக்குச் சில கதைகள், சிறுவர் இலக்கியம், 2001
16. மதிப்பீடுகள், 2002
17. ஈரநெருப்பு, நாடகங்கள், 2002
18. தேம்சு நதிக்கரையில் தேனை தமிழ் அலைகள், 2006.

விருதுகள் : 'தமிழன்பன் கவிதைகள்' என்னும் நூலுக்கானத் தமிழக அரசின் முதற்பரிசு, 1973.

பாரதிதாசன் விருது, 1991

புவிக்கோ விருது, அமெரிக்காவில் வாஷிங்டன், பால்டிமோர் தமிழ்ச்சங்கம் வழங்கியது, 1996

இராணா இலக்கிய விருது, ஈரோடு தமிழ் இலக்கியப் பேரவை, 1999.

கலைமாமணி விருது, 1999

ஞாலக்கவிக்கோ விருது, சென்னை முத்தமிழ் ஆய்வுமன்றம் விருது, 2000

தமிழக அரசின் குறள்பீட விருது, 2002 (கரந்தைத் தமிழ்ச்சங்கம்)

கவிப்பேரருவி விருது, செய்யாறு தமிழ்ச்சங்கம், 2003

தமிழ் வாகைச் செம்மல் விருது, சேலம் தமிழ்ச்சங்கம், 2004.

சிற்பி இலக்கிய விருது, 2004.

சாகித்திய அகாடெமி விருது, வணக்கம் வள்ளுவ (கவிதை), 2004

பின்னிணைப்பு-4
கவிஞர் இன்குலாப்புடன் ஆய்வாளர்



பின்னிணைப்பு-5

கவிஞர் இன்குலாப்புடன் ஆய்வாளர் கண்ட நேர்காணல்

1. **உங்கள் இலக்கிய - அரசியல் வாழ்வு எப்படி ஆரம்பித்தது? அரசியலில் இருந்து இலக்கியத்தை நோக்கி வந்தீர்களா அல்லது இலக்கியத்தில் இருந்து அரசியலுக்குள் பிரவேசித்தீர்களா?**

என்னுடைய மூலமே இலக்கியம்தான். அதன் பரப்பு விசாலித்து அதற்கூடாக அரசியலுக்குள் பிரவேசித்தவன் நான். இளமைக்காலந் தொட்டே எனக்கு கவிதைகளில் நெருக்கமான ஈடுபாடு. கவிதை என்று சொல்வதைவிட பாடல்கள் என்று சொல்லலாம். சினிமா பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள் என அவை பலதரப்பட்டவை.

என் சகோதரி ரொம்ப இனிமையாகப் பாடுவார்கள். அவ்வளவும் பக்தி பாடல்கள். தியாகராஜ பாகவதர் மீது ரொம்பவும் ஈடுபாடு அவர்களுக்கு. அவங்க இறந்துபோயிட்டாங்க. அந்த மாதிரிக்குரல் சிலருக்குத்தான் வாய்க்கும் போல் தோன்றுகிறது.

நானும் அவர்களோடு சேர்ந்து பாடுவேன். எனது சகோதரர் அவர்கள் என் சகோதரி பாடுவதற்காக திரைப்பட மெட்டுக்களில் பக்திப் பாடல்களை எழுதிக் கொடுப்பார்கள். நாளடைவில் நானும் எழுதிக் கொடுக்க ஆரம்பித்தேன்.

2. **உங்களையும் உங்களுடைய எழுத்துக்களையும் நீங்கள் சார்ந்திருக்கக் கூடிய அரசியலையும் பிரிக்க முடியாமல் 61 வயதிலேயும் படைப்புப் பணிகளில் ஈடுபடுறீங்க. இந்தக் காலக்கட்டத்தில் நீங்கள் செய்ய வேண்டும் என்று நினைத்து அவை அசைப்போட்டுக்கிட்டே இருந்து இன்னும் பதிவு செய்யாம இருக்கிறோமேன்னு நினைக்கிற விஷயம் ஏதாவது இருக்கின்றதா?**

அது நெறைய இருக்கு. ஆரஅமர யோசித்துப் பார்த்தேன்னா நான் செய்யாம இருக்கிறதுதான் நெறைய இருக்கிறதா சொல்லலாம். என்னுடைய ஆசை தமிழகத்துடைய ஒடுக்கப்பட்ட மக்களுடைய நீண்ட போராட்ட வரலாற்றில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு

முற்பட்ட சங்க காலத்துலேயிருந்து காணக்கூடிய செய்திகளையெல்லாம் சேகரித்து போராட்டக் காப்பியமாக படைக்கணும்கிறது. ஆனா இப்ப அப்படிப் படைக்க இயலாதுன்னு நெனைக்கிறேன். அதனுடைய வெளிப்பாடுகள்தான் என்னோட நாடகங்கள்.

இவை வெறும் வாசிப்புக்கு மாத்திரமா இல்லாம கவிதையும் கூத்துமா நிகழ்த்திப் பாக்கணும்கிறது என்னோட ஆச. ஏன்னா அப்படிச் செய்யும்போது அது என் மக்களை வெகு எளிதாகப் போயச் சேரும். வரலாற்றை ஒரு திறனாய்வு அடிப்படையில் பொற்கால மாயைக்கு இடம்கொடுக்காத வகையில் மன்னனுக்குப் புகழ்பாடாம அதேசமயம் ஒடுக்கப்பட்டவர்களின் குரலை மீண்டும் ஒலிக்கச் செய்வதன் மூலமாக கடந்த காலத்தில் அவங்களுக்கு ஒரு புரட்சிகரப் பாத்திரம் இருந்ததுங்கிறத சொல்லணும்னு நெனைக்கிறேன். அதனுடைய விளைவுதான் அவ்வை நாடகம்.

3. **பெரியாரியம் பற்றி தங்களின் கருத்து என்ன?**

பெரியாரியம் – மானுட விடுதலைக்கான கோட்பாடு, செயல், போராட்டம். மெய்யியல் மரபு தத்துவ மரபு இருந்தது. சுயமான சிந்தனையைத் தேடச் செய்தது. அதிகம் பேசப்படவில்லை. சுயமான சிந்தனையைத் தூண்டிய செயலை பெரியார் செய்தார். புத்தருக்குப் பிறகு சுயதேடலைச் செய்தவர். அதற்காகப் போராடியவர். சமூக ஆதிக்கம், சுரண்டல் எல்லாவற்றையும் இனம்காட்டிப் போராடவும் தூண்டினார். சென்ற நூற்றாண்டில் போராட்ட உணர்வைத் தூண்டியவர்.

4. **மார்க்சியம் பற்றி சமுதாயத்திற்கு நீங்கள் தெரியப்படுத்த விரும்புவது என்ன?**

மார்க்சியம் மானுட சமுகத்தின் இதுவரையான விடுதலைச் சிந்தனையின் தொகுப்பும் பகுப்பாய்வும் தெளிவுமாகும். உலக மானுடத்தை உய்விக்க வந்த மெய்யியல்.

5. **காந்திய எதிர்ப்பாளர் (அ) காந்தியக் கருத்துக்கள் மீது ஈடுபாடு இல்லாதவர் என்பதற்கு ஏதேனும் காரணம் உண்டா?**

காந்தியத்தின் கூறுகள் சிலவற்றை எதிர்த்தேன். காந்தியத்திற்குள் பல மாற்றங்கள் உண்டு என்பதை நான் உணர்கிறேன். இந்துவாக இருந்துகொண்டு சமயசார்பற்ற அரசியலுக்கும் வாழ்வு முறைக்கும் முயற்சி செய்தார். அவரின் சனாதன ஆதரவு அகிம்சையை மட்டுமே முன்னிறுத்துவதை எதிர்த்திருக்கிறேன். இன்று என் சிந்தனைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. போராட்ட முறைகளில் அகிம்சைக்கும் பங்கு இருக்கிறது. ஒரு போராட்டத்தை வெறும் ஆயுதங்களால் மட்டும் தீர்மானித்துவிட முடியாது என நம்புகிறேன்.

6. **இன்றைய கவிஞர்கள் (அ) வருங்கால கவிஞர்களுக்கு கவிதை எழுதுவது பற்றி தாங்கள் கூற விரும்புவது ஏதேனும் உண்டா?**

வாய்ந்து பெற்றதை எழுத வேண்டும். கவிதை பொய் பேசாது; அதை கவிஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

7. **சூழ்நிலைக் கவிஞராக இல்லாமல் சமூக அக்கறை கொண்ட கவிஞராக விளங்க காரணம் என்ன?**

வாழ்க்கை அனுபவம்தான். நான் ஒடுக்குமுறையை அனுபவித்து இருக்கிறேன். ஒடுக்கப்பட்டவர்களோடு என்னை அடையாளப்படுத்தி இருக்கிறேன். அனுபவமும் ஒடுக்கப்பட்டோர் நட்பும் என் கவிதையை வழிநடத்துகின்றது.

8. **பெண்ணியம் குறித்த தங்களின் கருத்தைக் கூறுங்கள்?**

மனிதசமூகத்தின் ஆதி அடிமைத்தனம் பெண்ணடிமைத்தனமாகத் தான் இருந்தது. எனவே, மானுடத்தின் முழு விடுதலை பெண் விடுதலையில் இருந்து தொடங்குகிறது.

9. **தத்துவம் குறித்த தங்களின் கருத்துக்களைக் கூறுங்கள்?**

வாழ்க்கையைக் காட்சிப்படுத்திப் பார்ப்பதற்கான தரிசனம், சிந்தனைமுறை, தத்துவஞானி ஒவ்வொருவருடைய நிலைப்பாட்டைப் பொறுத்து விடுதலைக்கான தத்துவமாகவும் அடிமைத்தனத்திற்கு ஆனதாகவும் விளங்குகின்றது. இந்த இரண்டு போக்குகளாலும் தத்துவப்போக்கு என்பது நிரம்பச் சிக்கல் உடையதாகத் தோன்றுகின்றது. எனினும் மானுட சமூக வளர்ச்சியை உற்று நோக்கினால் அது விடுதலையை நோக்கியே முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

10 **உங்களைக் கவர்ந்த கவிஞர்களைப் பற்றிக் கூறுங்கள்?**

அது பட்டியல் கூற முடியாது. எல்லா நல்ல கவிஞர்களுக்கும் என்னை விட வயது குறைந்தவர்களாக இருப்பினும் நான் மாணவனாக இருப்பேன். கவிதையில் தமிழ்மரபு சங்க இலக்கியத்திலிருந்து தொடங்கி பாரதி, பாரதிதாசன் வரையிலும் ஓரளவு பயணம் செய்திருக்கிறேன்.

இக்காலக் கவிஞர்களின் புதுக்கவிதையைத் தொடங்கி வைத்த ந.பிச்சமூர்த்தி, தரும சிவதாமு போன்றோரிலிருந்து அப்துல் ரகுமான், ந.காமராசன், ஈரோடு தமிழன்பன், மு.மேத்தா வரை இன்று எழுதும் பெண் கவிஞர்கள் குட்டி ரேவதி, தாமரை, வெண்ணிலா, மாலதி மைத்ரி, சுகிர்தாராணி, சர்மிளா சையது என்று பலர் என் நினைவில் நிற்கிறார்கள். இன்னும் சில கவிஞர்கள் நினைவில் நின்றாலும் என்னுடைய மறதியின் சுமை காரணமாக பல பெயர்களை கூற இயலவில்லை.

உலக அளவில் நான் படித்த காலத்தில் ஷெல்லி, பைரன், வோர்ட்ஸ் வொர்த், பாப்லே நெருடா, டி.எஸ். எலியட் என்று பல கவிஞர்களின் கவிதைகளைப் படித்தும் இருக்கின்றேன். பாதிப்பும் அடைந்திருக்கின்றேன்.

பின்னிணைப்பு-6

கவிஞர் ஈரோடு தமிழன்பனுடன் ஆய்வாளர்



பின்னிணைப்பு-7

ஈரோடு தமிழன்பனுடன் ஆய்வாளர் கண்ட நேர்காணல்

1. **பெரியாரியக் கருத்துக்கள் அதிகமாக தங்களின் கவிதைகளில் காணப்பட்டாலும் 'ஜென்' தத்துவத்தையும் ஆங்காங்கே சுட்டுகின்றீர்கள். சற்று முரண்பாடான கருத்தாக உள்ளதே?**

முரண்பாடுகளின் உடன்பாடுகளில் தான், உண்மைகளும் முடிவுகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பகுத்தறிவும் மதமன்று; ஜென்னும் மதம் அன்று. வெவ்வேறு தளங்களில் வளர்ந்துவரும் பேரியற்கையின் பெருமைமிக்க கூறுகள். பகல் உடன்பாட்டில் சிந்திப்பதையே இரவு எதிர்மறையில் சிந்திப்பதாகக் கருதுகிறேன். பெரியாரையே ஒரு பகுத்தறிவு பார்க்கமுடியும். இறைவனைப் பற்றி பேசாத ஜென்னிலும் வினாக்களின் தொடர் பயணத்தைப் பார்க்க முடியும்.

2. **பெரியார் கூறும் பகுத்தறிவோடு ஆன்மிகத்தை தொடர்புபடுத்துவது சரியானதா?**

ஆன்மிகம் என்பது என்ன? ஆத்மா என்பது என்ன? விரிவாக விவாதிக்க வேண்டும். ஆன்மிகம் என்பதைக் கோயில்களோடும் பூசை வழிபாடுகளோடும், பாவ புண்ணியங்களோடும் தொடர்புபடுத்த வேண்டியதில்லை. உயிரின் உணர்வியக்கமே ஆன்மிகம். ஆன்மா என்று தனி உடல் உறுப்போ, உளஉறுப்போ இருப்பதாக நான் எண்ணவில்லை. தன்னைக் கடக்கக் கூடியவன் ஆன்மிகவாதி. தனக்குள் தான் என்பதற்குள் முடங்கிக்கிடப்பவன் உலகியவாதி. பெரியார் தன்னைக் கடந்தவர். மக்களின் விடுதலைக்காக, சமத்துவத்திற்காகத் தன்னைக் கொடுத்தவர். இதுதான் ஆன்மிகம். ஆன்மிகம் என்பது அறிவுஇழப்பின்மேல் நிறுவப்படும் மூடத்தனம் அன்று.

3. **மார்க்சியத்தின் தாக்கமும் தங்கள் கவிதைகளில் அதிக அளவில் உள்ளதால் சமூகத்தின் கொந்தளிப்புகள் உங்களுள் ஏதேனும் பாதிப்புகளை ஏற்படுத்தியதா?**

என் கண் முன்னால், வறுமை, பசி, பட்டினி, பிணி என்று வாடுகிற கோடிக்கணக்கான மக்களைக் காண்கிறேன். மக்கள்,

உழைப்பை வாழ்க்கையைச் சுரண்டிக் கொழுப்பவர்களையும் பார்க்கிறேன். இவர் பலராகிய காரணம் தெரிகிறது. மனச்சான்றுக்கு மறுபெயர் மார்க்சியம் என்பது வேறு என்ன? படிப்பால் ஏற்றத்தாழ்வு. பொருளாதாரத்தால் ஏற்றத்தாழ்வு, நிறத்தால் ஏற்றத்தாழ்வு என்று எத்தனை ஏற்றத்தாழ்வுகள் பொருளாதார விடுதலை, உதவுபவர்க்கு விடுதலை எவ்வளவு தேவை என்பதை நான் கதைகளைப் படித்தோ, கவிதைகளைப் படித்தோ அறியவில்லை. மத்தியதரத்திற்குச் சற்றுக்குறைந்த குடும்பத்தில் பிறந்த எனக்குக் கண்முன் மார்க்சியம் திறந்த புத்தகமாகக் கிடந்தது. கற்றேன். கற்றுக் கொண்டிருக்கிறேன்.

4. **உங்களை பாதித்தவற்றை நீங்கள் கவிதையாக்கியிருப்பீர்கள்? அதிகமாக பாதித்த சம்பவம் எது? அதற்காக எழுதிய கவிதை எது?**

எத்தனையோ நிகழ்வுகள், கவிதைகள் கடந்த எழுபதுகளை இந்திய நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட நெருக்கடி காலத்தில் அதனை எதிர்த்துக் கவிதைகள் எழுதியிருக்கிறேன். 'கட்டாய ஓய்வு' கொடுத்த அதிகாரிகளை அரசுசார் அதிகாரிகளை, அரசு அதிகாரம் மிரட்டிக் கொண்டிருந்தது. கட்டாய ஓய்வா? என்கிற தலைப்பில் எழுதியுள்ளேன். அக்கவிதையை மிகப் பல நூல்களில் பார்க்கலாம்.

5. **இன்று பெரும்பாலும் கண்மூடித்தனமான வெற்றுச் சொற்சேர்க்கை கொண்டு எழுதும் புதுக்கவிதைகள் வெளிவருகின்றனவே அதுபற்றி கூறுங்கள்?**

வளர்ந்து வரும் கவிஞர்களைத் தழுவிப் பாராட்டி வளர்க்க விரும்புகிறவன் நான். நன்றாகக் கவிதையாக்கும் திறன் வளர்ந்து வருவோரை நாம் வரவேற்க வேண்டும். கவிஞர்கள் தம் காலத்தை, தம் கால வரலாற்று இயக்கத்தின் உட்பொருளை உள்வாங்கிக் கொண்டு தம் படைப்பில் பதிவு செய்ய வேண்டும். எவ்வளவு நேர்த்தியாகச் செய்யப்பட்டிருந்தாலும் சமூக அக்கறை இல்லாத கவிதைகளை சமூகம் ஒருபோதும் வரவேற்காது. இன்னும் ஒன்று, தாய்மொழியை தம் இனத்தைப் பற்றி அக்கறை காட்டுவது குற்றம் என்று எந்த உலகக் கவிஞனும் சொன்னது இல்லை என்பதையும் நனைவில் வைத்துக் கொண்டால் நல்லது. குறுகியவட்டத்துள் படித்தும் கேட்டும்.

6. **இன்றைய இளம் கவிஞர்களுக்கும் பெண்கவிஞர்களுக்கும் தாங்கள் கூற விரும்பும் அறிவுரை யாது?**

இக்கேள்விக்கு விடை முன்னைய வினாவுக்குள்ள விடையிலேயே உள்ளது. இளங்கவிஞர்கள் (பெண் கவிஞர்களைத் தனியாக ஏன் பிரிக்க வேண்டும்?) கவிதையாளர்களாகவும் சமூகச் செயல்பாட்டாளர்களாகவும் வளர வேண்டும் என்பது என் ஆசை. உலகக் கவிதைப்போக்குகளையெல்லாம் ஓரளவு தெரிந்து கொள்ள வேண்டும்.

7. **தாங்களின் இயற்பெயர் யாது? தாங்கள் ஏதும் புனைபெயர்களில் எழுதியுள்ளீர்களா?**

புனை பெயர்கள்	*: தமிழன்பன், ஈரோடு தமிழன்பன், மலையமான் விடிவெள்ளி, முதன்மையாக ஈரோடு தமிழன்பன்*
அம்மா	*: வள்ளியம்மாள்*
அப்பா	*: நடராசன்*
பிறந்த ஊர்	*: சென்னிமலை, ஈரோடு மாவட்டம்.*
பணி	*: ஈரோட்டில் தமிழ் ஆசிரியராக – 10 ஆண்டுகள் சென்னை புதுக்கல்லூரியில் – 25 ஆண்டுகள்*

8. **தாங்கள் படைப்புகளுக்குக் கிடைத்த விருது, பரிசுத்தொகை பற்றி கூறுங்களேன்?**

அருள்கூர்ந்து வலைத்தளத்தில் பார்த்துக் கொள்ளுங்கள் அல்லது எனது நூல் எதிலேனும் பின்இணைப்பில் காணலாம். 2011 வரை வெளிவந்துள்ள நூல்கள் பெற்ற விருதுகள் பற்றிய பட்டியல் 'கதை முடியவில்லை' என்னும் தொகுப்பில் இணைப்பாக உள்ளது.

9. **விருது பெறும் நோக்கத்திற்காகவே தாங்கள் ஏதும் எழுதியுள்ளீர்களா?**

இதுவரை அப்படி எழுதியதில்லை. இனியும் அப்படித்தான்.